மார்க்ஸ்

மெய்யறிவின் வறுமை

F 104.29

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

கார்ல் மார்க்ஸ்

மெய்யறிவின் வறுமை

திரு. புரூதோன் எழுதிய வறுமையின்
மெய்யறிவு எனும் நூலுக்குப் பதில்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ. 1975

மொழிபெயர்ப்பாளர்: ஆர். கே. கண்ணன்

© உரிமைப்பதிவு
தமிழ் மொழிபெயர்ப்பு
''முன்னேற்றப் பதிப்பகம்''. 1975

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

M $\frac{10101\text{-}362}{014(01)\text{-}75}$ 746-75

பொருளடக்கம்

பதிப்பகத்தார் குறிப்பு 5

முதல் ஜெர்மன் பதிப்புக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் எழுதிய முன்னுரை 7

இரண்டாவது ஜெர்மன் பதிப்புக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் எழுதிய முன்னுரை 30

கார்ல் மார்க்ஸ்

மெய்யறிவின் வறுமை

திரு. புரூதோன் எழுதிய ''வறுமையின் மெய்யறிவு'' எனும் நூலுக்குப் பதில் 31

முகவுரை 33

அத்தியாயம் 1. ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு . . 35

§ 1. பயன்பாடு மதிப்புக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் உள்ள எதிர்மறை 35

§ 2. உருவமைத்த மதிப்பு அல்லது கூட்டு மதிப்பு 51

§ 3. மதிப்பின் தகவுப் பொருத்த நிலைக்குரிய விதியின் செயல்பாடு 99

அ) பணம் 99

ஆ) மிகுதி உழைப்பு 114

அத்தியாயம் 2. அரசியல் பொருளாதாரத்தின் இயக்கமறுப்புவாதம் 131

§ 1. ஆய்வுமுறை 131

முதல் ஆய்வுக்கூற்று 132

இரண்டாவது ஆய்வுக்கூற்று 139
மூன்ருவது ஆய்வுக்கூற்று 140
நான்காவது ஆய்வுக்கூற்று 141
ஐந்தாவது ஆய்வுக்கூற்று 144
ஆருவது ஆய்வுக்கூற்று 147
ஏழாவது இறுதியான ஆய்வுக்கூற்று 154
§ 2. உழைப்புப் பிரிவினையும் இயந்திரவகையும் . 162
§ 3. போட்டியும் ஏகபோகமும் 185
§ 4. நிலச் சொத்து அல்லது நில வாடகை . . 197
§ 5. வேலைநிறுத்தங்களும் தொழிலாளர்களின் சங்கங்களும் 213

பிற்சேர்க்கைகள்

மார்க்ஸ் பா. வ. ஆன்னென்கவுக்கு எழுதிய கடிதம் 227
மார்க்ஸ் இயோ.ப. ஷ்வைட்ஸருக்கு எழுதிய கடிதம் 247
"அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக் குச் செலுத்தும் ஒரு பங்கு" எனும் மார்க்ஸின் நூலிலிருந்து 260
சுயேச்சையான வாணிபம் பற்றிய பிரச்சினை குறித்து (புருஸெல்ஸ் ஜனநாயக மன்றத்தின் முன்னிலையில் 1848 ஜனவரி 9ல் கார்ல் மார்க்ஸ் நிகழ்த்திய சொற்பொழிவு) 265
பதிப்பாளர் குறிப்புகள் 288
பெயர்க் குறிப்பகராதி 305

பதிப்பகத்தார் குறிப்பு

புரூதோன் எழுதிய பொருளாதார முரண்பாடுகளின் அமைப்பு முறை அல்லது வறுமையின் மெய்யறிவு எனும் நூலை 1846 டிஸம்பர் இறுதியில் மார்க்ஸ் படித்துவிட்டு, புரூதோனின் கருத்துக்களை விமர்சிக்கத் தீர்மானித்தார்; அதே நேரத்தில், புரட்சிகரமான பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தத்துவம், போர்த்தந்திரங்கள் பற்றிய பல பிரச்சினைகளை விஞ்ஞான வழிப்பட்ட, பொருள்முதல்வாத நிலைகளிலே நின்று ஆராய்ந்து காட்டவும் முடிவு செய்தார். ருஷ்ய இலக்கிய வாதியாகிய பா. வ. ஆன்னென்கவ் அவர்களுக்கு 1846 டிஸம்பர் 28ல் அவர் எழுதிய கடிதத்தில் (இந்தப் பதிப்பில் பக்கம் 227 பார்க்க) மிக முக்கியமான பல கருத்துக்களை வெளியிட்டார். பின்னுல் புரூதோனுக்கு எதிராக அவர் எழுதிய நூலுக்கு அவற்றை அடிப்படைகளாகப் பயன்படுத்தினுர். ஏற்கெனவே 1847 ஜனவரியில் புரூதோனுக்குப் பதில் எழுதுவதில் ஈடுபட்டுவிட்டார். 1847 ஏப்ரல் துவக்கத்தில் ஏறத்தாழ எழுதி முடித்து அச்சகத்துக்கு அனுப்பப்பட்டது.

1847 ஜூலையில் மார்க்ஸின் நூல் புருஸெல்ஸிலும் பாரிஸிலும் வெளியிடப்பட்டது. அது மார்க்ஸ் வாழ்நாளில் மறுபடியும் வெளியிடப்படவில்லை. 1885ல் அதன் ஜெர்மன் பதிப்பு வெளியிடப்பட்டது. அதை காவுட்ஸ்கியும் பெர்ன்ஷ்டைனும் மொழிபெயர்த்தனர்; எங்கெல்ஸ் அதைப் பதிப்பித்தார், அதற்கென்று ஒரு சிறப்பான முன்னுரையும் வரைந்தார் (இப்பதிப்பில் பக்கம் 7 பார்க்க), பல குறிப்புகளையும் வழங்கினுர். முதலாவது அகிலத்தின் ருஷ்யப் பிரிவின் உறுப்பினர் என். இ. ஊத்தின் அவர்களின் மனைவியார் நத்தாலியா ஊத்தினுவுக்கு 1876 ஜனவரி 1ல் மார்க்ஸ் 1847

பிரெஞ்சுப் பதிப்பின் ஒரு பிரதியை அன்பளிப்பாகக் கொடுத்தார். அந்தப் பிரதியில் அவர் திருத்தங்கள் செய்திருந்தார். அந்தத் திருத்தங்களை எங்கெல்ஸ் ஜெர்மன் பதிப்பைப் பதிப்பிக்கும் போது பயன்படுத்தினர். மெய்யறிவின் வறுமையின் இரண்டாவது ஜெர்மன் பதிப்பு 1892ல் வெளிவந்தது. வாசகத்தில் இருந்த சில பிழைகளைத் திருத்தியதைப் பற்றி எங்கெல்ஸ் இந்தப் பதிப்புக்கு ஒரு சிறு முன்னுரை எழுதினர் (இப்பதிப்பின் பக்கம் 30 பார்க்க). எங்கெல்ஸ் காலமான பின் 1896ல் இரண்டாவது பிரெஞ்சுப் பதிப்பு வெளிவந்தது; அதை மார்க்ஸின் புதல்வி லௌரா லஃபார்க் தயாரித்தார். ந. ஊத்தினுவுக்கு மார்க்ஸ் அன்பளிப்புச் செய்த பிரதியின் ஏட்டோரங்களில் எழுதியிருந்த திருத்தங்கள் இதில் இடம் பெற்றிருந்தன.

1847 பிரெஞ்சுப் பதிப்போடு பொருந்துகிற ஆங்கிலப் பதிப்பிலிருந்து, 1885லும் 1892லும் வெளிவந்த ஜெர்மன் பதிப்புகளில் இருக்கும் திருத்தங்களைத் தக்கவாறு கணக்கில் எடுத்துக் கொண்டு, இம்மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

இதில் உள்ள பிற்சேர்க்கைகள் வருமாறு:

1. மார்க்ஸ் பா. வ. ஆன்னென்கவுக்கு எழுதிய கடிதம் *(1846 டிஸம்பர் 28);*

2. மார்க்ஸ் இயோ. ப. ஷ்வைட்ஸருக்கு எழுதிய கடிதம் *(1865 ஜனவரி 24);*

3. அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்குச் செலுத்தும் ஒரு பங்கு எனும் மார்க்ஸின் நூலிலிருந்து;

4. கார்ல் மார்க்ஸ், சுயேச்சையான வாணிபம் பற்றிய பிரச்சினை குறித்து.

முதல் ஜெர்மன் பதிப்புக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் எழுதிய முன்னுரை[1]

மார்க்ஸ் தமது புதிய வரலாற்று, பொருளாதாரப் பார்வையின் அடிப்படை முனைப்புக் கூறுகளைத் தம்முள் தெளிவுபடுத்திக்கொண்டுவிட்ட காலத்தில், 1846-47 குளிர் காலத்தில், இந்நூல் படைக்கப்பட்டது. புரூதோன் எழுதிய **பொருளாதார முரண்பாடுகளின் அமைப்பு முறை அல்லது வறுமையின் மெய்யறிவு**[2] அப்பொழுதுதான் வெளிவந்திருந்தது; அன்று இருந்த பிரெஞ்சு சோஷலிஸ்டுகளிடையே அன்று முதல் முதலிடம் வகிக்கவிருந்த மனிதரின் கருத்துக்களுக்கு எதிராக அவர் இந்த முனைப்புக் கூறுகளை வளர்ப்பதற்கு அது வாய்ப்பு அளித்தது. அடிக்கடி அவ்விருவரும் பாரிஸில் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பல இரவுகளில் விடிய விடிய விவாதித்த காலத்திலிருந்து இருவரின் பாதைகளும் மேன்மேலும் பிரிந்து செல்லலாயின; இருவரிடையேயும் தாண்டவொண்ணுப் பள்ளம் ஒன்று ஏற்கெனவே இருந்ததை புரூதோனின் நூல் மெய்ப்பித்தது. அதைப் புறக்கணிப்பது அன்று சாத்தியமில்லை, எனவே தமது இந்தப் பதில் வழியே இந்த சீர்செய்யவொண்ணுப் பிளவை மார்க்ஸ் பதிவு செய்தார்.

இந்த முன்னுரைக்குப் பிற்சேர்க்கையாகத் தந்துள்ள கட்டுரையில்—இது 1865ல் பெர்லின் *Social-Demokrat*[3] பத்திரிகையின் 16, 17, 18ம் இதழ்களில் வெளிவந்தது— புரூதோனைப்பற்றிய மார்க்ஸின் பொதுவான கருத்தைக் காணலாம். இந்தப் பத்திரிகைக்கு மார்க்ஸ் வரைந்த கட்டுரை இது ஒன்றேதான்; அந்தப் பத்திரிகையை திரு. வான் ஷ்வைட்ஸர் நிலப்பிரபுத்துவப் போக்கிலே, அரசாங்கச் சார்பான போக்கிலே, நடத்திச் செல்ல முயற்சிகள் செய்தது

பின்னல் விரைவிலே வெளிப்பட்டு எங்களுடைய கூட்டுறவு ஒரு சில வாரங்கள் கழிந்ததுமே முடிந்து விட்டதை நாங்கள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்நூல் குறிப்பாக இத்தருணத்தில் ஜெர்மனி விஷயத்தில் வகிக்கிற பொருள் முக்கியத்துவத்தை மார்க்ஸ்கூட ஒருபோதும் முன்னறியவில்லை. அவர் புரூதோனைத் தாக்கி முறியடித்ததிலே இன்று பதவிவேட்டைக்காரர்களின் தெய்வமாக விளங்குகிற, பெயராலும் கூட அன்று மார்க்ஸ் அறிந்திராத, ரோட்பெர்டஸையும் தாக்குகிறோம் என்று அவருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

ரோட்பெர்டஸுடன் மார்க்ஸ் கொண்டிருந்த உறவு குறித்துச் சொல்வதற்கு இது இடமல்ல; அதற்கு நிச்சயமாக வெகு விரைவிலே எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்.[4] இங்கே ஒன்று மட்டும் குறித்துக் கொண்டால் போதும்; மார்க்ஸ் தம்மிடமிருந்து ''களவாடினர்'' என்றும் தமது அறிவுக்குச் செலுத்தும் பங்கு எனும் நூலைத்[5] ''தம்மை மேற்கோள் காட்டாமலேயே தாராளமாக மூலதனத்தில் பயன்படுத்திக் கொண்டுள்ளார்''[6] என்றும் ரோட்பெர்டஸ் மார்க்ஸைக் குற்றஞ்சாட்டுகிருரென்றால், தவறுகப் புரிந்து கொள்ளப் பட்ட மேதாவிக்குரிய வெறுப்பும் பிரஷ்யாவுக்கு வெளியே நடக்கிற விஷயங்களைப் பற்றியும் குறிப்பாக சோஷலிஸ்டு இலக்கியத் துறையிலும் மற்றும் பொருளாதார இலக்கியத் துறையிலும் நிலவும் நிலைமை பற்றியும் அவருக்கு இருந்த குறிப்பிடத்தக்க அறியாமையும் வைத்து மட்டுமே அந்த அவதூறை விளக்க முடியும். இந்தக் குற்றச்சாட்டுகளும் சரி, மேலே குறிப்பிட்ட ரோட்பெர்டஸின் நூலும் சரி, மார்க்ஸ் கண்ணில் படவேயில்லை; ரோட்பெர்டஸ் பற்றி அவர் அறிந்திருந்ததெல்லாம் அந்த மூன்று சமுதாயக் கடிதங்கள்[7] என்பவையே, அவற்றையுங்கூட 1858க்கோ 1859க்கோ முன்பாக அவர் நிச்சயமாக அறிந்திருக்கவில்லை.

புரூதோனுக்கும் முன்னதாகவே ''புரூதோனின் உருவமைக்கப் பெற்ற மதிப்பை'' தாம் ஏற்கெனவே கண்டு பிடித்துவிட்டதாக இக்கடிதங்களில் காண்கிற ரோட்பெர்டஸின் வன்கூற்றுக்கு மேலான அடிப்படை இருக்கிறது; எனினும் இங்கேயும் தானே முதன்முதலாகக் கண்டுபிடித்தவர்

என்று அவர் தவருகத் தம்மைத்தாமே பெருமைப்படுத்திக் கொள்கிருர் என்பது உண்மை. எப்படியிருந்தபோதிலும் இக்காரணத்துக்காக அவரும் இந்நூலின் விமர்சனத்துக்கு ஆளாகிருர், அதனுல் அவருடைய **நமது தேசியப் பொருளாதார அமைப்பு பற்றிய அறிவுக்குச் செலுத்தும் பங்கு**, *1842*, எனும் ''அடிப்படையான'' சிறுநூலைச் சுருக்கமாக—எந்த அளவுக்கு அது புருதோனை முந்திக் கொண்டு கூறும் கூற்றுக் களையும், அதில் (இங்கேயும் தன்னையறியாமலே) அடங்கியுள்ள வைட்லிங்கின் கம்யூனிஸத்தையும் முன்னுக்குக் கொணர்கின்றதோ அந்த அளவுக்கு—கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

எந்த அளவுக்கு நவீனகால சோஷலிஸம் (அது எவ்வகைப் போக்காயினும் சரி) முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்திலிருந்து தொடங்குகிறதோ அந்த அளவுக்கு அது ரிக்கார்டோவின் மதிப்பு பற்றிய தத்துவத்துடன் அநேகமாக முற்ருகத் தன்னைப் பிணைத்துக் கொள்கிறது. 1817ல் ரிக்கார்டோ தமது **கோட்பாடுகள்**[8] எனும் நூலின் தொடக்கத்திலே இரண்டு முன்கூற்றுக்களைப் பிரகடனப்படுத்தினுர், அதாவது, 1) எந்த ஒரு பண்டத்தின் மதிப்பையும் அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படுகிற உழைப்பின் அளவே முற்ருக நிர்ணயிக்கிறது, 2) சமுதாய உழைப்பு முழுமையின் விளைபொருள் நிலச்சுவான்தார்கள் (வாடகை), முதலாளிகள் (இலாபம்), தொழிலாளிகள் (கூலி) என்று மூன்று வர்க்கங்களிடையே பிரித்துக் கொள்ளப்படுகிறது, என்று. அவை இங்கிலாந்தில் 1821லிருந்து சோஷலிஸ்டு முடிவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன[9]—சில சமயம் அவை மிகுந்த கூர்மையுடனும் உறுதிப் பிடிப்புடனும் பயன்படுத்தப்பட்டன. இந்த இலக்கியம் இன்று அநேகமாக மறைந்தே போய்விட்டது; அதன் பெரும் பகுதியை மார்க்ஸ்தான் முதன்முதலாக மீண்டும் கண்டெடுத்தார்; மூலதனம் தோன்றுகிறவரை அதை மிஞ்சக் கூடியதாய் எதுவும் இருக்கவில்லை. இதை வேருெரு சமயத்தில் கவனிப்பேன். எனவே, 1842ல் ரோட்பெர்டஸ் தம்மைப் பொறுத்தவரை மேலே கண்ட முன்கூற்றுகளிலிருந்து சோஷலிஸ்டு முடிவுகள் எடுத்துக் கொண்டாரென்ருல் அது அக்காலத்தில் ஒரு ஜெர்மானியனுக்கு நிச்சயமாக ஒரு மிகக் கணிசமான

முன்னேற்றப் படியேயாகும், ஆனல் ஜெர்மனிக்கு மட்டுமே அது ஒரு புதிய கண்டுபிடிப்பாக அந்தஸ்துப் பெற முடியும். ரிக்கார்டோ தத்துவத்தின் இப்படிப்பட்ட செயல்பாடு ஒன்றும் புதுமையல்ல என்று இதேபோன்ற தற்பெருமைக்கு ஆளான புரூதோனே மார்க்ஸ் விமர்சனம் செய்த போது நிரூபித்தார்.

''இங்கிலாந்தில் அரசியல் பொருளாதாரப் போக்கை ஏதாவதொரு வகையில் அறிந்துவைத்திருப்பவர்கள் இந்த நாட்டிலுள்ள அநேகமாக எல்லா சோஷலிஸ்டுகளும் வெவ்வேறு காலப்பகுதிகளில் ரிக்கார்டோ தத்துவத்தின் சமநிலே வாதச் செயல்பாட்டை முன்மொழிந்துள்ளதை அறியாதிருக்க முடியாது. திரு. புரூதோனுக்கு நாம் மேற்கோள் காட்ட முடியும்: ஹாட்ஸ்கின் எழுதிய அரசியல் பொருளாதாரம், *1827;* வில்லியம் தாம்ப்ஸன் எழுதிய மனித இன்பத்துக்கு மிகப் பொருத்தமான செல்வ வினியோகத்திற்குரிய கோட்பாடுகளைப் பற்றிய ஒரு விசாரணே, *1824;* டி. ஆர். எட்மண்ட்ஸ் எழுதிய நடைமுறைப் பாங்கான, ஒழுக்கநெறி வகைப்பட்ட, அரசியல் பொருளாதாரம், *1828,* என்றவாறு; இப்படியே மேலும் நான்கு பக்கங்களுக்கு மேற்கோள் காட்டலாம். திரு. பிரே எனும் ஒரு ஆங்கிலேயக் கம்யூனிஸ்டு எழுதிய தொழிலாளர் படும் அநீதிகளும் தொழிலாளர் தரும் பரிகாரமும், லீட்ஸ், *1839,*[10] எனும் குறிப்பிடத்தக்க நூலில் சொல்வதைக் கேட்பதோடு திருப்தியடைவோம்.

ரோட்பெர்டஸ் முதலுரிமை கோருவதில் பெரும் பகுதிக்கு இங்கே பிரேயிடமிருந்து மட்டும் கொடுத்துள்ள மேற்கோள்களே முற்றுப்புள்ளி வைக்கின்றன.

அக்காலத்தில் மார்க்ஸ் பிரிட்டிஷ் மியூஸியத்தின் படிப்பகத்துக்குப் போனது கிடையாது. பாரிஸ், புருஸெல்ஸ் நூலகங்களிலிருந்த நூல்கள் தவிர, 1845 கோடை காலத்தில் நாங்கள் இருவரும் இங்கிலாந்தில் ஆறு வாரப் பயணம் செய்த போது அவர் மாஞ்செஸ்டரில் பார்த்த எனது நூல்கள் நூற்பகுதிகள் ஆகியவற்றை மட்டுமே ஆய்ந்தார். எனவே, பிரச்சினையிலிருக்கிற இலக்கியம் இன்றிருக்கக் கூடிய மாதிரி 1840-50களில் அவ்வளவு கிடைப்பதற்கரியதாய் இருந்ததில்லே. அப்படியிருந்தும், அது ரோட்பெர்டஸுக்குத் தெரியாமலேயிருந்ததென்ருல் அதற்கு அவரது பிரஷ்யப்

பிராந்திய குறுகிய மனப்பான்மை மட்டுமே காரணம் என்று தான் சொல்ல வேண்டும். குறிப்பான பிரஷ்ய சோஷலிஸத்தின் உண்மையான ஸ்தாபகர் அவர், இறுதியாக அப்படித் தான் இன்று அவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

ஆயினும், அவரது அன்புக்குரிய பிரஷ்யாவிலுங்கூட, ரோட்பெர்டஸ் நிம்மதி கெடாமலிருக்க முடியவில்லை. 1859ல் மார்க்ஸ் எழுதிய **அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்குச் செலுத்தும்** ஒரு பங்கு, முதற் பாகம், பெர்லினில் வெளியிடப்பட்டது. அதில், ரிக்கார்டோவை எதிர்த்துப் பொருளாதாரவாதிகள் எழுப்பிய ஆட்சேபணைகளில் இரண்டாவது ஆட்சேபணையாக 40ம் பக்கத்தில் முன் வைத்தது வருமாறு:

''ஒரு விளைபொருளின் பரிமாற்ற மதிப்பு அதில் அடங்கியுள்ள உழைப்பு நேரத்துக்குச் சமமானால், ஒரு உழைப்பு நாளின் பரிமாற்ற மதிப்பு அதன் விளைபொருளுக்குச் சமமாகும். அல்லது உழைப்பின் விளைபொருளுக்குச் சமமாகக் கூலி இருக்க வேண்டும். ஆனால் வழக்கோ நேர்மாறாக இருக்கிறது.''

இதைப்பற்றிப் பின்வரும் குறிப்பு இருந்தது:

''ரிக்கார்டோவுக்கு எதிராகப் பொருளாதாரத் தரப்பிலிருந்து* முன்வைக்கப்பட்ட இந்த ஆட்சேபணை பிற்காலத்தில் சோஷலிஸ்டுத் தரப்பிலும் எழுப்பப்பட்டது. தத்துவ ரீதியிலே இந்தச் சூத்திரம் சரியே என்று முன்னனுமானித்துக் கொண்டு, தத்துவத்துடன் முரண்படுவதாக நடைமுறைமீது பழிபோடப்பட்டது, மேலும் அதன் தத்துவரீதியான கோட்பாட்டிலிருந்து அனுமானிக்கப்பட்ட முடிவுகளை நடைமுறையிலே எடுத்துக் கொள்ளுமாறு பூர்ஷ்வா சமுதாயம் அழைக்கப்பட்டது. இவ்வழியிலாயினும் ஆங்கிலேய சோஷலிஸ்டுகள் ரிக்கார்டோவின் பரிமாற்ற மதிப்புச் சூத்திரத்தை அரசியல் பொருளாதாரத்துக்கு எதிராகத் திருப்பினர்.''[11]

இதே குறிப்பில் மார்க்ஸின் **மெய்யறிவின் வறுமை** எனும் நூல் குறிப்பிடப்பட்டது, அன்று அது எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கக் கூடியதாயிருந்தது.

---

* —''பூர்ஷ்வாப் பொருளாதாரவாதிகள்'' என்கிறார் மார்க்ஸ்.—[பதிப்பாசிரியர்.]

ஆகவே, ரோட்பெர்டஸ் தமது 1842ம் ஆண்டுக் கண்டு பிடிப்புகள் உண்மையிலே புதியவைதாஞ என்று உறுதிப் படுத்திக் கொள்வதற்குப் போதிய வாய்ப்பு இருந்தது. அதற்கு மாருக, அவற்றை அவர் திரும்பத் திரும்பப் பிரகடனப் படுத்திக் கொண்டிருக்கிருர், ரோட்பெர்டஸைப் போலவே மார்க்ஸும் சுயேச்சையாக ரிக்கார்டோவிடமிருந்து தமது முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கக் கூடும் எனும் விஷயம் அவர் மூளையிலே படாமலே போகிற அளவுக்கு அவை நேர் நிகரற்றவை என்று கருதுகிருர். அது கடுகளவேனும் சாத்திய மில்லையாம்! இந்த முடிவுகள் தம்மிருவருக்கும் வெகு காலத் துக்கு முன்பே இங்கிலாந்தில் எடுத்தியம்பப்பட்டுள்ளதை— கொச்சை வடிவத்தில் ரோட்பெர்டஸ் இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிருரே, குறைந்தபட்சம் அந்தக் கொச்சை வடிவத்திலேயாயினும் எடுத்தியம்பப்பட்டுள்ளதை—தானே உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவருக்கு மார்க்ஸ் எல்லா வசதிகளும் அளித்தார், அப்படியிருந்தும் அதே மார்க்ஸ் அவரிடமிருந்து ''களவாடி'' இருக்கிருராம்!

மேலே கொடுக்கப்பட்டிருப்பது உண்மையிலே ரிக்கார்டோ தத்துவத்தின் மிக எளிமையான சோஷலிஸ்ட் செயல் பாடாகும். அது ரோட்பெர்டஸ் உள்ளிட்ட மற்றவர்கள் விஷயத்தில் உள்ளபடியே ரிக்கார்டோவுக்கு அப்பால் வெகு தொலைவுக்குப் போகிறது; அது மிகுதி மதிப்பின் தோற்று வாய் மற்றும் தன்மை பற்றி உட்பார்வை பெறுவதற்குப் பல வழக்குகளில் கொண்டு சென்றுள்ளது. இவ்விஷயத்தில் குறைந்தபட்சம் தாம் எடுத்தியம்பிய அதே நேர்த்தியுடன் ஏற்கெனவே சொல்லப்பட்டவைகளுக்கு மேலாக அவர் எங்கும் எதையும் முன்வைக்கவில்லை என்பது ஒருபுறமிருக்க, தமக்கு முன்சென்றவர்களின் முன்வைப்பு போலவே அவரது முன்வைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது—அதாவது அவர் விமர் சனப் பார்வையின்றி, சிறிதேனும் பரிசீலனை செய்யாமலே, உழைப்பு, மூலதனம், மதிப்பு முதலான பொருளாதார வகை யினங்களை அவற்றின் வெளிப்புறத் தோற்றங்களில் ஒட்டிக் கொண்டிருக்கிற கொச்சையான வடிவத்தில், பொருளாதார வாதிகளால் அவருக்குக் கொடுக்கப்பட்ட கொச்சையான வடிவத்தில், எடுத்துக் கையாள்கிருர். அதன் காரணமாக அவர் எல்லா மேல் வளர்ச்சியினின்றும் தம்மைத் தாமே கத்தரித்துக்

கொள்கிறார்—மார்க்ஸ் அதற்கு மாறாக இருந்தார், சென்ற அறுபத்து நான்கு ஆண்டுகளாக அடிக்கடித் திருப்பிச் சொல்லப்பட்டு வந்த இந்த முன்கூற்றுக்களை மார்க்ஸ்தான் முதன்முதலாகக் கொஞ்சமாவது உருப்படியாக்கியவர்—அதோடல்லாமல், அவர் கற்பனாவாதத்துக்கு நேராகக் கொண்டு செல்கிற பாதையையும் திறந்துவைத்துக் கொள் கிறார்; இதை நாம் விளக்கிக் காட்டவிருக்கிறோம்.

சமுதாய விளைபொருள் முழுவதும் தமது விளைபொருள் என்கிற முறையில் தொழிலாளர்களுக்குச் சொந்தமாகும், ஏனெனில் அவர்கள் மட்டுமே உண்மையான உற்பத்தியாளர் கள், என்னும்படியான ரிக்கார்டோ தத்துவத்தின் மேற்கூறிய செயல்பாடு நேராகக் கம்யூனிஸத்துக்குக் கொண்டு செல் கிறது. ஆனால், மேலே மேற்கோள் காட்டிய பகுதியில் மார்க் ஸும் குறித்துக் காட்டுகிறபடி, புறவடிவு வகையிலே அது பொருளாதாரரீதியிலே தவறாகும், ஏனெனில் அது வெறு மனே நீதிநெறி முறைமையை அரசியல் பொருளாதாரத்தில் செயல்படுத்துவதாகும். முதலாளித்துவப் பொருளாதாரத் தின் விதிகளின்படி, விளைபொருளின் மிகப் பெரும் பகுதி அதை உற்பத்தி செய்த தொழிலாளர்களுக்குச் சொந்தமாக இல்லை. அது அநியாயம், அப்படி இருக்கக் கூடாது என்று இப்போது சொல்வோமானால் அதற்கும் அரசியல் பொருளா தாரத்துக்கும் உடனடிச் சம்பந்தம் ஒன்றும் கிடையாது. இந்தப் பொருளாதார உண்மை நமது நீதிநெறி உணர்ச்சிக்கு முரண்பாடாக இருக்கிறது என்று மட்டுமே சொல்லிக் கொள் கிறோம். எனவேதான், இதனை எப்போதும் மார்க்ஸ் தமது கம்யூனிஸ்ட் கோரிக்கைகளுக்கு ஆதாரமாகக் கொள்ள வில்லை, முதலாளித்துவ உற்பத்தி முறையின் தவிர்க்க முடியாத வீழ்ச்சியையே ஆதாரமாகக் கொண்டார்—அவ்வீழ்ச்சி நம் கண்ணெதிரே மேன்மேலும் அதிகரித்த அளவிலே தினந்தோறும் நிகழ்ந்து வருகிறது; கூலி கொடுபடாத உழைப்பு அடங்கியதே மிகுதி மதிப்பு ஆகும் என்று மட்டுமே அவர் சொல்கிறார், அது ஒரு எளிய உண்மையாகும். ஆனால், புறவடிவு வகையிலே பொருளாதாரரீதியிலே தவறா யிருக்கக் கூடியது உலக வரலாற்றின் பார்வை நிலையிலே சரியாயிருக்கக் கூடும். அடிமை முறை அல்லது பண்ணையடிமை உழைப்பு முறை விஷயத்தில் செய்தது போல மக்கள்

திரளின் நீதிநெறி உணர்வு ஒரு பொருளாதார உண்மையை அநியாயம் என்று பறைசாற்றினல், அந்த உண்மை காலாவதியாகிவிட்ட ஒன்று, வேறு பொருளாதார உண்மைகள் தோற்றங்கொண்டு விட்டன, அதனல் முந்தைய உண்மை சகிக்க வொண்ணுததாயும் நிலைநிற்க வொண்ணுததாயும் ஆகிவிட்டது என்பதற்கு அது சான்ருகும். எனவே, புறவடிவு வகையிலே பொருளாதாரச் சரியின்மையின் பின்னே ஒரு மிக உண்மையான பொருளாதார உள்ளடக்கம் மறைந்திருக்கக் கூடும். மிகுதி மதிப்பு பற்றிய தத்துவத்தின் குறிபொருளையும் வரலாற்றையும் குறித்து மேலும் நெருங்கிக் கவனிப்பதற்கு இது இடமல்ல.

அதே நேரத்தில் ரிக்கார்டோவின் மதிப்பு பற்றிய தத்துவத்திலிருந்து வேறு முடிவுகள் எடுக்க முடியும், எடுக்கப் பட்டும் உள்ளன. பண்டங்களின் மதிப்பு அவற்றின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பினல் நிர்ணயிக்கப்படுகிறது. எனினும், இந்தக் கேடுகெட்ட உலகத்திலே பண்டங்கள் சில சமயங்களில் தமது மதிப்புக்கு மேலாகவும் சில சமயங்களில் கீழாகவும் விற்கப்படுவதைக் காணலாம்—இது உண்மையிலே போட்டிக்குரிய மாறுபாடுகளின் விளைவாக மட்டும் நிகழ்வதில்லை. வரத்து கிருக்கி சாதனத்தால் பண்டங்களின் விலை உழைப்பின் மதிப்புக்கு இறக்கப்படுகிற போக்கு இருப்பது போலவேதான் இலாப விகிதமும் எல்லா முதலாளிகளுக்கும் ஒரே தரத்தில் சரிசமமாக்கப்படும் போக்கு இருக்கிறது. ஆனல் இலாப விகிதமானது ஒரு தொழில் அமைப்பில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. எனினும் இப்போது வெவ்வேருன இரண்டு தொழிற் கிளைகளில் வருடாவருட விளைபொருள் சமமான உழைப்பு அளவு கொண்டதாயிருக்கக் கூடும், அதன் விளைவாக சம மதிப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் கூடும், மேலும் இரண்டிலும் கூலி சம அளவில் இருக்கக் கூடும், அதே நேரத்தில் ஒரு கிளையில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் மற்ற கிளையில் ஈடுபடுத்தப்பட்டதைக் காட்டிலும் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக இருக்கக் கூடும்—அடிக்கடி இப்படி இருக்கவும் செய்கின்றன—, இதன் காரணமாக, ரிக்கார்டோவின் மதிப்பு பற்றிய விதி இங்கே சம இலாப விகிதம் பற்றிய விதியுடன் முரண்பட்டுவிடுகிறது. இதை

ரிக்கார்டோவுங்கூட கண்டுகொண்டார். இரண்டு தொழிற் கிளைகளின் விளைபொருட்களும் அவற்றின் மதிப்புப்படி விற்கப் பட்டால், இலாப விகிதங்கள் சமமாக இருக்க முடியாது; ஆனால், இலாப விகிதங்கள் சமமாயிருக்குமானால் அப்போது அவ்விரண்டு தொழிற் கிளைகளின் விளைபொருட்களையும் நிச்சய மாக எப்போதும் அவற்றின் மதிப்புப்படி விற்க முடியாது. ஆக, இங்கே ஒரு முரண்பாட்டை, இரண்டு பொருளாதார விதிகளின் முரண்முழுமையைப் பார்க்கிறோம், இதற்கான நடைமுறைத் தீர்வு ரிக்கார்டோவின் கருத்தில் (அத்தி யாயம் 1, பகுதிகள் 4ம் 5ம்)[12] பொதுவழக்கமாக மதிப்புக்குப் பாதகமாக இலாப விகிதத்துக்குச் சாதகமாக நிகழ்கிறது.

எனினும் ரிக்கார்டோவின் மதிப்பு பற்றிய வரையறுப் புக்கு ஆபத்தான இனக்குறிப் பண்புகள் இருந்த போதிலும், ஒரு நல்ல பூர்ஷ்வா அதை நேசித்துப் போற்றிக் கொள்ளக் கூடியதான ஒரு முனைப்புக்கூறும் அதற்கு உண்டு. அது அவனது நியாய உணர்ச்சியை எதிர்க்கவொண்ணுச் சக்தியுடன் தூண்டிவிடுகிறது. நிலப்பிரபுத்துவ முறையின் அநீதி, சமமற்ற நிலை, சிறப்புரிமை ஆகியவற்றின் அழிவுக் குவியலின்மீது 18வது 19வது நூற்றுண்டுகளின் பூர்ஷ்வா தனது சமுதாயக் கட்டடத்தை நீதி, உரிமைகளில் சமநிலை எனும் ஆதாரத் தூண்களைக் கொண்டு கட்ட விரும்புகிறுன். மேலும், உழைப் பினுல் பண்டங்களின் மதிப்பு நிர்ணயிக்கப்படுவதும், சம உரிமைகள் படைத்த பண்ட உடைமையாளர்களிடையே இந்த மதிப்பு அளவையின்படி உழைப்பின் விளைபொருட்கள் சுயேச்சையாகப் பரிமாற்றமாவது ஆகிய இவைதான், ஏற் கெனவே மார்க்ஸ் நிரூபித்துள்ளபடி, உண்மையான அடிப் படைகளாக வைத்து நவீன கால பூர்ஷ்வா வர்க்கத்தின் அரசியல், நீதி, மெய்யறிவு சம்பந்தப்பட்ட தத்துவார்த்தம் முழுவதும் கட்டப்பட்டுள்ளது. உழைப்பே ஒரு பண்டத் தினுடைய மதிப்பின் அளவை என்று மட்டும் அங்கீகரித்து விட்டால் போதும், இந்த அடிப்படையான நியாய விதியைப் பெயரளவில் அங்கீகரித்துவிட்டு ஒவ்வொரு வினுடியிலும் உண் மையிலே ஈவிரக்கமின்றி அதை நிராகரிக்கிறதாகத் தோன்று கிற உலகத்தின் கயமையைக் கண்டு அந்த நல்ல பூர்ஷ்வா வின் மேலான உணர்ச்சிகள் ஆழப் புண்படாமலிருக்க முடி யாது. குறிப்பாகச் சிறு பூர்ஷ்வா நபர் தனது நேர்மையான

உழைப்பானது—அது தனது தொழிலாளிகளின், பயிற்சியாளர்களின், உழைப்பாக இருந்தாலுங்கூட—பெருமளவான தொழிலின் போட்டியாலும், இயந்திரவகைகளின் போட்டியாலும் நாள்தோறும் மேன்மேலும் மதிப்பில் குறைந்து கொண்டே வருகிற நிலையில், தத்தம் உழைப்பு மதிப்புக்கேற்றபடி விளைபொருட்கள் பரிமாற்றமாவது இறுதியிலே முழுமையான நிலையான உண்மையாக நிலவுகிற ஒரு சமுதாயம் வ்ராதா என்று ஏங்கித் தீர வேண்டும். அதாவது, ஒரேயொரு பண்ட உற்பத்தி விதி மட்டுமே முற்றுக நிலவுகிறதாய், ஆனல் அது நிலவுவதற்கே இருந்தாக வேண்டிய நிலைமைகள் (அதாவது, பண்ட உற்பத்தியின் மற்றைய விதிகளும், பின்னல் முதலாளித்துவ உற்பத்தியின் விதிகளும்) ஒழிக்கப் பட்டுவிட்டதாய் இருக்கக் கூடிய ஒரு சமுதாயத்துக்கு அவன் ஏங்கித் தீர வேண்டும்.

இந்தக் கற்பனுவாதம் நவீன கால சிறு பூர்ஷ்வாவின்—உண்மையாகவோ இலட்சிய நிலையிலோ—சிந்தனை முறையிலே இத்துணை ஆழமாக வேர்விட்டிருக்கிறதற்குச் சான்றுகள் உள்ளன: ஏற்கெனவே *1831*லேயே ஜான் கிரே இதை முறைமையுடன் வளர்த்திருக்கிருர்;[13] *1830*களிலே இங்கிலாந்தில் இது நடைமுறையிலே செயல்படுத்த முயற்சிக்கப் பட்டும் தத்துவரீதியிலே பரவலாகப் பிரச்சாரம் செய்யப் பட்டும் வந்தது; *1842*ல் ஜெர்மனியில் ரோட்பெர்டஸூம் *1846*ல் பிரான்ஸில் புரூதோனும் இதைக் கடைசிக் கொழுந்தாக முளைத்த உண்மையாகப் பிரகடனப்படுத்தினர்; மேலும் ரோட்பெர்டஸ் *1871*லேகூட இதைச் சமுதாயப் பிரச்சினைக்குப் பரிகாரமாகவும், சொல்லப்போனல் தமது சமுதாய உயிலாகவும் பிரகடனப்படுத்தினர்;[14] மற்றும் *1884*ல் ரோட்பெர்டஸின் பெயரால் பிரஷ்ய அரசு வழிப்பட்ட சோஷலிஸத்தைப் பயன்படுத்திக் கொள்ள முனைந்த பதவி வேட்டைக்காரர்களிடையே இதற்கு மீண்டும் ஆதரவாளர்கள் கிடைக்கிருர்கள்,[15] என்று.

புரூதோனுக்கும் கிரேயுக்கும் எதிராக இந்தக் கற்பனுவாதத்தைப் பற்றி எவ்வளவோ விரிவாழத்துடன் மார்க்ஸ் விமர்சனம் அளித்திருப்பதால் (இந்நூலின் பிற்சேர்க்கையைக் காண்க[16]) ரோட்பெர்டஸூக்கே உரித்தான வடிவில் இது நிரூபிக்கப்பட்டும் வர்ணிக்கப்பட்டும் இருப்பதைப் பற்றிச்

சில குறிப்புகள் கொடுப்பதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

ஏற்கெனவே கூறியவாறு, பொருளாதாரவாதிகளிடமிருந்து தமக்குக் கிடைக்கப் பெற்ற அதே வடிவத்திலே பொருளாதாரக் கருத்துருவங்களின் மரபான வரையறுப்புகளை ரோட்பெர்டஸ் எடுத்தாள்கிறார். அவற்றை ஆய்ந்து விசாரிக்கச் சிறிதேனும் முயலவில்லை அவர். அவருக்கு மதிப்பு என்பது ''அளவுப் பிரகாரம் ஒன்று மற்றவற்றிற்கு எதிராக மதிப்பிடப்படுவது, இந்த மதிப்பீடு அளவையாகக் கருதப் படும்''[17] என்று. நயமாகச் சொல்வதானால் இது ஒரு மிகவும் ஒழுங்கற்ற வரையறுப்பு, அதிகப்பட்சமாகப் போனால் மதிப்பு என்ன மாதிரி ஏறத்தாழத் தோற்றமளிக்கிறது என்று ஒரு கருத்து கொடுக்கிறதே தவிர அது என்ன என்று எதுவுங் கூறவில்லை. எனினும், மதிப்பு பற்றி ரோட்பெர்டஸ் சொல்ல முடிகிறதெல்லாம் இவ்வளவேயாதலால் அவர் மதிப்பின் அளவையை மதிப்புக்கு அப்பால் வெளியே தேடிக் கொண்டிருப்பது புரிந்து கொள்ளக் கூடியதுதான். திருவாளர் அடோல்ப் வாக்னர் எல்லையின்றிப் போற்றிப் பெருமைப்படுத்துகிறாரே[18] அந்த சூட்சுமச் சிந்தனையாற்றலுடன் ரோட்பெர்டஸ் பயன்பாடு மதிப்பையும் பரிமாற்ற மதிப்பையும் ஒன்றோடொன்று போட்டுக் குளறுபடியாக்கி முப்பது பக்கங்களைப் போக்கியபின் உண்மையான மதிப்பு அளவை எதுவுமில்லை என்றும், ஒரு பதில் அளவையை வைத்துக் கொண்டு எப்படியோ சமாளிக்க வேண்டியதுதான் என்றும் முடிவுக்கு வருகிறார். உழைப்பு அவ்வகை அளவையாகப் பயன்பட முடியும்—ஆனால் அதற்குச் சம அளவான உழைப்புள்ள விளைபொருட்கள் அதே சம அளவான உழைப்புள்ள விளைபொருட்களோடு எப்போதும் பரிமாற்றம் செய்து கொண்டால்தான் முடியும்; அது ''ஏற்கெனவே தன்னியல்பாக அப்படி இருந்தாலும் சரி'' அல்லது அப்படி இருக்குமாறு உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ''நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டாலும் சரி''.[19] எனவே, பண்டங்களுக்கு ''உழைப்புச் செலவு ஆகிறது'' உழைப்பு தவிர செலவாகிறது வேறு ஒன்றுமில்லை என்றும் அது ஏன் அப்படி என்றும் நமக்கு விளக்குவதற்கு முதல் அத்தியாயம் முழுவதையும் எடுத்துக் கொண்டுள்ள போதிலும் மதிப்பும் உழைப்பும் தம்மிடையே எவ்விதமான அசல் உறவும் இன்றி நிற்கின்றன.

மேலும், உழைப்பு ஆய்வேதுமின்றிப் பொருளாதாரவாதிகளிடையே அடிபடுகிற வடிவத்தில் எடுத்தாளப்படுகிறது. அதுவுங்கூட இல்லை. ஏனென்றால், உழைப்பின் கடுமையிலுள்ள வேறுபாடுகளைப் பற்றிச் சில வார்த்தைகளில் குறிப்பு இருந்தபோதிலும், சகஜமான சராசரி சமுதாய நிலைமைகளில் உழைப்பு செலவிடப்படுகிறதா இல்லையா என்று சற்றும் பாராமலே உழைப்பு என்பது ''விலைபெறுகிற'' ஏதோ ஒன்று, ஆகவே மதிப்பை அளவிடுகிற ஏதோ ஒன்று என்று முற்றும் பொதுப்படையாகவே இன்னமும் முன்வைக்கப்படுகிறது. ஒரே நாளில் தயாரிக்க முடிகிற விளைபொருட்களைத் தயாரிக்க உற்பத்தியாளர்கள் பத்து நாட்களோ ஒரு நாளோ எடுத்துக் கொள்கிறார்களா; அவர்கள் மிக நேர்த்தியான அல்லது மிக மோசமான கருவிகளைப் பயன்படுத்துகிறார்களா; சமுதாய ரீதியிலே அவசியமான பொருட்களை சமுதாய ரீதியிலே தேவைப்படுகிற அளவில் உற்பத்தி செய்வதில் அவர்கள் தமது உழைப்பு நேரத்தைச் செலவிடுகிறார்களா அல்லது சிறிதும் வேண்டப்படாத பொருட்களையோ வேண்டப்படுகிற பொருட்களையோ கிறுக்கியைவிட அதிகமாகவோ குறைவாகவோ உண்டாக்குகிறார்களா—இவற்றைப்பற்றியெல்லாம் ஒரு வார்த்தையேனும் இல்லை: உழைப்பு உழைப்புத்தான், சம உழைப்புள்ள விளைபொருளைச் சம உழைப்புள்ள விளைபொருளுக்குப் பரிமாறிக் கொண்டு தீர வேண்டும். சரியாகவோ தப்பாகவோ மற்ற விஷயங்களில் தேசியப் பார்வை நிலையை மேற்கொள்ளவும் பொதுவான சமுதாய நோக்கங்கள் எனும் உச்சிமீது ஏறி நின்று தனித்தனி உற்பத்தியாளர்கள்மேல் ஆய்வு நோட்டம் விடவும் தயாராயிருக்கிற ரோட்பெர்டஸ் அவ்வாறு இங்கே செய்யாமல் கவனமாகத் தட்டிக் கழிக்கிறார். இதற்கு உண்மையிலே ஒரே காரணம், தமது நூலின் முதல் வரியிலிருந்தே நேராக அவர் உழைப்புப் பணம் எனும் கற்பனையுலகத்துக்குக் கிளம்பிவிடுகிறார், மேலும் உழைப்பை அதன் மதிப்பை உற்பத்தி செய்கிற பண்பை வைத்துச் செய்கிற எந்த விசாரணையும் அவரது பாதையிலே தாண்ட முடியாத தடைக்கற்களை எழுப்பித் தீரும் என்பதும் காரணமாகும். இங்கே அவருடைய சூட்சும சிந்தனை சக்தியைவிட—அது ரோட்பெர்டஸிடம் மிக ஸ்தூலமான கருத்துச் சூன்யத்தின் மூலம் காட்டிக் கொள்கிறது

— அவருடைய இயல்புணர்வு கணிசமாக வலுவேறி யிருந்தது.

இப்போது ஒரு கையசைப்பிலே கற்பனையுலகுக்கு மாறிச் செல்வது நடக்கிறது. ஒரு மாற்றவொண்ணு விதியாக உழைப்பு மதிப்பின்படி பண்டங்களைப் பரிமாறிக் கொள் வதை உறுதிப்படுத்துகிற ''நடவடிக்கைகள்'' எவ்வகைக் கஷ்டங்களும் உண்டாக்கவில்லை. கிரே முதல் புரூதோன் ஈருக இந்தப் போக்கைச் சேர்ந்த மற்ற கற்பனையுலகவாதிகள் இந்தக் குறிக்கோளைச் சாதிக்கத்தக்க சமுதாய நிறுவனங் களைப் புனைவதிலே மூளையைப் பிழிந்தெடுக்கிருர்கள். அவர் களாவது குறைந்தபட்சம் பரிமாற்றத்துக்குரிய பண்டங் களுக்குச் சொந்தக்காரர்களான உடைமையாளர்களின் செய்கை வழியாகப் பொருளாதாரப் பிரச்சினையைப் பொருளாதார வழியிலே தீர்க்க முயல்கிருர்கள். ரோட் பெர்டஸுக்கு அது மேலும் சுலபமானது. ஒரு நல்ல பிரஷ்ய நாட்டான் என்கிற முறையில் அவர் அரசுக்கு வேண்டுகோள் விடுகிருர்: அரசதிகார ஆணை அந்தச் சீர்திருத்தத்துக்கு உத்தரவிடுகிறது.

ஆக இவ்வழியிலே நேர்த்தியாக மதிப்பு ''உருவமைக்கப் படுகிறது''—ஆனல் இவ்வுருவமைப்பில் ரோட்பெர்டஸ் கோருகிற முன்னுரிமை என்னவோ நிச்சயமாக உருவமைக் கப்படவில்லை. மாருக, ரோட்பெர்டஸுக்கு முன்பே கிரேயும் பிரேயும் (மற்றவர்களும் உண்டு) அடிக்கடி நீட்டி முழக்கிக் காதுபுளித்துப் போகிற அளவுக்கு இக்கருத்தை—அதாவது, என்றென்றைக்கும் எல்லா சூழ்நிலைமைகளிலும் விளை பொருட்களை அவற்றின் உழைப்பு மதிப்பு ஒன்றை மட்டுமே வைத்துப் பரிமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளைக் கோரும் ஆத்மார்த்திக விருப்பத்தை—திரும்பத் திரும்பச் சொல்லியுள்ளனர்.

இவ்வாறு மதிப்பை அரசு உருவமைத்தபின்—குறைந்த பட்சம் விளைபொருட்களின் ஒரு பகுதிக்காயினும் என்றவாறு, ஏனெனில் ரோட்பெர்டஸும் தன்னடக்கம் உள்ளவர்— அது தன்னுடைய உழைப்புக் காகிதப் பணத்தை வெளி யிட்டு அதிலிருந்து தொழில்துறை முதலாளிகளுக்கு முன் பணம் கொடுக்க, அவர்கள் அதைக் கொண்டு தொழிலாளர் களின் கூலி கொடுக்கிருர்கள், உடனே தொழிலாளர்கள்

தாங்கள் பெற்ற உழைப்புக் காகிதப் பணத்தைக் கொண்டு விளைபொருட்களை வாங்கி அதன் மூலமாக அந்தக் காகிதப் பணம் புறப்பட்ட இடத்துக்கே திரும்பிப் போகச் செய்கின்றனர். இது எவ்வளவு அழகாக நடந்தேறுகிறது என்பதை ரோட்பெர்டஸிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்:

''இரண்டாவது நிபந்தனையைப் பொறுத்தமட்டில், ஒரு விளைபொருளை யதார்த்தத்தில் ஒப்படைக்கிற நபர்தான் அந்த விளைபொருளை உற்பத்தி செய்வதற்கான உழைப்பு அளவை திட்பநுட்பமாகப் பதிவு செய்த சீட்டு பெற்றுக் கொள்வதால் ஒரு சீட்டில் சான்றளிக்கப்பட்ட மதிப்பு யதார்த்தத்திலே புழக்கத்தில் இருக்க வேண்டும் என்கிற அவசியமான நடவடிக்கை நடைமுறையாக்கப்படுகிறது. இரண்டு நாள் உழைப்பு தேவைப்பட்ட விளைபொருளை ஒப்படைக்கிற ஒருவன் 'இரண்டு நாள்' என்று குறிப்பிடப்பட்ட சீட்டு பெறுகிறான். சீட்டுகளை வழங்குவதில் இந்த விதியைக் கறாராகப் பின்பற்றுவதின் வழியே இரண்டாவது நிபந்தனையும் அவசியமாக நிறைவேற்றப்படும். ஏனெனில், நமது முன்னனுமானங்களுக்கு ஏற்ப பொருட்களின் உண்மையான மதிப்பு அந்தப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குச் செலவிட்ட உழைப்பின் அளவுடன் எப்போதும் பொருந்துவதாலும், இந்த உழைப்பின் அளவு வழக்கமான நேரப்பிரிவினை மூலமாக அளவிடக் கூடியதாயிருப்பதாலும், இரண்டு நாள் உழைப்பைக் கொண்ட விளைபொருளை ஒப்படைத்து இரண்டு நாட்களுக்கான சான்றிதழ் பெற்றுக் கொள்கிற ஒவ்வொருவனும் தான் யதார்த்தத்தில் ஒப்படைத்த மதிப்புக்கு மேலாகவோ குறைவாகவோ சான்றிதழ் மூலமாகவோ அல்லது பட்டா மூலமாகவோ பெறவில்லை. மேலும், ஒரு விளைபொருளை யதார்த்தத்தில் புழக்கத்தில் விட்ட ஒருவன் மட்டுமே அவ்வகைச் சான்றிதழ் பெறுகிறதினால் அந்தச் சீட்டில் குறிக்கப்பட்ட மதிப்பு சமுதாயத்தின் நிறைவுக்குக் கிடைக்கிறதாயுள்ளது. உழைப்புப் பிரிவினையின் வட்டத்தை எத்துணை விரிவானதாக நாம் கற்பித்துக் கொண்டாலும் சரி, இந்த விதியைக் கறாராகப் பின்பற்றினால் யதார்த்தத்தில் கைவசமுள்ள மதிப்பின் மொத்த தொகை சான்றளிக்கப்பட்ட மதிப்பின் மொத்த தொகைக்குச் சரிநுட்பமாகச் சமமாக இருந்து தீர வேண்டும். ஆனால், சான்றளிக்கப்

பட்ட மதிப்பின் மொத்தம் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மொத்தத்துக்குச் சரிசமமாக இருப்பதால் பிந்தையது கைவசமுள்ள மதிப்புடன் அவசியம் பொருந்தித் தீர வேண்டும், எல்லாக் கோரிக்கைகளும் நிறைவாக்கப்பட்டுச் சரியாகத்தீர்க்கப் படும்.'' *(பக்கங்கள் 166-67.)*

இதுவரை தமது புதிய கண்டுபிடிப்புகளைக் காலங்கடந்து கண்டுபிடிக்கும் துரதிர்ஷ்டத்தால் எப்போதும் ரோட்பெர் டஸ் பீடிக்கப்பட்டிருந்தாரென்றால் இந்தத் தடவையாவது அவருக்கு ஒரு தினுசான தற்படைப்புத் திறம் கைகூடியிருக் கிறது: அதாவது, உழைப்புப் பணக் கற்பனையுலகம் எனும் முட்டாள் தனத்தை இத்துணை சிறுபிள்ளைத் தனமான வெகுளி யோடுகூடிய, உள்ளும் புறமும் தெரியக் கூடிய, வடிவத் தில்—அசல் போமரேனியாக்காரனுக்குரிய வடிவத்தில் என் றும் நான் சொல்லக் கூடும்—அவரது போட்டிக்காரர்கள் எவரும் வெளியிடத் துணியவில்லை. ஒவ்வொரு காகிதச் சான்றிதழுக்கும் பொருத்தமான ஒரு மதிப்புப் பொருள் ஒப் படைக்கப்பட்டிருப்பதாலும், எந்த மதிப்புப் பொருளும் அதற்குப் பொருத்தமான காகிதச் சான்றிதழின்றி ஒப் படைக்கப்படாததாலும், காகிதச் சான்றிதழ்களின் மொத்த தொகை மதிப்புப் பொருட்களின் மொத்த தொகைக்கு ஈடாக எப்போதும் இருந்து தீர வேண்டும். மிச்சமெதுவு மின்றிக் கணக்கு விடை கொடுக்கிறது, விநாடிக்கு விநாடியாக உழைப்பு நேரத்துடன் இந்தக் கணக்கு ஒத்துப் போகிறது,— எவ்வளவோ பழுத்த அனுபவமுள்ள அரசாங்கத் தலைமை வரவு செலவு அலுவலகக் கணக்காயருங்கூட இந்தக் கணக்கில் சின்னஞ்சிறு பிழையேனும் நிரூபிக்க முடியாது. இதற்கு மேல் வேறு என்ன வேண்டும்?

தற்கால முதலாளித்துவச் சமுதாயத்தில் ஒவ்வொரு தொழில்துறை முதலாளியும் தன் சொந்தக் கணக்கில் தனக்கு எது எப்படி எவ்வளவு வேண்டுமோ அதை உற்பத்தி செய்கிறான். தேவையான பொருட்களின் தரம், வகை விஷயத்திலும் அளவு விஷயத்திலும் சமுதாயக் கிராக்கி அவ னுக்கு ஒரு அறியாத பரிமாணமாகவே இருந்துவிடுகிறது. இன்று விரைவிலே வினியோகத்துக்குக் கொடுக்க முடியாத ஒன்று அடுத்த நாள் கிராக்கியை வெகுவாக மிஞ்சிய அள விலே கொடுக்கப்படலாம். ஆனபோதிலும், ஏதோவொரு

வழியில், நேர்த்தியாகவோ மோசமாகவோ, இறுதியிலே கிருக்கி நிறைவாக்கப்படுகிறது, மொத்தமாகப் பார்க்கிற பொழுது இறுதியிலே உற்பத்தியானது தேவைப்படுகிற பொருட்கள் திசையில் செலுத்தப்படுகிறது. இந்த முரண்பாட்டின் சமரசம் எப்படிச் சாதிக்கப்படுகிறது? போட்டி மூலமாக. போட்டி எப்படி இந்தத் தீர்வு ஏற்படச் செய்கிறது? வகையிலோ தொகையிலோ உடனடியான சமுதாயத் தேவைகளுக்குப் பயனற்ற பண்டங்களின் விலைகளை அவற்றின் உழைப்பு மதிப்புக்குக் குறைவாக இறக்குவதின் மூலமாக; மற்றும் இந்தச் சுற்றி வளைத்த வழியில் முற்றிலும் பயனற்ற பொருட்களையோ அல்லது பயன்படுத்த முடியாத அளவிலே மிதமிஞ்சிய அளவிலே பயனுள்ள பொருட்களையோ உற்பத்தி செய்துள்ளதாக முதலாளிகளுக்கு உணர்த்துவதின் மூலமாக. இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தொடர்கின்றன.

முதலாவது, பண்டங்களின் விலைகள் அவற்றின் மதிப்புகளினின்று இடையறுது திரிந்து செல்வது ஒரு அவசியகரமான நிபந்தனையாகும்—அதிலேதான், அதன் வழியேதான், பண்டங்களின் மதிப்பு உண்டாக முடியும். போட்டியின் எழுச்சி வீழ்ச்சிகளின் மூலமாகவும், அதன் விளைவாகப் பண்ட விலைவாசிகளின் எழுச்சி வீழ்ச்சிகளின் மூலமாகவும் மட்டுமே பண்ட உற்பத்தியின் மதிப்பு பற்றிய விதி தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது, சமுதாய ரீதியிலே அவசியமான உழைப்பு நேரத்தின் மூலமாகப் பண்டத்தின் மதிப்பு நிர்ணயிக்கப்படுவதும் யதார்த்தமாகிறது. அதன் காரணமாக மதிப்பின் வெளியீடு வடிவமான விலைக்கு அது வெளியிடும் மதிப்பினின்று வேறுபட்ட அம்சம் ஒன்று பொதுவழக்காக இருக்கிறது. இது மிகப் பெரும்பான்மையான சமுதாய உறவுகளுக்கு வாய்த்திருப்பது போல் மதிப்புக்கும் வாய்த்துள்ள தலைவிதியாகும். தான் பிரதிநிதித்துவப்படுத்துகிற முடியரசினின்று மன்னன் வழக்கமாகவே முற்றும் வேறுபட்டுக் காணப்படுகிருன். எனவே, தத்தம் பண்டங்களைப் பரிமாற்றிக் கொள்கிற உற்பத்தியாளர்களின் சமுதாயத்திலே, விலைகள்மேல் நிர்ப்பந்தம் செலுத்துவதின் மூலமாக மதிப்பு நிர்ணயத்தை நிலைநாட்ட முடிவதற்குரிய ஒரே வழியில் அதை நிர்ணயிக்காதபடி போட்டியைத் தடை செய்வதின் மூலமாக உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்பு நிர்ணயத்தை நிலைநாட்ட

விரும்புவது, பொருளாதார விதிகள்பால் வழக்கமாகக் காட்டப்படுகிற கற்பனுவாத ஏளன நினைப்பைக் குறைந்தபட்சம் இத்துறையிலேனும் மேற்கொண்டதை நிரூபிப்பதாகும்.

இரண்டாவதாக, தத்தம் பண்டங்களைப் பரிமாறிக் கொள்கிற உற்பத்தியாளர்களின் சமுதாயத்திலே பண்ட உற்பத்தியின் மதிப்பு விதியைப் போட்டியானது செயலுக்குக் கொண்டுவருகிறது, அக்காரணத்திற்காகவே சமுதாய உற்பத்திக்கு அந்தச் சூழ்நிலைமைகளில் ஒரே சாத்தியமான அமைப்பையும் ஏற்பாட்டையும் உண்டாக்கி வைக்கிறது. பண்டங்களின் விலைக்குறைப்பு அல்லது விலையேற்றம் மூலமாக மட்டுமே எந்தப் பொருட்கள் எந்த அளவில் சமுதாயத்துக்கு வேண்டுமென்றோ வேண்டாமென்றோ தனிப்பட்ட பண்ட உற்பத்தியாளர்களுக்குப் பலமாக உணர்த்தப்படுகிறது. ஆனால் இந்தத் தனியொரு ஒழுங்கியக்கியைத்தான் ரோட்பெர்டஸும் தழுவி நிற்கிற கற்பனுவாதம் ஒழித்துவிட விரும்புகிறது. அப்புறம் ஒவ்வொரு பொருளும் தேவையான அளவிலும் அதற்கு மேல் போகாமலும் உற்பத்தி செய்யப்படும் என்பதற்கு உத்தரவாதம் என்ன—தொண்டையை அடைக்கிற அளவுக்கு அக்காரக் கிழங்குச் சர்க்கரையும் மூழ்கிச் சாகுமளவுக்கு உருளைக்கிழங்குச் சாராயமும் நமக்குக் கிடைக்கிற அதே நேரத்தில் தானியமும் இறைச்சியும் இன்றிப் பட்டினி கிடக்கவேண்டியிராது என்பதற்கு உத்தரவாதம் என்ன—டிரௌஸர் பொத்தான்கள் கோடி கோடியாகக் கிடைக்கிற அதே நேரத்தில் மானத்தை மறைக்க டிரௌஸர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிடாது என்பதற்கு உத்தரவாதம் என்ன—என்று நாம் கேட்டால் ரோட்பெர்டஸ் வெற்றிக் களிப்போடு தமது புகழ்பெற்ற கணக்கைக் காட்டுகிருர்;அதன் பிரகாரம் தேவைக்கு மிஞ்சிய ஒவ்வொரு இராத்தல் சர்க்கரைக்கும், விற்கப்படாத ஒவ்வொரு பீப்பாய் சாராயத்துக்கும், பயன்படுத்த முடியாத ஒவ்வொரு டிரௌஸர் பொத்தானுக்கும் சரிநிகரான சான்றிதழ் கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்தக் கணக்கு சரிநுட்பமாக ''விடை கொடுக்கிறதாம்'', அதன்படி ''எல்லாக் கோரிக்கைகளும் நிறைவாக்கப்பட்டுச் சரியாகத் தீர்க்கப்படுமாம்.'' இதை நம்பாதவன் போமரேனியாவிலுள்ள அரசாங்கத் தலைமை வரவுசெலவு அலுவலகக் கணக்காயர் *X*-க்கு எழுதிக் கேட்டுக்

கொள்ளலாம், அவர் இந்தக் கணக்கை மேற்பார்த்துச் சரியாயிருக்கக் கண்டிருக்கிருர், அவரது ரொக்கக் கணக்கில் இதுவரை ஒரு பிழையும் நேர்ந்ததில்லையாதலால் அவரை முற்றுக நம்பலாம்.

இனி ரோட்பெர்டஸ் தமது கற்பனைத் திட்டத்தைக் கொண்டு தொழில், வாணிபத் துறைகளின் நெருக்கடிகளை ஒழித்திட விரும்பும் வெகுளித்தனத்தைக் கவனியுங்கள். பண்டங்களின் உற்பத்தி உலகச் சந்தைக்கான அளவுக்கு வந்துவிட்டால், சொந்தக் கணக்குக்காக உற்பத்தி செய்கிற தனித்தனி உற்பத்தியாளர்களுக்கும் அவர்களின் உற்பத்திக்கான சந்தைக்கும்—அளவிலும் தரத்திலும் அதன் கிருக்கி என்னவென்று அவர்களுக்கு ஏறத்தாழ ஒன்றுந் தெரியாது—இடையே சமநிலைபாடு ஒரு புயல் மூலமாக, ஒரு வாணிப நெருக்கடி மூலமாக, உலகச் சந்தையிலே நிலை நாட்டப்படுகிறது.* இப்போது, விலைவாசிகளின் எழுச்சி அல்லது வீழ்ச்சி மூலமாக உலகச் சந்தை எந்த நிலையில் இருக்கிறதென்று தனித்தனி உற்பத்தியாளர்கள் உணரச் செய்யாதபடி போட்டி தடுக்கப்படுமேயானுல் அவர்கள் முழுக் குருடர்களாக ஆக்கப்படுவார்கள். எந்தச் சந்தைக்காக உற்பத்தி செய்கிருர்களோ அந்தச் சந்தையின் நிலவரம் பற்றி உற்பத்தியாளர்கள் இனிமுதல் ஏதும் அறிய முடியாத வகையில் பண்ட உற்பத்தியை அமைத்து நடத்துவது — இந்த நெருக்கடி நோய்க்கான பரிகாரம் உண்மையிலே ரோட்பெர்டஸ் மேல் டாக்டர் ஐஸன்பார்ட் பொருமை கொள்ளச் செய்ய முடியும்.

---

* குறைந்தபட்சம் அண்மைக் காலம் வரை இப்படித்தான் இருந்தது. உலக வாணிபத்திலே பிரான்ஸும், ஜெர்மனியும், எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்காவும் பங்கு கொள்வதின் வழியாக உலகச் சந்தையிலே இங்கிலாந்தின் ஏகபோக நிலை மேன்மேலும் உடைத்தெறியப்பட்டு வருவதால் ஒரு புதிய சமநிலைபாடு வடிவம் செயலாற்றுவதாகத் தோன்றுகிறது. நெருக்கடிக்கு முந்தையப் பொதுச் செழுமைக் காலகட்டம் இன்னமும் வெளிப்படவில்லை. அது வெளிப்படாமலே போய்விட்டால் அப்போது அற்ப ஏற்ற இறக்கங்களை மட்டுமே கொண்ட நிரந்தரமான தேக்கம் அவசியகரமாகவே நவீன காலத் தொழில் துறையின் சகஜமான நிலைமையாகிவிடும்.—[ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் வரைந்த குறிப்பு.]

வெறுமே ''உழைப்பு'' மூலமாக ரோட்பெர்டஸ் ஏன் பண்டங்களின் மதிப்பை நிர்ணயிக்கிறார், அதிகப் பட்ச மாகப் போனால் உழைப்புக் கடுமையின் வெவ்வேறான அளவு களை ஒப்புக்கொள்கிறார் என்று இப்போது புரிகிறது. எந்தச் சாதனத்தைக் கொண்டு எப்படி உழைப்பு மதிப்பைப் படைக் கிறது, எனவே அதை நிர்ணயிக்கவும் அளக்கவும் செய் கிறது என்று அவர் விசாரித்திருந்தால், தனியொரு பொரு ளுக்குத் தேவைப்படுகிற—அதே வகையைச் சேர்ந்த மற்ற பொருட்களுடன் சம்பந்தப்பட்ட நிலையிலும், சமுதாயத் தின் மொத்த கிருக்கியுடன் சம்பந்தப்பட்ட நிலையிலும் தேவைப்படுகிற—சமுதாயரீதியிலே அவசியமான உழைப் புக்கு வந்து சேர்ந்திருப்பார். அதன் விளைவாக, தனித்தனி உற்பத்தியாளர்களின் உற்பத்தியானது மொத்த மான சமுதாயக் கிருக்கியுடன் சரிசீராக்கிக் கொள்வது எப்படி நிகழ்கிறது என்கிற கேள்வி அவரை எதிர்கொண்டிருக்கும், அதன் விளைவாக அவரது கற்பனைத் திட்டம் முழுவதும் சாத்தியமற்றதாகச் செய்யப்பட்டிருக்கும். இந்தத் தடவை அவர் உண்மையிலே முக்கியமான விஷயத்தைச் ''சூட்சுமக் கருத்தாக்கிவிட'' விரும்பினார்.

கடைசியாக இப்போது ரோட்பெர்டஸ் உண்மையிலே புதியதாக ஒன்றை நமக்கு அளிக்கும் கட்டத்துக்கு வரு கிறோம், அது அவரை உழைப்புப் பணப் பரிமாற்றப் பொருளா தாரத்தை ஆதரிக்கும் தமது எண்ணிறைந்த சக ஆதர வாளர்கள் அத்தனை பேரிடமிருந்தும் பிரித்துக் காட்டுகிறது. கூலியுழைப்பை மூலதனம் சுரண்டுவதை ஒழிக்கும் குறிக் கோளுடன் அவர்கள் அனைவரும் இந்தப் பரிமாற்ற அமைப் பைக் கோருகின்றனர். ஒவ்வொரு உற்பத்தியாளனும் தனது விளைபொருளின் முழுமையான உழைப்பு மதிப்பைப் பெற வேண்டும். இதில் கிரே முதல் புரூதோன் ஈறாக எல்லோரும் ஒத்துப் போகிறார்கள். அப்படிக் கிடையாது என்கிறார் ரோட் பெர்டஸ். கூலியுழைப்பும் அதைச் சுரண்டுவதும் நீடிக்கிறது.

முதலாவதாக, சிந்தனைக்கெட்டத்தக்க எந்த ஒரு சமு தாய நிலைமையிலும் ஒரு தொழிலாளி தனது விளைபொரு ளின் முழு மதிப்பையும் நுகர்வதற்குப் பெற முடியாது. உற்பத்தி செய்த நிதியிலிருந்து வரிசையாகப் பொருளாதார ரீதியிலே உற்பத்தியாற்றலில்லாத ஆனால் அவசியமான

பணிகள் நடத்தப்பட வேண்டும், எனவே அந்தப் பணிகளோடு சம்பந்தப்பட்ட நபர்களும் பராமரிக்கப்பட்டு வர வேண்டும். தற்கால உழைப்புப் பிரிவினை இருந்து வருகிற வரைக்குத்தான் இது சரியாகும். பொதுவான உற்பத்தியாற்றலுள்ள உழைப்பு கடமையாக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயத்திலே—இதுவும்''சிந்தனைக்கெட்டக்கூடிய''விஷயமேயாகும்—இது சரிந்துவிடுகிறது. என்ருலும் சமுதாயச் சேமத்தொகைக்கும் திரட்சிக்கும் வேண்டிய நிதியின் அவசியம் இருந்து வரும், எனவே மொத்தத்தில் தொழிலாளர்கள்—அதாவது எல்லோரும்—தமது மொத்த விளைபொருளுக்குச் சொந்தக்காரர்களாகவும் அனுபோகஸ்தர்களாகவும் இருந்து வந்தாலும் ஒவ்வொரு தனித்தனி தொழிலாளியும்''தனது உழைப்பின் முழு விளைபொருளையும்'' அனுபவிக்க மாட்டான். உழைப்பு விளைபொருளின் செலவிலே பொருளாதார ரீதியிலே உற்பத்தியாற்றலற்ற பணிகளை நடத்தி வருவதை ஏனைய உழைப்புப் பணக் கற்பனையுலகவாதிகள் புறக்கணிக்கவில்லை. எனினும் அவர்கள் இந்த நோக்கத்திற்காக வழக்கமான ஜனநாயக வழியிலே தொழிலாளர்கள் தங்கள்மேல் தாங்களே வரி போட்டுக் கொள்ள விட்டுவிடுகிருர்கள், ஆனல் ரோட்பெர்டஸ்—அவரது 1842ம் வருடத்திய சமுதாயச் சீர்திருத்தம் முழுவதும் அக்காலத்திய பிரஷ்ய அரசுக்கு இசைவாகச் செய்யப்பட்டிருக்கிறது—இந்த விஷயம் முழுவதையும் அதிகாரவர்க்கத்தின் முடிவுக்கு வைக்கிருர், அது மேலிருந்து தொழிலாளியின் சொந்த விளைபொருளில் அவனுக்குரிய பங்கை நிர்ணயித்து அதை அவன் வைத்துக் கொள்ள கருணையுள்ளத்தோடு அனுமதிக்கிறது.

இரண்டாவதாக, நில வாடகையும் இலாபமும் குறைவுபடாமல் நீடித்துவர வேண்டும். ஏனெனில் நிலச்சுவான்தார்களும் தொழில்துறை முதலாளிகளும்கூட சமுதாய ரீதியிலே பயனுள்ள அல்லது அவசியமானதுமான பணிகளை—அவை பொருளாதார ரீதியிலே உற்பத்தியாற்றலில்லாதவையாயினுங்கூட—செய்கிருர்கள், அந்தக் கணக்கில் அவர்கள் நில வாடகை, இலாபம் எனும் வடிவத்தில் ஒரு விதமான ஊதியம் பெறுகிருர்கள்—இந்தக் கருத்தோட்டம் புதுமையானதல்ல என்று 1842லேகூட ஏற்கப்பட்டதாகும். அவர்கள் செய்வது கொஞ்சமாயினும், அதை மோசமாகச் செய்த

போதிலும், அவர்கள் தற்சமயம் எவ்வளவோ அதிகமாகப் பெறுகிருர்கள், ஆனுல் ரோட்பெர்டஸுக்குக் குறைந்த பட்சம் அடுத்த ஐநூருண்டுகளுக்கு ஒரு சிறப்புரிமை பெற்ற வர்க்கம் தேவை, எனவே இன்றைய (நான் சரியாகச் சொல்வ தென்ருல்) மிகுதி மதிப்பு விகிதம் நீடித்து வரவேண்டும், ஆனுல் அதை அதிகரிக்க அனுமதிக்கக் கூடாது. இந்த இன்றைய மிகுதி மதிப்பு விகிதம் இருநூறு சதவிகிதமாக—அதாவது தொழிலாளி தினந்தோறும் கொடுக்கிற பன்னிரண்டு மணிநேர உழைப்புக்கு அவனுக்குக் கிடைக்கிற சான்றிதழ் பன்னிரண்டு மணி நேரத்துக்கு அல்லாமல் நான்கு மணி நேரத் துக்குத்தான்—என்று ரோட்பெர்டஸ் எடுத்துக் கொள்கிருர், மீதமுள்ள எட்டு மணி நேரத்தில் உற்பத்தி செய்த மதிப்பு நிலச்சுவான்தார், முதலாளி ஆகியோரிடையே பிரித்துக் கொடுக்கப்படும். எனவே, ரோட்பெர்டஸின் உழைப்புச் சான்றிதழ்கள் நேரடியாகப் பொய் பேசுகின்றன. மேலும், நான்கு மணி நேர உழைப்புக்கான சான்றிதழ் பெறுவதற்குப் பன்னிரண்டு மணி நேரம் உழைக்க வேண்டியதை ஒரு தொழி லாளி வர்க்கம் சகித்துக் கொள்ளும் என்று கற்பனை செய் வதற்கு ஒருவன் போமரேனிய நாட்டு நிலப்பிரபுவாகத்தான் இருந்துதீர வேண்டும். முதலாளித்துவ உற்பத்திக்குரிய செப்பபடிவித்தையை இந்த வெகுளித்தனமான மொழியில் சொன்னுல்—இம்மொழியில் அது அப்பட்டமான கொள்ளை யென்று தோற்றமளிக்கிறது—அது சாத்தியமற்றதாக்கப்படு கிறது. தொழிலாளிக்குக் கொடுக்கப்படும் ஒவ்வொரு சான் றிதழும் கலகத்துக்கு நேரடியாகத் தூண்டிவிடுவதாயிருக்கும், ஜெர்மன் பேரரசின் குற்றச் சட்டத் தொகையின் 110வது பிரிவின் கீழ் வரும். தடியும் சவுக்கும் மேலாட்சி புரிகிறதா யிருக்கிற, கிராமத்தின் அழகிய பெண்கள் அனைவரும் நிலப் பிரபுவின் அந்தப்புரத்துக்குச் சொந்தமானவர்களாயிருக்கிற ஒரு போமரேனிய நாட்டு நிலப்பிரபுவின் பண்ணையிலே இன்னமும் யதார்த்தத்தில் அரைப் பண்ணையடிமைகளாகவே இருந்து வருகிற, அன்ருடக் கூலிக்கு உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தைத் தவிர வேறெந்தப் பாட்டாளி வர்க்கத்தையும் என்றுமே பார்த்திராதிருந்தால்தான் ஒருவன் தொழிலாளி களை இப்படி அவதூறு செய்யக் கற்பனை செய்ய முடியும். ஆனுல் நமது நடப்புக்காப்புவாதிகள்தாம் நமது மாபெரும் புரட்சிக்காரர்களாயுமுள்ளனர்.

எனினும், முழுமையாகப் பன்னிரண்டு மணிநேரக் கடின உழைப்புக்குப்பின் தாங்கள் யதார்த்தத்தில் நான்கு மணி நேரம்தான் உழைத்ததாக ஏமாற்றப்படுவதைச் சகித்துக் கொள்ளப் போதிய அடக்கவொடுக்கமுள்ளவர்களாக நமது தொழிலாளிகள் இருந்தால் அவர்களுக்கு, ஒரு பரிசாக, தத்தம் சொந்த விளைபொருளில் தமக்குரிய பங்கு நிரந்தரமாக மூன்றில் ஒன்றுக்குக் குறையாதபடி உத்தரவாதமளிக்கப் படுவார்கள். இது எதிர்காலத்து இசையைக் குழந்தையின் ஊதுகுழலிலே வாசிப்பதாகும், இதைப் பற்றி ஒரு வார்த்தை பேசுவதற்கும் தகுதியற்றது. ஆகவே, ரோட்பெர்டஸின் உழைப்புப் பணப் பரிமாற்றக் கற்பனையுலகத் திட்டத்தில் புதுமையாக ஏதாவதொன்று இருக்குமேயானல் அந்தப் புதுமை வெறுமே சிறுபிள்ளைத்தனமானதாகும், அவருக்கு முன்னும் பின்னும் வந்த அவருடைய எண்ணிறைந்த தோழர்களின் சாதனைகளைவிட எவ்வளவோ தாழ்ந்ததாகும்.

ரோட்பெர்டஸின் அறிவுக்குச் செலுத்தும் பங்கு எனும் நூல் வெளிவந்த அக்காலத்துக்கு அது நிச்சயமாக ஒரு முக்கியமான நூலேயாகும். அவர் ரிக்கார்டோவின் மதிப்பு பற்றிய தத்துவத்தை ஒரு திசையில் வளர்த்தது எதிர்காலச் சாதனைக்கு மிக நல்ல தொடக்கமாயிருந்தது. அவருக்கும் ஜெர்மனிக்கும் மட்டுமே அது புதியதாக இருந்தபோதிலுங் கூட மொத்தத்தில் அது அவருடைய ஆங்கிலேய முன்னோர்களில் மேலானவர்களின் சாதனைகளோடு சரிநிகராக நிற்கிறது. ஆனல் அது ஒரு தொடக்கம் மட்டுமே, மேலும் சென்று முழுவளவான விமர்சனப் பணி மூலமாக மட்டுமே அதிலிருந்து தத்துவத்துக்கு ஒரு உண்மையான ஆதாயத்தைச் சாதிக்க முடிந்திருக்கும். ஆனல் அவர் முதலிலிருந்தே ரிக்கார்டோவின் தத்துவத்தை இரண்டாவது திசையான கற்பனைத் திட்டத்தின் திசையிலும் வளர்த்ததின் மூலமாக இந்தத் திசையில் மேலும் வளர்ச்சி பெறுவதனின்று தம்மைக் கத்தரித்துக் கொண்டார். அதன் விளைவாக, எல்லா விமர்சனத்துக்கும் முதல் நிபந்தனையான விருப்புவெறுப் பின்மையை இழந்தார். முன்கூட்டி நிர்ணயித்துக் கொண்ட ஒரு குறிக்கோளை நோக்கி அவர் வேலை செய்து கொண்டிருந்தார், அவர் ஒரு திட்டவட்டமான போக்கைப் பின்பற்றும் பொருளாதாரவாதியாக ஆகிவிட்டார்.

தமது கற்பனைத் திட்டத்தின் வலையிலே சிக்கிக் கொண்டவுடன் அவர் விஞ்ஞான முன்னேற்றத்துக்கான எல்லாச் சாத்தியப்பாட்டிலிருந்தும் கத்தரித்துக் கொண்டார். 1842லிருந்து அவர் இறுதியெய்திய வரை ஒரு வட்டத்திலே சுற்றிச் சுற்றி வந்தார், தமது முதல் நூலில் ஏற்கெனவே வெளியிட்ட அல்லது குறித்துக் காட்டிய அதே கருத்துக்களையே எப்போதும் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார், தம்மைப் பற்றிச் சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை என்று நினைத்தார், அவரிடம் களவாடுவதற்கு ஒன்றுமில்லாதிருந்தும் தாம் களவாடப்படுவதாகக் கண்டார், அடிப்படையிலே பார்க்கிற பொழுது வெகு நாளைக்குமுன் ஏற்கெனவே கண்டுபிடிக்கப் பட்டதைத்தான் தாம் மீண்டும் கண்டுபிடித்ததைக் கடைசியிலே அங்கீகரிக்கவும் மறுத்தார்—அதில் உணர்வு பூர்வமான நோக்கம் இல்லாமலில்லை.

* * *

சில இடங்களில் மொழிபெயர்ப்பானது அச்சிட்ட பிரெஞ்சு மூலத்திலிருந்து பிரிந்து செல்கிறது. இது மார்க்ஸின் சொந்தக் கையெழுத்திலேயே செய்யப்பட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டது, இவை இப்போது தயாரிக்கப் பட்டு வரும் புதிய பிரெஞ்சுப் பதிப்பிலும் செருகப் படும்.[20]

இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் துறைச்சொல் அமைப்பு மூலதனத்தில் இருக்கிறதுடன் முற்றுகப் பொருந்துவதாயில்லை என்பதைச் சுட்டிக் காட்டத் தேவையில்லை. ஆகவேதான் உழைப்புச் சக்தி என்பதற்குப் பதிலாக உழைப்பு ஒரு பண்டமாகவும், உழைப்பு வாங்கி விற்கப்படுவது பற்றியும், இன்னமும் இந்நூல் பேசுகிறது.

இந்தப் பதிப்பில் ஒரு அனுபந்தமாகக் கூடுதலாக இருப்பது:

1) மார்க்ஸின் அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்குச் செலுத்தும் ஒரு பங்கு, பெர்லின் 1859 எனும் நூலிலிருந்து ஜான் கிரேயின் முதன்முதலான உழைப்புப் பணப் பரிமாற்றம் என்கிற கற்பனையுலகத் திட்டத்தை எடுத்துக் கவனிக்கும் ஒரு பகுதி, மற்றும் 2) புருஸெல்ஸில் (1848) சுயேச்சையான வாணிபத்தைப் பற்றி மார்க்ஸ் நிகழ்த்திய சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு—இது மெய்யறிவின் வறுமை போலவே ஆசிரியரின் அதே வளர்ச்சிக் காலகட்டத்தைச் சேர்ந்ததாகும்.

ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ்

லண்டன், அக்டோபர் 23, 1884

இரண்டாவது ஜெர்மன் பதிப்புக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் எழுதிய முன்னுரை

பிரெஞ்சு வாசகத்தில் (பக்கம் 45) ஹாப்கின்ஸ் என்று தவறாக எழுதப்பட்டிருக்கும் பெயருக்குப் பதிலாக ஹாட்ஸ்கின் எனும் சரியான பெயர் போடப்பட்டிருக்கிறது என்றும், அதே இடத்தில் வில்லியம் தாம்ப்ஸனின் நூல் ஆக்கப்பட்ட தேதி 1824 என்று திருத்தப் பெற்றுள்ளது என்றும் மட்டுமே இந்த இரண்டாம் பதிப்புக்கு நான் குறிப்பு அளிக்கிறேன். இது பேராசிரியர் ஆன்டன் மெங்கெர் அவர்களின் நூலடைவு இயல் மனச்சாட்சிக்கு நிம்மதி அளிக்கும் என்று நம்புவோமாக.[21]

ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ்

லண்டன், மார்ச் 29, 1892

மெய்யறிவின் வறுமை

திரு. புருதோன் எழுதிய
வறுமையின் மெய்யறிவு எனும்
நூலுக்குப் பதில்

முகவுரை

திரு. புரூதோன் ஐரோப்பாவில் விநோதமான வகையிலே தப்பாகப் புரிந்து கொள்ளப்படக்கூடிய துரதிர்ஷ்டம் பெற்றிருக்கிறார். பிரான்ஸில், ஒரு நல்ல ஜெர்மன் மெய்யறிஞராக அவர் பெயர் பெற்றிருப்பதால் ஒரு மோசமான பொருளாதாரவாதியாக இருக்க அவருக்கு உரிமை உண்டு. ஜெர்மனியில், பிரெஞ்சுப் பொருளாதாரவாதிகளில் திறமை மிக்கவர்களில் ஒருவராக அவர் பெயர் பெற்றிருப்பதால் ஒரு மோசமான மெய்யறிஞராக இருக்க அவருக்கு உரிமை உண்டு. நான் ஒரே நேரத்தில் ஜெர்மானியனாகவும் பொருளாதாரவாதியாகவும் ஒருங்கே இருப்பதால் இந்த இரட்டைப் பிழையைக் கண்டிக்க விரும்புகிறேன்.

இந்த நன்றியற்ற பணியில், ஜெர்மன் மெய்யறிவை விமர்சிக்கவும் அதே நேரத்தில் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிச் சில ஆய்வுக்கூற்றுகள் அளிக்கவும் வேண்டி திரு. புரூதோன் பற்றிய எனது விமர்சனத்தை அடிக்கடி கைவிட வேண்டி நேரிட்டதை வாசகர் புரிந்து கொள்வார்.

கார்ல் மார்க்ஸ்

புருஸெல்ஸ், ஜூன் 15, 1847

திரு. புரூதோனின் நூல் வெறுமே அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விரிவாய்வுரை அல்ல, சாமானியமான நூல் அல்ல; அது ஒரு விவிலிய வேதம். ''மர்மங்கள்'', ''இறைவனின் நெஞ்சத்திலிருந்து வலிந்தெடுத்த இரகசியங்கள்'', ''தரிசனங்கள்''—அதில் இல்லாததொன்றும் இல்லை. எனினும், சாதாரண எழுத்தாளர்களைவிட தீர்க்கதரிசிகளைப் பற்றியே மேலான கண்டிப்புடன் மதிப்பீடு செய்யப்படுகிற காலம் இது. எனவே, படைப்பின் ''பிறப்பு'' பற்றிய பசையற்ற இருள் படர்ந்த புலமையினூடே என்னோடு வாசகன் புகுந்து செல்வதற்குத் தன்னை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும், அதன்பிறகு திரு. புரூதோனுடன் அதீத-சோஷலிஸம் எனும் புலன்கடந்த செழுமை சூழ்ந்த சாம்ராஜ்ஜியத்துக்குள் ஏறிச்சென்று விடுவோம். (பார்க்க: புரூதோன், **வறுமையின் மெய்யறிவு**, முன்னுரை, பக்கம் III, வரி 20.)

அத்தியாயம் 1

ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு

§1. பயன்பாடு மதிப்புக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் உள்ள எதிர்மறை

''இயற்கையிலானதாயினும் சரி, தொழில்வகைப்பட்ட தாயினும் சரி, எல்லா விளைபொருட்களுக்கும் மனிதனின் பிழைப்புக்குப் பங்காற்றுவதற்குரிய திறம் குறிப்பாகப் **பயன்பாடு மதிப்பு** என்று சொல்லப்படும்; ஒன்றுக்கொன்று மாற்றிக் கொடுத்துக் கொள்வதற்குரிய அவற்றின் திறம் **பரிமாற்ற மதிப்பு** என்று சொல்லப்படும்.... பயன்பாடு மதிப்பு எப்படி பரிமாற்ற மதிப்பு ஆகிறது?... பரிமாற்ற மதிப்பு என்கிற கருத்தின் தோற்றத்தைப் பொருளாதாரவாதிகள் போதிய கவனிப்புடன் குறித்துக் கொள்ளவில்லை. ஆகவே, இதை நாம் எடுத்துப் பார்ப்பது அவசியம். எனக்குத் தேவை யான மிகப்பெரும் தொகையான பொருட்கள் மிதமான அளவிலேதான் இயற்கையிலே உண்டாகின்றது அல்லது உண் டாகாமலே இருந்துவிடுகிறது. அக்காரணத்தால், எனக்குக் கிடைக்காததை உற்பத்தி செய்வதில் நான் உதவ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. மேலும் அத்துணைப் பொருட் களையும் செய்வதில் நான் ஈடுபட முடியாது, ஆகவே பல் வேறு வேலைகளில் எனது கூட்டாளிகளான மற்ற மனிதர் களிடம் தங்களுடைய விளைபொருட்களில் ஒரு பகுதியை எனது விளைபொருளுக்கு பரிமாறிக் கொள்ளுமாறு யோசனை கூறுவேன்.'' (புரூதோன், தொகுதி 1, அத்தியாயம் 2.)

மதிப்பின் இரட்டைத் தன்மையை, ''மதிப்பிலுள்ள வேற்றுநிலையை'', பயன்பாடு மதிப்பு பரிமாற்ற மதிப்பாக உருமாற்றமடைவதின் இயக்கப்போக்கை, முதன்முதலாக நமக்கு விளக்க திரு. புரூதோன் பொறுப்பு ஏற்கிறார். இந்தப் பொருண்மை மாற்றச் செய்கை விஷயத்தில் திரு. புரூதோ னுடன் நாமும் இறங்கிப் பார்ப்பது அவசியம். ஆசிரியரின்

கருத்துப்படி இந்தச் செய்கை பின்வருமாறு செய்து முடிக்கப்படுகிறது.

மிகப்பெரும் தொகையிலான விளைபொருட்கள் இயற்கையில் கிடைப்பதில்லை, அவை தொழில்துறையின் விளைபொருட்களேயாம். மனிதனின் தேவைகள் இயற்கையின் தன்னியல்பான உற்பத்தியை மிஞ்சிப் போகுமேயானால் அவன் தொழில்துறை உற்பத்தியை நாடிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது. திரு. புரூதோன் கருத்தில் இந்தத் தொழில்துறை என்ன? அதன் தோற்றுவாய் எது? எண்ணிறைந்த பொருட்களின் தேவையை உணர்கிற ஒரு தனி மனிதன் ''அத்துணைப் பொருட்களையும் செய்வதில் ஈடுபட முடியாது.'' நிறைவுபடுத்துவதற்கு இத்துணைத் தேவைகள் என்றால் அதற்கு முன்னனுமானம் அத்துணைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதாகும்—உற்பத்தியின்றி விளைபொருட்கள் கிடையாது. இத்துணைப் பொருட்களை உற்பத்தி செய்வதென்றால் அதற்கு உடனடி முன்னனுமானம் ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் அவற்றை உற்பத்தி செய்வதில் உதவுகிறார்கள் என்பதாகும். இப்போது, ஒரு ஆளுக்கு மேல் உற்பத்தியில் உதவுவதாக நீங்கள் அடிக்கோள் வைத்தவுடனே அதே வினாடியில் உழைப்புப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட ஒரு முழுமையான உற்பத்தியை முன்னனுமானித்துக் கொள்கிறீர்கள். ஆகவே தேவை எனப்பட்டது —அதை திரு. புரூதோன் முன்னனுமானித்துக் கொள்கிறார் —தானாகவே உழைப்புப் பிரிவினை முழுவதையும் முன்னனுமானித்துவிடுகிறது. உழைப்புப் பிரிவினையை முன்னனுமானித்துக் கொள்கிறதிலே பரிமாற்றமும் அதன் விளைவாக பரிமாற்ற மதிப்பும் வந்தடைகின்றன. இதற்கு ஒருவன் ஆதியிலிருந்தே பரிமாற்ற மதிப்பை முன்னனுமானித்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால் திரு. புரூதோன் சுற்றிவளைத்துப் போகவே விரும்புகிறார். புறப்பட்ட இடத்துக்கே எப்போதும் அவரைத் திருப்பிக் கொணர்கிற அவரது சுற்றுவழிகளிலே நாமும் அவரைப் பின்தொடர்வோம்.

ஒவ்வொருவரும் தனிமையிலே உற்பத்தி செய்கிற நிலைமையிலிருந்து வெளிப்பட்டு பரிமாற்றத்துக்கு வந்து சேரும் பொருட்டு, ''பல்வேறு பணிகளிலுள்ள எனது கூட்டாளிகள்

பக்கம் திரும்புகிறேன்'' என்கிறார் திரு. புரூதோன். ஆக, எல்லோருக்கும் வெவ்வேறான பணிகள் உள்ள கூட்டாளிகள் எனக்கு இருக்கிறார்கள். அவ்வாறெல்லாம் இருந்தும், எப் போதும் திரு. புரூதோனின் அனுமானத்தின் பிரகாரம் நானும் அவர்களும் ராபின்ஸன்களின் சமுதாயத் தொடர் பில்லாத் தனிமையான நிலைக்கு அப்பால் போகவில்லை. கூட்டாளிகளும் பல்வேறு பணிகளும், உழைப்புப் பிரிவினை யும் அதற்கு உட்கிடையாயுள்ள பரிமாற்றமும் ஏற்கெனவே உள்ளவைதான்.

சுருக்குவோம்: எனக்குச் சில தேவைகள் உண்டு, அவை உழைப்புப் பிரிவினையையும் பரிமாற்றத்தையும் அடிப்படை யாகக் கொண்டுள்ளன. ஆக இந்தத் தேவைகளை முன்னனு மானித்துக் கொள்வதில் திரு. புரூதோன் பரிமாற்றத்தை யும் பரிமாற்ற மதிப்பையும்—எவற்றின் ''தோற்றத்தை ஏனைய பொருளாதாரவாதிகளைவிட மேலான கவனிப்புடன் பார்க்கப் போவதாகச்'' சங்கற்பித்துக் கொள்கிறாரோ அவற்றை—முன்னனுமானித்துக் கொள்கிறார்.

விஷய வரிசையொழுங்கை திரு. புரூதோன் தலைகீழாகப் போட்டிருக்கலாம், அது அவருடைய முடிவுகளின் திட்பநுட் பத்தை எவ்விதத்திலும் பாதிக்காது. பரிமாற்ற மதிப்பை விளக்குவதற்கு பரிமாற்றம் இருந்து தீரவேண்டும். பரிமாற் றத்தை விளக்க உழைப்புப்பிரிவினை இருந்து தீரவேண்டும். உழைப்புப் பிரிவினையை விளக்குவதற்கு உழைப்புப் பிரிவினையை அவசியமாக்குகிற தேவைகள் இருந்துதீர வேண் டும். இந்தத் தேவைகளை விளக்குவதற்கு அவற்றை நாம் ''முன்னனுமானித்துக் கொள்ள வேண்டும்'', அதற்குப் பொருள் அவற்றை மறுப்பதாகாது—''கடவுளை முன்னனுமானித்துக் கொள்வதின் பொருள் கடவுளை மறுப்பதாகும்'' என்று திரு. புரூதோன் அவர்களின் முன்னுரையில் உள்ள முதலாவது மூதுண்மைக்கு மாறாக (முன்னுரை, பக்கம் I).

உழைப்புப் பிரிவினையை அறிந்த பொருளாக அனு மானித்துக் கொள்கிற திரு. புரூதோன், அவருக்கு என்றைக் கும் அறியாததாயிருக்கிற பரிமாற்ற மதிப்பை எப்படி விளக்க முடிகிறது?

''ஒரு மனிதன் பல்வேறு வேலைகளிலே தனது கூட்டாளி களான மற்ற மனிதர்களிடம்'' பரிமாற்றம் செய்து கொள்

ளலாம் என்றும் சாதாரண மதிப்புக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் இடையே வேற்று நிலை கற்பித்துக் கொள்ளலாம் என்றும் ''யோசனை கூறப்'' புறப்படுகிருன். இப்படி முன்மொழிந்த வேற்றுநிலையை இந்தக் கூட்டாளிகள் ஏற்றுக் கொள்ளப் போய், திரு. புரூதோன் அந்த விபரத்தைப் பதிவு செய்வதும் ''மதிப்பு எனும் கருத்தின் தோற்றத்தை'' சுட்டிக்காட்டித் தமது அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விரிவாய் வுரையில் அதைச் ''செருகிவைப்பதும்'' தவிர வேறெந்தக் ''கவலையையும்'' அவர்கள் அவருக்கு விட்டுவைக்க வில்லை. ஆனல், அவர் இந்த யோசனையின் ''தோற்றத்தை'' இன்னும் நமக்கு விளக்கியாகவில்லை, எப்படி இந்த ராபின் ஸன் எனும் தனி நபர் தெரிந்திருக்கிற வகையைச் சேர்ந்த ஒரு யோசனையைத் ''தனது கூட்டாளிகளிடம்'' முன்வைக்கத் திடீரென்று எண்ணங்கொண்டார், மேலும் எப்படி இந்தக் கூட்டாளிகள் அதைக் கொஞ்சமேனும் ஆட்சேபிக்காமல் ஒப்புக் கொண்டார்கள் என்பதையும் இறுதியாக நமக்குச் சொல்லியாகவில்லை.

திரு. புரூதோன் இந்தத் தோற்றவியல் விபரங்களில் இறங்கவில்லை. பரிமாற்றத்தை நிறுவிக் கொள்ளலாம் என்று மூன்ரும் ஆசாமி ஒருவர் கொடுத்த யோசனை வடிவத்தில் அதை முன்வைத்து அந்தப் பரிமாற்றம் எனும் உண்மை மீது ஒரு தினுசான வரலாற்று முத்திரை குத்துவதோடு நின்று விடுகிருர்.

ஆதாம் ஸ்மித், ரிக்கார்டோ போன்றவர்களின் ''வரலாற்று வகைப்பட்ட, வர்ணனைரீதியிலான ஆய்வுமுறை'' பற்றி உச்சநிலையிலே ஏளனமனேபாவம் தெரிவிக்கும் திரு. புரூதோனின் ''வரலாற்று வகைப்பட்ட, வர்ணனைரீதியிலான ஆய்வுமுறைக்கு'' இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

பரிமாற்றத்துக்குச் சொந்த வரலாறு ஒன்று உண்டு. அது வெவ்வேருன கட்டங்களைத் தாண்டி வந்திருக்கிறது.

எடுத்துக்காட்டாக, மத்திய காலத்தில், தேவைக்கு அவசியமற்றுப் போனது மட்டுமே, உற்பத்தியில் நுகர்வுக்குப் பின் மிஞ்சிய மீதம்தான், பரிமாறிக் கொள்ளப்பட்டது.

பிறகு மற்ருெரு காலம் வந்தது, அப்போது அவசியப் படாத மீதம் மட்டுமின்றி எல்லா விளைபொருட்களும் எல்லாத் தொழில் வாழ்வும் வாணிபத்திற்கு வந்துவிட்டன, அப்போது

உற்பத்தி முழுவதும் பரிமாற்றத்தின் மீது ஆதாரப்பட்டிருந்தது. பரிமாற்றத்தின் இந்த இரண்டாவது கட்டத்தை —இரண்டாவது விசைப் பெருக்கத்துக்கு வந்துவிட்ட பரிமாற்ற மதிப்பை—எப்படி விளக்குவது?

திரு. புரூதோன் பதில் தயாராக வைத்திருக்கிறார்: பரிமாற்ற மதிப்பை அதன் இரண்டாம் விசைப்பெருக்கத்துக்கு உயர்த்துவதென்று ஒரு மனிதன் ''பல்வேறு வேலைகளில் தனது கூட்டாளிகளான மற்ற மனிதர்களிடம்... யோசனை வைத்துள்ளதாக'' அனுமானித்துக் கொள்ளுங்கள், என்று.

இறுதியாக, பராதீனப்படுத்த முடியாதவை என்று மனிதர்கள் கருதி வந்ததனைத்தும் பரிமாற்றத்துக்குரிய பொருளாக, வாங்கி விற்பதற்குரிய பொருளாக ஆகி பராதீனப்படுத்த முடிகிற காலம் ஒன்று வந்தது. அதுவரை எவையெவையெல்லாம் மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தும் என்றைக்கும் பரிமாற்றம் செய்யாத, கொடுக்கப்பட்டு வந்தும் என்றைக்கும் விற்காத, பெறப்பட்டு வந்தும் விலைக்கு வாங்காத பொருட்களாக இருந்தனவோ அந்த நற்பண்பு, அன்பு, துணிபு, அறிவு, மனச்சாட்சி முதலியவை—சுருக்கமாகச் சொன்னால், எல்லாமே—வியாபாரத்துக்கு வந்துவிட்ட காலம் அது. பொதுவான ஊழலும் எங்கும் நிறைந்த விலைபேசும் பண்பும் நிலவிய காலம் அது, அல்லது அரசியல் பொருளாதார மொழியிலே சொல்வதென்றால் எல்லாமே—தார்மிகமானது அல்லது இலௌகிகமானது எதுவாயினும்—பரிமாற்றத்துக்குரிய மதிப்பாக ஆகிவிட்டதால் அதனதன் உண்மையான மதிப்பை மதிப்பீடு செய்வதற்குச் சந்தைக்குக் கொண்டுவரப்படும் காலம் அது.

பரிமாற்றத்தின் இந்தப் புதிய, இறுதியான கட்டத்தை —மூன்றாவது விசைப்பெருக்கம் எய்திய பரிமாற்றத்துக்குரிய மதிப்பை—எப்படி விளக்க முடியும்?

திரு. புரூதோன் இதற்கும் ஒரு பதில் தயாராக வைத்திருக்கிறார்: நற்பண்பு, அன்பு முதலியவற்றை பரிமாற்றத்துக்குரிய மதிப்பாக ஆக்கிவிடலாம், பரிமாற்ற மதிப்பை அதன் மூன்றாவது கடைசி விசைப்பெருக்கத்துக்கு உயர்த்தலாம் என்று ஒரு மனிதன் ''பல்வேறு வேலைகளில் தனது கூட்டாளிகளான மற்ற மனிதர்களிடம் யோசனை வைத்ததாக'' அனுமானித்துக் கொள்ளுங்கள், என்று.

திரு. புரூதோனின் ''வரலாற்றுவகைப்பட்ட, வர்ணனை ரீதியான ஆய்வுமுறை'' எல்லாவற்றிற்கும் பொருந்துவதாக, எல்லாவற்றிற்கும் விடையளிப்பதாக, எல்லாவற்றையும் விளக்குவதாக இருப்பதைப் பார்க்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக ''ஒரு பொருளாதாரக் கருத்தின் தோற்றத்தை'' வரலாற்று ரீதியிலே விளக்குவது பிரச்சினையானால் அது ஒரு மனிதனை அடிக்கோளாகக் கொள்கிறது, அவன் ''பல்வேறு வேலைகளிலே தனது கூட்டாளிகளான மற்ற மனிதர்களிடம்'' இந்தப் பிறப்புச் செய்கையைச் செய்யலாம் என்று யோசனை வைக்கிறான், அத்துடன் விஷயம் முடிந்துவிடுகிறது.

இனிமுதல் பரிமாற்ற மதிப்பின் ''தோற்றம்'' நடந்து முடிந்து போன செய்கையாக ஏற்றுக் கொள்வோம்; இனி பாக்கி இருப்பது பரிமாற்ற மதிப்புக்கும் பயன்பாடு மதிப்புக்கும் இடையேயுள்ள உறவை விரித்து விளக்குவதுதான். திரு. புரூதோன் சொல்லக் கூடியதைக் கேட்போம்:

''பொருளாதாரவாதிகள் மதிப்பின் இரட்டைத் தன்மையை மிக நன்றாக வெளிப்படுத்தியுள்ளனர், ஆனால் அதே சரிநுட்பத்துடன் அதன் முரண்பட்ட இயல்பைச் சுட்டிக் காட்டவில்லை; இங்கேதான் எனது விமர்சனம் தொடங்குகிறது.... பயன்பாடு மதிப்புக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் இடையேயுள்ள இந்த வியப்பான மாறுபாட்டைச் சுட்டிக் காட்டியது ஒரு சிறிய விஷயம், அதில் பொருளாதாரவாதிகள் மிக எளிதான ஒன்றைக் காண்பது மட்டுமே வழக்கம்: இந்த எளிமை எனப்பட்டது ஒரு ஆழ்ந்த மர்மத்தை மறைத்து வைத்திருக்கிறது, அதை ஊடுருவுவது நமது கடமை.... துறைச்சொல் முறையிலே சொல்வதென்றால், பயன்பாடு மதிப்பும் பரிமாற்ற மதிப்பும் ஒன்றுக்கொன்று தலைகீழான வீதாச்சாரத்தில் நிற்கின்றன.''

திரு. புரூதோனின் கருத்தை நாம் சரிமுழுமையுடன் புரிந்து கொண்டிருக்கிறோம் என்றால் அவர் நிலைநாட்டப் புறப்பட்டிருக்கும் நான்கு அம்சங்கள் பின்வருமாறு:

1. பயன்பாடு மதிப்பும் பரிமாற்ற மதிப்பும் ஒரு ''வியப்பான மாறுபாடாக'' அமைந்துள்ளன, ஒன்றுக்கொன்று எதிராக உள்ளன.

2. பயன்பாடு மதிப்பும் பரிமாற்ற மதிப்பும் தலைகீழான

வீதாச்சாரத்தில் உள்ளன, ஒன்றோடொன்று முரண்பட்ட நிலையில் உள்ளன.

3. இந்த எதிர்நிலையையோ முரண்பாட்டையோ பொருளாதாரவாதிகள் காணவுமில்லை, அங்கீகரிக்கவுமில்லை.

4. திரு. புரூதோனின் விமர்சனம் முடிவிலிருந்து தொடங்குகிறது.

நாமும் முடிவிலிருந்து தொடங்குவோம், மற்றும் திரு. புரூதோனின் குற்றச்சாட்டுகளிலிருந்து பொருளாதாரவாதிகளை விடுவிக்கும் நோக்குடன் போதிய அளவில் பெயர் பெற்றுள்ள இரண்டு பொருளாதாரவாதிகளைப் பேச விடுவோம்:

ஸிஸ்மொந்தி: ''பயன்பாடு மதிப்புக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் இடையேயுள்ள எதிர்நிலைக்கு எல்லாவற்றையும் வர்த்தகம் இறக்கிவிட்டிருக்கிறது'', முதலியவாறு. (**கட்டுரைகள்**, தொகுதி 2, பக்கம் 162, புருஸெல்ஸ் பதிப்பு.[22])

லௌடர்டெல்: ''எந்தவொரு பண்டத்தின் மதிப்பு உயர்வதின் வழியாகத் தனிநபர்களின் செல்வங்கள் அதிகரிக்கப்படுகிறதோ அதற்குத் தகவுப்பொருத்தமாகச் சமுதாயத்தின் செல்வம் பொதுவாகக் குறைக்கப்படுகிறது; மற்றும், எந்தவொரு பண்டத்தின் மதிப்பு குறைவதின் வழியாகத் தனிநபர்களின் செல்வத் திரள் குறைக்கப்படுகிறதோ அதற்குத் தகவுப்பொருத்தமாக அதன் செல்வச் செழுமையும் பொதுவாக அதிகரிக்கப்படுகிறது.'' (**தேசச் செல்வத்தின் தன்மை, தோற்றம் பற்றிய ஆய்வுகள்**, லழன்தீ தெ லவயீஸ் மொழிபெயர்த்தது. பாரிஸ், 1808.[23])

பயன்பாடு மதிப்புக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் இடையே யுள்ள **எதிர்** நிலையை அடிப்படையாக வைத்து ஸிஸ்மொந்தி தமது முதன்மையான தத்துவத்தை நிறுவினார், அதன் படி வருவாயின் குறைவு உற்பத்தியின் உயர்வுக்குத் தகவுப் பொருத்தமாயுள்ளது.

மதிப்பின் இவ்விரு வகைகளின் எதிர்மாறான வீதாச்சாரத்தின்மீது லௌடர்டெல் தமது தத்துவ அமைப்பை நிறுவினார், அவரது தத்துவம் ரிக்கார்டோவின் காலத்தில் மிகவும் விரும்பப்பட்டு வந்ததால் அதைப் பொதுவாகத் தெரிந்த ஒரு விஷயமாக ரிக்கார்டோ பேச முடிந்தது. ''மதிப்பு, செல்வம் அல்லது வளங்கள் பற்றிய கருத்துக்களைக் குளறுபடியாக்கியதின் வழியாகத்தான், பண்டங்களின்—அதாவது,

மனித வாழ்க்கையின் தேவைகள், வசதிகள், அனுபோகங்கள் ஆகியவற்றின்—அளவைக் குறைப்பதின் மூலமாக வளங்களை அதிகப்படுத்தக் கூடும் என்று இடித்துரைக்கப்பட்டுள்ளது.'' (ரிக்கார்டோ, அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடுகள், கான்ஸ்டான்ஸியோ மொழிபெயர்த்தது, மூா. ப. ஸேய் குறிப்புரைகள் கொண்டது. பாரிஸ் 1835; தொகுதி 2, அத்தியாயம்: ''மதிப்பு மற்றும் செல்வ வளங்கள் பற்றி''.[24])

திரு. புரூதோனுக்கு முந்தையப் பொருளாதாரவாதிகள் எதிர்நிலை மற்றும் முரண்பாடு ஆகியவற்றின் ஆழ்ந்த மர்மத்தைச் ''சுட்டிக் காட்டியிருப்பதை'' இப்பொழுது பார்த்தோம். இனி, இந்தப் பொருளாதாரவாதிகளுக்குப் பிறகு தமது முறைக்கு திரு. புரூதோன் எப்படி இந்த மர்மத்தை விளக்குகிறார் என்று பார்ப்போம்.

கிராக்கி ஒரே மாதிரி இருக்க, ஒரு பண்டத்தின் வரத்து அதிகரிக்க அதிகரிக்க அதன் பரிமாற்ற மதிப்பு விழுந்து கொண்டே வருகிறது; அதாவது, கிராக்கியுடன் சார்புபடுத்திப் பார்க்கிற போது ஒரு பண்டம் எவ்வளவுக்கு நிறைய இருக்கிறதோ அவ்வளவுக்கு அதன் பரிமாற்ற மதிப்பு அல்லது விலை குறைவாக இருக்கிறது. இதையே முன்பின் மாற்றிச்சொல்கிற தென்றால்: கிராக்கியுடன் சார்புபடுத்திப் பார்க்கிற பொழுது வரத்து எவ்வளவுக்குப் பலவீனமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு வரத்தான விளைபொருளின் பரிமாற்ற மதிப்பு அல்லது விலை உயர்வாக ஏறுகிறது; அதாவது, கிராக்கியுடன் சார்புபடுத்திப் பார்க்கையில் வரத்தான விளைபொருளின் பற்றாக்குறை அதிகரிக்க அதிகரிக்க விலைகள் உயர்ந்து கொண்டே போகின்றன. ஒரு விளைபொருளின் பரிமாற்ற மதிப்பு அது நிறைய இருக்கிறதா பற்றாக்குறையாக இருக்கிறதா என்பதைப் பொருத்திருக்கிறது—ஆனால் எப்போதும் கிராக்கியுடன் சார்புபடுத்திப் பார்க்கிற பொழுதுதான். பற்றாக்குறை என்பதைவிட அலாதியானது என்று சொல்லத்தக்க ஒரு விளைபொருளை எடுத்துக் கொள்ளுங்கள்: அதற்குக் கிராக்கி இல்லாவிடில் அது நிறைந்து வழிகிற நிலைக்கு, வேண்டாத நிலைக்கு வந்துவிடும். மறு பக்கத்தில், கோடி கோடியாகப் பெருக்கியுள்ள ஒரு விளைபொருளை எடுத்துக் கொள்ளுங்கள்; அது கிராக்கியை நிறைவு செய்யாவிட்டால்—அதாவது,

அதற்கு மிகப் பெரிய கிருக்கி இருக்குமேயானுல்—அது எப்பொழுதும் பற்ருக்குறையாகவே இருக்கும்.

இவை எல்லோரும் அறிந்த உண்மை மொழிகள் என்றே அநேகமாகக் கூறிவிடலாம், இருந்தபோதிலும் இங்கே அவற்றைத் திருப்பிச் சொல்ல வேண்டியிருந்தது—திரு. புருதோனின் மர்மங்களைப் புரியக் கூடியதாகச் செய்வதற்காக.

''ஆக, இந்தக் கோட்பாட்டை அதன் இறுதி விளைவுகள் வரை பின்பற்றிச் சென்ருல், எந்தப் பொருட்களின் பயன்பாடு இன்றியமையாததாயும் அளவு வரம்பற்றதாயும் இருக்கிறதோ அவை இலவசமாயிருக்க வேண்டும், எவற்றின் பயன்பாடு பூஜ்யமாயும் பற்ருக்குறை மிகத் தீவிரமாயும் இருக்கிறதோ அவை விலை மதிக்கொணுதவையாக இருக்க வேண்டும் என்கிற முடிவுக்கு—உலகிலேயே மிகத் தர்க்க ரீதியான முடிவுக்கு—ஒருவன் வருவான். இந்தக் கஷ்டத்துக்கு மகுடமிட்டதுபோல, இந்தக் கோடிநிலைகள் நடைமுறையிலே சாத்தியமானவையல்ல; ஒரு புறத்தில், மனிதனின் எந்த விளைபொருளும் பரிமாணத்தில் என்றைக்கும் வரம்பற்றதாக இருக்க முடியாது; மற்ருெரு புறத்தில், மிகமிகப் பற்ருக்குறையான பொருட்களுங்கூட ஓரளவுக்காயினும் பயன்பாடுடையவையாக இருந்தாக வேண்டும், இல்லையேல் அவை முற்ருக மதிப்பற்றவையாயிருக்கும். ஆக, பயன்பாடு மதிப்பும் பரிமாற்ற மதிப்பும் தவிர்க்க முடியாதபடி ஒன்ருேடொன்று பிணைக்கப்பட்டுள்ளன—அவற்றின் இயல்பு காரணமாக எப்போதும் அவை ஒன்றையொன்று விலக்கிக் கொள்கிற போக்கு உள்ளவையாக இருந்த போதிலுங்கூட.'' (தொகுதி 1, பக்கம் 39.)

திரு. புருதோன் கஷ்டத்துக்கு மகுடமிடுவது எது? அவர் கிருக்கியை அடியோடு மறந்துவிட்டார், மற்றும் ஒரு பொருளுக்குக் கிருக்கி இருக்கிற அளவுக்குத்தான் அது பற்ருக்குறையாகவோ நிறையவோ இருக்க முடியும் என்பதே. அவர் கிருக்கியை விலக்கிவிடுகிற அதே விணுடியிலே பரிமாற்ற மதிப்பைப் பற்ருக்குறையுடனும் பயன்பாடு மதிப்பை நிறைவுடனும் ஒன்றுபடுத்திக் காட்டுகிருர். உண்மையிலே பார்த்தால், எந்தப் பொருட்களின் ''பயன்பாடு பூஜ்யமாயும் பற்ருக்குறை மிகத் தீவிரமாயும் இருக்கிறதோ அவை விலை மதிக்கொணுதவையாகும்'' என்று சொல்கிற பொழுது பரி

மாற்ற மதிப்பு என்பது வெறுமே பற்ருக்குறைதான் என்று தான் பறைசாற்றுகிருர். ''பற்ருக்குறை தீவிரம், பயன்பாடு பூஜ்யம்'' என்பதற்குச் சுத்தமாகப் பற்ருக்குறை என்றே பொருள். ''விலை மதிக்கொணுதது'' என்பது அதிகப்பட்ச மான பரிமாற்ற மதிப்பு, அது சுத்தமான பரிமாற்ற மதிப்பு. அவர் இவ்விரண்டு பதங்களையும் சமமாக்குகிருர். ஆகவே, பரிமாற்ற மதிப்பும் பற்ருக்குறையும் ஒரே பொருளுள்ள பதங்கள். இந்த ''தீவிரமான விளைவுகள்'' எனப்பட்ட வைக்கு வருவதில் திரு. புரூதோன் உண்மையிலே தீவிரமான நிலைக்குக் கொண்டு சென்றது விஷயங்களையல்ல அவ்விஷயங் களைக் குறிக்கும் சொற்களைத்தான். அப்படிச் செய்ததிலே அவர் தர்க்கத்திறமையைவிட சொல்லாட்சித்திறத்தையே காட்டுகிருர். புதிய விளைவுகளைக் கண்டுபிடித்திருப்பதாக அவர் நினைக்கிற போது அவர் உண்மையிலே தமது முதல் ஊகப்பிரமாணங்களையே அப்பட்டமான வகையில் திரும்ப வும் கண்டுபிடிக்கிருர். இதே செயல்முறையின் காரணமாகப் பயன்பாடு மதிப்பும் சுத்தமான நிறைவும் ஒன்றே எனக் காட்டுவதில் வெற்றிபெறுகிருர்.

பரிமாற்ற மதிப்பையும் பற்ருக்குறையையும், பயன்பாடு மதிப்பையும் நிறைவையும் சமமாக்கி வைத்தபின் திரு. புரூ தோன் பற்ருக்குறையிலும் பரிமாற்ற மதிப்பிலும் பயன்பாடு மதிப்பைக் காணுததிலே, நிறைவிலும் பயன்பாடு மதிப்பிலும் பரிமாற்ற மதிப்பைக் காணுததிலே அப்படியே திகைத்து நிற்கிருர்; மேலும், இந்தக் கோடிநிலைகள் நடைமுறையிலே சாத்தியமல்ல என்று காண்கிறதினுல் அவர் மர்மத்தை நம்புவதைத் தவிர வேருென்றும் செய்ய முடியாது. விலை மதிக்கொணுதவை அவருக்கு இருக்கக் காரணம் வாங்கு வோர் இல்லாததுதான்; மற்றும், கிருக்கியை விலக்கிவிடுகிற வரை அவர் வாங்குவோர் யாரையும் என்றைக்கும் காணப் போவதில்லை.

மற்ருெரு புறத்தில், திரு. புரூதோனின் நிறைவு தன் னியல்பாக உள்ள ஒன்ருகத் தோன்றுகிறது. அதை உற்பத்தி செய்கிற மக்கள் இருக்கிருர்கள், கிருக்கிமேல் என்றென்றும் கண் வைத்திருப்பது அவர்களின் நன்மைக்கே என்பதை அவர் முற்ருக மறந்துவிடுகிருர். இல்லாமற் போனுல், மிகப் பய னுள்ள பொருட்களுக்கு மிகக் குறைவான விலை இருந்து தீர

வேண்டும் அல்லது ஒரு விலையும் இல்லாது இருந்து தீரவேண்டும் என்று எப்படி திரு. புரூதோன் சொல்ல முடிந்திருக்கும்? மாருக, மிகப் பயனுள்ள பொருட்களின் விலையும் அவற்றின் பரிமாற்ற மதிப்பும் உயர்த்தப்பட வேண்டுமானல் அவற்றின் நிறைவும் உற்பத்தியும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றே அவர் முடிவு செய்திருக்க வேண்டும்.

பிரான்ஸில் பழைய திராட்சைக் கொடி பயிர் செய்கிறவர்கள் புதிதாகத் திராட்சைக் கொடிக்கால் நடுவதைத் தடை செய்யக் கோரி மனுச் செய்து கொண்டதிலே, டச்சுக்காரர்கள் ஆசிய நறுமணப் பொருட்களை எரித்து மொலுக்கஸ் தீவுகளில் கிராம்புச் செடிகளைப் பிடுங்கியெறிந்ததிலே சும்மா பரிமாற்ற மதிப்பை உயர்த்துவதற்காக நிறைவைக் குறைத்திட முயன்று வந்தார்கள். மத்திய காலமுழுவதிலும் இதே கோட்பாடு செயல்படுத்தப்பட்டது — ஒரு மாஸ்டர் (கில்ட் தலைவன்) இத்தனை ஜர்னிமேன்களைத்தான் வேலைக்கு வைத்துக் கொள்ள முடியும் என்றும் இத்தனைக் கருவிகளைத் தான் உபயோகப்படுத்த முடியும் என்றும் சட்டங்கள் மூலமாக வரம்பு போடப்பட்டிருந்தது. (பார்க்க: ஆண்டர்ஸன், வர்த்தகத்தின் வரலாறு[25].)

நிறைவைப் பயன்பாடு மதிப்பாகவும் பற்ருக்குறையை பரிமாற்ற மதிப்பாகவும் சித்திரித்துக் காட்டியபின்—நிறைவும் பற்ருக்குறையும் தலைகீழான வீதாச்சாரத்தில் இருப்பதாக நிரூபிக்கிறதைவிட சுலபமானது வேறென்றுமில்லை—திரு. புரூதோன் பயன்பாடு மதிப்பை வரத்துடனும் பரிமாற்ற மதிப்பை கிருக்கியுடனும் ஒன்றுபடுத்திக் காட்டுகிருர். முரணுரையை மேலும் தெளிவாக்கும் பொருட்டு அவர் ஒரு புதிய பதத்தைச் செருகுகிருர், பரிமாற்ற மதிப்புக்குப் பதிலாக "மதிப்பீடு மதிப்பு" என்கிற பதத்தை வைக்கிருர். இப்போது போர் வேறு களத்துக்கு மாறிவிட்டிருக்கிறது, ஒரு பக்கத்தில் பயன்பாடும் (பயன்பாடு மதிப்பு, வரத்து), மறு பக்கத்தில் மதிப்பீடும் (பரிமாற்ற மதிப்பு, கிருக்கி) நிற்கின்றன.

இவ்விரண்டு முரண்பட்ட சக்திகளையும் யார் சமரசப் படுத்துவது? அவை ஒன்றோடொன்று இசைவாக நிற்க என்ன செய்ய வேண்டும்? அவற்றில் ஒப்புநோக்கு அம்சம் ஒன்ருவது காண்பது சாத்தியமா?

''நிச்சயமாக ஒன்று உண்டு—சுயேச்சையான சித்தம் என்பது. வரத்துக்கும் கிருக்கிக்கும் இடையே, பயன்பாட்டுக்கும் மதிப்பீட்டுக்கும் இடையே நடக்கிற இந்தப் போராட்டத்திலிருந்து விளைகிற விலை என்பது நிரந்தரமான நீதியின் வெளியீடாக இராது'' என்று கூவுகிருர் திரு. புரூதோன்.

திரு. புரூதோன் இந்த முரணுரையை மேலும் வளர்த்துச் செல்கிருர்.

''ஒரு சுயேச்சையான வாடிக்கைக்காரன் என்கிற முறையில், எனது தேவைகளை நிர்ணயிக்கிற நீதிபதி நானே, ஒரு பொருள் விரும்பத்தக்கதுதானு என்று நிர்ணயிக்கிற நீதிபதியும் நானே, அதற்கு நான் கொடுக்க விரும்பக்கூடிய விலையை நிர்ணயிக்கிற நீதிபதியும் நானேதான். மறு பக்கத்தில், நீ ஒரு சுயேச்சையான உற்பத்தியாளன் என்கிற முறையில் செய்து முடிக்கும் சாதனங்களுக்கு நீ எஜமானன், எனவே உன்னுடைய செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்கு உனக்கு அதிகாரம் உண்டு.'' (தொகுதி 1, பக்கம் 41.)

மற்றும், கிருக்கியும் (அல்லது பரிமாற்ற மதிப்பும்) மதிப்பீடும் ஒன்றேயாதலால் திரு. புரூதோன் பின்வருமாறு சொல்ல வேண்டியதாகிறது:

''மனிதனின் சுயேச்சையான சித்தம் பயன்பாடு மதிப்புக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் இடையே எதிர்நிலையைத் தோற்றுவிக்கிறது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சுயேச்சையான சித்தம் இருந்து வருகிற வரை இந்த எதிர்நிலையை எப்படி நீக்க முடியும்? மேலும், மனிதகுலத்தைப் பலியிடாமல் எப்படி சுயேச்சையான சித்தத்தைப் பலியிட முடியும்?'' (தொகுதி 1, பக்கம் 41.)

ஆக, சாத்தியமான தப்பிக்கும் வழி ஒன்றுமில்லை. ஒரே அளவால் அளவிட முடியாத சக்திகள் என்று சொல்லத்தக்க இரண்டு சக்திகளிடையே, பயன்பாட்டுக்கும் மதிப்பீட்டுக்கும் இடையே, சுயேச்சையான வாடிக்கைக்காரனுக்கும் சுயேச்சையான உற்பத்தியாளனுக்கும் இடையே, ஒரு போராட்டம் இருக்கிறது.

விஷயங்களைச் சற்று மேலும் நெருங்கிப் பார்ப்போம்.

வரத்து பயன்பாட்டை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை, கிருக்கி மதிப்பீட்டை மட்டும் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. கிருக்கிக்காரனும் ஏதாவது ஒரு பொருளுக்கு

அல்லது எல்லாப் பொருட்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிற சின்னமான பணத்தை வழங்குவதில்லையா? மற்றும், அவன் வரத்துக்காரன் என்கிற முறையில், திரு. புரூதோன் கருத்துப்படி, பயன்பாட்டை அல்லது பயன்பாடு மதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லையா?

மேலும், வரத்துக்காரனும் ஏதாவது ஒரு பொருளையோ அல்லது எல்லாப் பொருட்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிற சின்னமான பணத்தையோ கோருவதில்லையா? அதன் வழியாக அவன் மதிப்பீட்டின் பிரதிநிதியாக, மதிப்பீடு மதிப்பின் அல்லது பரிமாற்ற மதிப்பின் பிரதிநிதியாக ஆகிறதில்லையா?

கிருக்கி அதே நேரத்தில் ஒரு வரத்தாகவும், வரத்து அதே நேரத்தில் ஒரு கிருக்கியாகவும் உள்ளன. ஆகவே, திரு. புரூதோனின் முரணுரை வரத்தைப் பயன்பாட்டுடனும் கிருக்கியை மதிப்பீட்டுடனும் சும்மா ஒன்றுபடுத்திக் காட்டுவதிலே ஒரு வீணான சூட்சுமக் கருத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

திரு. புரூதோன் எதைப் பயன்பாடு மதிப்பு என்று அழைக்கிறாரோ அதை மற்ற பொருளாதாரவாதிகள் சம உரிமையோடு மதிப்பீடு மதிப்பு என்று அழைக்கிறார்கள். ஷ்டோர்ஹ் அவர்களை மட்டும் மேற்கோள் காட்டுவோம் (**அரசியல் பொருளாதாரத்துக்குரிய பயிற்சி**, பாரிஸ் *1823*, பக்கங்கள் *48-49)*[26].

அவர் கருத்துப்படி, நமக்குத் தேவை என்று உணர்ந்து கொள்கிற பொருட்கள் **தேவைகள்** ஆகின்றன; நாம் மதிப்புக் கற்பிக்கக் கூடிய பொருட்கள் **மதிப்புகள்** ஆகின்றன. மதிப்பீட்டால் உண்டாக்கப்பட்ட தேவைகளை நிறைவாக்குவதினாலேதான் மிகப் பெரும்பான்மையான பொருட்களுக்கு மதிப்பு உள்ளது. நமது தேவைகளைப் பற்றிய மதிப்பீடு மாறக் கூடும், ஆகவே பொருட்களின் பயன்பாடும்—அது இந்தப் பொருட்களுக்கும் நமது தேவைகளுக்கும் இடையேயுள்ள உறவை மட்டுமே குறிக்கிறது—மாறக் கூடும். இயல்பான தேவைகளே இடையறாது மாறி வருகின்றன. உண்மையிலே பார்த்தால், வெவ்வேறு மக்களினங்களின் ஆதார உணவாக இருக்கக் கூடிய பொருட்களைவிட வேறு எது மேலாக வேறுபட்டிருக்க முடியும்!

போராட்டம் பயன்பாட்டுக்கும் மதிப்பீட்டுக்கும் இடையே நிகழ்வதில்லை; அது வரத்துக்காரன் கோருகிற பரிமாற்ற மதிப்புக்கும் கிருக்கிக்காரன் வரத்தாக்குகிற பரிமாற்ற மதிப்புக்கும் இடையே நிகழ்கிறது. விளைபொருளின் பரிமாற்ற மதிப்பு ஒவ்வொரு தடவையும் இந்த முரண்பட்ட மதிப்புணர்வுகளின் கூட்டு விளைவாக்கமாகும்.

இறுதிப் பரிசீலனையிலே பார்க்கிற பொழுது, வரத்தும் கிருக்கியும் உற்பத்தியையும் நுகர்வையும் சேர்த்து வைக்கின்றன—ஆனால் தனித்தனி பரிமாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியையும் நுகர்வையும்தான் சேர்த்து வைக்கின்றன.

வரத்தான பொருள் தன்னளவில் பயன்பாடுடையதல்ல; நுகர்பவனே அதன் பயன்பாட்டை நிர்ணயிக்கிறான். அதன் பயன்படக்கூடிய தன்மையை ஒப்புக்கொள்கிற போதுங்கூட, அது பயன்பாட்டை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. உற்பத்தியின் போக்கிலே, அது கச்சாப் பொருட்கள், தொழிலாளிகளின் கூலி (இவையனைத்தும் பரிமாற்ற மதிப்புகளாகும்) முதலியவை போன்ற எல்லா உற்பத்திச் செலவுகளுக்கும் பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, உற்பத்தியாளனின் பார்வையில் அந்தப் பொருள் பரிமாற்ற மதிப்புகளின் ஒரு மொத்த தொகையைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. அவன் ஒரு பயன்பாடுள்ள பொருளை மட்டுமல்லாமல் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பரிமாற்ற மதிப்பையும் வரத்தாக்குகிறான்.

கிருக்கியைப் பொறுத்தவரை, அதனிடம் பரிமாற்றத்துக்கான சாதனங்கள் உண்டு என்கிற நிபந்தனையின் பேரில் மட்டுமே அது பயன்திறமுள்ளதாக இருக்கும். இந்தச் சாதனங்களுங்கூட விளை பொருட்களேயாகும், பரிமாற்ற மதிப்பேயாகும்.

ஆக, ஒரு புறத்தில் வரத்து கிருக்கி விஷயத்திலே, பரிமாற்ற மதிப்புகள் செலவழிக்கப்பட்ட ஒரு பொருளையும் விற்க வேண்டிய தேவையையும் காண்கிறோம்; மற்றொரு பக்கத்தில், பரிமாற்ற மதிப்புகள் செலவழிக்கப்பட்ட சாதனங்களையும் வாங்குவதற்கான விருப்பத்தையும் பார்க்கிறோம்.

திரு. புரூதோன் சுயேச்சையான வாடிக்கைக்காரனை சுயேச்சையான உற்பத்தியாளனுக்கு எதிராக நிறுத்துகிறார். இவனுக்

கும் அவனுக்கும் வெறும் இயக்கமறுப்பியல் பண்புகளைத் தான் அவர் கற்பிக்கிறார். இதுவே அவரைப் பின்வருமாறு சொல்ல வைக்கிறது: ''மனிதனின் **சுயேச்சையான சித்தமே** பயன்பாடு மதிப்புக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் இடையே எதிர்நிலையைத் தோற்றுவிக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது'' என்று.

உழைப்புப் பிரிவினை மீதும் பரிமாற்றம் மீதும் நிறுவப் பெற்றுள்ள ஒரு சமுதாயத்தில் ஓர் உற்பத்தியாளன் உற்பத்தி செய்தவுடனே (இது திரு. புரூதோனின் ஊகக்கோள்) விற்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறான். திரு. புரூதோன் உற்பத்தியாளனை உற்பத்திச் சாதனங்களுக்கு எஜமானன் ஆக்குகிறார்; ஆனால், அவனுடைய உற்பத்திச் சாதனங்கள் **சுயேச்சையான சித்தத்தைச்** சார்ந்திருக்கவில்லை என்று நம்மிடம் ஒப்புக் கொள்வார். மேலும், இந்த உற்பத்திச் சாதனங்களில் பல அவனுக்கு வெளியேயிருந்து கிடைத்த விளைபொருட்களாகும், மற்றும் நவீன கால உற்பத்தியில் அவன் விரும்புகிற அளவில் உற்பத்தி செய்து கொள்வதற்கு அவனுக்குச் சுயேச்சையும் இல்லை. உற்பத்திச் சக்திகளின் யதார்த்தமான வளர்ச்சி நிலையானது அவனை இன்னின்ன அளவிலே உற்பத்தி செய் என்று கட்டாயப்படுத்துகிறது.

உற்பத்தியாளனைப் போலவே நுகர்வோனும் சுயேச்சையுடன் இல்லை. அவனது மதிப்பீடு அவனது செல்வங்களையும் தேவைகளையும் சார்ந்திருக்கிறது. இவ்விரண்டையும் அவனது சமுதாய நிலை நிர்ணயிக்கிறது. அவனது சமுதாய நிலை மொத்த சமுதாய அமைப்பைச் சார்ந்திருக்கிறது. உருளைக் கிழங்கு வாங்குகிற தொழிலாளியும் சரி, சல்லாத் துணி வாங்குகிற வைப்பாட்டியும் சரி, இருவரும் தத்தம் மதிப்பீட்டைப் பின்பற்றுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அவர்களின் மதிப்பீடுகளில் உள்ள வேறுபாட்டை அவர்கள் உலகத்தில் வகிக்கும் நிலைகளில் உள்ள வேறுபாடு விளக்குகிறது, இந்த நிலைகளும் சமுதாய அமைப்பின் விளைபொருளேயாகும்.

தேவைகளின் தொகைமுறை முழுவதும் மதிப்பீடு மீது நிறுவப்பட்டிருக்கிறதா அல்லது மொத்தமான உற்பத்தி அமைப்பின் மீது நிறுவப்பட்டிருக்கிறதா? பெருவழக்காக, நேரடியாக உற்பத்தியிலிருந்தோ உற்பத்தியை அடிப்படை

யாகக் கொண்ட விவகார நிலைமைகளிலிருந்தோ தேவைகள் எழுகின்றன. உலக வாணிபம் அநேகமாக முழுமையாக உற்பத்தியின் தேவைகளைச் சுற்றித்தான் நடக்கிறதேயல்லாமல் தனிநபர் நுகர்வுக்குரிய தேவைகளைச் சுற்றியல்ல. ஆக, மற்றொரு எடுத்துக்காட்டு நோக்கினால், வழக்குரைஞர்களுக்கான தேவை ஒரு குறிப்பிட்ட சொத்துத் துறைச் (சிவில்) சட்டம்—அந்தச் சட்டமும் சொத்தின், அதாவது உற்பத்தியின், ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியின் வெளியீடுதான்—முன்னதாக இருப்பதை அனுமானிக்கிறது அல்லவா?

மேலே கூறிய அம்சங்களை வரத்து கிருக்கிகளின் உறவிலிருந்து நீக்கியது திரு. புரூதோனுக்குப் போதவில்லை. எல்லா உற்பத்தியாளர்களையும் பிண்டமாகக் கலந்து தனியோர் உற்பத்தியாளனாக ஆக்கி, எல்லா நுகர்வோர்களையும் பிண்டமாகக் கலந்து தனியொரு நுகர்வோனாக ஆக்கி, இவ்விரு கற்பனாகாரமான ஆசாமிகளிடையே ஒரு போராட்டத்துக்கு ஏற்பாடு செய்கிற பொழுது அவர் சூட்சுமக் கருத்தமைப்பை அதன் எல்லையின் கோடிக்குக் கொண்டுபோகிறார். ஆனால் யதார்த்த உலகத்தில் விஷயங்கள் வேறு மாதிரி நடக்கிறது. வரத்துக்காரர்களிடையேயுள்ள போட்டியும் கிருக்கிக்காரர்களிடையேயுள்ள போட்டியும் வாங்குகிறவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தின் ஒரு அவசியமான பகுதியாக அமைகின்றன, அதன் விளைவுதான் பரிமாற்ற மதிப்பு.

திரு. புரூதோன் போட்டியையும் உற்பத்திச் செலவையும் ஒழித்துவிட்டபின் நிம்மதியாக வரத்து — கிருக்கி சூத்திரத்தை அபத்தமாக்கிவிட முடியும்.

அவர் சொல்கிறார்: ''வரத்தும் கிருக்கியும் வெறுமனே இரண்டு சம்பிரதாய வடிவங்களாகும், அவை பயன்பாடு மதிப்பையும் பரிமாற்ற மதிப்பையும் நேருக்கு நேர் கொணர்ந்து அவற்றின் சமரசத்துக்கு இட்டுச் செல்ல உதவுகின்றன. அவை இரண்டு மின்சாரத் துருவங்கள், அவற்றை இணைக்கிற பொழுது பரிமாற்றம் என்கிற இணைப்பு உறவை உண்டு பண்ணித் தீர வேண்டும்'' என்று. (தொகுதி 1, பக்கங்கள் 49-50.)

நுகரப்படும் பொருளிடம் நுகர்வோனை அறிமுகப்படுத்துவதற்குரிய ''சம்பிரதாய வடிவமே'' பரிமாற்றம் என்றும்

ஒருவன் சொல்லக் கூடும். எல்லாப் பொருளாதார உறவுகளுமே இடைத்தரகர்களாக உடனடி நுகர்வுக்கு உதவுகிற ''சம்பிரதாய வடிவங்கள்'' என்றும் ஒருவன் சொல்லக் கூடும். குறையவோ கூடவோ இல்லாமல், வரத்தும் கிருக்கியும் தனித்தனி பரிமாற்றங்களைப் போலவே ஒரு குறிப்பிட்ட உற்பத்தியின் உறவுகளாகும்.

அப்புறம், திரு. புரூதோனின் இயக்கவியலின் பொருள் என்ன? பயன்பாடு மதிப்புக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் பதிலாக, வரத்துக்கும் கிருக்கிக்கும் பதிலாக, பற்ருக்குறையும் நிறைவும் என்றும், பயன்பாடும் மதிப்பீடும் என்றும், ஒரு உற்பத்தியாளனும் ஒரு நுகர்வோனும்—இருவரும் சுயேச்சையான சித்தம் படைத்த வீரர்களே—என்றும் சூட்சுமமான, முரண்பட்ட எண்ணப் போக்குகளைப் புகுத்தியிருப்பதுதான்.

அவரது குறி என்ன?

அவர் ஒதுக்கிவிட்ட அம்சங்களில் ஒன்ருகிய உற்பத்திச் செலவைப் பயன்பாடு மதிப்பையும் பரிமாற்ற மதிப்பையும் கொண்ட கூட்டுரையாக அறிமுகப்படுத்துவதற்குத் தமக்கு வழிவகை ஏற்படுத்திக் கொள்வதுதான். இவ்விதமாகத்தான் அவர் பார்வையிலே உற்பத்திச் செலவு கூட்டு மதிப்பாக அல்லது உருவமைத்த மதிப்பாக அமைகிறது.

§2. உருவமைத்த மதிப்பு அல்லது கூட்டு மதிப்பு

''மதிப்பு (பரிமாற்ற மதிப்பு) பொருளாதாரக் கட்டமைப்பின் மூலக் கல்லாகும்.'' ''உருவமைத்த'' மதிப்பு பொருளாதார முரண்பாடுகளின் தொகைமுறைக்கு மூலக் கல்லாகும்.

அரசியல் பொருளாதாரத்தில் திரு. புரூதோன் கண்டு பிடித்தது எல்லாம் இந்த ''உருவமைத்த மதிப்பு''தான், அது என்ன?

பயன்பாட்டை ஒப்புக் கொள்கிற பொழுது, மதிப்பின் தோற்றுவாய் உழைப்பு என்ருகிறது. உழைப்பின் அளவை நேரம் ஆகும். விளைபொருட்களின் சார்பு மதிப்பை அவற்றை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உழைப்பு நேரம் நிர்ணயிக்கிறது. ஒரு விளைபொருளின் சார்பு மதிப்பின் பணவடிவான வெளியீடு விலை ஆகும். இறுதியாக,

ஒரு விளைபொருளின் உருவமைத்த மதிப்பு என்பது அந்த விளைபொருளில் பொதிந்திருக்கும் உழைப்பு நேரத்தால் உருவமைக்கப்பட்ட மதிப்புதான்.

ஆதாம் ஸ்மித் உழைப்புப் பிரிவினையைக் கண்டுபிடித்தது போல் திரு. புரூதோன் ''உருவமைத்த மதிப்பைக்'' கண்டு பிடித்துள்ளதாகச் சொல்கிறார். இது அவ்வளவு ''கேள்விப் படாத ஒன்றல்ல'', எனினும் பொருளாதார விஞ்ஞானத்தின் எந்தக் கண்டுபிடிப்பிலும் கேள்விப்படாதது என்று எதுவும் இல்லை என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். தமது சொந்தப் புனைவின் முக்கியத்துவத்தை முற்றாகப் புரிந்து கொண்டிருக்கிற திரு. புரூதோன் ''தற்படைப்புத் திறத் துக்குத் தாம் உரிமை கொண்டாதது பற்றி வாசகனுக்கு நம்பிக்கையுறுதி ஊட்டுவதற்கும், புதிய கருத்துக்களை வாங்கிக் கொள்ளாதவாறு தடுக்கும் பயந்த உள்ளம் படைத்தவர்களைத் தம் பக்கம் ஈர்த்துக் கொள்வதற்கும்'' அதன் சிறப்பை மட்டுப்படுத்த முயல்கிறார். ஆனால் மதிப்பைப் புரிந்து கொள்வதில் தமக்கு முன்போகியவர் களில் ஒவ்வொருவரும் செலுத்திய பங்கை அளந்து காட்டுகிறபோது, அந்தச் சிறப்பில் மிகப் பெரும் பகுதி தன்னையே சேரும் என்று வெளிப்படையாகக் கூறிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது.

''மதிப்பைப் பற்றிய கூட்டுக் கருத்தை ஆதாம் ஸ்மித் தெளிவின்றிக் கண்டார்.... ஆதாம் ஸ்மித் பொருத்தவரை இந்த மதிப்பு பற்றிய கருத்து முற்றாக உள்ளுணர்வால் உணரப்பட்ட ஒன்றாக இருந்தது. ஆனால் உள்ளுணர்வுகளின் வலுவை வைத்துச் சமுதாயம் தனது பழக்கங்களை மாற்றிக் கொள்வதில்லை; உண்மைகளின் அதிகார பலத்தை வைத்தே அதன் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மேலும் தொட்டறியத் தக்க விதத்திலே மேலும் தெளிவாக முரண்முழுமையைக் கூற வேண்டியதாயிற்று: அதன் பிரதான வியாக்கியான கர்த்தா ழான் ப. ஸேய் ஆவார்.''

சுருங்கச் சொன்னால், கூட்டு மதிப்பைக் கண்டுபிடித்ததின் வரலாறு இதுவே: ஆதாம் ஸ்மித்—தெளிவற்ற உள்ளுணர்வு; ழான் ப. ஸேய்—முரண்முழுமை; திரு. புரூதோன்— உருவமைக்கும், ''உருவமைத்த'' உண்மை. மற்றும், இதிலே பிழையேதும் இருக்க வேண்டியதில்லை: ஸேய் முதல்

புரூதோன் வரை மற்ற பொருளாதாரவாதிகள் எல்லோரும் வெறுமே முரண்முழுமை எனும் தேய்ந்த பாதையிலேயே நடந்து கொண்டிருந்தனர்.

''இவ்வளவு எளிய கருத்து விஷயத்தில் இத்தனை அறிவாளிகளும் சென்ற நாற்பதாண்டுகளாக ஏன் பதற்றப் பட்டார்கள் என்பது நம்ப முடியாததாயிருக்கிறது. ஆனால் அதுவல்ல, மதிப்புகளிடையே ஒப்புநோக்கு அம்சம் எதுவுமின்றி அளவைகளுக்கான அலகும் இன்றி மதிப்புகள் ஒப்புநோக்கப் படுகின்றன. புரட்சிகரமான சமத்துவத் தத்துவத்தை ஏற்றுக் கொள்வதற்கு மாறாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பொருளாதாரவாதிகள் இதைத்தான் எல்லா எதிர்ப்பாளர் களுக்கும் எதிராகத் தூக்கிப்பிடிக்கத் தீர்மானித்திருக்கிறார் கள். இதைப் பற்றி எதிர்காலச் சந்ததி என்ன சொல்லும்?'' *(தொகுதி 1, பக்கம் 68).*

இப்படி திடீரென்று சாட்சிக்கழைக்கப்பட்ட எதிர்காலச் சந்ததி முதலில் கால அடைவு விஷயத்தில் குழம்பிப் போன சிந்தனையோடு தொடங்கும். அது தன்னைத்தானே இவ்வாறு கேட்டுக் கொள்வது உறுதி: ரிக்கார்டோவும் அவரது கருத்துப் பிரிவினரும் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பொருளாதாரவாதிகள் இல்லையா? ''பண்டங்களின் சார்பு மதிப்பு அவற்றின் உற்பத்திக்கு வேண்டிய உழைப்பின் அளவோடு மட்டுமே பொருந்துகிறது'' என்று ஒரு கோட் பாடாக வைக்கிற ரிக்கார்டோவின் தத்துவ முறை 1817 லிருந்து இருக்கிறது. ஒரு முழுமையான கருத்துப் பிரிவுக்குத் தலைவர் ரிக்கார்டோ; இங்கிலாந்தில் அது முடியரசு மீட்சிக் காலத்திலிருந்து[27] ஆதிக்க நிலையிலிருக்கிறது. நவீன பூர்ஷ்வா வர்க்கத்திற்குத் தானே முன்மாதிரியாக இருக்கிற ஆங்கில நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்தின் கண்ணோட்டம் முழுவதையும் ரிக்கார்டோவின் தத்துவம் கடுங்கண்டிப்புடன், ஈவிரக்கமின்றி, சுருக்கிவிளக்கித் தருகிறது. ''இதைப் பற்றி எதிர்காலச் சந்ததி என்ன சொல்லும்?'' ரிக்கார்டோவை திரு. புரூதோனுக்குத் தெரியாது என்று அது சொல்லாது, ஏனெனில் அவரைப் பற்றி இவர் பேசுகிறார், நீட்டி நீட்டிப் பேசுகிறார், திரும்பத் திரும்பப் பேசுகிறார், முடிவிலே அவரது தத்துவமுறையைக் ''குப்பை'' என்று கூறுகிறார். என்றைக் காவது எதிர்காலச் சந்ததி தலையிடுமேயானால், அது ஒரு

வேளை சொல்லக் கூடியது திரு. புரூதோன் தமது வாசகர்களின் ஆங்கிலேய வெறுப்புக்குப் பங்கம் விளைத்திடுவோமோ என்று பயந்துபோய் ரிக்கார்டோவின் கருத்துக்களுக்குத் தம்மைப் பொறுப்பாசிரியராக ஆக்கிக் கொள்ளவே விரும்பினர் என்றுதான். எப்படி இருந்த போதிலும், தற்கால சமுதாயத்தைப் பற்றிய, பூர்ஷ்வா சமுதாயத்தைப் பற்றிய, தத்துவம் என்று எதை ரிக்கார்டோ விஞ்ஞானரீதியாக விரிவிளக்கம் செய்தாரோ அதையே ''எதிர்காலத்தைப் பற்றிய புரட்சிகரமான தத்துவமாக'' திரு. புரூதோன் வழங்குவதையும், அவ்வழியே, பயன்பாட்டுக்கும் பரிமாற்ற மதிப்புக்கும் இடையேயுள்ள முரண்முழுமையின் ஒரு பக்கத்தைப் பற்றிய, அதாவது பரிமாற்ற மதிப்பைப் பற்றிய, விஞ்ஞான ரீதியான சூத்திரமாக புரூதோனுக்கு வெகு காலத்துக்கு முன்பே எதை ரிக்கார்டோவும் அவரது கருத்துப் பிரிவினரும் முன்வைத்தார்களோ அதையே அந்த முரண்முழுமையின் தீர்வாகத் திரு. புரூதோன் எடுத்துக் கொள்வதையும் சிறு பிள்ளைத்தனம் என்றே எதிர்காலச் சந்ததி நினைக்கும். சரி, எதிர்காலச் சந்ததியை அப்படியே விட்டுவிட்டு திரு. புரூதோன் தனக்கு முன்சென்ற ரிக்கார்டோவை எதிர் கொள்ளச் செய்வோம். இந்த ஆசிரியரிடமிருந்து மதிப்பு பற்றிய அவரது தத்துவத்தைத் தொகுத்தளிக்கிற சில நூற்பகுதிகளை இங்கே தருகிறோம்:

''ஆக, பரிமாறிக்கொள்ளத்தக்க மதிப்புக்குப் பயன்பாடு முற்றாக அவசியமாயினுங்கூட பயன்பாடு அதன் அளவை அல்ல.'' (அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடுகள், முதலியன, ஆங்கிலத்திலிருந்து ஃபி. சொ. கான்ஸ்டான்ஸியோ மொழிபெயர்த்தது, பாரிஸ் *1835*, தொகுதி *1*, பக்கம் *3*.)

''பயன்பாடு உடையவையாய், பண்டங்கள் தமது பரிமாறிக் கொள்ளத்தக்க மதிப்பை இரண்டு தோற்றுவாய்களிலிருந்து பெறுகின்றன: அவற்றின் பற்றாக்குறையிலிருந்து, மற்றும் அவற்றைப் பெறுவதற்கு வேண்டிய உழைப்பின் அளவிலிருந்து, என்று. பற்றாக்குறையால் மட்டுமே தமது மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறதாய் இருக்கிற சில பண்டங்கள் உண்டு. இப்படிப்பட்ட பொருட்களின் அளவை உழைப்பால் அதிகரிக்கச் செய்ய முடியாது, எனவே அதிகரித்த வரத்தால்

அவற்றின் மதிப்பைக் குறைக்க முடியாது. சில அரிய சிற்பச் சிலைகள், ஓவியங்கள், சொற்பமான நூல்கள்... இவ்வகையைச் சேர்ந்தவை. அவற்றின் மதிப்பு அவற்றை உடைமையாக்கிக் கொள்ள விரும்புகிறவர்களின் செல்வமும் விருப்ப நினைப்புகளும் வேறுபடுவதையொட்டி வேறுபடுகிறது.'' (மேலே குறிப்பிட்ட நூல், தொகுதி 1, பக்கங்கள் 4-5.) ''எனினும், சந்தையில் தினந்தோறும் பரிமாறிக் கொள்ளப் படுகிற திரளான பண்டங்களில் இந்தப் பண்டங்கள் ஒரு மிகச் சிறிய பகுதியேயாகும். விரும்பப்படுகிற பொருட்களாயிருக்கும் பண்டங்களில் மிகப் பெரும் பகுதி உழைப்பால் பெறப்படுகின்றன; மற்றும் அவற்றைப் பெறுவதற்கு வேண்டிய உழைப்பைக் கொடுக்கத் தயாராயிருந்தால் அவற்றை ஒரு நாட்டிலல்ல, பல நாடுகளில், எந்தவிதமான வரையறுக்கத்தக்க வரம்பும் அநேகமாக இல்லாதபடி, பெருக்கிக் கொள்ளக் கூடும்.'' (மேலே குறிப்பிட்ட நூல், தொகுதி 1, பக்கம் 5.) ''ஆக, பண்டங்கள் பற்றியும், அவற்றின் பரிமாறிக் கொள்ளத் தக்க மதிப்பு பற்றியும், அவற்றின் சார்பு விலைகளை ஒழுங்கு முறைப்படுத்தும் விதிகள் பற்றியும் பேசுகிற பொழுது, மனித முயற்சியைச் செலுத்தி அளவில் அதிகரிக்கச் செய்யத் தக்கதாயுள்ள பண்டங்களை மட்டுமே — எந்தப் பண்டங்களின் உற்பத்தியில் போட்டி தங்குதடையின்றி செயல்படுகிறதோ அந்தப் பண்டங்களை மட்டுமே—எப்போதும் நாம் குறிப்பிடுகிறோம்.'' (தொகுதி 1, பக்கம் 5.)

ரிக்கார்டோ ஆதாம் ஸ்மித்தை மேற்கோள் காட்டுகிறார், அவரது கருத்துப்படி ஆதாம் ஸ்மித் **''எவ்வளவோ திட்ப நுட்பத்துடன்** பரிமாறிக் கொள்ளத்தக்க மதிப்பின் ஆதி மூலத்தை வரையறுத்தார்'' (பார்க்க: ஆதாம் ஸ்மித், நூல் 1, அத்தியாயம் 5[28]) என்று கூறிவிட்டு மேலே சொல்வதாவது:

''மனித உழைப்பால் அதிகரிக்கச் செய்ய முடியாதவை தவிர மற்ற எல்லாப் பொருட்களின் பரிமாறிக் கொள்ளத் தக்க மதிப்புக்கு இதுவே'' (அதாவது, உழைப்பு நேரம்) ''உண்மையில் அடிப்படை என்பது அரசியல் பொருளாதாரத்தில் மிகமுக்கியமான ஒரு தத்துவமாகும்; ஏனெனில் **மதிப்பு** எனும் சொல்லுடன் ஒட்டிக் கொண்டுள்ள தெளிவற்ற கருத்துக்களிலிருந்து புறப்படுவது போல் வேறெந்த

தோற்றுவாயினின்றும் அத்துணைத் தவறுகளும், அந்த விஞ்ஞானத்தில் அத்துணைக் கருத்து வேறுபாடும் புறப்படுகிற தில்லை.'' (தொகுதி 1, பக்கம் 8.) ''பண்டங்களில் உருப் பெற்றுள்ள உழைப்பின் அளவு அவற்றின் பரிமாறிக் கொள் ளத்தக்க மதிப்பை ஒழுங்குமுறைப்படுத்துகிறது என்றால் ஒவ்வொரு உழைப்பு அளவின் அதிகரிப்பும் அது செலுத்தப் படும் பண்டத்தின் மதிப்பை உயர்த்த வேண்டும், அதே போல் ஒவ்வொரு உழைப்பு அளவின் குறைப்பும் அதைக் குறைக்க வேண்டும்.'' (தொகுதி 1, பக்கம் 8.)

ரிக்கார்டோ ஸ்மித்தைக் குறைகூற முற்படுகிறார்:

1. உழைப்பை விட்டுவிட்டு ''மற்றொரு வரையளவான மதிப்பளவையைத் தாமே நிறுவியிருக்கிறார்'' என்று. ''வரையளவான அளவையாக அவர் சில சமயம் தானியத் தையும் சில சமயம் உழைப்பையும் குறித்துப் பேசுகிறார்; எந்த ஒரு பொருளின் உற்பத்தியிலும் வழங்கப்பட்ட உழைப் பின் அளவு அல்ல, சந்தையில் அது பெற முடிகிற அளவுதான்.'' (தொகுதி 1, பக்கங்கள் 9ம் 10ம்.)

2. ''அந்தக் கோட்பாட்டை வில்லங்கம் இன்றி அங்கீ கரித்தார், அதே நேரத்தில் மூலதனத் திரட்சி, நிலவுடைமை ஆகிய இரண்டுக்கும் முந்தியிருக்கிற ஆரம்பகால, பண் படாத சமுதாய நிலைக்கு அதைச் செயல்படுத்துவதோடு தடுத்துவிட்டார்'' என்று. (தொகுதி 1, பக்கம் 21.)

நிலவுடைமை, அதாவது நில வாடகை, பண்டங்களின் சார்பு மதிப்பை மாற்ற முடியாது என்றும், அந்தப் பண்டங் களின் உற்பத்தியிலே செலவிட்ட ஒப்பீடு உழைப்பளவால் நிர்ணயிக்கப்பட்ட சார்பு மதிப்புகள் மீது மூலதனத் திரட்சி ஒரு தற்காலிகமான ஊசலாட்டமுள்ள பாதிப்பைத்தான் செய்கிறது என்றும் ரிக்கார்டோ நிரூபிக்கப் புறப்படுகிறார். இந்த ஆய்வுரைக்கு ஆதரவாக அவர் தம்முடைய புகழ் பெற்ற நில வாடகை பற்றிய தத்துவத்தைக் கொடுக்கிறார், மூலதனத்தைப் பகுத்தாய்கிறார், கடைசியிலே திரட்டப்பட்ட உழைப்பைத் தவிர அதில் வேறொன்றையும் அவர் காண வில்லை. அப்புறம் கூலி, இலாபம் பற்றிய ஒரு முழுத் தத்து வத்தை வளர்க்கிறார், மற்றும் விளைபொருளின் சார்பு மதிப் பைப் பாதிக்காமலே கூலியும் இலாபமும் ஒன்றேடொன்று தலைகீழான வீதாச்சாரத்திலே ஏறவும் இறங்கவும் செய்

கின்றன என்று நிரூபிக்கிறார். மூலதனத் திரட்சியும் அதன் வெவ்வேறு அம்சங்களும் (நிலையான மூலதனம், புழக்க மூலதனம்) மற்றும் கூலி விகிதமும் விளைபொருட்களின் தகவுப்பொருத்தமான மதிப்பு மீது செலுத்த முடிகிற செல்வாக்கை அவர் புறக்கணிக்கவில்லை. உண்மையிலே பார்த்தால், ரிக்கார்டோ அக்கறை காட்டுகிற முதன்மையான பிரச்சினைகள் அவை.

''உழைப்பைப் பயன்படுத்துவதில் சிக்கனம் செய்வது —பண்டத்தையே உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பிலே சிக்கனம் செய்தாலும் சரி, எந்த மூலதனத்தின் உதவியைக் கொண்டு அது உற்பத்தி செய்யப்படுகிறதோ அந்த மூலதனத்தை உண்டாக்குவதற்கு அவசியமான உழைப்பிலே சிக்கனம் செய்தாலும் சரி—ஒரு பண்டத்தின் சார்பு மதிப்பை* என்றைக்கும் குறைக்கத் தவறுவதில்லை.'' (தொகுதி 1, பக்கம் 28.) ''இந்தச் சூழ்நிலைமைகளின் கீழ் ஒரு மானின் மதிப்பு (வேட்டைக்காரனின் ஒரு நாளத்திய உழைப்பின் பொருள்) மீனின் மதிப்புக்கு (மீனவனின் ஒரு நாளத்திய உழைப்பின் பொருள்) சரி சமமாக இருக்கும். மீனினுடையவும் மானினுடையவும் ஒப்புநோக்கு மதிப்பு அவை ஒவ்வொன்றிலும் செயல்படுத்தப்பட்ட உழைப்பின் அளவால் முற்றாக ஒழுங்குமுறைப்படுத்தப்படும்; உற்பத்தியின் அளவு என்னவாயிருந்தாலும் சரி, பொதுவான கூலியும் இலாபமும் எவ்வளவு உயர்வாகவோ தாழ்வாகவோ இருந்தாலும் சரி.''(தொகுதி 1, பக்கம் 32.)''உழைப்பைப் பண்டங்களின் மதிப்புக்கு அடிப்படையாகச் செய்வதிலே, அவற்றின்

---

* ஒரு பண்டத்தின் மதிப்பை அதன் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு அளவைக் கொண்டு ரிக்கார்டோ நிர்ணயிக்கிறார் என்பது நன்கு தெரிந்த விஷயம். எனினும், பண்ட உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட ஒவ்வொரு உற்பத்தி முறையிலும் (எனவே, இதில் முதலாளித்துவ உற்பத்தி முறையும் அடங்கும்) நடப்பிலிருக்கும் பரிமாற்ற வடிவத்தின் காரணமாக இந்த மதிப்பு உழைப்பின் அளவுகளாக நேரடியாக வெளியிடப்படாமல் வேறு ஏதாவது ஒரு பண்டத்தின் அளவுகளில் வெளியிடப்படுகிறது. வேறு ஏதாவது ஒரு பண்டத்தின் அளவிலே (பணமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்) வெளியிடப்படும் ஒரு பண்டத்தின் மதிப்பை அதன் சார்பு மதிப்பு என்று ரிக்கார்டோ குறித்துச் சொல்கிறார்.—[ஜெர்மன் பதிப்புக்கு (1885) ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் வரைந்த குறிப்பு.]

உற்பத்திக்கு அவசியமான உழைப்பின் ஒப்புநோக்கு அளவை ஒன்றுக்கொன்று பரிமாற்றம் செய்வதற்கான அந்தந்தப் பண்டங்களின் அளவுகளை நிர்ணயிக்கிற விதியாகச் செய்வதிலே, இதிலிருந்து—அதாவது, அவற்றின் முதல் நிலையான இயல்பான விலையிலிருந்து—பண்டங்களின் அசல் அல்லது சந்தை விலையில் ஏற்படும் தற்செயலான தற்காலிக மான திரிபுகளை நாம் மறுக்கிறதாக அனுமானிக்கக் கூடாது.'' (மேலே குறிப்பிட்ட நூல், தொகுதி 1, பக்கம் 105.) ''பண் டங்களின் விலையை உற்பத்திச் செலவுதான் இறுதியிலே ஒழுங்குமுறைப்படுத்த வேண்டுமேயல்லாமல், அடிக்கடி சொல்லப்பட்டு வந்திருக்கிறபடி வரத்து கிராக்கி இடையே யுள்ள தகவுப் பொருத்தம் அல்ல.'' (தொகுதி 2, பக்கம் 253.)

வரத்து கிராக்கி பற்றிய விதியின்படியோ, கிராக்கியுடன் சார்புபடுத்திப் பார்க்கிற நிலையிலே பற்றாக்குறை நிறைவு பற்றிய விதியின்படியோ பரிமாற்ற மதிப்பில் உண்டாகும் மாறுபாடுகளை லௌடர்டெல் பிரபு வளர்த்திருக்கிறார். அவர் கருத்தில், ஒரு பொருளின் அளவு குறைந்தால் அல்லது அந்தப் பொருளுக்குக் கிராக்கி அதிகரித்தால் அதன் மதிப்பு அதிகரிக்க முடியும்; அதன் அளவு அதிகரிப்பதின் காரணத்தால் அல்லது அதன் கிராக்கி குறைவதின் காரணத்தால் அதன் மதிப்பு குறைய முடியும். ஆக, ஒரு பொருளின் மதிப்பு வெவ் வேறான எட்டு காரணங்களால் மாற முடியும்—அதாவது, அந்தப் பொருளோடு பொருந்திவருகிற நான்கு காரணங் களும், அந்தப் பொருளின் மதிப்புக்கு அளவையாகப் பயன் படும் பணத்தோடு அல்லது வேறு ஏதாவது ஒரு பொரு ளோடு பொருந்தி வருகிற நான்கு காரணங்களும், என்று. ரிக்கார்டோவின் மறுப்பு பின்வருமாறு:

''ஒரு தனிநபராலோ நிறுவனத்தாலோ ஏகபோகமாகக் கொள்ளப்பட்டிருக்கும் பண்டங்கள் லௌடர்டெல் பிரபு வகுத்துத் தந்துள்ள விதியின் பிரகாரம் வேறுபடுகின்றன: விற்கிறவர்கள் அவற்றின் அளவை அதிகப்படுத்துவதற்குத் தகவுப்பொருத்தமாக அவை வீழ்கின்றன, அவற்றை வாங்கு வதற்கு வாங்குகிறவர்கள் காட்டும் ஆர்வத்துக்குத் தகவுப் பொருத்தமாக அவை உயர்கின்றன; அவற்றின் இயல்பான மதிப்புடன் அவற்றின் விலைக்கு அவசியகரமான தொடர்பு இல்லை: எந்தப் பண்டங்கள் போட்டிக்கு உட்பட்டுள்ளன

வாயும் அவற்றின் அளவை ஓரளவுக்கு மிதமாக அதிகப் படுத்தக் கூடியதாயும் உள்ளனவோ அந்தப் பண்டங்களின் விலைகள் வரத்து கிருக்கிகளின் நிலவரத்தையல்லாமல் தமது அதிகரித்த அல்லது குறைந்த உற்பத்திச் செலவையே இறுதி யாகச் சார்ந்திருக்கும்.'' (தொகுதி 2, பக்கம் 259.)

ரிக்கார்டோவின் இந்த எளிமையான, தெளிவான, சரி நுட்பமான மொழியையும் திரு. புரூதோன் உழைப்பு நேரத்தை வைத்துச் சார்பு மதிப்பின் நிர்ணயிப்புக்கு வருவதற்குச் செய்கிற சொல்லலங்கார முயற்சிகளையும் ஒப்புநோக்குவதை வாசகனுக்கு விட்டுவிடுவோம்.

ரிக்கார்டோ முதலாளித்துவ உற்பத்தியின் உண்மையான இயக்கத்தைக் காட்டுகிறார், அது மதிப்பை உருவமைக் கிறது. திரு. புரூதோன் இந்த உண்மையான இயக்கத்தைக் கணக்கிலிருந்து விட்டுவிட்டு, புதிய இயக்கப் போக்குகளைப் புனைவதற்காகவும் புதியது என்று நினைத்துக் கொள்கிற ஒரு சூத்திரத்தின் மீது (இந்தச் சூத்திரம், இருந்து வருகிற உண்மையான இயக்கத்தின் தத்துவரீதியான வெளியீடு தவிர வேறில்லை, அந்த இயக்கத்தை எவ்வளவோ நன்றாக ரிக்கார்டோ வர்ணித்திருக்கிறார்) உலகத்தை மாற்றியமைப் பதைச் சாதிப்பதற்காகவும் ''பதற்றப்படுகிறார்''. ரிக்கார்டோ தற்கால உலகத்தைத் தமது தொடக்கப் புள்ளியாக எடுத்துக் கொள்கிறார், அது எவ்வாறு மதிப்பை உருவமைக் கிறது என்று நிரூபித்துக் காட்டுவதற்கு; திரு. புரூதோன் உருவமைத்த மதிப்பைத் தமது தொடக்கப் புள்ளியாக எடுத்துக் கொள்கிறார், இந்த மதிப்பின் துணை கொண்டு ஒரு புதிய சமுதாய உலகை நிர்மாணிப்பதற்கு. திரு. புரூதோனுக்கு உருவமைத்த மதிப்பு வட்டத்தில் சுற்றிவந்து மீண்டும் உருவமைக்கிற காரணியாக ஆக வேண்டும்—இந்த மதிப்பீடு முறைப்படி ஏற்கெனவே முற்றாக உருவமைக்கப்பட்டு விட்ட ஒரு உலகத்தில். ரிக்கார்டோவுக்கு உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்பை நிர்ணயிப்பது பரிமாற்ற மதிப்பின் விதி; திரு. புரூதோனுக்கு அது பயன்பாடு மதிப்பு, பரிமாற்ற மதிப்பு ஆகியவற்றின் கூட்டமைவாகும். ரிக்கார்டோவின் மதிப்புகள் பற்றிய தத்துவம் யதார்த்தத்திலுள்ள பொருளாதார வாழ்க்கையின் விஞ்ஞான ரீதியான வியாக்கியானம்; திரு. புரூதோனின் மதிப்புகள் பற்றிய தத்துவம் ரிக்கார்டோ

வின் தத்துவத்துக்கு அளிக்கிற கற்பனுவாத வியாக்கியானம். ரிக்கார்டோ தமது சூத்திரத்தை எல்லாப் பொருளாதார உறவுகளிலிருந்தும் பெறப்பட்டதாக எடுத்துக் கொள்வது மூலமாகவும் இவ்வழியே எல்லாத் தோற்றங்களேயும்—முதலில் பார்க்கையில் அந்தச் சூத்திரத்தோடு முரண்படுவது போல் தோன்றுகிற நில வாடகை, மூலதனத் திரட்சி, இலாபத்துடன் கூலிக்கு இருக்கும் உறவு போன்ற தோற்றங்களேயுங்கூட—விளக்குவதின் மூலமாகவும் தமது சூத்திரத்தின் உண்மையை நிலேநாட்டுகிருர்; அதுவே அவருடைய தத்துவத்தை ஒரு விஞ்ஞான ரீதியான அமைப்பு முறையாகச் செய்கிறது; ரிக்கார்டோவின் சூத்திரத்தை முற்றுகத் தான் தோன்றித்தனமான ஊகப் பிரமாணங்களேக் கொண்டு திரும்பக் கண்டுபிடித்திருக்கும் திரு.புரூதோனுக்கு அதன்பின் தனித்தனியான பொருளாதார விபரங்களேத் தேடிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது, அவற்றை எடுத்துக் காட்டுகளாகவும், ஏற்கெனவே நடப்பிலுள்ள உபயோக வடிவங்களாகவும், தமது புத்துயிர்ப்புக் கருத்தை நடைமுறைப்படுத்துவதின் தொடக்கங்களாகவும் காட்டிக் கழிப்பதற்காகத் திரித்துப் பொய்யாக்குகிருர். (பார்க்க: நமது §3, ''உருவமைத்த மதிப்பின் செயல்பாடு''.)

(உழைப்பு நேரத்தால்) உருவமைக்கப்பட்ட மதிப்பிலிருந்து திரு. புரூதோன் எடுக்கும் முடிவுகளுக்கு இனி வருவோம்.

—ஒரு குறிப்பிட்ட உழைப்பின் அளவு அதே உழைப்பின் அளவால் படைக்கப்பட்ட விளேபொருளுக்குச் சமமானது.

—ஒவ்வொரு நாளத்திய உழைப்பும் மற்றெரு நாளத்திய உழைப்பின் மதிப்புக்குத் தகும்; அதாவது, அளவுகள் சமமாக இருக்குமானுல், ஒரு மனிதனின் உழைப்பு மற்றெரு மனிதனின் உழைப்பின் மதிப்புக்குத் தகும்: தரம் வகைப்பட்ட வேற்றுமை கிடையாது. ஒரே வேலே அளவைக் கொண்டு ஒரு மனிதனின் விளேபொருளே மற்றெரு மனிதனின் விளேபொருளுக்கு மாற்றுகக் கொடுக்க முடியும். எல்லா மனிதர்களும் சம வேலே நேரத்துக்குச் சம சம்பளம் பெறுகிற கூலித் தொழிலாளிகளேயாவர். பரிமாற்றங்களில் நிறைவான சமத்துவம் ஆட்சி செலுத்துகிறது.

உழைப்பு நேரத்தால் ''உருவமைக்கப்பட்ட'' அல்லது

நிர்ணயிக்கப்பட்ட மதிப்பின் கரூரான, இயல்பான விளைவு களா இந்த முடிவுகள்?

ஒரு பண்டத்தின் சார்பு மதிப்பு அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறதென்றால், அதிலிருந்து இயல்பாகப் பின் தொடர்வது உழைப்பின் சார்பு மதிப்பு, அல்லது கூலி, அதே போல் அந்தக் கூலியை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறது என்றுகிறது. கூலி, அதாவது உழைப்பின் சார்பு மதிப்பு அல்லது விலை, தொழிலாளியின் பிழைப்புக்கு வேண்டியதனைத்தையும் உற்பத்திசெய்வதற்கு வேண்டிய உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ''தொப்பிகளின் உற்பத்திச் செலவைக் குறைத்துவிடு, அவற்றின் விலை அவற்றின் புதிய இயல்பான விலைக்கு இறுதியிலே விழுந்துவிடும்—கிருக்கி இரண்டு மடங்காகவோ மூன்று மடங்காகவோ நான்கு மடங்காகவோ பெருகிய போதிலுங்கூட. பிழைப்புக்கான உணவு உடைகளின் இயல்பான விலையைக் குறைப்பதின் மூலம் மனிதர்களின் பிழைப்புக்கான செலவைக் குறைத்துவிடு, கூலி இறுதியிலே விழுந்துவிடும்—தொழிலாளிகளுக்கான கிருக்கி மிகப் பெரிதாக அதிகரித்த போதிலுங்கூட.'' (ரிக்கார்டோ, தொகுதி 2, பக்கம் 253.)

ரிக்கார்டோவின் மொழி எவ்வளவு பண்பு மறுப்புப் போக்கானதாக இருக்க முடியுமோ அவ்வளவாக இருக்கிறது, சந்தேகமில்லை. தொப்பிகளின் உற்பத்திச் செலவையும் மனிதனின் பிழைப்புக்காகிற செலவையும் ஒரே மட்டத்தில் வைப்பது மனிதர்களைத் தொப்பிகளாக மாற்றிவிடுவதாகும். எனினும் அதன் பண்பு மறுப்புப் போக்கு குறித்து கூக்குரல் எழுப்பாதீர்கள். பண்பு மறுப்புப் போக்கு யதார்த்தத்திலே உள்ளது; அது அந்த யதார்த்தத்தை வெளியிடும் சொற்களிலே இல்லை. திருவாளர்கள் டிரோஸ், பிளான்கீ, ரோஸி போன்ற பிரெஞ்சு எழுத்தாளர்களும் மற்றவர்களும் ஒரு மரியாதைக்குரிய ''மனிதாபமானமுள்ள'' வாசகப் போக்கினைப் பின்பற்ற முயல்வதின் மூலமாக ஆங்கிலேயப் பொருளாதாரவாதிகளைவிட தாங்கள் மேலானவர்கள் என்று நிரூபித்துக் கொள்வதிலே ஒரு அப்பாவித்தனமான மனநிறைவு எய்துகின்றனர்; ரிக்கார்டோவின், அவரது கருத்துப்பிரிவினரின்

பண்பு மறுப்புப் போக்கான வாசக உபயோகத்திற்காக அவர்களை இவர்கள் குறைகூறுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் பொருளாதார உறவுகளை அவற்றின் முழுமையான கவர்ச்சியற்ற நிலையிலே அம்பலப்படுத்துவதையும் முதலாளி வர்க்கத்தின் மர்மங்களைத் திரைவிலக்கிப் பகிரங்கப்படுத்து வதையும் கண்டு இவர்களுக்கு எரிச்சல் உண்டாகிறது.

சுருக்குவோம்: உழைப்பு என்பது தானே ஒரு பண்டமாக இருக்கிறதினால் பண்டமாகிய உழைப்பை உற்பத்தி செய் வதற்கு வேண்டிய உழைப்பு நேரத்தால் அது அளவிடப்படு கிறது. இந்த உழைப்பு-பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படுவது என்ன? உழைப்பை நிரந்தரமாக பரா மரித்து வருவதற்கு—அதாவது, தொழிலாளியை உயிரோடி ருக்கச் செய்து, தனது இனத்தைப் பெருக்கி வரக் கூடிய நிலைமையில் வைத்து வருவதற்கு—இன்றியமையாத பொருட் களை உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு உழைப்பு நேரம் தேவையோ அது மட்டும் இருந்தால் போதும். உழைப்பின் இயல்பான விலை குறைந்தபட்சக் கூலியைத் தவிர வேறொன் றும் இல்லை.* நடப்பிலுள்ள கூலி விகிதம் இந்த இயல்பான

---

* உழைப்புச் சக்தியின் ''இயல்பான'', அதாவது சகஜ மான, விலையானது குறைந்தபட்சக் கூலியுடன்—அதாவது, தொழிலாளியின் உயிருக்கும் இனப்பெருக்கத்துக்கும் முற்றாக இன்றியமையாததாயுள்ள பிழைப்புச் சாதனங்களின் மதிப்புக்குச் சமமானதுடன்—பொருந்துகிறது என்கிற ஆய்வுரையை நான் முதன்முதலாக **அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்கு முதற்குறிப்புகள் — (பிரெஞ்சு — ஜெர்மன் ஆண்டிதழ்,** *பாரிஸ் 1844)* எனும் நூலிலும் **1844ல் இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை** எனும் நூலிலும் முன்வைத்தேன். இங்கே பார்த்தபடி, மார்க்ஸ் அக்காலத்தில் அந்த ஆய்வுரையை ஏற்றுக் கொண்டார். எங்கள் இருவரிடமிருந்தும் லஸ்ஸால் அதை எடுத்துக் கொண் டார். எனினும், குறைந்தபட்ச நிலையை நெருங்கி வரும் ஒரு நிரந்தரமான போக்கு யதார்த்தத்தில் கூலிக்கு இருக்கிற போதிலும் மேற்சொன்ன ஆய்வுரை சரியல்ல. உழைப்புக்கு முறையாக, சராசரியாக அதன் மதிப்புக்குக் குறை வாகவே கூலி கொடுக்கப்படுகிறது என்கிற உண்மை உழைப் பின் மதிப்பை மாற்ற முடியாது. மூலதனத்தில் (''உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற்பதும்'') மார்க்ஸ் மேற்கூறிய ஆய்வுரையை நேராக்கியதோடல்லாமல், (அத்தியாயம் 23:

விலைக்கு மேலே உயர்ந்தால் அதற்கான காரணம் திரு. புரூதோன் ஒரு கோட்பாடாக வைத்துள்ள மதிப்பு பற்றிய விதியானது வரத்து கிராக்கி இடையேயுள்ள வேறுபட்டுக் கொண்டேயிருக்கும் உறவுகளின் பின்விளைவுகளால் சரி ஈடு செய்யப்பட நேரிடுகிறது என்பதுதான். எனினும் குறைந்த பட்சக் கூலிதான் மையம், அதனை நோக்கித்தான் நடப்பிலுள்ள கூலி விகிதங்கள் ஈர்க்கப்படுகின்றன.

எனவே, உழைப்பு நேரத்தால் அளக்கப்படும் சார்பு மதிப்பு திரு. புரூதோன் விரும்புகிறபடி பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்குரிய ''புரட்சிகரமான தத்துவமாக'' இருப்பதற்கு மாறாகத் தொழிலாளிகளின் இன்றைய அடிமைப்படுத்தப் பட்ட நிலைக்குச் சூத்திரமாகத் தவிர்க்க முடியாதபடி இருக்கிறது.

உழைப்பு நேரத்தை மதிப்புக்கு அளவையாகச் செயல் படுத்துவது இன்றிருந்து வரும் வர்க்கப் பகைமைக்கும், நேரடியான தொழிலாளிக்கும் சேகரிக்கப்பட்ட உழைப்பின் சொந்தக்காரனுக்கும் இடையேயுள்ள விளைபொருளின் சமமற்ற வினியோகத்துக்கும், எந்த அளவுக்குப் பொருத்தமற்றது என்று பார்ப்போம்.

ஏதாவது ஒரு குறிப்பிட்ட விளைபொருளை—எடுத்துக் காட்டாக நெசவுத் துணியை — எடுத்துக் கொள்வோம். விளைபொருள் என்கிற வகையில் இதில் ஒரு திட்டமான உழைப்பு அளவு அடங்கியுள்ளது. இந்த விளைபொருளை உற்பத்தி செய்வதில் கூட்டாக வேலை செய்தவர்களின் பரஸ்பர நிலை என்னவாயிருந்த போதிலும் இந்த உழைப்பு அளவு எப்பொழுதும் அப்படியே இருக்கும்.

நெசவுத் துணிக்குத் தேவைப்பட்ட அதே உழைப்பு அளவு கொண்ட மற்றொரு விளைபொருளை, கம்பளித் துணியை, எடுத்துக் கொள்வோம்.

இவ்விரு விளைபொருட்களும் பரிமாறிக் கொள்ளப்படு

''முதலாளித்துவத் திரட்சியின் பொது விதி'') உழைப்புச் சக்தியின் விலையை அதன் மதிப்புக்குக் கீழாக மேன்மேலும் குறைத்து வருவதற்கு முதலாளித்துவ உற்பத்தியை அனுமதிக்கிற சூழ்நிலைமைகளைப் பகுத்தாய்ந்திடவும் செய்தார். [1885 ஜெர்மன் பதிப்புக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் வரைந்த குறிப்பு.]

மேயாஞல், சமமான உழைப்பு அளவுகள் பரிமாறிக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தச் சமமான உழைப்பு நேரங்கள் பரிமாற்றிக் கொண்டதில், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே நிலவும் உறவுகளில் எப்படி ஒரு மாற்றமும் செய்யவில்லையோ அதே போல் இந்த உற்பத்தியாளர்களின் பரஸ்பர நிலையிலும் மாற்றம் செய்யவில்லை. உழைப்பு நேரத்தால் அளக்கப்பட்ட இந்த விளைபொருட்கள் பரிமாறிக் கொள்ளப்படுவதால் எல்லா உற்பத்தியாளர்களுக்கும் ஊதியத்தில் சமநிலை விளைகிறது என்று சொல்வது, பரிமாற்றத்துக்கு முன்பு விளைபொருளில் பங்கு கொள்வோர்களில் சமநிலை இருந்தது என்று அனுமானிப்பதாகும். நெசவுத் துணிக்குக் கம்பளித் துணியைப் பரிமாறிக் கொள்வது முடிந்த பின் கம்பளித் துணி உற்பத்தியாளர்கள் அதில் முன்பு எந்தத் தகவுப் பொருத்தத்தில் பங்கு பெற்ருர்களோ அதற்குச் சமமான தகவுப்பொருத்தத்தில் நெசவுத் துணியில் பங்கு பெறுவார்கள்.

அதிகப்பட்சமாகப் போஞல் ஒரு தன்னிச்சையான அனுமானமாக இருக்க முடிகிறதை ஒரு பின்விளைவாகத் திரு.புரூதோன் எடுத்துக் கொள்வதிலிருந்து அவரது பிரமை உண்டாகிறது.

மேலே போவோம்.

மதிப்பின் அளவு என்கிற முறையில் உழைப்பு நேரம் குறைந்தபட்சமாகவாவது நாட்கள் சமநிறையுள்ளவை என்றும் ஒரு மனிதனின் நாள் மற்ருெரு மனிதனின் நாளுக்குச் சம மதிப்புள்ளது என்றும் அனுமானிக்கிறதா? கிடையாது.

நகை செய்கிறவனின் நாள் நெசவாளியின் மூன்று நாட்களுடன் சமநிறையுள்ளது என்று ஒரு கணம் வைத்துக் கொள்வோம்; அப்படி இருந்தாலும் இந்த உண்மை இருக்கத்தான் செய்கிறது: அதாவது, நெசவு செய்த பொருட்களின் மதிப்புடன் சார்புபடுத்திய நிலையில் நகைகளின் மதிப்பில் ஏற்படுகிற எந்த மாற்றத்துக்கும் காரணம் (வரத்து கிருக்கிகளின் ஏற்ற இறக்கங்களிஞல் உண்டாகிற தற்காலிக விளைவாக அந்த மாற்றம் இருந்தாலொழிய) அதையோ இதையோ உற்பத்தி செய்வதில் செலவிட்ட உழைப்பு நேரம் குறைந்தோ அதிகரித்தோ இருக்க வேண்டும். வெவ்வேறு தொழிலாளிகளின் மூன்று வேலை நாட்களை 1:2:3 எனும் வீதாச்

சாரத்தில் சம்பந்தப்படுத்தினுல் அவர்களின் விளைபொருட்களின் சார்பு மதிப்பில் ஏற்படுகிற ஒவ்வொரு மாற்றமும் இதே 1:2:3 எனும் விகிதத்தில் ஏற்பட்ட மாற்றமாயிருக்கும். ஆக, வெவ்வேருன வேலை நாட்களின் மதிப்பு சமமற்றதாயிருந்த போதிலும் உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்புகளை அளவிட முடியும்; ஆனுல் இந்த அளவையைச் செயல்படுத்துவதற்கு வெவ்வேருன வேலை நாட்களைப் பற்றி ஒரு ஒப்புநோக்கு அளவுகோல் நமக்கு இருந்தாக வேண்டும்; இந்த அளவுகோலை ஏற்படுத்துவது போட்டியேயாகும்.

உனது ஒரு மணி நேர உழைப்பு எனது ஒரு மணி நேர உழைப்புக்குத் தகுமா? இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது போட்டியேயாகும்.

ஒரு அமெரிக்கப் பொருளாதாரவாதியின் கருத்துப்படி, ஒரு நாளத்தியக் கூட்டு உழைப்பில் எத்தனை நாட்களின் எளிய உழைப்பு அடங்கியுள்ளது என்பதைப் போட்டி நிர்ணயிக்கிறது. கூட்டு உழைப்பின் நாட்களை எளிய உழைப்பின் நாட்களுக்கு மாற்றிக் கணக்கிடுவது இந்த எளிய உழைப்பையே மதிப்புக்கு ஒரு அளவையாக எடுத்துக் கொள்வதாக அனுமானிக்கிறதாகாதா? உழைப்பின் அளவு மட்டும், தரம் எப்படி இருந்த போதிலும், மதிப்பின் அளவையாக வேலை செய்கிறதென்ருல் எளிய உழைப்பு உற்பத்திச் செயற்பாட்டின் அச்சாணியாகி இருக்கிறது என்று முன்னனுமானமாகிறது: மனிதன் இயந்திரத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதின் மூலமும் தீவிரமான உழைப்புப் பிரிவினை மூலமும் உழைப்பு சமமாக்கப்பட்டது என்றும், மனிதர்கள் தமது உழைப்பால் நீக்கப்பட்டுவிட்டார்கள் என்றும், கடிகாரத்தின் முள் இரண்டு இரயில் எஞ்சின்களின் வேகத்துக்கு எத்தனை திட்பநுட்பமான அளவையாக இருக்கிறதோ அதேபோல் அது இரண்டு தொழிலாளிகளின் சார்புநிலைச் செயலுக்கும் திட்பநுட்பமான அளவையாக இருக்கிறது. எனவே, ஒரு நபரின் ஒரு மணி நேரம் மற்ருெரு நபரின் ஒரு மணி நேரத்துக்குத் தகும் என்று நாம் சொல்வதைவிட ஒரு மணி நேரப் பொழுதிலுள்ள ஒரு நபர் ஒரு மணி நேரப் பொழுதிலுள்ள மற்ருெரு நபருக்குத் தக்கவன் என்று சொல்ல வேண்டும். நேரமே எல்லாம்; மனிதன் ஒன்றுமேயில்லை; அதிகப்பட்சமாகப் போனுல் அவன் நேரத்தின் உருவடிவம். தரத்தைப் பற்றி இனிமேல்

அக்கறை இல்லே. அளவு மட்டுமே எல்லாவற்றையும் நிர்ணயிக்கிறது—மணிக்கு மணி, நாளுக்கு நாள் என்று; ஆனுல் இந்த உழைப்பு சமப்படுத்தப்படுதல் திரு. புரூதோனின் நிரந்தர நீதி செய்கிற வேலே அல்ல; அது வெறுமனே நவீன காலத் தொழிலின் ஒரு உண்மையாகும்.

இயந்திரங்களின் உதவியைக் கொண்டு ஒரு தொழிலாளி யின் உழைப்பை மற்ெருரு தொழிலாளியின் உழைப்பினின்று வேறுபடுத்திக் காண்பது அரிது. தொழிலாளிகளேத் தத்தம் வேலேயைச் செய்வதற்கு எடுத்துக் கொள்கிற நேரத்தைக் கொண்டு மட்டுமே ஒருவனே மற்றவனிடமிருந்து வேறு படுத்திக் காண முடியும். இருந்த போதிலும், இந்த அளவு ரீதியான வேற்றுமை ஒரு குறிப்பிட்ட பார்வைநிலேயிலிருந்து பார்க்கிற பொழுது பண்புரீதியான வேறுபாடு ஆகிறது, எவ்வகையில் எனில் அவர்கள் தத்தம் வேலே செய்வதற்கு எடுத்துக் கொள்கிற நேரம் ஓரளவுக்கு உடல், வயது, பால் போன்ற முற்ருன பொருளாயதக் காரணங்களேயும், ஓரள வுக்குப் பொறுமை, பதற்றமின்மை, வருந்தி உழைத்தல் போன்ற முற்றிலும் மறிநிலே வகைப்பட்ட உள்ளப்பாங்கான காரணங்களேயும் சார்ந்திருக்கிறது. சுருங்கச் சொன்னுல், வெவ்வேறு தொழிலாளிகளின் உழைப்பில் தர வேற்றுமை இருக்குமேயானுல் அது அதிகப்பட்சமாகப் போனுல் கடைசி வகையைச் சேர்ந்த தரமேயாகும், அது ஒரு தனித்துக் காட் டும் திறச்சிறப்பு அல்ல. இறுதியாய்விலே நவீன காலத் தொழி லில் இருக்கிற விவகார நிலே இதுதான். இயந்திரங்களுடன் கூடிய உழைப்பிலே ஏற்கெனவே நடைமுறையாக்கப் பட்டுள்ள இந்தச் சமநிலே மீது திரு. புரூதோன் தமது ''சமப் படுத்தல்'' எனும் இழைப்புளியைப் போட்டுத் தேய்க்கிருர், இந்தச் ''சமப்படுத்தலே'' உலகு தழுவிய ரீதியிலே ''எதிர் காலத்தில்'' அவர் நிலேநாட்டப் போகிருராம்!

ரிக்கார்டோவின் தத்துவத்திலிருந்து திரு. புரூதோன் ஊகித்துக் கொள்கிற ''சமநிலேவாதப்'' பின்விளேவுகள் அனேத்தும் ஒரு அடிப்படையான தவற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளன. பண்டங்களில் உருக்கொண்டுள்ள உழைப் பின் அளவால் அளக்கப்படுகிற மதிப்பை ''உழைப்பின் மதிப் பால்'' அளக்கப்படுகிற மதிப்போடு போட்டுக் குளறுபடி செய்கிருர் அவர். மதிப்பை அளப்பதற்கான இவ்விரண்டு

வழிகளும் சமமானவையென்ருல், எந்தவொரு பண்டத்தின் சார்பு மதிப்பும் அந்தப் பண்டத்தில் உருக்கொண்டுள்ள உழைப்பின் அளவால் அளக்கப்படுகிறது என்ருே, அதனுல் வாங்கமுடிகிற உழைப்பின் அளவால் அளக்கப்படுகிறது என்ருே, அதைப் பெற்றுக் கொள்ள முடிகிற உழைப்பின் அளவால் அளக்கப்படுகிறது என்ருே அதே ஆதாரத்துடன் சொல்லிவிட முடியும். ஆனுல் அது அப்படி இல்லை. வேறெந்தப் பண்டத்தின் மதிப்பைப் போலவே உழைப்பின் மதிப்பும் மதிப்பின் அளவையாகப் பயன்பட முடியாது. நாம் இப்பொழுது சொன்னதை இன்னும் நன்ருக விளக்குவதற்குச் சில எடுத்துக்காட்டுகள் போதுமானவை.

ஒரு மியூவி* அளவு கோதுமைக்கு ஒரு நாள் நேர உழைப்புக்குப் பதிலாக இரண்டு நாள் நேர உழைப்பு பிடிக்கிறதென்ருல் அதன் ஆதி மதிப்புக்கு இரட்டிப்பாக அதன் மதிப்பு இருக்கும்; அந்த அளவு கோதுமை உழைப்பின் அளவை இரண்டு மடங்காகச் செயல்படுத்தாது, ஏனெனில் அதில் முன்னைவிட அதிகமான உணவுச்சத்து இராது. இவ்வாறு, அதை உற்பத்தி செய்வதற்குச் செலவழித்த உழைப்பின் அளவால் அளக்கிற பொழுது அந்த தானியத்தின் மதிப்பு இரட்டித்திருக்கும்; ஆனுல் அது வாங்க முடிகிற உழைப்பின் அளவைக் கொண்டு அளக்கிற பொழுதோ அதை வாங்க முடிகிற உழைப்பின் அளவைக் கொண்டு அளக்கிற பொழுதோ அதன் மதிப்பு இரட்டித்திராது. மற்ருெரு புறத்தில், அதே உழைப்பு முன்பு உற்பத்தி செய்த துணிகளைப் போல் இரட்டிப்பாக உற்பத்தி செய்தால் அவற்றின் சார்பு மதிப்பு சரிபாதியாகக் குறைந்துவிடும்; என்றபோதிலும் இந்தத் துணிகளின் இரட்டித்த அளவானது உழைப்பு அளவில் பாதிக்கு மேல் மட்டுமே கொடுக்கக் கூடிய நிலைக்குத் தாழ்த்தப்பட்டுவிடாது, அதே உழைப்பு துணியின் இரட்டித்த அளவைப் பெறவும் முடியாது; ஏனெனில் பாதி துணிகள் முன்போல் தொழிலாளிக்குப் பயன்பட்டுக் கொண்டேயிருக்கும்.

ஆக, உழைப்பின் மதிப்பைக் கொண்டு பண்டங்களின் சார்பு மதிப்பை நிர்ணயிப்பது பொருளாதார உண்மைகளை

---

* — மியூவி — *1,800* லித்தருக்குச் சமமான பழைய பிரெஞ்சு அளவை.—[பதிப்பாசிரியர்.]

மீறுவதாகும். அது ஒரு நச்சு வட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பதாகும், தானே நிர்ணயிக்கப்பட வேண்டிய நிலையிலிருக்கிற ஒரு சார்பு மதிப்பைக் கொண்டு சார்பு மதிப்பை நிர்ணயிப்பதாகும் அது.

ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவைப் படுகிற உழைப்பு நேரத்தைக் கொண்டு அளவிடுவது, உழைப் பின் மதிப்பைக் கொண்டு அளவிடுவது ஆகிய இரண்டு அளவைகளையும் திரு. புரூதோன் போட்டுக் குழப்புகிறார் என்பதில் ஐயமில்லை. அவர் சொல்கிறார்: ''எந்த மனிதனின் உழைப்பும் அது பிரதிநிதித்துவப்படுத்துகிற மதிப்பை வாங்க முடியும்'' என்று. ஆக, அவரது கருத்துப்படி, ஒரு விளை பொருளில் உருக்கொண்டுள்ள ஒரு குறிப்பிட்ட உழைப்பின் அளவு தொழிலாளியின் ஊதியத்துக்கு, அதாவது உழைப் பின் மதிப்புக்கு, சமம். இதே தர்க்கவாதம்தான் அவரை உற் பத்திச் செலவைக் கூலியுடன் போட்டுக் குழப்பச் செய்கிறது.

''கூலி என்றால் என்ன? தானியம் முதலானவற்றின் அடக்க விலை, எல்லாப் பொருட்களின் முழுமையான விலை, அது.'' இன்னும் மேலே போவோம். ''செல்வமாக அமைகிற எல்லா அம்சங்களின் தகவுப்பொருத்த நிலையே கூலியாகும்.'' கூலி என்றால் என்ன? அது உழைப்பின் மதிப்பு.

ஆதாம் ஸ்மித் மதிப்புக்கு அளவையாகச் சில சமயம் பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்பட்ட உழைப்பு நேரத்தையும் சில சமயம் உழைப்பின் மதிப்பை யும் எடுத்துக் கொள்கிறார். ரிக்கார்டோ இவ்விரு வகை அளத்தல்களின் ஒப்பிசைவின்மையைத் தெளிவாகப் புலப் படுத்தி இந்தத் தவற்றை அம்பலப்படுத்துகிறார். இந்தத் தவற்றில் ஆதாம் ஸ்மித்தைவிட திரு. புரூதோன் ஒரு படி மேலே போய் ஆதாம் ஸ்மித் எந்த விஷயங்களை அக்கம்பக்கமாக மட்டும் வைத்தாரோ அவ்விரண்டும் ஒன்றே என்கிறார்.

விளைபொருட்களில் தொழிலாளிகள் பங்கு பெறுவதற் குரிய முறையான தகவுப்பொருத்தத்தைக் கண்டுபிடிப் பதற்காகத்தான், அதாவது உழைப்பின் சார்பு மதிப்பை நிர்ணயிப்பதற்காகத்தான், திரு. புரூதோன் பண்டங்களின் சார்பு மதிப்புக்கு ஒரு அளவையைத் தேடுகிறார். பண்டங் களின் சார்பு மதிப்புக்குரிய அளவையைக் கண்டுபிடிப்பதற்கு

ஒரு குறிப்பிட்ட உழைப்பு அளவுக்குச் சமநிறையாக அது உற்பத்தி செய்த விளைபொருட்களின் மொத்த தொகையைக் கொடுப்பதைவிட சிறப்பானதாக வேறெதுவும் அவர் சிந்தனையில் படவில்லை—இது, சமுதாயம் முழுவதும் தொழிலாளிகளை மட்டும் கொண்டது என்றும் அவர்கள் தமது சொந்த விளைபொருளையே கூலியாகப் பெறுகிறார்கள் என்றும் அனுமானிப்பது போலத்தான். இரண்டாவதாக, வெவ்வேறான தொழிலாளிகளின் வேலை நாட்கள் சமமானவை என்று வைத்துக் கொள்கிறார். சுருங்கச் சொன்னால், தொழிலாளிகளுக்குரிய சம சம்பளத்துக்கு வந்து சேருவதற்கு அவர் பண்டங்களின் சார்பு மதிப்புக்கான அளவையைத் தேடுகிறார், மற்றும் பண்டங்களின் சார்பு மதிப்பைக் கண்டுபிடிப்பதற்காகக் கூலியின் சமநிலையை ஏற்கெனவே நிலைத்துள்ள உண்மையாக எடுத்துக் கொள்கிறார். என்ன வியக்கத்தக்க இயக்கவியல்!

''ஸேயும் அவருக்குப் பின்வந்த பொருளாதாரவாதிகளும் உழைப்பானது தானே மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதாயிருப்பதாலும் மற்ற பண்டங்களைப் போலவே தானும் ஒரு பண்டமாக இருப்பதாலும் அதை மதிப்பிற்கான கோட்பாடாகவும் நிர்ணயிக்கிற காரணமாகவும் நடத்துவது ஒரே நச்சு வட்டத்தில் சுற்றிச் சுற்றி வருவதாகும் என்று கூறியுள்ளனர். அப்படிச் செய்வதிலே இந்தப் பொருளாதாரவாதிகள் மாபெரும் கவனமின்மையைக் காட்டுகிறார்கள் என்று நான் சொல்ல அனுமதிப்பார்கள் என்று நம்புகிறேன். உழைப்புக்கு மதிப்பு இருப்பது தானே ஒரு பண்டம் என்கிற நிலையில் அல்ல, அதில் உள்நிலையாக இருக்கக் கூடியதாக அனுமானிக்கப்படும் மதிப்புகளை நினைவிற்கொண்டுதான் என்று சொல்லப்படுகிறது. உழைப்பின் மதிப்பு ஒரு உவம உருவகமான சொல், விளைவை வைத்துக் காரணத்தை முன்கூட்டி நோக்குவதாகும். மூலதனத்தின் உற்பத்தித் திறன் போன்ற அதே வகையான கட்டுக்கதை அது. உழைப்பு உற்பத்தி செய்கிறது, மூலதனத்துக்கு மதிப்பு உள்ளது.... முழுமையின் சில அம்சங்களை விட்டுவிட்டு உழைப்பின் மதிப்பு குறித்துப் பேசப்படுகிறது.... சுதந்தரத்தைப் போலவே உழைப்பும்... இயல்பாகவே ஒரு உருவத் தெளிவற்ற விஷய

மாகும், ஆனல் அது உருக்கொள்ளும் பொருளைக் கொண்டு குணரீதியாக வரையறுக்கப்படுகிறது, அதாவது விளை பொருள் மூலமாக அது ஒரு யதார்த்தம் ஆகிறது.''

''எனினும் இதைப் பற்றிப் பேசவும் வேண்டுமா? பொருளாதாரவாதி'' (திரு. புரூதோன் என்று வாசிக்கவும்) ''விஷயங்களின் பெயர்களை, vera rerum vocabulaவை* மாற்றுகிற அதே விநாடியில் அவன் தனது திறமையின்மையை உட்கிடையாகக் காட்டிக் கொள்கிருன், பிரச்சினையிலிருந்து தான் விலகிவிட்டதாகப் பறைசாற்றிக் கொள்கிருன்.'' (புரூதோன், தொகுதி 1, பக்கம் 188.)

நாம் பார்த்தோம், உழைப்பின் மதிப்பை விளைபொருட்களின் மதிப்புக்கு ''நிர்ணயிக்கிற காரணமாகத்'' திரு. புரூதோன் ஆக்குகிருர்; எந்த அளவுக்கு என்ருல் அவருக்குக் கூலி (''உழைப்பின் மதிப்புக்கு'' அதிகாரபூர்வமான பெயர் இது) எல்லாப் பொருட்களின் ஒன்றமைந்த விலையாக அமைகிறது: ஆகவேதான் ஸேயின் ஆட்சேபணைகள் அவருக்குத் தொந்தரவு கொடுக்கிறது. ஒரு பண்டம் என்கிற நிலையிலுள்ள உழைப்பில்—அது ஒரு கொடிய யதார்த்தமாகும்—அவர் ஒரு இலக்கணவகைப்பட்ட வாக்கியச் சுருக்கக்குறியீட்டைத் தவிர வேறெதையும் பார்க்கவில்லை. ஆக, பண்டம் என்கிற நிலையிலுள்ள உழைப்பின் மீது நிறுவப்பெற்றுள்ள இன்றையச் சமுதாயம் முழுமையும் இனிமேல் ஒரு கவிஞனுக்குரிய சந்த சுதந்தரத்தின் மீது, ஒரு உவம உருவகச் சொல் மீது நிறுவப்படுகிறது. சமுதாயம் தன்னைப் பீடிக்கும் ''எல்லாக் குறைபாடுகளையும் நீக்கிவிட'' விரும்பினுல் அது கேடாக தொனிக்கிற எல்லா சொற்களையும் நீக்கிவிடட்டும், மொழியை மாற்றி விடட்டும்; அதற்கு அது செய்ய வேண்டியதெல்லாம் அகராதிக்கு ஒரு புதிய பதிப்புக் கோரி அகாதெமிக்கு மனுப் போடுவது ஒன்றுதான். நாம் இப்போது பார்த்தவெல்லாவற்றிற்கும் பிறகு, திரு. புரூதோன் ஒரு அரசியல் பொருளாதாரம் பற்றிய நூலில் சொற்பிறப்பியல் பற்றியும் பிற இலக்கணப் பகுதிகள் பற்றியும் நீண்ட விரிவாய்வுரைகளில் இறங்க வேண்டியிருப்பதைப் புரிந்து கொள்வது சுலபமாகும். இப்

* —பொருட்களின் உண்மையான பெயர்கள்—[பதிப்பாசிரியர்.]

படித்தான் அவர் servare* எனும் சொல்லிலிருந்து servus** எனும் சொல் பெறப்பட்டதைப் பற்றிய பழைமையான சொல்லாக்கத்தைக் குறித்து புலமையுடன் இன்னமும் விவாதித்துக் கொண்டிருக்கிறார். இந்த மொழிநூல் விரிவாய் வுரைகளுக்கு ஓர் ஆழ்ந்த பொருள், ஒரு மறைபொருளான அர்த்தம் உண்டு—அவை திரு. புரூதோனின் வாதத்துக்கு ஒரு முக்கியமான பகுதியாயமைகின்றன.

உழைப்பு*** வாங்கி விற்கப்படுவதால், அதுவும் மற்றப் பண்டங்கள் போல ஒரு பண்டமாகும், அதன் விளைவாக அதற்கும் ஒரு பரிமாற்ற மதிப்பு உண்டு. ஆனால் கோதுமை யின் மதிப்பு, அல்லது ஒரு பண்டம் என்கிற நிலையில் கோதுமை, எப்படி உணவாகப் பயன்படாதோ அதேபோல உழைப்பின் மதிப்பு, அல்லது ஒரு பண்டம் என்கிற நிலையில் உழைப்பு, உற்பத்தி செய்வதில்லை.

உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகமாகவோ குறை வாகவோ இருக்கின்றனவா, உழைப்பின் வரத்து கிருக்கி இன்னின்ன அளவில் இருக்கிறதா என்கிறவற்றைப் பொருத்து உழைப்பின் ''விலை'' அதிகமாகவோ குறை வாகவோ இருக்கிறது.

உழைப்பு ஒரு ''உருவத் தெளிவற்ற விஷயம்'' அல்ல; அது எப்பொழுதும் ஏதாவதொரு குறிப்பிட்ட உழைப்பே தவிர பொதுவான உழைப்பாக வாங்கப் படுவதோ விற்கப்படுவதோ அல்ல. உழைப்பு மட்டும் ஒரு பொருள் மூலமாகக் குணரீதியாக வரையறுக்கப்படுவதில்லை, அந்தப் பொருளும் உழைப்பின் ஒரு குறிப்பிட்ட குணத்தின் மூலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

எந்த அளவுக்கு உழைப்பு வாங்கி விற்கப்படுகிறதோ அந்த அளவுக்கு அது தானே ஒரு பண்டமாக உள்ளது. ஏன்

---

* —காப்பாற்றுதல்.—[பதிப்பாசிரியர்.]

** —அடிமை.—[பதிப்பாசிரியர்.]

*** —ந. ஊத்தினவுக்கு மார்க்ஸ் அன்பளிப்புச் செய்த பிரதியில் ''உழைப்பு'' எனும் சொல்லுக்குப்பின் கூடுதலாக ''உழைப்புச் சக்தி'' என்று சேர்க்கிறார். இந்தக் கூடுதலான சொல் 1896 பிரெஞ்சுப் பதிப்பில் காணப்படுகிறது.—[பதிப் பாசிரியர்.]

அது வாங்கப்படுகிறது? ''அதில் உள்நிலையாக இருக்கக்கூடிய தாக அனுமானிக்கப்படும்மதிப்புகளின்'' காரணத்தால் ஆகும். ஆனால் ஒரு பொருள் பண்டமாக இருக்கிறதாகச் சொன்னால் என்ன காரணத்துக்காக அது வாங்கப்படுகிறது என்பதைப் பற்றி—அதாவது, அதிலிருந்து பெறக்கூடிய பயன்பாடு பற்றி, அதை வைத்துச் செயல்படுத்துவது பற்றி—அப்புறம் பிரச்சினையே இல்லை. வர்த்தகத்துக்குரிய பொருள் என்கிற வகையில் அது ஒரு பண்டம். திரு. புரூதோனின் வாதங்கள் அனைத்தும், உடனடியாக நுகர்வதற்குரிய பொருள் என்கிற வகையில் உழைப்பு வாங்கப்படுவதில்லை என்கிறதோடு நின்றுவிடுகின்றன. இல்லை, அது ஒரு உற்பத்திக் கருவியாக வாங்கப்படுகிறது, ஒரு இயந்திரத்தை வாங்குவது போல. ஒரு பண்டம் என்கிற வகையில், உழைப்புக்கு மதிப்பு உண்டு, ஆனால் இது உற்பத்தி செய்வதில்லை. ஒவ்வொரு பண்டமும் ஏதாவதொரு பயன்பாடுள்ள நோக்கத்திற்காக மட்டுமே வாங்கப்படுகிறது, தன்னளவில் ஒரு பண்டமாய் இருப்பதற்காக எப்பொழுதும் வாங்கப்படுவதில்லை என்கிற காரணத்தால் பண்டம் என்று ஒன்றும் கிடையாது என்று திரு. புரூதோன் சொல்லியிருக்கலாம்.

பண்டங்களின் மதிப்பை உழைப்பைக் கொண்டு அளப்பதிலே, இந்த உழைப்பையும்—உழைப்புக்கும் ஒரு மதிப்பு உண்டு, உழைப்பும் ஒரு பண்டம் என்கிற அளவுக்கு—அந்த அளவைக் கொண்டு நிர்ணயிக்காமல் இருக்க முடியாது என்று திரு. புரூதோன் துல்லியமின்றிப் பார்க்கிறார். இது குறைந்தபட்சக் கூலியை உடனடி உழைப்பின் இயல்பான, சகஜமான விலையாக ஏற்றுக் கொள்வதாகும், இன்றையச் சமுதாய அமைப்பை ஏற்றுக் கொள்வதாகும் என்று அவருக்கு ஒரு ஐயப்பாடு ஏற்படுகிறது. எனவே, இந்த சாவுக் கேடான விளைவிலிருந்து விலகியோடுவதற்காக அவர் திரும்பி நின்று கொண்டு உழைப்பு ஒரு பண்டம் அல்ல, அதற்கு ஒரு மதிப்பு இருக்க முடியாது என்று இடித்துரைக்கிறார். தாமே உழைப்பின் மதிப்பை ஒரு அளவையாக எடுத்துக் கொண்டிருக்கிறதை அவர் மறந்துவிடுகிறார். தமது அமைப்பு முறை முழுவதுமே உழைப்பு ஒரு பண்டம் என்கிற அடிப்படையில் நிறுவப் பெற்றுள்ளது, பேரமாக்கப்பட்டும் வாங்கப்பட்டும் விற்கப்பட்டும் விளைபொருட்கள் முதலியவற்றிற்

காகப் பரிமாற்றம் செய்யப்பட்டும் வருகிற உழைப்பை— உண்மையிலே, தொழிலாளிக்கு நேரடியான வருவாய்த் துறையாக வாய்த்துள்ள உழைப்பை — அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை அவர் மறந்துவிடுகிறுர். எல்லா வற்றையும் அவர் மறந்துவிடுகிறுர்.

தமது அமைப்பு முறையைக் காப்பாற்றிக் கொள்வதற் காக அவர் அதன் அடிப்படையைப் பலியிட ஒப்புக் கொள் கிறுர்.

Et propter vitam vivendi perdere causas!*

இப்போது நாம் ''**உருவமைத்த** மதிப்பின்'' ஒரு புதிய வரையறுப்புக்கு வருகிறேம்.

''மதிப்பு என்பது செல்வமாக அமைந்திருக்கும் விளை பொருட்களின் **தகவுப் பொருத்தமான உறவு** ஆகும்.''

முதன் முதலாக, ''சார்பு அல்லது பரிமாற்ற மதிப்பு'' என்கிற எளிமையான சொற்ருெடர் ஏதாவது ஒரு உறவில் விளைபொருட்கள் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்படுகிற கருத்தை உட்கிடையாகக் கொண்டுள்ளதை நாம் குறிப் போம். இந்த உறவுக்கு ''தகவுப் பொருத்தமான உறவு'' என்று பெயர் சூட்டுவதினுல் சொல்லிலே தவிர மற்றபடி சார்பு மதிப்பில் ஒரு மாற்றமும் செய்யப்படவில்லை. செல்வ மாக அமைந்துள்ள மற்ற விளைபொருட்களோடு ஏதாவ தொரு''தகவுப் பொருத்தமான உறவில்''ஒரு விளைபொருள் இருந்து வருகிற குணத்தை அந்த விளைபொருளின் மதிப்பில் ஏற்படும் வீழ்ச்சியோ எழுச்சியோ அழிக்கிறதில்லை.

பிறகு, புதிய கருத்து எதையும் புகுத்தாத இந்தப் புதிய சொல் எதற்கு?

''தகவுப் பொருத்தமான உறவு'' வேறு பல பொருளா தார உறவுகளை—உற்பத்தியிலே தகவுப் பொருத்தம், வரத்து கிருக்கிகளிடையே உண்மையான தகவுப் பொருத்தம் போன் றவை—சூசகமாகக் குறிக்கிறது, திரு. புருதோன் பரிமாற்ற மதிப்பைக் குறித்து அறிவுறுத்தும் இந்தப் பொழிப்புரையை

* — வாழ்வு வாழ்வதற்காக வாழ்வின் ஆதாரங்களைப் பலியிடுவது. (ஜூவினலஸ், **நையாண்டிக் கவிதைகள்.**)— [பதிப்பாசிரியர்.]

வகுக்கிற போது அவரது சிந்தனையில் இவையெல்லாம் இருக்கின்றன.

முதலாவதாக, விளைபொருட்களின் சார்பு மதிப்பு அவை ஒவ்வொன்றின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட ஒப்பு நோக்கான உழைப்பளவால் நிர்ணயிக்கப்படுவதால், இந்தத் தனி வழக்கில் செயல்படுத்துகிற போது தகவுப் பொருத்தமான உறவுகள் எனப்பட்டவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உற்பத்தி செய்ய முடிகிற—அதன் வழியாக அவை ஒன்றோடொன்று பரிமாற்றம் செய்ய முடிகிற — அந்தந்த விளைபொருட்களின் அளவு வீதங்களைக் குறிக்கிறது.

இந்தத் தகவுப்பொருத்தமான உறவிலிருந்து திரு. புரூதோன் பெறுகிற நற்கூறு என்னவென்று பார்ப்போம்.

வரத்தும் கிராக்கியும் சரிசமமாகச் சமனப்பட்டிருக்கும் போது எந்த ஒரு விளைபொருளின் சார்பு மதிப்பும் அதில் உருக்கொண்டுள்ள உழைப்பளவைக் கொண்டு சரிநுட்பமாக நிர்ணயிக்கப்படுகிறது—அதாவது, இந்தச் சார்பு மதிப்பு தகவுப் பொருத்தமான உறவை நாம் இப்போது கற்பித்த இதே பொருளில் வெளியிடுகிறது. திரு. புரூதோன் விஷயங்களின் ஒழுங்கைத் தலைகீழாக மாற்றுகிறார். அவர் சொல்கிறார், விளைபொருளின் சார்பு மதிப்பை அந்த விளைபொருளில் உருக்கொண்டுள்ள உழைப்பின் அளவைக் கொண்டு அளவிடுவதிலிருந்து தொடங்குங்கள்; அப்போது வரத்தும் கிராக்கியும் பிழைக்கிடமின்றி ஒன்றையொன்று சமனப்படுத்திக் கொள்ளும், என்று. உற்பத்தி நுகர்வுக்குப் பொருத்தமாயிருக்கும், விளைபொருள் எப்போதும் தங்கு தடையின்றிப் பரிமாறிக் கொள்ளக் கூடியதாயிருக்கும். அதன் நிலவரவிலை அதன் உண்மையான மதிப்பைச் சரிநுட்பமாக வெளியிடும். மற்றெல்லோரும் சொல்வதைப் போல வெப்பதட்ப நிலை நேர்த்தியாயிருக்கும் போது பல மக்கள் வெளியே உலாவி வரக் கிளம்புகிறதைப் பார்க்கிறோம் என்று சொல்வதைவிட்டு திரு. புரூதோன் அந்த மக்களுக்கு நேர்த்தியான வெப்பதட்ப நிலையை உறுதிப்படுத்துவதற்காக அவர்களை வெளியே உலாவி வரச் செய்கிறார்.

உழைப்பு நேரத்தால் முன் காரணப் பிரமாணமாக நிர்ணயிக்கப்பட்ட பரிமாற்ற மதிப்பின் பின்விளைவாகத் திரு. புரூதோன் எதைக் கொடுக்கிறாரோ அதைப் பின்வரும் சொற்

களிலே ஏறத்தாழ வகுக்கக் கூடிய ஒரு விதியைக் கொண்டு மட்டுமே நியாயப்படுத்த முடியும்:

இனிமேல் விளைபொருட்கள் அவற்றிற்குச் செலவான உழைப்பு நேரத்தின் சரிநுட்பமான வீதாச்சாரத்தில் பரிமாறிக் கொள்ளப்படும். வரத்து கிருக்கிகளின் தகவு எப்படியிருப்பினும், விளைபொருட்கள் கிருக்கிக்குத் தகவுப் பொருத்தமாக உற்பத்தி செய்யப்பட்டதாக வைத்துக் கொண்டு எப்பொழுதும் பண்ட மாற்று செய்யப்படும். திரு. புரூதோன் இப்படிப்பட்ட ஒரு விதியை வரையறுத்துவைக்கிற பொறுப்பை எடுத்துக் கொள்ளட்டும், அவருக்குச் சான்றுகள் அளிக்கும் அவசியத்திலிருந்து விடுதலை அளிப்போம். அதற்கு மாறாக, அவர் தமது தத்துவத்தை—சட்டமியற்றுபவராக அல்ல, பொருளாதாரவாதியாக—நியாயப்படுத்த விரும்பினால், ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்பட்ட நேரம் அந்தப் பண்டத்தின் பயன்பாட்டின் அளவைச் சரிநுட்பமாகக் காட்டுகிறது என்பதையும் கிருக்கியோடு அதற்கிருக்கிற தகவுப் பொருத்தமான உறவையும் மற்றும் அதன் வழியாகச் செல்வத்தின் மொத்தத் தொகையுடன் அதற்கிருக்கிற தகவுப் பொருத்தமான உறவையும் குறிக்கிறது என்பதையும் அவர் நிரூபித்துத் தீர வேண்டும். இந்த வழக்கிலே, ஒரு விளைபொருள் அதன் உற்பத்திச் செலவுக்குச் சமமான ஒரு விலைக்கு விற்கப்படுமேயானால் வரத்தும் கிருக்கியும் எப்போதும் சரிசமமாகச் சமனப்படுத்தப்பட்டிருக்கும்; ஏனெனில் உற்பத்திச் செலவு வரத்து கிருக்கிகளின் உண்மையான உறவை வெளியிடுவதாக அனுமானிக்கப்படுகிறது.

உண்மையிலே திரு. புரூதோன் நிரூபிக்கப் புறப்படுவது, ஒரு விளைபொருளை உற்பத்தி செய்வதற்கு அவசியப்படும் உழைப்பு நேரம் தேவைகளோடு அதற்குள்ள தகவுப் பொருத்தமான உறவைக் குறிக்கிறது, ஆகவே எந்தப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குக் குறைந்தபட்சமான நேரம் செலவாகிறதோ அவை அதிகப்பட்சமான உடனடிப் பயனுள்ளவை என்றவாறு படிப்படியாகப் போகும், என்று. இந்தத் தத்துவத்தின்படி, ஒரு சொகுசுப் பொருளை உற்பத்தி செய்தாலே போதும், அதிலிருந்து சொகுசுக்கான தேவையை நிறைவுபடுத்துவதற்கு இடங்கொடுக்க சமுதாயத்திடம் கூடுதலான நேரம் இருக்கிறது என்று நிரூபிக்கிறது.

அதிகப்பட்சமான பயனுள்ள பொருட்களை உற்பத்தி செய்யக் குறைந்தபட்சமான நேரம் செலவாகிறது, சமுதாயம் எப்போதும் மிகச் சுளுவான தொழில்களிலிருந்து தொடங்குகிறது, பிறகு ஒன்றன்பின் ஒன்ருக ''அதிக நேரம் செலவாகிற, மேலும் உயர்தரமான தேவைகளுக்குப் பொருத்தமான பொருட்களை உற்பத்தி செய்வதில் இறங்குகிறது'' என்கிற ஆய்வுக்கூற்றில் திரு. புரூதோன் தமது ஆய்வுரைக்கான அசல் சான்று கண்டுபிடிக்கிருர்.

திரு. புரூதோன் திரு. துனுவயேயிடமிருந்து இயற்கையினின்று நேராக எடுத்துக் கொள்கிற தொழிலின்—பழம் பறித்தல், ஆடுமாடு மேய்த்தல், வேட்டையாடல், மீன்பிடித்தல் முதலானவை — உதாரணத்தை இரவல் வாங்குகிருர், அது தொழில்களில் மிகமிக எளியது, குறைந்தபட்சச் செலவுள்ளது, அதைக் கொண்டு மனிதன் ''தனது இரண்டாவது படைப்பின் முதல் நாளை'' தொடங்கினுன். தனது முதற் படைப்பின் முதல் நாள் பைபிளில் பதிவு செய்யப்பட்டுள்ளது, அது கடவுளை உலகத்தின் முதன்முதலான உற்பத்தியாளனுக நமக்குக் காட்டுகிறது.

திரு. புரூதோன் கற்பனை செய்வதற்கு முற்றிலும் வேறுபட்ட வழியிலே விஷயங்கள் நடக்கின்றன. நாகரிகம் தொடங்கிய அதே கணத்திலே,உற்பத்தியானது பணிநிலைகள், பகுதிப்பிரிவுகள், வர்க்கங்கள் ஆகியவற்றின் பகைமை மீதும், இறுதியாக திரட்டப்பட்ட உழைப்பு அசல் உழைப்பு ஆகியவற்றின் பகைமை மீதும் நிறுவப்படத் தொடங்குகிறது. பகைமை இல்லையேல் முன்னேற்றம் இல்லை. இந்த விதியைத்தான் இன்றைய நாள் வரைக்கும் நாகரிகம் பின்பற்றி வந்திருக்கிறது. இதுவரை உற்பத்திச் சக்திகள் இந்த வர்க்கப் பகைமைகளின் அமைப்புமுறையின் காரணமாக வளர்ந்து வந்துள்ளன. எல்லா உழைப்பாளர்களின் எல்லாத் தேவைகளும் நிறைவு செய்யப்பட்டதால் மேலும் உயர்தரமான வகையைச் சேர்ந்த விளைபொருட்களைப் படைப்பதில் — மேலும் சிக்கலான தொழில்களில் — ஈடுபட முடிந்தது என்று இப்போது சொல்வது வர்க்கப் பகைமையைக் கணக்கில் எடுக்காமல் விலக்கி வைத்து வரலாற்று வளர்ச்சி அனைத்தையும் தலைகீழாகப் புரட்டுவதாகும். ரோமானியப் பேரரசர்களின்கீழ் செயற்கை மீன் வளர்ப்புக் குளங்களில் முரேனு

எனும் மீன்கள் கொழுக்க வைக்கப்பட்டன, எனவே ரோமானிய மக்கட்தொகை முழுவதற்கும் நிறைய உணவளிப்பதற்குப் போதியதிருந்தது என்று சொல்வது போலாகும் இது. யதார்த்தத்திலே, அதற்கு மாருக, ரோமானிய மக்கள் ரொட்டி வாங்கப் போதிய வக்கு இன்றி இருந்தார்கள், ரோமானிய பிரபுக்களோ இந்த முரேஞ மீனுக்குத் தீனியாக எறிவதற்குப் போதிய அடிமைகளை வைத்திருந்தார்கள்.

உணவின் விலை அநேகமாக இடையருது ஏறிக் கொண்டே வந்திருக்கிறது, ஆனுல் தொழில் துறை உற்பத்திப் பொருட்களின் விலையும் சொகுசுப் பண்டங்களின் விலையும் அநேகமாக இடைவிடாது வீழ்ந்து கொண்டே வருகின்றன. வேளாண்மைத் தொழிலையே எடுத்துக் கொள்ளுங்கள்: தானியம், இறைச்சி முதலான மிகவும் இன்றியமையாத பொருட்களின் விலை ஏறுகிறது, ஆனுல் பருத்தி, சர்க்கரை, காப்பி முதலானவை வியப்பூட்டும் தகவில் வீழ்கின்றன. தின்பண்டவகைகளிலும்கூட ஆர்டிச்சோக், ஆஸ்பராகஸ் போன்றவை இன்று அத்தியாவசியமான உணவுப் பொருட்களைவிட சார்புநிலையில் மலிவாயுள்ளன. நம் காலத்தில், தேவையானதைவிட தேவையற்றதை உற்பத்தி செய்வது சுலபம். இறுதியாக, வெவ்வேறு வரலாற்றுச் சகாப்தங்களில், பரஸ்பரமான விலை உறவுகள் வெவ்வேருக உள்ளது மட்டுமல்ல, ஒன்றுக்கொன்று எதிராகவும் உள்ளது. மத்திய காலம் முழுவதிலும், தொழில்துறை விளைபொருட்களைவிட விவசாய விளைபொருட்கள் சார்புநிலையிலே மலிவாயிருந்தன; நவீன காலத்தில் அவை எதிர்மாருன வீதாச்சாரத்தில் உள்ளன. இதற்குப் பொருள் மத்திய காலத்திற்குப்பின் விவசாயப் பொருட்களின் பயன்பாடு குறைந்துவிட்டது என்பதா?

நுகர்பவர்கள் தாங்கள் எந்தச் சமுதாய நிலைமைகளில் இருக்கக் காண்கிருர்களோ அந்தச் சமுதாய நிலைமைகள்தாம் விளைபொருட்களின் பயன்பாட்டை நிர்ணயிக்கின்றன, மற்றும் இந்தச் சமுதாய நிலைமைகளே வர்க்கப் பகைமையை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

பருத்தி, உருளைக்கிழங்கு, சாராய பானங்கள் மிகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பொருட்களாகும். உருளைக் கிழங்கு கண்டமாலையைத் தோற்றுவித்தது; பருத்தி பெருமளவுக்குச் சணலையும் கம்பளியையும் ஓட்டிவிட்டது—

உடல்நல இயல் பார்வையிலிருந்து மட்டும் பார்த்தாலும் பல வழக்குகளில் கம்பளியும் சணலும் உடலுக்கு மிகவும் நல்லவை என்ற போதிலுங்கூட. கடைசியாக, பீர், ஒயின் பானங்களை மிஞ்சி சாராய பானங்கள் மேலோங்கிவிட்டன—உணவுச் சத்தாகப் பயன்படுத்தப்படும் சாராய பானங்கள் விஷம் என்று உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டிருந்துங்கூட. ஒரு நூற்றுண்டு முழுவதாக ஐரோப்பிய அபினை எதிர்த்து அரசாங்கங்கள் போராடியது வீணுயிற்று; பொருளாதாரம் வென்றது, அதன் ஆணைகளின்படி நுகர்வு நடந்தது.

பருத்தியும், உருளைக்கிழங்கும், சாராய பானங்களும் முதலாளித்துவ சமுதாயத்தின் அச்சாணிகளாக இருப்பதேன்? ஏனெனில் அவற்றை உற்பத்தி செய்வதற்கு மிகக் குறை வான உழைப்பளவு தேவைப்படுகிறது, ஆகவே அவற்றின் விலையும் மிகக் குறைவானது. குறைந்தபட்ச விலை அதிகபட்ச மான நுகர்வை நிர்ணயிப்பது ஏன்? இந்தப் பொருட்களின் முற்றுன பயன்பாடோ, அவற்றின் உள்ளார்ந்த பயன் பாடோ, ஒரு தொழிலாளி என்கிற முறையிலே மனிதனின் தேவைகளுக்கு என்றில்லாமல் மனிதன் என்கிற முறையிலே தொழிலாளியின் தேவைகளுக்கு மிகப் பயன்பாடுள்ள வகை யிலே அவை பொருந்தி வருகிற அளவுக்கு அவற்றிற்குள்ள பயன்பாடோ காரணமாயிருக்குமா? கிடையாது, வறுமையை அடிப்படையாக வைத்து நிறுவப் பெற்ற ஒரு சமுதாயத் தில் மிகப் பெரும் தொகையினர் பயன்படுத்துகிற சாவுக் குரிய தனிமுதலுரிமை மிக மலிவான விளைபொருட்களுக்கு வாய்த்திருப்பதே காரணமாகும்.

விலை மிகக் குறைவாயுள்ள பொருட்கள் மிக அதிகமாகப் பயன்படுவதால் அவற்றின் பயன்பாடு மிகவும் அதிகமாக இருந்து தீர வேண்டும் என்று இப்போது சொல்வது, குறைந்த உற்பத்திச் செலவின் காரணமாகச் சாராய பானங்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுவது அவற்றின் பயன்பாட்டுக்கு மிக நிர்ணயமான சான்ருகும் என்று சொல்வதாகும்; அது பாட்டாளியிடம் இறைச்சியைவிட உருளைக்கிழங்கு உடல் நலத்துக்கு மேலானது என்று கூறுவதாகும்; அது இன்றைய விவகார நிலைமையை ஒப்புக் கொள்வதாகும்; சுருங்கச் சொன்னுல், ஒரு சமுதாயத்தைப் புரிந்து கொள்ளாமலே

அதற்கு—திரு. புரூதோனுடன் சேர்ந்து கொண்டு—பரிந்து பேசுவதாகும் அது.

வர்க்கப் பகைமை அகன்றுவிட்ட, இனிமேல் வர்க்கங்கள் எதுவுமே இல்லாத ஓர் எதிர்காலச் சமுதாயத்தில் உற்பத்திக்குரிய குறைந்தபட்ச நேரத்தைக் கொண்டு பயன்பாடு நிர்ணயிக்கப்படாது; வெவ்வேறு பொருட்களின் சமுதாயப் பயன்பாட்டின் அளவுதான் அவற்றை உற்பத்தி செய்வதற்காகச் செலவழிக்க வேண்டிய நேரத்தை நிர்ணயிக்கும்.

திரு. புரூதோனின் ஆய்வுரைக்குத் திரும்புவோம்; ஒரு பொருளின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரம் அந்தப் பொருளின் பயன்பாட்டின் அளவைக் குறிப்பது அல்ல என்றானவுடனே அந்தப் பொருளின் பரிமாற்ற மதிப்பு—அதில் உருக்கொண்டுள்ள உழைப்பு நேரத்தால் இது முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்டுவிட்டது — வரத்து கிருக்கிகளின் உண்மையான உறவை—அதாவது, திரு. புரூதோன் கற்பிக்கிற பொருளில் தகவுப் பொருத்தமான உறவை—ஒழுங்குமுறைப்படுத்த அடியோடு சக்தியற்றுவிடுகிறது.

கிருக்கிக்கும் வரத்துக்குமுள்ள ''தகவுப் பொருத்தமான உறவை'' நிர்ணயிப்பது, அல்லது உற்பத்தியின் மொத்த தொகையில் இவ்விளைபொருளுக்குள்ள விகிதத்தை நிர்ணயிப்பது, அதன் உற்பத்திச் செலவுக்குரிய விலையில் நிகழ்கிற அந்த விளைபொருளின் விற்பனையல்ல; வரத்து கிருக்கிகளிலுள்ள மாறுபாடுகள்தான் உற்பத்தியாளனுக்குக் குறைந்தபட்சம் உற்பத்திச் செலவையாவது மாற்றாகப் பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட பண்டத்தை எந்த அளவில் உற்பத்தி செய்து தீர வேண்டும் என்று காட்டுகின்றன. மேலும், இந்த இடைமாறுபாடுகள் தொடர்ந்து நடப்பதால் வெவ்வேறு தொழிற்கிளைகளில் மூலதனத்தைத் திருப்பிக் கொள்வதும் ஈடுபடுத்துவதுமான ஒரு தொடர்ந்த இயக்கமும் இருக்கிறது.

''இப்படிப்பட்ட இடைமாறுபாடுகளின் பின்விளைவாகத்தான் கிருக்கியாக இருக்க நேரிடுகிற வெவ்வேறு பண்டங்களின் உற்பத்திக்குத் தேவையான நிறைவுடனும் அதற்கு மேல் போகாமலும் சரி விகிதத்தில் மூலதனம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. விலையின் எழுச்சி அல்லது வீழ்ச்சியுடன் இலாபங்கள் தமது பொது மட்டத்துக்கு மேலாக உயர்கின்றன

அல்லது கீழாகக் குறைகின்றன, அதன் விளைவாக மாறுபாட்டின் தன்மைக்கேற்ப மூலதனம் குறிப்பிட்ட தொழிலில் புகுமாறு உற்சாகப்படுத்தப்படுகிறது அல்லது வெளியேறுமாறு எச்சரிக்கப்படுகிறது.''—''ஒரு பெரிய நகரில் சந்தைகளைப் பார்த்து, நிறைவுக்கும் அதிகமாகவே வரத்து ஆவதால் மீதப்பட்டுத் தேங்குகிற பாதிப்புகள் அடிக்கடி நிகழாமலும் அல்லது கிருக்கிக்குச் சமமான வரத்து இல்லாமையால் அகாதமான அலையேற்றம் அடிக்கடி நிகழாமலும் விருப்பச் சபலங்கள் மற்றும் மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழும் கிருக்கியிலுள்ள மாறுபாடுகளின் எல்லாச் சூழ்நிலைமைகளின் கீழும் உள்நாட்டுப் பண்டங்களும் வெளிநாட்டுப் பண்டங்களும் எவ்வளவு ஒழுங்குமுறையாக அந்தச் சந்தைகளில் வரத்தாவதைக் கவனிக்கிறபொழுது, ஒவ்வொரு தொழிற்கிளைக்கும் மூலதனத்தைத் தேவையான சரிநுட்பமான தொகையில் ஒதுக்கீடு செய்கிற கோட்பாடு பொதுவாக அனுமானிக்கப்படுவதைவிட மேலாகச் செயல்படுகிறது என்று நாம் ஒப்புக் கொண்டு தீர வேண்டும்.'' *(ரிக்கார்டோ, தொகுதி 1, பக்கங்கள் 105ம் 108ம்.)*

விளைபொருட்களின் மதிப்பை உழைப்பு நேரம் நிர்ணயிக்கிறதென்று திரு. புரூதோன் ஒப்புக் கொண்டால், தனிநபர் வகைப்பட்ட பரிமாற்றங்கள் மீது நிறுவப்பட்ட சமுதாயத்தில் ஏற்றயிறக்கமான இயக்கம் ஒன்றுதான் உழைப்பை மதிப்பின் அளவையாகச் செய்கிறது என்பதையும் ஒப்புக் கொண்டு தீர வேண்டும். தயார் நிலையில் உருவமைக்கப்பட்ட ''தகவுப் பொருத்தமான உறவு'' ஏதுமில்லை, உருவமைக்கிற இயக்கம் ஒன்றுதான் உள்ளது.

''தகவுப் பொருத்தம்'' உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பின் ஒரு பின்விளைவு என்று எந்தப் பொருளில் பேசுவது சரி என்று இப்போது பார்த்தோம். இனி, திரு. புரூதோன் ''தகவுப் பொருத்தத்தின் விதி'' என்று அழைக்கும் நேரத்தைக் கொண்டு அளவிடுவது எப்படி தகவுப் பொருத்தக் கேட்டின் விதியாக உரு மாறுகிறது என்று பார்ப்போம்.

இரண்டு மணி நேரத்தில் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டு வந்த ஒன்றை ஒரு மணி நேரத்தில் உற்பத்தி செய்ய ஆற்றலளிக்கும் ஒவ்வொரு புதுப்புனைவும் சந்தையில் அது

போன்ற எல்லாப் பொருட்களின் மதிப்பையும் குறைக்கிறது. ஒரு மணி நேரத்து விளைபொருளைப் போல் அதே மலிவுடன் இரண்டு மணி நேரத்து விளைபொருளையும் விற்கும்படி உற்பத்தியாளனைப் போட்டி கட்டாயப்படுத்துகிறது. ஒரு விளைபொருளின் சார்பு மதிப்பை அந்த விளைபொருளை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பு நேரம் நிர்ணயிக்கிறது என்கிற விதியைப் போட்டி நடைமுறைக்குக் கொண்டு வருகிறது. பரிமாற்ற மதிப்பின் அளவையாகப் பயன்படுகிற உழைப்பு நேரம் இவ்வழியே உழைப்பை இடையருது **மதிப்பிழக்கச் செய்யும்** விதியாக ஆகிறது. அதற்கு மேலாகவும் சொல்வோம். சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட பண்டங்கள் மட்டுமல்ல, உற்பத்திக் கருவிகளும் முழுமை முழுமையாகத் தொழில் நிலையங்களும் கூட மதிப்பிழக்கும். இந்த உண்மையை ரிக்கார்டோ ஏற்கெனவே சுட்டிக்காட்டிச் சொன்னதாவது: ''உற்பத்தி வசதியை நாம் இடையருது அதிகப்படுத்துவதின் மூலமாக முன்பு உற்பத்தி செய்யப்பட்ட சில பண்டங்களின் மதிப்பை நாம் இடையருது குறைக்கிறோம்.'' (தொகுதி 2, பக்கம் 59.) ஸிஸ்மொந்தீ இதற்கும் மேலே போகிறார். நவீன காலத்திய தொழில், வர்த்தகத் துறைகளின் எல்லா முரண்பாடுகளுக்கும் தோற்றுவாயை இந்த வேலை நேரத்தால் ''உருவமைக்கப்பட்ட மதிப்பிலே'' காண்கிறார். அவர் சொல்வதாவது: ''மதிப்பீடு செய்யப்பட்ட பொருளைப் பெறுவதற்குரிய உழைப்பின் அளவைக் கொண்டுதான் தொலைவுப் போக்கிலே எப்போதும் வர்த்தக மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது; அது அதற்கான அசல் செலவு அல்ல, அதற்கு எதிர்காலத்தில், ஒருவேளை நிறைநேர்த்தியான சாதனங்கள் மூலம், ஆகக் கூடிய செலவு அது; இந்த அளவு மதிப்பீடு செய்வது கஷ்டமென்றாலும் அதைப் போட்டி எப்போதும் உண்மையாக நிலைநாட்டுகிறது.... இந்த அடிப்படையிலேதான் விற்கிறவனின் கிருக்கியும் வாங்குகிறவனின் வரத்தும் கணக்கிடப்படுகிறது. விற்கிறவன் ஒருவேளை சொல்லக் கூடும் அந்தப் பொருளுக்குப் பத்து நாள் உழைப்பு பிடித்தது என்று; ஆனால் அதை இனிமேல் எட்டு மணி நேர உழைப்பைக் கொண்டு உற்பத்தி செய்ய முடியும் என்று வாங்குகிறவன் உணர்ந்தால், இதைப் போட்டி இவ்விரு தரப்பினருக்கும் நிரூபிக்க நேர்ந்தால், மதிப்பு குறைக்கப்

படும், சந்தை விலை எட்டு மணி நேர உழைப்பாக நிர்ணயிக் கப்படும். இந்தப் பொருள் பயனுடையது, விரும்பப்படுவது, விருப்பமின்றேல் விற்பனை இராது என்று ஒவ்வொரு தரப்பி பினரும் நம்புகிறது உண்மைதான்; ஆனால் விலை நிர்ணயத் துக்கும் பயன்பாட்டுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை.'' (கட்டுரைகள், முதலியன, தொகுதி 2, பக்கம் 267, புரு ஸெல்ஸ் பதிப்பு.)

மதிப்பை நிர்ணயிப்பது ஒரு பொருளை உற்பத்தி செய் வதற்கு எடுத்துக் கொண்ட நேரம் அல்ல, அதை உற்பத்தி செய்ய முடிவதற்குச் சாத்தியமான குறைந்தபட்ச நேரந் தான், இந்தக் குறைந்தபட்சத்தைப் போட்டி கண்டுபிடித்துக் கொள்கிறது எனும் அம்சத்தை வலியுறுத்துவது முக்கிய மாகும். இனிமுதல் போட்டியே இல்லை, ஆக ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கான குறைந்தபட்ச உழைப்பைக் கண்டுபிடிப்பதற்கு இனிமேல் ஒரு சாதனமும் இல்லை என்று ஒரு கணம் வைத்துக்கொள்வோம், அப்புறம் என்ன நடக்கும்? ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு ஆறு மணி நேர வேலை செலவழித்தால் போதும், அதே பொருளை உற்பத்தி செய்ய ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டவனைப் போல் ஆறு மடங்காகப் பரிமாறிக் கொள்ளக் கேட்பதற்கு, திரு. புரூதோன் கருத்துப்படி, உரிமை பெறுகிறான்.

''தகவுப் பொருத்தமான உறவுக்குப்'' பதிலாக ஒரு தகவுப் பொருத்தக் கேடான உறவு கிடைக்கிறது—அதாவது, உறவுகள் நல்லவையோ கெட்டவையோ, அவற்றை வைத்துக் கொண்டாக வேண்டும் என்று வற்புறுத்தினல்.

உழைப்பு நேரத்தைக் கொண்டு பண்டங்களை மதிப்பீடு செய்வதின் ஒரு பக்கந்தான், ஒரு பின்விளைவுதான், உழைப் பின் தொடர்ந்த மதிப்பிறக்கம். மிதமிஞ்சிய விலையேற்றங் கள், மிதமிஞ்சிய உற்பத்தி, மற்றும் தொழில்துறை அராஜகத்தின் பிற பல முனைப்புக் கூறுகளுக்குரிய விளக்கம் இந்த மதிப்பீடு முறையில் உள்ளன.

ஆனால் மதிப்பின் அளவையாகப் பயன்படுத்தப்படும் உழைப்பு நேரம், திரு. புரூதோனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சி யளிக்கிற விளைபொருள்களின் தகவுப் பொருத்தமான பல் வகைத் தன்மையையாவது உண்டாக்குகிறதா?

அதற்கு மாறாக, அதன் வழியைப் பின்தொடர்ந்து சலுப்

பூட்டுகிறதாயுள்ள ஏகபோகம் வந்து விளைபொருட்களின் உலகத்தின் மீது படையெடுக்கிறது—எல்லோரும் அறிந்திருக்கும் முறையில், ஏகபோகம் உற்பத்திக் கருவிகளின் உலகத்தின் மீது படையெடுக்கிறது போல. பருத்தித் தொழில் போன்ற ஒரு சில தொழிற்கிளைகளிலேதான் வெகு விரைவான முன்னேற்றம் செய்ய முடியும். இந்த முன்னேற்றத்தின் இயல்பான பின்விளைவாகப் பருத்தித் தொழிலின் விளைபொருட்களின் (எடுத்துக்காட்டாகச் சொல்கிறோம்) விலை விரைவாக வீழ்கிறது; ஆனால் பருத்தி விலை சரியச் சரியச் சணல் விலை ஒப்புநோக்கில் ஏறித் தீர வேண்டும். முடிவு எப்படியாகும்? சணலுக்குப் பதிலாகப் பருத்தி வந்து சேரும். இவ்வழியே அநேகமாக முற்றாக வட அமெரிக்காவிலிருந்து சணல் விரட்டியடிக்கப்பட்டுள்ளது. விளைபொருட்களின் தகவுப் பொருத்தமான பல்வகைத் தன்மைக்குப் பதிலாகப் பருத்தியின் ஆதிக்கம் நமக்குக் கிட்டியுள்ளது.

இந்த ''தகவுப் பொருத்தமான உறவில்'' மிச்சமிருப்பது என்ன? பண்டங்களை ஒரு நேர்மையான விலைக்கு விற்க அனுமதிக்கிறவாறுள்ள விகிதங்களிலே அவை உற்பத்தி செய்யப்படுவதை விரும்புகிற ஒரு நேர்மையுள்ளம் கொண்ட மனிதனின் ஆத்மார்த்திக விருப்பத்தைத் தவிர வேறொன்றுமில்லை. எல்லாச் சகாப்தங்களிலும் நல்லியல்புள்ள, பூர்ஷ்வாப் பார்வையுள்ள தயாளகுணமுள்ள பொருளாதாரவாதிகள் இந்த வெகுளித் தனமான விருப்பத்தை வெளியிடுவதில் மகிழ்ச்சி கண்டுள்ளனர்.

முதியவர் **புவாகில்பேர்** சொல்வதைக் கேட்போம்:

''பண்டங்களின் விலை எப்பொழுதும் **தகவுப் பொருத்தமாக** இருந்து தீர வேண்டும்; ஏனெனில் இப்படிப்பட்ட பரஸ்பரமான உடன்பாடு ஒன்றுதான் அவை **எந்த விநாடியிலேனும் ஒன்றுக்கொன்று கொடுத்துக் கொள்ளக் கூடியதாயும்''** (இங்கே திரு. புரூதோனின் தொடர்ந்த பரிமாற்றத் தன்மையைப் பார்க்கலாம்) ''பரஸ்பரமாக ஒன்றையொன்று பிறப்பித்துக் கொள்ளக் கூடியதாயும் இருந்து வரச் செய்ய முடியும்.... ஆக, செல்வம் என்பது மனிதனோடு மனிதன், தொழிலோடு தொழில்(என்றவாறு)வைத்துள்ள இந்தத் தொடர்ந்த பரஸ்பர உறவு தவிர வேறில்லையாதலால், விலைகளின் தகவுப் பொருத்தத்தின் கலக்கத்தால் உண்டாக்கப்படுகிற

இப்படிப்பட்ட வாணிபம் நின்றுவிடுவதிலே வறுமைக்குரிய காரணத்தைப் பாராமல் வேறெங்கோ பார்ப்பது பயங்கர மான கண்மூடித்தனமாகும்.'' (**செல்வங்களின் தோற்றுவாய் பற்றிய கருத்துக்கள்,** தேயர் பதிப்பு.[29])

ஒரு நவீனகாலப் பொருளாதாரவாதி சொல்வதையும் கேட்போம்:

''உற்பத்திக்கு அவசியகரமானதாக வைக்கப்படவேண் டிய மகத்தான விதி, அதாவது தகவுப் பொருத்த விதி, அது ஒன்றுதான் மதிப்பின் இடையறுத் தன்மையைக் காத்து வர முடியும்.... சம மதிப்புத்தன்மை உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.... எல்லா நாடுகளும் தமது வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் இங்கே விளக்கியிருக்கும் குறிக்கோளை ஓரளவுக்காயினும் செயலாக்குவதற்காக எண்ணிறைந்த வர்த்தக ஒழுங்கு முறைகளையும் கட்டுத்தளைகளையும் விதித்து முயன்றிருக்கின்றன.... ஆனால் மனிதனின் இயல்பான உள்ளார்ந்த தன்னலம் இப்படிப்பட்ட கட்டுத்தளைகளை உடைத்தெறியத் தூண்டியுள்ளது. தகவுப் பொருத்தமான உற்பத்தியானது சமுதாயப் பொருளாதார விஞ்ஞானத்தின் முழுமையான உண்மையின் செயல்பாடாகும்.'' (*வி.* **ஆட்கின்ஸன், அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடுகள்,** *லண்டன் 1840, பக்கங்கள் 170-195[30].)*

Fuit Troja!* பல விருப்பங்களுக்கு மீண்டும் ஒரு விஷய மாக இருக்கத் தொடங்கியிருக்கும் இந்த வரத்து கிருக்கி களுக்கிடையிலான சரியான தகவுப் பொருத்தம் வெகு காலத்துக்கு முன்பே மறைந்து போனதாகும். அது கிழடு தட்டிய கட்டத்தை எட்டிவிட்டது. உற்பத்திச் சாதனங்கள் குறைவாக இருந்த ஒரு காலத்திலேதான், மிகவும் கட்டுப் படுத்தப்பட்ட வரம்புகளுக்குள் பரிமாற்றத்தின் இயக்கம் நடந்த காலத்திலேதான், அது சாத்தியமாயிருந்தது. பெரு மளவான தொழில்துறை தோன்றியதையொட்டி இந்தச் சரியான தகவுப் பொருத்தம் முடிவுக்கு வர வேண்டிய தாயிற்று, மற்றும் உற்பத்தியானது தொடராக ஒன்றன்பின் னொன்றாகச் செழுமை, வீழ்ச்சி, நெருக்கடி, தேக்கம், புதுப் பிக்கப்பட்ட செழுமை என்றவாறு கஷ்டதசைகளைக் கடந்து

---

* —ட்ராய் ஒழிந்தது!—[பதிப்பாசிரியர்.]

வர வேண்டியதாய் தவிர்க்க முடியாதபடி கட்டாயப் படுத்தப்படுகிறது.

சமுதாயத்தின் இன்றைய அடிப்படையைக் காத்து நிறுத் தியவாறே உண்மையான தகவுப் பொருத்தத்துக்குத் திரும்பிச் செல்ல விரும்புகிற ஸிஸ்மொந்தீ போன்றவர்கள் பிற்போக் கானவர்கள், ஏனெனில், முன்பின் முரணற்றிருக்க வேண்டு மாயின், அவர்கள் முந்தையக் காலத்துத் தொழிலின் மற்றெல்லா நிலைமைகளையுங்கூட திரும்பக் கொண்டுவர விரும்பித் தீர வேண்டும்.

உற்பத்தியை சரியான, அல்லது ஏறத்தாழச் சரியான, பொருத்தங்களில் வைத்திருந்தது எது? கிருக்கிதான் வரத்து மீது ஆதிக்கம் செலுத்தியது, முதலில் வந்தது, நுகர்வின் அடியொற்றி உற்பத்தி நடந்தது. பெருமளவான தொழில் துறையிடம் உள்ள கருவிகளால் மேன்மேலும் அதிகரித்த அளவிலே உற்பத்தி செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டு இனி மேல் கிருக்கிக்காகக் காத்திருக்க முடியாது, நுகர்வுக்கு முன்னே உற்பத்தி செல்கிறது, வரத்து கிருக்கியைக் கட்டாயப்படுத்துகிறது.

இன்றிருக்கும் சமுதாயத்தில், தனிநபர் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்துறையில், எவ்வளவோ துன்பத்துக்குத் தோற்றுவாயாகிய உற்பத்தியின் அராஜகம் அதே நேரத்தில் எல்லா முன்னேற்றத்துக்கும் தோற்றுவா யாகவும் இருக்கிறது.

ஆக, இரண்டில் ஒன்று:

தற்கால உற்பத்திச் சாதனங்களை வைத்துக் கொண்டு கடந்த நூற்றாண்டுகளின் சரியான தகவுப் பொருத்தங்களை நீங்கள் விரும்புகிறீர்கள், அப்படியானால் நீங்கள் ஒருங்கே பிற்போக்குவாதியும் கற்பனாவாதியும் ஆகிறீர்கள்.

அல்லது, அராஜகம் அற்ற முன்னேற்றத்தை விரும்பு கிறீர்கள்: அப்படியானால், உற்பத்திச் சக்திகளைக் காத்துப் பேணுவதற்காக நீங்கள் தனிநபர் பரிமாற்றத்தைக் கைவிட வேண்டும்.

சென்ற நூற்றாண்டுகளின் சிற்றளவுத் தொழில் துறைக் கும் அதன் தொடர்முடிபான ''சரியான தகவுப் பொருத்தத் துக்கும்'' அல்லது துன்பத்தையும் அராஜகத்தையும் தன்னுடன்

பின்தொடர்ந்து வரக்கூடிய பெருமளவுத் தொழில் துறைக்கும் மட்டுமே தனிநபர் பரிமாற்றம் பொருந்தும்.

ஆக மொத்தத்தில், உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்பை நிர்ணயிப்பது—எதிர்காலத்தின் மறுபிறப்புக்குரிய சூத்திரமாகத் திரு. புரூதோன் வழங்குகிற சூத்திரம் இது—தற்கால சமுதாயத்தின் பொருளாதார உறவுகளின் விஞ்ஞான ரீதியான வெளியீடு மட்டுமேயாகும், திரு. புரூதோனுக்கு வெகு காலத்துக்கு முன்பே இதை ரிக்கார்டோ தெளிவாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்திவிட்டார்.

ஆனல், இந்தச் சூத்திரத்தின் ''சமநிலைவாதச்'' செயல்பாடாவது திரு. புரூதோனுக்குச் சொந்தமாகுமா? சமமான உழைப்பளவுகளைப் பரிமாறிக் கொள்கிற அசல் உழைப்பாளர்களாக எல்லா மனிதர்களையும் மாற்றிவிடுவதின் மூலமாகச் சமுதாயத்தைச் சீர்திருத்த நினைத்ததில் அவர் முதல்வரா? ''பாட்டாளி வர்க்கத்தின் பிரச்சினைக்கான இந்தத் தீர்வைத்'' தனக்கு முன்பே கண்டுபிடிக்காததைப் பற்றி கம்யூனிஸ்டுகளை—அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய அறிவு எதுவும் இல்லாதவர்களை, ''பிடிவாதமான முட்டாள்களாகிய'' இவர்களை, ''சொர்க்கத்தைப் பற்றிக் கனவு காண்கிற'' இவர்களை—குறை கூறுவது அவருக்கு உண்மையிலே பொருந்துமா?

இங்கிலாந்தில் அரசியல் பொருளாதார வளர்ச்சியை ஏதாவதொரு வகையில் அறிந்து வைத்திருப்பவர்கள் இந்த நாட்டிலுள்ள அநேகமாக எல்லா சோஷலிஸ்டுகளும் வெவ்வேறு காலப் பகுதிகளில் ரிக்கார்டோ தத்துவத்தின் சமநிலைவாதச் செயல்பாட்டை முன்மொழிந்துள்ளதை அறியாதிருக்க முடியாது. திரு. புரூதோனுக்கு நாம் குறிப்பிட்டுக் காட்ட முடியும்: ஹாட்ஸ்கின் எழுதிய **அரசியல் பொருளாதாரம்,** *1827*[31]; வில்லியம் தாம்ப்ஸன் எழுதிய **மனித இன்பத்துக்கு மிகப் பொருத்தமான செல்வ வினியோகத்திற்குரிய கோட்பாடுகளைப் பற்றிய ஒரு விசாரணை,** *1824;* டி. ஆர். எட்மண்ட்ஸ் எழுதிய **நடைமுறைப் பாங்கான, நீதிநெறி வகைப்பட்ட, அரசியல் பொருளாதாரம்,** *1828*[32] என்ற வாறு; இப்படியே மேலும் நான்கு பக்கங்களில் நூல்களைக் காட்டலாம். திரு. பிரே எனும் ஒரு ஆங்கிலேயக் **கம்யூனிஸ்ட்** சொல்வதைக் கேட்பதோடு திருப்திப்படுவோம். அவரது

தொழிலாளர் படும் அநீதிகளும் தொழிலாளர் தரும் பரிகாரமும், லீட்ஸ் *1839*[33], எனும் குறிப்பிடத்தக்க நூலின் முக்கியமான பகுதிகளைக் கொடுத்து அதைச் சிறிது நேரம் கவனிப்போம்; காரணம், முதலாவதாக, திரு. பிரேயை பிரான்ஸில் அதிகமாகத் தெரியாது, இரண்டாவதாக, திரு. புரூதோனின் சென்ற கால, நிகழ் கால, எதிர் கால நூல்களுக்கான திறவுகோலை அவரிடம் கண்டுபிடித்துள்ள தாக நான் கருதுகிறேன்.

''உண்மையை அடைவதற்கு ஒரே வழி எடுத்த எடுப்பிலேயே முதற் கோட்பாடுகளுக்குப் போவதுதான்.... அரசாங்கங்கள் உதித்திருப்பதற்கான தோற்றுவாய்க்கே உடனடியாகச் சென்றுவிடுவோம்.... இவ்வாறு விஷயத்தின் ஆதிமூலத்துக்கே செல்வதினால், ஒவ்வொரு ஆட்சிக்கான வடிவமும் ஒவ்வொரு சமுதாயக் கேடும் அரசியல் கேடும் இன்றிருந்து வரும் சமுதாய அமைப்புமுறையிலிருந்து—இன்றிருக்கிற சொத்தின் அமைப்பிலிருந்து—உதித்ததே என்று கண்டு கொள்வோம், ஆகவே நமது கேடுகளையும் துன்பங்களையும் உடனடியாகவும் நிரந்தரமாகவும் முடிவுக்குக் கொண்டுவர நாம் விரும்பினால் இன்றையச் சமுதாயத்தின் ஏற்பாடுகளை முற்றுகக் கவிழ்த்தாக வேண்டும் என்றும் கண்டு கொள்வோம்.... இவ்வாறு பொருளாதாரவாதிகளை எதிர்த்து அவர்களின் நிலைக் களத்திலேயே அவர்களுடைய ஆயுதங்களைக் கொண்டே போராடுவதால், 'அதிகாரத்திலிருப்பவர்களால்' சரியானது என்று கூறப்படும் தேய்ந்த பாதையிலிருந்து விலகி ஒரு அடி எடுத்து வைக்கத் துணிகிறவர்களையெல்லாம் 'கற்பனையாளர்கள்' என்றும் 'தத்துவம் பேசுகிறவர்கள்' என்றும் தாக்குவதற்கு அவை எவ்வளவோ தயாராயுள்ளனவே, அந்த அர்த்தமற்ற பிதற்றலை நாம் தவிர்ப்போம். இப்படிப்பட்ட வழிப் போக்கிலே கிடைக்கப்பெற்ற முடிவுகள் தூக்கியெறியப்பட முடிவதற்குமுன் பொருளாதாரவாதிகள் தமது சொந்த வாதங்களுக்கே அடிப்படையாக உள்ள நிலையான உண்மைகளையும் கோட்பாடுகளையும் வாபஸ்பெறவோமறுத்து நிரூபிக்கவோ வேண்டும்.'' (பிரே, பக்கங்கள் 17ம் 41ம்.)

''உழைப்பு ஒன்றுதான் மதிப்பை உண்டாக்குகிறது.... ஒவ்வொரு மனிதனுக்கும் தனது நேர்மையான உழைப்பால் கிடைக்க முடிகிற அனைத்தையும் பெற ஐயமற்ற உரிமையுண்டு.

அவ்வாறு அவன் தனது உழைப்பின் பலனை எடுத்துக் கொள்கிற போது வேறெந்த மனிதனுக்கும் அநீதி இழைப்பதில்லை; ஏனெனில் மற்ற மனிதன் தனது உழைப்பின் விளைவை எடுத்துக் கொள்ளும் உரிமையில் அவன் குறுக்கிடவில்லை.... உயர்ந்தவன் தாழ்ந்தவன்—எஜமானன் வேலைக்காரன்—எனும் கருத்துக்கள் அனைத்தும் முதற் கோட்பாடுகளைப் புறக்கணிப்பதிலிருந்தும், அதன் பின்விளைவாக உதிக்கும் சொத்து உடைமைகளின் சமமற்ற நிலையிலிருந்தும் வருகிறதைப் பார்க்கலாம்; மேலும், இந்த சமமற்ற நிலையை வைத்திருக்கிற வரை இந்தக் கருத்துக்கள் என்றைக்கும் ஒழிக்கப்பட மாட்டா, அவற்றின் அடிப்படையில் நிறுவப் பெற்ற அமைப்புகளும் கவிழ்க்கப்பட மாட்டா. இன்றிருக்கும் சமமற்ற நிலையை ஒழித்து, அந்த சமமற்ற நிலைக்கான காரணத்தைத் தொடாமலே விட்டு வைப்பதின் மூலமாக... இன்றைய இயற்கைக்கு விரோதமான நிலவரங்களைத் திருத்தலாம் என்று இது வரை கண்மூடித்தனமாக மனிதர்கள் நம்பி வந்திருக்கின்றனர்; கேடான ஆட்சி ஒரு காரணமல்ல, அது ஒரு பின்விளைவுதான்—அது படைப்பாளி அல்ல, அதுவே படைக்கப் பெற்றது — அது சொத்து உடைமைகளின் சமமற்ற நிலை பெற்றெடுத்த பிள்ளையாகும் என்பதையும் சொத்து உடைமைகளின் சமமற்ற நிலை நமது தற்காலச் சமுதாய அமைப்புமுறையோடு பிரிக்கவொண்ணாதபடி பிணைக்கப்பட்டிருக்கிறது என்பதையும்... விரைவில் பார்க்கப் போகிறோம்.'' (பிரே, பக்கங்கள் 33ம் 36ம் 37ம்.)

''சமத்துவமுள்ள அமைப்பு முறையின் பக்கம் மகத்தான நற்கூறுகள் மட்டுமின்றிக் கண்டிப்பான நீதியும் உள்ளன.... பலன்களின் சங்கிலியிலே ஒவ்வொரு மனிதனும் ஒரு கண்ணியாக, இன்றியமையாத கண்ணியாக இருக்கிறான்—அந்தச் சங்கிலியின் தொடக்கம் ஒரு கருத்து மட்டுமே, அதன் முடிவு ஒரு வேளை ஒரு துணியின் உற்பத்தியாக இருக்கலாம். ஆக, பல்வேறு தரப்பினர்பால் நாம் வெவ்வேறு உணர்ச்சிகளை வைத்திருந்த போதிலும் அதனால் அவனவனுடைய உழைப்புக்கு ஒருவனைவிட மற்றவனுக்கு மேலாகக் கொடுக்க வேண்டும் என்று ஆகிவிடாது. புனைவாளனுக்கு நியாயமான பணப் பரிசு கொடுப்பதோடு கூடுதலாக ஒரு மேதை

மட்டுமே நம்மிடமிருந்து பெற முடிகிற பாராட்டும் எப்போதும் பெறுவான்....

''உழைப்பு, பரிமாற்றம் ஆகியவற்றின் இயல்பிலிருந்து, எல்லாப் பரிமாற்றக்காரர்களும் பரஸ்பரமாக மட்டுமின்றி சமமாகவும் பயனடைய வேண்டியது கறாரான நீதிக்குத் தேவையாகும். மனிதர்களிடம் இரண்டே பொருட்கள்தாம்—அதாவது உழைப்பும் உழைப்பின் விளைவும்—ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள முடிகிறதாக இருக்கின்றன.... ஒரு நியாயமான பரிமாற்ற அமைப்புமுறை செயல்படுத்தப்பட்டால் எல்லாப் பொருட்களின் மதிப்பும் மொத்த உற்பத்திச் செலவால் நிர்ணயிக்கப்படும்; மேலும் சம மதிப்புகள் எப்போதும் சம மதிப்புகளோடு மாற்றிக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, தொப்பி செய்கிறவனுக்கு தொப்பி செய்ய ஒரு நாள் பிடிக்கிறதாயும் செருப்பு தைக்கிறவனுக்கு ஒரு ஜதை செருப்பு செய்ய அதே நேரம் பிடிக்கிறதாயும் வைத்துக் கொண்டு—இருவரும் பயன்படுத்தும் பொருட்கள் சம மதிப்புள்ளவையாக அனுமானித்துக் கொள்வோம்—அவர்கள் இருவரும் இந்தப் பொருட்களைத் தமக்குள் பரிமாறிக் கொள்வார்களேயானல் அவர்கள் பரஸ்பரமாக மட்டுமின்றி சமமாகவும் பயனடைகிறார்கள்: ஒவ்வொருவனும் ஒரே அளவான உழைப்பு கொடுத்திருப்பதாலும் ஒவ்வொருவனும் பயன்படுத்திய பொருட்களும் சம மதிப்புள்ளவையாக இருப்பதாலும் ஒருவன் பெற்ற நற்கூறு மற்றவனுக்குத் தீக்கூறாக இருக்க முடியாது. ஆனல் தொப்பி செய்கிறவன் ஒரு தொப்பிக்கு மாற்ருக இரண்டு ஜதை செருப்பு பெறுவானேயானல்—நேரமும் பொருட்களின் மதிப்பும் முன்போலவே இருக்கிற நிலையில்—அந்தப் பரிமாற்றம் அநியாயமானது என்பது தெளிவு. தொப்பி செய்கிறவன் செருப்பு தைக்கிறவனின் ஒரு நாள் உழைப்பைத் திருடுவான்; அவன் அப்படியே தன்னுடைய எல்லாப் பரிமாற்றங்களிலும் நடந்து கொண்டால் அவன் தன்னுடைய அரை வருட உழைப்புக்கு வேறொருவனுடைய முழு வருட விளைபொருளைப் பெறுவான். நாம் இன்றுவரை இந்த மிகவும் அநியாயமான பரிமாற்ற அமைப்பு முறையின்படியல்லாமல் வேறெந்த அமைப்பு முறையின்படியும் நடந்து கொள்ளவில்லை — தொழிலாளிகள் முழு வருடத்திய உழைப்பை முதலாளிக்குக்

கொடுத்து அதற்கு மாற்ருக அரை வருட மதிப்பு மட்டுமே பெறுகிருர்கள்—இன்று நம்மைச் சூழ்ந்தபடி இருக்கும் செல்வ, அதிகார சமமற்ற நிலை இதிலிருந்துதான் உதித்ததே தவிர தனிநபர்களின் உடல், சிந்தனை ஆற்றல்களில் இருப்பதாக நினைத்துக் கொள்கிற சமமற்ற நிலையிலிருந்து அல்ல. பரிமாற்றத்தின் சமமற்ற நிலைக்கு—ஒரு விலைக்கு வாங்கி இன்னெரு விலைக்கு விற்பது—உரிய தவிர்க்க முடியாத நிபந்தனை முதலாளிகள் தொடர்ந்து முதலாளிகளாகவும் தொழிலாளிகள் தொடர்ந்து தொழிலாளிகளாகவும்—ஒன்று கொடுங்கோலர்களின் வர்க்கமாகவும் மற்றென்று அடிமைகளின் வர்க்கமாகவும் — நிரந்தரமாக இருப்பதுதான்.... ஆகவே முதலாளிகளும் உடைமையாளர்களும் தொழிலாளியின் ஒரு வார உழைப்புக்கு அவனிடமிருந்து அதற்கு முந்தைய வாரத்தில் பெற்ற செல்வத்தின் ஒரு பகுதியைக் கொடுப்பது தவிர வேறென்றும் செய்வதில்லை என்று இந்தப் பேரம் தெளிவாகப் புலப்படுத்துகிறது! — பெறுவது ஒன்று, கொடுப்பது **பூஜ்யம்** என்ருகிறது இது.... ஆகவே உற்பத்தியாளனுக்கும் முதலாளிக்கும் இடையேயுள்ள இந்தப் பேரம் ஒரு வெளிப்படையான மோசடியாகும், வெறும் கேலிக்கூத்து ஆகும்: உண்மையிலே, பல்லாயிரக் கணக்கான வழக்குகளில், அது சட்டத்தால் அங்கீகரிக்கப் பட்டிருப்பினும் பச்சையான **கொள்ளையே** தவிர வேறில்லை.'' (பிரே, பக்கங்கள் 45ம் 48ம் 49ம் 50ம்.)

''முதலாளிக்கு ஆதாயமாயிருப்பது என்றைக்கும் தொழிலாளிக்கு நஷ்டமாயில்லாமல் இராது—இருதரப்பினரிடையே பரிமாற்றங்கள் சமமாகிறவரை; மற்றும் சமுதாயம் முதலாளிகளாகவும் உற்பத்தியாளர்களாகவும் — பின் சொல்லப்பட்டவர்கள் தங்கள் உழைப்பைக் கொண்டு வாழ்கிறவர்கள், முன்சொல்லப்பட்டவர்கள் அந்த உழைப்பின் இலாபத்திலே கொழுத்துக் கொண்டிருப்பவர்கள் என்று—பிரிக்கப்பட்டிருக்கிற போது பரிமாற்றங்கள் என்றைக்கும் சமமாக இருக்க முடியாது.

''நாம் எவ்வகை வடிவங்கொண்ட ஆட்சி அமைப்பை நிறுவினுலும் சரி... அறநெறி, சகோதர பாசம் பற்றிப் பேசினுலும் சரி... சமமற்ற பரிமாற்றங்கள் இருக்கிற இடத்தில்

பரஸ்பர நிலை இருக்க முடியாது என்பது தெளிவு'' என்று தொடர்கிறார் திரு. பிரே. ''உடைமைகளில் சமமற்ற நிலைக்குக் காரணமாக இருக்கிற பரிமாற்றங்களின் சமமற்ற நிலை நம்மை விழுங்கிக் கொண்டிருக்கிற மறைவான பகைவனாகும்.'' *(பிரே, பக்கங்கள் 51ம் 52ம்.)*

''மேலும், சமுதாயத்தின் பணிகளையும் இலட்சியங்களையும் கவனத்தில் கொண்ட நிலையில், எல்லா மனிதர்களும் உழைக்க வேண்டும், அதன் வழியாக பரிமாற்றக்காரர்களாக வேண்டும் என்பதோடல்லாமல் சம மதிப்புகள் எப்போதும் சம மதிப்புகளோடு பரிமாற்றமாக வேண்டுமென்றும்— மேலும் ஒருவனுக்கு ஆதாயமாக இருப்பது வேறொருவனுக்கு நஷ்டமாக எப்போதும் இருக்கக் கூடாது ஆகையால் எப்போதும் உற்பத்திச் செலவைக் கொண்டே மதிப்பு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும்—முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சமுதாயத்தின் இன்றைய அமைப்பின் கீழ்... முதலாளியின், பணக்காரனின் ஆதாயம் தொழிலாளிக்கு எப்போதும் நஷ்டமாயிருக்கிறது என்றும்—பரிமாற்றங்களின் சமமற்ற நிலை இருக்கிற வரை, எந்த வகைப்பட்ட ஒவ்வொரு ஆட்சி அமைப்பின் கீழாயினும் சரி, இந்த விளைவு தவிர்க்க முடியாதபடி நிகழ்ந்து தீரும், ஏழை எப்போதும் பணக்காரனின் தயவிலே முற்றாக விடப்படுவான் என்றும்—உழைப்பு எல்லோருக்கும் கட்டாயமானதாய் அமைந்த சமுதாய அமைப்பில் மட்டுமே பரிமாற்றங்களின் சமநிலைக்கு உத்தரவாதம் செய்ய முடியும் என்றும் நாம் பார்த்தோம்.... பரிமாற்றங்கள் சமமாக இருக்குமேயானால் இன்றைய முதலாளிகளின் செல்வம் படிப்படியாக உழைப்பாளி மக்களின் கைக்கு வந்துவிடும்.'' *(பிரே, பக்கங்கள் 53-55.)*

''சமமற்ற பரிமாற்றங்களின் அமைப்புமுறையைச் சகித்துக் கொண்டிருக்கும் வரை, ஒவ்வொரு அரசாங்கச் சுமையையும் துடைத்தெறிந்தாலுங்கூட, எல்லா வரிகளையும் ஒழித்து விட்டபோதிலுங்கூட, உற்பத்தியாளர்கள் இன்று எவ்வளவு ஏழைகளாகவும் அறிவற்றவர்களாகவும் கடின உழைப்புக்குட்படுத்தப்பட்டவர்களாகவும் இருக்கிறார்களோ அநேகமாக அதே அளவுக்கு இருந்து வருவார்கள்... அமைப்பு முறையின் முழுமாற்றம் ஒன்றுதான்—உழைப்பின், பரிமாற்றங்களின் சமநிலைதான்—உரிமைகளின் இந்த நிலையை மாற்ற

முடியும்.... உற்பத்தியாளர்கள் முயற்சி எடுத்துக் கொண் டால் போதும்—தங்களுடைய விமோசனத்துக்கு அவர்களே தான் ஒவ்வொரு முயற்சியும் எடுத்துக் கொண்டு தீர வேண் டும்—அவர்களுடைய விலங்குகள் நிரந்தரமாக ஒடிந்து வீழ்ந்து போகும்.... அங்கே அரசியல் சமநிலையானது குறிக் கோள் என்கிற வகையிலும் தவறு, சாதனம் என்கிற வகையி லும் தவறு ஆகும்.

''சமமான பரிமாற்றங்கள் எங்கே நிலைநிறுத்தப்பட்டுள் ளனவோ அங்கே ஒரு மனிதனுடைய ஆதாயம் மற்றொரு மனிதனுடைய நஷ்டமாக இருக்க முடியாது; ஏனெனில் அப் போது ஒவ்வொரு பரிமாற்றமும் வெறுமனே உழைப்பின், செல்வத்தின் ஒரு கைமாற்று ஆக இருக்கிறதே தவிர இழப் பாக இல்லை. ஆகவே, சமமான பரிமாற்றங்களின் அடிப் படையிலேயுள்ள ஒரு சமுதாய அமைப்பு முறையின் கீழ் சிக்கனமாக வாழும் ஒரு நபர் பணக்காரனாகக் கூடும் என்றபோ திலும் அவனுடைய செல்வம் அவனது சொந்த உழைப்பு சேகரித்த விளைவே தவிர வேறில்லை. அவன் தனது செல் வத்தைப் பரிமாறிக் கொள்ளலாம் அல்லது மற்றவர்களுக்குக் கொடுத்துவிடலாம்... ஆனால் ஒரு பணக்காரன் உழைப் பதை விட்டு விட்டபின் அவன் பணக்காரனாகவே வெகு காலத்துக்கு நீடித்திருக்க முடியாது. இன்றைக்குச் செல்வத் துக்கு நுகர்வால் வீணாகிப் போகிறதனைத்தையும் மீண்டும் இட்டு நிரப்பிக் கொள்கிற மாதிரி, குட்டிபோட்டுத் தன்னைத் தானே பெருக்கிக் கொள்கிறதாகத் தோன்றுகிற சக்தியானது பரிமாற்றங்களின் சமநிலையின்கீழ் இருக்க முடியாது; ஏனெனில், உழைப்பால் புதுப்பித்துக் கொள்ளாமற் போனால் செல்வமானது நுகரப்பட்டவுடன் என்றைக்கும் போனது போனதுதான். இன்று இலாபம் என்றும் வட்டி என்றும் அழைக்கப்படுபவை அதே வகையில் பரிமாற்றங்களின் சமநிலை சம்பந்தமாக இருக்க முடியாது; காரணம், உற்பத்தியாள னும் வினியோகிப்பவனும் ஒருங்கே ஊதியம் அளிக்கப் பெறு கின்றனர், மற்றும், படைக்கப் பெற்று நுகர்பவனிடம் கொண்டுதரப்படுகிற பொருளின் மதிப்பை அவர்கள் உழைப் பின் மொத்த தொகை நிர்ணயிக்கும்....

''ஆகவே, சம பரிமாற்றங்கள் பற்றிய கோட்பாடு தன் இயல்பிலிருந்தே உழைப்பு எல்லோருடையாதாவதை உறுதிப்

படுத்தியாக வேண்டும்'' *(பிரே, பக்கங்கள் 67, 88, 89, 94, 109—110.)*

பொருளாதாரவாதிகள் கம்யூனிஸத்துக்கு எழுப்பும் ஆட்சேபணைகளை மறுத்து வாதித்தபின் பிரே மேலும் கூறுவதாவது:

''ஆக, மிக உன்னதமான வடிவத்தில் கூட்டுச் சொத்து அடிப்படையாயுள்ள சமுதாய அமைப்பு முறை வெற்றி பெறுவதற்கு ஒரு மாற்றப்பட்ட மனிதப் பண்பு முக்கியமாகுமென்றால்—அதேபோல், தேவையான பண்பு மாற்றம் உருவாவதற்கும் விரும்பப்படும் மேலான நிலைக்கு மனிதனைத் தயார்படுத்துவதற்கும் உரிய சூழ்நிலைமைகளையும் வசதிகளையும் இன்றைய அமைப்பு முறை அளிக்கவில்லையென்றால்—நடப்பில் இருப்பவை இன்றிருக்கிறபடியே இருந்து தீர வேண்டியது அவசியம் என்பது தெளிவு,... அல்லது ஏதாவது ஒரு தயாரிப்புப் படி—இன்றைய அமைப்பு முறையிலிருந்து ஒரு பகுதியும் விரும்பப்படும் அமைப்பு முறையிலிருந்து'' (பொதுச்சொத்துடைமையை அடிப்படையாகக்கொண்டுள்ள அமைப்பு முறை) ''ஒரு பகுதியும் கலந்த வகையில் உள்ளடங்கும் ஏதாவதொரு இயக்கம்—ஏதாவதொரு இடைநிலைத் தங்குமிடம் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட வேண்டும், இதை நோக்கிச் சமுதாயம் தனது குறைபாடுகள், மடமைகள் அனைத்தையும் சுமந்து கொண்டு போகலாம், மற்றும் இதிலிருந்து கூட்டுச் சொத்து அமைப்பு முறைக்கும் சமநிலைக்கும் இன்றியமையாத பண்புகளும் நலங்களும் ஊட்டப் பெற்றதாய் அது முன்னேறிச் செல்லலாம்.'' *(பிரே, பக்கம் 134.)*

''இந்த நிகழ் முறை முழுவதற்கும் தேவைப்படுவது மிக எளிய வடிவில் அமைந்த கூட்டுறவு ஒன்றுதான்.... ஒவ்வொரு வழக்கிலும் உற்பத்திச் செலவு மதிப்பை நிர்ணயிக்கும்; மேலும் சம மதிப்புகள் எப்போதும் சம மதிப்புகளுக்கே பரிமாறிக் கொள்ளும். ஒருவன் ஒரு வாரம் முழுக்கவும் மற்றொருவன் வாரத்தில் பாதி மட்டுமே உழைத்தார்களேயானால் முந்தியவன் பிந்தியவனைப் போல் இரண்டு மடங்கு ஊதியம் பெறுவான்; ஆனால் இந்தக் கூடுதலான ஊதியம் பிந்தியவனிடமிருந்து கழித்துக் கொடுக்கப்பட்டதல்ல, மற்றும் பிந்தியவனுடைய நஷ்டம் எவ்வகையிலும் முந்தியவன் மீது விழாது.

ஒவ்வொரு நபரும் தனித் தனியாகப் பெற்ற கூலியைத் தத்தம் கூலிக்குச் சம மதிப்புள்ள பண்டங்களுக்குப் பரிமாறிக் கொள்வான்; மேலும், ஒரு மனிதனுடைய அல்லது ஒரு தொழிலின் ஆதாயம் மற்றெரு மனிதனுக்கோ மற்றெரு தொழிலுக்கோ நஷ்டமாக என்றைக்கும் இருக்க முடியாது. ஒவ்வொரு நபரின் ஆதாயங்களேயோ நஷ்டங்களேயோ அவனது உழைப்பு மட்டுமே நிர்ணயிக்கும்....

''...பொதுவான தொழில் வாரியங்கள் உள்ளூர் தொழில் வாரியங்கள் ஆகியவற்றைக் கொண்டு... நுகர்வுக்குத் தேவைப்படுகிற பல்வேறு பண்டங்களின் அளவுகளும்—ஒன்றேடொன்று சம்பந்தப்பட்ட நிலேயில் ஒவ்வொன்றின் சார்புமதிப்பும்—பல்வேறு தொழில்களுக்கும் உழைப்பின் ரகங்களுக்கும் தேவையான ஆட்களும்—மற்றும் உற்பத்தியுடனும் வினியோகத்துடனும் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களும், இன்றைய அமைப்பு முறையின்கீழ் ஒரு தனிப்பட்ட நிறுவனத்துக்கு எப்படியோ அதே சுளுவுடன் ஒரு நாட்டுக்கும் குறுகிய காலத்திலே நிர்ணயிக்கப்பட முடியும்.... இன்றுள்ள அமைப்பு முறையின் கீழ் தனிநபர்கள் குடும்பங்களாகவும் குடும்பங்கள் நகரங்களாகவும் அமைந்திருப்பது போலவே கூட்டுச் சொத்து மாற்றம் செய்யப்பட்டபின் அமைந்திருக்கும். இன்றைய நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலான மக்கள் தொகையின் வினியோகம் மோசமாக இருந்த போதிலும் அதில் நேரடியான தலேயீடு இராது.... இன்றுள்ள அமைப்பு முறையின் கீழ் இருப்பது போலவே, இந்தக் கூட்டுச் சொத்து அமைப்பு முறையின் கீழும் ஒவ்வொரு நபரும் தன் விருப்பப்படி எவ்வளவு வேண்டுமானுலும் சேகரித்துக் கொள்ளவும் தனக்குச் சரி என்ற முறையில் எப்பொழுதாயினும் எங்கேயாயினும் அந்தச் சேகரிப்புகளே அனுபவித்துக் கொள்ளவும் சுதந்தரம் பெற்றிருப்பான்.... சமூகத்தின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரும் பகுதி... எண்ணற்ற சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு எல்லோரும் மிக உன்னதமான சமநிலே அடிப்படையில் உழைத்துக் கொண்டும் உற்பத்தி செய்து கொண்டும் தமது பொருட்களேப் பரிமாறிக் கொண்டும் இருப்பார்கள்.... மற்றும் இந்தக் கூட்டுச் சொத்து வடிவ மாற்றமானது (இது கம்யூனிஸத்தைப் பெறுவதற்காக இன்றையச் சமுதாயத்துக்கு

அளித்த இணக்கமே தவிர வேறில்லை) **உற்பத்திச் சக்திகளில் பொதுவுடைமையுள்ளதோடு** சம்பந்தப்பட்டதாய் உற்பத்திப் பொருட்களில் **தனிவுடைமையை** அனுமதிக்கிற வகையில் அமைக்கப்படுவதின் காரணமாக—ஒவ்வொரு தனிநபரும் தனது சொந்த முயற்சிகளையே நம்பியிருக்குமாறு செய்தும் அதே நேரத்தில் இயற்கையும் இயற்கலைகளும் வழங்கும் ஒவ்வொரு மேல்நலத்திலும் சமமாகப் பங்கெடுத்துக்கொள்ள அனுமதித்தும்—சமுதாயத்தை உள்ளபடியே எடுத்துக் கொள்ளவும் வேறு மேலான மாற்றங்களுக்குப் பாதை தயாரித்துக் கொடுக்கவும் தகுதி பெற்றிருக்கிறது.'' (பிரே, பக்கங்கள் 158, 160, 162, 168, 194, 199.)

திரு. பிரே நாம் இல்லாமலே நம்மையும் மீறியே சமாளித்து திரு. புரூதோனின் இடத்தைப் பிடித்துக்கொண்டு விட்டார்—ஒரு விஷயத்தில் தவிர; அதாவது, மனிதகுலத்தின் சார்பாகத் தமது வார்த்தையே இறுதி வார்த்தை என்று அவர் பாத்தியதை கொண்டாடிக் கொள்ளாமல் இன்றையச் சமுதாயத்துக்கும் ஒரு கூட்டுச் சொத்து ஆட்சிக்கும் இடைப்பட்ட மாற்றக் காலத்துக்குத் தாம் நல்லதென்று கருதுகிற நடவடிக்கைகளை மட்டும் முன் மொழிந்து அளிக்கிறார். இனி நாம் சில வார்த்தைகளில் திரு. பிரே அவர்களுக்குப் பதில் அளித்தால் போதும்.

பீட்டர் என்கிறவரின் ஒரு மணி வேலை நேரம் பால் என்கிறவரின் ஒரு மணி வேலை நேரத்துக்குப் பரிமாற்றமாகிறது. இது திரு. பிரேயின் அடிப்படையான மூதுண்மையாகும்.

பீட்டர் பன்னிரண்டு மணிநேரம் வேலை செய்கிறவராகவும் பால் ஆறு மணி நேரம் வேலை செய்கிறவராகவும் வைத்துக் கொள்வோம். பீட்டர் பாலிடம் ஆறு மணி நேரத்துக்கு ஆறு மணி நேரத்தைத்தான் பரிமாறிக் கொள்ள முடியும். ஆகவே பீட்டரிடம் ஆறு மணி நேரம் மிச்சமாக இருக்கும். இந்த ஆறு மணி வேலை நேரத்தை அவர் என்ன செய்வார்?

ஒன்று, அவர் சும்மா இருந்து விடலாம்—அவ்விதமானால் ஆறு மணி வேலை நேரம் வீணாக ஆகிறது; அல்லது அவர் இன்னொரு ஆறு மணி நேரம் சோம்பலில் கழித்து பாலுடன் சமநிலை அடையலாம்; அல்லது, கடைசி வழியாக, தனக்குப் பயன்படாத இந்த ஆறு மணி நேரத்தையும் சேர்த்துப் பாலுக்குக் கொடுத்துவிடுவார்.

கடைசியிலே பாலைவிட பீட்டர் அதிகமாகச் சம்பாதித்தது என்ன? சில மணி வேலை நேரமா? இல்லை! ஆறு மணி ஓய்வு நேரம் மட்டுமே அவருக்குக் கிடைத்திருக்கும்; ஆறு மணி நேரம் அவர் சோம்பித் திரிய வேண்டிய கட்டாயத் துக்கு ஆளாவார். மேலும், புதிய சமுதாயத்திலே இந்தச் சோம்பித் திரிவதற்கான புதிய உரிமையை இரசித்து அனுப விக்கிறதோடல்லாமல் விரும்பக் கூடியாயும் இருப்பதற்கு இந்தச் சமுதாயம் சோம்பலிலே உன்னதமான இன்பத்தைக் காண்கிறதாயும் எப்பாடு பட்டாவது உடைத்தெறிந்து விடுவித்துக் கொள்ள வேண்டிய பாரமான விலங்காக உழைப்பைக் கருதுவதாயும் இருக்க வேண்டும்.

நமது எடுத்துக்காட்டுக்கு மீண்டும் வருவோம்: பாலை மிஞ்சி பீட்டர் சம்பாதித்த இந்த ஓய்வு நேரம் மட்டும் உண்மை யிலே ஒரு ஆதாயமாக இருந்திருந்தால்! ஆனல் அப்படி யொன்றும் இல்லை. பீட்டர் மிகையான வேலையிலிருந்து தொடங்கிப் பெற்ற அதே விளைவைப் பால் ஆறு மணி நேரம் மட்டும் உழைக்கத் தொடங்கி பிறகு திடமான, ஒழுங்கு முறையான வேலை மூலம் அடைகிறுன். எல்லோரும் பால் போல ஆக விரும்புவார்கள், பாலின் நிலையை அடைவதற்குப் போட்டி இருக்கும், சோம்பிக் கிடப்பதற்கு ஒரு போட்டி இருக்கும்.

அப்படியானல் சரி! உழைப்பின் சம அளவுகளைப் பரி மாறிக் கொண்டதால் நமக்குக் கிடைப்பதென்ன? மிகை உற்பத்தி, மதிப்பு வீழ்ச்சி, மிகையான உழைப்பு, அதைத் தொடர்ந்து வேலையில்லாமை; சுருங்கச் சொன்னல், தற்கால சமுதாயத்தில் இன்று நாம் காண்கிற பொருளாதார உறவுகள், உழைப்பின் போட்டி நீங்கலாக.

இல்லை! நாம் சொல்வது தவறு! பீட்டர் பால் வகையருக் களின் புதிய சமுதாயத்தைக் காப்பாற்றக் கூடிய வழிதுறை இன்னும் ஒன்றிருக்கிறது. பீட்டரிடம் மீதமாயிருக்கிற ஆறு மணி நேர உழைப்பின் விளைபொருளை பீட்டரே நுகர்ந்து முடிப்பான். ஆனல், தான் உற்பத்தி செய்த காரணத்தால் பரிமாறிக் கொண்டாக வேண்டும் என்கிற நிலை இனிமேல் இல்லை என்ருகிற தருணத்திலிருந்து அவன் பரிமாற்றத்துக் காக உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் இராது; உழைப் பின் பிரிவினையையும் பரிமாற்றத்தையும் அடிப்படையாகக்

கொண்ட ஒரு சமுதாயத்தைப் பற்றிய அனுமானவுரை முழுவதும் நொறுங்கி வீழ்ந்துவிடும். பரிமாற்றம் இல்லாமலே போகிறது என்கிற எளிய உண்மையால் பரிமாற்றங்களின் சமநிலே காப்பாற்றிக் கொள்ளப்பட்டதாகிவிடும். பீட்டரும் பாலும் ராபின்ஸனின் நிலேக்கு வந்து சேருவார்கள்.

ஆக, சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களும் அசல் உழைப்பாளிகள் என்று வைத்துக் கொண்டால், பொருள் உற்பத்தியில் எத்தனே மணி நேரம் செலவழிப்பதென்று முன்கூட்டியே ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனேயின் கீழ் மட்டுமே உழைப்பு நேரத்தின் சம அளவுகளேப் பரிமாறிக் கொள்வது சாத்தியமாகும். ஆனுல் இப்படிப்பட்ட ஒப்பந்தம் தனிநபர் பரிமாற்றத்தை மறுக்கிறது.

உற்பத்தி செய்த விளேபொருட்களின் வினியோகத்தை நாம் தொடக்கப் புள்ளியாகக் கொள்ளாமல் உற்பத்திச் செய்கையைத் தொடக்கப் புள்ளியாகக் கொண்டாலும் இதே முடிவுக்குத்தான் வந்து சேருகிறேம். பெருமளவான தொழில்துறையில் தானே தனது வேலே நேரத்தை நிர்ண யித்துக் கொள்கிற சுதந்தரம் பீட்டருக்கு இல்லே; காரணம், தொழிற்சாலேயிலேயுள்ள எல்லா பீட்டர்களின் எல்லா பால் களின் ஒத்துழைப்புமின்றி பீட்டரின் உழைப்பு ஒன்றுமில்லே. ஆங்கில நாட்டுத் தொழிற்சாலேச் சொந்தக்காரர்கள் பத்து மணி நேர வேலே மசோதாவுக்கு விடாப்பிடியான எதிர்ப்பு தெரிவித்ததை இது விளக்குகிறது. மாதர்களுக்கும் குழந்தை களுக்கும் இரண்டு மணி வேலே நேரத்தைக் குறைப் பதனுல்[34] வயதுவந்த ஆண்களின் வேலே நேரத்தையும் குறைக்கவேண்டி வரும் என்று அவர்கள் நன்கு உணர்ந்திருந் தனர். எல்லோருக்கும் வேலே நேரம் சமமாயிருக்கவேண்டும் என்பது பெருமளவான தொழில்துறையின் இயல்பில் உள்ள தாகும். இன்று எது மூலதனத்திலிருந்தும் தொழிலாளர் களிடையேயுள்ள போட்டியிலிருந்தும் விளேகிற விளேவாக உள்ளதோ அதுவே நாளேக்கு, உழைப்புக்கும் மூலதனத் துக்கும் இடையேயுள்ள உறவைத் துண்டித்துவிட்டால், உற்பத்திச் சக்திகளின் தொகைக்கும் நிலவரத் தேவைகளின் தொகைக்கும் இடையேயுள்ள உறவை அடிப்படையாகக் கொண்ட அசல் ஒப்பந்தமாக இருக்கும்.

ஆனுல் இப்படிப்பட்ட ஒப்பந்தம் தனிநபர் பரிமாற்றத்

திற்கு மரணத் தீர்ப்பாக அமைகிறது, நாம் முதல் முடிவுக்கே திரும்பி வருகிறோம்!

கோட்பாடு ரீதியிலே, விளைபொருட்களின் பரிமாற்றம் இல்லை—உற்பத்தியிலே ஒத்துழைத்த உழைப்பின் பரி மாற்றமே இருக்கிறது. உற்பத்திச் சக்திகளின் பரிமாற்ற முறையைச் சார்ந்து விளைபொருட்களின் பரிமாற்ற முறை இருக்கிறது. பொதுவாகச் சொன்னால், விளைபொருட்களின் பரிமாற்றத்தின் வடிவம் உற்பத்தியின் வடிவத்தோடு பொருந்துகிறது. பிந்தியதை மாற்றினால் அதன் பின்விளை வாக முந்தியதும் மாறும். இப்படித்தான் சமுதாயத்தின் வரலாற்றிலே விளைபொருட்களின் பரிமாற்ற முறையை அவற்றின் உற்பத்தி முறை ஒழுங்குமுறைப்படுத்துவதைப் பார்க்கிறோம். தனிநபர் பரிமாற்றமும் ஒரு திட்டவட்டமான உற்பத்தி முறையோடு பொருந்துகிறது, இந்த உற்பத்தி முறையும் வர்க்கப் பகைமையோடு பொருந்துகிறது. ஆக, வர்க்கங்களின் பகைமையின்றித் தனிநபர் பரிமாற்றம் இல்லை.

ஆனால் இந்த வெளிப்படையான உண்மையை மரியாதை மிக்க சிறுபூர்ஷ்வா பார்க்க மறுக்கிறான். ஒருவன் பூர்ஷ்வா வாக இருக்கிற வரை இந்தப் பகைமையுறவில் ஒத்திசைவும் நிரந்தர நீதியும் உள்ள (ஒருவனது நஷ்டத்தில் இன் னொருவன் ஆதாயம் அடைவதை அனுமதிக்காத) உறவைக் காணாமல் இருக்க முடியாது. பூர்ஷ்வாவுக்கு வர்க்கங்களின் பகைமை ஏதுமின்றித் தனிநபர் பரிமாற்றம் இருக்க முடியும். அவனுக்கு இவ்விரண்டும் அறவே சம்பந்தமற்ற விஷயங்க ளாகும். பூர்ஷ்வாவின் கருத்தில், தனிநபர் பரிமாற்றமானது அசல் நடைமுறையிலே இருக்கிற தனிநபர் பரிமாற்றத் தோடு ஒத்திருப்பதாகத் தோன்றவில்லை.

மரியாதை பாராட்டிக் கொள்கிற பூர்ஷ்வாவின் பிரமை யைத் திரு. பிரே தாம் எய்த விழையும் இலட்சியமாக மாற்று கிறார். தனிநபர் பரிமாற்றத்தைச் சுத்தம் செய்து, அதில் உள்ளடங்கிய பகைமை அம்சங்கள் அனைத்தையும் நீக்கி விட்டு, அவர் ஒரு ''சமநிலை வாத'' உறவைப் பார்க்கிறார், அதைச் சமுதாயம் பொதுவாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.

இந்த சமநிலைவாத உறவு, அவர் உலகத்துக்குப் பொருத்திச் செயல்படுத்த விரும்பும் இந்தத் திருத்தநோக்

குள்ள இலட்சியம், அசல் உலகத்தின் பிரதிபலிப்பே தவிர வேறென்றுமில்லை என்பதைத் திரு. பிரே பார்க்கவில்லை; ஆகவே, வெறுமனே சமுதாயத்தின் ஒரு ஒப்பனை செய்த நிழற் படிவத்தை அடிப்படையாக வைத்துச் சமுதாயத்தைத் திருத் தியமைப்பது முற்றிலும் சாத்தியமற்றது. எந்த அளவுக்கு இந்த நிழற்படிவம் மீண்டும் உள்ளடக்கம் பெறுகிறதோ அந்த அளவில் இவ்வுள்ளடக்கம் கற்பனைகார உருமாற்றமாக இருப்பதற்குப் பதிலாக இன்றுள்ள சமுதாயத்தின் அசல் வடிவமாக இருப்பதைப் பார்க்கிறோம்.*

§ 3. மதிப்பின் தகவுப் பொருத்த நிலைக்குரிய விதியின் செயல்பாடு

அ) பணம்

''தங்கமும் வெள்ளியும் தமது மதிப்பை உருவமைக்கப் பெற்ற முதன்முதலான பண்டங்களாகும்.''

ஆக, தங்கமும் வெள்ளியும் திரு. புரூதோன் அவர்களால் ''உருவமைக்கப் பெற்ற மதிப்பின்'' முதற் செயல்பாடுக ளாகும். வினைபொருட்களிலே உருக்கொண்டுள்ள ஒப்புநோக்

---

* —எல்லாத் தத்துவங்களைப் போலவே திரு. பிரேயின் தத்துவமும் ஆதரவாளர்களைத் தேடிக் கொண்டுள்ளது, அவர்கள் வெளித்தோற்றங்களிலே மனம் மயக்கங் கொள்ள இடமளித்தவர்கள். இங்கிலாந்தில் லண்டன், ஷெஃபீல்ட், லீட்ஸ், மற்றும் பல நகரங்களில் equitable-labour-exchange-bazaars [உழைப்பு வினைபொருட்களின் நேர்மையான பரிமாற்றத்திற்கான சந்தைகள்] நிறுவப்பட்டுள்ளன. இந்தச் சந்தைகள் அனைத்தும் கணிசமான மூலதனத்தை விழுங்கிய பின் அவமானகரமான தோல்விகளில் முடிந்துள்ளன. அவற்றிற்கிருந்த மவுசு முற்றாக மறைந்துவிட்டது. திரு. புரூதோன், எச்சரிக்கையாயிருங்கள்! [மார்க்ஸின் குறிப்பு.] திரு. புரூதோன் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்த வில்லை என்பது தெரிந்த விஷயம். 1849ல் அவரே முயன்று பாரிஸ் மாநகரில் ஒரு புதிய பரிமாற்ற வங்கியை நிறுவினார். எனினும் அது முறையாகச் செயல்படுமுன்பே தோல்வி யுற்றது. திரு. புரூதோன் மீது நடந்த நீதிமன்ற வழக்கு அதன் வீழ்ச்சியை மூடிமறைக்க உதவியது. [1885 ஜெர்மன் பதிப்புக்கு ஃப்பிரீட்ரிஹ் எங்கெல்ஸ் வரைந்த குறிப்பு.]

கான உழைப்பு அளவைக் கொண்டு நிர்ணயித்து அவற்றின் மதிப்பைத் திரு. புரூதோன் உருவமைப்பதினுல் அவர் செய்ய வேண்டியிருந்த ஒரே காரியம், தங்கம் வெள்ளி ஆகியவற்றின் மதிப்பில் ஏற்படுகிற **மாறுபாடுகளை** அவற்றை உற்பத்தி செய்வதற்கு எடுத்துக் கொண்ட உழைப்பு நேரத்திலுள்ள மாறுபாடுகளைக் கொண்டு எப்போதும் விளக்கலாம் என்று நிரூபிப்பதேயாகும். திரு. புரூதோனுக்கு அப்படிச் செய்யும் உத்தேசம் ஒன்றுமில்லை. அவர் தங்கம் வெள்ளியைப் பற்றிப் பணம் என்கிற வகையிலேதான் பேசுகிருர், பண்டங்கள் என்கிற வகையில் அல்ல.

உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்பிடப்படக் கூடிய பண்பு படைத்த எல்லா வகை பண்டங்களுக்கும் **பணமாக** உபயோகப்படுத்துவதற்கு தங்கத்துக்கும் வெள்ளிக்கும் இருக்கிற இயல்திறத்தை வைத்துச் செப்படிவித்தை காட்டுவதிலேதான் அவரது தர்க்கம் இருக்கிறது — அது தர்க்கமாக இருந்தால். இந்தச் செப்படிவித்தையில் கெடு நோக்கைவிட வெகுளித்தனமே அதிகமாக இருக்கிறது என்பது உறுதி.

ஒரு பயன்பாடுள்ள விளைபொருள் அதனை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டதும் அது எப்போதும் பரிமாற்றத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது; தங்கத்தையும் வெள்ளியையும் பாருங்கள், அவை நான் விரும்பிய ''பரிமாற்றப் பண்புடைய'' நிலைமைகளில் இருக்கின்றன என்று கூவுகிருர் திரு. புரூதோன். ஆக, தங்கமும் வெள்ளியும் உருவமைப்பு நிலை எய்திய மதிப்பு ஆகிறது; அவை திரு. புரூதோனின் கருத்துக்கு உருவம் கொடுத்து நிற்பவை. அவர் இதைவிட நேர்த்தியான எடுத்துக்காட்டைத் தேர்ந்துகொண்டிருக்க முடியாது. தங்கமும் வெள்ளியும் பிற பண்டங்களைப் போலவே உழைப்பு நேரத்தால் மதிப்பீடு செய்யப்பட்டுப் பண்டங்களாக இருக்கும் இயல்திறம் பெற்றிருப்பது தவிர, பரிமாற்றத்திற்குரிய முழுதளாவிய சாதனங்களாக, பணமாக, இருக்கும் இயல்திறமும் பெற்றுள்ளன. உழைப்பு நேரத்தால் **''உருவமமைக்கப் பெற்ற மதிப்பின்''** செயற்பாடாகத் தங்கத்தையும் வெள்ளியையும் இப்போது கருதிக் கொள்வதால் உழைப்பு நேரத்தால் உருவமைக்கப் பெற்ற மதிப்புடைய எல்லாப்

பண்டங்களுமே எப்போதும் பரிமாற்றிக் கொள்ளக் கூடிய வையாக, பணமாக, இருப்பதாக நிரூபிப்பது போல் சுளு வான வேலை வேறொன்றுமில்லை.

மிக எளிதான பிரச்சினையொன்று திரு. புரூதோனுக்கு உதிக்கிறது. ''உருவமைக்கப் பெற்ற மதிப்புக்குப்'' பண்புக் குறியாயிருக்கும் பேறு தங்கத்துக்கும் வெள்ளிக்கும் இருப் பது ஏன்?

''வாணிகத்துக்கு இடைப்பொருளாகப் பயன்படக் கூடிய தனிச்சிறப்பான பணியை வழக்காறு விலையுயர் உலோகங் களிடம் ஒப்படைத்திருக்கிறதே, அந்தப் பணி வெறுமனே சம்பிரதாய வகைப்பட்டதேயாகும்; ஒருவேளை சௌகரியக் குறைவாயிருந்தாலும்அதே அளவுக்கு நம்பகமாக வேறெந்தப் பண்டமும் இந்தப் பணியைச் செய்ய முடியும். பொருளா தாரவாதிகள் இதை அங்கீகரிக்கிறார்கள், ஒன்றுக்கு மேலான எடுத்துக்காட்டுகளும் காட்டுகிறார்கள். பிறகு ஏன் உலக மனைத்தும்இந்த விலையுயர் உலோகங்களைப் பணமாக விரும்பித் தேர்ந்து கொள்கிறது? பணத்தின் பணிகளுக்குரிய இந்தத் தனித்துறைப்பாட்டுக்கு—இதற்கு அரசியல் பொருளா தாரத்தில் ஒப்பு ஒன்றுமில்லை—விளக்கம் என்ன?... எந்த வரிசைத் தொகுதியிலிருந்து பணம் முறித்துக் கொண்டு போயுள்ளதாகத் தோன்றுகிறதோ அந்த வரிசைத்தொகுதியை மீண்டும் நிர்மாணிப்பதும் அதன் வழியாகப் பணத்தின் உண்மை யான கோட்பாட்டைத் திரும்பக் கண்டு கொள்வதும் சாத்தியமா?''

எடுத்த எடுப்பிலே பிரச்சினையை இந்தச் சொல்வடிவில் வரையறுத்ததின் மூலம் திரு. புரூதோன் பணம் இருப்பதை முன்னனுமானித்துக் கொள்கிறார். அவர் தன்னையே கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய முதற் கேள்வி, அசல் நிலையில் அமைந்திருக்கிற பரிமாற்றங்களில் ஒரு தனிச்சிறப்பான பரி மாற்றச் சாதனத்தைப் படைப்பதின் வழியாக, பரிமாற்றிக் கொள்ளக் கூடிய மதிப்புக்குத் தனிப்பண்பு அளிக்க என்ன அவசியம் ஏற்பட்டது என்பதாகும். பணம் என்பது ஒரு பொருள் அல்ல,அது ஒரு சமுதாய உறவு.உழைப்புப் பிரிவினை முதலான வேறெந்தப் பொருளாதார உறவைப் போலவே பண உறவும் ஒரு உற்பத்தி உறவாக இருப்பது ஏன்? இந்த உறவைத் திரு. புரூதோன் முறையாகக் கணக்கில் எடுத்துக்

கொண்டிருந்தால் பணத்தில் ஒரு விதிவிலக்கை, தெரியாம லிருக்கிற ஒரு வரிசைத் தொகுதியிலிருந்து பிரிந்து போன அல்லது மறுநிர்மாணம் தேவைப்படுகிற அம்சத்தை அவர் பார்த்திருக்க மாட்டார்.

அதற்கு மாருக, இந்த உறவு ஒரு கண்ணி என்றும் அவ் வகையில் அது மற்ற பொருளாதார உறவுகளின் முழுமை யான சங்கிலியோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் புரிந்து கொண்டிருப்பார், தனிநபர் பரிமாற்றம் போலவே இந்த உறவும் ஒரு திட்டவட்டமான உற்பத்தி முறையோடு பொருந்துகிறது என்றும் புரிந்து கொண்டிருப் பார். அவர் செய்வது என்ன? அசல் உற்பத்தி முறையின் முழுமையிலிருந்து பணத்தைப் பிரித்தெடுப்பதிலிருந்து அவர் தொடங்குகிருர், பிறகு அதை ஒரு கற்பிதமான வரிசைத் தொகுதியில், மறுநிர்மாணம் செய்யப்பட வேண்டிய ஒரு வரிசைத் தொகையில் முதல் உறுப்பாக்குகிருர்.

பரிமாற்றத்துக்குரிய ஒரு தனிக்குறிப்பான சாதனத்தின், அதாவது பணத்தின், அவசியத்தை அங்கீகரித்தானதும் இந்தக் குறிப்பிட்ட பணி வேறு ஏதாவதொரு பண்டத்திடம் ஒப்படைக்கப்படாமல் தங்கத்திடமும் வெள்ளியிடமும் ஒப் படைக்கப்பட்டது ஏன் என்பதை விளங்கிக் கொள்வதே மீத மிருக்கும் வேலையாகும். இது ஒரு இரண்டாந்தரப் பிரச்சினை, பொருட்கள் என்கிற வகையில் தங்கத்துக்கும் வெள்ளிக்கும் இருக்கிற உள்ளார்ந்த தனிக்குறிப்பான பண்புகளைக் கொண்டு இதை விளக்கலாம், உற்பத்தி உறவுகளின் சங்கிலியைக் கொண்டல்ல. இவையனைத்தும் ஒரு தடவைக்காவது பொரு ளாதாரவாதிகளைத் ‘‘தமது சொந்த விஞ்ஞானத் துறையின் பரப்பெல்லைகளை விட்டு வெளியே செல்லவும் இயற்பியல், பொறியியக்கவியல், வரலாறு முதலியவற்றில் இறங்கிக் குழப்பிவிடவும்’’ செய்திருக்கிறதென்றுல் (அவர்கள் அப்படிச் செய்வதாகத்தான் திரு. புரூதோன் குறை கூறுகிருர்) அவர்கள் கட்டாயத்தின் பேரில்தான் அவ்வாறு செய்திருக் கிருர்களே தவிர வேறில்லை. பிரச்சினை மேற்கொண்டு அரசியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லைக்குள் இருப்பதாயில்லை.

திரு. புரூதோன் கூறுகிருர்:

‘‘எந்தப் பொருளாதாரவாதியும் பார்க்காததும் புரிந்து கொள்ளாததும் என்னவெனில், எந்தப் **பொருளாதாரக்**

காரணம் இந்த விலையுயர் உலோகங்களுக்குச் சாதகமாக அவை அனுபவித்து வருகிற பேற்றை நிர்ணயித்தது என்பதே.''

யாரும் பார்க்கவோ புரிந்துகொள்ளவோ செய்யாத (இதற்கு நல்ல ஆதாரம் உண்டு) இந்தப் பொருளாதாரக் காரணத்தை திரு. புரூதோன் பார்த்து, புரிந்து கொண்டு, பின்வரக் கூடிய சந்ததியினருக்கும் வழங்கிவிட்டார்.

''வேறு யாருமே பார்க்காதது என்னவென்ருல், எல்லாப் பண்டங்களுக்குள்ளேயும் முதன்முதலாகத் தமது மதிப்பை உருவமைக்கப் பெற்றுக் கொண்டவை தங்கமும் வெள்ளியும் ஆகும் என்பதே. தந்தைவழி ஆட்சிக் காலத்தில் தங்கமும் வெள்ளியும் வார்ப்புப் பாளங்களாகப் பண்டமாற்றும் பரி மாற்றமும் செய்யப்பட்டு வந்தன, எனினும் அக்காலத் திலேகூட அவை கண்ணுக்குத் தெரிகிற முறையில் ஆதிக்கம் பெறும் போக்கை வெளிப்படுத்தி, குறிப்பான அளவுக்கு விருப்பத் தேர்வும் பெற்றன. சிறுகச் சிறுக அரசர்கள் அவற்றை உடைமையாக்கிக் கொண்டு அவற்றின் மீது தமது முத்திரையைப் பதித்தனர்: இந்த அரச தீட்சை பெற்ற திலிருந்து பணம்—அதாவது, வர்த்தகத்தின் அதிர்ச்சிகள் அனைத்தும் இருந்த போதிலும் ஒரு திட்டவட்டமான தகவுப் பொருத்தமுள்ள மதிப்பை நிலைநிறுத்திக் கொண்டு எல்லாச் செலுத்தல்களுக்கும் ஏற்புடையதாக்கிக் கொண்டிருக்கிற தலைசிறந்த பண்டமாக—உதித்தது.... மீண்டும் சொல் கிறேன்: தங்கத்துக்கும் வெள்ளிக்கும் உள்ள வேறுபடுத்திக் காட்டும் பண்புக்குறிக்குக் காரணம், அவற்றின் உலோகப் பண்புகளின் சிறப்பாலும், அவற்றின் உற்பத்தியிலுள்ள கஷ் டங்களாலும், எல்லாவற்றிற்கும் மேலாக அரசதிகாரத்தின் தலையீட்டாலும், அவை பண்டங்கள் என்கிற வகையில் ஆதி காலத்திலேயே திட நிலையும் வாய்மை நிலையும் வென்று கொண்டதேயாகும்.''

எல்லாப் பண்டங்களுக்குள்ளே தங்கமும் வெள்ளியுமே முதன்முதலாகத் தமது மதிப்பை உருவமைக்கப் பெற்றுக் கொண்டவை என்று சொல்வது, இவ்வளவும் கடந்து வந்த பிறகு தங்கமும் வெள்ளியும் பணத்தின் அந்தஸ்து பெறு வதில் முதன்மையானவை என்று சொல்வதாகும். இதுவே திரு. புரூதோனின் மகத்தான வெளிப்படுத்தல் ஆகும், அவ ருக்கு முன் யாருமே கண்டுபிடிக்காத உண்மையாகும்.

எல்லாப் பண்டங்களுக்குள்ளே தங்கமும் வெள்ளியுந் தான் ஆதிகாலத்திலேயே உற்பத்தி நேரம் அறியப்பட்டிருந்த பண்டங்களாகும் என்று திரு. புரூதோன் இச்சொற்களைக் கொண்டு அர்த்தப்படுத்துகிறார் என்றால், தமது வாசகர்களை மகிழ்விக்க எப்பொழுதுமே தயாராயிருக்கும் அவர் கொடுக்கும் அனுமானங்களில் இதுவும் ஒன்றாகும். இந்தத் தந்தை வழி ஆட்சிக் காலத்திய புலமையைப் பற்றி நாம் பேச விரும்பினால், இரும்பு முதலிய முதன்மையாகத் தேவைப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நேரந்தான் முதன் முதலில் அறியப்பட்டிருந்தது என்று திரு. புரூதோனுக்குத் தெரிவித்துக் கொள்வோம். ஆதாம் ஸ்மித்தின் உயர் தனிச் சிறப்புடைய வில்லை எடுத்துக் காட்டாமல் அவரைக் காப்போம்.

ஆனால், இவ்வளவும் ஆன பிறகு, என்றைக்கும் மதிப்பு தன்னைத் தானே உருவமைத்துக் கொள்வதில்லை என்றிருக்கிற பொழுது எப்படி திரு. புரூதோன் ஒரு மதிப்பு உருவமைக்கப் படுவதைப் பற்றிப் பேசிக் கொண்டே இருக்க முடிகிறது? அதை உற்பத்தி செய்வதற்கான நேரத்தைக் கொண்டு மட்டும் அது உருவமைக்கப்படவில்லை, அதே உழைப்பு நேரத்தில் உற்பத்தி செய்ய முடிகிற மற்ற எல்லா விளைபொருட்களின் அளவுடன் சார்புபடுத்திய நிலையிலேதான் அது உருவமைக்கப்படுகிறது. எனவே, தங்கத்தின், வெள்ளியின், மதிப்பு உருவமைக்கப்பட்டதென்றால் அதற்குமுன் ஏற்கெனவே பிற பல விளைபொருட்களின் மதிப்பு உருவமைக்கப்பட்டு முடிந்துள்ளதாக அனுமானமாகிறது.

ஆக,—தங்கம், வெள்ளி ஆகிய வடிவங்களில்—''உருவமைக்கப்பட்ட மதிப்பின்'' அந்தஸ்து பெற்றது பண்டம் அல்ல, திரு. புரூதோனின் ''உருவமைக்கப்பட்ட மதிப்பு தான்'' தங்கத்திலும் வெள்ளியிலும் பணத்தின் அந்தஸ்து பெற்றிருக்கிறது.

மற்ற விளைபொருட்களை விட விரைவாகத் தங்கமும் வெள்ளியும் மதிப்பின் உருவமைக்கப்படும் கட்டத்தைக் கடந்து வந்துவிட்ட சிறப்பால் அவை பணத்தின் நிலைக்கு உயர்ந்தப்படும் அனுகூலத்தை வழங்கியதாகத் திரு. புரூதோன் கருதுகிறாரே, அந்தப் ''பொருளாதார காரணங்களை'' இப்போது மேலும் நெருங்கிப் பரிசீலிப்போம்.

இந்தப் பொருளாதாரக் காரணங்களாவன: ''தந்தை வழி ஆட்சிக் காலத்திலே'' கூட ''கண்ணுக்குத் தெரிகிற முறையில் ஆதிக்கம் பெறும் போக்கு'', ''சிறப்பான விருப்பம்'', மற்றும் அசல் உண்மையைப் பற்றிச் சுற்றிவளைத்துப் பேசும் பிற பேச்சுக்கள் ஆகியன; இவை கஷ்டத்தை அதிகப் படுத்துகின்றன, ஏனெனில் அந்த விஷயத்தை விளக்கும் பொருட்டு திரு. புரூதோன் நிகழ்ச்சிகளைப் பெருக்கிக் காட்டிக் கொண்டே போவதின் வழியாக விளக்க வேண்டிய விஷயங்களின் எண்ணிக்கையே பெருகுகின்றது. பொருளாதாரக் காரணங்கள் என்று சொல்லிக் கொள்கிறவற்றையெல்லாம் திரு. புரூதோன் சொல்லித் தீர்த்து விடவில்லை. இதோ ஒரு உன்னதமான, எதிர்க்கவொண்ணு வலுவுடைய காரணம்:

''அரச தீட்சையிலிருந்து பணம் உதித்தது: தங்கத்தையும் வெள்ளியையும் அரசர்கள் உடைமையாக்கிக் கொண்டு அவற்றின் மீது தமது முத்திரையைப் பதிக்கிருர்கள்.''

ஆக, திரு. புரூதோனுக்கு அரசர்களின் மனச்சபலமே அரசியல் பொருளாதாரத்தில் உன்னதமான காரணம் ஆகிறது.

உண்மையிலே, வரலாற்று அறிவு துளிக்கூட இல்லாதவன்தான் அறியாதிருப்பான், அரசர்கள்தான் எல்லாச் சகாப்தங்களிலும் பொருளாதார நிலைமைகளுக்கு உட்பட்டிருந்தார்களேயன்றி அவற்றிற்கு அவர்கள் என்றைக்கும் சட்டங்கள் போட்டதில்லை என்று. அரசியல் சட்டமாயினும் சரி சிவில் சொத்துச் சட்டமாயினும் சரி, அவை பொருளாதார உறவுகளின் சித்தத்தைப் பறைசாற்றுவதற்கு மேலாக, சொற்களிலே வெளியிடுவதற்கு மேலாக, ஒன்றும் என்றைக்கும் செய்வதில்லை.

அரசனு தங்கத்தையும் வெள்ளியையும் வசப்படுத்திக் கொண்டது, அவற்றின் மீது தனது முத்திரையைப் பதித்ததின் வழியாக அவற்றைப் பரிமாற்றத்துக்குரிய முழுதளாவிய சாதனங்களாக்குவதற்கு? அல்லது, சொல்லப்போனல், பரிமாற்றத்துக்குரிய இந்த முழுதளாவிய சாதனங்கள் அல்லவா தம் மீது தனது முத்திரையைப் பதிக்கும்படியும் அதன் வழியே தமக்கு ஒரு அரசியல் தீட்சை கொடுக்கச் செய்யும்படியும் கட்டாயப்படுத்துவதற்கு அரசனை வசப்படுத்திக் கொண்டன?

பணத்துக்கு அன்றும் இன்றும் கொடுக்கப்படுகிற முத்திரை அதன் மதிப்பைப் பற்றியதல்ல, அதன் எடையைப் பற்றியதேயாகும். திரு. புரூதோன் சொல்கிற திடநிலேயும் வாய்மை நிலேயும் பணத்தின் நிறையளவுக்கு மட்டுமே பொருந்தும்; இந்த நிறையளவு ஒரு நாணயத்தில் எவ்வளவு உலோகப் பொருள் இருக்கிறது என்பதைக் குறிப்படுகிறது. வோல்தேர் தமக்கு வழக்கமான நல்லறிவுடன் தான் சொன்ஞர்: ''ஒரு வெள்ளி மார்க் நாணயத்தின் ஒரே உள்ளார்ந்த மதிப்பு வெள்ளியின் ஒரு மார்க் ஆகும், எட்டு அவுன்ஸ் எடையுள்ள அரை இராத்தல் கொண்டது. எடையும் நிறையளவும் மட்டுமே இந்த உள்ளார்ந்த மதிப்பாக அமைந்துள்ளன.'' (வோல்தேர், **லாயின் அமைப்புமுறை**[35]). ஆனல் ஒரு அவுன்ஸ் தங்கமோ வெள்ளியோ எவ்வளவு தகும் என்கிற கேள்வி இருக்கத்தான் செய்கிறது. கிராண் கொல்பேர் கடையில் வாங்கிய கம்பளித் துணி சுத்தமான கம்பளியிழை என்று வாணிப உரிமைச் சின்னம் தாங்கியிருக்குமானல் இந்த உரிமைச் சின்னம் துணியின் மதிப்பைச் சொல்லாது. கம்பளியிழை எவ்வளவு தகும் என்கிற கேள்வி இருந்து கொண்டுதான் இருக்கும். திரு. புரூதோன் கூறுகிருர்: ''பிரான்ஸ் நாட்டு மன்னர் முதலாவது ஃபிலிப் தனக்குப் பணத்தை உற்பத்தி செய்யும் உரிமை ஏகபோகமாயிருப்பதால், ஒரு விளேபொருளில் ஏகபோகமுள்ள ஒவ்வொரு வியாபாரியும் செய்கிற மாதிரியே தானும் செய்ய முடியும் என்று நினேத்துக் கொண்டு, ஷார்ல் மாமன்னனின் தங்கப் பவுனில் மூன்றில் ஒரு பங்கு உலோகக்கலவையைக் கலந்துவிடுகிருர். இந்த நாணயச் செலாவணியின் மதிப்பைக் கெடுத்ததற்காக ஃபிலிப்பும் அவருக்குப்பின் வந்த அரசர்களும் எவ்வளவோ பழிக்கப்பட்டார்களே, அது அசலில் என்ன? வர்த்தக நடைமுறையின் பார்வை நிலேயிலே பார்த்தால் அது வழுவற்ற வாதப் பொருத்தமுடையதாகும், எனினும் அது மிகப் பிசகான பொருளாதார விஞ்ஞானமாகும்—அதாவது, வரத்தும் கிருக்கியும் மதிப்பை ஒழுங்கு முறைப்படுத்துகிறதினல் ஒரு செயற்கையான பற்ருக்குறையை உண்டு பண்ணியோ உற்பத்தியை ஏகபோகமாக்கிக் கொண்டோ பொருட்களின் மதிப்பீட்டையும் அதன் வழியாக அவற்றின் மதிப்பையும் அதிகப்படுத்துவது சாத்தியம் என்று நினேப்பது மிகப்

பிசகான பொருளாதார விஞ்ஞானமாகும்; தானியம், ஒயின், எண்ணெய், அல்லது புகையிலை முதலியவற்றிற்குப் பொருந்துவது போலவே இது தங்கத்துக்கும் வெள்ளிக்கும் பொருந்தும். எனினும் ஃபிலிப்பின் மோசடி சந்தேகிக்கப்பட்டது தான் தாமதம், உடனே அவருடைய பணம் உண்மையான மதிப்புக்குத் தாழ்ந்துவிட்டது, தனது குடிமக்களிடமிருந்து ஆதாயமடைய நினைத்ததையும் இழந்துவிட்டார். இப்படிப் பட்ட ஒவ்வொரு முயற்சியின் விளைவாக நேர்ந்தது இதுவே தான்.''

ஒரு மன்னன் தனது செலாவணியின் மதிப்பைக் கெடுக்க நினைத்தால் அவனுக்குத்தான் நஷ்டம் ஏற்படுகிறது என்று எண்ணற்ற தடவைகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. முதல் வெளியீட்டிலே அவனுக்குக் கிடைக்கிற ஆதாயத்தை அந்த மதிப்புக் கெடுக்கப்பட்ட நாணயச் செலாவணியானது வரி முதலான வடிவங்களில் தன்னிடமே திரும்பி வருகிற ஒவ்வொரு தடவையிலும் அவன் இழக்கிறான். எனினும் ஃபிலிப்பும் அவருக்குப்பின் வந்த அரசர்களும் இந்த நஷ்டத்திலிருந்து ஏறத்தாழத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது; காரணம், இந்த மதிப்புக்கெட்ட செலாவணியை ஒரு தடவை புழக்கத்தில் விட்டவுடனே அவர்கள் பழைய அடிப்படையில் பணத்தைப் பொதுவாக அச்சடிக்கச் சொல்லி ஆணையிட விரைந்தனர்.

மேலும், திரு. புரூதோனைப் போல் முதலாவது ஃபிலிப் வாதித்திருந்தால் அவர் ''வர்த்தக நடைமுறையின் பார்வை நிலையிலிருந்து'' சரியாக வாதித்திருக்க மாட்டார். தங்கத்தின் மதிப்பும் மற்ற ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பும் வரத்து கிருக்கிகளிடையேயுள்ள உறவால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதனால் மட்டுமே அவற்றின் மதிப்பை மாற்றுவது சாத்தியம் என்று நினைப்பதில் முதலாவது ஃபிலிப்பும் சரி, திரு. புரூதோனும் சரி, வியாபார மேதாவிலாசம் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

ஒரு மியூவி கோதுமையை இனி இரண்டு மியூவி கோதுமை என்று அழைக்க வேண்டும் என்று ஃபிலிப் அரசர் ஆணையிட்டிருந்தால் அவர் ஏமாற்றுக்காரராக இருந்திருப்பார். எல்லா வாரத்தார்களையும், நூறு மியூவி கோதுமை பெற்றுக் கொள்ள உரிமையுள்ள அத்தனை பேர்களையும் அவர்

ஏமாற்றியிருப்பார். அவர்கள் அனைவரும் நூற்றுக்குப் பதிலாக ஐம்பது மியூவி மட்டும் பெறுவதற்குக் காரணமாக இருந் திருப்பார். அரசரே நூறு மியூவி கோதுமை கொடுக்க வேண்டி யிருப்பதாக வைத்துக் கொள்வோம், அவர் ஐம்பது மியூவி மட்டும் கொடுத்தால் போதும். ஆனால் வாணிபத்தில் இப் படிப்பட்ட நூறு மியூவி என்றைக்கும் ஐம்பது மியூவிக்கு மேல் தகாது. பெயரை மாற்றிவிடுவதால் நாம் பொருளை மாற்று வதில்லை. இந்த வெறும் பெயர் மாற்றத்தால் கோதுமையின் அளவு—கொடுக்கப்படுவதாயினும் சரி கோரப்படுவதாயினும் சரி—குறையவோ கூடவோ செய்யாது. எனவே, இந்தப் பெயர் மாற்றம் இருந்த போதிலும் வரத்து கிருக்கிகளிடையே யுள்ள உறவு ஒரே மாதிரி இருப்பதால் கோதுமையின் விலையிலே உண்மையான மாற்றம் ஏற்படாது. பொருட்களின் வரத்து கிருக்கி பற்றி நாம் பேசுகிற பொழுது அந்தப் பொருட்களின் பெயரின் வரத்து கிருக்கி பற்றிப் பேசுவ தில்லை. திரு. புரூதோன் கூறுகிற மாதிரி முதலாவது ஃபிலிப் தங்கத்தையோ வெள்ளியையோ படைப்பவரல்ல; அவர் நாணயங்களின் பெயர்களைப் படைப்பவர். பிரெஞ்சுக் கம் பளித் துணிகளை ஆசிய நாட்டுக் கம்பளித் துணி என்று கூறி விற்பனையிலே தள்ளிவிடப் பாருங்கள், வாங்குகிற ஒன் றிரண்டு பேர்வழிகளை நீங்கள் ஏமாற்றவிடக் கூடும்; ஆனால் இந்த மோசடி அம்பலமானவுடனே உங்கள் ஆசிய நாட்டுத் துணிகள் எனப்பட்டவை பிரெஞ்சுத் துணிகளின் விலைக்கு இறங்கிவிடும். ஃபிலிப் அரசர் தங்கத்தின் மீதும் வெள்ளி மீதும் போலி தலைச்சின்னத்தைப் போட்ட போது மோசடி தெரியாதிருந்தவரைதான் அவர் ஏமாற்ற முடிந்தது. மற் றெந்தக் கடைக்காரரைப் போலவே அவர் தமது சரக்கு களைப் பொய்யாக வர்ணித்துத் தமது வாடிக்கைக்காரர்களை ஏமாற்றினர், அது வெகுநாளைக்கு நடக்க முடியவில்லை. முன்னே பின்னே எப்பொழுதாவது ஒரு நாள் அவர் வாணிப விதிகளின் கடுமையை அனுபவித்துத் தீர வேண்டியிருக்கும். இதையா திரு. புரூதோன் நிரூபிக்க விரும்பினர்? கிடையாது. அவரது கருத்துப்படி, அரசரிடமிருந்துதான் பணம் மதிப்புப் பெறுகிறதேயன்றி வாணிபத்திடமிருந்து அல்ல. அவர் உண் மையிலே நிரூபித்தது என்ன? வல்லரசனைவிட வாணிபம் வல்லமை பெற்றது என்றுதான். ஒரு மார்க் நாணயத்தை

இனிமேல் இரண்டு மார்க் என்று அழைக்க வேண்டும் என்று வல்லரசன் ஆணையிடட்டும், இந்த இரண்டு மார்க்குகள் முந்தைய ஒரு மார்க்குக்கு மேல் தகுதி பெறுது என்று வாணிபம் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

இவ்வாறு எல்லாம் இருந்தும், உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படும் மதிப்பு பற்றிய பிரச்சினையை ஒரு அடி கூட முன்னேறச் செய்யவில்லை. இந்த இரண்டு மார்க்குகளின் (இவை முன்பு ஒரு மார்க்காக இருந்தவை)மதிப்பை உற்பத்திச் செலவு நிர்ணயிக்கிறதா அல்லது வரத்து கிருக்கிகளின் விதி நிர்ணயிக்கிறதா என்று இன்னமும் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

திரு. புரூதோன் தொடர்கிருர்:

''செலாவணியின் மதிப்பைக் கெடுப்பதற்குப் பதிலாகச் செலாவணியின் அளவை இரட்டிப் பாக்கும் அதிகாரம் அரசருக்கு இருந்திருந்தால் எப்போதும் தகவுப் பொருத்தம், சமனநிலை ஆகிய காரணங்களால் தங்கத்தின், வெள்ளியின் பரிமாற்ற மதிப்பு உடனே சரி பாதி குறைந்திருக்கும் என்பதையும் நினைவில் வைக்க வேண்டும்.''

திரு. புரூதோனும் மற்ற பொருளாதாரவாதிகளும் வைத்திருக்கும் இந்தக் கருத்து செல்லத்தக்கதென்ருல், அது அந்தப் பொருளாதாரவாதிகளின் வரத்து கிருக்கி பற்றிய தத்துவத்துக்குச் சாதகமாக வாதிடுகிறதேயன்றி திரு. புரூதோனின் தகவுப் பொருத்த நிலைக்குச் சாதகமாக அல்ல. ஏனெனில், தங்கத்தின், வெள்ளியின் இரட்டிப்பாக்கப்பட்ட அளவில் உருக்கொண்டுள்ள உழைப்பின் அளவு என்னவாக இருந்தாலும், கிருக்கி அப்படியே இருக்கையில் வரத்து இரட்டிப்பாகிவிட்டதால் அதன் மதிப்பு பாதியாகக் குறைந்து விட்டிருக்கும். அல்லது, ஏதாவது தற்செயலாக இந்தத் தடவை "தகவுப் பொருத்த நிலையின் விதியானது" மிகவும் உதாசீனப்படுத்தப்படுகிற வரத்துகிருக்கி விதியோடு குழப்பிக் கொண்டதாக நடந்திருக்க முடியுமா? திரு. புரூதோனின் உண்மையான தகவுப் பொருத்தம் எவ்வளவோ நெகிழ்ந்து கொடுப்பதாயும், எத்தனையோ மாறுபாடுகளையும் சேர் வகைகளையும் வரிசை மாற்ற வகைகளையும் பெறக் கூடியதாயும் இருப்பதால் அது ஒரு தடவையிலாயினும் வரத்து கிருக்கி இடையேயுள்ள உறவுடன் ஒருங்கிணையக் கூடும்.

தங்கத்தின், வெள்ளியின் பாத்திரத்தின் அடிப்படையில் ''நடைமுறையில் இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் உரிமையைக் கொண்டாவது ஒவ்வொரு பண்டத்தையும் பரிமாற்றத்துக்கு ஏற்புடையதாகச்'' செய்வதென்பது அந்தப் பாத்திரத்தைத் தப்பாகப் புரிந்து கொள்வதாகும். தங்கமும் வெள்ளியும் நடைமுறையில் ஏற்புடையவையாக இருக்கிற ஒரே காரணத்தால்தான் அவை உரிமைப்படி ஏற்புடையவை யாக உள்ளன. மற்றும், அவை நடைமுறையில் ஏற்புடைய வையாக இருக்கக் காரணம் இன்றைய உற்பத்தி அமைப் புக்கு ஒரு முழுதளாவிய பரிமாற்ற இடைப்பொருள் தேவைப் படுகிறது என்பதேயாகும். உரிமை என்பது உண்மைக்கு அதிகாரபூர்வமாக அளிக்கிற அங்கீகாரமேயாகும்.

உருவமைக்கப் பெற்ற மதிப்பின் செயல்பாட்டுக்குத் திரு. புரூதோன் பணத்தை எடுத்துக்காட்டாகத் தேர்ந்து கொண் டது தமது பரிமாற்றத் திறம் பற்றிய தத்துவம் முழுவதை யும் கள்ளத்தனமாக நுழைப்பதற்காகத்தான்—அதாவது, உற்பத்திச் செலவைக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு பண்டமும் பணத்தின் அந்தஸ்து பெற்றுத் தீர வேண்டும் என்று நிரூபிக்கத்தான். இதெல்லாம் வெகு நேர்த்தி யாகத்தான் இருந்திருக்கும், பணம் என்கிற வகையில் தங்கமும் வெள்ளியுந்தான் எல்லாப் பண்டங்களுள் தமது உற்பத்திச் செலவைக் கொண்டு நிர்ணயிக்கப்படாத பண்டங் களாகும் என்கிற சங்கடமான உண்மை மட்டும் இரா திருந்தால்; அவற்றிற்குப் பதிலாகக் காகிதத்தை புழக்கத் திலே விடலாம் என்கிற அளவுக்கு இது உண்மையாகும். புழக்கத்தின் தேவைகளுக்கும் வெளியிடப்பட்ட பணத்தின் (அது காகிதம், தங்கம், பிளாட்டினம் அல்லது செப்புப் பணமாக இருந்தாலும் சரி) தொகைக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட தகவுப் பொருத்தம் இருக்கிறவரை, பணத்தின் உள்ளார்ந்த மதிப்புக்கும் (உற்பத்திச் செலவுக்கும்) பெயரள வான மதிப்புக்கும் இடையே ஒரு தகவுப்பொருத்தம் பற்றிய பிரச்சினையே இருக்க முடியாது. சர்வதேச வர்த்தகத் தில் மற்றெந்த பண்டத்தைப் போலவே பணமும் உழைப்பு நேரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது என்பதில் ஐயமில்லைதான். எனினும் சர்வதேச வர்த்தகத்தில் பணம் என்கிற வகையிலேயல்லாமல் விளைபொருட்கள் என்கிற வகை

யிலேதான் தங்கமும் வெள்ளியும் பரிமாற்றச் சாதனங்களாக இருப்பதும் உண்மை. வேறு சொற்களிலே சொல்வதானுல், திரு. புரூதோன் கருத்தில் அவற்றின் தனிப் பண்புக்குறியாக உள்ள ''திடநிலே, வாய்மை நிலே'', ''அரச தீட்சை'' எனும் இந்தப் பண்புக்குறியை அவை இழக்கின்றன. ரிக்கார்டோ தமது அமைப்புமுறை முழுவதையும் உழைப்பு நேரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு மீது நிறுவிக் கொண்ட பின்பும், ''மற்றெல்லாப் பண்டங்களேயும் போலவே **தங்கமும் வெள்ளியும்** அவற்றை உற்பத்தி செய்வதற்கும் சந்தைக்குக் கொண்டுவருவதற்கும் அவசியமான உழைப்பு அளவுக்குத் தகவுப் பொருத்தமாகத்தான் மதிப்புடையவை யாகும்'' என்று கூறிய பின்பும் **பணத்தின்** மதிப்பு வரத்து கிருக்கி விதி ஒன்ருல் மட்டுமேநிர்ணயிக்கப்படுகிறதேயல்லாமல் அந்தப் பணத்தின் உள்ளடக்கப் பொருளில் உருக்கொண்டுள்ள உழைப்பு நேரத்தால் அல்ல என்று கூடுதலாகச் சொல்கிற அளவுக்கு ரிக்கார்டோ இந்த உண்மையை நன்கு புரிந்து கொண்டிருந்தார். ''அதற்கு'' [காகிதப் பணத்துக்கு] ''உள்ளார்ந்த மதிப்பு இல்லாவிடினும் அதன் அளவை வரம்புக்குட்படுத்துவதின் வழியாக, பரிமாற்றத்தில் அதன் மதிப்பானது சமமான படிநிலேப் பெயருள்ள நாணயமோ அல்லது அந்த நாணயத்திலுள்ள தங்கமோ வெள்ளியோ எவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கு அதிகமாக இருக்கிறது. அதே கோட்பாட்டின்மீது—அதாவது, அதன் அளவை வரம்புக்குட்படுத்துவதின் வழியாக—ஒரு உலோகக் கலப்பு செய்யப்பட்ட நாணயமானது, சட்டப்படியுள்ள எடையும் உயர்தூய்மைப்படியும் பெற்றிருந்தால் அது எந்த மதிப்பில் புழக்கத்தில் இருந்திருக்குமோ அந்த மதிப்பில் இருக்கும், யதார்த்தத்தில் அதில் அடங்கியுள்ள உலோகக் கலவையின் அளவின் மதிப்பில் புழக்கத்திலிராது. இவ்வாறே பிரிட்டிஷ் நாணய முறையின் வரலாற்றில், பணத்தின் மதிப்புக் கெடுக்கப்பட்டதற்குத் தகவுப் பொருத்தமாக என்றைக்கும் அதன் மதிப்புக் குறைக்கப்படவில்லே என்று பார்க்கிருேம்; இதற்கு காரணம், அதன் குறைக்கப்பட்ட உள்ளார்ந்த மதிப்புக்குத் தகவுப் பொருத்தமாக அது அளவில் என்றைக்கும் அதிகப்படுத்தப் படவில்லே.'' (ரிக்கார்டோ, மேற்கோள் காட்டப்படுகிற நூல்.)

ரிக்கார்டோவின் இந்த வாசகப் பகுதி மீது ழா. ப. ஸேய் கூறும் கருத்து வருமாறு:

''எல்லா மதிப்புக்கும் அடிப்படை ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படுகிற உழைப்பின் அளவல்ல, அந்தப் பண்டத்தின் பற்ருக்குறையைக் கவனத்தில் கொண்டுள்ள அந்தப் பண்டத்திற்கான தேவைதான் அடிப்படை என்று ஆசிரியர் தெளிவடைவதற்கு இந்த **எடுத்துக்காட்டு** போதும் என்று நினைக்கிறேன்.''[36]

ஆகவே பணம் என்பது ரிக்கார்டோவைப் பொறுத்தவரை இனிமேல் அது உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு அல்ல, எனவே அவ்வாறே மற்ற மதிப்புகளும் உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்பட முடியாதவை என்று ரிக்கார்டோவுக்குத் தெளிவுறுத்த ழா. ப. ஸேய் அதையே ஒரு எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்கிருர். நான் சொல்கிறேன், வரத்து கிருக்கிகளால் மட்டுமே நிர்ணயிக்கப்படுகிற மதிப்புக்கு ஒரு உதாரணமாக ழா. ப. ஸேய் சுட்டிக் காட்டும் இந்தப் பணம் திரு. புரூதோனுக்கு... உழைப்பு நேரத்தால் உருவமைக்கப் பெற்ற மதிப்பின் செயல்பாட்டுக்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டாக ஆகிறது.

முடிவாகச் சொன்னுல், பணம் என்பது உழைப்பு நேரத்தால் ''உருவமைக்கப்பட்ட'' ஒரு மதிப்பு அல்ல என்ருல், திரு. புரூதோனுடைய உண்மையான ''தகவுப் பொருத்தத்துக்கும்'' அதற்கும் எந்த சம்பந்தமும் இருக்கச் சாத்தியமில்லை. தங்கமும் வெள்ளியும் எப்பொழுதும் பரிமாற்றிக் கொள்ளத் தக்கவை, அதற்குக் காரணம் முழுதளாவிய பரிமாற்றச் சாதனமாகப் பயன்படும் பணி அவற்றிற்கு இருப்பதுதான், செல்வத்தின் மொத்த தொகைக்குத் தகவுப் பொருத்தமானவையாக இருப்பதனுல் அல்ல; மேலும் நன்ருகச் சொல்வதென்ருல், செல்வத்தின் மொத்த தொகையுடன் சார்புபடுத்திய நிலையில் அவற்றின் அளவு என்னவாயிருப்பினும் எல்லாப் பண்டங்களுள் அவை மட்டுமே பணமாக, முழுதளாவிய பரிமாற்றச் சாதனமாக, பணியாற்றுகிற காரணத்தால் அவை எப்பொழுதும் தகவுப் பொருத்தமாக உள்ளன. ''புழக்கத்திலுள்ள பணம் வழிந்தோடுகிற அளவுக்கு என்றைக்கும் நிறைவாக இருக்க முடியாது; காரணம், அதன் மதிப்பைக் குறைப்பதின் வழியாக அதே தகவுப் பொருத்

தத்தில் அதன் அளவை அதிகப்படுத்துவீர்கள், அதன் மதிப்பை அதிகப்படுத்துவதின் வழியாக அதன் அளவைக் குறைப்பீர்கள்.'' (ரிக்கார்டோ.)

''ஒரே குழப்பமாக இருக்கிறதே இந்த அரசியல் பொருளாதாரம்!'' என்று கூவுகிறார் திரு. புரூதோன்.

''சாபக்கேடான தங்கம்!'' என்று பொறுப்பின்றிக் கூவுகிறார் ஒரு கம்யூனிஸ்ட் [திரு. புரூதோன் வாய் மூலமாக]. ''சாபக்கேடான கோதுமை, சாபக்கேடான திராட்சைச் செடிகள், சாபக்கேடான செம்மறியாடுகள் என்றுகூட நீங்கள் சொல்லலாம்—ஏனெனில், தங்கமும் வெள்ளியும் போலவே, ஒவ்வொரு வர்த்தக மதிப்பும் தனது கறாரான, சரிநுட்பமான நிர்ணயிப்பை எய்தித் தீர வேண்டும்.''

செம்மறியாடுகளையும் திராட்சைச் செடிகளையும் பணத்தின் அந்தஸ்தை எட்டும்படி செய்கிற கருத்து புதிதல்ல. பிரான்ஸில், அது பதினான்காம் லூயி மன்னனின் காலத்தைச் சேர்ந்தது. அந்தக் காலத்தில், பணம் தனது எல்லாம் வல்ல தன்மையை நிலைநாட்டிக் கொள்ளத் தொடங்கியிருந்த காலத்தில், மற்றெல்லாப் பண்டங்களும் மதிப்பிழந்து வருவது பற்றிக் குறை தெரிவிக்கலாயினர், மற்றும் ''ஒவ்வொரு வர்த்தக மதிப்பும்'' தனது கறாரான, சரிநுட்பமான நிர்ணயிப்பை, பணத்தின் அந்தஸ்தை, எட்டக் கூடிய காலம் என்று வருமோ என்று ஆர்வத்துடன் வேண்டிக் கொண்டனர். பிரெஞ்சுப் பொருளாதாரவாதிகளிலே மிகவும் முதியவரான புவாகில்பேர் எழுத்துக்களிலுங்கூட நாம் காண்கிறோம்: ''ஆக, தமது உண்மையான மதிப்புகளில் மீண்டும் நிலைநாட்டப்பெற்ற அதே பண்டங்களின் வடிவத்திலே எண்ணற்ற போட்டியாளர்கள் வந்து சேருவதின் வழியாகப் பணம் தன்னுடைய இயல்பான எல்லைகளுக்குள் மீண்டும் பின்தள்ளப் பட்டுவிடும்'' என்று. (18ம் நூற்றாண்டின் பொருளாதாரவாதிகளும் நிதித்துறை வல்லுநர்களும், தேயரின் பதிப்பு, பக்கம் 422.)

முதலாளி வர்க்கத்தின் முதல் பிரமைகளே அதன் இறுதிப் பிரமைகளாகவும் இருக்கக் காண்கிறோம்.

ஆ) மிகுதி உழைப்பு

''அரசியல் பொருளாதாரம் பற்றிய நூல்களில் நாம் இந்த அபத்தமான அனுமானவுரையைப் படிக்கிறோம்: ஒவ்வொன்றின் விலையும் இரட்டிப்பாக்கப்பட்டால்....—ஏதோ ஒவ்வொன்றின் விலையும் பொருட்களின் தகவுப் பொருத்த மல்லாத மாதிரி — ஒரு தகவுப் பொருத்தத்தை, ஒரு உறவை, ஒரு விதியை, இரட்டிப்பாக்க முடிகிற மாதிரி!'' (புரூதோன், தொகுதி 1, பக்கம் 81.)

''தகவுப் பொருத்த நிலையின் விதியையும்'' ''உருவமைக் கப் பெற்ற மதிப்பின்'' விதியையும் எப்படிச் செயல்படுத்துவ தென்று அறியாததினால் பொருளாதாரவாதிகள் இந்தத் தவறு செய்கிறார்கள்.

துரதிருஷ்டவசமாகத் திரு. புரூதோன் எழுதிய இதே நூலில், தொகுதி 1, பக்கம் 110ல், ''கூலி பொதுவாக ஏறுமேயானால் ஒவ்வொன்றின்விலையும் ஏறும்'' என்கிற அபத்த மான ஊகப்பிரமாணத்தைப் படிக்கிறோம். மேலும், அரசியல் பொருளாதாரம் பற்றிய நூல்களில் பிரச்சினைக்குரிய இந்தச் சொற்றொடரைக் காண்கிறோமென்றால் அத்துடன் அதன் விளக்கத்தையும் காண்கிறோம். ''எல்லாப் பண்டங்களின் விலையில் ஏற்றம் இறக்கம் குறித்துப் பேசுகிற பொழுது ஏதா வது ஒரு பண்டம் எப்பொழுதும் விலக்கி வைக்கப்படுகிறது. இப்படி விலக்கி வைக்கப்படுகிற பண்டம் பொதுவாகவே பணம் அல்லது உழைப்பு ஆக இருக்கிறது.'' (தலைநகரத்துக் கலைக்களஞ்சியம், அல்லது பொதுவான அறிவுத்துறை அகராதி, தொகுதி 6, ஸீனியர் எழுதிய ''அரசியல் பொருளா தாரம்'' எனும் கட்டுரை, லண்டன் 1836.[37] விவாதத் திலிருக்கும் சொற்றொடர் சம்பந்தமாக ஜே.எஸ். மில் எழுதிய அரசியல் பொருளாதாரத்தின் சில தீர்க்கப்படாத பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகள், லண்டன் 1844 எனும் நூலையும் டூக் எழுதிய விலைவாசிகளின் வரலாறு, முதலியவை, லண்டன் 1838 எனும் நூலையும்[38] பார்க்க.)

''உருவமைக்கப் பெற்ற மதிப்பின்'', மற்ற தகவுப் பொருத்தங்களின் இரண்டாவது செயல்பாட்டுக்கு—அவற்றிற்குத் தகவுப் பொருத்தம் இல்லாததுதான் அவற்றின் ஒரே குறைபாடு—இப்போது வருவோம். மற்றும், செம்மறியாடு

களை நாணயச் செலாவணியாக்குவதில் கண்டதைவிட இதிலே திரு. புரூதோனுக்கு அதிக அதிர்ஷ்டம் இருக்குமா என்று பார்ப்போம்.

''எல்லா உழைப்பும் ஒரு மிகுதியை விட்டுச் சென்ருக வேண்டும் என்கிற மூதுண்மையைப் பொதுவாகப் பொருளாதாரவாதிகள் ஒப்புக் கொள்கின்றனர். இந்த முன் கூற்று முழுதளாவிய வில்லங்கமற்ற உண்மை என்பது என் கருத்து: அது தகவுப் பொருத்தம் பற்றிய விதியின் தொடர் முடிபாகும், இந்த விதியைப் பொருளாதார விஞ்ஞானம் முழுவதின் சாரப்பொழிப்பு என்று கருதலாம். எனினும், நான் சொல்வதைப் பொருளாதாரவாதிகள் அனுமதிப்பார்களேயானுல், அவர்களின் தத்துவப்படி எல்லா உழைப்பும் ஒரு மிகுதியை விட்டுச் சென்ருக வேண்டும் என்கிற கோட்பாடு பொருளற்றது, எந்த நிரூபணத்துக்கும் உட்படாதது.'' (புரூதோன்.)

எல்லா உழைப்பும் ஒரு மிகுதியை விட்டுச் சென்ருக வேண்டும் என்று நிரூபிப்பதற்காகத் திரு. புரூதோன் சமுதாயத்தை நபரின் உருவகமாக்குகிருர்; அதைச் சமுதாயம் என்கிற ஒரு நபர் ஆக மாற்றுகிருர்—இந்தச் சமுதாயம் எவ்வகையிலும் நபர்களைக் கொண்ட சமுதாயம் அல்ல, ஏனெனில் இதற்கென்று தனியாக இதன் விதிகள் உண்டு, இவ்விதிகளுக்கும் சமுதாயமாக அமைந்துள்ள நபர்களுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது, மற்றும் இதற்கென்று ''சொந்தமான அறிவுத்திறம்'' உண்டு, அது சாதாரண மக்களின் அறிவுத்திறம் அல்ல, சாதாரண அறிவு விலக்கிய அறிவுத்திறமாகும். இந்தக் கூட்டு ஜீவனின் ஆளுமையைப் புரிந்து கொள்ளவில்லை என்று திரு. புரூதோன் பொருளாதாரவாதிகளைக் குறை கூறுகிருர். இதற்கு நேரெதிரான குற்றச்சாட்டைப் பொருளாதாரவாதிகள் மேல் தொடுக்கிற ஒரு அமெரிக்கப் பொருளாதாரவாதியிடமிருந்து பின்வரும் வாசகப்பகுதியைக் கொண்டு திரு. புரூதோனை எதிர்கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிருேம்: ''ஒரு சொல்லை ஒரு பொருளாக உருமாற்றிவிடுகிறவர்களின் கற்பனையிலல்லாது உண்மையிலே இல்லாத பண்புக்கூறுகள் ஒரு நாட்டு இனம் என்று அழைக்கப்படுகிற ஒழுக்கப்பொருளுக்கு [the moral entity], இலக்கணப் பிறவிக்கு [the grammatical being] இட்டுக்காட்டப்

படுகிறது.... இது பல கஷ்டங்களையும் சில வருந்தத்தக்க தப்பபிப்பிராயங்களையும் அரசியல் பொருளாதாரத்திலே உண்டாக்கியுள்ளது.'' (தா. கூப்பர், **அரசியல் பொருளாதாரத்தின் அம்சங்கள் குறித்து விரிவுரைகள்,** கொலம்பியா, 1826.[39])

திரு. புரூதோன் மேலும் கூறுவதாவது:

''இந்த மிகுதி உழைப்புக் கோட்பாடு சமுதாயத்திலிருந்து தோன்றுவதினாலேதான் தனிநபர்கள் விஷயத்தில் உண்மையாக இருக்கிறது, ஆக சமுதாயம் இவ்வழியே தனது சொந்த விதிகளின் நன்மையை அவர்களுக்கு வழங்குகிறது.''

சமுதாய நபரின் உற்பத்தி தனிமையான நபரின் உற்பத்தியை மிஞ்சுகிறது என்று மட்டும் திரு. புரூதோன் அர்த்தப்படுத்துகிறாரா? இணைத்த நிலையில் இல்லாத நபர்களின் உற்பத்திக்கு மேலாக இணைத்த நிலையிலுள்ள நபர்களின் உற்பத்தியில் உள்ள மிகுதியைத் திரு. புரூதோன் குறித்துக் காட்டுகிறாரா?அப்படியானால், திரு. புரூதோன் தம்மைச் சுற்றி எழுப்பிக் கொள்கிற மாயாவாதம் எதுவும் இல்லாமல் இந்த எளிய உண்மையை வெளியிட்ட ஒரு நூறு பொருளாதாரவாதிகளை அவருக்கு நாம் மேற்கோள் காட்ட முடியும். எடுத்துக்காட்டாக, திரு. ஸாட்லர் கூறுவதாவது:

''தனிப்பட்ட முயற்சி என்றைக்கும் சாதிக்க முடியாத விளைவுகளை இணைந்த உழைப்பு உண்டாக்கித் தருகிறது. எனவே, மனிதகுலம் எண்ணிக்கையிலே பெருகப் பெருக, அவர்களின் ஒன்றுபட்ட உழைப்பு முயற்சியின் விளைபொருட்களானவை இந்த எண்ணிக்கை அதிகரிப்பை வைத்துக் கணக்கிடப்படுகிற வெறும் எண்கணிதக் கூட்டலின் எந்தத் தொகையையும் பெரிதும் மிஞ்சிவிடும்.... ஒரு தனிப்பட்ட... நபர் தனது வாழ்க்கை முழுவதிலும் சாதிக்க முடிகிறதை விட... பொறியியக்க வகைப்பட்ட கலைகளிலும், விஞ்ஞான ஈடுபாடுகளிலும், ஒரு மனிதன் ஒரே நாளில் அதிகமாகச் சாதிக்கக்கூடும்.... முழுமை என்பது அதன் எல்லாப் பகுதிகளின் தொகைக்கு மட்டுமே சமமாகும்... என்று வடிவக் கணிதம் கூறுகிறது; நம் முன்னிருக்கும் விஷயத்தோடு பொருத்திப் பார்க்கும் போது இந்த மூதுண்மை பொய்யாக இருக்கும். மனித வாழ்க்கையின் மகத்தான தூணாகிய உழைப்பைப் பொருத்தவரையில், தனிப்பட்ட முறையிலும் இணைப்பற்ற முறையிலும் உள்ள முயற்சிகள்

சாதிக்கக் கூடியதனைத்தையும் இணைக்கப்பட்ட முயற்சியின் விளைபொருள் முழுவதும் அநேகமாக முடிவற்ற அளவில் மிஞ்சுகிறது என்று சொல்லலாம்.'' (*தா. ஸாட்லர்,* **மக்கட் தொகை பற்றிய விதி,** *லண்டன் 1830.*[40])

திரு. புரூதோனிடம் திரும்பி வருவோம். சமுதாயம் என்கிற நபரை வைத்து மிகுதி உழைப்பு விளக்கப்படுகிறது என்கிறார் அவர். தனிநபர் என்கிற வகையில் மனிதனின் நடவடிக்கைகளை ஆள்கிற விதிகளுக்கு எதிர்மறையான விதிகள் இந்த நபரின் வாழ்க்கையை வழி செலுத்துகிறது. அவர் **''உண்மைகளை''** வைத்து இதை நிரூபிக்க விரும்புகிறார்.

''தொழில் உற்பத்தித் துறையில் நிகழ்ந்த புதிய கண்டு பிடிப்பு அதைப் புனைந்தவனுக்குத் தருகிற இலாபம் அது சமுதாயத்துக்குக் கிடைக்கச் செய்கிற இலாபத்துக்கு என்றைக்கும் சமமாக இருக்க முடியாது.... இரயில்வேத் தொழில் நிறுவனங்கள் செல்வத்துக்கு ஊற்றுக்கண்ணாக அரசுக்குப் பயன்படுவதைக் காட்டிலும் தொழில் முயற்சியாளர்களுக்கு மிகக் குறைவாகவே பயன்படுகிறது.... பண்டங்களை எடுத்துச் சென்று சேர்ப்பிப்பதற்கு சாலைப் போக்கு வரத்துச் செலவு சராசரி 1 கிலோமீட்டருக்கு 1 டன்னுக்கு 18 சென்தீம்* ஆகிறது. இந்த விகிதத்தில் ஒரு சாமானியமான இரயில்வே நிறுவனம் 10 சதமானம் நிகர இலாபம் பெறுது என்று கணக்கிடப்பட்டுள்ளது, இந்த விளைவு ஏறத்தாழ ஒரு சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் விளைவுக்குச் சமம். எனினும் இரயில் போக்குவரத்தின் வேகம் சாலைப் போக்கு வரத்தின் வேகத்துடன் ஒப்புநோக்கும் போது 4க்கு 1 என்கிற விகிதத்தில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். சமுதாயத்திலே நேரமே ஒரு மதிப்பாக இருக்கிறதினால், விலை சமமாக இருக்கிற நிலையில் இரயில் போக்குவரத்து சாலைப் போக்குவரத்தைப் போல் 400 சதவீதம் அனுகூலம் அளிக்கும். எனினும், இந்த மிகப் பெரிய அனுகூலம் சமுதாயத்துக்கு மிக உண்மையாக இருந்த போதிலும் அதே தகவுப் பொருத்தத்தில் போக்குவரத்துத் தொழில் முயற்சியாளனுக்குக் கிடைப்பதில்லை, அவன் சமுதாயத்துக்குக் கூடுதலாக

*—பிராங்கில் நூற்றில் ஒரு பகுதி.—[மொழிபெயர்ப்பாளர்.]

400 சதவீத இலாபம் வழங்கிவிட்டுத் தன்னைப் பொறுத்த வரை 10 சதவீதங்கூட பெறுவதில்லை. இவ்விஷயத்தை இன்னும் முனைப்புடன் உணர்த்துவதற்கு, சாலைப் போக்குவரத்துச் செலவு 18 சென்தீம் என்றிருக்கையில் இரயில் போக்குவரத்து தனது கட்டணத்தை 25 சென்தீம் என்று உயர்த்துவதாக உண்மையாகவே வைத்துக் கொள்வோம்; உடனே அது தனது அனுப்புச் சரக்குகள் அனைத்தையும் இழந்துவிடும். சரக்கு ஏற்றியனுப்புகிறவர்கள், பெற்றுக்கொள்பவர்கள் எல்லோரும் சரக்கு வண்டிக்குத் திரும்பிப் போய்விடுவார்கள், அவசியமானால் பழங்காலத்திய வண்டிக்குக் கூடத் திரும்பிவிடுவார்கள். இரயில் வண்டியைக் கைவிடுவார்கள். 35 சதவீதமான தனிப்பட்ட நஷ்டத்துக்காக 400 சதவீதமான சமுதாய அனுகூலம் பலியிடப்படும். இதற்கான காரணத்தைச் சுளுவாகப் புரிந்து கொள்ளலாம்: இரயில்வேயின் வேகத்திலிருந்து கிடைக்கிற அனுகூலம் முற்றிலும் சமுதாயரீதியானது, மற்றும் அதில் ஒவ்வொரு நபரும் ஒரு மிகச் சிறிய தகவிலேதான் பங்கு பெறுகிறான் (இத்தருணத்தில் நாம் சரக்குப் போக்குவரத்தை மட்டுமே கவனிக்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்), ஆனால் நஷ்டமோ உபயோகிப்பவனை நேரடியாகவும் தனிப்பட்ட முறையிலும் தாக்குகிறது. சமுதாயத்தில் 10 லட்சம் மனிதர்களே இருப்பதாக வைத்துக்கொண்டால் 400க்குச் சமமான சமுதாய இலாபம் என்பது தனிநபருக்கு 4/10,000 ஆகும்; ஆனால் உபயோகிக்கிறவனுக்கு 33 சதவீத நஷ்டம் என்பது சமுதாயத்தின் பற்றுக்குறை 330 லட்சம் ஆக அனுமானிக்கப்படும்.'' (புரூதோன்.)

நிற்க, நான்கு மடங்காக்கப்பட்ட வேகத்தை முதலிலிருந்த வேகத்தைப் போல் 400 சதவீதம் என்று திரு. புரூதோன் கூறுவதைக்கூட நாம் கவனிக்காமல் விடலாம்; ஆனால் வேகத்தின் சதவீதத்தையும் இலாபத்தின் சதவீதத்தையும் அவர் சம்பந்தப்படுத்தி இரு உறவுகளிடையேயும் (இவை தனித் தனியே சதவீதங்களால் அளக்கப்பட்ட போதிலும் ஒன்றுக் கொன்று ஒரே அளவால் அளக்கப்படக் கூடியவையல்ல) ஒரு தகவுப் பொருத்தத்தை அவர் நிலைநாட்டுவது இடுகுறிப் பெயர்களைக் கவனிக்காமல் சதவீதங்களிடையே ஒரு தகவுப் பொருத்தத்தை நிலைநாட்டுவதாகும்.

சதவீதங்கள் எப்போதும் சதவீதங்களே, 10 சதவீதமும் 400 சதவீதமும் ஒரே அளவால் அளக்கப்படக் கூடியவை; அவை ஒன்றுக்கொன்று 400க்கு 10 ஆகும். ஆகவே 10 சதவீத இலாபம் என்பது நான்கு மடங்காக்கப்பட்ட வேகத்தை விட நாற்பது மடங்கு குறைவான மதிப்புடையது என்று திரு. புரூதோன் முடிவு கட்டுகிறார். மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, சமுதாயத்துக்கு நேரமும் பணமாகும் என்று அவர் கூறுகிறார். மதிப்புக்கும் உழைப்பு நேரத்துக்கும் ஒரு தொடர்பு இருப்பதாக அவர் தெளிவின்றி நினைவூட்டிக் கொள்வதிலிருந்து இந்தத் தவறு உண்டாகிறது, அவர் உழைப்பு நேரத்தையும் போக்குவரத்து நேரத்தையும் ஒன்றாக்கிவிட விரைகிறார்; அதாவது, சில ஃபயர்மேன்களையும் டிரைவர்களையும் மற்றவர்களையும் (இவர்களின் உழைப்பு நேரம் அசலில் போக்குவரத்து நேரமேயாகும்) சமுதாய முழுமையுடன் ஒன்றாக்குகிறார். ஆக, ஒரேயடியில் வேகம் மூலதனமாகிவிட்டது, மற்றும் இவ்வழக்கில் அவர் முற்றிலும் சரியாகவே கூறுவதாவது: ''35 சதவீத நஷ்டத்திற்காக 400 சதவீத இலாபம் பலியிடப்படும்''. கணக்கியலாசிரியர் என்கிற முறையில் இந்த விசித்திரமான முன்கூற்றை நிலை நாட்டியபின் அவர் பொருளாதாரவாதி என்கிற முறையில் அதற்கு விளக்கம் அளிக்கிறார்.

''சமுதாயத்தில் பத்து லட்சம் மனிதர்களே இருப்பதாக வைத்துக் கொண்டால் 400க்குச் சமமான சமுதாய இலாபம் என்பது தனிநபருக்கு 4/10,000 ஆகும்.'' ஒப்புக் கொள்கிறோம்; ஆனால் நாம் கவனிப்பது 400 அல்ல, 400 சதவிகிதம் என்பது, மற்றும் 400 சதவிகித இலாபம் என்பது தனிநபருக்கும் கூடுதலோ குறைவோ இல்லாமல் 400 சதவீதமே ஆகும். மூலதனம் என்னவாக இருந்தாலும் வட்டி எப்போதும் 400 சதவீத விகிதத்திலேதான் இருக்கும். திரு. புரூதோன் செய்வதென்ன? சதவீதங்களை மூலதனமாக எடுத்துக் கொள்கிறார், மேலும் தமது குழப்பம் போதிய அளவுக்கு வெளிப்படையாயில்லை, ''முனைப்பாகக்'' காட்டிக் கொள்ளவில்லை என்று பயந்தவர் மாதிரி அவர் மேலும் கூறுவதாவது:

''உபயோகிக்கிறவனுக்கு 33 சதவீத நஷ்டம் என்பது சமுதாயத்தின் பற்றாக்குறை 330 லட்சம் ஆக அனுமானிக்கப்படும்.'' உபயோகிக்கிறவனுக்கு 33 சதவீத நஷ்டம் என்றால்

உபயோகிக்கும் பத்து லட்சம் பேருக்கும் 33 சதவீத நஷ்டமாகத்தான் இருக்கிறது. பிறகு எப்படி, சமுதாய மூலதனமோ சம்பந்தப்பட்ட மனிதர்களில் ஒரு நபரின் மூலதனமோகூட அவருக்குத் தெரியாதிருக்கையில் 33 சத வீத நஷ்டம் என்கிற வழக்கில் சமுதாயப் பற்ருக்குறை 330 லட்சம் ஆகும் என்று அவர் விஷயப் பொருத்தத்தோடு சொல்ல முடியும்? ஆக, **மூலதனத்தை சதவிகிதங்களோடு** போட்டுக் குழப்பிக் கொண்டது அவருக்குப் போதவில்லை, ஒரு தொழில் நிறுவனத்தின் **மூலதனம்** சம்பந்தப்பட்ட தரப்பினரின் **எண்ணிக்கை** ஆகிய இரண்டும் ஒன்றே என்பதின் வழியாகத் தன்னைத் தானே மிஞ்சிவிடுகிருர்.

''விஷயத்தை இன்னும் முனைப்புடன் உணர்த்துவதற்கு'' ஒரு குறிப்பிட்ட மூலதனத்தை ''உண்மையாக அனுமானித்துக் கொள்வோம்''. 400 சதவீத சமுதாய இலாபத்தைப் பத்து லட்சம் உபயோகிப்போர்களிடையே (ஒவ்வொருவனும் ஒரு பிராங்க் அளவுக்கு அக்கறையுள்ளவனுயிருக்கிறுன்) பிரித்தால் நபருக்கு 4 பிராங்க் வீதம் இலாபம் கிடைக்கும்—திரு. புரூதோன் சொல்கிற மாதிரி 0.0004 அல்ல. அதே போல் உபயோகிப்போர்களில் ஒவ்வொருவனுக்கும் 33 சத வீத நஷ்டம் என்பது சமுதாயப் பற்ருக்குறை 330 ஆயிரம் பிராங்க் என்ருகிறது, 330 லட்சம் அல்ல (100:33=10,00,000: 3,30,000).

சமுதாயம் என்கிற நபர் பற்றிய தமது தத்துவத்தில் ஆழ்ந்துபோன திரு. புரூதோன் 100ஆல் வகுக்க மறந்து விடுகிருர், அது 3,30,000 பிராங்க் நஷ்டத்தைக் கொடுக்கிறது; எனினும் நபருக்கு 4 பிராங்க் இலாபம் என்கிற வீதத்தில் சமுதாயத்துக்கு 40 லட்சம் இலாபம் ஆகிறது. ஆக சமுதாயத்துக்கு 36 லட்சத்து 70 ஆயிரம் நிகர இலாபம் மிஞ்சுகிறது. இந்தச் சரியான கணக்கீடு திரு. புரூதோன் நிரூபிக்க விரும்பியதற்கு நேர் எதிர்மறையானதையே நிரூபிக்கிறது: அதாவது, சமுதாயத்தின் இலாப நஷ்டங்கள் தனிநபர்களின் இலாப நஷ்டங்களோடு முரணுன விகிதத்தில் இல்லை என்று.

சுத்தமான கணக்கீடு சம்பந்தப்பட்ட இந்த எளிமையான பிழைகளைத் திருத்தியதனுல், திரு. புரூதோன் இரயில்வே விஷயத்தில் வேகத்துக்கும் மூலதனத்துக்கும் கொடுக்கிற

உறவை (கணக்கீட்டிலுள்ள பிழைகளை விலக்கி) நாம் ஒப்புக் கொண்டால் நமக்குக் கிடைக்கக் கூடிய பின்விளைவு களைச் சற்றே பார்ப்போம். நான்கு மடங்கு வேகம் அதிக முள்ள ஒரு போக்குவரத்துக்கு நான்கு மடங்கு அதிகமாகச் செலவாகிறது என்று வைத்துக் கொள்வோம்; வேகத்தில் நான்கு மடங்கு குறைந்ததாயும் செலவில் கால்வாசியாகவும் இருக்கும் இந்தப் போக்குவரத்து கொடுக்கிற இலாபம் வண்டிச் சத்தத்தைவிட குறைவானதாயிராது. ஆக, வண்டிச் சத்தம் 18 சென்தீம் ஆகிறதென்ருல் இரயில் போக்குவரத்து 72 சென்தீம் எடுத்துக் கொள்ள முடியும். ''கணக்கியலின் கடுங்கண்டிப்பின்படி'' இது திரு. புரூதோனின் அனுமானங் களுக்கு (கணக்கீட்டிலுள்ள அவரது பிழைகளை எப்போதும் விலக்கிய நிலையில்) கிடைக்கிற பின்விளைவாக இருக்கும். ஆனுல் இங்கே அவர் திடீரென்று இரயில் போக்குவரத்து 72 சென்தீமுக்குப் பதிலாக 25 சென்தீம் மட்டும் எடுத்துக் கொண்டால் அது அனுப்புசரக்குகள் அனைத்தையும் இழந்து விடும் என்று சொல்கிருர். நாம் சரக்கு வண்டிகளுக்கு, பழங் காலத்திய வண்டிகளுக்குக்கூட, திரும்பிப் போய்த் தீர வேண்டியதுதான், சந்தேகமேயில்லை. ஆனுல் ஒன்று, நாம் திரு. புரூதோனுக்குக் கொடுக்க வேண்டிய அறிவுரை ஏதாவதிருந்தால் அது இதுதான், அவர் தம்முடைய **முற்போக்குச் சங்கத்தின் வேலைத்திட்டத்தில்** நூற்ருல் வகுப்பதை மறந்து விட வேண்டாம் என்று. ஆனுல், கஷ்ட காலம்! நமது அறிவுரை காதில் வாங்கிக் கொள்ளப்படுவது சந்தேகமே, ஏனெனில் அந்த ''முற்போக்குச் சங்கத்துக்கு'' பொருத்த மான தமது ''முற்போக்கான'' கணக்கீட்டில் அப்படியே மகிழ்ந்து போய் அவர் அழுத்தந்திருத்தமாகக் கூறுவதாவது: ''மதிப்பின் முரண்முழுமைக்குத் தீர்வு கண்டதின் வழியாக ஏற்கெனவே இரண்டாம் அத்தியாயத்தில் நான் காட்டியிருக் கிறேன், ஒவ்வொரு பயனுள்ள கண்டுபிடிப்பினுலும் சமு தாயத்துக்குக் கிடைக்கிற அனுகூலத்தைவிட அதைப் புனைந்த வனுக்குக் கிடைக்கிற அனுகூலம் ஒப்புநோக்க முடியாத அளவுக்குக் குறைவானதாகும், என்று. இந்த விஷயம் சம்பந்தப்பட்ட நிரூபணத்தைக் **கணக்கியலுக்குரிய கடுங்கண்டிப்பு வரை கொண்டுபோயிருக்கிறேன்!''**

சமுதாயம் என்கிற நபர் பற்றிய கட்டுக்கதைக்குத்

திரும்புவோம்; ஒரு குறிப்பிட்ட உழைப்பு அளவு முன்னைவிட பெருந் தொகையில் பண்டங்களை உற்பத்தி செய்வதைச் சாத்தியமாக்குகிற ஒரு புதுப்புனைவு விளைபொருளின் பரிமாற்ற மதிப்பைக் குறைக்கிறது என்கிற எளிய உண்மையை நிரூபிப்பதைத் தவிர இந்தக் கட்டுக்கதைக்கு வேறெந்த நோக்கமும் இல்லை. ஆகவே, மேலும் அதிகமான பரிமாற்ற மதிப்புகளைப் பெறுவதின் மூலமாக அல்லாமல் அதே மதிப்புக்கு மேலும் அதிகமான பண்டங்களைப் பெறுவதின் மூலமாக சமுதாயம் இலாபம் பெறுகிறது. புனைவாளரைப் பொருத்தவரை, போட்டியானது தொடர்படியாக அவரது இலாபத்தை இலாபங்களின் பொதுவான மட்டத்துக்கு விழும்படி செய்கிறது. இந்த முன்கூற்றைத் திரு. புரூதோன் விரும்பியபடி நிரூபித்தாரா? இல்லை. அப்படியிருந்தும் பொருளாதாரவாதிகள் அதை நிரூபிக்கத் தவறிவிட்டனர் என்று அவர்களைக் குறை கூறுமலிருக்கவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் அதை நிரூபித்துள்ளனர் என்பதை அவருக்கு நிரூபிப்பதற்காக நாம் ரிக்கார்டோவையும் லௌடர்டேலையும் மட்டும் மேற்கோள் காட்டுவோம்—உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்பை நிர்ணயிக்கிற கருத்துப் பிரிவினருக்கு ரிக்கார்டோ தலைவர், வரத்து கிருக்கிகளைக் கொண்டு மதிப்பை நிர்ணயிப்பதைச் சிறிதும் விட்டுக்கொடாமல் ஆதரிக்கிறவர்களில் ஒருவர் லௌடர்டேல். இருவரும் ஒரே முன்கூற்றை விரிவிளக்கம் செய்துள்ளனர்:

''உற்பத்தி வசதியை இடையருது அதிகப்படுத்துவதின் வழியாக அதற்குமுன் உற்பத்தி செய்யப்பட்ட சில பண்டங்களின் மதிப்பை நாம் இடையருது குறைக்கிறோம்—அதே வழியாக நாம் தேசியச் செல்வத்தை மட்டுமின்றி எதிர்கால உற்பத்தியின் ஆற்றலையும் கூட்டிக் கொள்கிறோம் என்ற போதிலும்.... அதற்குமுன் மனிதன் செய்து வந்த வேலையை இயந்திரங்களின் உதவியைக் கொண்டோ இயற்கையியல் அறிவைக் கொண்டோ இயற்கைச் சக்திகளைச் செய்ய வைத்தவுடனே அப்படிப்பட்ட வேலையின் பரிமாற்ற மதிப்பு அதற்கேற்ப வீழ்ந்துவிடுகிறது. பத்து பேர் ஒரு மாவு மில்லை சுற்றிக் கொண்டிருந்து, காற்றின் உதவியாலோ நீரோட்டத்தின் உதவியாலோ இந்தப் பத்து பேர்களின் உழைப்பைச் சிக்கனம் செய்யக் கூடும் என்று கண்டுபிடிக்கப்பட்டால்,

இந்த மில் வேலையின் ஒரு பகுதியாக விளைந்த மாவு மதிப்பில் குறைந்துவிடும்—சிக்கனம் செய்யப்பட்ட உழைப்பின் அளவுக்குத் தகவுப்பொருத்தமாக; இந்த மனிதர்கள் உயிர்வாழ்வதற்காக விதிக்கப்பட்ட நிதிகள் எந்த அளவிலும் பாதிக்கப்படாததால் இந்தப் பத்து மனிதர்களின் உழைப்பு உற்பத்தி செய்ய முடிகிற பண்டங்களால் சமுதாயத்தின் செல்வம் கூடும்.'' (ரிக்கார்டோ.)

தமது முறைக்கு லௌடர்டெல் கூறுவதாவது:

''இலாபகரமான வகையில் மூலதனம் ஈடுபடுத்தப்பட்ட ஒவ்வொரு வழக்கிலும், மனிதக் கையால் செய்யப்படக் கூடிய உழைப்பின் ஒரு பகுதியை அது அகற்றுவதிலிருந்தோ அல்லது மனிதனின் சொந்த ஆற்றலுக்கு அப்பாற்பட்ட உழைப்பின் ஒரு பகுதியை அது செய்வதின் வழியாகவோ மூலதனம் எப்போதும் சமசீராக எழுகின்றது. இயந்திரம் அகற்றிவிடுகிற உழைப்பின் கூலியோடு ஒப்புநோக்கும் போது இயந்திரவகையின் உரிமையாளர்கள் பொதுவாகப் பெறுகிற சிறு இலாபமானது இந்தக் கருத்து நேர்மையானதுதானு என்று ஒருவேளை சந்தேகத்தை உண்டாக்கலாம். எடுத்துக் காட்டாக, வாளிகளின் துணையுடன் முன்னூறு மனிதர்களின் தோள்கள் மேல் கொணரக் கூடியதைவிட அதிகமான நீரை ஒரே நாளில் நிலக்கரிச் சுரங்கக் குழியிலிருந்து சில தீயணைப்பு எஞ்ஜின்கள் எடுக்கின்றன; மற்றும் இவ்வாறு அது அகற்றுகிற உழைப்பாளிகளின் கூலித் தொகையைவிட மிகக் குறைவான செலவில் தீயணைப்பு எஞ்ஜின் வேலை செய்கிறதில் சந்தேகமேயில்லை. உண்மையிலே, எல்லா இயந்திர வகைகளின் விஷயமும் இதுதான். எல்லா இயந்திரங்களும் இவை அகற்றிவிட்ட மனிதக்கைகளால் செய்யப்பட்ட உழைப்பை மேலும் மலிவான கட்டணத்தில் செய்ய வேண்டும்.... நான்கு ஆட்களின் உழைப்பினுல் செய்து வந்த வேலையளவை ஒரு ஆளின் உழைப்பைக் கொண்டு செய்கிற ஓர் இயந்திரத்தின் புனைவுக்கு அப்படிப்பட்ட ஒரு சிறப்புரிமை வழங்கப் பட்டால், இப்படி தனியொரு சிறப்புரிமை பெற்றிருப்பது வேலையைச் செய்வதில், புதுப் புனைவினுல் வேலையிலிருந்து அகற்றப்பட்ட நான்கு ஆட்களின் போட்டியைத்தவிர மற்றெல்லாப் போட்டியையும் தடுக்கிறது, காப்புச் சான்றிதழ் நீடித்திருக்கிறவரை, அந்தத் தொழிலாளிகளின்

கூலியானது காப்புச்சான்றிதழ் பெற்றிருப்பவர் தனது விளைபொருட்களுக்குப் பெறக் கூடிய விலையை நிர்ணயிக்கும் என்பது வெளிப்படை; அதாவது தனது விளைபொருளை விற்பனை செய்வதற்கு அவர் அந்த இயந்திரம் அகற்றிவிட்ட உழைப்பின் கூலியைவிடச் சற்றுக் குறைவாக விலை பேசினுல் போதும். ஆனுல் காப்புச் சான்றிதழ் காலாவதியாகும் போது அதே தன்மைபெற்ற வேறு இயந்திரங்கள் போட்டிக்குக் கொண்டுவரப்படுகின்றன; அதன்பிறகு அவரது கட்டணம் மற்றெல்லாவற்றையும் போலவே அதே கோட்பாட்டின் பேரில்,இயந்திரங்களின் மிகுதியின்படி, ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும்.... ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் இலாபம்... உழைப்பை அகற்றுவதிலிருந்து எழுகிறதென்ருலும் அதை ஒழுங்குப் படுத்துவது அது அகற்றிய உழைப்பின் மதிப்பு அல்ல, மற்றெல்லா வழக்குகளிலும் இருப்பதுபோல மூல தனத்தின் உடைமையாளர்களிடையேயுள்ள போட்டியே அதையும் ஒழுங்குமுறைப் படுத்துகிறது; மேலும், வேலையைச் செய்வதற்கு முன்வரக் கூடிய மூலதனத்தின் அளவுக்கும் அதன் கிருக்கிக்கும் தகவுப்பொருத்தமாக அது அதிக மாகவோ கொஞ்சமாகவோ இருக்கும்.''

இனி கடைசியாக, மற்ற தொழில்களில் கிடைக்கிறதை விட இலாபம் அதிகமாகக் கிடைத்து வருகிற காலத்துக்கு, இலாப விகிதம் பொதுவான மட்டத்துக்கு வீழ்ந்துவிடுகிற வரை, அந்தப் புதிய தொழிலில் மூலதனம் போடப்படும்.

சமுதாயம் எனும் நபர் பற்றிய அவரது கட்டுக் கதையை விளக்குவதற்கு இரயில்வேயின் எடுத்துக்காட்டு பொருத்த மாயில்லை என்று இப்போது பார்த்தோம். என்றபோதிலும் திரு. புரூதோன் தைரியமாகத் தமது பேருரையை மீண்டும் நடத்துகிருர்: ''இந்த அம்சங்கள் தெளிவாக்கப்பட்டபின், எப்படி உழைப்பு ஒவ்வொரு உற்பத்தியாளனுக்கும் மிகுதியை விட்டுச்சென்று தீர வேண்டும் என்று விளக்குவதைப் போல் சுளுவானது வேறொன்றுமில்லை''.

இனித் தொடர்வது மூலச்சிறப்பு வாய்ந்த பண்டைக் காலத்தைச் சேர்ந்தது. அது கவிதைப் பண்பில் தோய்ந்த கதை, முன்சென்ற கணக்கியல் நிரூபணங்களின் கடுங்கண்டிப் பால் வாசகனுக்கு நிச்சயமாக ஏற்பட்டிருக்கக்கூடிய களைப் பைப் போக்குவது அதன் நோக்கமாகும். சமுதாயம் எனும்

நபருக்குத் திரு. புரூதோன் புரோமித்தியஸ் என்று பெயரிடுகிறார். அவனுடைய உயர்வுமிக்கச் செயல்களை இவ் வார்த்தைகளிலே மேன்மைப்படுத்துகிறார்:

''முதன்முதலாக, புரோமித்தியஸ் இயற்கையின் மார்பிலிருந்து உதித்து உயிர்பெற்று எழுகிறான், இன்பூட்டும் அசதி இன்னும் பற்றிக் கொண்டிருக்கிறது,'' என்றவாறு. ''புரோமித்தியஸ் வேலையில் முனைகிறான்; இந்த முதல் நாளன்று, இரண்டாவது படைப்பின் இந்த முதல் நாளன்று, புரோமித்தியஸின் விளைபொருள், அதாவது அவனுடைய செல்வம், அவனது வாழ்வு நலம், பத்துக்குச் சமமாக உள்ளது. இரண்டாம் நாளில் புரோமித்தியஸ் தனது உழைப்பைப் பிரிவினை செய்கிறான், அவனது விளைபொருள் நூற்றுக்குச் சமமாகிறது. மூன்றும் நாளில், அடுத்து வருகிற ஒவ்வொரு நாளிலும், புரோமித்தியஸ் இயந்திரங்களைப் புனைகிறான், பொருட்களில் பயனுள்ள புதிய தன்மைகளையும் இயற்கையில் புதிய சக்திகளையும் கண்டுபிடிக்கிறான்.... அவனது தொழில் நடவடிக்கைகளின் ஒவ்வொரு படியுடன் அவனது விளைபொருட்களின் தொகை அதிகரிக்கிறது, அவனது இன்ப நலம் உயர்வதை அது குறிக்கின்றது. மற்றும் அவன் விஷயத்தில் நுகர்வுக்காகவே உற்பத்தி என்றிருப்பதனால், முந்தைய நாளத்திய விளைபொருளை மட்டுமே பயன்படுத்துகிற நிலையில் ஒவ்வொரு நாளத்திய நுகர்வும் அடுத்து வரும் நாளைக்கு ஒரு மிகுதியான விளைபொருளை விட்டுச் செல்கிறது என்பது தெளிவு.''

திரு. புரூதோனின் இந்தப் புரோமித்தியஸ் ஒரு விந்தையான ஆசாமி, அவனது தர்க்கவியல் பலவீனமானது, அரசியல் பொருளாதாரமும் பலவீனமானது. உழைப்பின் பிரிவினை, இயந்திரங்களைச் செயல்படுத்தல், இயற்கைச் சக்திகளையும் விஞ்ஞான ஆற்றல்களையும் பயன்படுத்தல், தனித்து நின்று உழைப்பதின் விளைவுடன் ஒப்பிடுகிற போது மனிதர்களின் உற்பத்திச் சக்திகளைப் பெருக்கி ஒரு மிகுதியைக் கொடுப்பது ஆகியவற்றையெல்லாம் புரோமித்தியஸ் கற்றுக் கொடுக்கிற வரை அவனது துரதிர்ஷ்டம் அவன் காலந் தாழ்ந்து வந்திருப்பது ஒன்றுதான். ஆனால் புரோமித்தியஸ் உற்பத்தி நுகர்வு குறித்துப் பேசத் துவங்கியவுடனே அவன் உண்மையிலே நகைப்புக்கிடமாகிறான். அவன் விஷயத்தில்

நுகர்வுக்காகவே உற்பத்தி நடக்கிறது; அவன் முந்தைய நாளில் உற்பத்தி செய்ததை அடுத்த நாள் நுகர்கிறான், ஆகவே அவனுக்கு எப்போதும் ஒரு நாள் சேமிப்பு இருந்து வருகிறது, இந்த முன்சேமிப்பான ஒரு நாள் அவனது ''மிகுதி உழைப்பு'' ஆகும். ஆனால், முந்தைய நாளில் தான் உற்பத்தி செய்ததை அவன் அடுத்த நாள் நுகர்கிறானென்றால், அவன் முதல் நாளன்று, அதற்கும் முற்பட்ட ஒரு நாள் இல்லாத காரணத்தால், இரண்டு நாளத்திய வேலை செய்திருக்க வேண்டும், அப்போதுதான் பின்னால் அவனுக்கு ஒரு நாள் சேமிப்பு இருக்க முடியும். இந்த முதல் நாளன்று, உழைப்புப் பிரிவினையோ இயந்திரங்களோ நெருப்பைத் தவிர இயற்கைச் சக்திகளைப் பற்றிய அறிவோ இல்லாத நிலையில், புரோமித்தியஸ் எப்படி இந்த மிகுதியைச் சம்பாதித்தான்? எனவே, என்னதான் ''இரண்டாம் படைப்பின் முதல் நாளுக்குப்'' பிரச்சினையைத் தூக்கிச் சென்ற போதிலும் அது ஒரு அடிகூட முன்னேறவில்லை. இவ்வாறு விஷயங்களை விளக்கும் முறை கிரேக்க மொழிப் பண்பையும் ஈப்ரியூ மொழிப் பண்பையும் ஒருங்கே நினைவூட்டுவதாயுள்ளது, அது ஒரே சமயத்தில் அறிவு நிலை கடந்ததாகவும் தொடருருவகப் பண்புடையதாகவும் இருக்கிறது. அது திரு. புரூதோன் பின்வருமாறு சொல்வதற்கு உத்தமமான உரிமை கொடுக்கிறது: ''எல்லா உழைப்புக்கும் மீதம் இருந்து தீர வேண்டும் என்கிற கோட்பாட்டை நான் தத்துவத்தின் வழியாகவும் உண்மைகளைக் கொண்டும் நிரூபித்திருக்கிறேன்.''

''உண்மைகள்'' எனப்பட்டவை அந்தப் புகழ்பெற்ற முற்போக்கான கணக்கீடு; தத்துவம் எனப்பட்டது புரோமித்தியஸ் பற்றிய புராணக் கதை.

திரு. புரூதோன் தொடர்கிறார்:

''எனினும் இந்தக் கோட்பாடு கணிதவியல் உண்மைகள் போல் அத்துணை நிச்சயமானதாக இருந்துங்கூட, அதை எல்லோரும் இன்னமும் உணர்ந்தவர்களாயில்லை. கூட்டு உழைப்புத் தொழிலின் முன்னேற்றத்தையொட்டி ஒவ்வொரு நாளத்திய தனிநபர் உழைப்பும் மேன்மேலும் அதிகமான விளைபொருளை உற்பத்தி செய்கிறதாலும், மற்றும் அதன் அவசியகரமான பின்விளைவாக அதே கூலி வாங்கி வருகிற தொழிலாளி ஒவ்வொரு நாளும் செல்வப் பெருக்கம்

அடைந்து தீர வேண்டியதாயும் இருக்கும் போது, அசலில் சமுதாயத்திலே இலாபம் பெறுகிற பகுதியினரும் நலமழிந்து வருகிற பகுதியினரும் இருந்து வருகின்றனர்.''

1770ல் பிரிட்டனின் மக்கள்தொகை 150 லட்சம், உற்பத்தியிலீடுபட்டுள்ள மக்கள்தொகை 30 லட்சம். உற்பத்தியின் விஞ்ஞான ஆற்றல் கூடுதலாகச் சுமார் 120 லட்சம் நபர்களுக்குச் சமமாயிருந்தன. ஆகவே, மொத்தத்தில் உற்பத்திச் சக்திகள் 150 லட்சமாக இருந்தது. ஆக, உற்பத்திச் சக்தியும் மக்கள்தொகையும் ஒன்றுக்கு ஒன்று என்கிற வீதாச்சாரத்தில் இருந்தன, விஞ்ஞான ஆற்றலும் மனித ஆற்றலும் நான்குக்கு ஒன்று என்கிற வீதாச்சாரத்தில் இருந்தன.

1840ல் மக்கள்தொகை 300 லட்சத்துக்கு மேல் போகவில்லை: உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மக்கள்தொகை 60 லட்சம். ஆனுல் விஞ்ஞான ஆற்றல் 65 கோடியாக இருந்தது; அதாவது, அது மொத்த மக்கள்தொகையுடன் 21க்கு ஒன்று என்கிற வீதாச்சாரத்தில் இருந்தது, மனித ஆற்றலுடன் 108க்கு ஒன்று என்கிற வீதாச்சாரத்தில் இருந்தது.

ஆக, ஆங்கிலேய சமுதாயத்தில் வேலைநாளின் உற்பத்தித் திறன் எழுபது வருடங்களில் 2,700 சதவீதமாக அதிகரித்து விட்டது; அதாவது, 1770ல் ஒரு நாளில் செய்தது போல் 27 மடங்கு அதிகமாக 1840ல் உற்பத்தி செய்தது. திரு. புருதோன் கருத்துப்படி பின்வரும் கேள்வி எழுப்பித் தீர வேண்டும்: 1770ன் ஆங்கிலேயத் தொழிலாளி இருந்ததுபோல் 27 மடங்கு அதிகமாக ஏன் 1840ன் தொழிலாளி செல்வப் பெருக்கம் அடையவில்லை? இப்படிப்பட்ட கேள்வியை எழுப்புகிற போது, இந்தச் செல்வத்தை உற்பத்தி செய்வதற்கிருந்த வரலாற்று நிலைமைகள்—தனிப்பட்டவர்களின் மூலதனத் திரட்சி, நவீனகால உழைப்புப் பிரிவினை, இயந்திரவகைப் பட்ட தொழிற்சாலைகள், அராஜகமான போட்டி, கூலி உழைப்பு முறை, சுருங்கச் சொன்னுல் வர்க்கப் பகைமையை அடிப்படையாகக் கொண்டதனைத்தும்—இல்லாமலேயே ஆங்கிலேயர்கள் இந்தச் செல்வத்தை உற்பத்தி செய்திருக்க முடியும் என்று அனுமானித்துக் கொள்வது இயல்பு. நிற்க, இவையேதான் உற்பத்திச் சக்திகளின், மிகுதி உழைப்பின் வளர்ச்சிக்குரிய அவசியகரமான வாழ்நிலைமைகளாகும். எனவே, இந்த உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியையும் இந்த

மிகுதி உழைப்பையும் பெறுவதற்கு இலாபமடிக்கிற வர்க்கங்களும் நலிந்து வருகிற வர்க்கங்களும் இருந்தாக வேண்டியிருந்தது.

இறுதியிலே, திரு. புரூதோன் புத்துயிரூட்டி எழுப்பிவிட்ட இந்த புரோமித்தியஸ் யார்? அதுதான் சமுதாயம் எனப்பட்டது, வர்க்கப் பகைமையை அடிப்படையாகக் கொண்ட சமுதாய உறவுகள் எனப்பட்டவை. இவ்வுறவுகள் தனிநபருக்கும் தனிநபருக்கும் இடையேயுள்ள உறவுகள் அல்ல, தொழிலாளிக்கும் முதலாளிக்கும், விவசாயிக்கும் நிலப்பிரபுவுக்கும் என்றவாறு இடையேயிருக்கக் கூடிய உறவுகளாகும். இந்த உறவுகளே அழிப்பது சமுதாயம் முழுவதையும் அழிக்கிறதாகும், உங்களுடைய புரோமித்தியஸ் கையும் காலும் இல்லாத ஆவி தவிர வேறில்லே—அதாவது, இயந்திர வகைப்பட்ட தொழிற்சாலேகளோ உழைப்புப் பிரிவினேயோ, சுருங்கச் சொன்னுல் அவன் இந்த மிகுதி உழைப்பைப் பெறச் செய்வதற்காகத் தொடக்கத்தில் அவனுக்கு நீங்கள் கொடுத்தவை எவையும் இல்லாத ஆவி.

பிறகு, திரு. புரூதோன் செய்வது போல், தத்துவரீதியிலே மிகுதி உழைப்பு பற்றிய சூத்திரத்தைச் சமநிலேவாதத்தின் பொருளில், அசல் உற்பத்தி நிலேமைகளேக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், வியாக்கியானம் செய்தாலே போதும் என்ருகிவிட்டால், நடைமுறை ரீதியிலே இன்றைய உற்பத்தி நிலேமைகளே எவ்வழியேயும் மாற்ருமலேயே இன்று பெறப்பட்டுள்ள செல்வமனேத்தையும் தொழிலாளிகளிடையே சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தாலே போதும் என்ருகிவிடும். பங்கெடுத்துக் கொண்ட நபர்களுக்கு இப்படிப்பட்ட வினியோகம் ஒரு உயர் தரமான சௌகரியத்தை நிச்சயமாக உறுதி செய்யாது.

ஆனுல் நாம் நினேக்கக் கூடிய மாதிரி திரு. புரூதோன் அவ்வளவு நம்பிக்கை வறட்சியடைந்துவிடவில்லே. அவருக்குத் தகவுப் பொருத்தமே எல்லாம் என்றிருக்கிறபடியால், தமது முழு ஆயத்தத்தில் உள்ள புரோமித்தியஸிடம்—அதாவது, இன்றையச் சமுதாயத்தில்—தமது செல்லக் கருத்தின் நடைமுறை வெளிப்பாட்டுக்குரிய தொடக்கங்களேப் பார்த்துத் தீர வேண்டியவராகிருர்.

''ஆனுல் எங்குமே செல்வத்தின் முன்னேற்றம், அதாவது மதிப்புகளின் தகவுப் பொருத்தம், ஆதிக்கம் பெற்ற விதியா

யுள்ளது; மற்றும் சமுதாயக் கட்சியின் முறையீடுகளுக்கு எதிராகப் பொருளாதாரவாதிகள் பொதுச் செல்வத்தின் முன்னேறி வரும் வளர்ச்சியையும் மிகவும் நலங்கெட்ட நிலையிலிருக்கும் வர்க்கங்களின் மேம்படுத்தப்பட்ட நிலைமைகளையும் எடுத்துக்காட்டுகிற போது அவர்கள் தங்களையறியாமலே தமது தத்துவங்களுக்குக் கண்டனமாக அமைகிற ஒரு உண்மையைப் பறைசாற்றுகின்றனர்.''

அசலில் கூட்டுச் செல்வம், சமுதாயச் செல்வம் என்பது என்ன? அது முதலாளி வர்க்கத்தின் செல்வந்தான்—குறிப்பிட்ட ஒவ்வொரு முதலாளியின் செல்வமல்ல. அப்படியானால் சரி, இன்றிருக்கும் உற்பத்தி நிலைமைகளில் எப்படி முதலாளி வர்க்கத்தின் செல்வம் வளர்ந்திருக்கிறது, மேலும் வளர்ந்துதீர வேண்டும் என்று காட்டுவதைத் தவிர வேறெதையும் பொருளாதாரவாதிகள் செய்யவில்லை. தொழிலாளி வர்க்கத்தைப் பொருத்தமட்டில், பொதுச் செல்வம் என்று சொல்லப்படுவது அதிகரித்ததின் விளைவாக அவர்களின் நிலை மேம்பட்டிருக்கிறதா என்பது இன்னமும் மிகவும் விவாதத்திற்குரிய ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகிறது. தமது நம்பிக்கைப் பார்வைக்கு ஆதரவாகப் பஞ்சாலைத் தொழிலில் வேலை பார்க்கும் ஆங்கிலேயத் தொழிலாளிகளின் எடுத்துக்காட்டைப் பொருளாதாரவாதிகள் குறிப்பிடுவார்களேயானால், அபூர்வமான வாணிபச் செழுமை நிலவும் அரிய தருணங்களில் மட்டுமே அந்தத் தொழிலாளர்களின் நிலையை அவர்கள் பார்க்கின்றனர். இந்தச் செழுமைத் தருணங்கள் நெருக்கடி, தேக்கம் ஆகியவற்றின் காலப்பகுதிகளோடு பத்துக்கு மூன்று என்கிற ''உண்மையான தகவும் பொருத்தத்தில்'' உள்ளன. ஆனால், மேம்பாட்டைப் பற்றிப் பேசுகிற பொழுது, இதே தொழிலில் ஈடுபட்டுள்ள பதினைந்து லட்சம் ஆங்கிலேயத் தொழிலாளிகளுக்குப் பத்து ஆண்டுகளில் மூன்றாண்டுச் செழுமை பெற்றுத் தருவதற்காகக் கிழக்கிந்தியப் பரப்பில் மடிந்து போக வேண்டியிருந்த லட்சக் கணக்கான தொழிலாளிகளைப் பற்றிப் பொருளாதாரவாதிகள் ஒருவேளை சிந்தித்துக் கொண்டிருக்கலாம்.

பொதுச் செல்வத்தின் அதிகரிப்பில் தற்காலிகமாகப் பங்குபெறுவதென்பது வேறு விஷயம். தற்காலிகமான பங்கு பெறுதலைப் பொருளாதாரவாதிகளின் தத்துவம் விளக்குகிறது. அது இந்தத் தத்துவத்தை உறுதிப்படுத்துகிறது,

திரு. புரூதோன் சொல்வதுபோல் அது இந்தத் தத்துவத்தைக் ''கண்டனம்செய்வது'' அல்ல. கண்டிக்கத்தக்கது எதுவாயினும் இருக்குமேயானுல் அது திரு. புரூதோனின் அமைப்பு முறையேயாகும், நாம் காட்டியுள்ளபடி செல்வம் அதிகரித்திருந்த போதிலும் குறைந்தபட்சக் கூலி மட்டத்துக்குத் தொழிலாளியைத் தாழ்த்த விரும்புகிருர் அவர். தொழிலாளியைக் குறைந்தபட்சக் கூலி மட்டத்துக்குத் தாழ்த்துவதின் வழியாக மட்டுமே அவர் மதிப்புகளின் உண்மையான தகவுப் பொருத்தத்தையும் உழைப்பு நேரத்தால் ''உருவமைக்கப் பெற்ற மதிப்பையும்'' செயல்படுத்த இயலும். கூலியானது, தொழிலாளி உயிர் வாழ்வதற்கு அவசியமான சாதனங்களின் விலைகளுக்கு—போட்டியின்விளைவாக—ஒரு சமயம் மேலேயும் ஒரு சமயம் கீழேயுமாக ஊசலாடுவதின் காரணமாக சமுதாயச் செல்வத்தின் வளர்ச்சியிலே ஓரளவுக்குப் பங்கெடுத்துக் கொள்ள முடியும், அதே காரணமாகத் தான் வறுமையினுல் சாகவும் முடியும். இவ்விஷயத்தில் பிரமைகளேதும் இல்லாத பொருளாதாரவாதிகளின் தத்துவம் முழுவதுமே இதுதான்.

இரயில்வேக்கள், புரோமித்தியஸ், ''உருவமைக்கபெற்ற மதிப்பு'' மீது மறுநிர்மாணம் செய்யப்படவிருக்கும் புதிய சமுதாயம் பற்றியெல்லாம் நீண்ட, தடம்புரண்ட உரைகள் நிகழ்த்தியபின் திரு. புரூதோன் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கிருர்; அவருக்கு உணர்ச்சி மேலிடுகிறது, தந்தைப் பாங்குள்ள தொனியிலே குரலொலிக்கிருர்:

''ஒரு விஞடி, மன அமைதியுடன்—தங்களைப் பீடிக்கும் விருப்புவெறுப்புகளுக்கு அப்பால் நின்று, தாங்கள் வகிக்கிற பதவியையோ கிடைக்கப் போவதாக நம்பும் பதவியையோ பொருட்படுத்தாமல், தாங்கள் துணைபோகி உதவும் நலன்களையோ விரும்பித் தேடுகிற பாராட்டையோ பொருட்படுத்தாமல், தமது தற்பெருமைக்கு ஊட்டமளிக்கும் சிறப்புப் பட்டங்களையும் பொருட்படுத்தாமல் — பொருளாதாரவாதிகள் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ளட்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன்,—எல்லா உழைப்பும் ஒரு மிகுதியை விட்டுச் சென்று தீர வேண்டும் என்கிற கோட்பாடு நான் வெளிப்படுத்திய மூலக்கூற்றுகளின் பின்விளைவுகளின் சங்கிலித் தொடரிலே இதற்குமுன் தங்களுக்குத் தோன்றியதுண்டா என்று அவர்கள் சொல்வார்களாக.''

அத்தியாயம் 2

அரசியல் பொருளாதாரத்தின் இயக்கமறுப்புவாதம்

§ 1. ஆய்வுமுறை

இதோ, நாம் ஜெர்மனிக்கு வந்துவிட்டோம்! இனி நாம் அரசியல் பொருளாதாரம் பற்றிப் பேசும் போது இயக்க மறுப்புவாதம் குறித்துப் பேச வேண்டும். இதிலும் நாம் திரு. புரூதோனின் ''முரண்பாடுகளை'' அடியொற்றிச் செல்வோம். இப்பொழுதுதான் நம்மை ஆங்கிலம் பேசக் கட்டாயப்படுத்தி நம்மை நல்ல ஆங்கிலேயர்களாக்கிவிட்டார். இனி காட்சி மாறுகிறது. திரு. புரூதோன் நம்மை நமது அருமைத் தாய்த் திருநாட்டுக்குக் கொண்டு சென்று, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மீண்டும் ஜெர்மானியர்களாகிவிடக் கட்டாயப்படுத்துகிறார்.

ஆங்கிலேயன் மனிதர்களைத் தொப்பிகளாக உருமாற்று கிறான் என்றால், ஜெர்மானியன் தொப்பிகளைக் கருத்துக் களாக உருமாற்றுகிறான். அந்த ஆங்கிலேயன் ரிக்கார்டோ, பணக்கார பேங்கர், சிறந்த பொருளாதாரவாதி; அந்த ஜெர்மானியன் ஹெகல், பெர்லின் பல்கலைக் கழகத்தில் உள்ள சாதாரண மெய்யறிவுப் பேராசிரியர்.

கடைசியாக வந்த வரம்பிலா அதிகாரம் பெற்ற மன்ன னும் பிரெஞ்சு முடியரசு சீரழிவதற்குரிய பிரதிநிதியுமான பதினைந்தாம் லுயீ தன்னோடு ஒரு மருத்துவரை வைத்திருந் தார், அவர் பிரான்ஸ் நாட்டின் முதல் பொருளாதாரவாதி யுங்கூட. இந்த மருத்துவர், இந்தப் பொருளாதாரவாதி, பிரெஞ்சு முதலாளி வர்க்கம் சாதிக்கவிருந்த நிச்சயமான வெற்றியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். டாக்டர் கெனே அரசியல் பொருளாதாரத்தை ஒரு விஞ்ஞானமாக்கினார்; அதைத் தமது புகழ்பெற்ற பொருளாதார அட்டவணையில் சுருக்கித் தந்தார். இதன்மீது வெளிவந்த ஆயிரக் கணக்கான

விளக்கவுரைகள் தவிர அவரே அளித்த விளக்கவுரையும் ஒன்றுண்டு. அதுதான் ''பொருளாதார அட்டவணையின் பகுப்பாய்வும்'' அதைத் தொடர்ந்த ''ஏழு முக்கியமான ஆய்வுக் கூற்றுகளும்''[41] எனப்படுவது.

திரு. புரூதோன் மற்றொரு டாக்டர் கெனே. அவர் அரசியல் பொருளாதாரத்தின் இயக்கமறுப்புவாதத்தின் கெனேயாவார்.

நிற்க. ஹெகல் கருத்துப்படி, இயக்கமறுப்புவாதத்தை— ஏன், எல்லா மெய்யறிவையுங்கூட — ஆய்வுமுறையில் தொகுத்தளிக்க முடியும். எனவே, நாம் திரு. புரூதோனின் ஆய்வுமுறையைத் தெளிவாக்க முயல வேண்டும், அதுவும் பொருளாதார அட்டவணை போலவே தெளிவில்லாதிருக்கிறது. இந்தக் காரணத்தால்தான் நாம் ஏழு ஏறத்தாழ முக்கியமான ஆய்வுக்கூற்றுகளை வைக்கிறோம். எமது ஆய்வுக்கூற்றுகள் திரு. புரூதோனுக்குப் பிடித்தமாயில்லை என்றால்—சரிதான், அவரே ஒரு போதோ பாதிரியார் ஆகி, தானே ''பொருளாதார-இயக்கமறுப்புவாத ஆய்வுமுறையின் விளக்கத்தை'' அளித்துத் தீர வேண்டும்.[42]

முதல் ஆய்வுக்கூற்று

''நாம் ஒரு வரலாற்றைக் கால ஒழுங்கில் தராமல் கருத்துக்களின் தொடர்வரிசையில் தருகிறோம். பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களோ வகையினங்களோ அவற்றின் வெளிப்பாட்டில் சில சமயங்களில் சமகாலத்தவையாகவும் சில சமயங்களில் எதிர்மாறாகவும் உள்ளன.... என்றபோதிலும் பொருளாதாரத் தத்துவங்கள் அவற்றிற்குரிய தர்க்க ரீதியான தொடர்வரிசையும், புரிந்து கொள்வதிலுள்ள வரிசை ஒழுங்கு உறவும் பெற்றுள்ளன; இந்த ஒழுங்கைத்தான் நாம் கண்டுபிடித்துள்ளதாகப் பெருமை பாராட்டிக் கொள்கிறோம்.'' (புரூதோன், தொகுதி 1, பக்கங்கள் 145-146.)

திரு. புரூதோன் பிரெஞ்சுக்காரர்களின் முகத்தில் அரைகுறையான ஹெகல் சொற்றொடர்களை வீசியெறிந்து மருட்ட விரும்பினார் என்பது உறுதியிலும் உறுதியாகும். எனவே நாம் இரண்டு பேர்வழிகளைக் கவனித்துக் கொள்ள

வேண்டியிருக்கிறது: முதலில் திரு. புரூதோன், அடுத்து ஹெகல் என்று. திரு. புரூதோன் தம்மை மற்ற பொருளாதாரவாதிகளிடமிருந்து எப்படி வேறுபடுத்திக் கொள்கிருர்? மேலும், திரு. புரூதோனின் அரசியல் பொருளாதாரத்தில் ஹெகல் வகிக்கும் பாத்திரம் என்ன?

முதலாளித்துவ உற்பத்தி உறவுகளான உழைப்புப் பிரிவினை, கடன் மதிப்பு, பணம் முதலியவற்றை நிலைபேறுடைய, மாற்றவொண்ணுத, நிரந்தரமான வகையினங்களாகப் பொருளாதாரவாதிகள் காட்டுகிருர்கள். தயார் நிலையிலே தம் எதிரே உள்ள இவ்வகையினங்களை வைத்துக் கொண்டு திரு. புரூதோன் இந்த வகையினங்கள், கோட்பாடுகள், விதிகள், கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியவை அமைவுற்றதின் செய்கையை, அவற்றின் தோற்றத்தை நமக்கு விளக்க விரும்புகிருர்.

மேலே சொன்ன உறவுகளில் எப்படி உற்பத்தி நிகழ்கிறது என்பதைப் பொருளாதாரவாதிகள் விளக்குகிருர்கள், ஆனுல் இந்த உறவுகளே எப்படி உற்பத்தியாகின்றன என்பதை—அதாவது, அவற்றை ஈன்றெடுத்த வரலாற்று இயக்கத்தை—விளக்குவதில்லை. திரு. புரூதோன் இந்த உறவுகளைக் கோட்பாடுகளாகவும் வகையினங்களாகவும் சூட்சுமக் கருத்துக்களாகவும் எடுத்துக் கொண்டு—ஒவ்வொரு அரசியல் பொருளாதார விரிவாய்வுரையின் முடிவிலும் அகரவரிசையிலே கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் கருத்துக்களை — வெறுமே **ஒழுங்குபடுத்துவதுதான்** மிஞ்சக் கூடிய வேலை. பொருளாதாரவாதிகளுக்கு விஷயாதாரம் மனிதனின் செயலூக்கமுள்ள சுறுசுறுப்பான வாழ்க்கை; திரு புரூதோனுக்கு விஷயாதாரம் பொருளாதாரவாதிகளின் வறட்டுக் கோட்பாடுகள். உற்பத்தி உறவுகளின் (இவற்றின் தத்துவரீதியான சொல்லுருவே இந்த வகையினங்கள்) வரலாற்று இயக்கத்தைப் பின்பற்றிச் செல்லாமல் நின்றவுடனே, இந்த வகையினங்களிலே உண்மையான உறவுகளுக்கு அப்பால் சுதந்தரமாக இருக்கும் கருத்துக்களையும் தன்னியல்பான எண்ணங்களையும் மட்டுமே காண விரும்பியவுடனே, இந்த எண்ணங்களுக்குத் தோற்றுவாய் சுத்தமான பகுத்தறிவு என்று கற்பித்துக் கொள்ளும் கட்டாயம் ஏற்படுகிறது. சுத்தமான, நிரந்தரமான, நபர்சார்பற்ற பகுத்தறிவு

எப்படி இந்த எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது? அவற்றை உற்பத்தி செய்வதற்கு அது எப்படிக் கிளம்புகிறது?

ஹெகல்வாத விஷயத்தில் திரு. புரூதோனுக்கு இருக்கிற துணிச்சல் நமக்கு இருந்தால் நாம் இவ்வாறு சொல்ல வேண்டியிருக்கும்: அது தன்னுள்ளே தன்னிடமிருந்தே வேறுபடுத்திய நிலையிலே இருக்கிறது என்று. இதற்குப் பொருள் என்ன? நபர்சார்பற்ற பகுத்தறிவுக்குத் தன்னை நிலையூன்றிக் கொள்வதற்குத் தனக்கு அப்பாற்பட்ட ஆதாரமும் இல்லை, எதிர்நிலை கொள்வதற்குப் புறநிலைப் பொருளும் இல்லை, தன்னைக் கூட்டிணைத்துக் கொள்வதற்கு அகநிலைப் பொருளும் இல்லை என்றிருப்பதால் அது தன்னையே நிலைப்படுத்திக் கொள்வதிலும் எதிர்த்துக் கொள்வதிலும் இணைத்துக் கொள்வதிலும்—நிலைபாடு, எதிர்ப்பாடு, இணைபாடு என்று—குட்டிக்கரணம் போட வேண்டிய நிர்ப்பந்தமேற்படுகிறது. அல்லது, கிரேக்க மொழியிலே சொல்வதானல்—முதலுரை, எதிருரை, கூட்டுரை என்று நமக்குக் கிடைக்கிறது.* ஹெகல் பாணி சொல்லாட்சி தெரியாதவர்களுக்கு இந்தத் தீட்சையளிக்கும் சூத்திரத்தை வழங்குவோம்:— நிலையிருப்பு, நிலைமறுப்பு, நிலைமறுப்பின் நிலைமறுப்பு என்று. சொல்லாட்சியென்ருல் அதுவே பொருள். அது நிச்சயமாக ஈப்ரியூ மொழியல்ல (திரு. புரூதோனிடம் உரிய மன்னிப்புக் கோருகிறேம்); நபரிடமிருந்து தனித்திருக்கும் சுத்தமான பகுத்தறிவின் மொழி அது. சாதாரணமான பேசும் பாணியும் சிந்திக்கும் பாணியும் உள்ள சாதாரண மனிதனுக்குப் பதிலாக அந்த நபரை விலக்கிய நிலையில் தன்னேடு நிற்கிற பாணிதான் நமக்குக் கிடைக்கிறது.

சூட்சுமக் கருத்தின் கடைசி நிலையிலான எல்லாமே—ஏனெனில் இங்கு இருப்பது ஒரு சூட்சுமக் கருத்து மட்டுமே, பகுப்பாய்வு அல்ல—ஒரு தர்க்க வகையினமாகக் காட்சியளிப்பதில் வியப்புண்டா? ஒரு வீட்டுக்குத் தனித்தன்மை அளிக்கிறதாயுள்ள எல்லாவற்றையும் சிறுகச்சிறுக நீக்கிக் கொண்டே வந்தால் முதலில் அது கட்டப்படுவதற்குரிய பொருட்களை விட்டுவிடுவது, பிறகு அதை வேறுபடுத்திக்காட்டு

* —'முதலுரை', 'எதிருரை', 'கூட்டுரை' பொருளுள்ள சொற்களின் கிரேக்கச் சொற்களான 'thesis', 'antithesis', 'synthesis' ஆகும்.—[பதிப்பாசிரியர்.]

கிற அதன் வடிவத்தை விட்டுவிடுவது என்ருனல் கடைசியிலே மிஞ்சுவது ஒரு கருத்துப் பொருளே; இந்தப் பொருளின் வரம்புகளையும் கணக்கிலிருந்து நீக்கிவிட்டால் விரைவிலே ஒரு அண்டவெளிக் கருத்து தவிர வேறிருக்காது, கடைசியிலே இந்த வெட்டவெளியின் பரிமாணங்களையும் நீக்கிவிட்டால் தர்க்க வகையினம் என்கிற சுத்தமான கருத்துருப் பொருள் தவிர வேறெதுவும் இராது என்பதில் வியப்புண்டா? இவ்வாறு நாம் ஒவ்வொரு பொருளிலிருந்தும் அதன் உயிர்ப்புள்ள அல்லது உயிர்ப்பற்ற, மனித வகைப்பட்ட அல்லது பொருள் வகைப்பட்ட எல்லா முக்கியமற்ற பண்புகளையும் பிரித்துவிட்டால் சூட்சுமப்படுத்துவதின் கடைசி நிலையில் எஞ்சியிருப்பது தர்க்க வகையினங்கள் மட்டுந்தான் என்று நாம் சொல்வது சரி. ஆக, இயக்கமறுப்புவாதிகள் இந்தச் சூட்சுமக் கருத்துக்களைச் செய்கிறதில் தாங்கள் பகுப்பாய்வுகள் செய்வதாக நினைக்கிருர்கள், அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அசல் பொருள்களிலிருந்து துண்டித்துக் கொண்டு போகிருர்களோ அவ்வளவுக்கவ்வளவு அந்தப் பொருள்களை நெருங்கிச் செல்வதாகவோ பொருள்களினுள் ஊடுருவுவதாகவோ நினைத்துக் கொள்கிருர்கள்—ஆகவே, தர்க்க வகையினங்கள் என்பவை திரைச்சீலை, அதன் மேல் புனைந்த பூவேலையே கீழேயுள்ள இந்தப் பொருள்கள் என்று இந்த இயக்கமறுப்பவாதிகள் தம் முறைக்குச் சொல்வதும் சரி. தர்க்கவியல் எப்படியிருந்த போதிலும் கிறித்தவனுக்கு Logos—தெய்வ அறிவு—ஒரே அவதாரம்தான் உண்டு; மெய்யறிஞன் இன்னமும் அவதாரங்களுக்கு முழுக்குப் போட்டாகவில்லை — இதுவே மெய்யறிஞனைக் கிறித்தவனிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. சூட்சுமக் கருத்துக்கள் வழியாக, நிலத்திலும் நீரிலும் வாழ்கிறதனைத்தையும், இருந்து வருகிறதனைத்தையும் ஒரு தர்க்க வகையினமாகச் செய்ய முடிந்தால்—யதார்த்த உலகமனைத்தையும் இவ்வாறு சூட்சுமக் கருத்துக்களின் உலகத்தில், தர்க்க வகையினங்களின் உலகத்தில், மூழ்கடிக்க முடிந்தால்—யாராவது வியப்படையத் தேவையுண்டா?

நிலத்திலும் நீரிலும் இருந்து வருகிறதனைத்தும் வாழ்கிறதனைத்தும் ஏதாவது ஒரு வகை இயக்கத்தைக் கொண்டு மட்டுமே இருக்கின்றன, வாழ்கின்றன. இவ்வழியே வரலாற்றின் இயக்கம் சமுதாய உறவுகளை உண்டுபண்ணுகிறது;

தொழில்துறை இயக்கம் தொழிற் பொருட்களைத் தருகிறது, என்றவாறு.

சூட்சுமக் கருத்தைக் கொண்டு எல்லாவற்றையும் ஒரு தர்க்க வகையினமாக உருமாற்றியிருக்கிறது போலவே, வெவ்வேறு இயக்கங்களின் வேறுபடுத்திக் காட்டும் ஒவ்வொரு சிறப்பியல்பையும் ஒருவன் விலக்கிவிட்டால் போதும், சூட்சும வடிவமான இயக்கம்—சுத்தமான வடிவார்ந்த இயக்கம், இயக்கத்தின் சுத்தமான தர்க்க சூத்திரம்—கிடைத்துவிடும். எல்லாப் பொருட்களின் உட்பொருளையும் ஒருவன் தர்க்க வகையினங்களில் கண்டால், இயக்கத்தின் தர்க்க சூத்திரத்தில் **பரம நிலையிலுள்ள ஆய்வுமுறையை** — அது எல்லாப் பொருட்களையும் விளக்குவதோடல்லாமல் எல்லாப் பொருட்களின் இயக்கத்தையும் உட்கிடையாகக் கூறுகிறதாம்—கண்டுகொண்டதாக நினைத்துக் கொள்கிறான்.

இந்தப் பரம நிலையிலுள்ள ஆய்வுமுறையைப் பற்றித் தான் இச்சொற்களில் ஹெகல் பேசுகிறார்: ''ஆய்வுமுறை பரமமான, அலாதியான, உன்னதமான, முடிவில்லாத சக்தி, அதை எந்தப் புறநிலைப் பொருளும் எதிர்க்க முடியாது; தன்னை மீண்டும் கண்டு கொள்வது, ஒவ்வொரு புறநிலைப் பொருளிலும் தன்னை இனங்கண்டு கொள்வது பகுத்தறிவின் போக்காகும்.'' (**தர்க்கவியல்,** தொகுதி *3*.[43]) எல்லாப் பொருட்களையும் ஒரு தர்க்க வகையினத்துக்குக் குறுக்கிவிடலாம் என்றால், ஒவ்வொரு இயக்கத்தையும் ஒவ்வொரு உற்பத்திச் செய்கையையும் ஓர் ஆய்வுமுறைக்குக் குறுக்கிவிடலாம் என்றால் இயல்பாக அதைத் தொடர்ந்து விளைபொருள்களும் உற்பத்தியும், பொருள்களும் இயக்கமும் ஆகியவற்றின் ஒவ்வொரு முழுத்தொகுதியும், செயல்பாட்டு வகைப்பட்ட இயக்கமறுப்புவாதத்தின் ஒரு வடிவத்துக்குக் குறுக்கிவிட முடியும் என்றாகும். மதம், சட்டம் முதலானவற்றிற்கு ஹெகல் என்ன செய்தாரோ அதை அரசியல் பொருளாதாரத்துக்குத் திரு. புரூதோன் செய்ய முயல்கிறார்.

ஆக, இந்தப் பரம நிலையிலுள்ள ஆய்வுமுறை என்பது என்ன? இயக்கத்தின் சூட்சுமக் கருத்து. இந்த இயக்கத்தின் சூட்சுமக் கருத்து என்பதென்ன? சூட்சும நிலையிலிருக்கிற இயக்கம். சூட்சும நிலையிலுள்ள இயக்கம் என்பதென்ன? இயக்கத்தின் சுத்தமான தர்க்க சூத்திரம் அல்லது சுத்தமான

பகுத்தறிவின் இயக்கம். சுத்தமான பகுத்தறிவின் இயக்கம் எதில் அடங்கியுள்ளது? தன்னைத் தானே நிலைப்படுத்திக் கொள்வதிலும் எதிர்த்துக் கொள்வதிலும் கூட்டிணைத்துக் கொள்வதிலும்; முதலுரை, எதிருரை, கூட்டுரை என்று தன்னைத்தானே வரையறுத்துக் கொள்வதில்; அல்லது, நிலையிருப்பு, நிலைமறுப்பு, நிலைமறுப்பின் நிலைமறுப்பு என்பதில்.

பகுத்தறிவு எப்படி ஒரு குறிப்பிட்ட வகையினத்தில் தன்னைத்தானே நிலைப்படுத்திக் கொள்ளவும் இருத்துக் கொள்ளவும் செய்ய முடிகிறது? அது பகுத்தறிவின், அதன் பரிந்துரையாளர்களின், விவகாரமாகும்.

ஆனல் அது தன்னை ஒரு முதலுரையாக நிலைப்படுத்திக் கொண்டதுமே இந்த முதலுரை, இந்தக் கருத்து, தன்னையே எதிர்த்துக் கொள்கிற நிலையில், இரண்டு முரண்பட்ட கருத்துக்களாக—நேரியல்பு எதிரியல்பு என்று, 'உண்டு' 'இல்லை' என்று—பிரிகிறது. எதிருரையில் உள்ள இவ்விரண்டு பகைமையான அம்சங்களிடையேயுள்ள போராட்டம் இயக்கவியல் ரீதியான இயக்கமாகும். 'உண்டு' என்பது 'இல்லை' என்ருகிறது, 'இல்லை' என்பது 'உண்டு' என்ருகிறது, 'உண்டு' என்பது ஒருங்கே 'உண்டு' 'இல்லை' என்ருகிறது, 'இல்லை' என்பது ஒருங்கே 'இல்லை' 'உண்டு' என்ருகிறது, எதிர்மாறுகள் ஒன்றையொன்று சமனப்படுத்திக் கொள்கின்றன, ஈடுகொடுத்துக் கொள்கின்றன, முடமாக்கிக் கொள்கின்றன. இவ்விரண்டு முரண்பட்ட கருத்துக்களின் ஒன்றிணைப்பு ஒரு புதிய கருத்தாக அமைகிறது, அது அவற்றின் கூட்டுரை ஆகும். இந்தக் கருத்து மறுபடியும் இரண்டு முரண்பட்ட கருத்துக்களாகப் பிரிகிறது, இவ்விரண்டும் தம்முறைக்கு ஒரு புதிய கூட்டுரையாக ஒன்றிணைகின்றன. இந்தப் பிரசவத்திலிருந்து ஒரு கருத்துக்களின் குழு உதிக்கிறது. இந்தக் கருத்துக்களின் குழுவும் அந்த எளிய வகையினம் போல அதே இயக்கவியல் ரீதியான இயக்கத்தைப் பின்பற்றுகிறது, அதற்கு எதிருரையாக ஒரு முரண்பட்ட கருத்துக்குழு இருக்கிறது. இவ்விரண்டு கருத்துக் குழுக்களிலிருந்து ஒரு புதிய கருத்துக் குழு உதிக்கிறது, இது அவற்றின் கூட்டுரை ஆகும்.

எளிய வகையினங்களின் இயக்கவியல் ரீதியான இயக்கத்திலிருந்து ஒரு குழு உதித்தது போல, குழுக்களின் இயக்கவியல் ரீதியான இயக்கத்திலிருந்து வரிசைத் தொடர் பிறக்

கிறது, வரிசைத் தொடர்களின் இயக்கவியல் ரீதியான இயக் கத்திலிருந்து அமைப்பு முறை முழுவதும் பிறக்கிறது.

இந்த ஆய்வுமுறையை அரசியல் பொருளாதாரத்தின் வகையினங்களுக்குச் செயல்படுத்தினுல் அரசியல் பொருளா தாரத்தின் தர்க்கவியலும் இயக்கமறுப்புவாதமும் கிடைக் கிறது—அதாவது, எல்லோருக்கும் தெரிந்திருக்கும் பொரு ளாதார வகையினங்களை அநேகமாக யாருக்கும் தெரியாத மொழியில் பெயர்த்துச் சொல்லி அவை சுத்தமான பகுத்தறி வின் மூளையிலிருந்து புதிதாக மலர்ந்தவையாகக் காட்டு வதாகும்; அந்த அளவுக்கு இந்த வகையினங்கள் இயக்கவியல் ரீதியான இயக்கத்தின் செய்கையாலே ஒன்றையொன்று தோற்றுவித்துக் கொள்வது போலவும் ஒன்ருேடொன்று இணைந்து பின்னிப்பிணைந்து கொள்வது போலவும் தோன்று கிறது. இந்த வகையினங்கள், குழுக்கள், வரிசைத் தொடர் கள், அமைப்பு முறைகள் என்பவற்றின் சாரக்கட்டுமானங் களையெல்லாம் கொண்ட இயக்கமறுப்புவாதத்தைக் கண்டு வாசகன் மிரண்டுவிடக் கூடாது. திரு. புரூதோன் முரண்பாடு களின் அமைப்பு முறையின் உச்சிகளை ஏறிப்பிடிக்க எவ்வளவோ பாடுபட்ட போதிலும், எளிதான முதலுரை, எதிருரை எனும் முதல் இரண்டு படிகளுக்கு மேல் அவரால் ஏற முடிய வில்லை, அவற்றிலுங்கூட இரண்டு தடவைதான் ஏறியிருக் கிருர், அந்த இரண்டு தடவைகளில் ஒரு தடவை பின்புற மாகச் சாய்ந்து வீழ்ந்துவிட்டிருக்கிருர்.

இதுவரை நாம் ஹெகலின் இயக்கவியலை மட்டுமே விளக் கினேம். அதை மிகவும் மட்டமான அளவுக்குத் தாழ்த்து வதில் எப்படி திரு. புரூதோன் வெற்றி பெற்றிருக்கிருர் என்று பின்னுல் பார்ப்போம். ஆக, ஹெகலைப் பொருத்த வரை, நடந்து முடிந்தவையும் நடந்து கொண்டிருப்பவையு மாகிய அனைத்துமே வெறுமே அவரது சொந்த மனத்திலே நடக்கிறவைதாம். ஆக, வரலாற்றின் மெய்யறிவு என்பது மெய்யறிவின், தமது மெய்யறிவின், வரலாறு தவிர வேறென்றுமில்லை. இனிமுதல் ''கால ஒழுங்கில் அமைந்த வரலாறு'' ஒன்றுங் கிடையாது, ''புரிந்து கொள்வதிலேயிருக் கிற கருத்துக்களின் வரிசைத் தொடர்'' மட்டுமே உள்ளது. எண்ணத்தின் இயக்கத்தாலே தாம் உலகத்தை நிர்மாணிப் பதாக அவர் நினைக்கிருர் என்ருலும் அவர் செய்வதென்ன

வோ எல்லோருடைய மனத்திலும் உள்ள எண்ணங்களை பரமநிலைவகைப்பட்ட ஆய்வுமுறையைக் கொண்டு முறை யாக மறுநிர்மாணம் செய்து வகைப்படுத்துகிறதைத் தவிர வேறில்லை.

இரண்டாவது ஆய்வுக்கூற்று

பொருளாதார வகையினங்கள் எனப்பட்டவை உற்பத்தியின் சமுதாய உறவுகளின் தத்துவரீதியான சொல்லுருக்களே, சூட்சுமக் கருத்துகளே தவிர வேறில்லை. உண்மையான மெய்யறிஞரைப் போல திரு. புரூதோன் பொருள்களைத் தலைகீழாகப் பிடித்து நிறுத்திக்கொண்டு, யதார்த்தத்திலுள்ள உறவுகளிலே கோட்பாடுகளின், வகையினங்களின் அவதாரத்தைத் தவிர வேறெதையும் பார்க்கவில்லை; அப்படி அவதாரம் எடுக்குமுன் இந்தக் கோட்பாடுகளும் வகையினங்களும் ''மனிதகுலத்தின் நபர்சார்பற்ற பகுத்தறிவின்'' நெஞ்சிலே துஞ்சியவாறு இருந்தன என்கிறார் திரு. புருதோன் என்கிற மெய்யறிஞர்.

திரு. புரூதோன் என்கிற பொருளாதாரவாதிக்கு நன்றாகப் புரியும், மனிதர்கள் திட்டவட்டமான உற்பத்தி உறவுகளிலே இருந்து கொண்டு கம்பளி, பஞ்சு, பட்டுத் துணிகளைச் செய்கிறார்கள் என்று. ஆனால், கம்பளி, பஞ்சு முதலான துணிகளை உற்பத்தி செய்வது போலவே இந்தத் திட்டவட்டமான உற்பத்தி உறவுகளையும் மனிதர்களே உற்பத்தி செய்கிறார்கள் என்பதைத்தான் அவர் புரிந்து கொள்ளவில்லை. சமுதாய உறவுகள் உற்பத்திச் சக்திகளோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. புதிய உற்பத்திச் சக்திகளைப் பெறுவதிலே மனிதர்கள் தமது உற்பத்தி முறையை மாற்றிக் கொள்கிறார்கள், உற்பத்தி முறையையும் தமது வாழ்க்கைக்கான சம்பாதிக்கும் முறையையும் மாற்றிக் கொள்வதிலே தங்களுடைய சமுதாய உறவுகள் அனைத்தையும் மாற்றி விடுகிறார்கள். கையால் ஓட்டி மாவரைக்கும் இயந்திரம் உங்களுக்கு நிலப்பிரபுவைக் கொண்ட சமுதாயத்தைக் கொடுக்கிறது; நீராவியால் ஓடுகிற இயந்திரம் தொழில்துறை முதலாளியைக் கொண்ட சமுதாயத்தைக் கொடுக்கிறது.

தமது பொருள் உற்பத்திற்குரிய தரத்துக்குப் பொருத்தமாகத் தமது சமுதாய உறவுகளை நிறுவிக் கொள்கிற அதே

மனிதர்கள்தாம் அந்தச் சமுதாய உறவுகளுக்குப் பொருத்த மாகக் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் வகையினங்களை யும் உற்பத்தி செய்கிறார்கள்.

ஆகவே, இந்தக் கருத்துக்களும் இந்த வகையினங்களும் வெளியிடுகிற உறவுகள் எந்த அளவுக்கு நிரந்தரமானவையாக இல்லையோ அதே அளவுக்குத் தாமும் நிரந்தரமானவை அல்ல. அவை **வரலாற்றுரீதியான, தற்காலிகமான விளை பொருட்களே.**

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலே, சமுதாய உறவு களின் அழிவிலே, கருத்துக்களின் உருவாக்கத்திலே ஒரு இடை யறாத இயக்கம் இருக்கிறது. மாற்றவொண்ணாத ஒரே விஷ யம் இயக்கத்தின் சூட்சுமத் தன்மையேயாகும் — mors immortalis—சாகா வரம் பெற்ற சாவு.[44]

மூன்றாவது ஆய்வுக்கூற்று

ஒவ்வொரு சமுதாயத்தின் உற்பத்தி உறவுகள் ஒரு முழு மையாகும். திரு. புரூதோன் பொருளாதார உறவுகளை எத் தனையோ சமுதாயக் கட்டங்களாகவும் ஒன்றையொன்று பிறப் பித்துக் கொள்கிறதாகவும், முதலுரையிலிருந்து எதிருரை விளைவது போல ஒன்றிலிருந்து மற்றொன்று விளைவது போல வும், அவற்றின் தர்க்கரீதியான தொடர்வரிசையில் மனித குலத்தின் நபர்சார்பற்ற பகுத்தறிவை நடைமுறைப்படுத்து வதாகவும் கருதுகிறார்.

இந்த ஆய்வுமுறையின் ஒரேயொரு குறைபாடு, திரு. புரூதோன் இந்தக் கட்டங்களில் ஒன்றையெடுத்துப் பரி சீலிக்கப் புகும் போது சமுதாயத்தின் மற்றெல்லா உறவுகளை யும்—அவற்றைத் தமது இயக்கவியல் ரீதியான இயக்கத்தைக் கொண்டு இன்னமும் பிறப்பித்துக் கொள்ளாத நிலையிலே— துணைக்கு அழைத்துக் கொள்ளாமல் அதை விளக்க முடிய வில்லை. அதன்பிறகு, திரு. புரூதோன் சுத்தமான பகுத்தறி வைக் கொண்டு இந்த மற்ற கட்டங்களைப் பிறப்பித்துக் கொள்ளும் போது அவற்றைப் புதிதாகப் பிறந்த குழந்தை களைப் போல் பாவித்து நடத்துகிறார். முதல் குழந்தை போல அவையும் அதே வயதுள்ளவைதான் என்பதை அவர் மறந்து விடுகிறார்.

ஆக, அவரது கருத்தில் எல்லாப் பொருளாதார வளர்ச்சி

களுக்கும் அடிப்படையாயிருக்கிற மதிப்பின் உருவமைப்புக்கு வந்து சேருவதற்கு உழைப்புப் பிரிவினை, போட்டி, முதலிய வற்றை அவரால் விலக்கி வைக்க முடியவில்லை. ஆனால் குறிப் பிட்ட வரிசைத் தொடரில், திரு. புரூதோனின் மூளையில், தர்க்கரீதியான தொடர் வரிசையில் என்னவோ இந்த உறவுகள் இன்னமும் உருக்கொண்டு வாழ்ந்திருக்கவில்லை.

அரசியல் பொருளாதாரத்தின் வகையினங்களைக் கொண்டு ஒரு தத்துவார்த்த அமைப்புமுறையின் கட்டடத்தை நிர் மாணிப்பதில் சமுதாய அமைப்புமுறையின் உறுப்புக்கள் பிய்த்தெடுக்கப்படுகின்றன. சமுதாயத்தின் வெவ்வேறு உறுப் புக்கள் எத்தனையோ தனித்தனியான சமுதாயங்களாக, ஒன்றையொன்று தொடர்ந்து வருபவையாக, மாற்றப்படு கின்றன. உண்மையிலே பார்த்தால், இயக்கத்தின், தொடர் வரிசையின், காலத்தின் தனியொரு தர்க்க சூத்திரம் எப்படி எல்லா உறவுகளையும் ஒரேகாலத்தில் அக்கம்பக்கமாக இருந்து ஒன்றையொன்று ஆதரித்து வருகிற நிலையில் கொண்டுள்ள சமுதாயத்தின் கட்டுக்கோப்பை விளக்க முடியும்?

நான்காவது ஆய்வுக்கூற்று

அரசியல் பொருளாதாரத்துடன் பொருத்திச் செயல் படுத்துகையில் ஹெகலின் இயக்கவியலில் திரு. புரூதோன் என்னென்ன திருத்தங்கள் செய்கிறார் என்று இப்போது பார்ப் போம்.

ஒவ்வொரு பொருளாதார வகையினத்துக்கும் நல்ல அம்சம் தீய அம்சம் என்று இரண்டு அம்சங்கள் உண்டு என்பது திரு. புரூதோன் கருத்து. அவர் இந்த வகையினங்களைப் பார்ப்பது ஒரு சிறுபூர்ஷ்வா நபர் வரலாற்றின் மாமனிதர் களைப் பார்ப்பது போல இருக்கிறது: நெப்போலியன் ஒரு மாமனிதர்; அவர் நிறைய நன்மை செய்தார், நிறைய தீமை யும் செய்தார், என்கிற மாதிரி.

நல்ல அம்சம் தீய அம்சம், நிறைகள் குறைகள், இவற்றை ஒருசேர எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு பொருளாதார வகையினத்தின் முரண்பாடு அமைகிறது என்பது திரு. புரூதோன் கருத்து.

தீர்க்க வேண்டிய பிரச்சினை: தீய அம்சத்தை ஒழித்து விட்டு நல்ல அம்சத்தைக் காத்து நிறுத்துவது.

மற்றெதையும் போலவே அடிமை முறையும் ஒரு பொருளாதார வகையினம். ஆகவே அதற்கும் அதன் இரண்டு அம்சங்கள் உண்டு. அடிமை முறையின் தீய அம்சத்தை விட்டுவிட்டு அதன் நல்ல அம்சத்தைப் பற்றிப் பேசுவோம். நாம் நேரடியான அடிமைமுறையைத்தான், ஸுரிஞமிலும் பிரேஸிலிலும் வட அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களிலும் உள்ள நீக்ரோ அடிமைமுறையைத்தான் இங்கே கவனிக்கிறோம் என்று சொல்லத் தேவையில்லை.

இயந்திரவகைகள், கடன் மதிப்புகள் முதலியவற்றைப் போலவே நேரடியான அடிமை முறையும் முதலாளித்துவத் தொழில்துறைக்கு அச்சாணியாகும். அடிமை முறை இன்றேல் பருத்தி இல்லை, பருத்தி இன்றேல் நவீனகாலத் தொழில்துறை இல்லை. காலனிகளின் மதிப்பு அடிமை முறையிலிருந்து வரப்பெற்றதேயாகும்; இந்தக் காலனிகள் உலக வாணிபத்தைப் படைத்தன, இந்த உலக வாணிபந்தான் பெருமளவான தொழில்துறைக்குரிய முன்நிபந்தனையாகும். ஆக, அடிமை முறை ஆகமிக முக்கியமான ஒரு பொருளாதார வகையினம்.

நாடுகளிலே மிகவும் முன்னேறியதான வட அமெரிக்கா அடிமை முறை இல்லையேல் ஒரு தந்தைவழி ஆட்சிக் கால நாடாக மாறிவிடும். உலக நிலப்படத்திலிருந்து வட அமெரிக்காவை அழித்துவிட்டால் அராஜகந்தான் — நவீனகால வர்த்தகம், நாகரிகம் ஆகியவற்றின் முற்றுன சீரழிவுதான்— இருக்கும். அடிமை முறையை மறையச் செய்துவிட்டால் உலக நாடுகளின் படத்திலிருந்து அமெரிக்காவை அழித்துவிட்டதாகிவிடும்.*

ஆகவே, அடிமை முறை ஒரு பொருளாதார வகையினம் என்கிற காரணத்தால் மக்களினங்களின் அமைப்புகளிலே அது எப்போதும் இருந்து வந்துள்ளது. நவீனகால நாட்டினங்கள் தத்தம் நாடுகளில் அடிமை முறையை மறைக்கத்

---

* 1847ம் ஆண்டுக்கு இது முற்றிலும் சரியாகும். அக்காலத்தில் அமெரிக்காவின் உலக வாணிபம் முக்கியமாகக் குடியேறிகளையும் தொழிற் பொருட்களையும் இறக்குமதி செய்து பருத்தியையும் புகையிலையையும்—அதாவது, தென் மாநிலங்களின் அடிமைகளின் உழைப்பால் விளைகிற பொருட்களை —ஏற்றுமதி செய்கிற வரம்புக்குட்பட்டிருந்தது. இந்த அடிமை முறையுள்ள தென் மாநிலங்களுக்கு வட மாநிலங்கள்

தான் முடிந்தது, ஆனுல் புதிய உலகத்தில் (அமெரிக்காவில்) அதை ஒளிவு மறைவின்றிச் சுமத்தியுள்ளன.

அடிமை முறையைப் பாதுகாப்பதற்குத் திரு. புரூதோன் என்ன செய்வார்? அவர் பிரச்சினையை இவ்வாறு வரையறுப்பார்: இவ்வகையினத்தின் நல்ல அம்சத்தை வைத்துக் கொண்டு தீய அம்சத்தை ஒழித்துவிடுங்கள், என்று.

வரையறுப்பதற்கு ஒரு பிரச்சினையும் ஹெகலுக்கு இல்லை. அவருக்கு இருப்பது இயக்கவியல் ஒன்றுதான். திரு. புரூதோனுக்கு உள்ளது ஹெகலின் இயக்கவியல் அல்ல, அதன் சொல்லாட்சி மட்டுந்தான். அவருக்கு இயக்கவியல் ரீதியான இயக்கம் என்பது நன்மைக்கும் தீமைக்கும் இடையே தனித்தன்மையை வறட்டுக் கோட்பாடு வகையிலே காண்பது தான்.

திரு. புரூதோனையே ஒரு வகையினமாக எடுத்து ஒரு கணம் பார்ப்போம். அவரது நல்ல அம்சத்தையும் தீய அம்சத்தையும், நிறைகளையும் குறைகளையும் பரிசீலிப்போம்.

மனிதகுலத்தின் மேலான நன்மைக்காகத் தீர்வு காணும் உரிமை தமக்கு உண்டு என்கிற முறையிலே பிரச்சினைகளை எழுப்புவதில் ஹெகலுக்கு இல்லாத நிறை அவருக்கு உண்டு என்று சொன்னுல், இயக்கவியல் ரீதியான பிரசவம் மூலமாக ஒரு புதிய வகையினத்தைப் பெற்றெடுக்கிற பிரச்சினை வரும் போது மலடாகிவிடுகிற குறையும் அவருக்கு உண்டு. இரண்டு முரண்பாடான அம்சங்கள் ஒருங்கே கூடியிருத்தலும், அவற்றின் போராட்டமும், அவை ஒரு புதிய வகையினமாக ஒருங்கிணைதலும் இயக்கவியல் ரீதியான இயக்கத்தில் அமைந்

முக்கியமாகத் தானியங்களும் இறைச்சியும் உற்பத்தி செய்து கொடுத்தன. வட மாநிலங்கள் ஏற்றுமதிக்காகத் தானியத்தையும் இறைச்சியையும் உற்பத்தி செய்து மற்றும் ஒரு தொழில் வளமான நாடாகவும் ஆன பிறகுதான், அமெரிக்காவின் பருத்தி ஏகபோகமானது இந்தியா, எகிப்து, பிரேஸில் முதலிய நாடுகளில் பலமான போட்டியை எதிர் கொள்ள வேண்டி நேரிட்ட போதுதான், அடிமை முறையை ஒழிப்பது சாத்தியமாயிற்று. அப்பொழுதுங்கூட, அது தென் மாநிலங்களின் அழிவுக்குக் கொண்டுபோய்விட்டது; அவை வெளிப்படையான நீக்ரோ அடிமை முறைக்குப் பதிலாக மறைவான இந்திய, சீனக் கூலிகளின் அடிமை முறையை வைத்துக் கொள்வதில் வெற்றி பெறவில்லை.—[1885 ஜெர்மன் பதிப்புக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் வரைந்த குறிப்பு.]

துள்ளது. தீய அம்சத்தை ஒழித்திடுவதாகப் பிரச்சினையைப் போடுவதே இயக்கவியல் ரீதியான இயக்கத்தைக் குறுக்கிட்டு நிறுத்திவிடுவதாகும். தனது முரண்பட்ட இயல்பின் காரண மாகத் தன்னையே நிலைப்படுத்திக் கொண்டும் எதிர்த்துக் கொண்டும் இருப்பது வகையினம் அல்ல, திரு. புரூதோன்தான் வகையினத்தின் இரு அம்சங்களிடையே மாட்டிக் கொண்டு படபடப்பும் கலக்கமும் பதற்றமும் அடைகிறார்.

இவ்வாறு ஒரு முட்டுச்சந்திலே அகப்பட்டுக் கொண்டு, அதிலிருந்து சட்ட வழிவகைகளைக் கொண்டு தப்பித்து வருவது கஷ்டமாயிருக்கிற நிலையில், திரு. புரூதோன் எகிறிக்கு தித்து ஒரே பாய்ச்சலில் ஒரு புதிய வகையினத்துக்கு வந்து சேருகிறார். அப்போதுதான் அவரது வியப்பிலாழ்ந்த பார் வையிலே மூளையிலுள்ள வரிசைத் தொடர் உறவு புலப்படுகிறது.

வசதியாகக் கிடைக்கிற முதல் வகையினத்தை அவர் எடுத்துக் கொண்டு, தூய்மைப்படுத்த வேண்டியிருக்கிற வகையினத்தின் குறைகளுக்குப் பரிகாரம் அளிக்கிற குணத்தை அதற்குத் தான்தோன்றித்தனமாகக் கற்பிக்கிறார். ஆக, நாம் திரு. புரூதோனை நம்புவதானால், ஏகபோகத்தின் குறை களுக்கு வரிகள் பரிகாரம் அளிக்கின்றன, வரிகளின் குறை களுக்கு வாணிபத் துறைக் கணக்குச் சமனம் பரிகாரம் அளிக் கிறது, கடன் மதிப்பின் குறைகளுக்கு நிலச்சொத்து பரிகாரம் அளிக்கிறது.

இவ்வாறு வரிசையாக ஒன்றன்பின்னொன்றாகப் பொருளா தார வகையினங்களை எடுத்துக் கொண்டு ஒன்றுக்கு மற்றொன் றை மாற்று மருந்தாகச் செய்வதின் வழியே, இந்த முரண் பாடுகளையும் முரண்பாடுகளுக்கான மாற்று மருந்துகளையும் அடங்கிய கலவையை வைத்துக் கொண்டு அவர் முரண்பாடு களின் இரண்டு நூல் தொகுதிகளை உண்டாக்க முடிகிறது; அவற்றிற்குப் பொருளாதார முரண்பாடுகளின் அமைப்பு முறை என்கிற தலைப்பு கொடுத்திருப்பதும் மெத்த சரி.

ஐந்தாவது ஆய்வுக்கூற்று

''பரமநிலைப் பகுத்தறிவில் இந்தக் கருத்துக்களெல்லாம்... சம எளிமை உள்ளவை, பொதுவானவை.... உண்மையாகப் பார்த்தால், நமது கருத்துக்களின் ஒரு மாதிரியான சாரக்கட்டு

மானத்தை வைத்துக் கொண்டுதான் நாம் அறிவை எட்டிப் பிடிக்கிறோம். ஆனால் உண்மை தன்னைப் பொருத்தவரை இந்த இயக்கவியல் உருவகங்களுக்கு அப்பால் சுயேச்சையாக இருந்து வருவதாகும், நமது மனங்களின் கூட்டுகளிலிருந்து விடுபட்டிருப்பதாகும்.'' (புரூதோன், தொகுதி 2, பக்கம் 97.)

இங்கே சடேரென்று, ஒரு திடீர் திருப்பலின் மூலமாக (அதன் இரகசியம் இப்போது நமக்குத் தெரிந்ததுதான்) அரசியல் பொருளாதாரத்தின் இயக்கமறுப்புவாதம் ஒரு பொய்த் தோற்றம் ஆகிவிட்டது! இவ்வளவு உண்மையாகத் திரு. புரூதோன் என்றைக்கும் பேசியதில்லை. சொல்லப் போனால், நன்மையையும் தீமையையும் எதிர்நிலையிலே நிறுத்துகிற, தீமையை ஒழிப்பது நோக்கமாயுள்ள பிரச்சினைகளைக் கிளப்புகிற, ஒரு வகையினத்துக்கு மாற்று மருந்தாக மற்றொரு வகையினத்தைக் கொடுக்கிற ஒரு எளிமையான இயக்கப் போக்காக இயக்கவியலின் இயக்கத்தைத் தாழ்த்துகிற தருணத்திலிருந்து வகையினங்களின் தன்னியல்பு அனைத்தும் பறிபோகிறது; கருத்து ''செயற்படுவது நின்றுவிடுகிறது''; அதில் உயிர் ஏதும் மிஞ்சவில்லை. அது இனிமேல் வகையினங்களாக நிலைப்படுத்தப்படவோ கலைக்கப்படவோ இல்லை. வகையினங்களின் தொடர் வரிசை ஒரு மாதிரியான சாரக் கட்டுமானமாக ஆகிவிட்டது. இயக்கவியல் பரமநிலைப் பகுத்தறிவின் இயக்கமாக இல்லாது நின்று போய்விட்டது. இனி முதல் இயக்கவியல் என்று ஒன்றும் கிடையாது, அதிகப்பட்சமாகப் போனால் பரம சுத்தமான அறநெறி மட்டுமே உண்டு.

மூளையிலுள்ள வரிசைத் தொடர் பற்றியும், வகையினங்களின் தர்க்க வரிசைத் தொடர் பற்றியும் திரு. புரூதோன் பேசியபோது அவர் வரலாற்றைக் கால ஒழுங்கில் — அதாவது, திரு. புரூதோன் கருத்துப்படி வகையினங்கள் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட வரலாற்றுத் தொடர் வரிசையில் —கொடுக்க விரும்பவில்லை என்று நேருறுதியாகப் பிரகடனப் படுத்தினார். எல்லாமே பகுத்தறிவு எனும் சுத்தமான அண்ட வளியில் நிகழ்கின்றன என்பது அவர் கருத்து. இயக்கவியல் மூலமாக இந்த அண்ட வளியிலிருந்து அனைத்தும் பெறப்பட வேண்டும். இந்த இயக்கவியலை இப்போது அவர் நடைமுறை

யில் செயலாக்க வேண்டி வருகிற போது அவரது பகுத்தறிவு கடமையாற்றத் தவறுகிறது. திரு. புரூதோனின் இயக்க வியல் ஹெகலின் இயக்கவியலுக்கு எதிராகச் செல்கிறது, தாம் பொருளாதார வகையினங்களைக் கொடுக்கிற ஒழுங்கு இனிமேல் அவை ஒன்றையொன்று பிறப்பித்துக் கொள்கிற ஒழுங்கு அல்ல என்று இப்போது திரு. புரூதோன் சொல்ல வேண்டியதாகிவிட்டது. இனி முதல் பொருளாதாரப் பரிணாமங்கள் பகுத்தறிவின் பரிணாமங்கள் அல்ல.

பிறகு திரு. புரூதோன் நமக்கு வழங்குவதுதான் என்ன? கால ஒழுங்கில் வகையினங்கள் **தம்மை வெளிப்படுத்திக் கொண்ட** தொடர்வரிசை என்றவாறு திரு. புரூதோன் புரிந்து கொண்டிருக்கிற உண்மையான வரலாற்றையா? இல்லை! கருத்துக்குள்ளேயே நடக்கிறபடியான வரலாற்றையா? அதுவும் இல்லை. அதாவது, வகையினங்களின் மனிதச் சார்பான வரலாறும் இல்லை, தெய்வச்சார்பான வரலாறும் இல்லை! பிறகு அவர் கொடுக்கும் வரலாறு என்ன? தமது சொந்த முரண்பாடுகளின் வரலாறுதான். அவை எப்படிப் போகின்றன, அவை தம் போக்கில் திரு. புரூதோனை எப்படி இழுத்துச் செல்கின்றன, என்று பார்ப்போம்.

ஆறுவது முக்கியமான ஆய்வுக் கூற்றை எழுப்புகிற இந்தப் பரிசீலனையில் இறங்குமுன் நாம் மற்றொரு, குறைந்த முக்கியத்துவமுள்ள ஆய்வுக்கூற்று அளிக்க வேண்டியிருக் கிறது.

கருத்துக்களும் வகையினங்களும் கோட்பாடுகளும் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட வரலாற்றுத் தொடர் வரிசையே கால ஒழுங்குக்குப் பொருத்தமான வரலாறு, உண்மையான வரலாறு என்று திரு. புரூதோனுடன் ஒத்துப் போவோம்.

ஒவ்வொரு கோட்பாடும் தன்னை வெளிப்படுத்திக் கொள் வதற்குத் தனக்கென்று ஒரு நூற்றுண்டு பெற்றிருந்தது. எடுத்துக்காட்டாக, அதிகாரமுறைக் கோட்பாட்டுக்குப் பதி னென்றும் நூற்றுண்டு இருந்தது, தனிநபர்வாதக் கோட்பாட் டுக்குப் பதினெட்டாம் நூற்றுண்டு இருந்தது போல. தர்க்கத் தொடர் வரிசையில், நூற்றுண்டுதான் கோட்பாட்டுக்குச் சொந்தமாயிருந்ததே தவிர கோட்பாடானது நூற்றுண் டுக்குச் சொந்தமாயிருக்கவில்லை. அதாவது, கோட்பாடுதான்

வரலாற்றைப் படைத்ததே தவிர வரலாறு கோட்பாட்டைப் படைக்கவில்லை. எனவே, கோட்பாடுகளையும் வரலாற்றையும் ஒருங்கே பாதுகாக்கும் பொருட்டு, ஒரு குறிப்பிட்ட கோட்பாடு வேறெதாவது நூற்றுண்டிலல்லாமல் பதினொன்றும் நூற்றுண்டிலோ பதினெட்டாம் நூற்றுண்டிலோ ஏன் வெளிப்படுத்தப்பட்டது என்று நம்மை நாமே கேட்டுக் கொள்கிற காலத்தில், பதினொன்றும் நூற்றுண்டில் மனிதர்கள் எப்படி இருந்தார்கள், பதினெட்டாம் நூற்றுண்டில் அவர்கள் எப்படி இருந்தார்கள், முறையே அவர்களின் தேவைகள், அவர்களின் உற்பத்திச் சக்திகள், அவர்களின் உற்பத்தி முறைகள், அவர்களின் உற்பத்திக்குரிய கச்சா பொருட்கள்—சுருங்கச் சொன்னுல், இந்த வாழ்க்கை நிலைமைகளிலிருந்து விளைந்தனவாக மனிதர்களிடையேயிருந்த உறவுகள்—என்ன என்று நாம் நுணுக்கமாகப் பரிசீலிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினைகளின் அடியாழத்துக்குச் சென்று கண்டு கொள்வது என்று சொன்னுல் அது ஒவ்வொரு நூற்றுண்டிலும் உள்ள மனிதர்களின் உண்மையான, மனிதச்சார்பான வரலாற்றை வரைவதும் தமது சொந்த நாடகத்தின் ஆசிரியர்களும் அவர்களே நடிகர்களும் அவர்களே என்று அந்த மனிதர்களைக் காட்டுவதும் தவிர வேறென்ன? ஆனுல் மனிதர்களைத் தமது சொந்த வரலாற்றின் ஆசிரியர்களாகவும் நடிகர்களாகவும் ஒருங்கே காட்டியவுடனே நீங்கள்—ஒரு சுற்றுப் பாதையிலே—உண்மையான தொடக்கப் புள்ளிக்கு வந்து சேருகிறீர்கள், ஏனெனில் நீங்கள் தொடக்கத்தில் பேசிய அந்த நிரந்தரமான கோட்பாடுகளைக் கைவிட்டவர்களாகிறீர்கள்.

வரலாற்றின் நெடுஞ்சாலையை அடைவதற்கு ஒரு தத்துவாசிரியன் பின்பற்றிச் செல்கிற சுற்றுப் பாதையிலே வேண்டிய தொலைவுக்குத் திரு. புருதோன் நடக்கவில்லை.

ஆறுவது ஆய்வுக்கூற்று

திரு. புருதோனுடன் நாம் சுற்றுப் பாதையில் செல்வோம்.

செயலூக்கமும் ஆற்றல் துடிப்புமுள்ள மனிதர்கள் இருந்ததற்கு முன்பே, மாற்றவொண்ணு விதிகள், நிரந்தரமான

கோட்பாடுகள், இலட்சிய வகைப்பட்ட வகையினங்கள் என்கிறபடி பொருளாதார உறவுகள் இருந்ததாக ஒப்புக் கொள்வோம்; இந்த விதிகளும் கோட்பாடுகளும் வகையினங்களும் ஆதிகாலத்திலிருந்தே ''மனிதகுலத்தின் நபர்சார்பற்ற பகுத்தறிவில்'' துஞ்சியவாறிருந்தன என்றும் ஒப்புக் கொள்வோம். இந்த மாற்றமில்லாத, இயக்கமில்லாத சாசுவதங்களையெல்லாம் வைத்துக் கொண்டால் வரலாறு என்று எதுவும் மிஞ்சவில்லை என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம்; அதிகப்பட்சமாகப் போனால் கருத்திலேயுள்ள வரலாறுதான், அதாவது சுத்தமான பகுத்தறிவின் இயக்கவியல் ரீதியான இயக்கத்தில் பிரதிபலிக்கிற வரலாறுதான் உண்டு. இயக்கவியல் ரீதியான இயக்கத்திலே கருத்துக்கள் இனிமேல் வேறுபடுத்தப்படவில்லை என்று திரு. புரூதோன் சொன்னதின் வழியாக, குறைந்தபட்சம் வரலாற்றின் ஒரு சாயலையாவது படைக்கமுடிகிறதாகப் பயன்படக் கூடிய இயக்கத்தின் நிழலுருவத்தையும் நிழலுருவங்களின் இயக்கத்தையும் ஒருங்கே அழித்துவிட்டார். அதற்குப் பதிலாக, தமது சொந்தத் திறமையின்மையை வரலாற்றுக்குக் கற்பிக்கிறார். எல்லாவற்றையும், பிரெஞ்சு மொழியையுங்கூட, அவர் குறை கூறுகிறார். திரு. புரூதோன் என்கிற மெய்யறிஞர் கூறுவதாவது: ''ஆகவே இன்னது தோன்றுகிறது, இன்னது உற்பத்தி செய்யப்படுகிறது என்று கூறுவது சரியல்ல: நாகரிகத்திலும் சரி, பிரபஞ்சத்திலும் சரி, எல்லாமே முதலும்முடிவும் அற்ற காலத்திலிருந்து இருந்து வந்துள்ளன, செயலாற்றி வந்துள்ளன.... இது சமுதாயப் பொருளாதாரம் முழுவதற்கும் பொருந்தும்.'' (தொகுதி 2, பக்கம் 102.)

தாமும் செயலாற்றி திரு. புரூதோனையும் செயலாற்ற வைக்கிற முரண்பாடுகளின் ஆக்கல் சக்தி எவ்வளவோ மகத்தானதாக இருக்கிற காரணத்தால், அவர் வரலாற்றை விளக்க முயலும் போது அதை மறுக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு உண்டாகிறது; சமுதாய உறவுகளின் வரிசையொழுங்கான தோற்றத்தை அவர் விளக்க முயலும் போது எதுவும் தோன்ற முடியாது என்று மறுக்கிறார்; உற்பத்தியையும் அதன் எல்லாக் கட்டங்களையும் அவர் விளக்க முயலும் போது எதையும் உற்பத்தி செய்ய முடியுமா என்று கேள்வி எழுப்புகிறார்!

ஆக, இனிமேல் திரு. புரூதோனுக்கு வரலாறு என்று ஒன்றுங் கிடையாது, கருத்துக்களின் வரிசைத் தொடர் எதுவும் கிடையாது. அப்படியிருந்தும் அவரது நூல் என்னவோ இன்னமும் இருக்கத்தான் செய்கிறது; இதே நூல்தான், அவரது சொற்களிலே சொல்வதென்ருல், 'கருத்துக்களின் வரிசைத் தொடருக்குப் பொருத்தமான வரலாறு'' ஆகும். திரு. புரூதோன் சூத்திரங்களைப் படைக்கிற மனிதரல்லவா, எனவே இந்த முரண்பாடுகளை ஒரே பாய்ச்சலில் தாண்டிச் செல்வதற்கு அவருக்கு உதவுகிற ஒரு சூத்திரத்தை நாம் எப்படித் தேடிப்பிடிப்பது?

இந்த நோக்கத்திற்காக அவர் ஒரு புதிய பகுத்தறிவைப் புனைந்திருக்கிருர், அது சுத்தமான கன்னியழியாத பரம நிலைப் பகுத்தறிவும் அல்ல, வெவ்வேறு காலப்பகுதிகளில் வாழ்ந்தும் செயல் புரிந்தும் வருகிற மக்களின் பொதுவான பகுத்தறிவும் அல்ல, அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட பகுத்தறிவு அது, அது சமுதாயம் எனும் நபரின் பகுத்தறிவு, மனிதகுலம் எனும் அகப்பொருளின் பகுத்தறிவு—அது திரு. புரூதோனின் எழுத்தில் சில சமயங்களில் சமுதாய மேதையாகவோ பொதுவான பகுத்தறிவாகவோ அல்லது கடைசியிலே மனிதப் பகுத்தறிவாகவோகூட உருக்கொள்கின்றது. என்ற போதிலும், இப்படிப் பல பெயர்களிலே தன்னை அழகுபடுத்திக் கொண்டு கிளம்புகிற இந்தப் பகுத்தறிவு ஒவ்வொரு தருணத்திலும் திரு. புரூதோனின் தனிப்பட்ட பகுத்தறிவாக—அதன் நல்ல அம்சத்தோடும் தீய அம்சத்தோடும், அதன் மாற்று மருந்துகளோடும் பிரச்சினைகளோடும் கூடியதாய்—தன்னைத் தானே காட்டிக் கொடுத்துக் கொள்கிறது.

பரமநிலையிலுள்ள, நிரந்தரமான பகுத்தறிவின் ஆழத்திலே மறைந்திருக்கும் ''உண்மையை மனிதப் பகுத்தறிவு படைக்கிறதில்லை''. அது அதை வெளிப்படுத்தத்தான் முடியும். ஆனல் இதுவரை அது வெளிப்படுத்தியிருக்கும் உண்மைகள் முழுமையின்றியும் போதாக்குறையாகவும் எனவே முரண்பட்டும் உள்ளன. எனவே, மனிதப் பகுத்தறிவால், சமுதாய மேதையால் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளாக இருக்கிற பொருளாதார வகையினங்களும் தம் முறைக்கு முழுமையின்றியும் தமக்குள்ளே முரண்

பாட்டின் விதையை உள்ளடக்கிக் கொண்டும் இருக்கின்றன. திரு. புரூதோனுக்கு முன்னுல், சமுதாய மேதை பகைமை யுள்ள அம்சங்களை மட்டுமே பார்த்தது, கூட்டமைத்த சூத் திரத்தைப் பார்க்கவில்லை — அவையிரண்டும் ஒருங்கே பரம நிலைப் பகுத்தறிவில் ஒரேநேரத்தில் மறைந்து கிடக்கின்றன. இந்த போதாக்குறையான உண்மைகளை, இந்த முழுமையற்ற வகையினங்களை, இந்த முரண்பட்ட கருத்துக்களைப் பூமியில் வெறுமே நடைமுறையாக்குகிற பொருளாதார உறவுகள் தம்முள்ளே முரண்பட்டுள்ளன, நல்லதென்றும் தீயதென்றும் இரண்டு பக்கங்களைக் காட்டுகின்றன.

முழுமையான உண்மையை, நீக்கமற நிறைந்த கருத்தை, முரண்முழுமையை அழிக்கக் கூடிய கூட்டமைத்த சூத்திரத் தைக் கண்டுபிடிப்பதே சமுதாய மேதையின் பிரச்சினை. எனவேதான், திரு. புரூதோனின் பொய்த்தோற்றத்தில், இந்தச் சமுதாய மேதை ஒரு வகையினத்திலிருந்து மற்ருென்றுக்கு அலைக்கழிக்கப்பட்டுங்கூட, வகையினங்களைப் பட்டாளமாக வைத்திருந்துங்கூட, தெய்வத்தினிட மிருந்தோ பரமநிலைப் பகுத்தறிவிடமிருந்தோ என்றைக்கும் ஒரு கூட்டமைத்த சூத்திரத்தைப் பறிக்க முடியவில்லை.

''முதன்முதலில், சமுதாயம்'' [சமுதாய மேதை] ''ஒரு முதன்மையான உண்மையைச் சொல்கிறது, ஒரு ஊகப் பிரமாணத்தை முன்வைக்கிறது... ஒரு உண்மையான முரண் முழுமையை முன்வைக்கிறது, அதன் பின்விளைவுகளை மனத் தில் ஊகித்தறிய முடிந்திருக்கக் கூடிய அதே வழியில் அதன் பகைமையுள்ள விளைவுகள் சமுதாயப் பொருளாதாரத்தில் வளர்கின்றன; ஆகவே தொழில்துறை இயக்கம் எல்லா விஷ யங்களிலும் கருத்துக்களின் ஊகத்தைப் பின்பற்றிச் சென்று இருண்டு போக்குகளாகப் பிரிகிறது, ஒன்று பயனுள்ள விளைவு களைக் கொண்டது, இரண்டாவது கவிழ்க்கும் விளைவுகளைக் கொண்டது.... இந்த இருபக்கக் கோட்பாட்டின் அமைப்பில் ஒத்திசைவு உண்டாக்குவதற்காகவும், இந்த முரண்முழு மைக்குத் தீர்வு காண்பதற்காகவும், சமுதாயம் ஒரு இரண்டாவது முரண்முழுமையைப் பிறப்பிக்கிறது, அதைத் தொடர்ந்து ஒரு மூன்ருவது விரைவிலே வரும்; கடைசியில் தனது எல்லா முரண்பாடுகளும் காலியாகிவிட்ட பிறகு—இது என்

அனுமானம், ஏனெனில் மனித முரண்பாடுகளுக்கு ஒரு வரம்பு உண்டு என்று நருபிக்கப்பட வில்லே—அது ஒரே பாய்ச்சலில் தனது எல்லாப் பழைய நிலேகளுக்கும் திரும்பிச் சென்று ஒரேயொரு சூத்திரத்தைக் கொண்டு தனது பிரச்சினேகளனேத்தையும் தீர்த்துக் கொள்கிறவரை இம்முறையிலே சமுதாய மேதையின் முன்னேற்றம் நிகழ்ந்து வரும்.'' (தொகுதி 1, பக்கம் 133.)

முன்பு எதிருரை என்பது மாற்று மருந்தாக மாற்றப்பட்டது போலவே இப்போது முதலுரை என்பது ஒரு ஊகப் பிரமாணம் ஆகிவிட்டது. திரு. புரூதோனிடமிருந்து வருகிற இந்தச் சொல் மாற்றத்தில் நமக்கு இனிமேல் வியப்பேதுமில்லே! மனிதப் பகுத்தறிவு முழுமையற்ற தொலேப் பார்வை பெற்றிருப்பதினுல் சுத்தமானது அல்ல, ஒவ்வொரு படியிலும் தீர்ப்பதற்கான புதிய பிரச்சினேகளே எதிர்கொள்கிறது. அது பரமநிலேப் பகுத்தறிவில் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு புதிய முதலுரையும்—இது முந்தைய முதலுரையின் நிலேமறுப்பாகும்—அதற்கு ஒரு கூட்டுரை ஆகியது, சம்பந்தப்பட்ட பிரச்சினேக்குத் தீர்வாக வெகுளித்தனமாக அதை ஏற்றுக் கொள்கிறது. இப்படித்தான் இந்தப் பகுத்தறிவு தீராது புதுப்பித்துக் கொண்டேயிருக்கும் முரண்பாடுகளில் உழன்றுத் துடித்துக் கடைசியாக முரண்பாடுகளின் முடிவுக்கு வந்து இந்த முதலுரைகள், கூட்டுரைகள் அனேத்தும் வெறுமே முரண்பட்ட ஊகப்பிரமாணங்கள் என்று கண்டு கொள்கிறது. அதன் மனக்கலக்கத்திலே, ''மனிதப் பகுத்தறிவு, சமுதாய மேதை, ஒரே பாய்ச்சலில் தனது எல்லாப் பழைய நிலேகளுக்கும் திரும்பிச் சென்று ஒரேயொரு சூத்திரத்தைக் கொண்டு தனது பிரச்சினேகளனேத்தையும் தீர்த்துக் கொள்கிறது''. இந்த அலாதியான சூத்திரம் திரு. புரூதோனின் உண்மையான கண்டுபிடிப்புத்தான் என்று சொல்லி வைப்போம். அதுவே உருவமைக்கப்பட்ட மதிப்பு.

ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை முன்வைத்துக் கொண்டு மட்டுமே ஊகப்பிரமாணங்கள் செய்யப்படுகின்றன. திரு. புரூதோனின் வாய் மூலமாகப் பேசுகிற சமுதாய மேதை தனக்கென்று முதன்மையாக வகுத்துக் கொண்ட நோக்கம் ஒவ்வொரு பொருளாதார வகையினத்திலும் நல்ல அம்சம் தவிர வேறென்றும் மிஞ்சாத நிலேயில் தீயதை ஒழித்து

விடுவதேயாகும். அதற்கு நன்மையானது, உன்னதமான வாழ்வுநலன், உண்மையான நடைமுறை நோக்கம், சமநிலே என்பதே. மற்றும் சமுதாய மேதை சமமற்ற நிலேயையோ தோழமையையோ கத்தோலிக்க மதத்தையோ வேறெந்தக் கோட்பாட்டையோ நோக்கமாகக் கொள்ளாமல் சமநிலேயை நோக்கமாகக் கொண்டதேன்? காரணம், ''மனிதகுலம் ஒன்றன் பின்னென்ருக எத்தனேயோ தனித்தனியான ஊகப் பிரமாணங்களே நடைமுறைப்படுத்தியது ஒரு மேலான ஊகப்பிரமாணத்தைப் பார்வையிலே கொண்டுதான்'' — அதுவே சமநிலே என்பது. அதாவது, சமநிலே திரு. புரூதோ னின் இலட்சியமாக இருக்கிற காரணத்தால்தான். சமநிலே யின் நன்மைக்காகத்தான் உழைப்புப் பிரிவினே, கடன்மதிப்பு, தொழிற்கூடம்—எல்லாப் பொருளாதார உறவுகளுமே— புனேயப்பட்டன என்று அவர் நினேக்கிருர், என்றபோதிலும் அவை எப்போதும் கடைசியிலே அதற்கு எதிராகத் திரும்பி விட்டன. வரலாறும் திரு. புரூதோனின் கட்டுக்கதையும் ஒவ் வொரு படியிலும் ஒன்ருேடொன்று முரண்படுவதினுல் அந்தக் கட்டுக்கதை ஒரு முரண்பாடு இருப்பதாக முடிவு செய் கிறது. ஏதாவது முரண்பாடு இருக்குமேயானுல் அது அவ ருடைய நிலேயுறுதியான கற்பனேக் கருத்துக்கும் உண்மையான இயக்கத்துக்கும் இருப்பதுதான்.

இனிமுதல் ஒரு பொருளாதார உறவின் நல்ல அம்சம் என் பது சமநிலேயை உறுதிப்படுத்துகிற அம்சந்தான், தீய அம்சம் என்பது சமநிலேயை மறுத்து சமமற்ற நிலேயை உறுதிப் படுத்துகிற அம்சந்தான். முன்சென்ற ஊகப்பிரமாணம் உண் டாக்கிவைத்த சமமற்ற நிலேயை ஒழிப்பதற்காகச் சமுதாய மேதையின் ஊகப்பிரமாணமாக அமைவதே ஒவ்வொரு புதிய வகையினமாகும். சுருங்கச் சொன்னுல், பொருளாதார முரண்பாடுகளின் வட்டத்தில் சுழன்றபடியே சமுதாய மேதை தன் கண்ணெதிரே இடையருது வைத்திருக்கும் அடிமூலமான நோக்கம், மாயப்பொருளான போக்கு, தெய்வாதீன மான குறிக்கோள் இந்தச் சமநிலேயே ஆகும். ஆக, திரு. புரூதோனின் காற்றில் கலந்துவிட்ட சுத்தமான பகுத் தறிவைவிட மேலான வகையிலே அவரது பொருளாதார மூட்டைமுடிச்சுகளே நகரச் செய்வது இறைவன் எனும் எஞ்சின் தான். வரிகளேப் பற்றிய அத்தியாயத்தைத் தொடர்ந்து

இறைவனுக்காக ஒரு முழு அத்தியாயத்தை அவர் செல விட்டிருக்கிருர்.

வரலாற்றின் இயக்கத்தை விளக்குவதற்கு இன்று பயன் படுத்தப்படும் மகத்தான சொல் இந்த இறைவன், தெய்வா தீனமான குறிக்கோள் என்பதேயாகும். உண்மையிலே, இந்தச் சொல் எதையும் விளக்கவில்லை. அதிகமாகப் போனுல் அது ஒரு அணியிலக்கண வடிவமே, விபரங்களின் பொழிப் புரைக்குரிய பல்வேறு வழிகளில் அதுவும் ஒன்று.

ஆங்கிலேயத் தொழில்துறை வளர்ச்சியின் மூலமாக ஸ்காட்லாந்தில் நிலச் சொத்துக்கு ஒரு புதிய மதிப்பு கிடைத் தது ஒரு உண்மையாகும். இத்தொழில்துறை கம்பளிமயி ருக்குப் புதிய செலவுத்துறைகளைத் திறந்துவிட்டது. பெரிய அளவில் கம்பளிமயிரை உற்பத்தி செய்வதற்காக விளைச்சல் நிலங்களை மேய்ச்சல் வெளியாக மாற்ற வேண்டிய தாயிற்று. இந்த உருமாற்றத்தைச் செய்வதற்குப் பண்ணை களை செறிவாக ஒருமுகப்படுத்த வேண்டியதாயிற்று. பண்ணை களைச் செறிவாக ஒருமுகப்படுத்துவதற்கு முதலில் சிறு விளைநிலங்களை ஒழித்துப் பல்லாயிரக் கணக்கான குத்தகை விவசாயிகளை அவர்கள் பிறந்த மண்ணிலிருந்து வெளியே துரத்திவிட்டு அவர்களுக்குப் பதிலாக லட்சக் கணக்கான ஆடுகளைப் பார்த்துக் கொள்ளக்கூடிய ஒரு சில மேய்ப்பாளர் களை நியமிக்க வேண்டியதாயிற்று. ஆக, ஒன்றன்பின்ஞென்ருக நிகழ்ந்த உருமாற்றங்களின் மூலமாக ஸ்காட்லாந்தின் நிலச்சொத்தானது மனிதர்களை ஆடுகள் வெளியே துரத்தி விட்ட நிலைமையை உண்டாக்கி வைத்தது. ஸ்காட்லாந்தின் நிலச்சொத்து அமைப்பின் தெய்வாதீனமான குறிக்கோள் மனிதர்களை ஆடுகள் வெளி துரத்திவிடுவதுதான் என்று இப்பொழுது சொல்லுங்கள், நீங்கள் தெய்வாதீனமான வரலாற்றைப் படைத்தவர்கள் ஆவீர்கள்.

உண்மை, சமநிலைத் திசையில் போகும் போக்கு நமது நூற்ருண்டைச் சேர்ந்தது. முற்றிலும் வெவ்வேருன தேவை களும் உற்பத்திச் சாதனங்களும் மற்றவையும் கொண்டிருந்த முந்தைய நூற்ருண்டுகள் அனைத்தும் சமநிலையை நடை முறையாக்குவதற்காகத் தெய்வாதீனமாகப் பாடுபட்டு வந்தன என்று இப்போது கூறுவதானது, முதலாவதாக, முன் சென்ற நூற்ருண்டுகளின் சாதனங்களின், மனிதர்களின்

இடத்தில் நமது நூற்றுண்டின் சாதனங்களையும் மனிதர்களை யும் வைப்பதாகும், ஒன்றன்பின் ஒன்ருக வந்த தலைமுறை யினர் தங்களுக்கு முன் சென்ற தலைமுறையினர் பெற்ற விளைவு களை உருமாற்றியதற்குரிய வரலாற்றின் இயக்கத்தைத் தவ ருகப் புரிந்து கொள்வதாகும். ஒன்றுக்கு நிறைநேர்த்தியான விளைபொருளாக இருந்தது மற்ருென்றுக்குப் புதிய உற்பத்திக்கான கச்சா பொருளாக மட்டுமே இருந்ததைப் பொருளாதாரவாதிகள் நன்கறிவார்கள்.

உழவர்களைப் பொறுப்புணர்ச்சியுள்ள, சம நிலையிலுள்ள உழைப்பாளிகளாக உருமாற்றிவிடும் தெய்வாதீனமான நோக் கத்திற்காக நிலப்பிரபுக்களைச் சமுதாய மேதை உண்டாக் கியது, அல்லது புனைந்தது என்று திரு. புரூதோன் செய்வது போல அனுமானித்துக் கொள்ளுங்கள்; ஆடுகளைக் கொண்டு மனிதர்களை வெளித் துரத்திக் கெடு நினைப்புள்ள மகிழ்ச்சி யடைவதற்காக ஸ்காட்லாந்தில் நிலச்சொத்து அமைப்பை நிறுவிய இறைவனுக்கு முற்றிலும் தகுந்த வகையிலே நீங்கள் நோக்கங்களையும் மனிதர்களையும் மாற்றிப் போட்டவர்களா வீர்கள்.

எனினும், திரு. புரூதோன் இறைவன் மீது இவ்வளவு பரிவுள்ள அக்கறை செலுத்துவதால் திரு. தெ வில்னியோவ்-பார்ழெமான் எழுதிய அரசியல் பொருளாதாரத்தின் வர லாறு எனும் நூலைப்[45] பார்க்கும்படி கூறுகிருேம், அவரும் இவரைப் போலவே ஒரு தெய்வாதீனமான குறிக்கோளைத் தேடிச் செல்பவர். ஆனுல் இந்த குறிக்கோள் கத்தோலிக்க மதமாகும், சமநிலையல்ல.

ஏழாவது இறுதியான ஆய்வுக்கூற்று

பொருளாதாரவாதிகளுக்கு ஒரு வேடிக்கையான அணுகு முறை உண்டு. செயற்கையானது, இயற்கையானது என்று இரண்டே இரண்டு வகைப்பட்ட அமைப்புகள்தாம் அவர் களுக்கு இருக்கிறது. நிலப்பிரபுத்துவமுறையின் அமைப்புகள் செயற்கையான அமைப்புகள், முதலாளி வர்க்கத்தின் அமைப்புகள் இயற்கையான அமைப்புகள். இதில் அவர்கள் தெய்வ தத்துவவாதிகளை ஒத்திருக்கின்றனர். தெய்வ தத்துவ வாதிகளும் இரண்டு வகையான மதங்களை நிறுவுகிருர்கள்.

தங்களுடையதல்லாத ஒவ்வொரு மதமும் மனிதனல் புனையப்பட்டது, ஆனல் தங்களுடைய சொந்த மதமோ இறைவனின் வெளிப்பாடு ஆகும். தற்கால உறவுகள்—முதலாளித்துவ உற்பத்தியின் உறவுகள்—இயற்கையானவை என்று பொருளாதாரவாதிகள் சொல்கிற போது, இயற்கையின் விதிகளுக்குப் பொருத்தமாகச் செல்வம் படைக்கப்பட்டும் உற்பத்திச் சக்திகள் வளர்க்கப்பட்டும் வருவதற்கான உறவுகள் இவை என்று உட்கிடையாக உணர்த்துகிருர்கள். எனவே இந்த உறவுகள் காலத்தின் செல்வாக்குக்கு அப்பாற்பட்டுச் சுதந்தரமாயிருக்கிற இயற்கையான விதிகளாகும். அவை என்றென்றும் சமுதாயத்தை ஆண்டுவர வேண்டிய நிரந்தரமான விதிகளாகும். ஆக, இதுவரை வரலாறு இருந்தது, இனிமேல் ஒன்றுங்கிடையாது. இதுவரை வரலாறு இருந்தது—காரணம், நிலப்பிரபுத்துவத்தின் அமைப்புகள் இருந்தன, இந்த நிலப்பிரபுத்துவ அமைப்புகளில் முதலாளித்துவச் சமுதாயத்தின் உற்பத்தி உறவுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட உற்பத்தி உறவுகளைக் காண்கிருேம்; இந்த முதலாளித்துவச் சமுதாய உற்பத்தி உறவுகள் இயற்கையானவை, எனவே நிரந்தரமானவை, என்று பொருளாதாரவாதிகள் செல்லுபடியாக்க முயல்கிருர்கள்.

நிலப்பிரபுத்துவ முறைக்கும் அதன் பாட்டாளி வர்க்கம் ஒன்று இருந்தது—அதுதான் பண்ணையடிமைப் படிப்பிரிவினர்கள் என்பது, அதில் முதலாளி வர்க்கத்தின் வித்துக்கள் அனைத்தும் இருந்தன. நிலப்பிரபுத்துவ உற்பத்திக்கும் இரண்டு பகைமையான அம்சங்கள் இருந்தன—அவையும் **நல்ல அம்சம்** என்றும் **தீய அம்சம்** என்றும் பெயரிடப்படுகின்றன, எப்பொழுதுமே தீய அம்சந்தான் கடைசியிலே நல்ல அம்சத்தை வெல்கிறது என்றிருந்த போதிலுங்கூட. தீய அம்சந்தான் ஒரு போராட்டத்தை ஏற்பாடு செய்து வரலாற்றை உண்டுபண்ணுவதற்கான இயக்கத்தை உண்டாக்குகிறது. நிலப்பிரபுத்துவ முறையின் ஆதிக்கம் நிலவிய சகாப்தத்தில் இருந்த அறக்காப்பு வீரர்களின் [knights] நற்பண்புகள், உரிமைகள் கடமைகள் இடையே இருந்த அழகான ஒத்திசைவு, நகரங்களில் தந்தைவழி ஆட்சிக் கால வாழ்க்கை, கிராமப்புறத்தில் குடிசைத் தொழிலின் செழிப்பு, கார்பரேஷன்கள், கில்டுகள், ஃபிரடேர்னடிக்கள் எனும்

அமைப்புகளிலே நடந்த தொழில் வளர்ச்சி, சுருங்கச் சொன்னல் நிலப்பிரபுத்துவ முறையின் நல்ல அம்சமாக விளங்கியதனைத்திலும் பொருளாதாரவாதிகள் உற்சாகமடைந்து இந்தச் சித்திரத்தின் மீது இருட் படலமாக விழக் கூடியதனைத்தையும் — பண்ணையடிமை நிலை, சிறப்புரிமைகள், அராஜகம்—ஒழித்துவிடும் பிரச்சினையை முன்வைத்துக் கொண்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? போராட்டத்தை எழுப்பக் கூடிய அம்சங்களனைத்தும் அழிக்கப்பட்டு முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சி முளையிலேயே கிள்ளியெறியப்பட்டிருக்கும். வரலாற்றை ஒழிப்பது என்கிற அபத்தமான பிரச்சினையை ஒருவன் எடுத்துக் கொண்டிருப்பான்.

முதலாளிவர்க்கத்தின் வெற்றிக்குப்பின் நிலப்பிரபுத்துவ முறையின் நல்ல அம்சம், தீய அம்சம் என்கிற பிரச்சினைக்கே இனி இடமில்லாமற் போய்விட்டது. முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவமுறையின் கீழ் தான் வளர்த்த உற்பத்திச் சக்திகளை வசப்படுத்திக் கொண்டது. எல்லாப் பழைய பொருளாதார வடிவங்களும், அவற்றிற்குப் பொருத்தமாயிருந்த சொத்துக் குடியுரிமை உறவுகளும், பழைய சொத்துடைமைச் சமுதாயத்தின் அதிகாரபூர்வமான தோற்றமாயிருந்த அரசியல் அமைப்பும், நொறுக்கித் தள்ளப்பட்டன.

எனவே, சரிமுறையாக மதிப்பிட வேண்டுமென்ருல், நிலப்பிரபுத்துவ உற்பத்தியானது பகைமை மீது நிறுவப்பட்ட ஒரு உற்பத்தி முறையாகக் கருதப்பட வேண்டும். இந்தப் பகைமைக்குள்ளே எப்படிச் செல்வம் உற்பத்தி செய்யப் பட்டது என்றும், ஒரே நேரத்தில் வர்க்கப் பகைமைகளுடன் உற்பத்திச் சக்திகளும் எப்படி வளர்க்கப்பட்டன என்றும், சமுதாயத்தின் எதிரியல்புடைய தீய அம்சமாகிய வர்க்கங்களில் ஒன்று தனது விடுதலைக்கான பொருளாயத நிலைமைகள் முழுப் பக்குவ நிலை எய்துகிறவரை எப்படி வளர்ந்து கொண்டேயிருந்தது என்றும் புலப்படுத்தித் தீர வேண்டும். உற்பத்தி முறை, உற்பத்திச் சக்திகள் வளர்வதற்கு இருக்கக் கூடிய உறவுகள், நிரந்தரமான விதிகள் அல்ல, அதற்குப் பதிலாக மனிதர்களுடைய, அவர்களின் உற்பத்திச் சக்திகளுடைய, ஒரு திட்டவட்டமான வளர்ச்சியுடன் அவை பொருந்தியுள்ளன, மனிதர்களின் உற்பத்திச் சக்திகளிலே ஏற்படுகிற மாற்றம் அவசியத் தேவையாக அவர்களின்

உற்பத்தி உறவுகளிலும் மாற்றத்தை உண்டாக்கி வைக்கிறது என்று சொல்வது போலாகிறதல்லவா இது? நாகரிகத்தின் பலன்களை, பெறப்பட்ட உற்பத்திச் சக்திகளை, பறிபோக விடக் கூடாது என்பதே முக்கியமான விஷயமாக இருக்கிற தினால் அவற்றை உற்பத்தி செய்ததற்குரிய மரபார்ந்த வடிவங்களை நொறுக்கித்தீரவேண்டும். இத்தருணத்திலிருந்து புரட்சிகரமான வர்க்கம் நடப்புக்காப்பு வர்க்கமாகிவிடுகிறது.

நிலப்பிரபுத்துவக் காலத்திய பாட்டாளி வர்க்கத்தின்* அடையாளச் சின்னமாக உள்ள ஒரு பாட்டாளி வர்க்கத் துடன் முதலாளி வர்க்கம் தொடங்குகிறது. தனது வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கிலே அவசியகரமான முறையில் முதலாளி வர்க்கம் தனது பகைமைப் போக்கான தன்மையை வளர்க்கிறது, அது முதலில் ஏறத்தாழ மறைக்கப்பட்டு உள் ளார்ந்த நிலையில் மட்டும் இருந்து வரும். முதலாளி வர்க்கம் வளர வளர அதன் இதயபாகத்திலே ஒரு புதிய பாட்டாளி வர்க்கம், ஒரு நவீன காலப் பாட்டாளி வர்க்கம் வளர்கிறது; பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே ஒரு போராட்டம் வளர்ந்தோங்குகிறது, இந்தப் போராட்டத்தை இரு தரப்பினரும் உணர்ந்து, கண்டு கொண்டு, மதித்து, புரிந்து கொண்டு, ஏற்றுக் கொண்டு, போற்றிப் பிரகடனப்படுத்திக் கொள்ளுமுன் அது துவக்கத் தில் வெறுமே அரைகுறையான, தற்காலிகமான மோதல் களில், கவிழ்ப்பு நடவடிக்கைகளில், தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. மறுபக்கத்தில், முதலாளி வர்க்கத்தின் எல்லா உறுப்பினர்களும் தாங்கள் மற்றொரு வர்க்கத்துக்கு எதிரான ஒரு வர்க்கமாக அமைந்துள்ள அளவுக்கு அதே நலன்களைக் கொண்டுள்ளனர் என்றால், தாங்கள் ஒருவருக்கொருவர் நேருக்கு நேர் நிற்கிற அளவுக்கு அவர்களுக்கு எதிரிடையான பகைமையான நலன்கள் உள்ளன. இந்த எதிரிடையான நலன்கள் அவர்களின் முதலாளித்துவ வாழ்க்கையின் பொரு ளாதார நிலைமைகளிலிருந்து விளைகிறது. ஆகவே, முதலாளி வர்க்கம் இயங்கி வருகிற உற்பத்தி உறவுகளுக்கு ஒரு எளிய,

---

* ந. ஊத்தினுவுக்கு மார்க்ஸ் அன்பளிப்புச் செய்த பிரதி யில் ''உழைக்கும் வர்க்கம்'' எனும் சொல் உள்ளது.—[பதிப்பாசிரியர்.]

சமசீரான தன்மை இல்லாமல் ஓர் இருநிலைத் தன்மை இருக்கிறது; செல்வம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிற அதே உறவுகளுக்குள் வறுமையும் உற்பத்தி செய்யப்படுகிறது; உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நடந்து வருகிற அதே உறவுகளுக்குள் அடக்கி வைப்பதை உண்டாக்குகிற ஒரு சக்தியும் வளர்கிறது; இந்த வர்க்கத்தின் தனித்தனி உறுப்பினர்களின் செல்வத்தை இடையறாது அழித்து வருவதின் மூலமாகவும் மேன்மேலும் வளர்ந்து வருகிற ஒரு பாட்டாளி வர்க்கத்தை உற்பத்தி செய்வதின் மூலமாகவும் மட்டுமே முதலாளித்துவச் செல்வத்தை — அதாவது, முதலாளி வர்க்கத்தின் செல்வத்தை—இந்த உறவுகள் உற்பத்தி செய்கின்றன என்றெல்லாம் நாளுக்கு நாள் மேலாகத் தெளிவாகி வருகிறது.

பகைமையான தன்மை வெளிப்பட வெளிப்பட பொருளாதாரவாதிகள்—முதலாளித்துவ உற்பத்திக்குரிய விஞ்ஞானத்தின் பிரதிநிதிகள்—மேன்மேலும் தமது சொந்தத் தத்துவங்களோடு தாமே மோதிக்கொள்வதைப் பார்க்கிறார்கள்: மற்றும் வெவ்வேறு கருத்துப்பிரிவினர் தோன்றுகின்றனர்.

விதிவாதப் பொருளாதாரவாதிகள் இருக்கிறார்கள்—முதலாளிகள் செல்வத்தைப் பெறுவதற்குத் தமக்கு உதவி செய்கிற பாட்டாளிகளின் துன்பங்களைப்பற்றி நடைமுறையில் அசட்டையாயிருப்பது போலவே இந்தப் பொருளாதாரவாதிகளும் தமது தத்துவத்தில் முதலாளித்துவ உற்பத்தியின் குறைபாடுகள் என்று அவர்கள் அழைக்கிற விஷயத்தில் அசட்டையாயிருக்கின்றனர். இந்த விதிவாதக் கருத்துப் பிரிவினரில் மூலச்சிறப்பாளர்களும் தன்னுணர்ச்சிவாதிகளும் உள்ளனர். ஆதாம் ஸ்மித், ரிக்கார்டோ போன்ற மூலச்சிறப்பாளர்கள் நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தின் மீதமிச்சங்களுடன் இன்னமும் போராடிக்கொண்டிருக்கிறபடியே பொருளாதார உறவுகளிலிருந்து நிலப்பிரபுத்துவக் களங்கங்களை அகற்றுவதற்காகவும், உற்பத்திச் சக்திகளைப் பெருக்குவதற்காகவும், தொழிலுக்கும் வாணிபத்துக்கும் ஒரு புத்தெழுச்சி ஊட்டுவதற்காகவும் வேலை செய்து வரும் ஒரு முதலாளி வர்க்கத்திற்குப் பிரதிநிதிகளாவர். இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டும் இந்தக் காய்ச்சல் துடிப்புள்ள உழைப்பில் ஆழ்ந்து போயும் இருக்கும் பாட்டாளி வர்க்கம் வந்துபோகிறதாயுள்ள, தற்செயலான துன்பங்களை மட்டுமே

அனுபவிக்கிறது—அவை அப்படித்தான் என்று தானும் கருதுகிறது. இந்தச் சகாப்தத்தின் வரலாற்ருசிரியர்களான ஆதாம் ஸ்மித், ரிக்கார்டோ போன்ற பொருளாதாரவாதிகளுக்கு முதலாளித்துவ உற்பத்தி உறவுகளில் செல்வம் எப்படிப் பெறப்படுகிறதென்று காட்டுவதும், இந்த உறவுகளை வகையினங்களாகவும் விதிகளாகவும் வரையறுத்துக் கொடுப்பதும், செல்வத்தை உற்பத்தி செய்வதற்கு நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தின் விதிகளையும் வகையினங்களையும் விட இந்த விதிகளும் இந்த வகையினங்களும் எவ்வளவு மேலானவை என்று காட்டுவதும் தவிர வேறு பணி எதுவுமில்லை. அவர்கள் பார்வையில் வறுமை என்பது பிரசவத்தோடு கூடவே வருகிற வேதனை மட்டுமேயாகும்—இயற்கையிலும் சரி, தொழில்துறையிலும் சரி.

தன்னுணர்ச்சிவாதிகள் நமது சகாப்தத்தைச் சேர்ந்தவர்கள், இந்தச் சகாப்தத்தில் முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தோடு நேரடியான எதிர்ப்பில் உள்ளது; இங்கே செல்வம் போலவே வறுமையும் மிக நிறைவாக உண்டாக்கப்படுகிறது. பொருளாதாரவாதிகள் இப்போது சலிப்புதட்டிப் போன விதிவாதிகள் போல் நடிக்கின்றனர், இவர்கள் தமது உச்சாணிக் கொம்பில் அமர்ந்து கொண்டு செல்வத்தை உற்பத்தி செய்கிற மனித இயந்திரங்களின்மேல் ஆணவமிக்க இளக்காரப் பார்வையை வீசுகின்றனர். தங்களுக்கு முன்சென்றவர்களின் சிந்தனைப் போக்குகளையெல்லாம் இவர்கள் காப்பியடிக்கின்றனர், அவர்களிடம் வெறுமே வெகுளித்தனமாகத் தெரிந்த அசட்டைத்தனம் இவர்களிடம் விளையாட்டாகிவிடுகிறது.

அடுத்து வருவது **மனிதாபிமானக் கருத்துப் பிரிவினர்,** இன்றைய உற்பத்தி உறவுகளின் தீய அம்சத்தைக் கண்டு அவர்கள் வருத்தப்படுகிருர்கள். தமது மனச்சாட்சியைத் தேற்றிக் கொள்வதற்காக அவர்கள் யதார்த்த வேறுபாடுகளைச் சிறிதளவுக்காயினும் தணிக்க முயல்கின்றனர். அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் துன்பத்தைக் கண்டும், முதலாளிகளுக்கிடையிலேயே இருக்கும் கட்டற்ற போட்டியைக் கண்டும் உளப்பூர்வமாக வருந்துகின்றனர்; தொழிலாளர்கள் நிதானத்துடன் இருக்க வேண்டும், கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும், குழந்தைகளை அதிகமாகப் பெறக் கூடாது என்று

உபதேசிக்கின்றனர்; உற்பத்தியிலே தமது மிகுதியான உற்சாகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று முதலாளிகளுக்கு அறிவுரை தருகின்றனர். தத்துவத்துக்கும் நடைமுறைக்கும், கோட்பாடுகளுக்கும் விளைவுகளுக்கும், கருத்துக்கும் செயல்பாட்டுக்கும், உள்ளடக்கத்துக்கும் உருவத்துக்கும், சாரப்பொருளுக்கும் யதார்த்தத்துக்கும், உரிமைக்கும் உண்மைக்கும், நல்ல அம்சத்துக்கும் தீய அம்சத்துக்கும் இடையே முடிவேயில்லாத தனிச்சிறப்புகளைக் காண்பதில் இவர்களின் தத்துவம் முழுவதும் ஆதாரப்பட்டிருக்கிறது.

தயாளப் போக்குள்ள கருத்துப் பிரிவினர் மனிதாபிமானக் கருத்துப் பிரிவினரின் உச்சநிலையைக் குறிக்கின்றனர். அவர்கள் பகைமையின் தேவையை மறுக்கின்றனர்; எல்லோரையும் முதலாளிகளாக்கிவிட விரும்புகிறார்கள்; நடைமுறையிலிருந்து வேறுபடுத்திக் கொண்ட அளவிலே, பகைமையைக் கொண்டிராத அளவிலே தத்துவத்தை நடைமுறையாக்க விரும்புகிறார்கள். அசல் யதார்த்தத்தில் ஒவ்வொரு விநாடியிலும் சந்திக்கக்கூடிய முரண்பாடுகளை விலக்கிவிடுவது தத்துவத்திலே சுலுவானதே என்று சொல்லாமலே விளங்கும். எனவே இந்தத் தத்துவம் இலட்சிய நிலைக்குயர்த்தப்பட்ட யதார்த்தமாக ஆகிவிடும். பிறகு, முதலாளித்துவ உறவுகளிலே பிரிக்க முடியாதவாறு உள்ளமைந்துள்ள பகைமையை விலக்கிய நிலையில் இவர்கள் முதலாளித்துவ உறவுகளை வெளியிடும் வகையினங்களை நீடித்து வைத்திருக்க விரும்புகிறார்கள். முதலாளித்துவ நடைமுறையை எதிர்த்துத் தாங்கள் காரியப்பற்றுடன் போரிடுவதாக அவர்கள் நினைப்பு, உண்மையிலே அவர்கள் மற்றவர்களைவிட முதலாளித்துவப் போக்குள்ளவர்கள்.

பொருளாதாரவாதிகள் முதலாளி வர்க்கத்தின் விஞ்ஞான ரீதியான பிரதிநிதிகளாக இருப்பது போல, **சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும்** பாட்டாளி வர்க்கத்தின் தத்துவாசிரியர்களாவார்கள். பாட்டாளி வர்க்கம் தன்னை ஒரு வர்க்கமாக அமைத்துக் கொள்ளுவதற்கு இன்னும் போதுமான அளவுக்கு வளர்ச்சி பெறாதிருக்கும் வரை, அக்காரணத்தால் முதலாளி வர்க்கத்துடன் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டமே இன்னும் ஒரு அரசியல் தன்மை பெறாதிருந்து வரும் வரை, பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கும் ஒரு

புதிய சமுதாயத்தின் அமைவுக்கும் அவசியமான பொருளாயத நிலைமைகளைக் கண்டு கொள்ள முடிகிற அளவுக்கு முதலாளி வர்க்கத்தின் இதயபாகத்திலேயே உற்பத்திச் சக்திகள் போதுமான அளவுக்கு இன்னும் வளர்ச்சி பெருதிருக்கும் வரை, இந்தத் தத்துவாசிரியர்கள் வெறும் கற்பனு வாதிகளே யாவர், அவர்கள் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக அமைப்புத் திட்டங்களைப் புனைகிருர்கள், புத்துயிரூட்டக் கூடிய விஞ்ஞானத்தைத் தேடிச் செல்கிருர்கள். ஆனுல், எந்த அளவுக்கு வரலாறு முன்னேக்கிச் செல்கிறதோ, அத்துடன் எந்த அளவுக்குப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் மேலும் தெளிவான வரிவடிவங்களைப் பெறுகிறதோ, அந்தஅளவுக்கு அவர்கள் இனிமேல் விஞ்ஞானத்தைத் தங்கள் சிந்தைகளிலே தேடிக்கொண்டிருக்கத் தேவையில்லை; கண்ணெதிரே நடக்கிற நடப்பைக் கவனித்து அதன் குரல் கொடுப்போனுக ஆகிவிட்டால் போதும். அவர்கள் விஞ்ஞானத்தைத் தேடிக் கொண்டும் வெறுமே அமைப்புத் திட்டங்களைப் புனைந்து கொண்டும் இருக்கும் வரை, அவர்கள் போராட்டத்தின் துவக்கநிலையில் இருந்து வரும் வரை, வறுமையிலே அவர்கள் வறுமையைத் தவிர வேறெதையும் பார்க்கிறதில்லை, அதில் பழைய சமுதாயத்தைத் தூக்கியெறியக் கூடிய புரட்சிகரமான, கவிழ்ப்புப் போக்குள்ள அம்சத்தைப் பார்க்கிறதில்லை. இந்த அம்சம் கவனிக்கப்பட்டதும், வரலாற்று இயக்கத்தின் ஒரு விளைபொருளாகிய விஞ்ஞானம் வறட்டுத் தத்துவப் போக்காக இருந்தது போய், தன்னை அத்துடன் உணர்வு பூர்வமாக இணைத்துக் கொண்டுவிட்ட புரட்சிகரமான விஞ்ஞானம் ஆகிவிட்டது.

திரு. புரூதோனிடம் திரும்பி வருவோம்.

ஒவ்வொரு பொருளாதார உறவுக்கும் ஒரு நல்ல அம்சமும் தீய அம்சமும் உண்டு; இந்த ஒரு விஷயத்தில் திரு. புரூதோன் தன்னை ஏமாற்றிக் கொள்வதில்லை. அவர் நல்ல அம்சத்தைப் பொருளாதாரவாதிகள் விளக்குவதைப் பார்க்கிருர்; தீய அம்சத்தை சோஷலிஸ்டுகள் கண்டிப்பதைப் பார்க்கிருர். அவர் நிரந்தரமான பொருளாதார உறவுகளின் அவசியத்தைப் பொருளாதாரவாதிகளிடமிருந்து இரவல் வாங்கிக் கொள்கிருர்; வறுமையிலே வறுமையைத் தவிர வேறெதையும் பார்க்காத பிரமையை சோஷலிஸ்டுகளிட

மிருந்து இரவல் வாங்குகிருர். விஞ்ஞானத்தின் செல்வாக்கை உதவியாகக் கொள்ள விரும்புவதில் அவ்விருவருடனும் உடன் படுகிருர். அவருக்கு விஞ்ஞானம் என்பது ஒரு விஞ்ஞானச் சூத்திரமாகத் தன்னைக் குறுகத் தரித்துக் கொள்கிறது; விஞ்ஞானச் சூத்திரங்களைத் தேடித் திரியும் நபர் அவர். எனவேதான், அவர் அரசியல் பொருளாதாரத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் ஒருங்கே விமர்சனம் அளித்திருப்பதைப் பற்றித் தம்மைத் தாமே புகழ்ந்துகொள்கிருர்: இருவரையும்விட அவர் தாழ்ந்தவர்தான். பொருளாதாரவாதிகளைவிடத் தாழ்ந்தவர்—காரணம், கையிலே ஒரு மாயாஜாலச் சூத்திரத்தை வைத்திருக்கிற மெய்யறிஞன் போல அவர் முற்றிலும் பொருளாதார வகைப்பட்ட விபரங்களுக்குள் போகாமல் விட்டு விடலாம் என்று கருதினுர்; சோஷலிஸ்டுகளைவிடத் தாழ்ந்தவர்—காரணம், சிந்தனை முறையிலாயினும் முதலாளித்துவக் கண்ணோட்டத்துக்கு அப்பால் பார்ப்பதற்குப் போதிய தைரியமோ உட்பார்வையோ அவரிடம் கிடையாது.

அவர் கூட்டுரையாக இருக்க விரும்புகிருர்—அவர் இருப்பதோ கூட்டுப் பிழையாக.

முதலாளி வர்க்கத்தினருக்கும் பாட்டாளிகளுக்கும் அப்பால் விஞ்ஞானியாக மேலேறிப் பறக்க விரும்புகிருர் அவர்; மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையே, அரசியல் பொருளாதாரத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் இடையே இடைவிடாது முன்னும் பின்னும் தள்ளப்பட்டு வருகிற வெறும் சிறுபூர்ஷ்வாப் பிறவி அவர்.

§ 2. உழைப்புப் பிரிவினையும் இயந்திரவகையும்

திரு. புரூதோனின் கருத்துப்படி, பொருளாதாரப் பரிணுமங்களின் வரிசைத் தொடரை உழைப்புப் பிரிவினை திறந்து வைக்கிறது.

உழைப்புப் பிரிவினையின் நல்ல அம்சம்	''சாராம்சத்தில் பார்க்கையில், உழைப்புப் பிரிவினை என்பது நிலைமைகளின், அறிவு ஆற்றலின் சமநிலை செயலாக்கப்படுவதற்குரிய முறையேயாகும்.'' (தொகுதி 1, பக்கம் 93.)

''நமக்கு உழைப்புப் பிரிவினை என்பது வறுமைக்குத் தோற்றுவாயாகி விட்டது.'' *(தொகுதி 1, பக்கம் 94.)*

மாற்றுரை

உழைப்புப் பிரிவினையின் தீய அம்சம்

''தனது பயனளிக்கும் தன்மைக்கு முதன்மையான நிபந்தனையாக இருக்கும் தனக்குரிய விதிக்குப் பொருத்தமாகத் தன்னைப் பிரித்துக் கொள்வதின் மூலமாக உழைப்பு தனது நோக்கங்களை மறுத்துக் கொள்வதிலே முடிந்து தன்னையே அழித்துக் கொள்கிறது.'' *(தொகுதி 1, பக்கம் 94.)*

தீர்க்க வேண்டிய பிரச்சினை

''பிரிவினையின் குறைகளைப் போக்கி விட்டு அதே நேரத்தில் அதன் பயனுள்ள அம்சங்களை நீடித்து வைத்திருக்கச் செய்கிற மறுவுருவமைப்பைத்'' தேடுவது. *(தொகுதி 1, பக்கம் 97.)*

திரு. புரூதோனின் கருத்துப்படி, உழைப்புப் பிரிவினை ஒரு நிரந்தரமான விதி, ஒரு எளிமையான, சூட்சுமக் கருத்து வகையினமாகும். எனவே, வெவ்வேறு வரலாற்றுச் சகாப்தங்களில் உள்ள உழைப்புப் பிரிவினையை விளக்குவதற்கு அந்தச் சூட்சுமக் கருத்து, அந்த எண்ணம், அந்தச் சொல் அவருக்குப் போதும். பிரித்தல் என்கிற ஒரே சொல்லைக் கொண்டு சாதிகளையும் கார்பரேஷன்களையும் பட்டறைத் தொழிலையும் பெருமளவான தொழிலையும் விளக்கித் தீர வேண்டும். முதலில் ''பிரித்தல்'' என்பதின் அர்த்தத்தைக் கவனமாகப் பயிலுங்கள், உழைப்புப் பிரிவினைக்கு ஒவ்வொரு சகாப்தத்திலும் ஒரு திட்டவட்டமான தன்மையைக் கொடுக்கிற எண்ணிறைந்த பாதிப்புக் கூறுகளை நீங்கள் பயில வேண்டிய தேவையேயிராது.

பொருள்களைத் திரு. புரூதோனின் வகையினங்களாகக் குறுக்கிவிட்டால் அவை மிக மிக எளிதாகிவிடும் என்பது உறுதி. வரலாறு அவ்வளவு வகைக் கட்டுடன் நடக்க முனை

வதில்லை. நகரங்களைக் கிராமப்புறத்திலிருந்து பிரிக்கக் கூடிய முதன்முதலான மாபெரும் உழைப்புப் பிரிவினையை ஜெர்மனியில் நிலைநாட்டுவதற்கு முழுமையாக மூன்று நூற்றுண்டுகள் பிடித்தது. நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் உள்ள இந்த ஓர் உறவு எவ்வளவுக்கெவ்வளவு திருந்தி வந்ததோ அவ்வளவுக்கவ்வளவு சமுதாயம் முழுவதும் திருந்தி வந்தது. உழைப்புப் பிரிவினையின் இந்த ஒரேயொரு அம்சத்தை மட்டும் எடுத்துப் பார்த்தால், உங்களுக்குப் பழைய குடியரசுகள் கிடைக்கின்றன, கிறித்தவ நிலப்பிரபுத்துவ முறையும் கிடைக்கிறது; பிரபுக்களைக் கொண்ட பழைய இங்கிலாந்து கிடைக்கிறது, பஞ்சாலைப் பிரபுக்களைக் கொண்ட நவீனகால இங்கிலாந்தும் கிடைக்கிறது. பதினுன்காவது பதினைந்தாவது நூற்றுண்டுகளில், இன்னமும் காலனிகள் இராதிருந்த காலத்தில், ஐரோப்பாவைப் பொருத்தவரை இன்னமும் அமெரிக்கா இராதிருந்த காலத்தில், கான்ஸ்டான்டிநேபளின் தரகு மூலமாக மட்டுமே ஆசியாவுடன் போக்குவரத்து நடந்து வந்த காலத்தில், மத்தியதரைக் கடற் பிரதேசம் வாணிப நடவடிக்கைக்கு மையமாக இருந்த காலத்தில் நிலவிய உழைப்புப் பிரிவினையானது பதினேழாம் நூற்றுண்டில், ஸ்பெயின் போர்சுகல் ஹாலந்து இங்கிலாந்து பிரான்ஸ் நாட்டினர் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் காலனிகளை நிலைநாட்டியிருந்த காலத்தில் நிலவிய உழைப்புப் பிரிவினையினின்று மிகவும் வேறுபட்ட வடிவமும் மிகவும் வேறுபட்ட அம்சமும் கொண்டிருந்தது. சந்தையின் விரிபரப்பும் அதன் உருவக்கட்டும் உழைப்புப் பிரிவினைக்கு வெவ்வேறு கால கட்டங்களில் ஒரு உருவக்கட்டும் ஒரு தன்மையும் கொடுக்கின்றன, அவற்றை ''பிரித்தல்'' என்கிற ஒரேயொரு சொல்லிலிருந்து, கருத்திலிருந்து, வகையினத்திலிருந்து ஊகித்துக் கொள்வது கஷ்டமாகும்.

திரு. புரூதோன் கூறுவதாவது: ''ஆதாம் ஸ்மித் காலத்திலிருந்து எல்லாப் பொருளாதாரவாதிகளும் உழைப்புப் பிரிவினையின் நிறைகளையும் குறைகளையும் சுட்டிக் காட்டியுள்ளனர், ஆனுல் இரண்டாவதைவிட முதலாவதை மேலாக வலியுறுத்துகின்றனர், ஏனெனில் அது அவர்களுடைய நம்பிக்கையுறுதிக்கு மேலாகப் பயன்படக் கூடியதாயிருக்கிறது, ஒரு விதிக்கு என்ன குறைகள் இருக்க முடியும் என்று அவர்

களில் எவரும் என்றைக்கும் எண்ணிப் பார்த்ததில்லை.... அதே கோட்பாட்டை அதன் பின்விளைவுகளை நோக்கித் தீவிர மாகப் பின்பற்றிச் சென்றால் அது எப்படி நேரெதிரான விளைவு களுக்குக் கொண்டுபோய் விடுகிறது? விளக்க வேண்டிய பிரச் சினை இங்கொன்று உண்டு என்று ஆதாம் ஸ்மித்துக்கு முன்போ பின்போ வந்த ஒரு பொருளாதாரவாதியாவது கண்டு கொண்டதுகூடக் கிடையாது. உழைப்புப் பிரிவினையில் நன்மையை உண்டாக்குகிற அதே காரணந்தான் தீமையையும் உண்டாக்குகிறது என்று அங்கீகரிக்கும் தொலைவுக்கு ஸேய் போகிறார்.''

திரு. புரூதோன் நினைக்கிறதைவிடத் தொலைவுக்கு ஆதாம் ஸ்மித் போகிறார். ''வெவ்வேறு மனிதர்களின் இயல்பான ஆற்றல்களிலேயுள்ள வேற்றுமை யதார்த்தத்தில் நாம் உணர்ந்துள்ளதைவிட மிகக் குறைவானதாகும்; வெவ்வேறான வேலைகளில் ஈடுபட்டுள்ள மனிதர்களை வேறுபடுத்திக் காட்டு வதாகத் தோன்றும் மிகவும் வேறுபட்ட உள்ளாற்றலானது பக்குவமான நிலையை அடைகிற போது, உழைப்புப் பிரி வினைக்குக் **காரணமாக** இருக்கிறதைவிட உழைப்புப் பிரிவினை யின் **பின்விளைவாக** இருக்கிறது.''[46] கோட்பாடு வகையிலே, காவல் நாய்க்கும் வேட்டை நாய்க்கும் உள்ள வேற்றுமை யைவிட மூட்டை சுமக்கிறவனுக்கும் மெய்யறிஞருக்கும் உள்ள வேற்றுமை குறைவானது. உழைப்புப் பிரிவினைதான் அவர்களிடையே அந்தப் பள்ளத்தை உண்டாக்கி வைத்தது. இத்தனையுமிருந்தும் உழைப்புப் பிரிவினை உற்பத்தி செய்த குறைகளைப் பற்றிக் கடுகளவேனும் ஆதாம் ஸ்மித்துக்குத் தெரியாது என்று பிறிதோரிடத்தில் திரு. புரூதோன் சொல் வதைத் தடுக்கவில்லை. ''உழைப்புப் பிரிவினையில் நன்மையை உண்டாக்குகிற அதே காரணந்தான் தீமையையும் உண்டாக்கு கிறது'' என்று ஸேய் அவர்களே முதலில் அங்கீகரித் தார் என்று இதுவேதான் மீண்டும் திரு. புரூதோனைச் சொல்ல வைக்கிறது.

நிற்க, லெமொன்தே சொல்வதைக் கேட்போம்; Suum cuique.*

---

* —அவனவனுக்குரியது அவனவனுக்கே. — [பதிப் பாசிரியர்.]

''உழைப்புப் பிரிவினையின் ஒழுக்கநெறிச் செல்வாக்கு குறித்து இந்தத் துணுக்கில் நான் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த கோட்பாட்டைத் திரு. ழா. ப. ஸேய் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய தமது மிகச் சிறந்த ஆய்வு நூலில் ஏற்றுக் கொண்டு என்னைக் கௌரவித்திருக்கிறார். எனது நூலின் சற்று விளையாட்டுத்தனமான தலைப்பு[47] அவர் என்னை மேற்கோள் காட்டுவதிலிருந்து தடுத்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. இதைக் கொண்டு அவரது மௌனத்தை நான் விளக்கமுடியும், அவர் வளச்சிறப்புள்ள எழுத்தாளர் ஆனதினால் இத்தனைச் சொற்பமான இரவல் வாங்கியதை ஒப்புக்கொள்வதால் அவருக்கு ஒன்றும் குறைந்துவிடாது.'' (லெமொன்தே, முழு நூல்திரட்டு, தொகுதி *1*, பக்கம் *245*, பாரிஸ் *1840*.)

லெமொன்தேவுக்குரிய பாராட்டை அளிப்போம்: இன்று உருவமைத்த நிலையிலேயுள்ள உழைப்புப் பிரிவினையின் தீய விளைவுகளை அறிவு கலந்த நகைச்சுவையுடன் அவர் அம்பலப் படுத்தியிருக்கிறார், அதற்கு மேல் கூடுதலாகச் சொல்வதற்குத் திரு. புரூதோனிடம் ஒன்றுமில்லை. எனினும், திரு. புரூதோனின் பிழையின் காரணமாக, இந்த முன்னுரிமைப் பிரச்சினையிலே இப்போது நாம் இழுக்கப்பட்டிருப்பதினால் போகிற போக்கிலே நாம் மீண்டும் சொல்லி வைப்போம்—அதாவது, திரு. லெமொன்தே அவர்களுக்கும் வெகுகாலத்துக்கு முன்பே, ஆ. ஃபெர்கூஸனின் மாணவராக இருந்த ஆதாம் ஸ்மித்துக்கும் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பே, உழைப்புப் பிரிவினையைக் குறிப்பாக எடுத்துக் கவனிக்கிற ஒரு அத்தியாயத்தில் அவ்விஷயத்தைப் பற்றி ஃபெர்கூஸன் ஒரு தெளிவான விரிவிளக்கம் அளித்தார்.

''கலைகளின் முன்னேற்றத்தையொட்டி தேசியச் செயல்திறத்தின் அளவு அதிகரிக்கிறதா என்றுகூடச் சந்தேகிக்கலாம். பல பொறியியக்கவியல் கலைகள்... உணர்ச்சியையும் பகுத்தறிவையும் முற்றாக ஒடுக்கிய நிலையின்கீழ் சிறப்பாக வெற்றி பெறுகின்றன; அறியாமை குருட்டு நம்பிக்கைக்கு மட்டுமின்றித் தொழிலுக்கும் தாயாகும். சிந்தனையும் கற்பனையும் பிழைபடக் கூடியவை; ஆனால் கையையோ காலையோ அசைக்கிற பழக்கம் இவ்விரண்டிற்கும் அப்பால் சுதந்தரமாக இருப்பதாகும். ஆகவே அதன்படியே, எங்கே

சிந்தனைக்கு வேலை மிகக் குறைவாக உள்ளதோ, எங்கே மனிதர்களை உறுப்புகளாகக் கொண்டிருக்கும் எஞ்சினாக ஒரு தொழிற்சாலையை—கற்பனையின் பலமான முயற்சியின்றியே—கருதக் கூடுமோ, அங்கே பட்டறைத் தொழில் மிகுதியாகச் செழிக்கிறது.... போர் பற்றிய கலையில் படைத் தலைவர் மிகவும் தேர்ந்தவராயிருக்கலாம், அதே நேரத்தில் கையையும் காலையும் அசைக்கிற சில அசைப்புகளுக்குள் சாதாரணப் பட்டாளத்தானின் திறன் குறுக்கப்பட்டிருக்கும். பட்டாளத்தானின் நஷ்டம் படைத் தலைவருக்கு இலாபமாயிருக்கலாம்.... பிரிவினைக்குரிய சகாப்தமாகிய இந்தக் காலத்தில், சிந்தனைத் திறங்கூட ஒரு அலாதியான தொழிலாகிவிடக் கூடும்.'' (ஆ. ஃபெர்கூஸன், **சொத்துக் குடியுரிமைச் சமுதாயத்தின் வரலாறு பற்றிய ஒரு கட்டுரை,** பாரிஸ் 1783[48].)

இந்த இலக்கிய மேலாய்வை முடிக்கும் முறையிலே, ''பொருளாதாரவாதிகள் **அனைவரும்** உழைப்புப் பிரிவினையின் குறைகளைவிட நிறைகளைத்தான் அதிகமாக வலியுறுத்தியுள்ளனர்'' என்பதை நாம் திட்டமாக மறுக்கிறோம். ஸிஸ்மொந்தீயைக் குறிப்பிட்டால் போதும்.

ஆகவே, உழைப்புப் பிரிவினையின் **நிறைகள்** பொருத்தவரை எல்லோருக்கும் தெரிந்த பொதுவான சொற்றொடர்களுக்குப் பொழிப்புரை கொடுப்பதற்கு மேலாகத் திரு. புரூதோன் செய்வதற்கு ஒன்றுமில்லை.

ஒரு பொது விதியாக, வகையினமாக, எண்ணமாக உழைப்புப் பிரிவினையை எடுத்துக் கொண்டு அதிலிருந்து திரு. புரூதோன் அத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் குறைகளை எப்படிப் பெறுகிறார் என்று பார்ப்போம். திரு. புரூதோனின் சமநிலைவாத அமைப்பு முறைக்குக் கேடாக எப்படி இந்த வகையினம், இந்த விதி ஒரு சமமற்ற உழைப்பு வினியோகத்தை உட்கிடையாகக் கொண்டிருக்கிறது?

''உழைப்புப் பிரிவினையின் இந்தப் புனிதமான நேரத்தில் மனிதகுலத்தின் மீது புயற்காற்று வீசத் தொடங்குகிறது. எல்லோருக்கும் சமமான, சீரான முறையிலே முன்னேற்றம் நிகழ்வதில்லை.... சிறப்புரிமையுள்ள ஒரு சிறு தொகையினரை எடுத்துக் கொண்டு அது துவங்குகிறது.... முன்னேற்றம் இப்படி மனிதர்களை விரும்பித் தேர்ந்து கொள்வதுதான் நிலைமைகளின் இயற்கையான, தெய்வாதீனமான சமமற்ற

நிலையிலே இத்தனை காலமாக நம்பிக்கையை நிலைநிறுத்தியும், சாதிகளைத் தோற்றுவித்தும், அந்தஸ்துப் படிகளிலே எல்லாச் சமுதாயங்களையும் உருவமைத்தும் வந்துள்ளது.'' (புரூதோன், தொகுதி 1, பக்கம் 94.)

உழைப்புப் பிரிவினை சாதிகளைப் படைத்தது. நிற்க, சாதிகள் உழைப்புப் பிரிவினையின் குறைகளாகும், எனவே, உழைப்புப் பிரிவினைதான் குறைகளை உண்டு பண்ணியது. Quod erat demonstrandum.* நீங்கள் சற்று மேலே போய் சாதிகளையும் அந்தஸ்துப் படிகளைக் கொண்ட உருவமைப்புகளையும் சிறப்புரிமையுள்ள நபர்களையும் உழைப்புப் பிரிவினை உண்டு பண்ணச் செய்தது எது என்று கேட்கிறீர்களா? முன்னேற்றம் என்று திரு. புரூதோன் பதிலளிப்பார். சரி, முன்னேற்றத்தைச் செய்தது எது? வரம்புக் குறுக்கம். திரு. புரூதோன் கருத்தில் வரம்புக் குறுக்கம் என்பது முன்னேற்றம் நபர்களை விரும்பித் தேர்ந்து கொள்வது.

மெய்யறிவுக்குப் பின் வரலாறு வருகிறது. அது இனிமுதற் கொண்டு வர்ணனை வகைப்பட்ட வரலாறும் அல்ல, இயக்கவியல் வகைப்பட்ட வரலாறும் அல்ல, அது ஒப்புநோக்கு வரலாறு ஆகும். தற்கால அச்சுத் தொழிலாளிக்கும் மத்திய காலத்திய அச்சுத் தொழிலாளிக்கும் இடையே—கிரேஸோ [Creusot] தொழிற்சாலையின் தொழிலாளிக்கும் நாட்டுப்புறத்துக் கருமானுக்கும் இடையே—இன்றைய எழுத்தாளனுக்கும் மத்தியகாலத்திய எழுத்தாளனுக்கும் இடையே—ஓர் ஒப்புமையைக் காட்டுகிறார். மத்தியகாலம் உருவமைத்த அல்லது வழங்கிச் சென்ற உழைப்புப் பிரிவினையுடன் வெவ்வேறு அளவுகளில் சேர்ந்தவர்களின் பக்கம் பேசுகிறார். ஒரு வரலாற்றுச் சகாப்தத்தின் உழைப்புப் பிரிவினையை மற்றொரு வரலாற்றுச் சகாப்தத்தின் உழைப்புப் பிரிவினைக்கு எதிராக அவர் நிறுத்துகிறார். அதுவா திரு. புரூதோன் நிரூபிக்க வேண்டியிருந்தது? இல்லை. பொதுவான உழைப்புப் பிரிவினையின் குறைகளை, ஒரு வகையினம் என்கிற முறையில் உழைப்புப் பிரிவினையின் குறைகளை, அவர் நமக்குக் காட்டியிருக்க வேண்டும். அது சரி, திரு. புரூதோனின் இந்த நூற்

* —இதுவே நிரூபிக்கப்பட வேண்டியதுதான்.—[பதிப்பாசிரியர்.]

பகுதியை ஏன் நாம் வலியுறுத்த வேண்டும், கொஞ்சம் பின்னுல் தள்ளி அவரே இந்தக் கற்பிதமான வாதங்களைச் சந்தேகத்திற்கு இடமின்றியே திருப்பிக் கொள்வதை நாம் பார்க்கப் போகிருேமல்லவா?

திரு. புரூதோன் தொடர்கிருர்: ''ஆன்மாவை இழிந்த நிலையெய்திடச் செய்த பிறகு, துண்டுத்துணுக்குகளாக்கப் பட்ட உழைப்பின் முதல் விளைவு வேலை நாள் நேரத்தை நீடிப்பதாகும், செலவழிக்கப்பட்ட அறிவாற்றலின் மொத்த தொகையுடன் எதிர்மறையான விகிதத்தில் அது அதிகரிக்கின்றது.... ஆனுல், வேலை நாள் நேரம் பதினுறு—பதினெட்டு மணி நேரத்துக்கு மேல் நீடிக்க முடியாது, எனவே நஷ்டஈடு வேலைநேரத்திலிருந்து சரிக்கட்ட முடியாத நிலைமை தோன்றியவுடனே அது விலையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுக் கூலி குறையும்.... நிச்சயமானதும் கவனிக்க வேண்டியது மான விஷயம் என்னவெனில், ஒரு போர்மேனின் உழைப்பையும் ஒரு மெக்கானிக்கின் உதவியாளனின் உழைப்பையும் சம விகிதத்தில் உலகமுழுதளாவிய மனச்சாட்சி மதிப்பீடு செய்வதில்லை. இக்காரணத்தினுல் நாளத்திய வேலையின் விலையைக் குறைப்பது அவசியம்; ஆக, தொழிலாளி இழிவான வேலையால் ஆன்மாவிலே அடிவாங்கிக் கொண்டபிறகு சொற்பமான கூலியால் உடம்பிலேயும் அடிவாங்கிக் கொள்ளாமல் தப்பிக்க முடியாது.''

இந்த முக்கூற்றுவாதங்களின் தர்க்க மதிப்பை விட்டுவிடுவோம்; அவை தடம்புரளச் செய்கிற பொருந்தாவாதங்கள் என்று கான்ட் கூறுவார்.

அதன் சாரப்பொருள் இதுதான்:

உற்பத்திப் பிரிவினை தொழிலாளியை ஒரு இழிவுபடுத்தும் வேலைக்குத் தாழ்த்துகிறது; இந்த இழிவுபடுத்தும் வேலை ஒரு இழிந்த ஆன்மாவுக்குப் பொருத்தமாயுள்ளது; ஆன்மாவின் இழிநிலைக்குப் பொருத்தமானது மேன்மேலும் அதிகரிக்கும் கூலிக்குறைப்பு. இந்தக் கூலிக்குறைப்பு இழிந்த ஆன்மாவுக்குப் பொருத்தமானது என்று நிரூபிப்பதற்காக உலக மனச்சாட்சியின் சித்தம் அப்படி என்று கூறித் தமது மனச்சாட்சியைத் தேற்றிக் கொள்கிருர் திரு. புரூதோன். திரு. புரூதோனின் ஆன்மா உலக மனச்சாட்சியின் ஒரு பகுதி என்று கருதலாமா?

திரு. புரூதோன் கருத்தில், இயந்திரவகை ''உழைப்புப் பிரிவினையின் தர்க்கரீதியான எதிருரையாகும்'', மேலும் தமது இயக்கவியலை உறுதிப்படுத்துவதற்காக இயந்திர வகையை அவர் தொழிற் சாலையாக உருமாற்றத் தொடங்கு கிறார்.

உழைப்புப் பிரிவினையின் விளைவுதான் வறுமை என்று காட்டுவதற்காகத் திரு. புரூதோன் நவீனகாலத் தொழிற் சாலையை முன்னனுமானித்துக் கொள்கிறார், அவர் உழைப்புப் பிரிவினையால் உண்டாக்கப்பட்டதே வறுமை என்று முன்னனு மானித்துக் கொள்வது, தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்து அதை வறுமைக்கு இயக்கவியல் ரீதியான நிலைமறுப்பு என்று காட்ட முடிவதற்காகத்தான். தொழிலாளியை இழிந்த வேலை மூலமாகத் தார்மீக வகையிலே தாக்கியபின், சொற்பக் கூலி மூலமாக உடல் வகையிலே தாக்கியபின், போர் மேனின் தயவிலே தொழிலாளியை வைத்து தேர்ச்சியில்லாத தொழிலாளியின் உழைப்புக்கு அவனது வேலையைத் தாழ்த்திய பின், அவர் தொழிலாளிக்கு ''ஒரு எஜமானனைக் கொடுத்து'' அவனை இழிந்த நிலைக்குத் தாழ்த்துவதாகத் தொழிற் சாலை மீதும் இயந்திரவகை மீதும் மீண்டும் பழி போடுகிறார், அவனை ''கைவினைஞன் அந்தஸ்திலிருந்து ஒரு தேர்ச்சியில் லாத தொழிலாளியாகத் தாழ்ந்துவிடும்படியாகச்'' செய்து அவனது இழி நிலையை முழுமையாக்கிவிடுகிறார். நேர்த்தி யான இயக்கவியல்! அத்துடனாவது நின்றிருக்கக் கூடாதா! இல்லை, உழைப்புப் பிரிவினையைப் பற்றி அவருக்கு ஒரு புதிய வரலாறும் வேண்டியிருக்கிறது—மேற்கொண்டு முரண் பாடுகளை அதிலிருந்து பெறுவதற்காக அல்ல, தமது சொந்தப் பாணியிலே தொழிற்சாலையை மறுநிர்மாணம் செய்வதற் காக. இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு உழைப்புப் பிரிவினையைப்பற்றி சற்றுமுன் தாமே சொன்னதை யெல்லாம் மறந்துவிட வேண்டிய கட்டாயத்தில் அகப் பட்டுக் கொள்கிறார்.

உழைப்பின் வசம் என்ன கருவிகள் உள்ளனவோ அவற் றிற்குத் தக்கபடி வெவ்வேறு விதமாக உழைப்பு அமைக்கப் படுகிறது, பிரிக்கப்படுகிறது. நீராவி இயந்திரத்துக்கு ஒரு உழைப்புப் பிரிவினை என்றால் கையால் இயக்கும் இயந்திரத் துக்கு வேறொரு உழைப்புப் பிரிவினை என்று முன்னனுமானிக்கப்

படுகிறது. ஆகவே, பின்னுல் இயந்திரவகை என்கிற ஒரு குறிப்பிட்ட உற்பத்திக் கருவிக்கு வந்து சேருவதற்காகப் பொதுப்படையாக உழைப்புப் பிரிவினையிலிருந்து தொடங்க விரும்புவது வரலாற்றின் முகத்தில் அறைவதாகும்.

ஏர் இழுக்கும் மாடு போலவே இயந்திரவகையும் ஒரு பொருளாதார வகையினமல்ல. இயந்திரவகை வெறும் உற்பத்திச் சக்தி மட்டுமேயாகும். இயந்திரவகையைச் செயல்படுத்துவதைச் சார்ந்திருக்கும் நவீனகாலத் தொழிற்சாலை ஒரு சமுதாய உற்பத்தி உறவாகும், ஒரு பொருளாதார வகையினமாகும்.

திரு. புருதோனின் ஒளிநிறைந்த கற்பனையில் விஷயங்கள் எப்படி நடக்கின்றன என்று இப்போது பார்ப்போம்.

''சமுதாயத்தில், இயந்திரவகை இடையருது தோன்றிக் கொண்டேயிருப்பது உழைப்புப் பிரிவினையின் எதிருரையாகும், எதிர்மாருன சூத்திரமாகும்: துண்டாக்கப்பட்ட உழைப்புக்கு, ஆளைக் கொல்லும் உழைப்புக்கு எதிராகத் தொழில் மேதை எழுப்பும் கண்டனம் ஆகும். அசலில் இயந்திரம் என்பதென்ன? உழைப்புப் பிரிவினையால் பிரிக்கப்பட்டுவிட்ட வெவ்வேருன உழைப்புக் கூறுகளை ஒன்றுபடுத்தும் ஒரு வழியாகும். ஒவ்வொரு இயந்திரத்தையும் பல வேலைக் கூறுகளின் சேர்க்கையாக வரையறுக்கலாம்.... ஆகவே இயந்திரத்தின் மூலமாகத் தொழிலாளியின் மீட்சி நிகழும்.... அரசியல் பொருளாதாரத்திலே உழைப்புப் பிரிவினையோடு முரண்பட்ட நிலையிலே தன்னை வைத்துக் கொள்ளும் இயந்திரவகை கூட்டமைவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது, மனித மனத்தில் கூட்டமைவு பகுப்பாய்வுக்கு எதிரானதாகும்.... பிரிவினை உழைப்பின் வெவ்வேறு பகுதிகளைப் பிரித்து வைத்து ஒவ்வொருவனும் தனக்கு மிகவும் இசைவான சிறப்புத் துறையில் ஈடுபட இடமளித்தது; முழுமையுடன் ஒவ்வொரு கூறுக்கும் உள்ள உறவுக்குத் தக்கபடி தொழிலாளிகளைத் தொழிற்சாலை குழுவமைக்கிறது....அது உழைப்பில் அதிகாரக் கோட்பாட்டைப் புகுத்துகிறது.... அது மட்டுமல்ல; இயந்திரம் அல்லது தொழிற்சாலை தொழிலாளிக்கு ஒரு எஜமானனைக் கொடுத்து அவனை இழி நிலைக்குத் தாழ்த்தி அவனைக் கைவினைஞன் அந்தஸ்திலிருந்து தேர்ச்சியில்லாத தொழிலாளியின் நிலைக்குத் தாழ்ந்துவிடச் செய்து அவனது

இழி நிலையை முழுமையாக்குகிறது.... நாம் கடந்து கொண்டிருக்கும் இந்த இயந்திரவகையின் காலகட்டத்தைக் கூலித் தொழிலாளி என்கிற தனிச் சிறப்பியல்பு வேறுபடுத்திக் காட்டுகிறது. கூலித் தொழிலாளி உழைப்புப் பிரிவினைக்கும் பரிமாற்றத்துக்கும் பின்விளைவாக வந்தவன்.''

திரு. புரூதோனுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறோம். ஒவ்வொருவனும் தனக்கு மிகவும் இசைவான சிறப்புத்துறையில் ஈடுபட வாய்ப்பளிக்கும் வகையில் உள்ள உழைப்பின் வெவ்வேறு கூறுகளின் பிரிவினை—இந்தப் பிரிவினை உலகம் தோன்றியதிலிருந்து இருப்பதாகச் சொல்கிறார் திரு. புரூதோன் — போட்டியின் ஆட்சிக்குட்பட்ட நவீனகாலத் தொழில்துறையிலே மட்டுமே உண்டு.

திரு. புரூதோன் மேலே போய், உழைப்புப் பிரிவினையிலிருந்து எப்படித் தொழிற்சாலை வந்ததென்றும் தொழிற்சாலையிலிருந்து கூலித்தொழிலாளி எப்படி வந்தான் என்றும் காட்டுவதற்காக ஒரு மிகவும் ''சுவையான வம்சாவளியை'' வழங்குகிறார்.

1) ''உற்பத்தியை அதன் வெவ்வேறு கூறுகளாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் ஒரு தனித் தொழிலாளியைக் கொண்டு செய்ய வைத்தால்'' உற்பத்திச் சக்திகள் பெருக்கமடையும் என்று ''கண்ட'' ஒரு மனிதனை அவர் ஊகித்துக் கொள்கிறார்.

2) இந்த மனிதன் ''இக்கருத்தின் இழையைப் பிடித்துக் கொண்டு, தனக்கென்று தானே வகுத்துக் கொண்ட தனிச் சிறப்பான நோக்கத்துக்காகத் தேர்ந்தெடுத்த ஒரு நிரந்தரமான தொழிலாளர் குழுவை அமைப்பதன் வழியாக மேலும் நிலையான உற்பத்தியைப் பெற முடியும் என்றெல்லாம் தனக்குத் தானே கூறிக் கொள்கிறான்.''

3) தனது கருத்தையும் தனது கருத்தின் இழையையும் பிடித்துக் கொள்வதற்காக மற்ற மனிதர்களிடம் அவன் ஒரு யோசனை வைக்கிறான்.

4) இந்த மனிதன், தொழில் நிகழ்போக்கின் தொடக்கத்தில் தனது சமநிலையான கூட்டாளிகளோடு உடன்படிக்கை செய்து காரியம் துவங்கினான், பின்னால் அவர்கள் அவனது தொழிலாளிகள் ஆகின்றனர்.

5) உண்மையிலே, எஜமானனின் அனுகூலமான நிலையை

யும் கூலிவாங்குபவனின் சார்ந்திருக்கும் நிலையையும் பார்க்கும் போது இந்த ஆதிச் சமநிலை விரைவிலே மறைந்து தீர வேண்டியிருந்ததை உணர்கிறோம்.''

இது திரு. புரூதோனின் வரலாற்று வகைப்பட்ட வர்ணனை ரீதியான ஆய்வுமுறைக்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

உழைப்புப் பிரிவினைக்குப்பின் தொழிற்சாலையோ இயந்திரமோ அதிகாரக் கோட்பாட்டை உண்மையிலே புகுத்தியதா; அது தொழிலாளிக்கு ஒரு புறத்தில் மறுவாழ்வளித்து மற்றொரு புறத்தில் அவனை அதிகாரத்துக்கு உட்படுத்தி வைத்ததா; இயந்திரம் என்பது பிரிக்கப்பட்டுவிட்ட உழைப்பின் மறுக் கூட்டமைப்பா, அது உழைப்பின் பகுப்பாய்வுக்கு எதிரான கூட்டமைவா என்று இப்போது வரலாற்று வகைப் பட்ட, பொருளாதாரப் பார்வை நிலையிலே பரிசீலிப்போம்.

சமுதாயம் முழுவதற்கும் ஒரு தொழிற்சாலையின் உள் அமைவுக்கும் பொதுவான அம்சம் ஒன்றுண்டு—அதாவது அதற்கும் தனக்குரிய உழைப்புப் பிரிவினை இருக்கிறது. ஒரு சமுதாயம் முழுவதற்கும் செயல்படுத்தும் நோக்குடன் ஒரு நவீனகாலத் தொழிற்சாலையிலுள்ள உழைப்புப் பிரிவினையை முன்மாதிரியாக எடுத்துக் கொள்வோமேயானால், ஒரே யொரு முதன்மையான எஜமானனைக் கொண்டு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட விதிப்படி சமுதாயத்தின் வெவ்வேறு உறுப்பினர்களுக்கும் வேலைகளை வினியோகிக்கிற வகையில் அமைந்திருக்கும் சமுதாயமே செல்வத்தை உற்பத்தி செய் வதற்கு மிகச் சிறந்த முறையிலே அமைக்கப்பட்ட சமுதாய மாக இருக்கும் என்பதில் ஐயமேயில்லை. ஆனால் விவகாரம் அப்படி இல்லை. நவீனகாலத் தொழிற்சாலைக்குள்ளே எஜமான னின் அதிகாரத்தைக் கொண்டு உழைப்புப் பிரிவினை நுட்ப விபரத்துடன் ஒழுங்குமுறையாக்கப்படுகிறது, ஆனால் நவீன காலச் சமுதாயத்துக்கு உழைப்பை வினியோகம் செய் வதற்குச் சுயேச்சையான போட்டி தவிர வேறெந்த விதியோ அதிகாரமோ கிடையாது.

தந்தைவழி ஆட்சிக் கால அமைப்பு முறையிலும் சரி, சாதி அமைப்பு முறையிலும் சரி, நிலப்பிரபுத்துவ, கைவினைப் பிரிவுத் தொழிலுக்குரிய அமைப்பு முறையிலும் சரி, சமு தாய முழுவதிலும் நிர்ணயமான விதிகளின்படி உழைப்புப் பிரிவினை இருந்தது. இந்த விதிகளை ஒரு சட்டமியற்றுபவனு

நிலநாட்டினுன்? கிடையாது. பொருளுற்பத்தி நிலமைகளிலே யிருந்து அடிமூலத்தில் பிறந்த இவை வெகுகாலத்துக்குப் பின்னரே சட்டங்களின் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டன. இவ்வழியே இந்த உழைப்புப் பிரிவினையின் வெவ்வேருன வடிவங்கள் சமுதாய அமைப்பின் அத்தனை அடித்தளங் களாயின. பட்டறையிலுள்ள உழைப்புப் பிரிவினையைப் பொருத்தவரை அது இந்தச் சமுதாய வடிவங்கள் அனைத் திலும் அற்பமாகவே வளர்ந்திருந்தது.

சமுதாயத்திற்குள்ளே உழைப்புப் பிரிவினையிலே அதி காரம் செலுத்துவது எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக இருக் கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகப் பட்டறைக்குள்ளே உழைப்புப் பிரிவினை வளர்கிறது, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அது அங்கே ஒரு தனி நபரின் அதிகாரத்துக்கு உட்படுத்தப்படுகிறது என்று ஒரு பொதுவான விதியாகக்கூட விதிக்கலாம். ஆகவே, பட்டறையிலுள்ள அதிகாரமும் சமு தாயத்திலுள்ள அதிகாரமும்—உழைப்புப் பிரிவினை சம்பந்தப் பட்ட மட்டில் — ஒன்றுக்கொன்று எதிர்மாருன விகிதத்தில் உள்ளன.

இப்போதுள்ள பிரச்சினை, எந்த விதமான தொழிற்சாலை யில் வேலைகள் மிகவும் பிரிக்கப்பட்டுள்ளன, ஒவ்வொரு தொழி லாளியின் வேலையும் மிக எளிதான வேலைக் கூருகத் தாழ்த்தப் பட்டுள்ளது, மற்றும் மூலதனம் எனும் அதிகாரம் வேலையைக் குழுவமைத்து வழிசெலுத்துகிறது என்பதே. இந்தத் தொழிற்சாலை எப்படித் தோற்றுவிக்கப்பட்டது? இந்தக் கேள்விக்கு விடையளிப்பதற்கு நாம் பட்டறைத் தொழில் துறை—அதன் சரியான பெயர் அது—எப்படி வளர்ந்தது என்று பரிசீலித்துத் தீர வேண்டும். நாம் இங்கே பேசுவது இயந்திரவகைகளைக் கொண்ட நவீனகாலத் தொழில்துறை யாக இன்னமும் ஆகாமல் அதே சமயத்தில் மேற்கொண்டு மத்தியகாலக் கைவினைஞர்களின் தொழிலாகவோ குடிசைத் தொழிலாகவோ ஏற்கெனவே இல்லாமற்போன ஒரு தொழில் துறையைப் பற்றித்தான். நாம் பெரிதாக விபரங்களில் இறங்கப் போவதில்லை; சூத்திரங்களைக் கொண்டு வரலாற்றைப் படைத்திடக் கூடாது என்று காட்டுவதற்குச் சில முக்கியமான அம்சங்களை மட்டும் தருகிருேம்.

பட்டறைத் தொழில்துறை அமைவுறுவதற்கு மிகவும்

இன்றியமையாத நிபந்தனைகளில் ஒன்று மூலதனத்தின் திரட்சி ஆகும், இதற்கு அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதும் அதன் விலையுயர்ந்த உலோகங்கள் இறக்குமதி செய்யப் பட்டதும் வசதியளித்தன.

பரிமாற்றச் சாதனங்கள் அதிகரித்ததின் விளைவாக ஒரு புறத்தில் கூலியும் நில வாடகைகளும் மதிப்பில் குறைந்து, மறுபுறத்தில் தொழில்துறை இலாபங்கள் வளர்ந்தன என்று போதிய அளவுக்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, நிலவுடைமை வர்க்கமும் உழைக்கும் மக்களும்—நிலப்பிர புத்துவ ஆண்டைமாரும் மக்களும்—எந்த அளவுக்குத் தாழ்ந் தனரோ அந்த அளவுக்கு முதலாளி வர்க்கம் உயர்ந்தது.

பட்டறைத் தொழில் துறையின் வளர்ச்சிக்கு ஒரேகாலத் தில் பங்காற்றிய மேலும் வேறு சூழ்நிலைமைகளும் உண்டு: நன்னம்பிக்கை முனை வழியாகக் கிழக்கிந்தியப் பிரதேசத் துக்குள் வாணிபம் ஊடுருவிய தருணத்திலிருந்து புழக்கத்தில் விடப்பட்ட பண்டங்களின் அதிகரிப்பு; காலனியாதிக்க முறை; கடல்வழி வாணிபத்தின் வளர்ச்சி என்று.

பட்டறைத் தொழில்துறையின் வரலாற்றில் போதிய அளவுக்கு மதிக்கப்படாத மற்றொரு அம்சமும் உண்டு, அதாவது: நிலப்பிரபுத்துவக் கோமான்களின் எண்ணிறைந்த பரிவாரங்கள் கலைக்கப்பட்டு அவற்றின் கீழ்த்தரப்படியினர் தொழிற்சாலைக்குள் நுழையுமுன் நாடோடிகளாயினர் என்பது தான். பட்டறை படைக்கப் பெறுவதற்கு முன்னே பதினைந் தாவது பதினாறுவது நூற்றாண்டுகளில் அநேகமாக முழுதளா விய நாடோடித்தனம் நிலவியது. மேலும், பட்டறைக்குப் பலமான ஆதரவு பல விவசாயிகளிடையே கிடைத்தது— விளைச்சல் நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாக உருமாற்றப் பெறு வதாலும் நிலத்தை உழுவதற்குரிய ஆட்களின் தொகையைக் குறைப்பதை அவசியமாக்கிய விவசாய முன்னேற்றத் தாலும் இவர்கள் கிராமப்புறத்திலிருந்து இடையறாது வெளிதுரத்தப்பட்டு முழுமையாகப் பல நூற்றாண்டுகளிலே நகரங்களிலே குழுமி வந்தவர்களாவர்.

சந்தையின் விரிவாக்கம், மூலதனத்தின் திரட்சி, வர்க்கங் களின் சமுதாய நிலைகளிலே ஏற்பட்ட மாற்றம், வருமான வழிதுறைகள் பறிக்கப்பட்டுப் போன பெருந் தொகையான நபர்கள் — இவையாவும் பட்டறைத் தொழில்துறையின்

அமைவுக்கு வரலாற்று ரீதியான முன்நிபந்தனைகளாகும். திரு. புரூதோன் கூறுகிறபடி, பட்டறைக்குள் மனிதர்களைக் கொண்டுவந்து சேர்த்தது சமமானவர்களிடையேயுள்ள நட்புறவான ஒப்பந்தங்களல்ல. பழையகால கைவினைஞர் தொழிலின் உட்பாகத்திலிருந்தும் பிறந்ததல்ல இந்தப் பட்டறைத் தொழில்துறை. நவீனகாலப் பட்டறைக்குத் தலைவனாகியது வியாபாரிதானே தவிர கைவினைத் தொழில் பிரிவின் தலைவன் அல்ல. அநேகமாக எல்லாவிடங்களிலும் பட்டறைத்தொழிலுக்கும் கைவினைத் தொழில்களுக்கும் இடையே கடுமையான போராட்டம் இருந்தது.

பட்டறைக்குள் உழைப்புப் பிரிவினை வளர்வதற்கு முன்னே கருவிகளும் தொழிலாளிகளும் திரட்டிக் குவிக்கப்பட்டன. உழைப்பைக் கூறுகளாகப் பிரிப்பது, ஒரு மிக எளிதான வேலைக்கு ஒரு தனித் தொழிலாளியைச் சரிப்படுத்துவது என்பதிலே பட்டறைத் தொழில்துறை அடங்கியிருந்ததை விட எவ்வளவோ மேலாக ஒரே மூலதனத்தின் ஆணையின் கீழ் ஒரே அறையில், ஒரே இடத்தில் பல தொழிலாளிகளையும் பல கைத்திறத் தொழில்களையும் ஒன்றுசேர்த்ததிலே அடங்கியிருந்தது.

மேலும் பெரிய அளவிலே வேலை செய்யப்பட்டது, மேற்செலவுகள் பலவும் குறைக்கப்பட்டது முதலியவற்றின் நிலைமையிலே பட்டறைத் தொழில் முறையின் பயன்பாடு இருந்ததைவிட உழைப்புப் பிரிவினையிலே மிகவும் குறைவாகும். பதினாறும் நூற்றாண்டின் முடிவிலும் பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் டச்சு பட்டறைத் தொழிலில் உழைப்புப் பிரிவினை மிகமிக அரிதாக இருந்தது.

உழைப்புப் பிரிவினையின் வளர்ச்சிக்கு ஒரே பட்டறையிலே தொழிலாளர்களைத் திரட்டுவதை அனுமானிக்க வேண்டியிருக்கிறது. ஒரு முழுவளவான, தயார் நிலையிலேயுள்ள பட்டறையைப் பெறும் வகையில் எல்லாவற்றையும் ஒரு இடத்தில் திரட்டிச் சேர்த்தால் போதும் எனும் அளவுக்கு ஒரே கைத்திறத் தொழிலைச் சேர்ந்த வெவ்வேறு கிளைகளும் தனித்தனியாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததற்குப் பதினாறாவது நூற்றாண்டிலோ பதினேழாவது நூற்றாண்டிலோ ஒரெடுத்துக்காட்டுகூடக் கிடையாது. ஆனால் மனிதர்களும் கருவிகளும் ஒன்றுதிரட்டிச் சேர்க்கப்பட்டவுடனே கைவினைத்

தொழில் முறைக்குரிய வடிவங்களில் இருந்த உழைப்புப் பிரிவினையானது அவசியகரமாக மீண்டும் உண்டாக்கப்பட்டுப் பட்டறைக்குள் பிரதிபலிக்கலாயிற்று.

விஷயங்களைத் தலைகீழாகப் பார்க்கும் (அதாவது பார்க்கிறார் என்றிருந்தால்) திரு. புரூதோன் கருத்தில் ஆதாம் ஸ்மித்தின் அர்த்தத்திலமைந்த உழைப்புப் பிரிவினை முன்னே வந்தது, உழைப்புப் பிரிவினை இருப்பதற்கே ஒரு நிபந்தனையாயுள்ளது பட்டறை.

இயந்திரவகை என்று முறையாகச் சொல்லக் கூடியவை பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவிலிருந்து தொடங்குகிறது. இயந்திர வகையிலே உழைப்புப் பிரிவினையின் **எதிருரையைக்** காண்பதைவிட, பிரிக்கப்பட்ட உழைப்பின் ஒற்றுமையை மீட்டுத் தருகிற **கூட்டுரையைக்** காண்பதைவிட அபத்தமானது வேறொன்றுமில்லை.

இயந்திரம் என்பது உழைப்புக் கருவிகளின் ஒன்றுபடுத்தலேயாகும், தொழிலாளிக்கு வெவ்வேறான வேலைக் கூறுகளைக் கூட்டித் தரும் கூட்டுகை அல்ல. ''உழைப்புப் பிரிவினை மூலமாக ஒவ்வொரு குறிப்பிட்ட வேலைக் கூறும் ஒரேயொரு கருவியைப் பயன்படுத்துகிற நிலைக்கு எளிதாக்கப்பட்டவுடன், தனியொரு எஞ்சினால் இயக்கப்படுகிற நிலையில் இந்தக் கருவிகள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டிருப்பதே இயந்திரமாக அமைகிறது.'' (பேபிஜ், **இயந்திரங்கள் முதலியவற்றின் பொருளாதாரம் பற்றிய ஒரு ஆய்வு நூல்**, பாரிஸ் 1833.[49]) எளிய கருவிகள்; கருவிகளின் திரட்சி; வகையிணைக் கருவிகள்; மனிதனின் கை எனும் ஒரேயொரு இயக்கியைக் கொண்டு ஒரு வகையிணைக் கருவியை இயக்குதல்; இயற்கைச் சக்திகளைக் கொண்டு இந்தக் கருவிகளை இயக்குதல்; இயந்திரம்; ஒரே மோட்டார் இயக்கியுள்ள இயந்திரங்களின் அமைப்பு; ஒரே தானியங்கி மோட்டார் இயக்கியுள்ள இயந்திரங்களின் அமைப்பு—இதுவே இயந்திர வகையின் முன்னேற்றம்.

அரசியல் துறையிலே ஆட்சி அதிகாரத்தின் குவிப்பும் தனியார் நலன்களின் பிரிவினையும் எப்படிப் பிரிக்க முடியாததாயுள்ளதோ அதேபோல் உற்பத்திக் கருவிகளின் குவிப்பும் உழைப்புப் பிரிவினையும் பிரிக்க முடியாததாகும். விவசாய உழைப்புக்குக் கருவியாகிய நிலத்தில் குவிப்பு ஏற்பட்டுள்ள

இங்கிலாந்தில் அதே நேரத்தில் விவசாய உழைப்புப் பிரிவினையும் நிலத்தைப் பயன்படுத்துவதில் இயந்திரங்களைச் செயல்படுத்தலும் உள்ளன. கருவிகளிலே பிரிவினையும் சிறு நிலச்சுவான்தார் முறையும் உள்ள பிரான்ஸில், பொதுவாகப் பார்த்தால், விவசாய உழைப்புப் பிரிவினையோ நிலத்தைப் பயன்படுத்துவதற்கு இயந்திரவகையைச் செயல்படுத்தலோ கிடையாது.

திரு. புரூதோன் கருத்தில் உழைப்புக் கருவிகளின் குவிப்பு உழைப்புப் பிரிவினையின் நிலைமறுப்பாகும். யதார்த்தத்திலே நிலைமை எதிர்மாறுயுள்ளது. கருவிகளின் குவிப்பு வளர வளர உழைப்புப் பிரிவினை வளர்கிறது; உழைப்புப் பிரிவினை வளர வளர கருவிகளின் குவிப்பு வளர்கிறது. எனவேதான் ஒவ்வொரு பெரிய பொறியியக்கவியல் புனைவையும் தொடர்ந்து இன்னும் மேலான உழைப்புப் பிரிவினை வருகிறது, மற்றும் உழைப்புப் பிரிவினையில் ஏற்படும் ஒவ்வொரு ஏற்றமும் தன் முறைக்குப் புதிய பொறியியக்கவியல் புனைவுகளைத் தோற்றுவிக்கிறது.

இயந்திர வகைப் புனைவு ஏற்பட்டபிறகுதான் இங்கிலாந்தில் உழைப்புப் பிரிவினையில் மாபெரும் முன்னேற்றம் தொடங்கியது என்கிற உண்மையை நாம் நினைவூட்டத் தேவையில்லை. இப்படித்தான் நெசவாளர்களும் நூற்பவர்களும் பெரும்பாலும் விவசாயிகளாக இருந்தனர் — வளர்ச்சியில் பிற்பட்ட நாடுகளில் இன்னமும் காணப்படுகிற மாதிரி. இயந்திரவகையின் புனைவு பட்டறைத்தொழிலை விவசாயத் தொழிலிலிருந்து பிரியச் செய்தது. சற்றுமுன் வரை ஒரே குடும்பத்தில் இணைந்திருந்த நெசவாளியும் நூற்பவனும் இயந்திரத்தால் பிரிக்கப்பட்டனர். இயந்திரத்தின் காரணமாக, நெசவாளி கிழக்கு இந்தியப் பிரதேசத்தில் இருக்கையில் நூற்பவன் இங்கிலாந்தில் இருந்து வர முடியும். இயந்திர வகை புனையப்படுமுன் ஒரு நாட்டின் தொழில் அந்த நாட்டின் மண்ணிலேயே விளைந்த கச்சா பொருட்களை முக்கியமாகக் கொண்டே நடந்தது: இங்கிலாந்தில் கம்பளிமயிர், ஜெர்மனியில் நயச்சணல், பிரான்ஸில் பட்டு, நயச்சணல், கிழக்கு இந்தியப் பரப்பிலும் லெவான்ட் பிரதேசத்திலும் பருத்தி, முதலியவாறு. இயந்திர வகையையும் நீராவியையும் செயல்படுத்திய காரணத்தால், பெருமளவான தொழில்துறை

யானது நாட்டு மண்ணிலிருந்து பிரிந்து உலகச் சந்தையையும் சர்வதேசப் பரிமாற்றத்தையும் சர்வதேச உழைப்புப் பிரிவினையையும் முழுவதாகச் சார்ந்து நிற்கும் அளவிலா பரிமாணங்களை உழைப்புப் பிரிவினை எடுக்க முடிந்திருக்கிறது. கடைசியாக, ஏதாவதொரு பொருளின் உற்பத்தியிலே அதன் சில பகுதிகளை இயந்திரத்தின் உதவியுடன் உற்பத்தி செய்வதற்கு வழி தெரிந்தால் போதும், உடனே உற்பத்தியானது சுயேச்சையான இரண்டு வேலைகளாகப் பிரிந்துவிடும் அளவுக்கு உழைப்புப் பிரிவினை மீது இயந்திரத்துக்கு மாபெரும் செல்வாக்கு இருக்கிறது.

இயந்திரவகையின் புனைவிலும் முதன்முதலான செயல்பாட்டிலும் திரு. புருதோன் கண்டுபிடிக்கிற தயாளசிந்தனையுள்ள, தெய்வாதீனமான நோக்கத்தைப் பற்றி நாம் பேசவும் வேண்டுமா?

இங்கிலாந்தில் உடலுழைப்பு இனிமுதல் போதாது என்கிற அளவுக்குச் சந்தை வெகுவாக வளர்ந்துவிட்டபோது இயந்திரவகையின் அவசியம் உணரப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்கெனவே நன்கு வளர்ந்திருந்த பொறியியக்கவியலைச் செயல்படுத்தும் கருத்து வந்தது.

தயாள சிந்தனை என்று சிறிதேனும் இல்லாத செய்கைகளோடு இயந்திரத் தொழிற்சாலை தனது வாழ்க்கையைத் தொடங்குகிறது. சவுக்கு முனையிலே குழந்தைகளிடம் வேலை வாங்கப்பட்டது; குழந்தைகள் வாங்கி விற்பதற்கான பொருளாயினர், அனாதைக் குழந்தை விடுதிகளோடு கன்ட்ராக்டுகள் செய்யப்பட்டன. தொழிலாளிகளுக்குப் பயிற்சியளிப்பது பற்றிய எல்லாச் சட்டங்களும் ரத்து செய்யப்பட்டன—காரணம், திரு. புருதோனின் சொற்களிலே சொல்வதென்றால், **கூட்டமைவான** தொழிலாளிகள் இனி மேல் தேவையில்லை. இறுதியாக, 1825ம் ஆண்டு முதல், தொழிலாளிகளின் தனிச்சிறப்பான ஆற்றலை எப்படியாவது மதிப்பில் குறையச் செய்ய முயல்கிற முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களின் விளைவாகத்தான் அநேகமாக எல்லாப் புனைவுகளும் உண்டாயின. சிறிதேனும் முக்கியமான ஒவ்வொரு புதிய வேலை நிறுத்தத்துக்கும் பிறகு ஒரு புதிய இயந்திரம் தோன்றியது. இயந்திரவகையின் செயல்பாட்டிலே ஒரு மாதிரியான **மறுவாழ்வின் மீட்சியை**

(திரு. புரூதோன் சொல்லக்கூடிய வகையில்) கொஞ்சமேனும் தொழிலாளி பார்க்காததால் பதினெட்டாம் நூற்றுண்டில் வெகுகாலம் வரைக்கும் அவன் தானியங்கியின் மூளைத்து வரும் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி வந்தான்.

டாக்டர் யூர் சொல்கிருர்: ''குழல்வடிவ உருளைகளின் வரிசைத்தொடரை வியாட் கண்டுபிடித்தார்... (வழக்கமாக ஆர்க்ரைட் கண்டுபிடித்ததாகக் கூறப்படும் நூற்பு விரல்கள்).... நான் அறிந்த வரை, ஒரு முறையான தானியங்கிப் பொறியுத்தி புனைவதிலே முதன்மையான கஷ்டம் அவ்வளவாக இருக்கவில்லை...மனிதர்கள் தமது அசட்டையான வேலைப் பழக்கங்களைக் கைவிட்டு நுட்பச்சிக்கலுள்ள தானியங்கியின் இடைவேறுபாடற்ற முறைமையோடு ஒன்றுகிப் போகும்படி பயிற்சியளிப்பதிலேதான் இருந்தது. தொழிற்சாலையின் சலியா செயற்பாட்டுக்குத் தகுந்த வெற்றிகரமான தொழிற்சாலைக் கட்டுப்பாடுச் சட்டத்தை நிறுவிச் செயலில் செலுத்துவதே ஆர்க்ரைட்டின் அசுர முயற்சியும் மேன்மையான சாதனையுமாகும்.''

சுருங்கச் சொன்னுல், இயந்திரவகை புகுத்தப்பட்டதின் வழியாகச் சமுதாயத்திலே உழைப்புப் பிரிவினை வளர்ந்துள்ளது, பட்டறைக்குள் தொழிலாளியின் வேலை எளிதாக்கப்பட்டிருக்கிறது, மூலதனம் குவிக்கப்பட்டிருக்கிறது, மனிதர்கள் மேலும் துண்டாடப்பட்டுள்ளனர்.

திரு. புரூதோன் பொருளாதாரவாதியாக இருக்க விரும்புகிற போது, ''மூளையிலுள்ள வரிசைத்தொடரான உறவிலே கருத்துக்களின் பரிணுமத்தை'' ஒரு விளுடி கைவிட விரும்புகிற போது, அவர் ஆதாம் ஸ்மித்திடம்—இயந்திரத் தொழிற்சாலை அப்பொழுதுதான் வந்து கொண்டிருந்த காலத்திடம்—சென்று புலமை பெறுகிருர். பார்க்கப்போனுல், ஆதாம் ஸ்மித் காலத்திலிருந்த உழைப்புப் பிரிவினைக்கும் தொழிற்சாலையில் நாம் காண்கிற உழைப்புப் பிரிவினைக்கும் எவ்வளவு வித்தியாசம்! இதை நன்கு புரிந்து கொள்வதற்கு டாக்டர் யூர் அவர்களின் **பட்டறைத் தொழிலுக்குரிய மெய்யறிவு** எனும் நூலிலிருந்து சில பகுதிகளை மேற்கோள் காட்டினுல் போதுமானது.

''தானியங்கி இயந்திரங்களைப் பற்றி அரிதாகத் தெரிந்திருந்த காலத்தில், பொருளாதாரத்தைப் பற்றிய தமது

இறவாப் புகழ் பெற்ற கூறுகளை ஆதாம் ஸ்மித் எழுதிய போது, உழைப்புப் பிரிவினையே பட்டறைத் தொழிலின் மேம்பாட்டுக்குரிய மகத்தான கோட்பாடு என்று கருதவேண்டி வந்தது முறைதான்; அவர் குண்டூசி செய்வதை எடுத்துக் காட்டாகக்கொண்டு அதனுல் எப்படி ஒவ்வொரு கைவினைஞனும் ஒரு குறிப்பிட்ட முனையில் பயிற்சி மூலம் நிறைதேர்ச்சி பெற முடிந்து மேலும் விரைவாக வேலை செய்யக் கூடிய, மலிவான தொழிலாளியாஞன் என்று காட்டினுர். பட்டறைத் தொழிலின் ஒவ்வொரு கிளையிலும், அந்தக் கோட்பாட்டின்படி, சில உறுப்புக்கள்—குண்டூசிக்கான கம்பிகளைச் சம சீரான நீளத்துக்கு வெட்டுவது போன்றவை—சுளுவாகச் செய்ய முடிகிறதையும் சில உறுப்புக்கள்—குண்டூசியின் தலையை உருவாக்கிப் பொருத்துவது போன்றவை—ஒப்பீட்டில் கஷ்டப்பட்டுச் செய்ய முடிகிறதையும் அவர் கண்டார்; ஆகவே, ஒவ்வொன்றுக்கும் தக்க தேர்ச்சியும் விலையும் உள்ள ஒரு தொழிலாளி இயல்பாகவே நியமிக்கப்பட்டிருப்பதாக அவர் முடிவு கட்டினுர். இந்தத் தகவமைத்தல் என்பது தான் உழைப்புப் பிரிவினையின் சாரப் பொருள்.... பயனுள்ள எடுத்துக்காட்டுக்குரிய விஷயமாக டாக்டர் ஸ்மித் காலத்திலிருந்ததை எடுத்து இப்போது காட்டினுல் பட்டறைத் தொழிலின் சரியான கோட்பாடு பற்றி மக்களுக்குத் தவறுன கருத்தைக் கொடுக்கிற அபாயம் ஏற்படாமற்போகாது. உண்மையாகச் சொன்னுல், உழைப்புப் பிரிவினை, அல்லது மனிதர்களின் வெவ்வேறுன ஆற்றல்களுக்குத் தக்கபடி உழைப்பைச் சரிவரப் பொருத்துவது பற்றித் தொழிற்சாலையிலே வேலைக்கு நியமிக்கும்போது சிந்திப்பதேயில்லை. அதற்கு மாறுக, ஏதாவது ஒரு செய்முறைக்கு ஒரு அலாதியான லாகவமும் நிதானமும் கைக்கு வேண்டியதாகவிருந்தால், பல விதமான ஒழுங்கீனங்களுக்கு ஆட்படக்கூடிய தந்திரமிக்க தொழிலாளியிடமிருந்து அந்தச் செய்முறை சாத்தியமான விரைவிலே எடுக்கப்பட்டு ஒரு குழந்தைகூடக் கவனித்துக் கொள்ளக் கூடியதாயிருக்கிற தானியங்கியொழுங்குள்ள அலாதியான பொறியுத்தியிடம் ஒப்படைக்கப்படுகிறது.

''ஆகவே, தொழிற்சாலை அமைப்பு முறையின் கோட்பாடு கைத் திறனுக்குப் பதிலாகப் பொறியியக்கவியலை

வைப்பதும், கைவினைஞர்களிடையே உழைப்புப் பிரிவினைக்கு அல்லது உழைப்புப் படித்தரங்களுக்குப் பதிலாக ஒரு செய் முறையை அதன் முக்கியமான இணைக்கூறுகளாக்கும் பிரி வினையை வைப்பதும் ஆகும். கைத்திறத் தொழில் அமைப்பில், ஏறத்தாழத் திறனுள்ள உழைப்பு உற்பத்தியின் மிக விலை யுள்ள அம்சமாக இருப்பது வழக்கம்... ஆனால் இயந்திரவகை அமைப்பில், திறனுள்ள உழைப்பு படிப்படியாக நீக்கப் பட்டு அதனிடத்தில் இயந்திரங்களை மேற்பார்வை செய்து வரும் நபர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

''மனித இயல்பின் பலவீனத்தின் காரணமாக, தொழி லாளி எவ்வளவுக்கெவ்வளவு திறனுள்ளவனாக இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு தற்சித்தப் போக்குள்ளவனாகவும் கட்டுக் கடங்காதவனாகவும் ஆகக் கூடும், எனவே அவன் ஒரு பொறி யியக்க அமைப்புமுறையின் இணைக் கூறாக இருக்க லாயக்குக் குறைந்தவனாயிருப்பான், அதில் அவன் அப்போதைக்கப் போது ஒழுங்கீனங்களின் காரணமாக மொத்தத்துக்குப் பெரும் சேதம் விளைக்கக் கூடும். ஆகவே, நவீனகாலப் பொருளுற்பத்தி முறையின் மகத்தான நோக்கமாவது, மூலதனத்தையும் விஞ்ஞானத்தையும் ஒன்றுபடுத்துவதின் மூலமாகத் தமது தொழிலாளிகளின் வேலையை எச்சரிக்கை யையும் லாகவத்தையும் கையாளுவதுடன் குறுக்கிவிடு வதாகும்—இந்த ஆற்றல்களை ஒரு செய்முறையில் ஒருமுனைப் படுத்துகிற பொழுது இளந்தொழிலாளர்களிடையே விரைவிலே நிறைத் தேர்ச்சி நிலைக்குக் கொணர முடியும்.

''[உழைப்பின்] படித்தர முறைப்படி, சிக்கலான சில பொறியியல் செயல்களைச் செய்வதற்குக் கையும் கண்ணும் போதுமான திறன் பெறுவதற்கு ஒருவன் பல ஆண்டுகள் பயிற்சி பெற்றாக வேண்டும்; ஆனால் ஒரு செய்முறையை அதன் இணைக்கூறுகளாகப் பிரித்து ஒவ்வொரு இணைக்கூறும் ஒரு இயந்திரத்தினால் செய்யப்படுகிற முறைப்படி, சாதாரணக் கவனமும் செயல்திறமும் உள்ள ஒருவனுக்குக் குறுகிய பயிற்சிக் காலத்துக்குப்பின் மேலே சொன்ன ஏதாவதொரு இணைக்கூறுக்குப் பொறுப்பாக்கிவிடலாம், ஏதாவது அவசர காலத்தில் எஜமானனின் உசிதப்படி ஒன்றிலிருந்து மற்றொன் றுக்கு மாற்றிவிடலாம். இப்படிப்பட்ட மாற்றங்கள் பழைய உழைப்புப் பிரிவினையின் நடைமுறைக்கு முற்றிலும் வேறு

பட்டதாகும்—பழைய உழைப்புப் பிரிவினையின் நடைமுறை யானது சங்கடமான, உணர்ச்சியை வீணடிக்கிற சீர்மை யோடு வாழ்க்கை முழுவதும் ஒருவனைக் குண்டூசியின் தலையை உருவாக்கும் வேலைக்கும் மற்றொருவனைக் குண்டூசியின் முனையைக் கூராக்கும் வேலைக்கும் நிர்ணயித்தது.... ஆனால், இயந்திரங்களின் சமநிலைப்படுத்தும் முறைப்படி, தொழி லாளி தனது ஆற்றல்களை இசைவாக இயக்கிவந்தால் போதும்.... அவனுடைய வேலை ஒரு நல்லொழுங்குள்ள இயந்திரத்தின் வேலையை மேற்பார்வையிட்டு வருவதே யாகும், அதை அவன் குறுகிய காலத்தில் கற்றுக் கொள்ள முடியும்; மேலும், அவன் ஒரு இயந்திரத்தை விட்டு மற்றொன்றுக்கு வேலை மாற்றிச் செல்கிற பொழுது அவனது வேலை வேறுபடுகிறது, தன்னுடைய உழைப்பிலிருந் தும் தனது கூட்டாளிகளின் உழைப்பிலிருந்தும் விளைகிற பொதுவான கூட்டுகைகளைப் பற்றிச் சிந்திக்கிறதின் வழி யாக அவனது கருத்துக்கள் விரிவடைகின்றன. ஆகவே, ஒழுக்க நெறி பேசும் எழுத்தாளர்கள் உழைப்புப் பிரிவினைக்கு (நியாயமில்லை என்று சொல்ல முடியாத நிலைமையில்) கற்பித்தார்களே அந்த ஆற்றல்களைக் குறுக்கிக்கட்டிவிடும் போக்கும், சிந்தனையைக் குறுக்கிவிடும் போக்கும், உடலின் வளர்ச்சியைத் தடுக்கும் போக்கும் சமனப்பாடுள்ள தொழில் துறை வினியோகத்தில், பொதுவான சூழ்நிலைமைகளில், நிகழ முடியாது....

''உண்மையிலே பார்த்தால், மனித உழைப்பை அறவே நீக்கிவிடுவது அல்லது ஆண்களின் உழைப்புக்குப் பதிலாகப் பெண்களின் உழைப்பையும் குழந்தைகளின் உழைப்பையும் வைப்பதின் மூலம் அதன் விலையைக் குறைப்பது, அல்லது பயிற்சி பெற்ற கைவினைஞர்களுக்குப் பதிலாகத் தேர்ச்சி பெருத தொழிலாளிகளின் உழைப்பை வைப்பது, இயந்திர வகையில் ஏற்படும் ஒவ்வொரு மேம்பாட்டின் இடையருத நோக்கும் போக்கும் ஆகும்.... நீண்ட அனுபவமுள்ள தொழி லாளிகளுக்குப் பதிலாக உன்னிப்பான கண்களும் லாகவமுள்ள விரல்களும் பெற்ற குழந்தைகளை மட்டும் வேலைக்கு வைக்கிற இந்தப் போக்கு, உழைப்புப் பிரிவினையை ஆற்ற லின் படிநிலைகளாக்கும் ஏட்டுப் புலமை வகைப்பட்ட வறட்டுச் சூத்திரத்தை எப்படி நமது அறிவுத் தெளிவுள்ள

முதலாளிகள் பொய்யாக்கிவிட்டனர் என்று காட்டுகிறது.'' (ஆண்டிரூ யூர், பட்டறைத் தொழிலுக்குரிய மெய்யறிவு அல்லது தொழில்துறைப் பொருளாதாரம், தொகுதி 1, அத்தியாயம் 1[50])

நவீனகாலச் சமுதாயத்தினுள் உழைப்புப் பிரிவினைக்கு தன்மைக் குறியாக விளங்குவது, அது தனிச்சிறப்புள்ள வேலைகளையும் சிறப்புத் தேர்ச்சியாளர்களையும் அத்துடன் கூடவே கைத்திறத் தொழில் மடமையையும் உண்டாக்குவதேயாகும்.

லெமொன்தே சொல்கிருர்: ''பண்டைக் காலத்தவர்களில் ஒரே நபர் மெய்யறிஞனுகவும் கவிஞனுகவும் பேச்சாளனுகவும் வரலாற்ருசிரியனுகவும் புரோகிதனுகவும் அரசு நிர்வாகியாகவும் இராணுவத் தளபதியாகவும் உயர்வாகச் சிறப்பெய்துவதைப் பார்க்கும் போது நாம் வியந்து நிற்கிருேம். இவ்வளவு விரிவான ஆற்றலாட்சி மண்டலத்தைக் கண்டு மனம் திகைத்துவிடுகிறது. நாம் ஒவ்வொருவரும் வேலி போட்டுக் கொண்டு அதனுள் நம்மை அடைத்துக் கொள்கிருேம். இவ்வாறு துண்டுபடுத்திக் கொள்வதால் களத்தின் பரப்பு விரிகிறதா என்று எனக்குத் தெரியாது, ஆனல் மனிதன் சிறுமைப்படுத்தப்படுகிருன் என்பதை மட்டும் நிச்சயமாக அறிவேன்'' என்று.

இயந்திரத் தொழிற்சாலைக்குள் உழைப்புப் பிரிவினையின் தன்மைக் குறியாக விளங்குவது, அங்கே உழைப்பு தனது தனித்தேர்ச்சிச் சிறப்பை முற்ருக இழந்துள்ளதுதான். ஆனல் ஒவ்வொரு தனித்தேர்ச்சிச் சிறப்பின் வளர்ச்சியும் நின்று போனவுடனே, உலகளாவிய முழுமையின் தேவையையும், தனிநபரின் ஒன்றிணைந்த வளர்ச்சியை நோக்கிச் செல்லும் போக்கையும் நாம் உணரத் தொடங்குகிருேம். இயந்திரத் தொழிற்சாலை சிறப்புத் தேர்ச்சியாளர்களையும் கைத்திறத்தொழில் மடமையையும் ஒழித்துவிடுகிறது.

இயந்திரத் தொழிற்சாலையின் இந்த ஒரு புரட்சிகரமான அம்சத்தைக்கூட திரு. புருதோன் புரிந்து கொள்ளாததால், அவர் ஒரு அடி பின்னே எடுத்து வைத்து தொழிலாளிக்கு குண்டூசியின் பன்னிரண்டு கூறுகளில் ஒன்றைச் செய்வதோடு நில்லாமல் ஒன்றன் பின்ஞென்ருக எல்லாப் பன்னிரண்டு கூறுகளையும் செய்யுமாறு யோசனை கூறுகிருர். இவ்வழியே

தொழிலாளிக்குக் குண்டூசி பற்றிய முழு அறிவும் உணர்வும்ஏற்படுகிறது. இதுவே திரு. புரூதோனின் கூட்டமைத்த உழைப்பு. ஒரு அடி முன்னே போய் ஒரு அடி பின்னே வந்தால் அதுவும் கூட்டமைத்த இயக்கமே என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

சுருக்குவோம்: திரு. புரூதோன் சிறு பூர்ஷ்வா இலட்சியத்தைத் தாண்டிச் செல்லவில்லை. இந்த இலட்சியத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அவர் நம்மை மத்தியகால உதவி கைவினைஞனின் நிலைக்கு, அல்லது அதிகப்பட்சமாகப் போனால் கைவினைச் சங்க உறுப்பினரின் நிலைக்கு அழைத்துச் செல்வதற்கு மேலாகச் சிந்திக்க முடியவில்லை. வாழ்க்கையிலே ஒருவன் ஒரு தலைசிறந்த படையலைப் படைத்தால் போதும், தான் ஒரு மனிதன் என்று ஒரு தடவை உணர்ந்திருந்து விட்டால் போதும் என்று தமது நூலில் எங்கோ சொல்கிறார். உருவத்திலும் சரி உள்ளடக்கத்திலும் சரி, இது மத்தியகாலக் கைவினைச் சங்கம் கோரிய சிறப்புப் படையல் அல்லவா?

§3. போட்டியும் ஏகபோகமும்

போட்டியின் நல்ல அம்சம்	''பிரிவினையைப் போல போட்டியும் உழைப்புக்கு முக்கியமாகும்.... சம நிலையின் வருகைக்கு அது அவசியம்.''
போட்டியின் தீய அம்சம்	''இந்தக் கோட்பாடு தனக்குத் தானே நிலைமறுப்பாக உள்ளது. தன் பின்னே இழுத்து வரும் அனைவரையும் நாசம் செய்வதே அதன் மிக உறுதியான விளைவு.''
பொதுவான சிந்தனை	''அதை அடியொற்றி வருகிற குறைகளும் சரி, அது வழங்கும் நிறைகளும் சரி,... ஒருங்கே இந்தக் கோட்பாட்டிலிருந்து தர்க்க ரீதியாக வருவனவாகும்.''

''சமரசம் செய்யக் கூடிய பண்புக்கு உரிய கோட்பாட்டைத் தேட வேண்டும், அது சுதந்தரத்தைவிட உயர்வான ஒரு விதியிலிருந்து பெறப்பட வேண்டும்.''

மாற்றுரை

தீர்க்க வேண்டிய பிரச்சினை

''ஆகவே, போட்டியை ஒழிக்கிற பிரச்சினைக்கே இங்கு இடம் இருக்க முடியாது, சுதந்தரத்தைப் போலவே அதையும் ஒழிப்பதென்பது சாத்தியமற்றது; அதன் நடுவமைதி நிலையை — அதன் போலீஸை என்றுகூட நான் சொல்லத் தயார் — கண்டுபிடித்தால் போதும்.''

போட்டிக்குப் பதிலாக முன்னேடுக்கத்தை வைக்க விரும்புகிறவர்களை* எதிர்த்து திரு. புரூதோன் போட்டியின் நிரந்தரமான அவசியத்தைக் காப்பதுடன் தொடங்குகிறார்.

''நோக்கற்ற முன்னேடுக்கம்'' என்று ஒன்றும் இல்லை, ''ஒவ்வொரு வேட்கைக்கும் உரிய இலக்கு அவசியகரமாக அந்த வேட்கை மாதிரியே உள்ளது—காதலனுக்குப் பெண், அதிகார ஆசையுள்ளவனுக்கு அதிகாரம், கருமிக்குப் பொன், கவிஞனுக்கு மலர்மாலை போல—என்பதால் தொழில்துறை முன்னேடுக்கத்துக்கும் இலாபம் என்பது அவசியகரமான இலக்காகும். முன்னேடுக்கம் என்பது போட்டி தவிர வேறில்லை.''

போட்டி என்பது இலாபத்தை இலக்காகக் கொண்டுள்ள முன்னேடுக்கமேயாகும். தொழில்துறை முன்னேடுக்கம் அவசியமாகவே இலாபத்தை இலக்காகக் கொண்ட முன்னேடுக்கம், அதாவது போட்டி, ஆகுமா? ஆகும் என்று அடித்துச் சொல்லி அதை நிரூபிக்கிறார் திரு. புரூதோன். அவரைப் பொருத்தவரை, அடித்துப் பேசுவது உறுதிப்படுத்துவதற்கொப்பாகும், அனுமானித்துக் கொள்வது மறுத்திடுவது போல, என்று நாம் பார்த்தோம்.

காதலனின் உடனடி இலக்கு பெண் என்றால் தொழில்துறை முன்னேடுக்கத்தின் உடனடி இலக்கு விளைபொருளே யாகும், இலாபமல்ல.

---

* —ஃபூரியே வாதிகள்.—[1885 ஜெர்மன் பதிப்புக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் வரைந்த குறிப்பு.]

போட்டி என்பது தொழில்துறை முன்னேடுக்கமல்ல, அது வாணிபத் துறைக்குரிய முன்னேடுக்கமாகும். நம் காலத்தில் வாணிப நோக்குடன் மட்டுமே தொழில்துறை முன்னேடுக்கம் இருக்கிறது. உற்பத்தி செய்யாமலே இலாபமடிக்க வேண்டும் என்கிற ஒரு வகையான பைத்தியம் எல்லோரையும் பிடித்துக் கொள்கிற கட்டங்கள்கூட நவீனகால நாடுகளின் பொருளாதார வாழ்க்கையிலே உண்டு. அவ்வப்பொழுது திரும்ப நிகழ்கிற இந்த ஊகபேரப் பைத்தியம் போட்டியின் உண்மையான தன்மையை அம்பலப்படுத்துகிறது, தொழில்துறை முன்னேடுக்கத்தின் தேவையிலிருந்து போட்டி தப்பிக்க முயல்கிறது.

பதினுன்காம் நூற்றுண்டைச் சேர்ந்த ஒரு கைவினைஞனிடம் சிறப்புரிமைகளுக்கும் நிலப்பிரபுத்துவ முறையைச் சேர்ந்த தொழில்துறை அமைப்பு முழுவதற்கும் பதிலாகப் போட்டி எனப்படும் தொழில்துறை முன்னேடுக்கம் வைக்கப்படும் என்று நீங்கள் சொல்லியிருந்தால், அந்தப் பல்வேறு கார்ப்பரேஷன்களின், கில்டுகளின், ஃபிரெடெர்னிடிகளின் சிறப்புரிமைகள் எனப்பட்டவை அமைப்பு வடிவான போட்டிதான் என்று அவன் விடையளித்திருப்பான். ''முன்னேடுக்கம் என்பது போட்டியே தவிர வேறில்லை'' என்று திரு. புரூதோன் அடித்துப் பேசுவது இதற்குமேல் போகிறதாயில்லை.

''1847 ஜனவரி முதல் நாளிலிருந்து ஒவ்வொருவனுக்கும் உழைப்பும் கூலியும் உத்தரவாதமாக்கப்படும் என்று ஆணை போடுங்கள்: உடனே தொழில்துறையின் தீவிரமான முறுக்கேறிய நிலை போய் பெரும் நிம்மதிநிலை ஏற்படும்.''

ஓர் அனுமானம், ஒரு வல்லுரை, ஒரு மறுப்புரை என்பதற்குப் பதிலாக இப்போது திரு. புரூதோன் ஒரு ஆணை பிறப்பிக்கிருர்—போட்டியின் தேவையை, ஒரு வகையினம் என்கிற முறையில் அதன் நிரந்தரத் தன்மையை, நிரூபிக்கும் ஒரே நோக்குடன்.

போட்டியிலிருந்து தப்புவதற்கு ஆணைகளே போதும் என்று நினைத்தால் நாம் என்றைக்கும் போட்டியிலிருந்து தப்பப் போவதில்லை. மேலும், கூலியை அப்படியே இருக்க விட்டுப் போட்டியை ஒழிக்கலாம் என்கிற யோசனை அளிக்கிற அளவுக்குப் போவோமானுல், அரசாணை மூலமாக முட்டாள்தனம் பண்ணலாம் என்று யோசனையளிப்பதாகிவிடும். ஆனுல்

அரசாணைகள் போட்டு தேசங்கள் வளர்கிறதில்லை. அப்படிப் பட்ட அரசாணைகளை உருவாக்குமுன் குறைந்தபட்சமாக வாவது அவை தமது தொழில் அரசியல் துறைகளின் நிலைமைகளையும், அவ்வழியே வாழ்க்கை முறை முழுவதை யும், அடிமுதல் நுனி வரை மாற்றியிருந்திருக்க வேண்டும்.

இதற்குத் திரு. புரூதோன் அசைக்கொணாத நம்பிக்கை யுறுதியுடன் அது ''வரலாற்றில் முன்னுதாரணங்கள் அற்ற தான நமது இயல்பின் உருமாற்றத்திற்கு'' உரிய ஊகப் பிரமாணமாகும் என்றும், அவர் ''விவாதத்திலிருந்து நம்மை விலக்கி வைப்பது'' சரியாகவே இருக்கும் என்றும் — எந்த ஆணையின்படியோ நமக்குத் தெரியாது — விடையளிப்பார்.

வரலாறு முழுவதும் மனித இயல்பின் இடையறாத உரு மாற்றமே தவிர வேறில்லை என்று திரு. புரூதோனுக்குத் தெரியாது.

''உண்மை விஷயங்களில் நின்று பேசுவோம். பிரெஞ்சுப் புரட்சி அரசியல் சுதந்தரத்துக்காக மட்டுமின்றித் தொழில் துறைச் சுதந்தரத்துக்காகவும் செய்யப்பட்டது; மேலும், 1789ல் பிரான்ஸ் தான் நடைமுறையாக்கக் கோரிய கோட் பாட்டின் எல்லாப் பின்விளைவுகளையும் (வெளிப்படையாகக் கூறுவோம்) கண்டுகொள்ளவில்லையாயினும் அதன் விருப்பங் களிலோ எதிர்பார்ப்புகளிலோ அது தவறு செய்யவில்லை. இதை மறுக்க முயல்கிறவன் எனது மதிப்பில் விமர்சன உரிமையை இழக்கிறான். இரண்டரை கோடி மனிதர்களின் தன்னியல்பான தவற்றைக் கோட்பாடாக வைக்கிற எதிரி யுடன் நான் என்றைக்கும் வாதிட மாட்டேன்....பிறகென்ன, போட்டியானது சமுதாயப் பொருளாதாரத்தின் ஒரு கோட் பாடாக இல்லாதிருந்தால், தலைவிதியின் ஆணையாக இல்லா திருந்தால், மனித ஆன்மாவின் தேவையாக இல்லாதிருந்தால், கார்ப்பரேஷன்களையும் கில்டுகளையும் ஃபிரெடெர்னிடிகளை யும் ஒழிப்பதற்குப் பதிலாக அவற்றைச் சீர்திருத்துவதைப் பற்றி ஏன் யாரும் சிந்திக்கவில்லை?''

எனவே, பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ் சுக்காரர்கள் கார்ப்பரேஷன்களையும் கில்டுகளையும் ஃபிரெ டெர்னிடிகளையும் உருமாற்றுவதற்குப் பதிலாக ஒழித்துவிட் டதனால், பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சுக் காரர்கள் போட்டியை ஒழிப்பதற்குப் பதிலாக உருமாற்றித் தீர வேண்டும். வரலாற்று ரீதியான தேவைகளின் விளைவாக

பிரான்ஸில் போட்டி நிலைநாட்டப் பெற்றதால் இந்தப் போட்டியைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒழிக்கக் கூடாது, வேறு வரலாற்று ரீதியான தேவைகளின் காரணமாக. பதினெட்டாம் நூற்றாண்டின் மனிதர்களின் அசல் வளர்ச்சி யோடு போட்டி நிலைநிறுத்தப் பெற்றது பிணைந்திருப்பதைத் திரு. புரூதோன் புரிந்து கொள்ளாமல் போட்டியை in partibus infidelium* என்கிற நிலையிலுள்ள **மனித ஆன்மாவின்** தேவையாகச் செய்கிறார். அவர் மாமனிதர் கொல் பேரைப் பதினேழாவது நூற்றாண்டுக்கு என்ன செய்திருப்பார்?

புரட்சிக்குப்பின் இன்றைய நிலவர நிலை வருகின்றது. போட்டி எனும் வகையினம் இன்னும் போதிய அளவில் வளர்ச்சியுறாத எல்லாத் தொழில்களும்—விவசாயம்போல— தாழ்ந்த நிலையிலும் நலிந்த நிலையிலும் இருப்பதாக நிரூபித்துப் போட்டியின் நிரந்தரத் தன்மையைக் காட்டு வதற்கு அதிலிருந்தும் திரு. புரூதோன் விபரங்கள் எடுத்துக் கொள்கிறார்.

போட்டிக் கட்டத்தை இன்னும் எட்டாத தொழில்கள் உள்ளன என்றும் வேறு சில தொழில்கள் முதலாளித்துவ உற்பத்தியின் மட்டத்துக்கும் கீழாகவே உள்ளன என்றும் சொல்வது பிதற்றல், அது போட்டியின் நிரந்தரத் தன்மைக்குக் கடுகளவேனும் சான்றளிப்பதாயில்லை.

திரு. புரூதோனின் தர்க்கமெல்லாம் இதுதான்: போட்டி எனும் சமுதாய உறவில் நாம் இப்போது நமது உற்பத்திச் சக்திகளை வளர்த்து வருகிறோம். போட்டி என்பது தொழில் துறை முன்னேற்றம், அது சுதந்தரத்திற்கான இன்றைய இயக்க முறை, அது உழைப்பில் பொறுப்பு, மதிப்பின் உரு வமைப்பு, அது சமநிலையின் வருகைக்குரிய நிபந்தனை, சமு தாயப் பொருளாதாரத்தின் ஒரு கோட்பாடு, தலைவிதியின் ஆணை, மனித ஆன்மாவின் ஒரு அவசியத் தேவை, அது நிரந்தர நீதியின் ஆக்கவுணர்ச்சி, பிரிவினையில் சுதந்தரம், சுதந்தரத்தில் பிரிவினை, ஒரு பொருளாதார வகையினம்

* —அசல் சொல்லுக்குரிய பொருளில், கிறித்தவ நம்பிக் கையற்ற பிரதேசங்களில் என்று பொருள். இங்கே, யதார்த் தத்துக்கு அப்பாற்பட்ட நிலை என்று பொருள். இந்தச் சொற் றொடர் கிறித்தவ நம்பிக்கையற்ற நாடுகளில் பெயரளவில் நியமிக்கப்பட்ட கத்தோலிக்க பிஷப்புகளுக்குள்ள பட்டத் தோடு சேர்ந்ததாகும்.—[பதிப்பாசிரியர்.]

என்றெல்லாம் அவர் சொல்கிற பொழுது இந்த உண்மைக்குச் சூத்திரங்களை (அடிக்கடி மிக நன்ருக உருவாக்கிய சூத்திரங்களை) மட்டுமே தருகிருர், தர்க்கரீதியான வளர்ச்சியைத் தரவில்லை.

''போட்டியும் கூட்டும் ஒன்றையொன்று ஆதரித்து நிற்கின்றன. ஒன்றையொன்று விலக்கிக் கொள்வதற்கு மாருக அவை வேறு திசையில் செல்கிறவையாகக்கூட இல்லை. போட்டி என்று சொல்கிறவன் ஏற்கெனவே ஒரு பொதுவான நோக்கத்தை அனுமானித்துக் கொள்கிருன். ஆகவே, போட்டி தன்னகங்காரம் அல்ல, அதைச் சமுதாயத்தின் வீழ்ச்சியாகக் கருதியது சோஷலிஸம் செய்த மிகவும் வருந்தத்தக்க பிழையாகும்.''

போட்டி என்று சொல்கிறவன் பொது நோக்கத்தைச் சொல்கிறவனுவான். அது, ஒரு புறத்தில், போட்டி என்பது கூட்டு என்று நிரூபிக்கிறது; மறுபக்கத்தில், போட்டி என்பது தன்னகங்காரம் அல்ல என்று நிரூபிக்கிறது. நிற்க, தன்னகங்காரம் என்பதின் பொருள் பொது நோக்கம் என்று பொருள்படவில்லையா? சமுதாயத்துக்குள்ளே, சமுதாயத்தின் மூலமாகவே, ஒவ்வொரு தன்னகங்காரமும் வேலை செய்கிறது. எனவே அது சமுதாயத்தை முன்னனுமானிக்கிறது, அதாவது பொதுவான நோக்கங்கள், பொதுவான தேவைகள், பொதுவான உற்பத்திச் சக்திகள் முதலியவற்றை முன்னனுமானிக்கிறது. எனவே, சோஷலிஸ்டுகள் சொல்கிற போட்டியும் கூட்டும் வேறு திசையில் செல்கிறவையாகக்கூட இல்லாமலிருப்பது சும்மா தற்செயலாகவா?

தற்கால சமுதாயம் போட்டி மீது நிறுவப்பட்டிருப்பதை சோஷலிஸ்டுகள் நன்கறிவார்கள். சமுதாயத்தைத் தாங்களே வீழ்த்த வேண்டும் என்று விரும்பும் அவர்கள் எப்படிச் சமுதாயத்தை வீழ்த்துகிறதாகப் போட்டியைக் குற்றஞ்சாட்ட முடியும்? இனி வரப்போகும் சமுதாயத்தைப் போட்டி வீழ்த்தப் போவதாக எப்படி அவர்கள் குற்றஞ்சொல்ல முடியும்—மாருக, வரப்போகும் சமுதாயத்தில் போட்டியின் வீழ்ச்சியைக் காண்பவர்களாயிற்றே அவர்கள்?

போட்டி என்பது ஏகபோகத்தின் எதிர்நிலை என்றும், எனவே அது கூட்டுக்கு எதிர்நிலையாக இருக்க முடியாது என்றும் பின்னுல் கூறுகிருர் திரு. புரூதோன்.

நிலப்பிரபுத்துவ முறை தோன்றிய நாளிலிருந்தே தந்தைவழி ஆட்சி முடியாட்சிக்கு எதிர்நிலையாக இருந்தது; எனவே அன்று இன்னும் இருந்திராத போட்டிக்கு எதிர்நிலை யாக இருக்கவில்லை. இதிலிருந்து போட்டி நிலப்பிரபுத்துவ முறைக்கு எதிர்நிலையாக இல்லை என்று ஆகிவிடுமா?

உண்மையிலே பார்த்தால், **சமுதாயம், கூட்டு** என்பவை இடுகுறிப் பெயர்கள், ஒவ்வொரு சமுதாயத்துக்கும் இடப்படும் பெயர்கள்— நிலப்பிரபுத்துவச் சமுதாயத்துக் காயினும் சரி, முதலாளித்துவச் சமுதாயத்திற்காயினும் சரி, —அது போட்டி மீது நிறுவப்பட்ட கூட்டு ஆகும். ஆகவே, **கூட்டு** எனும் ஒரேயொரு சொல்லைக் கொண்டு போட்டியை மறுத்தொதுக்க முடியும் என்று நினைக்கக் கூடிய சோஷ லிஸ்டுகள் எப்படி இருக்கமுடியும்? மேலும், **கூட்டு** என்கிற ஒரே யொரு சொல்லைக் கொண்டு போட்டியை வர்ணித்து எப்படி திரு.புரூதோன் சோஷலிஸத்துக்கு எதிராகப் போட்டியைப் பாதுகாக்க விரும்ப முடியும்?

நாம் இப்போது சொல்லி வந்ததனைத்தும் திரு. புரூ தோன் காண்கிற போட்டியின் நல்ல அம்சமாகும். இனி போட்டியின் விகாரமான அம்சத்தை, மறிநிலை அம்சத்தை, அதன் குறைகளை, அதன் நாசகரமான கவிழ்க்கும் போக்கான அம்சங்களை, அதன் தீய பண்புகளைப் பார்ப்போம்.

அதைப் பற்றி திரு. புரூதோன் வரைகிற சித்திரத்தில் சோகமானதொன்று இருக்கிறது.

போட்டி வறுமையை விளைக்கிறது, உள்நாட்டுப் போரை ஊக்குவிக்கிறது, அது ''இயற்கையான நில மண்டலங்களை மாற்றிவிடுகிறது'', தேசிய இனங்களைக் கலந்துவிடுகிறது, குடும்பங்களில் சச்சரவுகளை உண்டாக்குகிறது, பொது மனச் சாட்சியைக் கெடுக்கிறது, ''சமநோக்கு, நீதி பற்றிய எண்ணப் போக்குகளைக் கவிழ்க்கிறது'', ஒழுக்கநெறி பற்றிய எண்ணப் போக்குகளைக் கவிழ்க்கிறது, அதைவிட மோசமா னது அது சுயேச்சையான நேர்மையான வாணிபத்தை ஒழிக் கிறது, பரிமாற்றமாகக் **கூட்டமைத்த மதிப்பையோ** நிர்ணயமான, நேர்மையான விலையையோ கொடுப்பதுகூடக் கிடையாது. பொருளாதாரவாதிகள் உட்பட எல்லோருடைய பிரமை களையும் ஒழிக்கிறது. தன்னையே அழித்துக் கொள்ளும் தொலைவுக்கு விவகாரங்களைத் தள்ளிக் கொண்டு போகிறது.

போட்டியைப் பற்றித் தீங்காகத் திரு. புரூதோன் இவ்வளவும் சொன்ன பிறகு, முதலாளித்துவச் சமுதாயத்தின் உறவுகளுக்கும் அதன் கோட்பாடுகளுக்கும் அதன் பிரமைகளுக்கும் அதைவிட அதிகமாகப் பிளவுபடுத்துகிற நாசகரமான அம்சம் வேறென்ன இருக்க முடியும்?

எந்த அளவுக்குப் போட்டியானது புதிய உற்பத்திச் சக்திகளை ஜன்னிக்காய்ச்சல் வேகத்தில் படைக்கத் தூண்டி வருகிறதோ, அதாவது ஒரு புதிய சமுதாயத்துக்குரிய பொருளாயத நிலைமைகளைப் படைக்கத் தூண்டி வருகிறதோ அந்த அளவுக்கு அது எப்போதும் முதலாளித்துவ உறவுகளுக்கு மேன்மேலும் நாசகாரமானதாக ஆகி வரும் என்பதைக் கவனமாகக் குறித்துக் கொள்ள வேண்டும். இவ்விஷயத்திலாயினும் போட்டியின் தீய அம்சத்திலும் சில நல்ல அம்சங்கள் இருக்கும்.

''ஒரு பொருளாதார நிலையாக அல்லது கட்டமாகப் போட்டியை அதன் ஆதிமூலத்தை வைத்துக் கவனித்தால், அது பொதுச் செலவுகளின் குறைப்பு பற்றிய தத்துவத்தின்... ஒரு அவசியகரமான பின்விளைவேயாகும்.''

திரு. புரூதோன் கருத்தில், ஹார்வி தத்துவத்தின் ஒரு பின்விளைவாகத்தான் இரத்த ஓட்டம் இருந்து தீர வேண்டும்.

''ஏகபோகம் போட்டியின் தவிர்க்கமுடியாத முடிவாகும், போட்டி தனக்குத் தான் நிலைமறுப்பாக இடையறாது செயல்படுவதிலிருந்து அதை உண்டுபண்ணுகிறது. ஏகபோகத்தின் இவ்விதமான பிறப்பே அதற்கு ஒரு நியாயமாகும்.... ஏகபோகம் போட்டியின் இயல்பான எதிர்நிலை.... எனினும் போட்டி அவசியமாகிறவுடனே அது ஏகபோகத்தைப் பற்றிய கருத்தை உட்கிடையாகக் கொள்கிறது, ஏனெனில் ஏகபோகமானது போட்டியிடும் ஒவ்வொரு தனித்துவத்துக்கும் இருக்கையாகும்.''

முதலுரை எதிருரை எனும் தமது சூத்திரத்தை ஒரு தடவையாவது முறையாகப் பொருத்திச் செயல்படுத்த முடிந்தது குறித்து திரு. புரூதோனுடன் நாம் சேர்ந்து மகிழ்கிறோம். நவீனகால ஏகபோகத்தைப் போட்டியே படைப்பதை எல்லோரும் அறிவார்கள்.

உள்ளடக்கத்தைப் பொருத்தமட்டில், திரு. புரூதோன்

கவிதைக்குரிய உருவகங்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறார். போட்டியானது ''உழைப்பின் ஒவ்வொரு உட்பிரிவையும் ஒரு விதமான உரிமை நிலை பெற்றதாக ஆக்கியது, அதில் ஒவ்வொரு தனிநபரும் தனது ஆற்றலோடும் சுதந்தரத் தோடும் விளங்கி நின்றான்.'' ஏகபோகமானது ''போட்டி யிடும் ஒவ்வொரு தனித்துவத்துக்கும் இருக்கையாகும்''. குறைந்தபட்சம் ''இருக்கையின்'' தகுதிக்குச் சமமாக வாவது ''சுய உரிமையின்'' தகுதி உண்டு.

திரு. புரூதோன் போட்டி உண்டு பண்ணிய நவீனகால ஏகபோகத்தைத் தவிர வேறெதைப் பற்றியும் பேசவில்லை. ஆனால் போட்டியை நிலப்பிரபுத்துவ ஏகபோகம் உண்டு பண் ணியதை நாமனைவரும் அறிவோம். எனவே, ஆதியில் போட்டி தான் ஏகபோகத்தின் எதிர்நிலையாக இருந்ததே தவிர ஏகபோகம் போட்டியின் எதிர்நிலையாக இருந்ததில்லை. எனவே ஏகபோகம் ஒரு எளிய எதிருரை அல்ல, அதற்கு மாறாக அதுவே உண்மையான கூட்டுரை ஆகும்.

முதலுரை: நிலப்பிரபுத்துவ ஏகபோகம், போட்டிக்கு முந்தியது.

எதிருரை: போட்டி.

கூட்டுரை: நவீனகால ஏகபோகம்; போட்டியின் அமைப்பு முறையை உட்கிடையாகக் கொண்டிருக்கும் அளவுக்கு நிலப்பிரபுத்துவ ஏகபோகத்தின் நிலைமறுப்பாகவும், தானே ஏகபோகமாக இருக்கிற அளவுக்குப் போட்டியின் நிலைமறுப் பாகவும் உள்ளது.

எனவே நவீனகால ஏகபோகம், அதாவது முதலாளித்துவ ஏகபோகம் கூட்டமைத்த ஏகபோகமாகும், நிலைமறுப்பின் நிலைமறுப்பாகும், எதிர்நிலைகளின் ஒற்றுமையாகும். அது சுத்தமான, சகஜமான, பகுத்தறிவுபூர்வமான நிலையிலுள்ள ஏகபோகமாகும்.

முதலாளித்துவ ஏகபோகத்தைப் பண்படாத, **எளிய,** முரண்பாடான, விட்டுவிட்டுத் தோன்றுகிற நிலையிலுள்ள ஏகபோகமாகத் திரு. புரூதோன் மாற்றுகிற பொழுது தமது சொந்த மெய்யறிவுடனேயே அவர் முரண்படுகிறார். திரு. புரூதோன் ஏகபோகம் விஷயமாகப் பல தடவை மேற்கோள் காட்டுகிற திரு. ரோஸி முதலாளித்துவ ஏகபோகத்தின் கூட்டமைவான தன்மையை திரு. புரூதோனைவிட மேலாகப்

புரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அவர் தமது **அரசியல் பொருளாதாரத்துக்குரிய பயிற்சி**[51] எனும் நூலில் செயற்கையான ஏகபோகங்களையும் இயற்கையான ஏகபோகங்களையும் வேறுபடுத்திக் காண்கிறார். நிலப்பிரபுத்துவ ஏகபோகங்கள் செயற்கையானவை, அதாவது தான்தோன்றித்தனமானவை என்றும் முதலாளித்துவ ஏகபோகங்கள் இயற்கையானவை, அதாவது பகுத்தறிவு பூர்வமானவை என்றும் அவர் சொல்கிறார்.

ஏகபோகம் நல்லது—காரணம், அது ஒரு பொருளாதார வகையினம், ''மனிதகுலத்தின் நபர் சார்பற்ற பகுத்தறிவின்'' வெளிப்பாடு அது என்று வாதிக்கிறார் திரு.புரூதோன். போட்டியும் நல்லதுதான்—காரணம், அதுவும் ஒரு பொருளாதார வகையினமேயாகும். ஆனால் ஏகபோகத்தின் யதார்த்தமும் போட்டியின் யதார்த்தமும் நன்றாக இல்லை. அதைவிட மோசமானது போட்டியும் ஏகபோகமும் ஒன்றையொன்று விழுங்குவதுதான். என்ன செய்வது? இவ்விரண்டு நிரந்தர எண்ணங்களின் கூட்டுரையைத் தேடிப்பார், அனாதிகாலமாக அது வைக்கப்பட்டிருக்கும் தெய்வத்தின் நெஞ்சத்திலிருந்து அதை வலிந்து எடுத்துக் கொள்.

நடைமுறை வாழ்க்கையிலே நாம் போட்டியையும் ஏகபோகத்தையும் அவற்றிடையேயுள்ள பகைமையையும் பார்க்கிறதோடல்லாமல் அவ்விரண்டின் கூட்டமைவையும் பார்க்கிறோம்—அது ஒரு இயக்கம், சூத்திரமல்ல. ஏகபோகம் போட்டியை உண்டுபண்ணுகிறது, போட்டி ஏகபோகத்தை உண்டுபண்ணுகிறது. ஏகபோகக்காரர்கள் தமக்குள்ளே போட்டி போடுகின்றனர்; போட்டியாளர்கள் ஏகபோகக்காரர்களாகின்றனர். ஏகபோகக்காரர்கள் அரைகுறையான கூட்டு மூலமாகத் தமது பரஸ்பரப் போட்டியைக் கட்டுப்படுத்தினால் தொழிலாளிகளிடையே போட்டி அதிகரிக்கிறது; ஒரு நாட்டின் ஏகபோகக்காரர்களுக்கு எதிராகத் தொழிலாளர் திரள் வளரவளர, வெவ்வேறு நாடுகளின் ஏகபோகக்காரர்களிடையேயுள்ள போட்டி மேலும் கடுமையாகிறது. போட்டிக்குரிய போராட்டத்தில் இடையறாது ஈடுபடுவதின் வழியேதான் ஏகபோகம் தன்னை நிலைநாட்டிக் கொள்ள முடியும் என்கிற வகையில் இந்தக் கூட்டமைவின் தன்மை இருக்கிறது.

ஏகபோகத்தைப் பின்னிட்டு வருகிற வரிகளுக்கு இயக்க வியல் வகைப்பட்ட மாற்றத்தைச் செய்வதற்காகத் திரு. புரூதோன் சமுதாய மேதையைப் பற்றிப் பேசுகிறுர், அது கோணல்மாணலாக நெஞ்சத் துணிவுடன் முன்னேறிச் சென்ற பிறகு, ''நிகழ்ந்ததைப் பற்றி வருந்தாமலும் எங்கும் தங் காமலும் மிடுக்குடன் நடந்த பிறகு, ஏகபோகம் எனும் திரும்பு முனையை அடைந்து, துயரார்ந்த பார்வையைப் பின்னுேக்கிச் செலுத்துகிறது, மற்றும் ஆழ்ந்த யோசனைக்குப்பின் எல்லா உற்பத்திப் பொருட்களின் மீதும் வரிகளைப் போடுகிறது, ஒரு முழுவடிவான நிர்வாக அமைப்பையும் நிறுவுகிறது—ஏகபோகக்காரர்கள் ஊதியங்கொடுக்கிற நிலையிலே எல்லாத் தொழிலாளிகளுக்கும் வேலை கொடுக்கும் நோக்குடன்.''

காலையுணவு கொள்ளாமல் பசியோடு நடக்கையிலே கோணல்மாணலாகப் போகிற இந்தச் சமுதாய மேதையைப் பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? வரிகளைப் போட்டு முதலாளித்துவ வர்க்கத்தை ஒழிக்கிற நோக்கத்தைத் தவிர வேறெந்த நோக்கமும் இல்லாத இந்த நடையைப் பற்றியும் நாம் என்ன சொல்ல முடியும்—முதலாளி வர்க்கம் தன்னை ஆளும் வர்க்கமாக நீடித்துக் காத்துக் கொள்வதற்கான சாதனத்தை முதலாளி வர்க்கத்துக்குக் கொடுக்கிற வழி வகைகள் அல்லவா இந்த வரிகள் எனப்பட்டவை?

திரு. புரூதோன் பொருளாதார விபரங்களை நடத்தும் முறையைச் சற்றே எடுத்துக் காட்டும் பொருட்டு இதைச் சொன்னுல்போதும்: அவர் கருத்துப்படி, நுகர்வு மீது போடும் வரி சமநிலையைக் கருத்தில் கொண்டும் தொழிலாளி வர்க்கத்துக்கு நிவாரணம் அளிக்கவும் நிலைநாட்டப்பட்டதாகும்.

முதலாளி வர்க்கத்தின் எழுச்சிக்குப் பின்னர்தான் நுகர்வு மீது விதிக்கும் வரி தனது உண்மையான வளர்ச்சியைப் பெற்றது. தொழில்துறை மூலதனத்தின்—அதாவது, உழைப்பை நேரடியாகச் சுரண்டுவதின் வழியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டும் மறு உற்பத்தி செய்து கொண்டும் அதிகப்படுத்திக் கொண்டும் இருக்கும் நிதானப் புத்தியுள்ள, சிக்கனப் பாங்குள்ள, பொருளாதாரச் செல்வத்தின்—கையிலே இந்த நுகர்வு மீதான வரியானது நுகர்வதன்றி வேறெதுவும் செய்யாத சீமான்களின் இன்பக் கேளிக்கைகளுக்காக ஊதாரித் தனமாகச் செலவிடும் செல்வத்தைப் பயன்படுத்திக் கொள்

வதற்கு வாய்த்த ஒரு வழிவகையேயாகும். இந்த நுகர்வு மீதான வரியின் ஆதி நோக்கத்தை ஜேம்ஸ் ஸ்டுயர்ட் தமது **அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வுகள்** எனும் நூலில் தெளிவாக வளர்த்துள்ளார், இந்நூலை ஆதாம் ஸ்மித்துக்குப் பத்தாண்டுகளுக்கு முன்பே அவர் வெளியிட்டார்.

''சுத்தமான முடியாட்சி முறையின்கீழ், வளர்ந்து கொண்டேயிருக்கும் செல்வத்தைக் கண்டு அரசன் பொறாமைப்படுவது போல் தெரிகிறது எனலாம், எனவே மேன்மேலும் செல்வத்தைப் பெருக்கி வருகிறவர்கள் மீது அவர் வரிகள் போடுகிறார். அதிகார வரம்புக்குறுக்கமுள்ள அரசாங்கத்தின்கீழ் பணக்கார நிலையிலிருந்து ஏழைகளாகி வருகிறவர்களைப் பாதிக்கும் நோக்குடன் அவை போடப்படுகின்றன. எனவேதான், அவனவன் தனது வேலை மூலமாகச் சம்பாதிக்கிறதாக **அனுமானிக்கப்படும்** ஆதாயத்துக்குத் தகவாக ஒவ்வொருவனும் ஒரு படியில் வைக்கப்பட்டுள்ள தொழில்துறை மீது அரசன் வரி போடுகிறான். தலைவரியும், சீமான் பிரிவைச் சேராதவர்களின் சொத்து மீது விதிக்கப்பட்ட வரியும் அவ்வரிகளுக்கு இலக்காகிறவர்களின் அனுமானிக்கப்பட்ட செல்வச் செழிப்புக்குத் தகவாக அமைக்கப்பட்டுள்ளன.... அதிகார வரம்புக்குறுக்கமுள்ள அரசாங்கங்களின்கீழ், பொதுவாகவே வரிகள் நுகர்வு மீது விதிக்கப்படுகின்றன.[52]''

திரு. புரூதோன் புரிந்து கொண்டுள்ளபடி, வரிகளின், வாணிபத் துறைக் கணக்குச் சமனம், கடன் மதிப்பின் தர்க்கரீதியான தொடர்வரிசை பொருத்தமட்டில் நாம் ஒரு குறிப்பு மட்டும் அளிப்போம்: ஆரஞ்சு நாட்டு வில்லியம் எனும் அரசனின்கீழ் ஆங்கிலேய முதலாளி வர்க்கம் தனது அரசியல் அமைப்பு முறையை நிலைநாட்டியபின் தனது வாழ்க்கை நிலைமைகளைச் சுதந்தரமாக வளர்த்துக் கொள்ளக் கூடிய நிலை வாய்த்தவுடன் சடேரென்று வரிகளுக்கும் பொதுக் கடன் மதிப்புகளுக்கும் உரிய ஒரு புதிய அமைப்பு முறையையும் சுங்கக்காப்பு வரிகளுக்குரிய ஒரு புதிய அமைப்பு முறையையும் படைத்துவிட்டது.

போலீஸ் அல்லது வரிகள், வாணிபத் துறைக் கணக்குச் சமனம், கடன் மதிப்பு, கம்யூனிஸம், மக்கட்தொகை ஆகியவற்றைப் பற்றிய திரு. புரூதோனின் ஆழ்ந்த கருத்துக்கள்

குறித்து வாசகனுக்கு ஒரு உண்மையான கருத்தை அளிக்க இந்தச் சுருக்கமான தொகுப்புரை போதுமானது. மிகவும் பரிந்து பேசக்கூடிய விமர்சகன்கூட இந்த அத்தியாயங்களை பொருட்படுத்திக் கவனிக்க முடியுமா என்று அறைகூவுகிறோம்.

§ 4. நிலச் சொத்து அல்லது நில வாடகை

ஒவ்வொரு வரலாற்றுச் சகாப்தத்திலும், சொத்து வெவ்வேறு விதமாகவும் முற்றிலும் வேறுபட்ட சமுதாய உறவுகளின் கீழும் வளர்ந்துள்ளது. எனவே, முதலாளித்துவச் சொத்தை வரையறுக்கிறதென்பது முதலாளித்துவ உற்பத்தியின் சமுதாய உறவுகள் அனைத்தையும் குறித்து விளக்கம் அளிப்பது தவிர வேறொன்றுமில்லை.

ஒரு சுயேச்சையான உறவு போல, ஒரு தனித்த வகையினம் போல, சூட்சுமமான, நிரந்தரமான கருத்து போல பாவித்து சொத்துக்கு வரையறுப்பு அளிக்க முயல்வது இயக்க மறுப்புவாத வகைப்பட்ட அல்லது சட்ட இயல் வகைப்பட்ட பிரமையாக மட்டுமே இருக்க முடியும்.

திரு. புரூதோன் சொத்து குறித்துப் பொதுப்படையாகப் பேசுவதாகத் தோன்றினாலுங்கூட, **நிலச் சொத்தையும் நில வாடகையையும்** மட்டும் எடுத்துக் கவனிக்கிறார்.

''சொத்து என்கிற வகையில் பார்க்கிற போது வாடகையின் தோற்றுவாய் பொருளாதாரத்துக்கு வெளியேயிருப்பது என்று சொல்லலாம்; அது மனப்பாங்கு, ஒழுக்கநெறி பாற்பட்ட நோக்கங்களிலே ஆதாரப்பட்டிருக்கிறது, அவற்றிற்கும் செல்வ உற்பத்திக்கும் உள்ள உறவு வெகு தொலைவானது.'' *(தொகுதி 2, பக்கம் 269.)*

எனவே வாடகையின், சொத்தின் பொருளாதாரத் தோற்றுவாயைத் தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று திரு. புரூதோன் தெரிவித்துக் கொள்கிறார். இந்தத் திறமின்மை காரணமாகத் தாம் மனப்பாங்கு, ஒழுக்கநெறி பாற்பட்ட நோக்கங்களை நம்பி நிற்க வேண்டியிருப்பதை அவரே ஒப்புக் கொள்கிறார், உண்மையிலே இந்த நோக்கங்கள் செல்வ உற்பத்தியோடு கொண்டுள்ள உறவு வெகு தொலைவானதாயிருக்கையில் அவரது வரலாறு பற்றிய கருத்துக்

களின் குறுகிய தன்மையோடு மிக நெருங்கிய உறவு கொண்டுள்ளன. சொத்தின் தோற்றுவாய் விஷயத்தில் ஏதோ மாயாவாதமான, மர்மமான ஒன்று இருக்கிறதாகத் திரு. புரூதோன் அடித்துச் சொல்கிருர். நிற்க, சொத்தின் தோற்றுவாயில் மர்மத்தைக் காண்பது—அதாவது, அசல் உற்பத்திக்கும் உற்பத்திக் கருவிகளின் வினியோகத்துக்கும் இடையேயுள்ள உறவை ஒரு மர்மப் பொருள் ஆக்குவது—திரு. புரூதோனின் சொற்களில் சொல்வதென்ருல், இது பொருளாதார விஞ்ஞானத்துக்குப் பாத்தியதைக் கொண்டாடுவதனைத்தையும் கைவிடுவதாகும் அல்லவா?

திரு. புரூதோன் ''பொருளாதாரப் பரிணமத்தின் கடன் மதிப்பு என்கிற ஏழாவது சகாப்தத்தில், யதார்த்தத்தைக் கட்டுக்கதை மறையச் செய்த காலத்தில், மனித நடவடிக்கை வெற்று வெளியிலே தன்னைப் பறிகொடுத்துவிடும் அபாயத்திலிருந்த காலத்தில், இயற்கையோடு மேலும் நெருக்கமாக மனிதனைப் பிணைத்துவிடுவது அவசியமாகி விட்டதை நினைவுபடுத்துவதோடு நிறுத்திக் கொள்கிருர். இப்போது, இந்தப் புதிய ஒப்பந்தத்துக்கான விலையே வாடகை என்பது.'' (தொகுதி 2, பக்கம் 265.)

நாற்பது எக்கூ வருமானமுள்ள மனிதன் எதிர்காலத்தில் உதிக்கக் கூடிய ஒரு திரு. புரூதோனை முன்கூட்டியறிந்து தான் இவ்வாறு கூறினுன்: ''ஆண்டவனே, ஒன்று சொல்ல விடுங்கள்: அவனவனுடைய உலகத்தில் அவனவன் எஜமானன்; என்ருலும் நாங்கள் வசிக்கும் இந்த உலகம் கண்ணுடியால் செய்தது என்று நீங்கள் என்னை நம்பச் செய்ய முடியாது'' என்று.[53] தன்னை வெற்று வெளியில் பறிகொடுத்துவிடுவதற்குக் கடன் மதிப்பு ஒரு சாதனமாயிருக்கிற உங்களுடைய உலகத்தில் இயற்கையோடு மனிதனைப் பிணைப்பதற்குச் சொத்து அவசியமாயிருந்திருப்பது மிகவும் சாத்தியம். யதார்த்த உற்பத்தி நடக்கிற உலகத்தில், எப்போதும் கடன் மதிப்புக்கு முன்னே நிலச்சொத்து நிலவும் உலகத்தில், திரு. புரூதோனின் horror vacui* இருந்திருக்க முடியாது.

வாடகை இருப்பதை ஒப்புக் கொண்டதும்—அதன் தோற்றுவாய் என்னவாக இருந்தாலும் சரி—அது நிலச்சொந்தக்

---

* —வெற்று மண்டலப் பயங்கரம்.—[பதிப்பாசிரியர்.]

காரனுக்கும் விவசாயிக்கும் இடையே பரஸ்பரப் பகைமை யுள்ள பேரப் பேச்சுக்குரிய விஷயமாகிவிடுகிறது. இந்தப் பேச்சுக்களின் இறுதி விளைவு என்ன? அதாவது, சராசரி வாடகைத் தொகை என்ன? திரு. புரூதோன் சொல்வது இதுதான்:

''ரிக்கார்டோவின் தத்துவம் இதற்கு விடையளிக்கிறது. சமுதாயத்தின் ஆதிகாலத்தில், பூமிக்குப் புதிதான மனிதன் முன்னே பெருங் காடுகள் தவிர வேறொன்றும் இல்லாத காலத்தில், நிலப்பரப்பு விரிந்துபரந்து கிடந்த காலத்தில், தொழில்துறை முளைவிடத் தொடங்கிய காலத்தில், வாடகை என்பது பூஜ்ஜியமாக இருந்திருக்க வேண்டும். இன்னமும் உழைப் பால் பண்படுத்தப்படாதிருந்த நிலம் பயன்பாட்டுக்குரிய பொருளாகவே இருந்தது; அது ஒரு பரிமாற்ற மதிப்பாக இருக்கவில்லை; அது பொதுவானதாக இருந்தது, சமுதாயத்துக் குரியதாகவில்லை. சிறிது சிறிதாக, குடும்பங்கள் எண்ணிக் கையில் பெருக்கத்தாலும் விவசாயத்தின் முன்னேற்றத்தா லும் நிலம் விலை மதிப்புள்ளதாயிற்று. உழைப்பு நிலத்துக்கு மதிப்பு உண்டாக்கிக் கொடுத்தது: இதிலிருந்து வாடகை பிறந்தது. அதே அளவுள்ள உழைப்பிலே ஒரு விளைநிலம் எவ் வளவுக்கெவ்வளவு அதிகமாகப் பலங்கள் கொடுக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த நிலத்தின் மதிப்பு உயர்ந்தது; எனவேதான், விவசாயிகளின் கூலி போக — அதாவது, உற்பத்திச் செலவு நீங்கலாக—பாக்கி நிலத்தின் பயன் முழு வதையும் நிலச்சொந்தக்காரர்கள் வசப்படுத்திக் கொள்ளும் போக்கு எப்போதும் இருந்தது. ஆகவே, உழைப்பைப் பின் தொடர்ந்து சொத்து வந்து அசல் செலவுகள் போக மிச்ச விளைபொருள் முழுவதையும் எடுத்துக் கொண்டது. நிலச் சொந்தக்காரன் ஒரு மாயமான பொறுப்பை நிறைவேற்று வதாலும், உழவனைப் பொருத்தமட்டில் அவன் சமுதாயம் முழுவதின் பிரதிநிதியாக இருப்பதாலும், தெய்வச் சித்தப் படி விவசாயி ஒரு பொறுப்புள்ள கூலிக்காரன் தவிர வேறில்லை, அவன் தன் நியாயமான கூலிக்கு மேலாக அறுவடை செய்வதனைத்துக்கும் சமுதாயத்திடம் கணக்குக் காட்ட வேண்டும் ....ஆகவே, சாராம்சத்திலும் சரி சேரிடத்தின் படியும் சரி, வாடகை என்பது நீதியை வினியோகித்து வரும் ஒரு கருவி, சமநிலை எய்துவதற்காகப் பொருளாதார மேதை

பயன்படுத்தும் ஆயிரம் வழிவகைகளில் அது ஒன்று. அது ஒரு மாபெரும் நிலப் பதிவேடு, முரண்பட்ட நிலையிலே நிலச் சொந்தக்காரர்களும் விவசாயிகளும் இருந்து, சாத்தியமான கூட்டு ஏதுமின்றி, ஒரு மேலான நலனை உத்தேசித்து அதைத் தயாரித்து முடிக்கிறார்கள், நிலத்தைப் பயன்படுத்துகிறவர் களுக்கும் தொழில் முதலாளிகளுக்கும் இடையே நிலவுடை மையைச் சரிசமமாக்கி வைப்பதையே இறுதி விளைவாகக் கொண்டிருக்க வேண்டிய முறையில், தயாரித்து முடிக்கிறார் கள்.... உழவனிடமிருந்து, தனக்கே உரியதென்று கருதாம லிருக்க முடியாததான, தானே அதைப் படைத்தவன் என்று கருதப்படும்படியான அவனது மிச்ச விளைபொருளைப் பறித்துக் கொள்வதற்கு இந்தச் சொத்து எனும் மாயாஜாலம் தேவைப்பட்டது. வாடகை, அல்லது சொத்து, விவசாயத் தன்னகங்காரத்தை உடைத்தெறிந்து எந்தச் சக்தியாலும் எந்த நிலப் பிரிவினையாலும் படைக்கப்பட முடியாத ஒரு ஒட்டுறவை அது படைத்தது.... சொத்தின் ஒழுக்கநெறி விளைவு பத்திரப்படுத்தப்பட்டுவிட்டபின், இப்போது பாக்கி யிருக்கும் வேலை வாடகையை வினியோகிப்பது ஒன்றுதான்.''

இந்தச் சொற்சிலம்பம் அனைத்தும் முதலில் இவ்வாறு சுருக்கப்படலாம்: ரிக்கார்டோ சொல்கிறபடி சாதாரண இலாபமும் முதலீட்டுக்குரிய வட்டியும் உள்ளிட்ட உற்பத்திச் செலவுக்கு மேலாக விவசாய விளைபொருட்களின் விலை யிலிருந்து கிடைக்கிற மிகைத் தொகையானது வாடகையின் அளவைக் கொடுக்கிறது. திரு. புரூதோன் இதற்கும் மேலே போகிறார். அவர், deus ex machina* என்கிற முறையில் நிலச்சொந்தக்காரனைத் தோன்றிக் குறிக்கிடச் செய்து உழவனிடமிருந்து உற்பத்திச் செலவுக்கு மேலாக இருக்கிற அவனது உற்பத்தியின் மீதமனைத்தையும் பறித்துக் கொள்ளச் செய்கிறார். அவர் சொத்தை விளக்குவதற்கு நிலச்சொந்தக் காரனின் குறுக்கீட்டைப் பயன்படுத்துகிறார், வாடகையை விளக்குவதற்கு வாடகை வாங்கிக் கொள்கிறவனின்

---

* —இயந்திரத்தைக் கொண்டு தெய்வம். பழங்கால நாடகசாலையில் தெய்வமாக நடித்தவர்கள் இயந்திரச் சாத னங்களின் உதவியுடன் அரங்கில் வந்து கஷ்டத்துக்குத் தீர்வு காண்பவர்கள்.—[பதிப்பாசிரியர்.]

குறுக்கீட்டைப் பயன்படுத்துகிறுர். அவர் பிரச்சினேயை விளக்குவதற்கு அதே பிரச்சினேயைப் போட்டு சொல்விகுதியொன்றும் கூட்டிச் சொல்கிறுர்.

மண் வளத்திலுள்ள வேற்றுமையைக் கொண்டு வாடகையை நிர்ணயிப்பதிலே அவர் அதற்கு ஒரு புதிய தோற்றுவாயைக் கற்பிக்கிறுர், ஏனெனில், அவர் கருத்துப்படி, மண் வளத்தின் வெவ்வேறுன அளவுகளுக்கேற்ப மதிப்பீடு செய்யப்படுமுன் நிலம் எனப்பட்டது ''ஒரு பரிமாற்ற மதிப்பாக இருக்கவில்லே, அது பொதுவிலே இருந்தது'' என்று அவர் கூறுவதையும் நாம் குறித்துக் கொள்ள வேண்டும். ஆதியந்தமில்லா வெற்று வெளியிலே தன்னேப் பறிகொடுத்துவிடக் கூடிய நிலேயிலிருந்த மனிதனே நிலத்துக்குத் திரும்பி வரச் செய்ய வேண்டிய அவசியத்தின் வழியாக வாடகை உதித்தது என்ற கட்டுக்கதை இப்போது என்னவாயிற்று?

நிற்க, ரிக்கார்டோவின் தத்துவத்தை அதைச் சுற்றி தெய்வாதீனமான, மறைபொருளான, மாயமான சொற்றொடர்களேக் கொண்டு திரு. புரூதோன் கவனமாக மூடி மறைத்துவிட்டதிலிருந்து விடுவித்துக் கொள்வோம்.

ரிக்கார்டோவின் அர்த்தத்தில், வாடகை என்பது முதலாளித்துவ நிலேயிலிருக்கிற நிலச் சொத்து ஆகும்; அதாவது, முதலாளித்துவ உற்பத்தி நிலேமைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் நிலப்பிரபுத்துவச் சொத்து ஆகும்.

ரிக்கார்டோவின் தத்துவப்படி, எல்லாப் பொருட்களின் விலேயும் உற்பத்திச் செலவைக் கொண்டு (முதலாளியின் இலாபம் உள்ளிட்டபடி) இறுதியிலே நிர்ணயிக்கப்படுகிறது; அதாவது, செலவிட்ட உழைப்பு நேரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. மிகமிக மலிவானதும் மிகமிக உற்பத்தித் திறமும் உள்ள உற்பத்திக் கருவிகளே முடிவேயில்லாமல் பெருக்க முடியும் என்பதையும் சுயேச்சையான போட்டி அவசியகரமான முறையிலே ஒரு சந்தை விலேயை—அதாவது, ஒரே வகையான எல்லா விளேபொருட்களுக்கும் ஒரு பொதுவான விலேயை—உண்டாக்குகிறது என்பதையும் பார்க்கிற பொழுது, உற்பத்தித் தொழில் துறையில் குறைந்தபட்ச உழைப்பைக் கொண்டு கிடைக்கிற விளேபொருளின் விலே அதே வகையான மற்றெல்லாப் பண்டங்களின் விலேயையும் ஒழுங்குமுறைப்படுத்துகிறது.

இதற்கு மாருக, விவசாயத் தொழிலில் அதிகப்பட்சமான உழைப்பைக் கொண்டு கிடைக்கிற விளைபொருளின் விலைதான் அதே வகையான மற்றெல்லா விளைபொருட்களின் விலையையும் ஒழுங்குமுறைப்படுத்துகிறது. முதலில், உற்பத்தித் தொழில் துறையில் நடக்கிற மாதிரி ஒரே அளவுள்ள உற்பத்தித் திறன் உள்ள உற்பத்திக் கருவிகளை—அதாவது, அதே அளவான வளமுள்ள நிலப் பகுதிகளை—சித்தம் போல் ஒருவன் பெருக்கி வர முடியாது. பிறகு, மக்கட்தொகை உயர உயர, கீழ்த்தரமான நிலத்தைப் பயன்படுத்துவது தொடங்குகிறது அல்லது தன் முறையில் பழைய முதலீடுகளைவிடக் குறைவான உற்பத்தித் திறனுள்ள புதிய முதலீடுகள் பழைய நிலப் பகுதிகளில் ஈடுபடுத்தப்படுகின்றன. இவ்விரு வழக்குகளிலும் முன்னைவிடக் குறைவான விளைபொருளைப் பெறுவதற்கு முன்னைவிட அதிகமான உழைப்பு செலவிடப்படுகிறது. மக்கட்தொகையின் தேவைகளின் காரணமாக இந்த உழைப்பின் அதிகரிப்பு அவசியமாகி, மலிவான செலவில் விவசாயம் நடக்கிற நிலப்பகுதியின் விளைபொருளைப்போலவே அதிகச் செலவில் விவசாயம் நடக்கிற நிலப் பகுதியின் விளைபொருளுக்கும் உறுதியான விற்பனை உண்டு. போட்டி சந்தை விலையைச் சமப்படுத்திவருகிறபோது, மேலான நிலத்தின் விளைபொருளும் கீழ்த்தரமான நிலத்தின் விளைபொருளைப் போல் அதே அதிக விலைக்கு விற்கப்படும். மேலான நிலத்தின் விளைபொருட்களுக்குரிய உற்பத்திச் செலவுக்கு மேல் கிடைக்கிற விலை மிகையே வாடகை ஆகும். ஒரே அளவான வளமுள்ள நிலப் பகுதிகள் எப்போதும் இருக்க முடிந்தால்; உற்பத்தித் தொழில் துறையில் நடப்பது போல் இடைவிடாமல் மேன்மேலும் மலிவான, அதிக உற்பத்தித் திறனுள்ள இயந்திரங்களைப் பயன்படுத்தி வர முடிந்தால்; அல்லது, முதல் முதலீடு போலவே அதற்குப் பின் போடப்படுகிற முதலீடுகளும் அதே அளவுக்கு பலன் தருமேயானுல், அப்போது, உற்பத்தித் தொழிற் பொருட்களின் விலை விஷயத்தில் நாம் பார்த்த மாதிரி விவசாய விளைபொருட்களின் விலையானது மிகச் சிறந்த உற்பத்திக் கருவிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் விலையைக் கொண்டு நிர்ணயிக்கப்படும். ஆனுல், அந்த வினுடி முதல் வாடகையும் மறைந்து போயிருக்கும்.

ரிக்கார்டோவின் தத்துவம் பொதுவாக உண்மையாயிருப்பதற்கு,* தொழில் துறையின் வெவ்வேறு கிளைகளுக்கு மூலதனத்தைத் தடையின்றிச் செயல்படுத்த முடிகிறதாயிருப்பது அவசியம்; மற்றும், முதலாளிகளிடையே வலுவுடன் வளர்ந்துவிட்ட போட்டி இலாபங்களை ஒரு சமமட்டத்துக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்; மற்றும், விவசாயியும் ஒரு தொழில் முதலாளி போலவே இருக்கவேண்டும்; அந்த விவசாயி தனது மூலதனத்தை எந்த வகைப்பட்ட உற்பத்தித் தொழிலில் ஈடுபடுத்தினாலும் என்ன இலாபம் பெறுவானோ அதற்குச் சமமான இலாபத்தைத்தான் கீழ்த்தரமான நிலத்தில்** தனது மூலதனத்தைப் பயன்படுத்தியதற்கும் கோருவதாயிருக்க வேண்டும்; மற்றும், விவசாய நிலப் பயன்பாடும் பெருமளவான தொழில் துறைக்குரிய வழிமுறைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்; கடைசியாக, நிலச்சொந்தக்காரனும் பண வடிவத்தில்தான் தனது வருமானத்தைப் பெறவேண்டும்.

நிலத்தைக் குத்தகைக்கு விடுவது தீவிரமாக வளர்ந்திருந்த போதிலும் அயர்லாந்தில் இன்னமும் வாடகை இல்லாதிருக்கிறது; அதே போல் நிகழக் கூடும். வாடகை என்பது கூலிக்கு மேல் கிடைக்கிற மிகை மட்டுமல்ல, முதலாளியின் இலாபத்துக்கு மேல் கிடைக்கிற மிகையும் ஆகும், ஆதலால் நிலச்சொந்தக்காரனின் வருமானம் கூலி மீது விதிக்கும் கட்டணம் தவிர வேறில்லாததாயிருக்கிற நிலையில் இருக்க முடியாது.

ஆகவே, நிலத்தைப் பயன்படுத்துகிறவனை, விவசாயியை, ஒரு சாதாரண உழைப்பாளியாக மாற்றிவிட்டுச் சாகுபடி செய்பவனிடமிருந்து ''தனக்கே உரியதென்று கருதாமலிருக்க முடியாததான அவனது மிகை விளைபொருளைப் பறித்துக் கொள்வதற்குப்'' பதிலாக வாடகையானது நிலச்சொந்தக்

---

* —ந. டானியல்சனுக்கு மார்க்ஸ் அன்பளிப்பு செய்த பிரதியில் இந்த வாக்கியத்தின் துவக்கம் பின்வருமாறு மாற்றப்பட்டது: ''ஆதாரக்கூற்றுகள் ஒப்புக் கொள்ளப்பட்ட நிலையிலே, ரிக்கார்டோவின் தத்துவம் பொதுப்படையாக உண்மையாயிருக்க வேண்டுமென்றால் மேலும் முக்கியமானது என்னவென்றால்....''—[பதிப்பாசிரியர்.]

** —ந. டானியல்சனுக்கு அன்பளிப்பு செய்த பிரதியில் ''கீழ்த்தரமான நிலத்தில்'' எனும் சொற்கள் ''நிலத்தில்'' என்று மாற்றப்பட்டுள்ளன. —[பதிப்பாசிரியர்.]

காரனுக்கு எதிரே அடிமையையோ பண்ணையடிமையையோ கப்பங்கட்டுகிறவனையோ கூலித் தொழிலாளியையோ நிறுத்தாமல் முதலாளியை நிறுத்துகிறது. நிலச் சொத்து நில வாடகையாக உருவமைக்கப் பெற்றவுடன் அதன் வசமிருப்பது உற்பத்திச் செலவுகளுக்கு மேல் இருக்கிற மிகுதியேயாகும், இந்த உற்பத்திச் செலவுகளைக் கூலி மட்டுமின்றி தொழில்துறை முதலாளியின் இலாபமும் நிர்ணயிக்கிறது. எனவே, நிலவாடகை நிலச்சொந்தக்காரனிடமிருந்துதான் அவனது வருமானத்தில் ஒரு பகுதியைப் பறித்திருக்கிறது.* எனவே, நிலப்பிரபுத்துவக் குத்தகைக்காரனுக்குப் பதிலாக முதலாளி வருவதற்கு வெகுகாலம் பிடித்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஜெர்மனியில் இந்த உருமாற்றம் பதினெட்டாம் நூற்றுண்டின் கடைசி நாற்பதாண்டுகளில்தான் நடந்திருக்கிறது. தொழில் முதலாளிக்கும் நிலச்சொந்தக்காரனுக்கும் இடையேயுள்ள இந்த உறவு இங்கிலாந்தில் மட்டுமே முற்றுக வளர்ந்திருக்கிறது.

திரு. புரூதோனின் **உழவன்** மட்டுமே இருந்து வந்தவரை வாடகை இருக்கவில்லை. வாடகை தோன்றியானவுடனே அந்த உழவன் விவசாயியாக இனிமேல் இருப்பதில்லை, தொழிலாளியாக விவசாயியின் உழவன் இருக்கிருன். தொழில் முதலாளிக்கு உழைக்கும் சாதாரணத் தொழிலாளியின், நாள் கூலியாளின், கூலித் தொழிலாளியின் பாத்திரத்துக்குத் தாழ்த்தப்பட்டவனுக தொழிலாளி இழிநிலை அடைவது; மற்றெந்த தொழிற்சாலை போலவே நிலத்தையும் பயன்படுத்தும்படியான தொழில் முதலாளியின் குறுக்கீடு; நிலச் சொந்தக்காரன் குறுநில மன்னனுக இருந்தது போய் சாதாரண இலேவாதேவிக்காரனுக மாற்றப்படுவது; இவைதான் வாடகை குறிக்கும் வெவ்வேறு உறவுகள்.

---

* —1885 ஜெர்மன் பதிப்பில் கடைசி இரண்டு வாக்கியங்கள் நீக்கப்பட்டுள்ளன; மேலும், ''தொழில் துறை முதலாளி'' என்பதன்பின் ''தனது கூலித் தொழிலாளிகளை வைத்து நிலத்தைப் பயன்படுத்துகிறவன், முதலீடு மீதுள்ள இலாபம் உள்ளிட்ட உற்பத்திச் செலவுகளுக்கு மேல் கிடைக்கிற மிகுதியை மட்டுமே வாடகையாக நிலச் சொந்தக்காரனுக்குச் செலுத்துகிறவன்'' என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. —[பதிப்பாசிரியர்.]

ரிக்கார்டோவின் அர்த்தத்தில், வாடகை என்பது வர்த்தக நோக்குள்ள தொழிலாக உருமாற்றப்பட்ட தந்தை வழி ஆட்சிக் கால விவசாயமாகும், நிலத்திலே ஈடுபடுத்தப் பட்ட தொழில்துறை மூலதனமாகும், நகரப்புறத்து முத லாளி வர்க்கம் கிராமப்புறத்தில் குடிமாற்றம் செய்யப்பட்ட தாகும். வாடகை **மனிதனை இயற்கையோடு பிணைப்பதற்குப்** பதிலாக வெறுமே நிலப் பயன்பாட்டைப் போட்டியுடன் பிணைத்துவிட்டது. வாடகையாக உருவமைக்கப் பெற்ற வுடன் நிலச்சொத்தும் **போட்டியின் விளைவாக** இருக்கிறது— காரணம், அதுமுதல் அது விவசாய விளைபொருட்களின் சந்தை மதிப்பைச் சார்ந்திருக்கிறது. வாடகை என்கிற வகை யில், நிலச்சொத்து இயங்குடைமையாகி வாங்குவதற்கும் விற்பதற்கும் உரிய பொருளாக ஆகிவிடுகிறது. நகரப்புறத்துத் தொழில் வளர்ச்சியும் அதிலிருந்து விளைகிற சமுதாய அமைப்பும் நிலச்சொந்தக்காரனை வர்த்தக இலாபங்களை, தனது விவசாய விளைபொருட்களின் பண உறவை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கும்படி—உண்மையாகச் சொன் னால், தனது நிலச்சொத்தைப் பணம் பண்ணுவதற்கான இயந்திரமாக மட்டும் பார்க்கும்படி—நிர்ப்பந்தப்படுத்து கிற அதே வினாடியிலிருந்துதான் வாடகை என்பது சாத்திய மாகும். வாடகையானது நிலச்சொந்தக்காரனை முற்றாக நிலத்திலிருந்து, இயற்கையிடமிருந்து பிரித்துவிட்டதால் அவன் தன்னுடைய பண்ணைகளைக்கூட அறிந்திருக்க வேண் டிய தேவையில்லை, இதை இங்கிலாந்திலே பார்க்கலாம். விவசாயி, தொழில் முதலாளி, விவசாயத் தொழிலாளி ஆகியோரைப் பொருத்தவரை, எப்படித் தொழிற்சாலைகளி லுள்ள முதலாளியும் தொழிலாளியும் தாங்கள் உற்பத்தி செய்கிற பருத்தியோடும் கம்பளி மயிரோடும் பிணைக்கப் படாமலிருக்கிறார்களோ அப்படியேதான் அவர்களும் தாங் கள் பயன்படுத்துகிற நிலத்தோடு பிணைக்கப்படவில்லை; அவர்கள் தமது உற்பத்தியின் விலையோடு, பண வடிவ வரு மானத்தோடு மட்டுமே பந்தத்தை உணர்கிறார்கள். எனவே தான், நிலப்பிரபுத்துவ முறையும் நனி சிறந்த பழைய தந்தைவழி ஆட்சிக்கால வாழ்க்கையும் நமது மூதாதையர் களின் எளிய நடத்தைப் பாவனைகளும் நேர்த்தியான நற் பண்புகளும் திரும்பி வர வேண்டுமே என்று வேண்டிக்

கொண்டு அனைத்தும் செய்கிற பிற்போக்குக் கட்சிகளின் அவலவுரைகள் கிளம்புகின்றன. மற்றெல்லாத் தொழில்களிலும் ஆதிக்கம் செலுத்துகிற விதிகளுக்கு நிலமும் உட்படுத்தப்படுவது இன்றைக்கும் என்றைக்கும் தன்னலமுள்ள இரங்கல் மொழிகளுக்கு விஷயமாக இருந்து வரும். ஆகவே வரலாற்றின் இயக்கத்தில் பிரமையைப் புகுத்திய உந்து சக்தியாக வாடகை அமைந்துவிட்டது என்று கூறலாம்.

வாடகை நிலவுவதற்கு முதலாளித்துவ உற்பத்தி அவசியம் என்று ரிக்கார்டோ அடிக்கோள் செய்தார்; அவ்வாறிருந்த போதிலும் வாடகை பற்றிய கருத்தோட்டத்தை எல்லாச் சகாப்தங்களின் எல்லா நாடுகளின் நிலச்சொத்துக்கும் பொருத்திச் செயல்படுத்துகிறார். முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை நிரந்தரமான வகையினங்களாகக் காட்டுகிற எல்லாப் பொருளாதாரவாதிகளுக்கும் இந்தப் பிழை பொதுவானதாகும்.

வாடகையின் தெய்வாதீனமான நோக்கிலிருந்து—திரு. புருதோன் கருத்தில் அது உழவன் ஒரு பொறுப்புள்ள தொழிலாளியாக உருமாற்றமடைவதாகும்—அவர் வாடகையின் சமநிலை வினியோகத்துக்குப் போகிறார்.

நாம் இப்பொழுது பார்த்தபடி, வாடகையானது சமமற்ற வளமுடைய நிலங்களின் விளைபொருட்களின் சம விலையால் அமைக்கப் பெறுகிறது; எனவேதான், கீழ்த்தரமான வளமுள்ள நிலத்தில் உற்பத்திச் செலவு இருபது பிராங்குக்கு உயர்ந்தால் பத்து பிராங்கு உற்பத்திச் செலவு பிடித்த நூறு லிட்டர் தானியம் இருபது பிராங்குக்கு விற்கப்படுகிறது.

சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட விவசாய விளைபொருட்கள் அனைத்தையும் வாங்கிப் போடும்படி தேவை கட்டாயப்படுத்தி வருகிற வரை, விலை மிகுந்த விளைபொருளின் செலவுதான் சந்தை விலையை நிர்ணயிக்கிறது. எனவே, வெவ்வேறான நில வளங்களால் அல்லாமல் போட்டியால் விளைகிற இந்த சமவிலையமைவுதான் மேலான நிலத்தின் சொந்தக்காரனுக்கு அவனுடைய குத்தகைதார் விற்கும் ஒவ்வொரு நூறு லிட்டருக்கும் பத்து பிராங்கு கிடைக்கச் செய்கிறது.

தானியத்தின் விலையை அதை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்பட்ட உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுவதாக ஒரு கணம் வைத்துக் கொள்வோம், உடனே மேலான நிலத்தி

லிருந்து கிடைத்த நூறு லிட்டர் தானியம் பத்து பிராங்குக்கு விற்பனையாகும், அதேபொழுதில் கீழ்த்தரமான நிலத்திலிருந்து கிடைத்த நூறு லிட்டர் தானியம் இருபது பிராங்குக்கு விலையாகும். இதை ஒத்துக் கொள்கிற பொழுது, சராசரி சந்தை விலை பதினைந்து பிராங்கு ஆகும், ஆனால் போட்டி பற்றிய விதிப்படி அது இருபது பிராங்காக இருக்கிறது. சராசரி விலை பதினைந்து பிராங்கு ஆக இருந்தால், எந்த வாடகை வினியோகத்துக்கும் (சரிசமமாக்கப்பட்டதாயினும் சரி ஆக்கப்படாததாயினும் சரி) இடமிருக்காது,—காரணம், வாடகை இராது. உற்பத்தியாளனுக்கு பத்து பிராங்கு செலவு பிடித்த நூறு லிட்டர் தானியத்தை ஒருவன் இருபது பிராங்குக்கு விற்க முடிகிற போது மட்டுமே வாடகை என்பது இருக்கும். சமமற்ற நிலையின் விளைபொருளின் சரிசமமாக்கப்பட்ட வினியோகத்துக்கு வந்து சேரும் பொருட்டு திரு. புரூதோன் சமமற்ற உற்பத்திச் செலவுகளோடு கூடிய சந்தை விலையின் சமநிலையை அனுமானித்துக் கொள்கிறார்.

மில், ஷெர்பூலியே, ஹில்டிட்ஸ் போன்ற பொருளாதார வாதிகள் வரிகளுக்குப் பதிலாகப் பயன்படும் வகையில் வாடகை அரசுக்குச் செலுத்தப்பட வேண்டும் என்று கோருவது நமக்குப் புரிகிறது. அது தொழில் முதலாளி நிலச்சொந்தக்காரன் மீது வைத்திருக்கும் பகைமையைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகிறது, அவனுக்கு நிலச்சொந்தக்காரன் ஒரு உபயோகமற்ற பிறவியாக, முதலாளித்துவ உற்பத்தியின் உடம்பில் தொங்கும் வேண்டாச் சதையாகத் தெரிகிறது.

ஆனால், நுகர்வோனிடம் விதித்த பத்து பிராங்கு மிகைக் கட்டணத்தை ஒரு பொதுவான வினியோகமாக்குவதற்காக நூறு லிட்டர் தானியத்தின் விலையை இருபது பிராங்கு ஆக்குவது, சமுதாய மேதையைத் துயரார்ந்த நிலையிலே கோணல் மாணலாக நடைபோடச் செய்து—தலையை ஏதாவதொரு சந்து முனையில் முட்டிக் கொள்ளச் செய்வதற்கு உண்மையிலே போதுமானது.

திரு. புரூதோன் பேனாவின்கீழ் வாடகையானது "ஒரு மாபெரும் நிலப் பதிவேடு, முரண்பட்ட நிலையிலே நிலச் சொந்தக்காரர்களும் விவசாயிகளும்... ஒரு மேலான நலனை உத்தேசித்து அதைத் தயாரித்து முடிக்கிறார்கள், நிலத்தைப்

பயன்படுத்துகிறவர்களுக்கும் தொழில் முதலாளிகளுக்கும் இடையே நிலவுடைமையைச் சரிசமமாக்கி வைப்பதையே இறுதி விளைவாகக் கொண்டிருக்க வேண்டிய முறையில் தயாரித்து முடிக்கிறார்கள்'' என்றாகிவிடுகிறது.

தற்காலச் சமுதாய நிலைமைகளில்தான் வாடகையை ஆதாரமாகக் கொண்ட எந்தப் பதிவேடாயினும் நடைமுறை மதிப்புள்ளதாக இருக்கலாம்.

நிற்க, தொழில் துறையிலும் வாணிபத்திலும் மிகவும் முன்னேறிய நாடுகளில் மட்டுமே விவசாயி நிலச்சொந்தக்கார னுக்குக் கொடுக்கிற வாரம் அல்லது குத்தகை ஓரளவுக்குத் திட்பநுட்பத்துடன் வாடகையைக் குறிக்கிறது என்று காட்டினோம். மேலும், இந்த வாடகையுங்கூட நிலத்தில் ஈடு படுத்தப்பட்ட மூலதனத்துக்கு நிலச்சொந்தக்காரனுக்குக் கொடுத்த வட்டியையும் அடிக்கடி உள்ளிட்டிருக்கிறது. நிலம் இருக்கிற இடம், நகரங்களுக்கு அருகாமையிலே இருப் பது, பிறபல சூழ்நிலைமைகள் வாரக் குத்தகைகள் மீது பாதிப்பு செய்கின்றன, நில வாடகையைத் திருத்துகின்றன. இந்த மறுப்பிற்கிடமற்ற காரணங்கள் வாடகையை ஆதார மாகக் கொண்ட நிலப் பதிவேட்டின் திட்பநுட்பமின்மையை நிரூபிப்பதற்குப் போதுமானவை.

மறுபுறத்தில், ஒரு நிலப் பகுதியின் வளத்தின் அளவைக் குறிப்பதற்கான மாற்றவொண்ணாத குறியீடாக வாடகை இருந்து வர முடியாது—காரணம், இரசாயனத்தின் நவீன காலச் செயல்பாடு ஒவ்வொரு வினாடியிலும் நிலத்தின் தன்மையை மாற்றிக் கொண்டிருக்கிறது, மற்றும் மண்ணியல் அறிவு இப்பொழுதுதான், நம் காலத்தில், சார்பு நிலையான வளத்தைப் பற்றிய பழைய மதிப்பீடுகளையெல்லாம் புரட்சி கரமாக மாற்றிவிடத் தொடங்கியுள்ளது. இங்கிலாந்தின் கிழக்கு மாநிலங்களில் பெரும் நிலப்பரப்புக்கள் திருத்தப் பெற்று இருபதாண்டுகள்தான் ஆகிறது; இலைதழைச் சத்துக் கும் அடிமண்ணுக்கும் இடையேயுள்ள உறவு பற்றிய முறை யான முற்றறிவு இல்லாமையால் அவை பயிரிடப்படாமலே விடப்பட்டிருந்தன.

ஆக, வரலாறு வாடகையில் ஒரு தயார் நிலையிலுள்ள நிலப் பதிவேடு கொடுப்பதற்குப் பதிலாக, ஏற்கெனவே செய்

யப்பட்டிருந்த நிலப் பதிவேடுகளை மாற்றித் தலைகீழாகத் திருப்பிவிட்டது தவிர வேறெதுவும் செய்கிறதில்லை.

கடைசியாக, நாம் நினைக்கக் கூடிய மாதிரி வளம் அவ்வள வொன்றும் இயல்பானதொரு பண்பல்ல; அது அந்தந்தக் காலத்திய சமுதாய உறவுகளோடு நெருங்கப் பிணைக்கப்பட் டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதி தானிய விளைச்சலுக்கு மிகவும் வளமுள்ளதாக இருக்கக் கூடும், என்றபோதிலும் அதைச் செயற்கையான மேய்ச்சல் நிலமாக்கி வளமற்ற தாக்கிவிட விவசாயி தீர்மானிக்கும்படி சந்தை விலை செய்ய முடியும்.

வாடகையின் **தெய்வாதீனமான சமநிலைவாத** நோக்கை நிறைவேற்றுவதற்காக மட்டுமே திரு. புரூதோன் தமது நிலப் பதிவேட்டை — அதற்கு ஒரு சாதாரண நிலப் பதி வேட்டின் மதிப்புகூடக் கிடையாது—புனைந்திருக்கிறார்.

திரு. புரூதோன் தொடர்கிறார்: ''நிலம் என்கிற என்று மழியாத ஒரு மூலதனத்துக்குச் செலுத்தும் வட்டியே வாடகையாகும். மேலும், அந்த மூலதனத்தின் பொருளாயத அமைவு அதிகரிக்கத் திறமற்றிருப்பதாலும், பயன்படுத் தலில் மட்டுமே வரம்பின்றி மேம்படுத்தப்படக் கூடியதா யிருப்பதாலும், மூலதனங்களின் நிறைவு காரணமாக ஒரு கடனுக்குச் செலுத்தப்படுகிற வட்டியோ இலாபமோ இடை யறாது குறைந்து வரும் போக்கைக் கொண்டிருக்கையில், நிலப் பயன்பாடு மேம்படுவதை விளைக்கிற உற்பத்திமுறை யின் நிறைநேர்த்தி மூலமாக வாடகையானது எப்போதும் அதிகரிக்கும் போக்கைக் கொண்டிருப்பது நிகழ்கிறது.... சாராம்சத்தில் இதுதான் வாடகை ஆகும்.'' (தொகுதி 2, பக்கம் 265.)

இந்தத் தடவை திரு. புரூதோன் வட்டியின் எல்லாச் சிறப்பியல்புகளையும் வாடகையிலே காண்கிறார்—அது ஒரு குறிப்பிட்ட தன்மையுள்ள மூலதனத்திலிருந்து பெறப்படு கிறது என்பதைத் தவிர. இந்த மூலதனம் நிலமாகும், இது நிரந்தரமான மூலதனம், ''அந்த மூலதனத்தின் பொரு ளாயத அமைவு அதிகரிக்கத் திறமற்றிருப்பதாலும் பயன் படுத்தலில் மட்டுமே வரம்பின்றி மேம்படுத்தப்படக் கூடி யதாயிருப்பது.'' நாகரிகத்தின் முற்போக்கான வளர்ச்சியின் போது வட்டிக்கு வீழ்ந்து வருகிற போக்கு இருக்கையில்,

வாடகைக்கு இடையறுது அதிகரிக்கும் போக்கு உள்ளது. மூல தனங்கள் நிறைய இருப்பதால் வட்டி வீழ்கிறது; உற்பத்தி முறையில் செய்யப்படும் மேம்பாடுகளின் காரணமாக வாடகை உயர்கிறது, அதனுல் இன்னும் மேலான நிலப் பயன்பாடு ஏற்படுகிறது.

சாராம்சத்தில், இதுவே திரு. புரூதோனின் கருத்து.

வாடகை மூலதனத்தின் மேல் கிடைக்கும் வட்டியே என்பது எவ்வளவு தூரத்துக்குச் சரி என்று முதலில் பரிசீலிப் போம்.

நிலச்சொந்தக்காரனைப் பொருத்தவரை நிலத்தை அவன் வாங்கியதற்கான மூலதனத்தின்—அல்லது நிலத்தை விற்று விடுவதானுல் அதிலிருந்து பெறுகிற மூலதனத்தின் — மேல் கிடைக்கிற வட்டியாக வாடகை விளங்குகிறது. ஆனுல் நிலத்தை வாங்கும்பொழுதோ விற்கும்பொழுதோ அவன் வாட கையைத்தான் வாங்கவோ விற்கவோ செய்கிருன். தன்னை வாடகை வாங்குகிறவனுகச் செய்து கொள்வதற்கு அவன் கொடுக்கிற விலையானது பொதுவான வட்டி விகிதத்தால் ஒழுங்கு முறைப்படுத்தப்படுகிறது, அதற்கும் அசல் வாடகை யின் தன்மைக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. உற்பத்தித் தொழிலிலோ வர்த்தகத்திலோ ஈடுபடுத்தப்பட்ட மூலதனத் தின் மீது கிடைக்கிற வட்டியைவிட நிலத்தில் ஈடுபடுத்தப் பட்ட மூலதனத்தின் மீது கிடைக்கும் வட்டி பொதுவாகவே குறைவானதாகும். ஆகவே, நிலச்சொந்தக்காரனுக்கு நிலம் தருகிற வட்டிக்கும் அசல் வாடகைக்கும் இடையே வேறு பாடு செய்யாதவர்களுக்கு மற்ற மூலதனத்தின் மேல் கிடைக் கிற வட்டியைவிட நில மூலதனத்தின் மேல் கிடைக்கும் வட்டி இன்னும் அதிகமாகக் குறைகிறது. ஆனுல் அது வாடகையை வாங்கும் விலை அல்லது விற்கிற விலை பற்றிய பிரச்சினையல்ல, வாடகையின் சந்தை மதிப்பு பற்றிய பிரச்சினையுமல்ல, மூலதனமாக்கப்பட்ட வாடகை பற்றிய பிரச்சினையுமல்ல, அது அசல் வாடகை பற்றிய பிரச்சினையேயாகும்.

மேலும், குத்தகை முறையான வாடகையை மட்டு மல்லாமல் நிலத்தில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் மேல் கிடைக்கிற வட்டியையும் உட்கிடையாக இருக்க முடியும். இந்த வழக்கில் குத்தகையின் இந்தப் பகுதியை நிலச்சொந்தக் காரன் முதலாளி என்கிற வகையிலே பெற்றுக் கொள்கிருன்,

நிலச்சொந்தக்காரன் என்கிற வகையில் அல்ல; ஆனால் இது நாம் எடுத்துக் கவனிக்கும் முறையான வாடகை அல்ல.

நிலமானது உற்பத்திச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருக்கும் வரை மூலதனம் அல்ல. மற்றெல்லா உற்பத்திக் கருவிகள் போலவே நிலமும் மூலதனம் என்கிற வகையில் அதே அளவுக்கு அதிகப்படுத்தப்பட முடியும். திரு. புரூதோனின் சொற்களில் சொல்வதென்றால், அதில் பொருள் வகையில் ஒன்றும் கூட்டப்படுவதில்லை, ஆனால் உற்பத்திக் கருவிகளாகப் பயன்படுகிற நிலங்கள் பெருக்கப்படுகின்றன. ஏற்கெனவே உற்பத்திச் சாதனங்களாக உருமாற்றப்பட்டு விட்ட நிலத்தில் மேலும் முதலீடுகளை ஈடுபடுத்தும் விஷயமே நிலத்தை மூலதனம் என்கிற வகையில் அதிகப்படுத்துகிறது—நிலத்துக்குப் பொருள் வகையிலே எதையும் கூடுதலாக்காமலே, அதாவது நிலத்தின் அளவைக் கூட்டாமலே. திரு. புரூதோனின் பொருள் வகைப்பட்ட நிலம் என்பது வரம்புக் குறுக்கத்திலுள்ள பூமியாகும். அவர் நிலத்துக்குக் கற்பிக்கிற நிரந்தரத்தன்மையைப் பொருத்தவரை, பொருள் வகையிலே அதற்கு இந்தப் பண்பு இருப்பதை நாம் தயாராக ஒப்புக் கொள்கிறோம். மூலதனம் என்கிற வகையில் நிலம் மற்றெந்த மூலதனத்தைப் போலவே நிரந்தரமானதல்ல.

வட்டி கொடுக்கிற தங்கமும் வெள்ளியும் நிலம் போலவே நிலைத்திருப்பவை, நிரந்தரமானவை. நிலத்தின் விலை உயர்ந்து கொண்டிருக்கையில் தங்கம் வெள்ளியின் விலை விழுமேயானால் அதற்குக் காரணம் அதன் ஏறத்தாழ நிரந்தரமான தன்மை அல்ல என்பது உறுதி.

மூலதனம் என்கிற வகையில் நிலம் ஒரு நிலையான மூலதனமாகும்; ஆனால் நிலையான மூலதனமும் புழக்கத்திலிருக்கும் மூலதனம் போலவே பயன்படுத்தப்பட்டு தீர்ந்து போகிறது. நில மேம்பாட்டுக்கு மறு உற்பத்தியும் பராமரிப்பும் தேவை; அவை குறிப்பிட்ட காலத்துக்குத்தான் நீடிக்கும்; அவற்றிற்கும் சரி, பொருளை உற்பத்திக் கருவிகளாக உருமாற்றப் பயன்படுத்தப்படுகிற மற்றெல்லா மேம்பாடுகளுக்கும் சரி, இது பொதுவாகும். மூலதனம் என்கிற வகையில் நிலம் நிரந்தரமானதாக இருந்திருந்தால் சில நிலங்கள் இன்றுள்ளது போலில்லாமல் மிகவும் வேறான தோற்றம் அளித்திருக்கும்; நாம் ரோமானிய காம்பேனாவையும், சிஸிலியையும், பாலஸ்

தீனத்தையும் அவற்றின் முன்காலத்திய செழுமையின் ஒளிச் சிறப்பிலே காண வேண்டியிருக்கும்.

மூலதனம் என்கிற வகையில் நிலம் மறைந்துவிடக் கூடிய வழக்குகளுங்கூட உண்டு, அந்த நிலத்தில் மேம்பாடுகள் தொடர்ந்து இருந்து வருகிற போதிலுங்கூட.

முதலாவதாக, புதிய, மேலான வளம் உள்ள நிலங்களின் போட்டியால் முறையான வாடகையானது அழிக்கப்படுகிற ஒவ்வொரு தடவையிலும் இது நிகழ்கிறது; இரண்டாவதாக, ஒரு காலத்தில் மதிப்புள்ளவையாக இருந்திருக்கக் கூடிய மேம்பாடுகள் வேளாண்மை இயலின் வளர்ச்சி காரணமாக முழுதளாவிய நிலைக்கு வந்துவிட்டால் அந்த வினாடியே அவை மதிப்பற்றதாகிவிடுகின்றன.

மூலதனம் என்கிற வகையிலுள்ள நிலத்துக்குப் பிரதிநிதி விவசாயிதான், நிலச்சொந்தக்காரன் அல்ல. மூலதன வகையில் உள்ள நிலம் கொடுக்கிற வரவுகள் வட்டியும் தொழில் முதலாளியின் இலாபமும் தான், வாடகை அல்ல. இப்படிப்பட்ட வட்டியும் இலாபமும் கொடுத்து அதே சமயத்தில் வாடகை கொடுக்காத நிலங்களும் உண்டு.

சுருங்கச் சொன்னால், நிலம் வட்டி கொடுக்கிற அளவுக்கு நில மூலதனமாகும், மற்றும் நில மூலதனம் என்கிற வகையில் அது வாடகையைத் தருவதில்லை, அது நிலச்சொத்து அல்ல. நிலப் பயன்பாடு நிகழ்கிற சமுதாய உறவுகளிலிருந்து வாடகை விளைகிறது. மண்ணின் ஏறத்தாழத் திரட்சியான, ஏறத்தாழத் திடமான தன்மையிலிருந்து விளைகிற விளைவாக அது இருக்க முடியாது. வாடகை என்பது சமுதாயத்தின் விளைபொருள், மண்ணின் விளைபொருளல்ல.

திரு. புரூதோன் கருத்துப்படி, ''நிலப் பயன்பாட்டிலுள்ள மேம்பாடுகள்''—''உற்பத்தி முறை நிறைநேர்த்தியாக்கப்படுவதின்'' ஒரு விளைவு இது—வாடகை இடையறாது உயரச் செய்கிறது. அதற்கு மாறாக, இந்த மேம்பாடு அதை அவ்வப்பொழுது விழுந்து கொண்டிருக்கச் செய்கிறது.

பொதுவாகவே, விவசாயத்திலாயினும் சரி தொழில் துறையிலாயினும் சரி, மேம்பாடு என்பது எதில் அடங்கியிருக்கிறது? அதே அளவான உழைப்பைக் கொண்டு அதிகமாக உற்பத்தி செய்வதிலே; குறைவான உழைப்பைக் கொண்டு அதே அளவுக்கோ அதைவிட அதிகமாகவோ உற்பத்தி செய்

வதிலே. இந்த மேம்பாடுகளின் காரணத்தால், சார்புநிலையிலே முன்னேவிடக் குறைவான விளைபொருளுக்காக முன்னேவிட அதிகமான உழைப்பைப் பயன்படுத்துவதிலிருந்து விவசாயி விடுவிக்கப்படுகிருன். எனவே, அவனுக்குக் கீழ்த் தரமான மண்களைத் தேடிப் பயன்படுத்த வேண்டிய தேவையில்லை, மற்றும் அதே நிலத்தில் ஒன்றன்பின்னென்ருகச் செயல்படுத்தப்படுகிற முதலீடுகள் சமமான உற்பத்தித் திறனுள்ளவையாக இருந்து வருகின்றன.

எனவே, திரு. புரூதோன் கூறுகிறபடி இந்த மேம்பாடுகள் இடையருது வாடகையை உயர்த்துவதற்கு மாருக அவை அத்தனையும் அது உயர்வதைத் தடுக்கிற தற்காலிகத் தடைக்கற்களாக ஆகிவிடுகின்றன.

பதினேழாம் நூற்ருண்டைச் சேர்ந்த ஆங்கிலேய நிலச் சொந்தக்காரர்களுக்கு இந்த உண்மை நன்ருகத் தெரியுமாதலால் தங்களுடைய வருமானம் குறைந்துவிடுமோ என்கிற பயத்தில் அவர்கள் விவசாயத்தின் முன்னேற்றத்தை எதிர்த்தார்கள். (இரண்டாம் சார்லஸ் காலத்திய ஆங்கிலேயப் பொருளாதாரவாதியாகிய பெட்டியைப் பார்க்க.[54])

§ 5. வேலைநிறுத்தங்களும் தொழிலாளர்களின் சங்கங்களும்

''ஒவ்வொரு கூலி உயர்வும் தானியம், ஒயின் முதலியவற்றின் விலையை உயர்த்துவதைத் தவிர—அதாவது வறுமையைத் தீவிரப்படுத்தவதைத் தவிர—வேறெந்த பாதிப்பும் செய்ய முடியாது. காரணம், கூலி என்பது என்ன? அது தானியம்'' முதலியவற்றின் ''விலை; அது எல்லாவற்றின் ஒன்றிணைந்த விலை. அதற்கு மேலும் போகலாம்: செல்வமாக அமைந்துள்ள கூறுகளின் தகவுப் பொருத்தமே, அவற்றை மறு உற்பத்தி செய்து வருகிற வகையிலே தொழிலாளர் திரளின் நுகர்வே கூலி ஆகும். நிற்க, கூலியை இரட்டிப்பது... ஒவ்வொரு உற்பத்தியாளனுக்கும் தனது விளைபொருளைக் காட்டிலும் அதிகமான பங்கு கற்பிப்பதாகும், இது முரணுனது, மற்றும் அந்த உயர்வு சின்னஞ்சிறு தொகையான தொழில்களுக்கு மட்டுமே விரியுமானுல் பரிமாற்றத்தில் ஒரு பொதுவான கலவரத்தை உண்டாக்கும், அதாவது

வறுமையை தீவிரப்படுத்துகிறது.... வேலைநிறுத்தங்களைத் தொடர்ந்து வரும் கூலி உயர்வு ஒரு பொதுவான விலைவாசி உயர்விலே போய் முடியாமலிருப்பது அசாத்தியம் என்று நான் அறுதியிட்டுச் சொல்கிறேன்—இரண்டும் இரண்டும் சேர்ந்தால் நான்கு ஆகும் என்பது போல் அவ்வளவு உறுதியாகும் இது.'' (புரூதோன், தொகுதி 1, பக்கங்கள் 110ம் 111ம்.)

இந்த வன்கூற்றுக்கள் அனைத்தையும் நாம் மறுக்கிறோம்—இரண்டும் இரண்டும் சேர்ந்தால் நான்காகும் என்கிறதைத் தவிர.

முதலாவதாக, பொதுவான விலைவாசி உயர்வு இராது. கூலி இரட்டிக்கிற அதே நேரத்தில் ஒவ்வொன்றின் விலையும் இரட்டிக்குமேயானால் விலையில் மாற்றம் கிடையாது, சொல்லளவிலேதான் மாற்றம்.

மேலும், பொதுவான கூலி உயர்வு சரக்குகளிலே ஏறத்தாழ ஒரு பொதுவான விலைவாசி உயர்வை என்றைக்கும் உண்டாக்க முடியாது. யதார்த்தத்தில், ஒவ்வொரு தொழிலும் நிலையான மூலதனத்துடன் அல்லது பயன்படுத்தும் கருவிகளுடன் சார்புநோக்கில் ஒரே தொகையுள்ள தொழிலாளிகளை வேலைக்கு வைத்திருந்தால் பொதுவான கூலி உயர்வு ஒரு பொதுவான இலாப வீழ்ச்சியை உண்டாக்கும், சரக்குகளின் நிலவர விலையில் மாற்றம் ஏற்படாது.

ஆனால் வெவ்வேறு தொழில்களில் உடலுழைப்புக்கும் நிலையான மூலதனத்துக்கும் உள்ள உறவு ஒரே மாதிரி இல்லாததால், சார்புநிலையிலே அதிகமான மூலதனத் திரளையும் குறைவான தொழிலாளர்களையும் கொண்டிருக்கும் தொழில்களனைத்தும் தமது சரக்குகளின் விலைகளை விரைவாகவோ தாமதித்தோ குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதற்கு மாறான வழக்கில், தமது சரக்குகளின் விலை குறைக்கப்படாதிருக்கும் தொழில்களில், அவற்றின் இலாபம் பொதுவான இலாப விகிதத்தைவிட உயர்ந்துவிடும். இயந்திரங்கள் கூலி சம்பாதிப்பவை அல்ல. எனவே, மற்ற தொழில்களோடு ஒப்புநோக்கில் தொழிலாளிகளைவிட அதிகமாக இயந்திரங்களைப் பயன்படுத்துகிற தொழில்களைப் பொதுவான கூலியுயர்வு குறைவாகவே பாதிக்கும். எனினும் போட்டி இலாப விகிதத்தைச் சமமட்டமாக்கிவிடுகிற போக்குள்ளதால், சராசரி விகிதத்துக்கு மேலாக உயர்கிற இலாபம் தற்காலிகமான

தாகத்தான் இருக்க முடியும். ஆக, ஒரு சில ஏற்ற இறக்கங்களைத் தவிர, திரு. புரூதோன் கூறுகிறபடி பொதுவான கூலியுயர்வு பொதுவான விலைவாசி உயர்வுக்குக் கொண்டுபோய் விடாது, அதற்கு மாறாக ஒரு அரைகுறையான விலை வீழ்ச்சிக்குத்தான்—அதாவது பெரும்பாலும் இயந்திரங்களின் உதவியால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் நிலவர விலைகளின் வீழ்ச்சிக்குத்தான்—கொண்டுபோய்விடும்.

இலாபம் கூலி ஆகியவற்றின் எழுச்சி வீழ்ச்சிகள் எனப் பட்டவை ஒரு நாளத்திய வேலையின் விளைபொருளை முதலாளிகளும் தொழிலாளிகளும் பங்கிட்டுக் கொள்வதின் தகவுப் பொருத்தத்தைக் குறிக்கிறதே தவிர வேறில்லை, அவை மிகப் பெரும்பான்மையான வழக்குகளில் விளைபொருளின் விலையைப் பாதிப்பதில்லை. ஆனால் ''வேலைநிறுத்தங்களைத் தொடர்ந்து வரும் பொதுவான கூலியுயர்வு ஒரு பொதுவான விலைவாசி உயர்விலே போய் முடியும், வறுமையைத் தீவிரப் படுத்துவதிலே கூடப் போய் முடியும்''—என்பதெல்லாம் புரிந்து கொள்ளப்படாத ஒரு கவிஞனின் மூளையிலே மட்டும் உதிக்கக் கூடிய எண்ணப் போக்குகளே.

இங்கிலாந்தில், வேலைநிறுத்தங்களால் முறையாகப் புதிய இயந்திரங்களைப் புனைவதும் செயல்படுத்துவதும் ஏற்பட்டிருக்கிறது. தனித்தேர்ச்சிச் சிறப்புள்ள உழைப்பாளிகளின் கலகத்தை ஒடுக்குவதற்கு முதலாளி உபயோகித்த ஆயுதமே இயந்திரங்கள் என்று சொல்லலாம். நவீனகாலத் தொழிற் துறையின் மிகப் பெரும் புனைவான தானியங்கி நூல் நூற்பு இயந்திரம் கலகம் செய்த நூற்புத் தொழிலாளிகளைச் செயலிழக்கச் செய்தது. சங்கங்களும் வேலைநிறுத்தங்களும் தங்களுக்கு எதிராகப் பொறியியக்கவியல் மேதையின் முயற்சிகள் எதிர்வினையாற்றச் செய்வதற்கு மேலாக வேறெந்தப் பாதிப்பும் செய்யாமற் போயினும் அவை தொடர்ந்து தொழில் வளர்ச்சி மீது மகத்தான செல்வாக்குதான் செலுத்திவரும்.

திரு. புரூதோன் தொடர்கிறார்: ''செப்டம்பர் 1845ல்... திரு. லியோன் ஃபொஷே வெளியிட்ட கட்டுரையில் கொஞ்ச காலமாக பிரிட்டிஷ் தொழிலாளிகள் சங்கம் அமைத்திடும் பழக்கத்தை விட்டுவிட்டார்கள் என்று காண்கிறேன், நிச்சயமாக இது ஒரு முன்னேற்றமே, இதற்காக அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது: ஆனால் தொழிலாளி

களின் மனவெழுச்சியிலே காண்கிற இந்த மேம்பாடு அவர்களின் பொருளாதாரக் கல்வியறிவிலிருந்து பெரும்பாலும் விளைகிறதாகும். போல்டன் நகரில் நடந்த ஒரு கூட்டத்தில் ஒரு நூற்பாலைத் தொழிலாளி சொன்னதாவது: 'கூலி முதலாளிகளைச் சார்ந்த விஷயமல்ல. தேக்கம் நிலவுகிற காலங்களில் அவசியத்தின் கரங்களில் வெறுமே ஒரு சவுக்காக எஜமானர்கள் இருக்கிறார்கள், அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அடி கொடுத்துத் தீர வேண்டியிருக்கிறது. வரத்துக்கும் கிராக்கிக்கும் உள்ள உறவுதான் ஒழுங்குமுறைப்படுத்தும் கோட்பாடு; அந்தச் சக்தி எஜமானர்களிடம் கிடையாது' என்று.... பலே பேஷ்! இவர்கள் நன்கு பயிற்சிபெற்ற தொழிலாளிகள், முன்மாதிரியான தொழிலாளிகள் என்றவாறு... இப்படிப்பட்ட கேடு பிரிட்டனில் இருந்ததில்லை; அது இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டி வராது'' என்று கூவுகிறார் திரு. புரூதோன். (புரூதோன், தொகுதி 1, பக்கங்கள் 261ம் 262ம்.)

இங்கிலாந்தின் நகரங்களிலேயே போல்டன்தான் தீவிரவாதம் மிகவும் வளர்ந்தோங்கியிருக்கிற நகரம். போல்டன் தொழிலாளர்களே எல்லோரையும்விட மிகவும் புரட்சிகரமானவர்கள் என்று பேர் பெற்றவர்கள். தானியச் சட்டங்களை[55] ஒழித்திட இங்கிலாந்தில் மாபெரும் கிளர்ச்சி நடந்த காலத்தில், நிலச்சொந்தக்காரர்களைச் சமாளிப்பதற்குத் தொழிலாளிகளை முன்னணியில் தள்ளிவிட்டால்தான் முடியும் என்று ஆங்கிலேய முதலாளிகள் நினைத்தார்கள். ஆனால், நிலச்சொந்தக்காரர்களின் நலன்களுக்கு எதிராக முதலாளிகளின் நலன்கள் இருந்தது போலவே முதலாளிகளின் நலன்களுக்கு எதிராகத் தொழிலாளிகளின் நலன்கள் இருந்தன. எனவே தொழிலாளர் கூட்டங்களில் முதலாளிகள் திண்டாடியது இயல்புதான். முதலாளிகள் என்ன செய்தார்கள்? தங்கள் மரியாதையைக் காத்துக் கொள்வதற்காக, பெரும்பாலும் ஃபோர்மேன்களையும் தங்களுக்கு விசுவாசமாயுள்ள சில தொழிலாளிகளையும் உண்மையான வாணிப நண்பர்களையும் திரட்டிக் கூட்டங்கள் நடத்தினர். பின்னால், போல்டனிலும் மாஞ்செஸ்டரிலும் நடந்தது போல், அவற்றைக் கண்டிப்பதற்காக உண்மைத் தொழிலாளிகள் இந்தப் போலி ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ள முயன்ற போது கட்டணச்

சீட்டு வைத்து நடக்கும் கூட்டம் என்று கூறி—அதாவது நுழைவுச் சீட்டு உள்ளவர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும் என்று கூறி—அவர்களை அனுமதிக்க மறுத்தார்கள். எனினும் இவை பொதுக்கூட்டங்கள் என்றுதான் சுவரொட்டி விளம்பரங்கள் தெரிவித்தன. இப்படிப்பட்ட கூட்டங்கள் ஒவ்வொரு தடவை நடந்த காலத்தில் முதலாளிகளின் பத்திரிகைகள் சொற்பொழிவுகளை விரிவாகவும் படாடோபமாகவும் வெளியிட்டன. சொற்பொழிவாளர்கள் ஃபோர்மேன்களே என்று சொல்லத் தேவையில்லை. லண்டன் பத்திரிகைகள் அவற்றை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே எடுத்துப் பிரசுரித்தன. ஃபோர்மேன்களைச் சாதாரணத் தொழிலாளிகளாகக் கொள்ளும் துர்பாக்கியம் திரு. புரூதோனுக்கு ஏற்பட்டிருக்கிறது, அவர்களைத்தான் அவர் இங்கிலீஷ் கால்வாய் தாண்டி வர வேண்டாம் என்று கண்டிப்புடன் கூறுகிறார்.

வேலைநிறுத்தங்கள் முன்னைவிடக் குறைவான கவனத்தை **1844**லும் **1845**லும் பெற்றன என்றால் அதற்குக் காரணம், **1837**க்குப் பிறகு பிரிட்டிஷ் தொழிற்துறை முதன்முதலாகச் செழுமை கண்ட இரண்டாண்டுகள் அவைதான். அப்படியிருந்தும் தொழிற்சங்கங்களில் ஒன்றுகூடக் கலைக்கப்படவில்லை.

இனி போல்டன் ஃபோர்மேன்கள் சொல்வதைக் கேட்போம். அவர்கள் சொல்கிறபடி, உலகச் சந்தை முதலாளிகளின் கட்டுப்பாட்டில் இல்லை—எனவே விளைபொருட்களின் விலை அவர்கள் கட்டுப்பாட்டில் இல்லை, விளைபொருட்களின் விலை அவர்கள் கட்டுப்பாட்டில் இல்லாததால் கூலியும் அவர்கள் கட்டுப்பாட்டில் இல்லை, என்று. எனவே எஜமானர்களிடம் கூலியுயர்வைப் பலவந்தப்படுத்திப் பெறுவதற்காகத் தொழிலாளிகள் சங்கம் வைக்கக் கூடாது என்பது தங்கள் கருத்து என்று தெரிவிக்கிறார்கள். இதற்கு மாறாக, திரு. புரூதோன் சங்கங்களைத் தடை செய்யக் காரணம் சங்கங்களைத் தொடர்ந்து கூலியுயர்வு வரும், கூலியுயர்வைத் தொடர்ந்து வறுமையும் வரும் என்கிற பயந்தான். ஒரு விஷயத்தில் திரு. புரூதோனுக்கும் ஃபோர்மேன்களுக்கும் இடையே ஒரு நேச உடன்படிக்கை இருப்பதை நாம் சொல்லத் தேவையில்லை: அதாவது, கூலியுயர்வு விளைபொருட்களின் விலைவாசியுயர்வுக்குச் சமம் என்பது.

ஆனால், திரு. புரூதோனின் எரிச்சலுக்கு வறுமையா உண்மையான காரணம்? இல்லை. அவர் போல்டன் ஃபோர்மேன்கள் மேல் எரிந்து விழக் காரணம் அவர்கள் வரத்து கிருக்கிகளைக் கொண்டு மதிப்பை நிர்ணயிக்கிறார்களே என்று—உருவமைக்கப் பெற்ற மதிப்பையோ, உருவமைத்த நிலை கொண்ட மதிப்பையோ, இறைவனை அருகில் வைத்துக் கொண்டு நிரந்தரமான பரிமாற்றத் தகுதியையும் மற்றெல்லா உறவுகளின் தகவுப் பொருத்த நிலைகளையும் தகவுப் பொருத்த நிலைகளின் உறவுகளையும் உள்ளிட்டு விளங்கும் மதிப்பின் உருவமைவையோ அவர்கள் சிறிதேனும் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லையே என்றுதான்.

''தொழிலாளிகளின் வேலைநிறுத்தம் சட்ட விரோதமானது என்று சொல்வது குற்றச் சட்டத் தொகுதி மட்டுமல்ல, பொருளாதார அமைப்பு முறையும் நிலைநாட்டப்பெற்ற அமைப்பு முறையின் அவசியமும் அப்படிச் சொல்கின்றன.... ஒவ்வொரு தொழிலாளியும் தனித் தனியே சுதந்தரமாகத் தனது உடம்பையும் கைகளையும் பயன்படுத்த உரிமையுண்டு என்பதைச் சகித்துக் கொள்ளலாம், ஆனால் சங்கம் அமைத்துக் கொண்டு ஏகபோகங்களுக்கு எதிராகப் பலவந்தம் பண்ணுவதைச் சமுதாயம் அனுமதிக்க முடியாது.'' (தொகுதி 1, பக்கங்கள் 334ம் 335ம்.)

திரு. புரூதோன் பிரான்ஸ் நாட்டின் குற்றச்சட்டத்தின் ஒரு பிரிவுக்கூறு எடுத்து அதை முதலாளித்துவ உற்பத்தி உறவுகளிலிருந்து விளைந்த ஒரு அவசியகரமான, பொதுவான விளைவாக ஒப்பேற்றப் பார்க்கிறார்.

இங்கிலாந்தில் சங்கம் அமைப்பது நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டசம்மதமாக்கப்பட்டுள்ளது, மற்றும் பொருளாதார அமைப்பு முறைதான் இந்தச் சட்டரீதியான உரிமையை வழங்கும்படி நாடாளுமன்றத்தை நிர்ப்பந்தித்துள்ளது. 1845ல், சுயேச்சையான போட்டியிலிருந்து விளைகிற நிலைமைகளுக்கு மேலும் மேலும் பொருந்தும்படியாக அமைச்சர் ஹாஸ்கிஸன் கீழ் நாடாளுமன்றம் சட்டத்தைத் திருத்த வேண்டி வந்தபோது தொழிலாளர்களின் சங்கங்களைத் தடை செய்யும் எல்லாச் சட்டங்களையும் ஒழித்துவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நவீனகாலத் தொழிற்துறையும் போட்டியும் வளர வளர, சங்கம் அமைத்துப்

பலப்படுத்துவதற்கான கூறுகளும் அதிகரிக்கின்றன, சங்கம் நாளுக்கு நாள் வலிமை பெற்று ஒரு பொருளாதார உண்மையாகியவுடனே அது ஒரு சட்டபூர்வமான உண்மையாவதற்கு வெகு நாட்களாவதில்லை.[56]

எனவே பிரெஞ்சுக் குற்றச்சட்ட பிரிவுக்கூறு அதிகப்பட்சமாக நிரூபிக்கிறது இதுதான், அரசியல் நிர்ணய மன்றத்தின் கீழும் சரி பேரரசின் கீழும் சரி நவீனகாலத் தொழிற் துறையும் போட்டியும் இன்னமும் நன்கு வளர்ந்திருக்கவில்லை.

சங்கங்களைக் கண்டிக்கிற ஒரு விஷயத்தில் பொருளாதார வாதிகளும் சோஷலிஸ்டுகளும்* ஒருமனப்பட்டுள்ளனர். அவர்கள் கண்டனச் செய்கைக்குரிய நோக்கங்களிலேதான் வேறுபட்டுள்ளனர்.

பொருளாதாரவாதிகள் தொழிலாளிகளுக்குச் சொல்வதாவது: சங்கம் அமைக்காதீர்கள், சங்கம் அமைப்பதின் வழியாக நீங்கள் தொழிற் துறையின் முறையான முன்னேற்றத்தைத் தடங்கல் செய்கிறீர்கள், முதலாளிகள் தமது உத்தரவுகளை நிறைவேற்றுதபடி தடுக்கிறீர்கள், வாணிபத்தைக் குலைக்கிறீர்கள், இயந்திரங்களின் படையெடுப்பை விரைவுபடுத்துகிறீர்கள்—அவை ஓரளவுக்கு உங்களுடைய உழைப்பைப் பயனற்றதாக்கி முன்னைவிடக் குறைவான கூலி பெறும்படி நிர்ப்பந்திக்கின்றன. மேலும், நீங்கள் என்ன செய்த போதிலும், வேலைக்குத் தேவையான ஆட்கள் வேலைக்கு வரக்கூடிய ஆட்கள் இடையேயுள்ள உறவுதான் எப்போதும் கூலியை நிர்ணயிக்கும், அரசியல் பொருளாதாரத்தின் நிரந்தரமான விதிகளை எதிர்த்து நீங்கள் கலகம் செய்வது கேலித்தனமானது மட்டுமின்றி அபாயகரமான முயற்சியுமாகும்.

சோஷலிஸ்டுகள் தொழிலாளர்களுக்குச் சொல்வதாவது: சங்கம் அமைக்காதீர்கள், ஏனெனில் அதனுல் உங்களுக்கு என்ன கிடைத்துவிடப் போகிறது? கூலியுயர்வா? நீங்கள் ஒருவேளை வெற்றி பெற்று ஒரு சில வினடிகளுக்குச் சில காசுகள் கிடைக்குமேயானுல் அதைத் தொடர்ந்து ஒரு நிரந்தரமான கூலி வீழ்ச்சி வரும் என்று உங்களுக்குப் பொருளாதார

---

* —அதாவது அக்காலத்திய சோஷலிஸ்டுகள்: பிரான்ஸில் ஃபூரியேவாதிகள், பிரிட்டனில் ஓவன்வாதிகள்.—[1885 ஜெர்மன் பதிப்புக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் வரைந்த குறிப்பு.]

வாதிகள் மிகத் தெளிவாக நிரூபிப்பார்கள். சங்கங்களை அமைப்பதற்கும் நடத்தி வருவதற்கும் ஆகிற செலவுகளை உங்கள் கூலியுயர்வு மூலம் சரிக்கட்டிக் கொள்வதற்குக்கூட பல வருடங்கள் பிடிக்கும் என்று தேர்ச்சிபெற்ற கணக்காளர்கள் நிரூபிப்பார்கள்.

மேலும், சோஷலிஸ்டுகள் என்கிற முறையில் நாங்கள் சொல்கிறோம், பணப் பிரச்சினை ஒரு புறமிருக்க நீங்கள் முன்போலவே தொழிலாளிகளாகவே இருந்து வருவீர்கள், எஜமானர்கள் எஜமானர்களாகவே இருந்து வருவார்கள். எனவே சங்கம் கூடாது! அரசியல் கூடாது! காரணம், சங்கத்தில் சேருவது அரசியலில் இறங்குவதாகுமல்லவா?

இன்று அமைக்கப்பட்டுள்ளபடியே இருக்கும் சமுதாயத்தில், பொருளாதாரவாதிகளின் கைநூல்களில் அது எப்படி எழுதிக் கையெழுத்திட்டு முத்திரையிடப்பட்டிருக்கிறதோ அப்படியே இருக்கிற நிலையில் தொழிலாளிகள் இருந்து வர வேண்டுமென்று பொருளாதாரவாதிகள் விரும்புகிறார்கள். சோஷலிஸ்டுகளோ என்றால் அந்தச் சமுதாயத்தைத் தொழிலாளிகள் அப்படியே விட்டு வைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள், அப்படிச் செய்தால் அவர்களுக்காகத் தாங்கள் எவ்வளவோ முன்பார்வையுடன் தயாரித்திருக்கும் புதிய சமுதாயத்தில் இன்னும் நேர்த்தியாகப் புகுந்திட முடியுமாம்.

இவ்விரு சாராரையும் அவர்களுடைய கைநூல்களையும் கற்பனைத் திட்டங்களையும் மீறி சங்கங்கள் இடையறாது முன்னேறி வருகின்றன, நவீனகாலத் தொழிற்துறையின் வளர்ச்சியேற்றத்துடன் அவையும் வளர்ந்தேறி வருகின்றன. ஒரு நாட்டில் சங்க அமைப்பு வளர்ந்திருக்கும் அளவு அந்த நாடு உலகச் சந்தையின் படிநிலையிலே வகிக்கும் அந்தஸ்தைக் குறித்துக் காட்டும்படியான கட்டத்தை எட்டியிருக்கிறது. மிக உயர்வான தொழில் துறை வளர்ச்சி பெற்றுள்ள இங்கிலாந்திலே மிகப் பெரிய, மிகச் சிறந்த அமைப்புடைய சங்கங்கள் உள்ளன.

எப்பொழுதாவது வந்துபோகக் கூடிய ஒரு வேலைநிறுத்தத்தையே குறிக்கோளாகக் கொண்டு அது முடிந்ததும் தானும் மறைந்து போகிற அரைகுறையான சங்கங்களுடன் இங்கிலாந்தில் அவர்கள் நின்றுவிடவில்லை. தொழிற்சங்கங்

கள் எனப்படும் நிரந்தரமான சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, அவை தொழிலாளிகளுக்கு முதலாளிகளோடு நடத்தும் போராட்டங்களில் அரண்களாகப் பயன்படுகின்றன. தற்சமயம் இந்த உள்ளூர் தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டத் தொழில்களின் தேசியச் சங்கத்தைத்[57] தமது அணிதிரட்டும் மையமாகக் கொண்டுள்ளன, இதன் மத்தியக் குழு லண்டனில் இருக்கிறது, இதில் ஏற்கெனவே 80,000 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த வேலைநிறுத்தங்களையும் சங்கங்களையும் தொழிற்சங்கங்களையும் ஒழுங்கமைப்பதோடு கூடவே தொழிலாளிகளின் அரசியல் போராட்டங்களும் நடந்து வந்தன, அவர்கள் **சார்ட்டிஸ்டுகள்** என்கிற பெயரில் ஒரு பெரிய அரசியல் கட்சியாக அமைந்துள்ளனர்.

தொழிலாளர்கள் தங்களை **ஒன்றுபடுத்துவதற்காக** எடுக்கும் முதன்முதலான முயற்சிகள் எப்போதும் சங்கங்கள் வடிவத்தில் நடக்கின்றன.

ஒருவரையொருவர் முன்பின்னறியாதவர்களான திரளான மக்களைப் பெருமளவான தொழில் துறை ஒரே இடத்தில் சேர்த்துக் குவிக்கிறது. போட்டி அவர்களின் நலன்களைப் பிரிக்கிறது. எனினும் தமது எஜமானனுக்கு எதிராக அவர்களுக்குப் பொதுவான நலனாக விளங்கும் கூலியைப் பாதுகாத்துக் கொள்வது அவர்களைச் **சங்கம்** எனும் ஒரு பொதுவான எதிர்ப்புச் சிந்தனையிலே ஒன்றுபடுத்துகிறது. ஆக, சங்கத்துக்கு எப்போதும் ஓர் இரட்டை நோக்கு உண்டு—தொழிலாளர்களிடையேயுள்ள போட்டியை நிறுத்துவது, அதன் வழியே அவர்கள் முதலாளியை எதிர்த்துப் பொதுவான போட்டியை நடத்திச் செல்லச் செய்வது, என்று. கூலியைப் பாதுகாப்பது மட்டுமே எதிர்ப்பின் முதல் நோக்காக இருந்தது என்றால், அடக்கியொடுக்கும் நோக்குடன் முதலாளிகள் தம் முறைக்கு ஒன்றுபடுகிற பொழுது, முதலில் தனித்தனியே இருந்த சங்கங்கள் குழுக்களாக அமைத்துக் கொள்கின்றன, மேலும் கூலியைப் பாதுகாப்பதைக் காட்டிலும் எப்போதும் ஒன்றுபட்டிருக்கும் மூலதனத்தை எதிர்ப்பதில் சங்கத்தைப் பாதுகாப்பது அவர்களுக்கு அதிக அவசியமாகிவிடுகிறது. கூலிக்காக மட்டுமே இந்தச் சங்கங்கள் நிறுவப்பட்டதாகக் கருதிக் கொள்ளும் ஆங்கிலேயப் பொருளாதாரவாதிகள் தொழிலாளிகள் தமது சங்கத்துக்காகக்

கூலியில் கணிசமான பகுதியைத் தியாகம் செய்கிறதைப் பார்த்துத் திகைத்துவிடும் அளவுக்கு இது ஒரு உண்மை யாகும். இந்தப் போராட்டத்தில்—இது உண்மையிலே ஒரு உள்நாட்டுப் போர் ஆகும் — வரவிருக்கும் சண்டைக்காக எல்லாக் கூறுகளும் ஒன்றுபட்டு வளர்கின்றன. இந்த முனையை எட்டியவுடன் சங்கம் ஒரு அரசியல் தன்மையைப் பெறுகிறது.

பொருளாதார நிலைமைகள் முதன்முதலில் நாட்டின் திரளான மக்களைத் தொழிலாளிகளாக மாற்றிவிட்டது. மூல தனத்தின் ஆதிக்கம் இந்த மக்கள் திரளுக்கு ஒரு பொதுவான நிலைமையை, பொதுவான நலனை உண்டாக்கிவிடுகிறது. எனவே இந்த மக்கள்திரள் ஏற்கெனவே மூலதனத்துக்கு எதி ரான வர்க்கமாயுள்ளது என்றாலும் தனக்காக நிற்கும் வர்க்க மாக இன்னும் ஆகவில்லை. இந்தப் போராட்டத்தில்—அதன் சில கட்டங்களை மட்டும் நாம் குறிப்பிட்டிருக்கிறோம்—இந்த மக்கள் திரள் ஒன்றுபடுகிறது, தனக்காக நிற்கும் வர்க்கமாக உருவமைத்துக் கொள்கிறது. அது காத்து நிற்கும் நலன்கள் வர்க்க நலன்களாகிவிடுகின்றன. ஆனால் வர்க்கத்துக்கு எதிராக வர்க்கம் நடத்தும் போராட்டம் ஒரு அரசியல் போராட்டமாகும்.

முதலாளி வர்க்கத்தின் வரலாற்றிலே இரண்டு கட்டங் களை நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்: ஒன்று, நிலப் பிரபுத்துவ முறையின் கீழ் வரம்பில்லா முடியாட்சி முறை யின் கீழ் அது தன்னை ஒரு வர்க்கமாக அமைத்துக் கொண்ட கட்டம்; இரண்டாவது, அது ஏற்கெனவே ஒரு வர்க்கமாக அமைந்துவிட்ட நிலையிலே சமுதாயத்தை முதலாளித்துவச் சமுதாயமாகச் செய்வதற்காக நிலப்பிரபுத்துவ முறையை யும் முடியாட்சி முறையையும் தூக்கியெறிந்துவிட்ட கட்டம். இவற்றில் முதல் கட்டம் இரண்டாவதைக் காட்டிலும் நீண்ட காலமிருந்தது, முயற்சிகளும் அதிகமாகத் தேவைப்பட்டது. முதலாளி வர்க்கமும் நிலப்பிரபுத்துவச் சீமான்களை எதிர்ப் பதற்கான அரைகுறையான சங்கங்கள் வழியே தொடங் கியது.

சுய ஆட்சி நகரச் சமுதாயங்களிலிருந்து தொடங்கித் தன்னை ஒரு வர்க்கமாக உருவமைத்துக் கொண்டது வரை முதலாளி வர்க்கம் கடந்து வந்துள்ள வெவ்வேறு வரலாற்றுக்

கட்டங்களை அடையாளங் கண்டு கொள்வதற்கு நிறைய ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது.

ஆனல் நம் கண்ணெதிரே தொழிலாளி வர்க்கம் தன்னை ஒரு வர்க்கமாக ஒன்றுபடுத்தி அமைத்துக் கொண்டு வருகிற அமைப்புக்குரிய வேலைநிறுத்தங்களையும் சங்கங்களையும் பிற வடிவங்களையும் குறித்துச் சரிநுட்பமான ஆய்வுப் பயிற்சி நடத்தும் பிரச்சினை என்றவுடனே சிலருக்கு உண்மையான அச்சம் மேலிடுகிறது, சிலர் அதீதமான இளக்காரம் காட்டுகின்றனர்.

வர்க்கங்களின் பகைமை மீது நிறுவப்பட்ட ஒவ்வொரு சமுதாயத்துக்கும் ஒரு ஒடுக்கப்பட்ட வர்க்கம் இருப்பது உயிர்நிலையான நிபந்தனையாகும். எனவே ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் விடுதலை என்பது அவசியகரமான முறையிலே ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பதை உட்கிடையாகக் கொண்டுள்ளது. ஒடுக்கப்பட்ட வர்க்கம் தன்னைத் தானே விடுதலை செய்துகொள்வதற்கு அவசியத் தேவை, ஏற்கெனவே பெறப்பட்டிருக்கும் உற்பத்திச் சக்திகளும் இருந்து வரும் சமுதாய உறவுகளும் மேலும் அக்கம் பக்கமாக இருந்துவர முடியாதவையாக ஆகவேண்டும். உற்பத்திக் கருவிகளனைத்திலுமே ஆகமிகப் பெரிதான உற்பத்திச் சக்தி புரட்சிகரமான தொழிலாளி வர்க்கமேயாகும். வர்க்கம் என்கிற வகையில் புரட்சிகரமான நபர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தியமைப்பது பழைய சமுதாயத்தினுள்ளே உண்டுபண்ண முடிகிற உற்பத்திச் சக்திகள் அனைத்தும் இருப்பதை அனுமானிக்கிறது.

இதற்குப் பொருள் பழைய சமுதாயத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு ஒரு புதிய வர்க்கத்தின் ஆதிக்கம் ஏற்பட்டு அது ஒரு புதிய அரசியல் அதிகாரத்திலே போய் முடியும் என்பதா? இல்லை.

எல்லாப் படிப்பிரிவுகளையும்* சிறப்புரிமைக் குழுக்களையும்

---

* —படிப்பிரிவுகள் என்பது இங்கே, வரலாற்றுப் பொருளில், நிலப்பிரபுத்துவ முறையைச் சேர்ந்த படிப்பிரிவுகளை, திட்டவட்டமான வரம்புக்குட்பட்ட சிறப்புரிமைகள் கொண்டிருந்த படிப்பிரிவுகளைக் குறிக்கிறது. முதலாளித்துவப் புரட்சி படிப்பிரிவுகளையும் அவற்றின் சிறப்புரிமைகளையும் ஒழித்துவிட்டது. முதலாளித்துவச் சமுதாயத்தில் **வர்க்கங்கள்**

ஒழித்துவிடுவது மூன்றுவது படிப்பிரிவின், முதலாளி வர்க்கத்தின் விடுதலைக்கு நிபந்தனையாக இருந்தது போலவே, எல்லா வர்க்கங்களையும் ஒழித்துவிடுவது தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கு நிபந்தனையாகும்.

தொழிலாளி வர்க்கம் தனது வளர்ச்சிப் போக்கிலே முதலாளித்துவச் சமுதாயத்துக்குப் பதிலாக எல்லா வர்க்கங்களையும் அவற்றின் பகைமையையும் விலக்கிவிடும் ஒரு சங்கத்தை அமைக்கும், முறையாகச் சொல்லக் கூடிய அரசியல் அதிகாரம் இனிமுதல் இராது, ஏனெனில் அரசியல் அதிகாரம் என்பது முதலாளித்துவச் சமுதாயத்திலுள்ள பகைமையின் அதிகாரபூர்வமான வெளிப்பாடாகும்.

இதற்கிடையே தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயுள்ள பகைமை வர்க்கத்துக்கு எதிராக வர்க்கம் நடத்தும் ஒரு போராட்டமாகும், அதன் உச்சநிலை வெளிப்பாடு ஒரு முழுமையான புரட்சியே. உண்மையிலே பார்த்தால், வர்க்கங்களின் எதிர்ப்பின் மீது நிறுவப்பட்ட ஒரு சமுதாயம் அதன் இறுதி விளைவாக மூர்க்கத்தனமான முரண்பாட்டிலே, உடலோடு உடல் மோதிக் கொள்ளும் அதிர்ச்சியிலே, போய் முடிவதில் வியப்புண்டா?

சமுதாய இயக்கம் அரசியல் இயக்கத்தை விலக்கி வைக்கிறது என்று சொல்லாதீர்கள். ஒரு அரசியல் இயக்கம் அதே நேரத்தில் சமுதாய இயக்கமாக அல்லாமல் என்றைக்கும் இருந்ததில்லை.

வர்க்கங்களும் வர்க்கப் பகைமைகளும் மேற்கொண்டு இல்லாதிருக்கும் ஒரு அமைப்பு முறையிலேதான் சமுதாயப் பரிணுமங்கள் அரசியல் புரட்சிகளாக இருப்பது நின்றுவிடும். அதுவரை, சமுதாயத்தின் ஒவ்வொரு பொதுவான மாற்றத்தின் தருவாயிலும் சமுதாய விஞ்ஞானத்தின் இறுதி மொழி இவ்வாறுதான் எப்போதும் இருந்து வரும்:

''சண்டை அல்லது சாவு; இரத்தஞ் சிந்தும் போராட்டம் அல்லது அழிவு. பிரச்சினை இப்படித்தான் ஈவிரக்கமின்றி போடப்படுகிறது.'' (மூார்ழ் ஸாந்த்)[58]

மட்டுமே உண்டு. எனவே, தொழிலாளி வர்க்கத்தை ''நான்காம் படிப்பிரிவு'' என்று வர்ணிப்பது வரலாற்றுக்கு முற்றிலும் முரணுனதாகும்.—[1885 ஜெர்மன் பதிப்புக்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் வரைந்த குறிப்பு.]

பிற்சேர்க்கைகள்

மார்க்ஸ் பா. வ. ஆன்னென்கவுக்கு எழுதிய கடிதம்

புருஸெல்ஸ், டிஸம்பர் 28 [1846]

அன்பார்ந்த திரு. ஆன்னென்கவ் அவர்களுக்கு,

உங்கள் நவம்பர் 1ம் தேதிய கடிதத்துக்கு எனது பதில் வெகு நாளைக்கு முன்பே நீங்கள் பெற்றிருக்க வேண்டியது, ஆனால் திரு. புரூதோனின் **வறுமையின் மெய்யறிவு** எனும் நூலை எனது புத்தகக் கடைக்காரர் சென்ற வாரந் தான் எனக்கு அனுப்பி வைத்தார். அதைப் பற்றிய எனது கருத்தைத் தங்களுக்கு உடனே தெரிவிப்பதற்காக இரண்டே நாளில் படித்து முடித்தேன். அந்நூலை மிக அவசரமாகப் படித்துள்ளதால் விபரங்களில் நான் இறங்க முடியாது, அதைப்பற்றி எனக்கு ஏற்பட்ட பொதுவான கருத்தை மட்டுந் தான் நான் சொல்ல முடியும். நீங்கள் விரும்பினால் இரண்டாவது கடிதத்தில் நான் விபரங்களில் இறங்க முடியும்.

மொத்தத்தில் அந்நூல் மோசமானது, மிக மோசமானது என்று நான் மனந்திறந்து சொல்லித் தீர வேண்டும். இந்த வடிவ ஒழுங்கில்லாத படாடோபமான நூலில் திரு. புருதோன் விளம்பரப்படுத்திக் கொள்கிற "ஜெர்மன் மெய்யறிவு பாற்பட்ட ஒட்டுத்தையலைப்" பற்றி நீங்களே உங்கள் கடிதத்தில் நகைக்கிறீர்கள்,[59] ஆனால் பொருளாதார ஆய்வு மெய்யறிவின் விஷத்தால் கெட்டுவிடவில்லை என்று கருதுகிறீர்கள். பொருளாதாரவாதத்திலுள்ள பிழைகளைத் திரு. புரூதோனின் மெய்யறிவுக்குக் கற்பிக்க நானும் முன்வரவில்லை. திரு. புரூதோன் ஒரு அபத்தமான மெய்யறிவுத் தத்துவத்தைக் கொண்டிருப்பது அவர் நமக்கு அரசியல் பொருளாதாரம் பற்றிய பொய்யான விமர்சனம் கொடுப்பதற்குக் காரணமல்ல, அவர் நமக்கு ஓர் அபத்தமான மெய்

யறிவுத் தத்துவம் கொடுப்பதற்குக் காரணம் இன்றையச் சமுதாய அமைப்பு முறையை அதன் engrènementஇலே [சங்கிலித் தொடரான இயக்கத்திலே]—ஃபூரியேயிடமிருந்து திரு. புரூதோன் எவ்வளவோ இரவல் வாங்கியதிலிருந்து இவ்வார்த்தையை எடுத்துப் பயன்படுத்துகிறேன்—அவர் புரிந்து கொள்ளத் தவறுகிறுர்.

இறைவனைப் பற்றியும், உலகளாவிய பகுத்தறிவு பற்றியும், மனிதகுலத்தின் நபர்சார்பற்ற, பிழையறியாத பகுத்தறிவு பற்றியும், அது எப்போதும் எல்லாச் சகாப்தங்களிலும் தனக்குத் தானே நிகராக இருக்கிறதாகவும் உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு ஒருவனுக்கு அதைப் பற்றிச் சரியான உணர்வு மட்டும் இருந்தால் போதுமென்றும் திரு. புரூதோன் ஏன் பேசுகிறுர்? ஓர் ஆழ்ந்த சிந்தனையாளராகக் காட்டிக் கொள்வதற்காக அவர் ஏன் ஆழமற்ற ஹெகல் வாதத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும்?

இந்தப் புதிருக்கு அவரே தடயம் அளிக்கிறுர். திரு. புரூதோன் வரலாற்றிலே ஒரு சமுதாய நிகழ்ச்சி வளர்ச்சிகளின் வரிசைத் தொடரைக் காண்கிறுர்; வரலாற்றிலே முன்னேற்றம் நடைமுறையாகியுள்ளதைக் காண்கிறுர்; கடைசியாக, தனிநபர்கள் என்கிற முறையில் மனிதர்கள் தாங்கள் என்ன செய்கிறுர்கள் என்பதையே அறியாதவர்களாகவும் தமது சொந்த இயக்கத்தையே தவருகப் புரிந்து கொண்டிருப்பவர்களாகவும் காண்கிறுர்—அதாவது, முதல்நோட்டத்திலே தெரிகிறபடி, அவர்களின் சமுதாய வளர்ச்சியானது அவர்களின் தனித்தனி வளர்ச்சியிலிருந்து வேறுபட்டும், பிரிந்தும் சுயேச்சையோடும் இருப்பதாகத் தோன்றுகிறது. இந்த விஷயங்களை அவரால் விளக்க முடியவில்லை, எனவே உலகளாவிய பகுத்தறிவு தன்னைத் தானே நிதர்சனப்படுத்திக் கொள்கிறதாக ஒரு ஊகப் பிரமாணத்தை வெறுமே புனைந்து விடுகிறுர். மாயமான காரணங்களை, அதாவது பொது அறிவு போதாச் சொற்றொடர்களைப் புனைவது போன்ற சுளுவான வேலை வேறொன்றில்லை.

ஆனுல், திரு. புரூதோன் மனிதகுலத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி பற்றித் தமக்கு ஒன்றும் புரியவில்லை என்று ஒப்புக் கொள்கிற போது—உலகளாவிய பகுத்தறிவு, இறைவன் என்றெல்லாம் படாடோபமான சொற்களைப் பயன்

படுத்தி இதை அவர் ஒப்புக் கொள்கிறார்—பொருளாதார வளர்ச்சியைப் புரிந்து கொள்ளத் தமக்குத் திராணி இல்லை என்று அவர் உட்கிடையாகவும் அவசியகரமாகவும் ஒப்புக் கொள்ளவில்லையா?

என்ன வடிவத்திலிருந்தாலும் சரியே, சமுதாயம் என்பது என்ன? மக்களின் பரஸ்பரச் செய்கையின் விளைபொருள். மனிதர்கள் தாங்களாகவே ஏதாவதொரு சமுதாயத்தைத் தேர்ந்து கொள்ளச் சுதந்தரம் பெற்றிருக்கிறார்களா? நிச்சயமாக இல்லை. மனிதர்களின் உற்பத்திச் சக்திகளில் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அனுமானித்துக் கொள்ளுங்கள், வர்த்தகம் நுகர்வு பற்றிய ஒரு குறிப்பிட்ட வடிவம் உங்களுக்குக் கிடைக்கும். உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் நுகர்விலும் குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டங்களை அனுமானித்துக் கொள்ளுங்கள், அவற்றிற்குப் பொருத்தமான ஒரு சமுதாய அமைப்பு முறையும் ஒரு பொருத்தமான குடும்ப அமைப்பும் படிப்பிரிவுகளின் அல்லது வர்க்கங்களின் அமைப்பும்—சுருங்கச் சொன்னால், ஒரு பொருத்தமான குடியுரிமைச் சமுதாயம்—உங்களுக்குக் கிடைக்கும். ஒரு குறிப்பிட்ட குடியுரிமைச் சமுதாயத்தை அனுமானித்துக் கொள்ளுங்கள், அந்தக் குடியுரிமைச் சமுதாயத்தின் வெறும் அதிகாரபூர்வமான வெளிப்பாடாக இருக்கிற குறிப்பிட்ட அரசியல் அமைப்பு உங்களுக்குக் கிடைக்கும். இதைத் திரு. புரூதோன் என்றைக்கும் புரிந்து கொள்ள மாட்டார், ஏனெனில் அரசு எனும் நிலையில் நின்றுகொண்டு சமுதாயத்துக்கு—அதாவது, சமுதாயத்தைப் பற்றிய அதிகாரபூர்வமான பொழிப்பின் நிலையில் நின்றுகொண்டு அதிகாரபூர்வமான சமுதாயத்துக்கு—வேண்டுகோள் விடுப்பதில் தாம் பெரிதாக ஏதோ செய்வதாக அவர் நினைத்துக் கொள்கிறார்.

தமது வரலாற்றுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கும் பொருளாதாரச் சக்திகளைத் தேர்ந்து கொள்ள மனிதர்கள் சுதந்தரமுள்ளவர்களாயில்லை என்று மேற்கொண்டு சொல்லத் தேவையில்லை, ஏனெனில் ஒவ்வொரு உற்பத்திச் சக்தியும் பெறப்பட்ட சக்தியாகும், முந்தைய நடவடிக்கையின் விளைபொருளேயாகும். எனவே உற்பத்திச் சக்திகள் மனிதர்களின் நடைமுறை ஆற்றலின் விளைவாகும்; ஆனால் இந்த ஆற்றலுங்கூட மனிதர்கள் இருக்கக் காண்கிற சூழ்நிலைமை

களாலும் ஏற்கெனவே பெறப்பட்டுள்ள உற்பத்திச் சக்திக ளாலும் அவர்களுக்கு முன்பே—அவர்களால் படைக்கப்படா மல் முந்தைய தலைமுறையினரால் விளைவிக்கப்பட்டு—இருந்து வரும் சமுதாய வடிவத்தாலும் நிர்ணயிக்கபட்டுள்ளது. பின் னிட்டு வரும் ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறை யால் பெறப்பட்ட உற்பத்திச் சக்திகளைக் கைவரப் பெறு கிறது, அது புதிய உற்பத்திக்குரிய மூலப்பொருளாக அதற்குப் பயன்படுகிறது, இந்த எளிய உண்மையின் காரணமாக மனித வரலாற்றிலே ஒரு கூட்டுப்பொருத்தம் உண்டாகிறது, மனிதகுலத்தின் வரலாறு உருப்பெறுகிறது, மனிதனின் உற் பத்திச் சக்திகளும் எனவே அவனுடைய சமுதாய உறவுகளும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வளர்க்கப் பெற்றுள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு வரலாறுனது மனிதகுல வரலாறுக அமைகிறது. எனவே, மனிதர்களின் சமுதாய வரலாறு எனப் பட்டது எப்போதும் அவர்களின் தனிநபர் வளர்ச்சியின்—அதை அவர்கள் உணர்ந்திருந்தாலும் இராவிட்டாலும் சரி—வரலாறு தவிர வேறில்லை. அவர்களின் பொருளாயத உறவுகளே அவர்களின் உறவுகளனைத்துக்கும் அடிப்படை. இந்தப் பொருளாயத உறவுகள் அவசியகரமான வடிவங்கள் மட்டுமே, அவற்றில் அவர்களுடைய பொருளாயத மற்றும் தனிநபர் வகைப்பட்ட செயல்கள் நடக்கின்றன.

திரு. புரூதோன் கருத்துக்களையும் பொருட்களையும் கலந்து குழப்புகிருர். மனிதர்கள் தாங்கள் வென்று கொண்டதை என்றைக்கும் விட்டுக் கொடுப்பதில்லை, ஆனுல் இதற்குப் பொருள் அவர்கள் எந்தச் சமுதாய வடிவத்தில் சில உற்பத்திச் சக்திகளைப் பெற்ருர்களோ அந்தச் சமுதாய வடிவத்தை என்றைக்கும் விட்டுக் கொடுப்பதில்லை என்பதல்ல. அதற்கு மாருக, சாதித்த விளைவு பறிபோகாமலிருப்பதற்காகவும் நாகரிகத்தின் பலன்களை இழக்காமலிருப்பதற்காகவும் அவர் களின் "coinmerce"க்குரிய வடிவமானது [விவகார உறவு கள்] பெறப்பட்டுள்ள உற்பத்திச் சக்திகளோடு மேற்கொண்டு பொருந்தி வராமற்போகிற தருணத்திலிருந்து அவர்கள் தங்களுடைய மரபுவழிச் சமுதாய வடிவங்களை மாற்றித் தீர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இங்கே "commerce" என்கிற சொல்லை அதன் மிக விரிவான பொருளிலே—ஜெர் மன் மொழியிலே நாம் Verkehr எனும் சொல்லைப் பயன்படுத்து

வது போல—நான் பயன்படுத்துகிறேன். எடுத்துக்காட்டாக: சிறப்புரிமைகள், கில்டுகள், கார்ப்பரேஷன்கள் ஆகியவற்றின் அமைப்பு, மத்தியகால ஒழுங்குமுறைப்படுத்தும் ஆட்சிமுறை ஆகியவை சமுதாய உறவுகள், அவை மட்டுமே பெறப்பட்டிருந்த உற்பத்திச் சக்திகளுக்கும் முன்பிருந்து வந்த—இந்த அமைப்புகள் எழுவதற்குக் களமாயிருந்த—சமுதாய நிலைமைகளுக்கும் பொருத்தமாக இருந்தன. கார்ப்பரேஷன்கள், ஒழுங்குமுறைகள் ஆகியவற்றின் பாதுகாப்பின்கீழ் மூலதனம் திரட்டப்பட்டது, கடல்கடந்த வாணிபம் வளர்க்கப்பட்டது, காலனிகள் நிறுவப்பட்டன. எந்த வடிவங்களின் பாதுகாப்பின்கீழ் இந்தப் பலன்கள் பழுத்தனவோ அந்த வடிவங்களை நீடித்து வைத்திருக்க முயன்றிருந்தால் மனிதர்கள் அதன் பலன்களை இழந்திருப்பார்கள். எனவே, 1640லும் 1688லும் ஏற்பட்ட புரட்சிகள் எனும் இடிமுழக்கங்கள் வெடித்தன. எல்லாப் பழைய பொருளாதார வடிவங்களும், அவற்றிற்குப் பொருத்தமான சமுதாய உறவுகளும், பழைய குடியுரிமைச் சமுதாயத்தின் அதிகாரப் பற்றுள்ள வெளிப்பாடாகிய அரசியல் அமைப்பும், இங்கிலாந்திலே ஒழிக்கப்பட்டன. எனவே, எந்தப் பொருளாதார வடிவங்களில் மனிதர்கள் உற்பத்தி செய்தும், நுகர்ந்தும், பரிமாற்றம் செய்தும் வருகிறார்களோ அந்தப் பொருளாதார வடிவங்கள் **தற்காலிகமானவை, வரலாற்றுரீதியானவை.** புதிய உற்பத்திச் சக்திகள் கைவரப் பெற்றதும் மனிதர்கள் தமது உற்பத்தி முறையை மாற்றிக் கொள்கிறார்கள், மற்றும் உற்பத்தி முறையுடன் அந்தக் குறிப்பிட்ட உற்பத்தி முறைக்கு அவசியகரமான உறவுகளாக மட்டுமே இருக்கிற எல்லாப் பொருளாதார உறவுகளையும் மாற்றிக் கொள்கிறார்கள்.

இதைத்தான் திரு. புரூதோன் புரிந்து கொள்ளவில்லை. மெய்ப்படுத்திக் காட்டுவதும் இல்லை. வரலாற்றின் உண்மையான இயக்கத்தைப் புரிந்து கொள்ளச் சக்தியற்ற திரு. புரூதோன் ஒரு மாய உருக்காட்சியை உண்டாக்குகிறார், அது இயக்கவியல் வகைப்பட்டது என்றும் தன்மூப்பாகச் சொல்லிக் கொள்கிறது. பதினேழாவது, பதினெட்டாவது அல்லது பத்தொன்பதாவது நூற்றாண்டு பற்றிப் பேச வேண்டியது அவசியம் என்று அவர் உணரவில்லை, ஏனெனில் அவருடைய வரலாறு கற்பனையின் பனிமூட்ட மண்டலத்தில் உதித்துக்

காலத்தையும் வெளியையும் கடந்து எழுகிறது. சுருங்கச் சொன்னால், அது வரலாறு அல்ல, பழைய ஹெகல்வாதக் குப்பை; அது மனிதச்சார்பான வரலாறு—மனிதனைப் பற்றிய வரலாறு—அல்ல, தெய்வப் புனிதமான வரலாறு—அதாவது கருத்துக்களின் வரலாறு—ஆகும். அவரது பார்வை நிலையிலே, கருத்து அல்லது நிரந்தரப் பகுத்தறிவு தன்னை வெளிப்படுத்திக் கொள்ளப் பயன்படுத்துகிற கருவியே மனிதன், வேறொன்றுமில்லை. திரு. புரூதோன் சொல்கிற **பரிணாமங்கள்** பரமநிலைக் கருத்தின் மாயக் கருக் குழியிலே நிகழும் பரிணாமங்கள்தான் ஆகும். இந்த மாயச் சொற்கட்டின் முகத்திரையைக் கிழித்தெறிந்துவிட்டால் மிஞ்சிக் கிடைப்பது திரு. புரூதோன் தமது மூளைக்குள்ளே பொருளாதார வகையினங்கள் எந்த ஒழுங்கிலே தம்மைச் சரிசெய்து நிறுத்திக் கொள்கின்றனவோ அந்த ஒழுங்கை அவர் கொடுப்பதுதான். அது மிகவும் ஒழுங்கு குலைந்த மனத்திலே பிறந்த ஒழுங்கு என்று உங்களுக்கு நிரூபிப்பதில் எனக்குப் பெரிய முயற்சியொன்றும் தேவைப்படாது.

மதிப்பு எனும் விஷயம் திரு. புரூதோனின் செல்லக் குஞ்சு, அதைப் பற்றிய ஆய்வுவிளக்கத்திலிருந்து தமது நூலைத் தொடங்குகிறார். இன்று இந்த ஆய்வுவிளக்கத்தைப் பரிசீலிப்பதிலே நான் இறங்கப் போவதில்லை.

நிரந்தரப் பகுத்தறிவின் பொருளாதாரப் பரிணாமங்களின் வரிசைத்தொடர் **உழைப்புப் பிரிவினையிலிருந்து** தொடங்குகிறது. திரு. புரூதோனுக்கு உழைப்புப் பிரிவினை ஒரு மிகச் சாதாரணமான விஷயம். எனினும் சாதி அமைப்பு முறையுங்கூட ஒரு குறிப்பிட்ட உழைப்புப் பிரிவினை அல்லவா? கைவினைச் சங்க அமைப்பு முறையும் மற்றொரு உழைப்புப் பிரிவினை தானே? இங்கிலாந்திலே பதினேழாம் நூற்றாண்டின் மத்தியிலே தொடங்கி பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலே முடிந்த பட்டறைத் தொழில் அமைப்பு முறையின் கீழிருந்த உழைப்புப் பிரிவினையும் பெருமளவான நவீன காலத் தொழில்துறையின் உழைப்புப் பிரிவினையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதல்லவா?

சாதாரணப் பொருளாதாரவாதிகளுங்கூட எடுத்துக் கவனிக்கிறதைப் புறக்கணிக்கும் அளவுக்கு திரு. புரூதோன்

உண்மையிலிருந்து விலகி நிற்கிறார். அவர் உழைப்புப் பிரிவினையைப் பற்றிப் பேசும் போது உலகச் சந்தையைப் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியம் என்று உணரவில்லை. ஆனால், இன்னமும் காலனிகள் தோன்றியிராத, ஐரோப்பா பொருத்தமட்டில் இன்னும் அமெரிக்கா ஒன்று இராதிருந்த, கான்ஸ்டான்டிநோபளின் இடையீடு மூலமாக மட்டுமே ஐரோப்பா கிழக்காசியாவை அறிந்திருந்த பதினான்காவது, பதினைந்து நூற்றாண்டுகளின் உழைப்புப்பிரிவினை எனப்பட்டது ஏற்கெனவே காலனிகள் வளர்ந்துவிட்டிருந்த பதினேழாவது நூற்றாண்டின் உழைப்புப் பிரிவினையிலிருந்து அடிப்படையாகவே வேறுபட்டிருக்க வேண்டுமல்லவா?

அத்துடன் முடியவில்லை. நாடுகளின் உள் அமைப்பு முழுவதும், அவற்றின் சர்வதேச உறவுகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட உழைப்புப் பிரிவினையின் வெளிப்பாடு தவிர வேறு என்ன? உழைப்புப் பிரிவினை மாறுகிற பொழுது இவையும் மாறித் தீர வேண்டுமல்லவா?

திரு. புரூதோன் உழைப்புப் பிரிவினைப் பிரச்சினையைப் புரிந்து கொள்ளாதபடியால் நாட்டுப்புறமும் நகரப்புறமும் பிரிந்ததைப் பற்றி அவர் குறிப்பிடுவதுகூட இல்லை. எடுத்துக் காட்டாக, இந்தப் பிரிவினை ஜெர்மனியில் ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை நிகழ்ந்தது. எனவே திரு. புரூதோனுக்கு இந்தப் பிரிவினை ஒரு நிரந்தர விதி, ஏனெனில் அதன் தோற்றமோ வளர்ச்சியோ அவருக்குத் தெரியாது. இந்த ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையின் படைப்பு நிரந்தரமாக நிலைத்திருக்கும் என்கிற முறையிலே தமது நூல் நெடுகிலும் அவர் பேசுகிறார். உழைப்புப் பிரிவினை பற்றி திரு. புரூதோன் சொல்வதெல்லாம் அவருக்கு முன்பே ஆதாம் ஸ்மித்தும் மற்றும் ஓராயிரம் பேர்களும் சொன்னதின் ஒரு சுருக்கமே—மிக மேம்போக்கான முழுமையற்ற சுருக்கமே—ஆகும்.

இயந்திரவகை என்பது இரண்டாவது பரிணாமம். உழைப்புப் பிரிவினைக்கும் இயந்திரவகைக்கும் உள்ள தொடர்பு திரு. புரூதோனுக்கு முற்றிலும் மாயமாகப் படுகிறது. ஒவ்வொரு வகைப்பட்ட உழைப்புப் பிரிவினையும் குறிப்பிட்ட உற்பத்திக் கருவிகளைப் பெற்றிருந்தது. எடுத்துக்காட்டாக, பதினேழாம் நூற்றாண்டின் நடுவுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டின்

நடுவுக்கும் இடைப்பட்ட காலத்தில் மக்கள் ஒவ்வொன்றையும் கையால் செய்யவில்லை. இயந்திரங்கள் இருந்தன, நெசவு இயந்திரங்கள், கப்பல்கள், நெம்புக்கருவிகள் முதலான நுட்பச் சிக்கலான இயந்திரங்களும் இருந்தன.

எனவே, பொதுப்படையான உழைப்புப் பிரிவினை யிலிருந்து இயந்திரவகையைப் பெறுவதைவிட அபத்தமான விஷயம் வேறொன்றுமில்லை.

மேலும், திரு. புரூதோன் இயந்திரவகையின் தோற்றத் தைப் புரிந்து கொள்ளாதது போலவே அதன் வளர்ச்சியைப் புரிந்து கொண்டிருப்பது அதைவிடக் குறைவு என்று, போகிற போக்கிலே, சொல்லி வைக்கலாம். **1825**ம் ஆண்டு வரை — முதலாவது பொது நெருக்கடிக் காலம் வரை— உற்பத்தியைவிடப் பொதுவாகவே நுகர்வு சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் விரைவாக அதிகரித்தன, இயந்திர வகையின் வளர்ச்சி சந்தையின் தேவைகளிலிருந்து அவசியகரமாக விளைந்த ஒரு விளைவேயாகும். **1825**லிருந்து, இயந்திரங்களின் புனைவும் சரி செயல்பாடும் சரி வெறுமே தொழிலாளிகள் முதலாளிகள் இடையேயுள்ள போரின் விளைவாகவே இருந்தது. எனினும் இது இங்கிலாந்து விஷயத்தில் மட்டுமே உண்மை. ஐரோப்பிய நாடுகள் பொறுத்தவரை, உள்நாட்டுச் சந்தைகளிலும் உலகச் சந்தையிலும் ஒருங்கே ஆங்கிலேயப் போட்டி இருந்ததால் அவையும் இயந்திரவகையை எடுத்துப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இறுதியாக, வட அமெரிக்காவிலே இயந்திரவகை புகுத்தப் பட்டதற்குக் காரணம் மற்ற நாடுகளோடுள்ள போட்டி மட்டுமல்லாமல் ஆள்பலம் இல்லாமையுமாகும்—அதாவது, வட அமெரிக்காவின் மக்கட்தொகைக்கும் அதன் தொழில் தேவைகளுக்கும் இடையே தகவுப் பொருத்தமின்மை இருந்ததுமாகும். இந்த உண்மைகளிலிருந்து நீங்கள் கண்டு கொள்ள முடியும், திரு. புரூதோன் மூன்ருவது பரிணமமாக, இயந்திரவகையின் எதிருரையாக, போட்டி எனும் பூதத்தை மந்திரித்து எழுப்பிவிடுவதில் என்ன அறிவு விவேகம் காட்டு கிருர் என்று!

இறுதியாகவும் பொதுவாகவும் சொன்னல், உழைப்புப் பிரிவினை, போட்டி, கடன் மதிப்பு முதலியவற்றின் பக்கத்தில்

வைத்து இயந்திர வகையையும் ஒரு பொருளாதார வகையினமாக்குவது முற்றிலும் அபத்தமாகும்.

ஏர் இழுக்கும் மாடு போலவே இயந்திரவகையும் ஒரு பொருளாதார வகையினம் அல்ல. தற்காலத்தில் இயந்திர வகையைச் செயல்படுத்துவது இன்றைய நமது பொருளாதார அமைப்பு முறையின் உறவுகளில் ஒன்று, ஆனால் இயந்திர வகையைப் பயன்படுத்தும் வழிமுறையானது இயந்திரவகை யிலிருந்து முற்றிலும் தனித்ததாகும். காயப்படுத்துவதற்குப் பயன்படுத்தினாலும் சரி காயத்துக்கு மருந்திட்டுக் கட்டுப் போடுவதற்குப் பயன்படுத்தினாலும் சரி வெடிமருந்து வெடி மருந்துதான்.

போட்டி, ஏகபோகம், வரிகள் அல்லது போலீஸ், வாணிபத் துறைக் கணக்கு சமனம், கடன் மதிப்பு, சொத்து ஆகியவற்றை நான் குறிப்பிட்டுள்ள வரிசையொழுங்கிலே திரு. புரூதோன் தமது மூளைக்குள் வளர அனுமதிக்கிறதிலே தம்மையே மிஞ்சிவிட்டார். இங்கிலாந்தில், இயந்திரவகை கண்டுபிடிக்கப்படுமுன்பே, பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்க வாக்கில் அநேகமாக எல்லாக் கடன் மதிப்பு நிறுவனங் களும் வளர்க்கப்பட்டிருந்தன. வரிவிதிப்பை அதிகப்படுத்தி முதலாளி வர்க்கம் ஆட்சிக்கு வந்துள்ளதால் பிறந்த புதிய கோரிக்கைகளை நிறைவாக்குவதற்கு வாய்த்த ஒரு புதிய வழிமுறையே பொதுக் கடன்மதிப்பு என்பது.

இறுதியாக, திரு. புரூதோனின் அமைப்பு முறையில் கடைசி வகையினமாக சொத்து அமைந்துள்ளது. ஆனால், யதார்த்த உலகத்திலே, உழைப்புப் பிரிவினையும் திரு. புரூ தோனின் மற்ற எல்லா வகையினங்களும் சமுதாய உறவு களாகும், அவற்றின் முழுமொத்தந்தான் இன்று சொத்து என்று அறியப்பட்டுள்ளது: இந்த உறவுகளுக்கு அப்பாற் பட்ட நிலையில் முதலாளித்துவச் சொத்து என்பது வெறுமே ஒரு இயக்கமறுப்புவாத அல்லது சட்ட வல்லுநருக்குரிய பிரமையேயாகும். வேறான சகாப்தத்தைச் சேர்ந்த சொத் தான நிலப்பிரபுத்துவச் சொத்து முற்றிலும் வேறான சமு தாய உறவுகளின் வரிசைத்தொடரிலே வளர்கிறது. திரு. புரூ தோன் சொத்தை ஒரு சுயேச்சையான உறவாக நிலைநாட் டப் போய் ஆய்வுமுறை விஷயத்தில் தவறு செய்கிறது மட்டு மல்ல: முதலாளித்துவ உற்பத்தியின் எல்லா வடிவங்களையும்

சேர்த்துப் பிணைத்திருக்கும் முடிச்சைப் புரிந்து கொள்ள வில்லை, ஒரு குறிப்பிட்ட சகாப்தத்திலுள்ள உற்பத்தி வடிவங்களின் வரலாற்று ரீதியான, தற்காலிகமான தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை என்றும் அவர் தெளிவாகக் காட்டிக் கொள்கிறார். நமது சமுதாய நிறுவனங்களை வரலாற்று ரீதியான விளைபொருட்களாகக் கருதாமல், அவற்றின் தோற்றத்தையோ வளர்ச்சியையோ புரிந்து கொள்ளவும் முடியாமல், திரு. புரூதோன் அவற்றைப் பற்றி வறட்டுத் தத்துவ வகைப்பட்ட விமர்சனந்தான் அளிக்க முடியும்.

எனவே, வளர்ச்சியை விளக்குவதற்குத் திரு. புரூதோன் ஒரு கட்டுக்கதையில் தஞ்சம் புக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. தமது உறுதியான கற்பனைக் கருத்தான சமநிலை பற்றிய கருத்துக்கு வகை செய்வதற்காகத்தான் உழைப்புப் பிரிவினை, கடன் மதிப்பு, இயந்திரவகை முதலியவையனைத்தும் புனையப்பட்டதாகக் கருதுகிறார். அவரது விளக்கம் அளப்பரிய வெகுளித்தனமானது. இவையனைத்தும் சமநிலையின் நன்மைக்காகப் புனையப்பட்டவை, ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவை சமநிலைக்கு எதிராகத் திரும்பிவிட்டனவாம். இதுவே அவரது முழு வாதமாகும். அதாவது, அவர் ஒரு பொருத்தமற்ற அனுமானம் செய்து கொள்கிறார், அப்புறம் அசல் வளர்ச்சி ஒவ்வொரு படியிலும் அவரது கட்டுக்கதையுடன் முரண்படுகிற போது ஒரு முரண்பாடு இருக்கிறதாக முடிவுக்கு வருகிறார். தனது உறுதியான கற்பனைக் கருத்துக்கும் யதார்த்த இயக்கத்துக்கும் இடையே மட்டுமே இந்த முரண்பாடு உள்ளது என்கிற விஷயத்தை உங்களிடமிருந்து மறைக்கிறார்.

எனவே, மனிதர்கள் தமது உற்பத்திச் சக்திகளை வளர்த்து வருவதற்கேற்ப—அதாவது தாங்கள் வாழ்ந்து வருவதற்கேற்ப—அவர்கள் ஒருவரோடு ஒருவர் குறிப்பிட்ட உறவுகளை வளர்க்கிறார்கள் என்பதையும், உற்பத்திச் சக்திகளின் மாற்றத்தோடும் வளர்ச்சியோடும் கூடவே இந்த உறவுகளின் இயல்பும் மாறித் தீர வேண்டும் என்பதையும் திரு. புரூதோன் பார்க்கவில்லை, இதற்கு முக்கியமான காரணம் அவருக்கு வரலாற்றுரீதியான அறிவு கிடையாது. பொருளாதார வகையினங்கள் எனப்பட்டவை இந்த அசல் உறவுகளின் சூட்சுமச் சொல்லுருக்கள் மட்டுந்தான், இவ்வுறவுகள் இருக்கிற

வரைதான் அவை உண்மையாய் நீடிக்கின்றன என்பதை அவர் பார்க்கவில்லை. எனவே, அவர் முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் செய்கிற தவற்றில் விழுகிறார்—அவர்கள் இந்தப் பொருளாதார வகையினங்கள் நிரந்தரமானவை என்று கருதுகிறார்கள், அவற்றை வரலாற்று வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு மட்டுமே—உற்பத்திச் சக்திகளின் ஒரு திட்டவட்டமான வளர்ச்சிக் கட்டத்துக்கு மட்டுமே—விதிகளாக இருக்கிற வரலாற்றுரீதியான விதிகளாகக் கருதவில்லை. எனவே, யதார்த்தமான, தற்காலிகமான, வரலாற்று வழிப்பட்ட சமுதாய உறவுகளின் சூட்சுமச் சொல்லுருக்களாக அரசியல் பொருளாதார வகையினங்களைக் கருதுவதற்கு மாறாக, திரு. புரூதோன் ஒரு மாயமான தலைகீழ் வித்தையின் மூலமாக இந்த யதார்த்தமான உறவுகளிலே இந்தச் சூட்சுமக் கருத்துக்களின் வெறும் உருத்தோற்றங்களைத்தான் காண்கிறார். இந்தச் சூட்சுமக் கருத்துக்கள் எனப்பட்டவை உலகந் தோன்றிய நாளிலிருந்து தெய்வப் பிதாவின் நெஞ்சிலே சூத்திரங்களாகத் துஞ்சியவாறிருந்தனவாம்.

ஆனால் இங்கே திரு. புரூதோனின் அறிவாற்றல் கடுமையான வலிப்புக்கு ஆளாகிறது. இந்தப் பொருளாதார வகையினங்கள் அனைத்தும் இறைவனின் நெஞ்சிலிருந்து உதிக்கும் வெளிப்பாடுகளானால், மனிதனின் மறைவான, நிரந்தரமான வாழ்க்கையானால், முதலாவதாக: வளர்ச்சி எனப்படும் விஷயம் எப்படி ஏற்படுகிறது, இரண்டாவதாக: எப்படி திரு. புரூதோன் நடப்புக்காப்புவாதியாக இல்லாமல் இருக்கிறார்? பகைமைகளின் ஒரு முழுமையான அமைப்பு முறையைக் கொண்டு அவர் இந்த வெளிப்படையான முரண்பாடுகளை விளக்குகிறார்.

இந்தப் பகைமைகளின் அமைப்பு முறையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கு ஒரு எடுத்துக்காட்டு தருவோம்.

ஏகபோகம் ஒரு நல்ல விஷயம், ஏனெனில் அது ஒரு பொருளாதார வகையினம், எனவே அது இறைவனின் வெளிப்பாடு. போட்டி ஒரு நல்ல விஷயம், ஏனெனில் அதுவும் ஒரு பொருளாதார வகையினம். ஆனால் எது நல்லதில்லை என்றால் ஏகபோகத்தின் யதார்த்த நிலையும் போட்டியின் யதார்த்த நிலையுமாகும். அதைவிட மோசமானது, போட்டியும் ஏக

போகமும் ஒன்றையொன்று விழுங்கும் விஷயம். என்ன செய்வது? ஆண்டவனின் இவ்விரு கருத்துக்களும் ஒன்றோடொன்று முரண்படுவதால், இவ்விரண்டுக்கும் உரிய ஒரு கூட்டமைப் புங்கூட ஆண்டவனின் நெஞ்சிலே இருப்பது வெளிப்படை என்று அவருக்குத் தோன்றுகிறது, இந்தக் கூட்டமைப்பிலே ஏகபோகத்தின் தீமைகளைப் போட்டி நிவர்த்திக்கிறதாம், போட்டியின் தீமைகளை ஏகபோகம் நிவர்த்திக்கிறதாம். இரண்டு கருத்துக்களிடையே நடக்கும் போராட்டத்தின் விளைவாக அவற்றின் நல்ல அம்சம் மட்டுமே புலப்படுத்திக் கொள்கிறதாம். இந்த இரகசியத்தை இறைவனிடமிருந்து பிடுங்கி எடுத்துக் கொண்டு செயல்படுத்தினால் போதும் எல்லாம் சிறப்பாக ஈடேறும்; மனிதனின் நபர்சார்பற்ற பகுத்தறிவின் இருட்டிலே மறைந்து கிடக்கும் கூட்டமைப்பான சூத்திரத்தை வெளிப்படுத்தித் தீர வேண்டும். அதை வெளிப்படுத்துவோனாக முன்வருவதற்கு ஒரு கணமேனும் தயங்கவில்லை திரு. புரூதோன்.

ஆனால், யதார்த்த வாழ்க்கையை ஒரு வினாடி நோக்குங்கள். தற்காலப் பொருளாதார வாழ்க்கையிலே நீங்கள் போட்டியையும் ஏகபோகத்தையும் காண்கிறதோடல்லாமல் அவற்றின் கூட்டமைப்பையும் காண்கிறீர்கள், அது ஒரு சூத்திரம் அல்ல, அது ஒரு இயக்கம். ஏகபோகம் போட்டியை உண்டாக்குகிறது, போட்டி ஏகபோகத்தை உண்டாக்குகிறது. ஆனால் இந்த சமன்பாடு இன்றைய நிலைமையின் கஷ்டங்களைப் போக்குவதற்குப் பதிலாக—போக்குகிறது என்றுதான் முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் நினைக்கிறார்கள்—அதைவிட மேலும் கஷ்டமான குழப்பமான நிலையை விளைக்கிறது. எனவே, தற்காலப் பொருளாதார உறவுகள் நிலைகொண்டிருப்பதற்கான அடிப்படையை நீங்கள் மாற்றினால், இன்றைய உற்பத்தி முறையை நீங்கள் ஒழித்தால், நீங்கள் போட்டியையும் ஏகபோகத்தையும் அவற்றின் பகைமையையும் ஒழிப்பதோடல்லாமல் அவற்றின் ஒற்றுமையை, அவற்றின் கூட்டமைப்பை, போட்டிக்கும் ஏகபோகத்துக்கும் உண்மையான நடுவமைதி நிலையான இயக்கத்தைக் கூட ஒழித்துவிடுவீர்கள்.

இனி திரு. புரூதோனின் இயக்கவியலுக்கு ஓர் எடுத்துக் காட்டு தருவோம்.

விடுதலையும் அடிமை முறையும் ஒரு பகைமையாகும். விடுதலையின் நிறைகளையும் குறைகளையும் பற்றி நான் பேசத் தேவையில்லை, அடிமை முறை பற்றிப் பேசுகையில் அதன் குறைகளைப் பற்றியும் பேசத் தேவையில்லை. அதன் நிறைகளை விளக்குவது ஒன்றே இங்குள்ள விஷயம். நாம் மறைமுகமான அடிமை முறையை, பாட்டாளி வர்க்கத்தின் அடிமை நிலையை, இங்கே எடுத்துப் பேசவில்லை; நேரடியான அடிமை முறையை, ஸுரினும், பிரேஸில், வட அமெரிக்காவின் தென் மாநிலங்கள் ஆகியவற்றிலுள்ள கறுப்பு இனத்தவர்களின் அடிமை நிலையை எடுத்துப் பேசுகிறோம்.

இயந்திரவகை, கடன் மதிப்பு முதலியவற்றைப் போல் நேரடியான அடிமை முறையும் இன்று நமது தொழில் முறைக்கு அச்சாணியாகும். அடிமை முறை இன்றேல் பருத்தி இல்லை; பருத்தி இல்லையேல் நவீனத் தொழில் துறை இல்லை. அடிமை முறை காலனிகளை மதிப்புள்ளவையாகச் செய்கிறது; காலனிகள் உலக வாணிபத்தைப் படைத்துள்ளன; உலக வாணிபம் பெருமளவான இயந்திரத்தொழில் துறைக்கு அவசியமான நிபந்தனையாகும். எனவேதான், நீக்கிரோக்களை வாங்கி விற்பது தொடங்குமுன், காலனிகள் பழைய உலகத்துக்கு [Old World] ஒரு சில விளைபொருட்களைத்தான் வினியோகித்தன, உலகத் தோற்றத்தில் காணத்தக்க மாற்றம் எதுவும் செய்யவில்லை. எனவே அடிமை முறை ஒரு மிக முக்கியமான பொருளாதார வகையினமாகும். மிக முற்போக்கான நாடாகிய வட அமெரிக்கா அடிமை முறை இல்லாவிட்டால் ஒரு தந்தைவழி ஆட்சிக்கால நாடாக மாறிவிடும். நாடுகளின் நிலப்படத்திலிருந்து வட அமெரிக்காவை நீக்கிவிட்டால் அராஜகமும் உலக வாணிப நலிவும் நவீன நாகரிகத்தின் நலிவும் கிடைக்கும். ஆனல் அடிமை முறையை மறைய விடுவது அமெரிக்காவை நாடுகளின் நிலப்படத்திலிருந்து நீக்குவதாகும். எனவே, அடிமை முறை ஒரு பொருளாதார வகையினமாக இருப்பதால் அது உலகம் தோன்றிய நாளிலிருந்து ஒவ்வொரு நாட்டிலும் காணக் கிடக்கிறது. நவீன காலத்திய நாடுகள் அடிமை முறையைத் தத்தம் நாடுகளில் வெறுமே மறைத்து வைக்கத்தான் தெரிந்து வைத்துள்ளன, ஆனல் புதிய உலகத்தில் (அமெரிக்கா கண்டத்தில்) அதை வெளிப்படையாக நிலைநாட்டச் செய்துள்ளன. அடிமை

முறையைப் பற்றிய இந்த ஆய்வுக் கூற்றுகளுக்குப்பின் மதிப்புக்குரிய நமது திரு. புரூதோன் என்ன செய்வார்? விடுதலைக்கும் அடிமை முறைக்கும் இடையே ஒரு கூட்டமைப்பைத் தேடுவார், அடிமை முறைக்கும் விடுதலைக்கும் இடையே நடுவமைதி நிலையை, சமன நிலையைத் தேடுவார்.

திரு. புரூதோன் மனிதர்கள் ஜவுளி, நெசவுத்துணி, பட்டு வகையறுக்களை உற்பத்தி செய்கிறார்கள் என்கிற விஷயத்தை மிக நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார், இந்தச் சின்ன அளவிலே அவர் புரிந்து கொண்டிருப்பதே அவருக்குப் பெரும் பெருமைதான்! அவர் புரிந்து கொள்ளாமலிருப்பது, இந்த மனிதர்கள் உற்பத்திச் சக்திகளுக்குத் தக்கபடி சமுதாய உறவுகளையும் உற்பத்தி செய்கிறார்கள், அவற்றின் சூழலிலேதான் ஜவுளியையும் நெசவுத் துணியையும் தயாரிக்கிறார்கள் என்கிற விஷயத்தைத்தான். தமது பொருள் உற்பத்திக்குத் தக்கபடி தமது சமுதாய உறவுகளை உற்பத்தி செய்து கொள்கிற மனிதர்கள் கருத்துக்களையும் வகையினங்களையும்—அதாவது, இதே சமுதாய உறவுகளின் சூட்சுமமான இலட்சியச் சொல்லுருக்களை — கூடத்தான் உற்பத்தி செய்கிறார்கள் என்பதையும் அவர் புரிந்து கொள்ளவில்லை. எனவேதான், இந்த வகையினங்கள் அவை குறிக்கிற உறவுகளைப் போலவே நிரந்தரமானவை அல்ல. அவை வரலாற்று ரீதியான, தற்காலிகமான விளைபொருட்களே. அதற்கு மாறாக திரு. புரூதோன் பொருத்தவரை சூட்சுமக் கருத்துக்களும் வகையினங்களுமே ஆதிமூல காரணம் ஆகும். அவர் கருத்துப்படி இவைதான் வரலாற்றைப் படைக்கின்றன, மனிதர்களல்ல. சூட்சுமக் கருத்து, தன்னிலையிலே எடுத்துக் கொள்ளப்பட்ட வகையினம் — அதாவது, மனிதர்களுக்கும் அவர்களுடைய பொருள் வகைப்பட்ட நடவடிக்கைகளுக்கும் அப்பாற்பட்ட நிலையிலே—இறவாதது, மாற்றவொண்ணாதது, இயக்காதது என்பது உண்மை; அது சுத்தமான பகுத்தறிவுப் பிறவியின் ஒரு வடிவம் மட்டுமேயாகும்; அதாவது சூட்சுமக் கருத்து எனப்பட்டதே சூட்சுமமானது என்று சொல்வதாகும். மெச்சத்தக்க ஒரு மிகைச் சொல்லடுக்கு அல்லவா!

எனவேதான், வகையினங்கள் என்கிற விதத்தில் பொருளாதார உறவுகள் எனப்பட்டவை திரு. புரூதோனுக்குத்

தோற்றமோ முன்னேற்றமோ இல்லாத நிரந்தரமான சூத்திரங்கள்.

இதை மற்றொரு விதமாகச் சொல்வோம்; தம் கருத்தில் முதலாளித்துவ வாழ்க்கை முறை ஒரு நிரந்தரமான உண்மைப் பொருள் என்று திரு. புரூதோன் நேரடியாகச் சொல்ல வில்லை; கருத்துக்கள் என்கிற வடிவத்திலே முதலாளித்துவ உறவுகளைக் குறிக்கும் வகையினங்களுக்குத் தெய்வாம்சம் அளிப்பதின் மூலமாக அவர் அதை மறைமுகமாகச் சொல் கிறார். முதலாளித்துவச் சமுதாயத்தின் விளைபொருட்களை அவர் தன்னியல்பாக உதித்த நிரந்தரப் பிறவிகளாகக் கருதுகிறார், அவை வகையினங்கள் என்கிற வடிவில், கருத்து வடிவில் அவரது மனத்தில் தம்மைப் புலப்படுத்திக் கொண்டவுடனே சொந்தத்தில் உயிர் பெற்றவையாக ஆகிவிடுகின்றன. எனவே அவர் முதலாளித்துவ முறையின் அடிவானத்துக்கு மேலே எழுவதில்லை. அவர் நிரந்தர உண்மை என்று முன்னனு மானித்துக் கொண்டவையான முதலாளித்துவக் கருத்துக்களை வைத்துக் கொண்டு வேலை செய்வதால் இந்தக் கருத்துக்களுக் குரிய ஒரு கூட்டமைப்பை, நடுவமைதி நிலையைத் தேடிச் செல்கிறார், அவை நடுவமைதி நிலையை எட்டுவதற்கான இன்றைய வழிமுறைதான் ஒரே சாத்தியமான வழிமுறை என்று பார்க்கவில்லை.

உண்மையிலே, எல்லா நல்ல பூர்ஷ்வாக்களும் செய்கிற தையே அவரும் செய்கிறார். கோட்பாடு ரீதியிலே—அதாவது, சூட்சுமக் கருத்துக்கள் என்று கருதப்பட்ட நிலையில்—போட்டி, ஏகபோகம் முதலானவைதான் வாழ்க்கைக்குரிய ஒரே அடிப்படை, ஆனால் நடைமுறையிலே அவை அவ்வளவு திருப்திகரமாயில்லை என்று அவர்கள் எல்லோரும் சொல் கிறார்கள். அவர்கள் எல்லோரும் போட்டியின் சாகடிக்கும் விளைவுகளை விலக்கிய போட்டி வேண்டும் என்கிறார்கள். சாத்தியமற்றதை—அதாவது, முதலாளித்துவ வாழ்க்கைக் குரிய நிலைமைகள் வேண்டும், ஆனால் அந்த நிலைமைகளின் அவசியகரமான பின்விளைவுகள் மட்டும் இருக்கக்கூடாது—அவர்கள் அனைவரும் விரும்புகிறார்கள். முதலாளித்துவ உற் பத்தி வடிவமும் நிலப்பிரபுத்துவ வடிவம் போலவே வர லாற்று ரீதியானது, தற்காலிகமானது என்று அவர்களில் ஒருவர்கூடப் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் கருத்தில்

பூர்ஷ்வா மனிதன்தான் ஒவ்வொரு சமுதாயத்துக்கும் சாத்தியமான அடிப்படையாவான் எனும் விஷயத்திலிருந்து இந்தத் தவறு ஏற்படுகிறது; பூர்ஷ்வாவாக அற்றுவிட்ட மனிதர்களைக் கொண்ட சமுதாயத்தை அவர்களால் கற்பனை செய்ய முடியாது.

எனவே, திரு. புரூதோன் வறட்டுத் தத்துவவாதியாக இருந்து தீர வேண்டியுள்ளது. அவர் கருத்தில், தற்கால உலகத்தைத் தலைகீழாகப் புரட்டி வருகிற வரலாற்று இயக்கமானது இரண்டு பூர்ஷ்வாக் கருத்துக்களுக்குரிய சரியான நடுவமைதி நிலையை, கூட்டமைப்பைக் கண்டுபிடிக்கும் பிரச்சினையாகத் தாழ்ந்துவிடுகிறது. எனவே, இந்தக் கெட்டிக்கார ஆசாமி தனது தந்திரத்தால் கடவுளின் இரகசிய எண்ணத்தை, இரண்டு தனித்த கருத்துக்களின் ஒற்றுமையை, கண்டுபிடிக்க முடிகிறது—இவ்விரு கருத்துக்கள் தனித்திருப்பதற்குக் காரணம் திரு. புரூதோன் அவற்றை நடைமுறை வாழ்க்கையிலிருந்து, தற்கால உற்பத்தியிலிருந்து, அதாவது, அவை வெளியிடும் யதார்த்தங்களின் ஒற்றுமையிலிருந்து தனிமைப்படுத்தியிருக்கிறார்.

ஏற்கெனவே மனிதர்கள் பெற்றுள்ள உற்பத்திச் சக்திகளுக்கும் அந்த உற்பத்திச் சக்திகளோடு மேற்கொண்டு பொருந்தி வராதிருக்கும் அவர்களின் சமுதாய உறவுகளுக்கும் இடையேயுள்ள மோதல்களிலிருந்து உதிக்கும் மகத்தான வரலாற்று இயக்கத்துக்குப் பதிலாக; ஒவ்வொரு நாட்டுக்குள்ளே வெவ்வேறு வர்க்கங்களுக்கிடையேயும் நாடுகளுக்கு இடையேயும் தயாரிக்கப்பட்டு வரும் பயங்கரமான போர்களுக்குப் பதிலாக; இந்தப் மோதல்களுக்குத் தீர்வுகாண முடிவதற்கு ஒரே சாதனமாயிருக்கக்கூடிய மக்களின் நடைமுறை வகைப்பட்ட வன்முறைச் செய்கைக்குப் பதிலாக—இந்த மாபெரும், நீடித்த, சிக்கலான இயக்கத்துக்குப் பதிலாக, திரு. புரூதோன் தமது தலையில் நடந்து வரும் எளிய இயக்கத்தைக் கொடுக்கிறார். எனவே படித்த அறிவாளிகள் தாம், கடவுளின் இரகசிய எண்ணங்களைக் களவாடத் தெரிந்துள்ள மனிதர்கள்தாம் வரலாற்றைப் படைக்கிறார்கள். அவர்களின் தரிசனங்களைச் செயல்படுத்துவது ஒன்றுதான் சாதாரண மக்களின் வேலை.

திரு. புரூதோன் ஒவ்வொரு அரசியல் இயக்கத்துக்கும்

கடும் எதிரியாக இருப்பதின் காரணத்தை இப்போது நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அவர் கருத்துப்படி, தற்காலப் பிரச்சினைகளுக்குரிய தீர்வு மக்களின் இயக்கத்திலே இல்லை, தமது சொந்த மனத்தின் இயக்கவியல் சுழற்சியிலேதான் உண்டாம். அவர் கருத்தில் வகையினங்கள் உந்துசக்தியாக இருப்பதால், அந்த வகையினங்களை மாற்றுவதற்கு நடைமுறை வாழ்க்கையை மாற்ற வேண்டிய அவசியமில்லை. விஷயம் அதற்கு நேர் மாறானதாம். வகையினங்களை மாற்றித் தீர வேண்டும், அதன் பின்விளைவாக இன்றையச் சமுதாயத்தில் ஒரு மாற்றம் ஏற்படும்.

முரண்பாடுகளைச் சமரசப்படுத்த அவருக்கிருக்கும் விருப்பத்திலே திரு. புரூதோன் அந்த முரண்பாடுகளின் அடிப்படையையே மாற்றித் தீர வேண்டாமா என்றுகூடக் கேட்கவில்லை. அரசனையும் பிரதிநிதிகளின் சட்டமன்றத்தையும் பிரபுக்களின் சட்டமன்றத்தையும் சமுதாய வாழ்க்கையின் ஒன்றிணைந்த பகுதிகளாக, நிலையான வகையினங்களாக வைத்திருக்க விரும்புகிற அரசியல் வறட்டுத் தத்துவவாதி போலவே அவர் இருக்கிறார். அவர் தேடிக்கொண்டிருப்பதெல்லாம் இந்தச் சக்திகளிடையே ஒரு நடுவமைதி நிலையை நிலைநாட்டுவதற்குரிய ஒரு புதிய சூத்திரந்தான்—அவற்றின் நடுவமைதி நிலை என்னவோ ஒரு சக்தி மற்ற சக்தியிடம் ஒரு சமயம் வென்றும் ஒரு சமயம் அடிமைப்பட்டும் வருகிறபடியுள்ள அசல் இயக்கத்திலேதான் அடங்கியுள்ளது. இப்படித்தான், சமுதாயப் படிப்பிரிவினரையும், பிரபுத்துவத்தையும், அரசனையும், நாடாளுமன்றத்தையும் பிறவற்றையும் நடுவமைதி நிலைக்குக் கொணரக்கூடிய உண்மையான சூத்திரத்தைத் தேடுவதில் பல சாமானியத் திறமுள்ள சிந்தனையாளர்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்; அவர்கள் ஒரு நாள் விழித்தெழுந்தபோது மேற்கொண்டு உண்மையிலே அரசனோ நாடாளுமன்றமோ பிரபுத்துவமோ எதுவும் இல்லாதிருக்கக் கண்டார்கள். இந்த நிலப்பிரபுத்துவ முறையின் ஏற்பாடுகளுக்கும் இந்த நிலப்பிரபுத்துவ முறையின் ஏற்பாடுகளின் பகைமைகளுக்கும் அடிப்படையாக இருந்து வந்த எல்லாச் சமுதாய உறவுகளையும் தூக்கியெறிவதே இந்தப் பகைமையின் உண்மையான நடுவமைதி நிலையாகும்.

திரு. புரூதோன் ஒரு புறத்தில் நிலையான கருத்துக்களையும் சுத்தமான பகுத்தறிவின் வகையினங்களையும் மற்றொரு புறத்தில் அவர் கருத்துப்படி இந்த வகையினங்களின் செயல்பாடாக உள்ள மனிதப் பிறவிகளையும் அவர்களின் நடைமுறை வாழ்க்கையையும் வைக்கிற காரணத்தால், வாழ்க்கைக்கும் கருத்துக்களுக்கும் இடையே—ஆன்மாவுக்கும் உடம்புக்கும் இடையே—உள்ள ஒரு **இருமை வாதம்** [dualism], பல வடிவங்களில் திரும்பத் திரும்ப நிகழ்ந்து வரும் ஒரு இருமைவாதம், அவரிடம் தொடக்கத்திலிருந்தே இருக்கக் காண்கிறோம். இந்தப் பகைமை என்பது திரு. புரூதோன் தெய்வமாகப் போற்றிக் கொள்ளும் வகையினங்களின் சாதாரணமான தோற்றத்தையும் சாதாரணமான வரலாற்றையும் புரிந்து கொள்ள இயலாத திறமின்மையே தவிர வேறில்லை.

கம்யூனிஸத்துக்கு எதிராகத் திரு. புரூதோன் மேற்கொள்ளும் அபத்தமான தாக்குகளைப் பற்றிப் பேசுவதற்கு இடமில்லை, ஏற்கெனவே என் கடிதம் மிகவும் நீண்டுவிட்டது. இப்போதைக்கு நீங்கள் என்னோடு ஒத்துப் போவீர்கள், இன்றையச் சமுதாய நிலையைப் புரிந்து கொள்ளாத ஒருவன் அதைத் தூக்கியெறியும் போக்கில் போகிற இயக்கத்தையும் சரி, இந்தப் புரட்சிகரமான இயக்கத்தின் இலக்கிய வெளியீடுகளையும் சரி அதைவிடக் குறைவாகத்தான் புரிந்து கொள்வான் என்று எதிர்பார்க்கலாம்.

உணர்ச்சி வகைப்பட்ட சோஷலிஸ்ட் பாணி பகற்கனவுகளைத் திரு. புரூதோன் வெறுக்கிறாரே, அந்த **ஒரேயொரு விஷயத்தில்** அவருடன் எனக்கு முழுமையான உடன்பாடு உண்டு. அவருக்கு முன்பே, நான் இந்த உணர்ச்சி வகைப்பட்ட, கற்பனாவாத, மூளையற்ற சோஷலிஸத்தைக் கேலி செய்ததின் வழியாக ஏற்கெனவே நிறைய பகைமையை என்பால் ஈர்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் திரு. புரூதோன் தமது சிறுபூர்ஷ்வா உணர்ச்சிப் பாங்கை—வீடு, இல்லறக் காதல், இன்னும் இவை போன்ற சாதாரண விவகாரங்களைப் பற்றி அவர் உணர்ச்சி பொங்கப் பேசுவதையே நான் குறிப்பிடுகிறேன்—சோஷலிஸ்ட் உணர்ச்சிப் பாங்குக்கு எதிராக நிறுத்துகிறதில் தம்மைத் தாமே வேடிக்கையாக ஏமாற்றிக் கொள்ளவில்லையா? பார்க்கப் போனால், மதிப்புக்குரிய புரூதோனின் படாடோபமான வழக்கமொழிகளைவிட ஃபூரியே

யின் (எடுத்துக்காட்டுக்குக் குறிப்பிடுகிறேன்) சோஷலிஸ்ட் உணர்ச்சிப் பாங்கு மிக ஆழமாகச் செல்கிறது. அவரே தமது வாதத்தின் வெறுமையையும் இவ்விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் தமக்குத் திறமை அறவே இல்லாதிருப்பதையும் நன்கு உணர்ந்திருக்கிறார், எனவேதான் அவரிடம் கோபமும் சொல்லார வாரமும் தர்மாவேசமும் [irae hominis probi] வெடிக்கின்றன, நுரைதள்ளப் பேசுகிறார், சபிக்கிறார், கண்டிக்கிறார், வெட்கக்கேடு படுகொலை என்றெல்லாம் கூவுகிறார், மார்பில் அடித்துக் கொள்கிறார், சோஷலிஸ்ட் அவக் கேடுகள் தம்மைக் கறைப்படுத்தவில்லை என்று மனிதன் இறைவன் எல்லோரிடமும் பீற்றிக் கொள்கிறார்! சோஷலிஸ்ட் உணர்ச்சிப் பாங்குகளையோ அவைதான் என்று தாம் கருதுவதையோ அவர் விமர்சிக்கவில்லை. ஒரு துறவி போல, ஒரு போப்பாண்டவர் போல, கேவலமான பாவிகளைச் சபித்து விலக்கி வைக்கிறார், சிறுபூர்ஷ்வா வர்க்கத்தின் மேன்மைகளையும் இல்லற வாழ்க்கையின் அற்பமான தந்தைவழி ஆட்சிக் காலப் பிரமைகளின், களவொழுக்கப் பிரமைகளின் மேன்மைகளையும் வியந்து பாடுகிறார். இது தற்செயலானதல்ல. அடி முதல் முடி வரை திரு. புரூதோன் சிறு பூர்ஷ்வா வர்க்கத்தின் மெய்யறிஞரும் பொருளாதாரவாதியும் ஆவார். முன்னேறிய ஒரு சமுதாயத்தில் **சிறுபூர்ஷ்வா** நபர் தனது வாழ்நிலையின் காரணத்தாலேயே ஒரு புறத்தில் சோஷலிஸ்டாகவும் மறுபுறத்தில் பொருளாதாரவாதியாகவும் இருந்து தீரவேண்டியிருக்கிறது; அதாவது, அவன் பெரு முதலாளிகளுடைய செல்வச் சிறப்பைக் கண்டு பிரமையடித்து நிற்கிறான், மக்களின் துன்பதுயரங்களைக் கண்டு அனுதாபப்படுகிறான். ஒரே நேரத்தில் அவன் பூர்ஷ்வாவாகவும் மக்களைச் சார்ந்துள்ள மனிதனாகவும் இருக்கிறான். தான் நடுநிலை வகிப்பதாகவும் சரியான நடுவமைதி நிலையை (அது சாமானியத் திறத்தினின்று வேறுபட்ட ஒன்றாகச் சொல்லிக் கொள்கிறது) கண்டு கொண்டதாகவும் அடிநெஞ்சிலே தன்னைத் தானே புகழ்ந்து கொள்கிறான். இவ்வகைப்பட்ட சிறுபூர்ஷ்வா முரண்பாட்டை வியந்தேத்துகிறான், ஏனெனில் முரண்பாடுதான் அவனது வாழ்நிலைக்கு அடிப்படை. அவனே செயல்பட்டு வரும் சமுதாய முரண்பாடு தவிர வேறில்லை. நடைமுறையில் தான் எப்படி இருக்கிறானோ அதை அவன் தத்துவரீதியிலே நியாயப்

படுத்தித் தீர வேண்டும், மற்றும் பிரெஞ்சுச் சிறுபூர்ஷ்வா வர்க்கத்தின் விஞ்ஞான ரீதியான வியாக்கியான கர்த்தாவாக இருக்கும் சிறப்பு திரு. புரூதோனுக்கு உண்டு — அது ஒரு உண்மையான சிறப்பாகும், ஏனெனில் வரவிருக்கும் எல்லாச் சமுதாயப் புரட்சிகளிலும் சிறுபூர்ஷ்வா வர்க்கம் ஒன்றிணைந்த ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

அரசியல் பொருளாதாரம் பற்றிய எனது நூலை[60] இக் கடிதத்துடன் அனுப்ப வேண்டும் என்பதே என் விருப்பம், என்றாலும் இந்நூலையும் சரி, ஜெர்மன் மெய்யறிஞர்கள், சோஷலிஸ்டுகள் பற்றிய விமர்சனத்தைப் பற்றி உங்களிடம் புருஸெல்ஸில் பேசியிருக்கிறேனே, அதையும்[61] சரி, இது வரை அச்சிடச் செய்யச் சாத்தியமற்றிருக்கிறது. ஜெர்மனியில் இப்படிப்பட்ட ஒரு வெளியீட்டுக்கு எதிர்ப்படுகிற கஷ்டங்களைச் சொன்னால் நீங்கள் நம்பவே மாட்டீர்கள் — ஒரு புறத்தில் போலீஸார் உண்டாக்கும் கஷ்டங்கள், மறுபுறத்தில் நான் தாக்கும் போக்குகளுக்கெல்லாம் தாங்களே அக்கறையுள்ள பிரதிநிதிகளாக இருக்கும் புத்தகவிற்பனையாளர்கள் உண்டாக்கும் கஷ்டங்கள். நமது சொந்தக் கட்சியைப் பொருத்தவரை, அது ஏழையாயிருப்பது மட்டுமல்ல, ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பெரும் பகுதியினர் நான் அவர்களுடைய கற்பனையுலகத் திட்டங்களையும் சொல்லெழுச்சிகளையும் எதிர்ப்பதற்காக என் மேல் கோபம் கொண்டிருக்கிறார்கள்...

அன்புடன்,

கார்ல் மார்க்ஸ்

பிற்குறிப்பு. நன்றாக ஜெர்மன் மொழியில் எழுதுவதை விட்டு ஏன் மோசமாகப் பிரெஞ்சு மொழியில் எழுதுகிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். காரணம், நான் ஒரு பிரெஞ்சு ஆசிரியரைப் பற்றி எழுதுகிறேன்.

நீங்கள் எனக்குத் தாமதமின்றிப் பதிலளித்தால் மகிழ்ச்சியடைவேன். எனது அநாகரிகமான பிரெஞ்சுச் சொல்லாட்சியில் வெளியிட்டதை நீங்கள் புரிந்து கொள்ள முடிந்ததா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

புருதோன் குறித்து மார்க்ஸ்

(இயோ. ப. ஷ்வைட்ஸருக்கு எழுதிய கடிதம்)[62]

லண்டன், ஜனவரி 24, 1865

அன்புள்ள ஐயா,

நேற்று நான் உங்களிடமிருந்து பெற்ற கடிதத்தில் **புருதோன்** *குறித்து ஒரு விரிவிபரமுள்ள தீர்ப்பு அளிக்கக் கோரி யிருக்கிறீர்கள். நேரமின்மையால் உங்கள் விருப்பத்தை என்னால் நிறைவேற்ற முடியவில்லை. அதோடுகூட, அவருடைய நூல்கள்* **எதுவும்** *என் கைவசம் இல்லை. என்றாலும், தங்களிடம் எனது நல்லெண்ணத்தைக் காட்டி உறுதியளித்திட வேண்டி நான் அவசரமாக ஒரு சுருக்கமான வரைவுரை எழுதுகிறேன். அதை நீங்கள் முழுமையாக்கலாம், கூட்டலாம், குறைக்கலாம்—சுருங்கச்சொன்னால், உங்கள் விருப்பம் போல் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.*

புருதோனின் துவக்கக் கால முயற்சிகள் எனக்கு நினைவில்லை. **உலகு தழுவிய பொது மொழி**[63] *பற்றிய அவரது பள்ளிக் காலப் படைப்பு, தீர்வு காண்பதற்கு வேண்டிய ஆதார அறிவுகூட இல்லாமலேயே அவர் எவ்வளவு இலேசாகப் பிரச்சினைகளைச் சாடினார் என்று காட்டுகிறது.*

அவரது முதல் நூல், **சொத்து என்பது என்ன?**[64] *அவரது மற்றெல்லாப் படைப்புகளிலும் மிகச் சிறந்தது என்பதில் ஐயமில்லை. அதன் உள்ளடக்கத்தின் புதுமையினால் அல்லவென்றாலும், ஏற்கெனவே தெரிந்த விஷயங்களைக் குறித்து புதிய, துணிச்சலான வழியிலே சொல்வதன் காரணமாக அது சகாப்தப் படைப்புத் தன்மை கொண்டது. உண்மைதான், பல்வேறு வழிகளிலே ''சொத்து'' விமர்சிக்கப்பட்டிருக்கிறது மட்டுமல்ல, பிரெஞ்சு சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும் (அவர்களின் நூல்களைத் திரு. புருதோன் அறிவார்)கற்பனாவாதப் பாணியிலே அதை* **''ஒழித்துக்கட்டி''** *இருக்கிறார்கள்.*

இந்த நூலிலே ஸான்-ஸிமோன், ஃபூரியே ஆகியவர்களுடன் புரூதோனுக்குள்ள உறவு ஏறத்தாழ ஃபாயர்பாகுக்கும் ஹெகலுக்கும் இடையேயுள்ள உறவு போன்றது. ஹெகலுடன் ஒப்பிடுகிற பொழுது ஃபாயர்பாகிடம் இருப்பது அற்பசொற்பமேயாகும். ஆன போதிலும் ஹெகலுக்குப் பிறகு அவர் சகாப்தப் படைப்புத் தன்மை உள்ளவர், ஏனெனில் கிறித்தவ உணர்வுக்குப் பிடிக்காததாகவும் ஆனால் விமர்சனத்தின் முன்னேற்றத்துக்கு முக்கியமானதாகவும் இருந்த சில விஷயங்களுக்கு அவர் அழுத்தம் கொடுத்தார், அவற்றை ஹெகல் மாயமான அரையிருட்டில் விட்டுவிட்டுச் சென்றார்.

அவரது இன்னமும் வலுவுடன் இருக்கும் தசைப்பிடிப்புள்ள (என்று சொல்ல அனுமதிக்கப்பட்டால்) எழுத்துநடை இந்நூலில் கோலோச்சுகிறது. என் கருத்தில் அதன் நடையே அதன் முதன்மையான சிறப்பாகும். பழைய விஷயங்களைச் சொல்கிற இடங்களில்கூட அவை புரூதோன் சுயமாகக் கண்டெடுத்துக் கொண்டவை என்பதையும், அவர் கூறுவது அவருக்குப் புதிதாக இருப்பதையும் அவற்றைப் புதுமையாகவே அவர் கருதுவதையும் நாம் பார்க்க முடியும். ஆத்திரத்தைத் தூண்டிவிடக்கூடிய துணிச்சல், ''புனிதத்திலும் புனிதமான'' பொருளாதார விஷயங்களிலே கை வைப்பது, கொச்சையான பூர்ஷ்வா சிந்தனையைக் கேலிக்குள்ளாக்கும் ஒளிமிக்க முரண்மெய்க்கூற்று, சுட்டெரிக்கும் விமர்சனம், கசப்பேறிய நையாண்டி, அவர் இங்குமங்குமாக வெளிப்படுத்திக்கொள்கிற நிலையிலே இன்றைய அமைப்புமுறையின் கயமையின் மீது அவருக்குள்ள ஒரு ஆழ்ந்த, உண்மையான வெஞ்சினம், ஒரு புரட்சிகரமான நோக்கப்பற்று—இவையனைத்தும் **சொத்து என்பது என்ன?** எனும் நூலைப் படித்த வாசகர்களிடையே மின்சாரத்தைப் பாய்ச்சின, அந்நூல் முதலில் தோன்றியபொழுது பெரும் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய ஒரு விஞ்ஞானக் கண்டிப்புள்ள வரலாற்றிலே இந்நூல் குறிப்பிடப்படுவதற்குக்கூட தகுதியற்றுப் போகலாம். ஆனால் இவ்வகைப்பட்ட பரபரப்பூட்டும் நூல்கள் நாவல் இலக்கியத்தின் வரலாற்றில் உள்ளபடியே விஞ்ஞானத் துறைகளிலும் தமது பாத்திரத்தை வகிக்கத்தான் செய்கின்றன. எடுத்துக்காட்டாக, **மக்கட்தொகை பற்றி**[65] மால்தஸ் எழுதிய நூலைப்

பாருங்கள். அதன் முதல் பதிப்பில் அது ஒரு ''பரபரப் பூட்டும் சிறுநூல்'' தவிர வேறில்லை, போதாக்குறைக்கு அது முதலிலிருந்து முடிவு வரை இலக்கியக் களவும் ஆகும். ஆன போதிலும், மனிதகுலத்தின்மீது பொழிந்த அவதூருக இருக்கும் இது என்ன உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டது!

புரூதோனுடைய நூல் என் கையிலிருந்தால் அவரது துவக்கக் கால எழுத்து நடைக்கு விளக்கமாக நான் சுளுவாகச் சில எடுத்துக்காட்டுகள் கொடுத்திருக்க முடியும். மிக முக்கியமானவை என்று தாமே கருதிய ஏட்டுப் பகுதிகளில் கான்ட் முரண்முழுமைகளை எடுத்து நடத்திய முறையை அவர் பின்பற்றுகிருர்—கான்டினுடைய நூல்களை அவர் மொழி பெயர்ப்புகளிலே படித்திருந்தார், அக்காலத்தில் அவருக்குத் தெரிந்திருந்த ஜெர்மன் மெய்யறிஞர் கான்ட் ஒருவர் தான்—, மற்றும், கான்ட் போலவே அவருக்கும் இந்த முரண்முழுமைகளுக்கு நிவர்த்தி காண்பது மனித அறிவுக்கு ''அப்பாற்பட்ட'' ஒன்ருக — அதாவது, தமது அறிவுக்குப் புலப்படாதிருக்கிற ஒன்ருக—இருப்பதாகவே நம்மிடம் ஒரு பலமான கருத்தை உண்டாக்கிச் செல்கிருர்.

எனினும், அவரது வெளிப்படையான பழமரபுத் தகர்ப்பு அனைத்தும் இருந்துங்கூட, ஏற்கெனவே அவரது சொத்து என்பது என்ன? எனும் நூலில் முரண்பாட்டைப் பார்க் கிருேம்—அதாவது, ஒரு புறத்தில் ஒரு பிரெஞ்சுச் சிறு விவ சாயியின் (பின்னல் சிறு பூர்ஷ்வாவின்) கண்களோடும் கருத்து நிலையிலிருந்து கொண்டும், மறுபுறத்தில் சோஷலிஸ்டுகளிட மிருந்து அவர் சுவீகரித்துக் கொண்டதிலிருந்து பெறப்பட்ட மதிப்புத் தகவுகளைக் கொண்டும் அவர் சமுதாயத்தை விமர் சிக்கும் முரண்பாட்டைக் காண்கிருேம்.

அந்நூலின் குறைபாடு அதன் தலைப்பிலிருந்தே தெரி கிறது. பிரச்சினை பொய்யாக வரையறுக்கப்பட்டதால் அதற்குச் சரியாக விடையளிக்க முடியவில்லை. பண்டைக்கால ''சொத்து உறவுகளை'' நிலப்பிரபுத்துவ முறையின் சொத்து உறவுகள் விழுங்கிவிட்டன; நிலப்பிரபுத்துவ முறையின் சொத்து உறவுகளை ''முதலாளித்துவ'' சொத்து உறவுகள் விழுங்கிவிட்டன. எனவே பழைய சொத்து உறவுகள் மீது வரலாறே தனது விமர்சனத்தைச் செயல்படுத்தியிருக்கிறது. புரூதோன் எடுத்துக் கவனித்தது இன்றிருக்கிறபடியுள்ள

நவீன காலத்திய முதலாளித்துவ (பூர்ஷ்வா) சொத்துதான். இந்தச் சொத்து உறவுகளை மொத்தமாகத் தழுவிய நிலையில்—தன்னிச்சையான உறவுகள் என்கிற அவற்றின் சட்டச் சொல்லுருவத்திலே அல்லாமல் உற்பத்தி உறவுகள் என்கிற அவற்றின் உண்மையான வடிவத்திலே தழுவிக் கொண்டு— ''அரசியல் பொருளாதாரம்'' பற்றிய விமர்சன ரீதியான பகுப்பாய்வு வழியாக மட்டுமே அந்தச் சொத்து என்பதென்ன என்கிற கேள்விக்கு விடையளித்திருக்க முடியும். ஆனால் அவர் இந்தப் பொருளாதார உறவுகள் முழுவதையும் ''சொத்து'' என்கிற பொதுப்படையான சட்டக் கருத்தோட்டத்திலே சிக்கவைத்துவிட்ட காரணத்தால், ஏற்கெனவே 1789க்கு முன்பே பிரிஸ்ஸோ இதே போன்ற ஒரு நூலில்[66] ''சொத்து என்றால் திருட்டு'' எனும் அதே சொற்களில் கொடுத்திருந்த விடையைத் தாண்டி அவரால் போக முடியவில்லை.

இதிலிருந்து அதிகப்பட்சமாகக் கிடைக்கக் கூடியது, ''திருட்டு'' பற்றிய முதலாளித்துவச் சட்டக் கருத்தோட்டங்கள் பூர்ஷ்வாவின் ''நேர்மையான'' ஆதாயங்களுக்கும் சமமாகப் பொருந்தும் என்பதே. மறுபக்கத்தில், ''திருட்டு'' என்றால் பலவந்தமாகச் சொத்தை மீறுவது என்பது சொத்து இருப்பதை முன்னனுமானித்துக் கொள்வதால் உண்மையான பூர்ஷ்வா (முதலாளித்துவ) சொத்து குறித்துத் தமக்கே விளங்காத எல்லா விதமான கற்பனைகளிலே புரூதோன் சிக்கிக் கொண்டார்.

நான் 1844ல் பாரிஸில் தங்கியிருக்கையில் புரூதோனுடன் நேரடித் தொடர்பு கொண்டேன். இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் அவருடைய ''கலப்படநயத்துக்கு'' (வியாபாரச் சரக்குகளின் கலப்படத்தை அப்படித்தான் ஆங்கிலேயர்கள் அழைக்கிறார்கள்) நானும் ஓரளவுக்குப் பழி ஏற்க வேண்டும். சில சமயங்களில் விடிய விடிய நடந்த நீண்ட விவாதங்களில் அவரிடம் ஹெகல்வாதத்தைத் தொற்ற வைத்தேன், அது அவருக்குப் பெருந்தீங்காயிற்று, அவருக்கு ஜெர்மன் மொழி தெரியாததால் ஹெகல்வாதத்தை அவரால் முறையாகப் பயில முடியவில்லை. நான் பாரிஸிலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகு, நான் தொடங்கி வைத்ததைத் திரு. கார்ல் கிருய்ன் நீடித்தார். ஜெர்மன்

மெய்யறிவு ஆசிரியன் என்கிற வகையில் என்னிடமில்லாத ஒரு நிறை அவரிடமிருந்தது — அதாவது அதைப் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது.

புரூதோனின் **வறுமையின் மெய்யறிவு** முதலியவை எனும் இரண்டாவது முக்கியமான நூல்[67] வெளிவருவதற்குச் சற்றுமுன் எனக்கு எழுதிய ஒரு விரிவான கடிதத்தில் அவரே அதை அறிவித்து, மற்ற விஷயங்களுக்கு இடையே, ''உங்கள் விமர்சனத்தின் சவுக்கடிக்குக் காத்திருக்கிறேன்'' என்று சொல்லியிருந்தார். எங்களுடைய நட்பு அடியோடு முறிந்து போகும் முறையில் இந்தச் சவுக்கடி விரைவிலே அவர்மேல் விழுந்தது, எனது **மெய்யறிவின் வறுமை** முதலியவை எனும் நூல் பாரிஸில் 1847ல் வெளியாயிற்று.

நான் ஏற்கெனவே சொன்னதிலிருந்து புரூதோனின் **வறுமையின் மெய்யறிவு அல்லது பொருளாதார முரண்பாடுகளின் அமைப்புமுறை** எனும் நூலிலேயே முதன்முதலாக **சொத்து என்பது என்ன?** என்கிற கேள்விக்கு விடை கொண்டிருந்ததை நீங்கள் பார்க்க முடியும். உண்மையிலே சொன்னால், இந்தப் பிந்தைய நூல் வெளியிடப்பட்ட பிறகுதான் அவர் தமது பொருளாதாரப் பயிற்சிகளைத் தொடங்கினர்; தாம் எழுப்பியிருந்த கேள்விக்குக் **கடுமொழி** மூலமாக விடையளிக்க முடியாது, நவீனகால **''அரசியல் பொருளாதாரம்''** பற்றிய ஒரு **பகுப்பாய்வு** மூலமாக மட்டுமே விடையளிக்க முடியும் என்று கண்டுபிடித்திருந்தார். அதே நேரத்தில் அவர் பொருளாதார வகையினங்களின் அமைப்புமுறையை இயக்கவியல் வகையிலே முன்வைத்திட முயன்றார். **கான்டினுடைய தீர்வுகாண** முடியாத **''முரண்முழுமைகளுக்குப்''** பதிலாக **ஹெகலின்** **''முரண்பாடு''** வளர்ச்சிக்குரிய சாதனமாகப் புகுத்தப்படுவதாயிருந்தது.

இரு பெரும் தொகைகளாக இருக்கும் அவரது நூலைப் பற்றிய மதிப்பீடு வேண்டுமென்றால் நான் விடையளிக்கும் வகையிலே எழுதிய நூலைப் பார்க்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டியுள்ளது. அதில், மற்ற விஷயங்களுக்கிடையே, நான் காட்டியிருந்தேன்: விஞ்ஞான ரீதியான இயக்கவியலின் இரகசியத்தினுள் எப்படி அவர் ஊடுருவிச் செல்லவில்லை என்று; அதற்கு மாறாக, அவர் **பொருளாதார வகையினங்களை** எடுத்துக் கவனிப்பதில் ஊகசிந்தனை வகைப்பட்ட

மெய்யறிவின் பிரமைகளிலே எப்படி ஈடுபடுகிறுர் என்று; பொருள் உற்பத்தியிலுள்ள ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்துக்குப் பொருத்தமாயிருக்கும் வரலாற்று ரீதியான உற்பத்தி உறவுகளின் தத்துவச் சொல்லுருவமாக அவற்றைக் கருதுவதற்குப் பதிலாக, எப்படி அவர் தமது வெற்றுரைகளால் அவற்றை முன்னிருந்த நிரந்தரக் கருத்துக்களாக உருமாற்றி இந்தச் சுற்று வட்டப்பாதையிலே மறுபடியும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கருத்துக்கு வந்து சேருகிறுர் என்று.*

நான் மேலும் காட்டுகிறேன்: அவர் விமர்சிக்க முன்வந்த ''அரசியல் பொருளாதாரம்'' பற்றி அவருக்கு இருந்த அறிவு எவ்வளவு குறைபாடுடையது, சில சமயங்களில் பள்ளிச் சிறுவன் பாங்கிலும் இருந்தது என்று; விடுதலைக்குரிய பொருளாயத நிலைமைகளைத் தானே உண்டு பண்ணுகிறதாயுள்ள வரலாற்று இயக்கம் பற்றிய ஒரு விமர்சன ரீதியான அறிவிலிருந்து தமது விஞ்ஞானத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக, ''சமுதாயப் பிரச்சினையின் தீர்வுக்கு'' உரிய ஒரு சூத்திரத்தைக் கருத்துமுதல் நிலையிலே நினைத்துருவாக்கிக் கொள்வதற்கான ''விஞ்ஞானம்'' எனப்பட்டதை எப்படி அவரும் கற்பனுவாதிகளும் தேடித் திரிகிறுர்கள் என்று. இன்னும் குறிப்பாக, விஷயமுழுவதற்கும் அடிப்படையாயுள்ள பரிமாற்ற மதிப்பு பொருத்தவரை அவர் எப்படிக் குழம்பிப் போயிருக்கிறுர், தவறு செய்கிறுர், மேம்போக்காக இருக்கிறுர் என்றும், ரிக்கார்டோவின் மதிப்புப் பற்றிய

---

*—''தற்கால உறவுகள்—முதலாளித்துவ உற்பத்தியின் உறவுகள்—இயற்கையானவை என்று பொருளாதாரவாதிகள் சொல்கிற போது, இயற்கையின் விதிகளுக்குப் பொருத்தமாகச் செல்வம் படைக்கப்பட்டும் உற்பத்திச் சக்திகள் வளர்க்கப்பட்டும் வ்ருவதற்கான உறவுகள் இவை என்று உட்கிடையாக உணர்த்துகிறுர்கள். எனவே இந்த உறவுகள் காலத்தின் செல்வாக்குக்கு அப்பாற்பட்டுச் சுதந்தரமாயிருக்கிற இயற்கையான விதிகளாகும். அவை என்றென்றும் சமுதாயத்தை ஆண்டுவர வேண்டிய நிரந்தரமான விதிகளாகும். ஆக, இதுவரை வரலாறு இருந்தது, இனிமேல் ஒன்றுங்கிடையாது.'' (எனது நூலின் பக்கம் 113 ஐப் பார்க்க[68].) [மார்க்ஸ் வரைந்த குறிப்பு.]

தத்துவத்திற்குக் கற்பனுவாதிகள் அளித்த வியாக்கியானத்தை அவர் எப்படி ஒரு புதிய விஞ்ஞானத்துக்கு அடிப்படையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முயல்கிருர் என்றும் காட்டுகிறேன். அவருடைய பொதுவான பார்வைநிலை பொருத்தமட்டில் நான் பின்வரும் முழுவிரிவான மதிப்பீடு செய்தேன்:

''ஒவ்வொரு பொருளாதார உறவுக்கும் ஒரு நல்ல அம்சமும் தீய அம்சமும் உண்டு; இந்த ஒரு விஷயத்தில் திரு. புரூதோன் தன்னை ஏமாற்றிக் கொள்வதில்லை. அவர் நல்ல அம்சத்தைப் பொருளாதாரவாதிகள் விளக்குவதைப் பார்க்கிருர்; தீய அம்சத்தை சோஷலிஸ்டுகள் கண்டிப்பதைப் பார்க்கிருர். அவர் நிரந்தரமான பொருளாதார உறவுகளின் அவசியத்தைப் பொருளாதாரவாதிகளிடமிருந்து இரவல் வாங்கிக் கொள்கிருர்;வறுமையிலே''[பழைய சமுதாயத்தைத் தூக்கியெறியக்கூடிய புரட்சிகரமான, கவிழ்க்கும்படியான அம்சத்தை அதில் பார்ப்பதற்குப் பதிலாக] ''வறுமையைத் தவிர வேறெதையும் பார்க்காத பிரமையை சோஷலிஸ்டுகளிடமிருந்து இரவல் வாங்குகிருர். விஞ்ஞானத்தின் செல்வாக்கை உதவியாகக் கொள்ள விரும்புவதில் அவ்விருவருடனும் உடன்படுகிருர். அவருக்கு விஞ்ஞானம் என்பது ஒரு விஞ்ஞானச் சூத்திரமாகத் தன்னைக் குறுகத் தரித்துக் கொள்கிறது; விஞ்ஞானச் சூத்திரங்களைத் தேடித் திரியும் நபர் அவர். எனவேதான், அவர் அரசியல் பொருளாதாரத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் ஒருங்கே ஒரு விமர்சனம் அளித்திருப்பதைப் பற்றித் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்கிருர்: இருவரையும்விட அவர் தாழ்ந்தவர்தான். பொருளாதாரவாதிகளைவிடத் தாழ்ந்தவர்—காரணம், கையிலே ஒரு மாயாஜாலச் சூத்திரத்தை வைத்திருக்கிற மெய்யறிஞன்போல அவர் முற்றிலும் பொருளாதார வகைப்பட்ட விபரங்களுக்குள் போகாமல் விட்டுவிடலாம் என்று கருதினுர்; சோஷலிஸ்டுகளைவிடத் தாழ்ந்தவர்—காரணம், சிந்தனை முறையிலாயினும் முதலாளித்துவக் கண்ணேட்டத்துக்கு அப்பால் பார்ப்பதற்குப் போதிய தைரியமோ உட்பார்வையோ அவரிடம் கிடையாது....

''முதலாளி வர்க்கத்தினருக்கும் பாட்டாளிகளுக்கும் அப்பால் விஞ்ஞானியாக மேலேறிப் பறக்க விரும்புகிருர் அவர்;

மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையே, அரசியல் பொருளாதாரத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் இடையே இடைவிடாது முன்னும் பின்னும் தள்ளப்பட்டு வருகிற வெறும் **சிறு பூர்ஷ்வாப் பிறவி** அவர்.''[69]

மேலே சொன்ன மதிப்பீடு கடுமையானதாகத் தொனித்தாலும் இன்னமும் அதன் ஒவ்வொரு வார்த்தையையும் இன்று நான் உறுதிப்படுத்தித் தீர வேண்டும். என்ருலும், அதே நேரத்தில் நான் அவரது நூலை சிறுபூர்ஷ்வா சோஷலிஸத்தின் செயல்நெறித் தொகை என்று பிரகடனப்படுத்தித் தத்துவ ரீதியிலே நிரூபித்த காலத்தில் புரூதோன் ஒரு தீவிரப் புரட்சிக்காரர் என்று அரசியல் பொருளாதாரவாதிகளாலும் சோஷலிஸ்டுகளாலும் ஒருங்கே இன்னமும் பழிக்கப்பட்டு வந்தார். எனவேதான், பிற்காலத்திலேகூட அவர் புரட்சிக்குத் ''**துரோகம்**'' செய்தது பற்றி எழுந்த கூக்குரலில் நான் என்றைக்கும் கலந்து கொள்ளவில்லை. மற்றவர்களாலும் தன்னுலும் ஆதியிலேயே தவருகப் புரிந்து கொள்ளப்பட்டிருந்த அவர் ஆதாரமற்ற நம்பிக்கைகளை நிறைவேற்றத் தவறியது அவர் குற்றமல்ல.

சொத்து என்பது என்ன? எனும் நூலுடன் ஒப்பிடும் பொழுது, புரூதோனின் முன்வைப்பு முறையிலுள்ள குறைபாடுகள் அனைத்தும் மிகப் பாதகமாக **வறுமையின் மெய்யறிவு** எனும் நூலிலே தெற்றெனப் புலப்படுத்திக் கொள்கின்றன. அடிக்கடி எழுத்து நடையானது பிரெஞ்சுக்காரர்கள் ampoulé என்று சொல்கிற படாடோபமான நடையாக உள்ளது. அவரது கோல் நாட்டு [Gallic] மதிநுட்பம் அவரைக் கைவிடுகிற போதெல்லாம் ஜெர்மன் மெய்யறிவு ஆய்வு முறை என்று கூறிக்கொண்டு படாடோபமான ஊகசிந்தனைத் துறைச் சொற்கள் உடனே வெளிப்படுகின்றன. தன்னைத் தானே விளம்பரப்படுத்திக் கொள்கிற, தன்னைத்தானே மேன்மைப்படுத்திக் கொள்கிற, தற்பெருமையான தொனியும் ''**விஞ்ஞானம்**'' பற்றிய பிதற்றலும் போலி வெளிக் காட்சியும்—இவை எப்பொழுதுமே எவ்வளவோ அறிவுக் கேடானவை—விடாமல் காதைத் துளைக்கின்றன. அவரது முதல் முயற்சியிலே ஒளிவிட்ட உண்மையான உணர்ச்சி வெம்மைக்குப் பதிலாக இங்கே திட்டமிட்ட முறையிலே சொல்லாட்சித் திறத்தால் சில ஏட்டுப் பகுதிகளுக்குத் தற்காலிகமான

வெப்பம் ஏற்றப்படுகிறது. சுயபோதனை மூலமாக வளர்ந்த நபரின் மெருகேருத வெறுப்பூட்டும் புலமையை—அதிலும் தனது சொந்த தற்படைப்பான சிந்தனை மீது இருந்த ஆதிப் பெருமை உடைக்கப்பட்டுப் போய் இப்போது விஞ்ஞானத் துறையில் அற்பஞக இருக்கிற நிலையில் தானல்லாததை, தன்னிடமில்லாததை இருக்கிறதாகக் காட்டித் தன்னைத் தூக்கி நிறுத்திக் கொள்வது அவசியம் என்று உணர்கிற நிலைமையிலேயுள்ள புலமையை—இத்துடன் கூட்டிக் கொள்ளுங்கள். அப்புறம், துனுவயே போன்ற ஒரு ஆசாமியை (அவர் ஒரு "அரசுக் கவுன்ஸிலர்", உண்மையே) முகஸ்துதி செய்கிறதும், பாட்டாளி வர்க்க இயக்கத்தில் காபே ஆற்றிய பாத்திரத்திற்கு மதிக்கப்பட வேண்டியவராயிருக்க அவர் போன்ற மனிதரை[70] அசிங்கமான முரட்டுத்தனத்துடன்—கூர்மையாகவோ ஆழமாகவோ சரியாகவோ இல்லாத முறையில்—தாக்குகிறதுமான சிறு பூர்ஷ்வாவின் மனப்போக்கு வேறு. இத்தனைக்கும் இந்த துனுவயேக்கு இருக்கிற முக்கியத்துவம் முழுதும் இதுதான்: மூன்று பெரிய, சகிக்க முடியாதபடி சலிப்பூட்டுகிற நூல் தொகைகள் நெடுகிலும் சிக்கனக் கட்டுப்பாடுபற்றி—ஹெல்வீஷயஸ் "On veut que les malheureux soient parfaits" (ஏழைகள் அப்பழுக்கற்றவர்களாக, பத்தரை மாற்றுத் தங்கமாக, இருக்கவேண்டும் என்று கோருவது) என்று வர்ணித்தாரே அந்தச் சிக்கனக் கட்டுப்பாடு பற்றி—பிரச்சாரம் செய்வதிலே அவர் கோமாளித்தனமான உற்சாகம் காட்டினுர்.

புரூதோனுக்கு மிகச் சங்கடமான ஒரு தருணத்தில் பிப்ரவரி புரட்சி வந்து சேர்ந்தது உண்மை, ஏனெனில் அதற்குச் சில வாரங்களுக்கு முன்புதான் "புரட்சிகளின் சகாப்தம்" நிரந்தரமாக மறைந்தாகிவிட்டது என்று மறுக்க முடியாதபடி நிருபித்திருந்தார். அவர் தேசிய அசெம்பிளியில் முன்னுக்கு வந்தது (அது நடப்பு நிலைமைகளைப்பற்றி உட்பார்வை காட்டாமற் போயினுங்கூட) முற்ருகப் புகழத்தக்கதாகும்.[71] ஜூன் புரட்சியெழுச்சிக்குப் பின் அது ஒரு மிகத் தைரியமான செயலாகும். அதோடு கூடுதலாக, ஒரு நல்ல பின்விளைவும் அது ஏற்படுத்தியது: அன்று தனிச்சிறப்பான பிரசுரமாக வெளியிடப்பட்டிருந்த புரூதோனின் யோசனைகளை எதிர்த்து திரு. தியேர் நிகழ்த்திய உரையின்[72] மூலமாக

இந்தப் பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தின் அறிவுத்தூண் குழந்தைகளின் வினவிடைப் புத்தகம் எனும் தளத்தின்மீது நிற்பதை ஐரோப்பா முழுவதும் கண்டு கொண்டது. உண்மையிலே சொன்னல், திரு. தியேருடன் ஒப்பிடும்போது புரூதோன் ஊழிவெள்ளத்துக்கு முந்திய பேருருவமாக ஓங்கி நின்ருர்.

புரூதோன் ''*crédit gratuit*'' [''சுயேச்சையான கடனையும்''] அதனை அடிப்படையாகக் கொண்ட ''**மக்கள் வங்கியையும்**'' ("banque du peuple") கண்டுபிடித்தது அவருடைய கடைசிப் பொருளாதாரச் ''சாதனைகள்'' ஆகும். அவரது கருத்தின் தத்துவ அடிப்படை பூர்ஷ்வா ''அரசியல் பொருளாதாரம்'' பற்றிய முதல் கூறுகளை—அதாவது **பண்டங்களுக்கும் பணத்துக்கும்** இடையேயுள்ள உறவை—தவருகப் புரிந்து கொண்டதிலிருந்து எழுகிறது என்றும் நடைமுறை மேல்கட்டுக் கோப்பு அதைவிட பழைமையான, எவ்வளவோ மேலாக வளர்க்கப்பட்ட திட்டங்களின் வெறும் மறுவமைப்பேயாகும் என்றும் நிரூபித்துள்ளதை எனது **அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனத்துக்குச் செலுத்தும் ஒரு பங்கு,** பகுதி I, பெர்லின் 1859, எனும் நூலில் (59-64 பக்கங்கள்) காணலாம். சில குறிப்பிட்ட பொருளாதார, அரசியல் நிலைமைகளின் கீழ் கடன் அமைப்பு முறையானது—எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் பதினெட்டாம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் ஒரு வர்க்கத்தின் செல்வத்தை மற்ருென்றுக்கு மாற்றிவிடுவதற்கு அது பயன்பட்ட மாதிரியே—தொழிலாளி வர்க்கத்தின் விடுதலையை விரைவுபடுத்துவதற்குப் பயன்பட முடியும் என்பது கேள்விக்கிடமற்றது, வெளிப்படையானது. ஆனல், சமுதாயத்தைப் புனரமைப்பதற்கு அடிப்படையாகக் கடனின் ஒரு தனிச்சிறப்பான வடிவத்தை, வட்டியை ஒழிப்பது என்று கூறப்படுவதைப் பயன்படுத்த முயல்கிற போது வட்டியுள்ள மூலதனத்தை மூலதனத்தின் முக்கியமான வடிவமாகக் கருதுவது முற்றிலும் சிறுபூர்ஷ்வா கற்பனைத் தோற்றமேயாகும். எனவேதான், இதே கற்பனைத் தோற்றமானது மேலும் வளர்க்கப்பட்ட நிலையில் ஏற்கெனவே பதினேழாம் நூற்ருண்டில் ஆங்கிலேயச் சிறு பூர்ஷ்வா வர்க்கத்தின் பொருளாதாரக் கொள்கைவாதிகளிடையே இருக்கக் காணலாம்.

வட்டியுள்ள மூலதனம் குறித்து புரூதோன் பாஸ்தியாவுடன் (1850) நடத்திய வாதப்போர்[73] **வறுமையின் மெய்யறிவை** விட எவ்வளவோ தாழ்ந்ததாகும். பாஸ்தியாகூடத் தம்மைத் தோற்கடிக்க அவர் இடங்கொடுக்கிறார், அடி மேல் அடியாக அடித்து எதிரி வீழ்த்துகிற போது அவர் அகடவிகடமான வீருப்புச் சொற்களிலே இறங்குகிறார்.

சில ஆண்டுகளுக்குமுன் — லெளஸன் அரசாங்கத்தின் தூண்டுதலால் என்று நினைக்கிறேன்—புரூதோன் **வரிவிதிப்பு**[74] பற்றி ஒரு பரிசுக் கட்டுரை எழுதினார். இதில் மேதையின் இறுதிச் சுடர் அணைக்கப்பட்டுவிட்டது. வெறும் சிறுபூர்ஷ்வா தவிர வேறெதுவும் மிஞ்சவில்லை.

அவரது அரசியல், மெய்யறிவு நூல்களைப் பொருத்த வரை, அவையனைத்தும் அவருடைய பொருளாதார நூல்களைப் போலவே அதே முரண்பாடான, இருமையான தன்மையைக் காட்டுகின்றன. மேலும், அவற்றின் மதிப்பு பிரான்ஸுடன் மட்டும் நின்றுவிடுகிறது. என்றபோதிலும், பதினெட்டாம் நூற்றாண்டின் பூர்ஷ்வா வோல்தேர்வாதத்தைவிடவும் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மன் கடவுள் நம்பிக்கையின்மையைவிடவும் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் தமது மத ஈடுபாடு மூலமாகக் காட்டிக் கொள்வது விரும்பத்தக்கது என்று கருதிய காலத்தில் அவர் மதம், திருச்சபை முதலியவற்றின் மீது நடத்திய தாக்குதல்கள் அவரது சொந்த நாட்டிலே பெரும் சிறப்புக்கு உரியவையாகும். மாமன்னர் பீட்டர் ருஷ்யாவின் அநாகரிக நிலையை அநாகரிகமான முறையைக் கொண்டு வீழ்த்தினாரென்றால், புரூதோன் பிரெஞ்சுச் சொற்சிலம்பத்தைச் சொற்சிலம்பத்தைக் கொண்டு வீழ்த்திவிட தம்மால் முடிந்ததனைத்தும் செய்தார். திடீர் ஆட்சி மாற்றம் பற்றிய அவரது நூலும்[75]—அதில் அவர் லூயீ போனப்பார்த்துடன் சரசமாடுகிறார், உண்மையிலே சொன்னால் பிரெஞ்சுத் தொழிலாளிகளிடையே அவரை ஏற்கத்தக்கவராகச் செய்ய முயல்கிறார்—, போலந்துக்கு எதிராக எழுதப்பட்ட அவரது கடைசி நூலும்[76]—அதில் அவர் ஜார் மன்னனின் மாட்சிமையை உயர்த்துவதிலே ஒரு மந்தப் பிறவியின் பண்புமறுப்புப் போக்கை வெளியிடுகிறார்—மோசமான படைப்புகள் மட்டுமின்றி இழிவானவை என்றும் இனங்குறித்துத் தீர

வேண்டும்; என்றாலும் இந்த இழிதகைமை சிறுபூர்ஷ்வா பார்வை நிலையோடு பொருந்துவதாகும்.

அடிக்கடி ரூஸோவுடன் ஒப்பிடப்பட்டிருக்கிறார் புரூதோன். இதைவிடத் தவறானது வேறொன்று இருக்க முடியாது. அவர் நிக்கொலா லெங்கே போல என்று சொல்வதே மேல் — லெங்கேயின் **சொத்துறவுச் சட்டங்கள் பற்றிய தத்துவம்**[77] ஒளிமிக்க நூல் என்று இடையே சொல்லி வைப்போம்.

புரூதோனுக்கு இயக்கவியல் பால் ஒரு இயல்பான ஈடுபாடு இருந்தது. எனினும் விஞ்ஞான இயக்கவியலை என்றைக்கும் புரிந்து கொள்ளாததால் குயுக்திவாதத்துக்கு மேல் அவரால் போக முடியவில்லை. சொல்லப் போனால், இது அவரது சிறு பூர்ஷ்வா பார்வை நிலையோடு பொருந்தி நின்றது. வரலாற்றாசிரியர் ரௌமர் போல, ''ஒரு புறத்தில் இப்படி'' ''மறு புறத்தில் அப்படி'' எனும் போக்குள்ளவன் சிறுபூர்ஷ்வா. இது அவனுடைய பொருளாதார நலன்களுக்குப் பொருத்த மானது; எனவே அவனது அரசியலிலும், விஞ்ஞானக் கருத்துக் களிலும் மதக் கருத்துக்களிலும் கலைக் கருத்துக்களிலும் அப்படியே இருக்கிறது. அவனது ஒழுக்க நெறிகளிலும் சரி, எல்லாவற்றிலும் சரி, அப்படியேதான். அவன் ஒரு உயிர் வாழும் முரண்பாடு. புரூதோன் போல் அவன் மதியொளி மிக்க வனாக இருந்தால் போதும், விரைவிலே தனது முரண்பாடு களோடு விளையாடக் கற்றுக் கொண்டு சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு கவர்ச்சியான, பகட்டான, சில சமயங்களில் பழி கேடான, சில சமயங்களில் ஒளிமயமான முரண்மெய்யுரை களாக அவற்றை வளர்த்திடுவான். இப்படிப்பட்ட பார்வை நிலையிலேயிருந்து விஞ்ஞானத்தில் போலிப் புலமையையும் அரசியலில் இணங்கிப்போகும் போக்கையும் பிரிக்க முடியாது. அந்த ஆசாமியின் தற்பெருமை ஒன்றே ஆட்டிப் படைக்கும் நோக்கமாக மிஞ்சுகிறது; எல்லாத் தற்பெருமையுள்ள மனிதர்களைப் போலவே அவனுக்கு உள்ள ஒரே விருப்பம் அந்தக் கணத்துக்கு வெற்றி பெறுவதுதான், அந்த நேரத்துக்குக் கவனத்தைத் தன்பால் ஈர்த்துக் கொள்வதுதான். ஆகவே ஆட்சியிலிருக்கிற சக்திகளோடு சமரசத்தின் சாயலுங்கூட வைத்துக் கொள்ளாமல் ரூஸோ (எடுத்துக் காட்டுக்குச் சொல்கிறேன்) போன்றவர்களை எப்போதும்

வெகுதொலைவில் விலகி நிற்கச் செய்த சாதாரணமான ஒழுக்கநெறியுணர்ச்சி அவசியகரமாக அணைக்கப்பட்டுப் போகிறது.

ஒருக்கால் எதிர்காலத் தலைமுறையினர் பிரெஞ்சு வளர்ச்சியின் கடைசியிலும் கடைசியாக வந்துள்ள கட்டத்தின் நெப்போலியனாக விளங்கியவர் லுயீ போனப்பார்த் என்றும் அதன் ரூஸோ-வோல்தேராக விளங்கியவர் புரூதோன் என்றும் இந்தக் கட்டத்தைத் தொகுத்துச் சொல்லி வைக்கலாம்.

இனி, இந்த மனிதர் இறந்தபின் இவ்வளவு விரைவிலே இவரைப் பற்றித் தீர்ப்பளிக்கும் பாத்திரத்தை என் மேல் சுமத்திய பொறுப்பை நீங்கள்தான் ஏற்றுத் தீர வேண்டும்.

மிக்க வணக்கத்துடன்,

கார்ல் மார்க்ஸ்

அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்குச் செலுத்தும் ஒரு பங்கு

எனும் மார்க்ஸின் நூலிலிருந்து

ஒரு உடனடியான பண அலகாக உழைப்பு நேரம் பற்றிய தத்துவத்தை முதன்முதலில் முறைமுழுமையுடன் வளர்த்தவர் ஜான் கிரே.*

அவர் மத்திய வங்கியை அதன் கிளைகளின் மூலமாகப் பல்வேறு பண்டங்களின் உற்பத்திக்குச் செலவழித்த உழைப்பு நேரத்துக்குச் சான்றிதழ் அளிக்கச் செய்கிறார். பண்டத்துக்கு மாற்றாக உற்பத்தியாளன் மதிப்பு பற்றிய அதிகாரபூர்வமான சான்றிதழ் பெறுகிறான்—அதாவது, தனது பண்டத்தில் அடங்கியுள்ள உழைப்பு நேரத்துக்குச் சமமான ரசீது பெறுகிறான்,** மற்றும் அதே நேரத்தில் இந்த ஒரு உழைப்பு

---

* ஜான் கிரே: சமுதாய அமைப்புமுறை, முதலியவை. பரிமாற்றக் கோட்பாடு பற்றிய ஒரு ஆய்வுநூல், (*The Social System, etc. A Treatise on the Principle of Exchange*), எடின்பரோ, 1831. இதே ஆசிரியர் எழுதிய பணத்தின் இயல்பும் பயன்பாடும் பற்றிய விரிவுரைகள் (*Lectures on the Nature and Use of Money*), எடின்பரோ, 1848, எனும் நூலை ஒப்பு நோக்குக. பிப்ரவரி புரட்சிக்குப் பின் பிரெஞ்சுத் தற்காலிக அரசாங்கத்துக்கு கிரே ஒரு மகஜர் அனுப்பிவைத்தார்; அதில் பிரான்ஸுக்குத் தேவை "பரிமாற்றத்துக்குரிய ஒரு அமைப்பே" என்றும் "உழைப்புக்குரிய அமைப்பு" அல்ல என்றும் வாதித்தார், அவர் புனைந்துருவாக்கிய பண அமைப்பு முறையிலே இந்தப் பரிமாற்றத்துக்குரிய அமைப்பின் திட்டம் முழுமையுடன் வகுக்கப்பெற்றுள்ளது. சமுதாய அமைப்பு முறை வெளியாகி பதினறு வருடங்களான பிறகு, புனைவாற்றலுள்ள புருதோன் இதே கண்டுபிடிப்புக்கு உரிமைப் பதிவு செய்து கொள்வார் என்று அந்த நல்ல மனிதர் ஜான் கிரேவுக்குச் சூசகமாகக்கூடத் தெரியாது.

** கிரே, சமுதாய அமைப்பு முறை, முதலியவை, பக்கம் 63 பார்க்க. "பணம் என்பது வெறுமே ஒரு ரசீதாக, ஒரு

வாரம், ஒரு உழைப்பு நாள், ஒரு உழைப்பு மணி நேரம், முதலியவற்றிற்கான வங்கித்தாள்கள் அந்த வங்கியின் கிடங்கு களில் பத்திரப்படுத்தப்பட்டுள்ள எல்லாப் பண்டங்களிலும் சம மதிப்புக்கு ஒரு உரிமைச் சீட்டாகப் பயன்படுகிறது.* இது தான் அடிப்படைக் கோட்பாடு, இது கவனிப்போடு விபரமாக வகுக்கப்பட்டு அன்றிருக்கிற ஆங்கிலேய நிறுவனங்களுக்குப் பொருத்தமாக நெடுகிலும் சரிப்படுத்தப்பட்டுள்ளது. கிரே கூறுவதாவது: இந்த அமைப்பு முறையைக் கொண்டு "பணத்தைக் கொண்டு வாங்குவது இப்போது எப்படிச் சுளு வாக இருக்கிறதோ அது போல எப்போதும் பணத்துக்காக விற்பதும் சுளுவாக்கிவிடலாம்; உற்பத்தியானது கிருக்கிக்கு ரிய சமசீரான, என்றுந் தவறுத தோற்றுவாயாக ஆகிவிடும்."** விலைமதிப்புள்ள உலோகங்கள் மற்ற பண்டங்கள் மீதுள்ள தமது "சிறப்புரிமையை" இழந்துவிடும், மற்றும் "அவை சந்தையிலே வெண்ணெய்க்கும் முட்டைக்கும் கம்பளித் துணிக்கும் பஞ்சுத்துணிக்கும் பக்கத்தில் தமக்குரிய இடத்தை எடுத்துக் கொள்ளும், பிறகு விலைமதிப்புள்ள உலோகங் களின் மதிப்பானது வைரத்தின் மதிப்பு போலவே நமக்கு அக்கறையற்றதாகிவிடும்."*** "நமது கட்டுக்கதையான மதிப் பின் நிறையளவான தங்கத்தை நாம் வைத்துக் கொண்டு அதன் சான்றாக—அதை வைத்திருப்பவர் தேசியச் செல்வத்தின் இருப்புக்கு ஒரு குறிப்பிட்ட மதிப்பைச் செலுத்தியிருக்கிறு ரென்றோ அதற்குப் பங்கு செலுத்திய யாராவது ஒருவரிட மிருந்து மேலே சொன்ன மதிப்புக்குப் பெறுவதற்கு உரிமை பெற்றிருக்கிறுரென்றோ காட்டுகிற சான்றாக — மட்டுமே இருக்க வேண்டும்."

* —"விளைபொருளில் உருக்கொண்ட குறிப்பிட்ட மதிப்பை வைத்து அதை ஒரு வங்கியில் போட்டு வைக்கலாம், தேவையான போது திருப்பி எடுத்துக் கொள்ளலாம்; ஏற் படுத்த நினைத்திருக்கும் தேசிய வங்கியில் எவ்வகைப்பட்ட சொத்தையாவது போட்டு வைத்திருக்கிற ஒருவன் தான் போட்டதையே திருப்பியெடுத்துக் கொள்ள வேண்டியதா யில்லாமல் அதற்குச் சம மதிப்புள்ளதாக அந்த வங்கியிலுள்ள எதையாவது எடுத்துக் கொள்ளலாம் என்று பொது ஒப்பு தலின் மூலமாக நிபந்தனை வைத்திருந்தால் போதும்." மேலே குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 67-68.

** மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 16.

*** கிரே, பணம், முதலியவை பற்றிய விரிவுரைகள், பக்கங்கள் 182.

காரணமாக நாட்டின் உற்பத்தித் திறமுள்ள வழிதுறைகளைக் கட்டிப்போட்டு இருக்கவா அல்லது இயல்பான மதிப்பின் நிறையளவான உழைப்பைப் பற்றிப் பயன்படுத்தி அதன் வழியாக நமது உற்பத்தித்திறமுள்ள வழிதுறைகளை விடுவிக்கவா?''*

உழைப்பு நேரம் மதிப்பின் உள்ளார்ந்த அளவையாக இருக்கும் போது அதன் பக்கத்திலே புறத்தேயுள்ள மற்றொரு அளவை ஏன் இருக்க வேண்டும்? பரிமாற்ற மதிப்பு விலையாக வளர்வதேன்? எல்லாப் பண்டங்களும் ஒரேயொரு தனிப் பண்டத்தில் தமது மதிப்புகளை அளவிட்டு அதன் வழியாக அது பரிமாற்ற மதிப்புக்குப் போதியதாயிருக்கும்படியான நிலைக்கு—பணமாக—உருமாற்றப்படுவது ஏன்? இதுதான் கிரே தீர்க்க வேண்டியிருந்த பிரச்சினை. அதைத் தீர்ப்பதற்குப் பதிலாக, சமுதாய உழைப்பின் விளைபொருட்கள் என்கிற வகையில் பண்டங்கள் ஒன்றோடொன்று உடனடியான உறவு கொண்டிருக்க முடியும் என்று அவர் கருதுகிறார். ஆனால், அவை உள்ளது உள்ளபடியேதான் ஒன்றோடொன்று ஒரு உறவு கொண்டிருக்க முடியும். உடனடி நிலையிலே பண்டங்கள் எனப்பட்டவை தனிமைப்படுத்தப்பட்ட, சுயேச்சையான, தனிப்பட்ட உழைப்புத் துண்டுகள், அவை தனிப்பட்ட பரிமாற்றத்தின் இயக்கப் போக்கில் பராதீனமாவதின் மூலமாகப் பொதுப்படையான சமுதாய உழைப்பாக இசைவாணை அளிக்கப்பட வேண்டும் அல்லது பண்ட உற்பத்தியின் அடிப்படையில் உள்ள உழைப்பானது தனித்தனி வேலைத் துண்டுகளின் முழுமையான பராதீனத்தின் மூலமாக மட்டுமே சமுதாய உழைப்பாக ஆகிறது. ஆனால், பண்டங்களில் உள்ள உழைப்பு நேரத்தை உடனடி நிலையில் சமுதாயரீதியானது என்று கிரே மாற்றிப் புகுத்துகிறாரென்றால், அதை அவர் சமுதாய உழைப்பாகவோ அல்லது நேரடியாகச் சம்பந்தமுள்ள தனிநபர்களின் உழைப்பு நேரமாகவோ மாற்றிப் புகுத்துகிறார். ஆக, உண்மையிலே சொன்னால், தங்கம் அல்லது வெள்ளி போன்ற ஒரு குறிப்பிட்ட பண்டம் பொதுப்படையான உழைப்பின் அவதாரமாக மற்ற பண்டங்களோடு வேறுபடுத்திக் காட்ட முடியாது, பரிமாற்ற மதிப்பு விலையாக ஆகாது, பயன்பாடு மதிப்பும் பரிமாற்ற மதிப்பாக

* மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 169.

ஆகாது, விளைபொருள் பண்டமாக ஆகாது, எனவே முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படை ஒழிக்கப்பட்டுவிடும். ஆனால் இது கிரேயின் கருத்து அல்லவே அல்ல. **விளைபொருட்களைப் பண்டங்கள் என்கிற வகையில் உற்பத்தி செய்ய வேண்டும், ஆனால் பண்டங்கள் என்கிற வகையில் பரிமாற்றக் கூடாது.**

இந்தப் புனிதமான விருப்பத்தை நிறைவேற்றித் தரும் பணியை கிரே தேசிய வங்கியிடம் ஒப்படைக்கிறார். ஒரு புறத்தில், வங்கி எனும் வடிவத்தில் சமுதாயமானது தனி நபர்களைத் தனிப்பட்ட பரிமாற்ற நிலைமைகளுக்கு அப்பால் சுதந்தரமாயிருக்கச் செய்கிறது, மற்றொரு புறத்தில் சமுதாயமானது அவர்களைத் தனிப்பட்ட பரிமாற்றத்தின் அடிப்படையில் தொடர்ந்து உற்பத்தி செய்யச் செய்கிறது. இதற்கிடையே, பண்டப் பரிமாற்றத்திலிருந்து உதிக்கும் பணத்தைச் ''சீர்திருத்த'' மட்டுமே கிரே விரும்புகிறார் என்றாலும் உள்ளோடும் தர்க்க முறையானது அவரை முதலாளித்துவ உற்பத்தி நிலைமைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கைவிடக் கட்டாயப்படுத்துகிறது. எனவேதான், அவர் மூலதனத்தைத் தேசிய மூலதனமாக மாற்றுகிறார்*, நிலச் சொத்தைத் தேசியச் சொத்தாக மாற்றுகிறார்,** மற்றும் அவரது வங்கியை நெருங்கிப் பரிசீலித்தால் தெரியும்—அது ஒரு கையால் பண்டங்களை வாங்கிக் கொண்டு, கொடுக்கப்பட்ட உழைப்புக்குரிய சான்றிதழ்களை மற்றொரு கையால் வினியோகித்துக் கொண்டிருப்பது மட்டுமின்றி உற்பத்தியையே ஒழுங்கு முறைப்படுத்துகிறது, என்று. அவருடைய கடைசி நூலாகிய **பணத்தின் இயல்பும் பயன்பாடும் பற்றிய விரிவுரைகளில்** கிரே கவலையோடு தமது உழைப்புப் பணத்தை வெறுமே ஒரு முதலாளித்துவச் சீர்திருத்தமாகச் சித்திரிக்க முயன்று மேலும் தெட்டத் தெளிவான அபத்தத்தில் மாட்டிக் கொள்கிறார்.

ஒவ்வொரு பண்டமும் உடனடிநிலையில் பணமாகும். இது பண்டங்களைப் பற்றி கிரே செய்த முழுமையற்ற, எனவே பொய்யான, பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட தத்துவம்.

---

* ''ஒவ்வொரு நாட்டின் பண்ட விவகாரமும் ஒரு தேசிய மூலதனத்தின் அடிப்படையில் நடத்தப்படும்.'' (ஜான் கிரே, **சமுதாய அமைப்புமுறை, முதலியவை,** பக்கம் 171.)

** ''நிலம் தேசியச் சொத்தாக மாற்றப்பட வேண்டும்.'' (மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 298.)

''உழைப்புப் பணம்'', ''தேசிய வங்கி'', ''பண்டக் கிடங்குகள்'' ஆகியவற்றின் ''உயிர்ப்பியக்கமுள்ள'' நிர்மாணம் ஒரு கனவுச் சித்திரமே, அதில் வறட்டுக் கோட்பாடு ஒரு உலகளாவிய விதியாக ஒப்பேற்றப்படுகிறது. ஒரு பண்டம் உடனடி நிலையில் பணமாகும் என்றோ அதில் அடங்கியுள்ள தனிப்பட்ட நபரின் குறிப்பிட்ட உழைப்பு உடனடி நிலையில் சமுதாய உழைப்பாகும் என்றோ சொல்கிற வறட்டுக் கோட்பாடு அதை ஒரு வங்கி நம்பி அதன்படி செயல்படுவதால் மட்டும் உண்மையாகி விடாது என்பது இயல்பு. இப்படிப்பட்ட வழக்கில் நடைமுறை விமர்சனத்தின் இடத்தைப் பெரும்பாலும் திவாலாகிவிடும் நிகழ்ச்சி எடுத்துக் கொள்ளும். கிரேவுக்குள்ளேயே மறைந்து கிடப்பது, சொல்லப் போனால் அவருக்கே தெரியாமல் இரகசியமாக இருந்து வருவது — அதாவது, பணத்தை ஒழித்துவிடுவது, பணத்தோடு பரிமாற்ற மதிப்பை ஒழித்துவிடுவது, பரிமாற்ற மதிப்போடு பண்டங்களை ஒழித்துவிடுவது, பண்டங்களோடு முதலாளித்துவ உற்பத்தி அமைப்பு முறையை ஒழித்துவிடுவது என்கிற புனிதமான விருப்பத்துக்குரிய பொருளாதாரத் தொனியுள்ள சொற்றொடர்—இதை நேருக்கு நேராகச் சில ஆங்கிலேய சோஷலிஸ்டுகள் வெளியிட்டு கிரேவுக்குச் சற்று முன்பும் சற்று பின்பும் எழுதியுள்ளனர்.* ஆனால் பணத்தின் இழிநிலையையும் பண்டங்கள் தேவலோகத்துக்கு ஏறிப்போவதையும் சோஷலிஸத்தின் உட்பருப்பாகப் பிரச்சாரம் செய்வதும், அதன் வழியாக, பண்டங்களுக்கும் பணத்துக்கும் அவசியகரமாக இருக்கும் தொடர்பைப் பற்றிய சாதாரணமான தப்பபிப்பிராயமாக சோஷலிஸத்தைத் தீர்த்து முடிப்பதும் புருதோனுக்கும் அவரது கருத்துப்பிரிவினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ள வேலையாகும்.**

---

*— எடுத்துக்காட்டுக்கு: வி. தாம்ப்ஸன்: **செல்வ வினியோகத்திற்குரிய கோட்பாடுகளைப் பற்றிய ஒரு விசாரணை,** லண்டன் 1824; பிரே: **தொழிலாளர் படும் அநீதிகளும் தொழிலாளர் தரும் பரிகாரமும்,** லீட்ஸ் 1839 பார்க்க.

** பணம் பற்றிய இந்த மிகையுணர்ச்சிப் பாங்குள்ள தத்துவத்துக்குரிய தொகுப்புத்திரட்டாக ஆல்ஃப்ரெட் டாரிமோன் எழுதிய **வங்கிகளின் சீர்திருத்தம் பற்றி.** (*De la réforme des banques*), பாரிஸ், 1856, என்கிற நூலைக் கருதலாம்.

சுயேச்சையான வாணிபம் பற்றிய பிரச்சினை குறித்து

புருஸெல்ஸ் ஜனநாயக மன்றத்தின் முன்னிலையில் 1848 ஜனவரி 9ல் கார்ல் மார்க்ஸ் நிகழ்த்திய சொற்பொழிவு[78]

ஐயன்மீர்,

இங்கிலாந்தில் தானியச் சட்டங்களை ரத்துச் செய்தது பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுயேச்சையான வாணிபத்துக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும். முதலாளிகள் சுயேச்சையான வாணிபத்தைப் பற்றிப் பேசுகிற ஒவ்வொரு நாட்டிலும் அவர்கள் தானியத்திலும் கச்சா பொருட்களிலும் சுயேச்சையான வாணிபத்தைப் பற்றியே முதன்மையாக மனத்தில் கொண்டுள்ளனர். ''வெளிநாட்டுத் தானியம் மீது காப்புச் சுங்கவரிகளைப் போடுவது பழிகேடானதாகும், அது மக்களின் பஞ்சத்தை வைத்துப் பணம் பண்ணுவதாகும்.''

மலிவான உணவு, உயர்வான கூலி என்கிற ஒரே குறிக்கோளுக்காக ஆங்கிலேய சுயேச்சை வாணிப வாதிகள்[79] லட்சக் கணக்கிலே பணம் செலவழித்துள்ளனர், அவர்களின் உற்சாகம் ஏற்கெனவே ஐரோப்பாவிலுள்ள அவர்களுடைய சகோதரர்களிடையே பரவிவிட்டிருக்கிறது. பொதுவாகச் சொன்னால், சுயேச்சையான வாணிபத்தைக் கோருகிறவர்கள் உழைக்கும் மக்களின் நிலைமையை மேம்படுத்துவதற்காகவே அதை விரும்புகிறார்கள்.

ஆனால், இதில் வேடிக்கை என்னவென்றால், யாருக்காக மலிவான உணவு பெற்றுக் கொடுக்கப்பட விருக்கிறதோ அவர்கள் மிகவும் நன்றிகெட்டவர்களாக இருக்கிறார்கள். பிரான்ஸில் மலிவான அரசாங்கத்துக்கு மதிப்பில்லாதது போலவே இங்கிலாந்தில் மலிவான உணவுக்கு மதிப்பில்லை. இந்தத் தியாகச்செம்மல்களை, பௌரிங், பிரைட் முதலிய குழுவினரை மக்கள் தமது மிகக் கொடிய எதிரிகளாகவும் மிகவும் வெட்கங்கெட்ட ஆஷாடபூதிகளாகவும் கருதுகின்றனர்.

இங்கிலாந்தில் மிதவாதிகளுக்கும் ஜனநாயகவாதிகளுக்கும் இடையே நடக்கும் போராட்டம் சுயேச்சை வாணிப வாதிகளுக்கும் சார்ட்டிஸ்டுகளுக்கும் இடையே நடக்கும் போராட்டமாகப் பெயர் எடுத்துள்ளதை எல்லோரும் அறிவார்கள்.

ஆங்கிலேயச் சுயேச்சை வாணிப வாதிகள் தங்களை ஊக்குவிக்கும் நன்னோக்கங்களை மக்களிடையே எப்படி நிரூபித்திருக்கிறார்கள் என்று இப்போது பார்ப்போம்.

அவர்கள் தொழிற்சாலைத் தொழிலாளிகளிடம் இவ்வாறு கூறினார்கள்:

''தானியம் மீது வசூலிக்கும் காப்புவரி கூலி மீது போட்ட வரியாகும்; இந்த வரியை அந்த மத்தியகாலச் சீமான்களாகிய நிலப்பிரபுக்களிடம் நீங்கள் செலுத்துகிறீர்கள்; உங்கள் நிலைமை மோசமாக இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் வாழ்க்கைக்கு வேண்டிய உடனடியான, அத்தியாவசியப் பொருட்கள் விலையுயர்வாக இருப்பதேயாகும்.''

தொழிலாளிகள் முதலாளிகளிடம் திருப்பிக் கேட்டார்கள்:

''சென்ற முப்பது ஆண்டுகளின் போக்கிலே நமது தொழில்துறை மிகப் பெரிய வளர்ச்சி கண்டிருக்கிறபோது, தகவுப் பொருத்தத்தில் தானிய விலையின் ஏற்றத்தைவிட விரைவாக எங்கள் கூலி விழுந்திருக்கிறதே, அது எப்படி?

''நாங்கள் நிலப்பிரபுக்களிடம் செலுத்துவதாக நீங்கள் கூறும் வரி ஒரு வாரத்துக்கு ஒரு தொழிலாளிக்குச் சுமார் மூன்று பென்ஸ் ஆகிறது. ஆனபோதிலும், 1815-1843 இடையே கைத்தறி நெசவாளியின் கூலி வாரத்துக்கு 25 ஷில்லிங்காக இருந்தது 5 ஷில்லிங்காகக் குறைந்துள்ளது, விசைதறி நெசவாளியின் கூலி 1823-1843 இடையே வாரத்துக்கு 20 ஷில்லிங்காக இருந்தது 8 ஷில்லிங்காகக் குறைந்திருக்கிறது.

''மேலும், இந்தக் காலப்பகுதி முழுவதிலும் நாங்கள் நிலப்பிரபுக்களுக்குச் செலுத்திய வரியின் பகுதி மூன்று பென்ஸுக்கு மேல் என்றைக்கும் போகக் கிடையாது. பிறகு, 1834ல் ரொட்டி மலிவாகவும் பண்டவிவகாரம் நல்லபடியாக நடந்து கொண்டும் இருந்த போது, எங்களிடம் நீங்கள் சொன்னதென்ன? 'நீங்கள் கஷ்டப்படுவதற்குக் காரணம் அளவுக்கு மிஞ்சிக் குழந்தைகள் இருப்பதுதான். உங்கள் உழைப்பை

விட உங்கள் திருமணங்கள் அதிகமாக உற்பத்தி செய்கின்றன!' என்று சொன்னீர்கள்.

''எங்களிடம் நீங்கள் சொன்ன அசல் வார்த்தைகள் இவை, மற்றும் புதிய ஏழைச் சட்டங்களைப் போடுவதிலும் தொழிலாளி வர்க்கத்துக்குக் கொடிய சிறைச் சாலைகளாக வாய்த்துள்ள வேலைக்கூடங்கள் கட்டுவதிலும் முனைந்தீர்கள்.''

இதற்கு ஆலை முதலாளிகள் பதிலளித்ததாவது:

''மதிப்புக்குரிய தொழிலாளிகளே, நீங்கள் சொல்வது மெத்தச் சரி; தானிய விலை மட்டுமல்ல தொழிலாளிகளிடையேயிருக்கும் போட்டியும் சேர்ந்துதான் கூலியை நிர்ணயிக்கிறது.

''ஒன்று மட்டும் நன்ருகச் சிந்தியுங்கள், நமது மண் வெறும் கல்லும் மணல்மேடுமாக இருக்கிறது. பூந்தொட்டிகளில் தானியத்தை விளைக்க முடியும் என்று நிச்சயமாக நீங்கள் நினைக்கமாட்டீர்கள். ஆகவே, முற்றிலும் மலடான மண்ணிலே நமது மூலதனத்தையும் நமது உழைப்பையும் நீராக இறைப்பதற்குப் பதிலாக விவசாயத்தைக் கைவிட்டு தொழில் துறையில் மட்டுமே நாம் ஈடுபட்டோமானுல் ஐரோப்பா முழுவதும் தனது தொழிற்சாலைகளைக் கைவிட்டு விடும், இங்கிலாந்து ஒரு பெரிய தொழிற்சாலை நகரமாக அமையும், ஐரோப்பாவின் பாக்கிப் பகுதி அதன் கிராமப்புறமாக இருக்கும்.''

இவ்வாறு தொழிலாளிகளிடம் பொழிந்து தள்ளிக் கொண்டிருக்கிற வேளையில் முதலாளியைக் கேள்வி கேட்டுச் சிறுவியாபாரி சொல்கிறதாவது:

''நாம் தானியச் சட்டங்களை[80] ரத்துச் செய்தால் நிச்சயமாக விவசாயத்தை அழிப்போம். அப்படியிருந்தும், மற்ற நாடுகள் தத்தம் தொழிற்சாலைகளைக் கைவிட்டு விட்டு நமது தொழிற்சாலைகளிடமிருந்து வாங்கும்படி நாம் கட்டாயப் படுத்த மாட்டோம்.

''பிறகு விளைவென்னவாகும்? இன்று நாட்டில் எனக்குள்ள வாடிக்கைக்காரர்களை இழப்பேன், உள்நாட்டு வர்த்தகமும் அதன் சந்தையை இழக்கும்.''

ஆலை முதலாளி தொழிலாளிகளிடம் முதுகைத் திருப்பிக் கொண்டு கடைக்காரரிடம் சொல்கிறதாவது:

''அதுவா, அதை எங்களிடம் விட்டுவிடுங்கள்! தானியம்

மீதுள்ள காப்புவரி நீக்கப்பட்டானதுமே வெளி நாட்டி லிருந்து மலிவான தானியத்தை இறக்குமதி செய்வோம். பிறகு நாம் தானியம் வாங்கிக் கொள்கிற நாடுகளில் கூலி உயர்ந்து வரும் அதே வேளையில் நாங்கள் கூலியைக் குறைப் போம்.

''ஆக நாம் இப்போது அனுபவித்து வரும் அனுகூலங் களோடுகூட குறைவான கூலி என்கிற அனுகூலமும் கிடைக் கும், இந்த அனுகூலங்கள் அனைத்தையும் வைத்துக் கொண்டு ஐரோப்பா நம்மிடமிருந்து வாங்கும்படிச் சுளுவாக நிர்ப் பந்திப்போம்.''

ஆனல் இப்போது விவசாயிகளும் விவசாயத் தொழி லாளிகளும் விவாதத்தில் சேர்ந்து கொள்கிறார்கள்.

''அதிருக்கட்டும், நாங்கள் என்னுவது?

''எங்கள் பிழைப்புக்குரிய விவசாயத்தின் மீது மரண தண்டனை விதிக்கப் போகிறோமா? எங்கள் காலடியிலிருக்கும் மண்ணை வெட்டிப் பிடுங்கிவிடுவதற்கு நாங்கள் அனுமதிக்க வேண்டுமா?''

இதற்கு முழுமையாகப் பதிலளிக்கும் வகையில், தானியச் சட்டங்கள் ரத்துச் செய்யப்படுவதால் ஆங்கிலேய விவ சாயத்துக்கு விளையக்கூடிய நல்ல பாதிப்பு குறித்து எழுதப் படும் தலைசிறந்த மூன்று கட்டுரைகளுக்குப் பரிசு அளிக்கப் போவதாகத் தானியச்சட்ட எதிர்ப்புச் சங்கம்[81] தெரிவித்த தோடு நின்று கொண்டது.

திருவாளர்கள் ஹோப், மோர்ஸ், கிரெக் இந்தப் பரிசு களைத் தட்டிச் சென்றார்கள், அவர்களின் கட்டுரைகள் பல் லாயிரக் கணக்கான பிரதிகளிலே கிராமப்புறங்கள் முழு வதிலும் வினியோகிக்கப்பட்டன.

பரிசு பெற்றவர்களில் முதலாவது நபர் வெளிநாட்டுத் தானியத்தைச் சுயேச்சையாக இறக்குமதி செய்வதால் குத்தகை விவசாயியோ விவசாயத் தொழிலாளியோ நஷ்ட மடைய மாட்டார்கள், நிலப்பிரபுவுக்குத்தான் நஷ்டம் என்று நிரூபிப்பதில் ஈடுபடுகிறார். அவர் வியந்து கூறுகிறார்: ''ஆங் கிலேயக் குத்தகை விவசாயி தானியச்சட்ட ரத்து குறித்து அச்சப்பட வேண்டியதில்லை, ஏனெனில் இங்கிலாந்து போல் இவ்வளவு நல்ல தானியத்தை இவ்வளவு மலிவாக வேறெந்த நாடும் உற்பத்தி செய்ய முடியாது.

''எனவே தானிய விலை விழுந்தாலுங்கூட அது உங்களைத் தாக்காது, ஏனெனில் இந்த வீழ்ச்சி வாடகையைத்தான் பாதிக்கும், வாடகைதான் குறையும், முதலாளியின் இலாபங்களோ கூலியோ குறையாமல் அப்படியே இருக்கும்.''

பரிசு பெற்ற இரண்டாவது ஆசாமி திரு. மோர்ஸ் இதற்கு மாருக, ரத்து செய்வதின் விளைவாகத் தானிய விலை உயரும் என்று சாதிக்கிருர். காப்பு வரிகள் என்றைக்கும் தானியத்துக்கு இலாபகரமான விலை பெற்றுத் தந்தது கிடையாது என்று நிரூபிப்பதற்கு அளவற்ற முயற்சி எடுத்துக் கொள்கிருர்.

தமது இடித்துரைக்கு ஆதரவாக அவர் கூறும் விஷயம், வெளிநாட்டுத் தானியத்தை இறக்குமதி செய்த பொழுதெல்லாம் இங்கிலாந்தில் தானிய விலை கணிசமாக உயர்ந்திருக்கிறது, இறக்குமதி அற்பமாக இருந்த போது விலை தீவிரமாகக் குறைந்திருக்கிறது என்பது. உயர்வான விலைக்குக் காரணம் இறக்குமதி அல்ல, உயர்வான விலைதான் இறக்குமதிக்குக் காரணம் என்பதை இந்தப் பரிசு பெற்றவர் மறந்துவிடுகிருர்.

மற்றும், பரிசு பெற்ற தமது சகபாடிக்கு நேர் முரணுக அவர் தானியத்தின் ஒவ்வொரு விலை உயர்வும் குத்தகை விவசாயிக்கும் விவசாயத் தொழிலாளிக்கும் ஒருங்கே இலாபகரமானது, நிலப்பிரபுவுக்கு இலாபகாரமானதில்லை என்று இடித்துரைக்கிருர்.

பரிசு பெற்ற மூன்ருவது ஆசாமி திரு. கிரெக் ஒரு பெரிய ஆலை முதலாளி, அவரது கட்டுரை பெரிய குத்தகைதாரர்களுக்காக எழுதப்பட்டது, அவருக்கு இந்த முட்டாள்தனங்களைச் சகிக்க முடியவில்லை. அவரது சொல் மேலும் விஞ்ஞான வகைப்பட்டது.

தானியச் சட்டங்கள் தானிய விலைகளை உயர்த்துவது மூலமாக மட்டுமே வாடகையை உயர்த்த முடியும் என்றும், கீழ்த்தரமான நிலத்தில் மூலதனம் ஈடுபடும்படி கட்டாயப்படுத்துவதின் மூலமாக மட்டுமே அந்தச் சட்டங்கள் தானிய விலையை உயர்த்த முடியும் என்றும் அவர் ஒப்புக் கொள்கிருர், மேலும் இதை மிக எளிமையாகவும் விளக்குகிருர்.

மக்கட்தொகை வளர்வதற்குத் தகவுப் பொருத்தமாக, வெளிநாட்டுத் தானியம் இறக்குமதி செய்ய முடியாவிட்

டால் குறைவான வளமுள்ள நிலத்தைப் பயன்படுத்தியாக வேண்டும், இதில் பயிர் செய்வதற்கு அதிகச் செலவாகும், எனவே இந்நிலத்தின் விளைபொருள் மேலும் விலை உயர்வாயிருக்கும்.

தானியத்துக்கு நிர்ப்பந்தமான விற்பனை இருப்பதினால் அவசியத்தை முன்னிட்டு விலையானது செலவுமிக்க நிலத்தின் விளைபொருளுக்கு ஆகிற விலையைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விலைக்கும் நல்ல தரமுள்ள நிலத்தில் ஆகிற உற்பத்திச் செலவுக்கும் இருக்கும் வித்தியாசமே வாடகை ஆகும்.

எனவே, தானியச் சட்டங்களை ரத்துச் செய்வதின் விளைவாகத் தானிய விலையும் அதன் விளைவாக வாடகையும் விழுமேயானால் அதற்குக் காரணம் மேற்கொண்டு கீழ்த் தரமான நிலத்தில் பயிர் செய்ய மாட்டார்கள். எனவே வாடகைக் குறைப்பு தவிர்க்க முடியாதபடி குத்தகை விவசாயிகளில் ஒரு பகுதியினரை அழித்துத் தீர வேண்டும்.

திரு. கிரெகின் எழுத்துக்களைப் புரிந்து கொள்ளச் செய்வதற்கு இந்தக் குறிப்புகள் அவசியமாயின.

அவர் சொல்வதாவது: ''விவசாயத்தைக் கொண்டு பிழைப்பு நடத்த முடியாத சிறு விவசாயிகள் தொழில் துறையிலே வழிவகை காண்பார்கள். பெரும் குத்தகை விவசாயிகள் பொருத்தவரை, அவர்கள் இலாபமடையாமல் இருக்க முடியாது. ஒன்று, நிலப்பிரபுக்கள் அவர்களிடம் மிக மலிவாக நிலத்தை விற்க வேண்டி வரும், அல்லது மிக நீண்ட காலப் பகுதிகளுக்குக் குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுக்கவேண்டிவரும்.இதனால் குத்தகை விவசாயிகள் நிலத்தில் பெருமளவிலே முதலீடு செய்யவும் மேலும் பெரிய அளவில் விவசாய இயந்திரங்களைப் பயன்படுத்தவும் உடலுழைப்பை மிச்சப்படுத்தவும் (தானியச் சட்டரத்தின் உடனடி விளைவாகப் பொதுவான கூலி வீழ்ச்சி ஏற்பட்டு இந்த உடலுழைப்பு மேலும் மலிவாகியிருக்கும்) இடங் கிடைக்கும்.''

''இயேசு நாதரே சுயேச்சையான வாணிபம், சுயேச்சையான வாணிபமே இயேசு நாதர்'' என்று ஒரு பொதுக் கூட்டத்தில் வியந்து கூறி டாக்டர் பௌரிங் இந்த வாதங்களுக்கெல்லாம் மதத்தின் தீட்சை அளித்தார்.

மலிவான ரொட்டி தொழிலாளிகளுக்குக் கவர்ச்சிகர மாயிருக்கச் செய்ய இந்த ஆஷாடபூதித்தனம் அனைத்தாலும் முடியாமற் போனதைப் புரிந்து கொள்ள முடியும்.

மேலும் ஆலை முதலாளிகளின் திடீர் தயாள சிந்தனையைத் தொழிலாளிகள் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்— இதே ஆசாமிகள் ஆலைத் தொழிலாளிகளின் வேலை நேரத்தைப் பன்னிரண்டிலிருந்து பத்தாகக் குறைக்கும் படியான பத்து மணி நேர மசோதாவை எதிர்ப்பதில் சுறுசுறுப்பாயிருக்கிற பொழுது?[82]

இந்த ஆலை முதலாளிகளின் தயாள சிந்தனையைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்து கொள்வதற்கு எல்லா ஆலைகளிலும் நடைமுறையிலிருக்கும் தொழிற்சாலை ஒழுங்குமுறை விதிகளை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஆலை முதலாளியும் தனது தனிப்பட்ட உபயோகத்துக்காக ஒரு அசல் குற்றச்சட்டத் தொகுதியே வைத்திருக்கிறான், அறிந்தோ அறியாமலோ செய்கிற ஒவ்வொரு குற்றத்துக்கும் அதில் தண்டனைக் கட்டணங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஒரு தொழிலாளி துரதிருஷ்டவசமாக நாற்காலியில் உட்கார்ந்தாலும் சரி, அல்லது குசுகுசுத்தாலோ பேசினாலோ சிரித்தாலோ சரி, இரண்டொரு நிமிடம் தாமதித்து வந்தாலும் சரி, இயந்திரத்தின் ஏதாவது ஒரு பாகம் உடைந்தாலும் சரி, விரும்பிய தரத்துக்கு வேலை செய்யாவிட்டாலும் சரி — இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம்—ஒவ்வொன்றுக்கும் இன்னின்ன தொகை என்று கட்டுகிறான். தொழிலாளி உண்மையிலே பாழ்படுத்தியதைவிட இந்தத் தண்டனைக் கட்டணங்கள் எப்போதும் அதிகமாயிருக்கும். மேலும் இந்தத் தண்டனைக் கட்டணங்களைச் செலுத்தச் செய்வதற்குத் தொழிலாளிக்கு நிறைய வாய்ப்பளிக்கும் முறையில் தொழிற்சாலைக் கடிகாரத்தை முன்னுக்குத் திருப்பி வைக்கிறார்கள், நல்ல சாமான் செய்வதற்கு அவனிடம் மோசமான கச்சா பொருளைக் கொடுக்கிறார்கள். விதிமீறல் வழக்குகளைப் பெருக்குவதில் போதிய திறமை இல்லாத மேஸ்திரி வேலையிலிருந்து நீக்கப்படுகிறான்.

இந்தத் தனியார் சட்டம் இப்படிப்பட்ட விதிமீறல்களைப் படைக்கும் குறிப்பான நோக்கத்துக்காகவே உருவாக்கப்

படுகின்றன, மற்றும் பணம் பண்ணும் நோக்கத்துடன் இந்த விதிமீறல்களை உற்பத்தி செய்கிறார்கள். இவ்வாறு, பெயரள விலுள்ள கூலியையும் குறைப்பதற்கும் மற்றும் தொழிலாளி யின் வசமில்லாத தற்செயல்களிலிருந்தும் இலாபமடை வதற்கும் எல்லா வழிவகைகளையும் ஆலை முதலாளி பயன் படுத்துகிறான்.

தொழிலாளிகளின் வாழ்க்கையை நிவர்த்திக்கும் ஒரே நோக்கத்துக்காகத் தாங்கள் ஏராளமாகப் பணம் செலவழிக்க முடியும் என்று தொழிலாளிகளை நம்பச் செய்ய முயலும் அதே தயாளச் சிந்தனைக்காரர்களே இந்த ஆலை முதலாளி கள். ஆக, ஒரு புறத்தில், தொழிற்சாலை ஒழுங்குமுறைகள் மூலமாக மிகவும் அற்பத்தனமான வழியிலே அவர்கள் தொழிலாளிகளின் கூலியைச் சிறிதுசிறிதாக வெட்டுகிறார்கள், மறுபுறத்தில் தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்தின் மூலமாக அதே கூலியை உயர்த்துவதற்கு அவர்கள் மிகப் பெரிய தியாகங்கள் புரிய முன்வருகிறார்கள்.

அவர்கள் பெருஞ் செலவில் அரண்மனைகள் கட்டி அதில் அந்தச் சங்கம் ஒரு மாதிரியான தனது அதிகாரபூர்வமான ஜாகை வைத்துக் கொள்கிறது; சுயேச்சை வாணிபத்தின் சுவி சேஷத்தைப் பிரச்சாரம் செய்வதற்குப் பிரச்சாரப் படையை இங்கிலாந்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் அனுப்பி வைக்கிறார்கள்; தொழிலாளிகளின் நலன்களைத் தொழிலாளி களுக்கே தெளிவுபடுத்துவதற்காகத் துண்டுப் பிரசுரங்களைப் பல்லாயிரக்கணக்கிலே அச்சடித்து இலவசமாக வினியோகித் துள்ளனர், தமது இலட்சியத்துக்கு ஆதரவாகப் பத்திரிகை களைத் திரட்டப் பெருந்தொகைகள் செலவழிக்கின்றனர்; சுயேச்சையான வாணிபம் கோரும் இயக்கத்தை நடத்திச் செல்வதற்கு ஒரு பெரிய நிர்வாக அமைப்பு முறையை அமைக்கிறார்கள், அவர்களின் பேச்சுத்திறன் முழுவதையும் பொதுக் கூட்டங்களிலே வெளிப்படுத்துகின்றனர். இப்படிப் பட்ட ஒரு பொதுக் கூட்டத்திலேதான் ஒரு தொழிலாளி கத்தினான்:

''நிலப்பிரபுக்கள் எங்கள் எலும்புகளை விற்பதாக ஏற்பட் டால் அவற்றை முதலில் வாங்க முன்வரக் கூடியவர்கள் ஆலை முதலாளிகளாகிய நீங்கள்தான், அவற்றை நீராவியாலை யிலே போட்டு மாவாக்கப் பார்ப்பீர்கள்'' என்று.

நிலப்பிரபுக்களுக்கும் ஆலை முதலாளிகளுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தின் குறிபொருளை ஆங்கிலேயத் தொழிலாளிகள் மிக நன்றாகப் புரிந்து கொண்டுள்ளனர். கூலியைக் குறைப்பதற்காக ரொட்டியின் விலை குறைக்கப்பட விருக்கிறது என்றும் வாடகை எந்த அளவுக்குக் குறைகிறதோ அந்த அளவுக்குத் தொழில்துறை இலாபம் உயரும் என்றும் அவர்கள் நன்றாக அறிவார்கள்.

சுயேச்சையான வாணிபத்தின் அபோஸ்தலரும் நமது நூற்றாண்டின் தலைசிறந்த பொருளாதாரவாதியும் ஆகிய ரிக்கார்டோ இவ்விஷயத்தில் முற்றாகத் தொழிலாளிகளுடன் உடன்படுகிறார். அரசியல் பொருளாதாரம் பற்றிய அவரது புகழ்பெற்ற நூலில் அவர் கூறுவதாவது:

''நாம் நமது சொந்தத் தானியத்தைப் பயிர் செய்து கொள்வதற்குப் பதிலாக... மேலும் மலிவான விலையில் நமக்கு வேண்டியதை வினியோகித்துக் கொள்ள இடமளிக்கிற ஒரு புதிய சந்தையைக் கண்டுபிடிப்போமேயானால் கூலி குறையும், இலாபம் உயரும். விவசாயப் பொருளின் விலை வீழ்ச்சி நிலத்தில் பாடுபடும் தொழிலாளியின் கூலியைக் குறைப்பதோடல்லாமல் வர்த்தகத்திலும் தொழிலிலும் வேலை பார்க்கும் எல்லோருடைய கூலியையும் குறைத்து விடும்.''[83]

தொழிலாளி முன்னே ஐந்து பிராங்குகள் வாங்கிக் கொண்டிருந்தது போய் தானியம் மலிவாகிவிட்ட காரணத்தால் நான்கு பிராங்குகள் மட்டும் பெறுகிறதைப் பற்றி அவனுக்கு அக்கறை இல்லை என்று நினைக்காதீர்கள்.

இலாபத்தோடு ஒப்பிடும் போது எப்போதும் கூலி விழுந்தே வந்திருக்கிறது. மற்றும், முதலாளியின் சமூக நிலையோடு ஒப்பிடும் போது அவனது சமூக நிலை மேலும் மோசமாகிவிட்டிருப்பது தெளிவாகவில்லையா? அவை மட்டுமல்ல, உண்மையிலே பார்த்தால் அவன் மேலும் நிறைய இழக்கிறான்.

தானிய விலை உயர்வாகவும் கூடவே கூலியும் உயர்வாகவும் இருந்து வந்தவரை அவன் ரொட்டி சாப்பிடுவதில் கொஞ்சம் குறைத்துக் கொண்டு மிச்சப்படுவதை வைத்து வேறு இன்பங்கள் நுகரப் போதுமானதாயிருந்தது. ஆனால் ரொட்டி மிகவும் மலிவாகி கூடவே கூலியும் மிக மலிவாகிய

வுடன் அவன் வேறு பொருட்கள் வாங்குவதற்கு ரொட்டியில் அனேகமாக எதுவும் மிச்சம் பிடிக்க முடியாது.

சுயேச்சை வாணிப வாதிகளின் பிரமைகளையோ பொய்களையோ தாங்கள் நம்பி மோசம் போகிறவர்களல்ல என்று அவர்களுக்கு ஆங்கிலேயத் தொழிலாளர்கள் உணரச் செய்துள்ளனர்; அப்படியிருந்தும் நிலப்பிரபுக்களுக்கு எதிராக அவர்களோடு தொழிலாளிகள் ஒன்றுபட்டு நின்றார்களென்றால் அது நிலப்பிரபுத்துவ முறையின் மிச்சசொச்சங்களை ஒழிக்க வேண்டும், தாங்கள் சமாளிப்பதற்கு ஒரேயொரு பகைவன் பாக்கி இருக்க வேண்டும் என்கிற நோக்கத்துக்காகத்தான். தொழிலாளிகள் தவறாகக் கணக்குப் போடவில்லை, ஏனெனில் ஆலை முதலாளியைப் பழி வாங்க வேண்டும் என்பதற்காகப் பத்து மணி நேர வேலை மசோதாவை நிறைவேற்றுவதில் தொழிலாளிகளோடு நிலப்பிரபுக்கள் ஒன்றுபட்டு நின்றார்கள், இச்சட்டத்தைத் தொழிலாளிகள் முப்பது ஆண்டுகளாகப் பலனின்றிக் கோரி வந்தார்கள், இது தானியச் சட்டம் ரத்து செய்யப்பட்டதை உடனடியாகத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது.

பொருளாதாரவாதிகளின் பேராயத்தில் டாக்டர் பௌரிங் அடித்துக்கூறியபடி தொழிலாளிகள் உண்பதற்காக எவ்வளவு மாடுகளும் பன்றிக்கறியும் ஆட்டுக் கறியும் கோழிக் கறியும் இங்கிலாந்தில் எவ்வளவு இறக்குமதி செய்யப்படுகிறதென்று காட்டுவதற்காகத் தமது ஜேபியிலிருந்து ஒரு நீண்ட பட்டியலை எடுத்த போது அந்த நேரத்தில் துவக்க நிலையிலிருந்த நெருக்கடியால் மாஞ்செஸ்டரிலும் பிற தொழிற்சாலை நகரங்களிலும் தொழிலாளிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டுத் தெருவில் தள்ளப்பட்டு வந்ததை அவர் துரதிர்ஷ்டவசமாகச் சொல்ல மறந்துவிட்டார்.

அரசியல் பொருளாதாரத்தில் ஒரு கோட்பாடாக இருக்கும் விஷயம், பொதுவான விதிகளை வரையறுப்பதற்கு அடிப்படையாகத் தனியொரு ஆண்டின் புள்ளி விபரங்களை என்றைக்கும் எடுத்துக் கொள்ளக் கூடாது, என்பது. ஆறிலிருந்து ஏழு ஆண்டுகள் கொண்ட சராசரி காலப்பகுதியைத்தான் எப்போதும் எடுத்துக் கொள்ள வேண்டும்—இந்தக் காலப்பகுதியில் நவீனகாலத் தொழில்துறையானது செழுமை, மிகை உற்பத்தி, தேக்கம், நெருக்கடி ஆகிய பல்வேறு

கட்டங்களைக் கடந்து தனது தவிர்க்கமுடியாத வட்டத்தை முற்றுகச் சுற்றி வருகிறது.

எல்லாப் பண்டங்களின் விலையும் குறையுமேயானுல் — இது சுயேச்சையான வாணிபத்தின் காரணமாக அவசியகரமாக விளைவதாகும்—ஒரு பிராங்குக்கு நான் முன்னைவிட எவ்வளவோ அதிகமாக வாங்க முடியும் என்பதில் ஐயமில்லை. மேலும், தொழிலாளியின் பிராங்கு மற்றவனுடையதைப் போலத்தான். எனவே, சுயேச்சையான வாணிபம் தொழிலாளிக்கு மிகவும் அனுகூலமானதாகத்தான் இருக்கும். ஆனுல் இதில் ஒரேயொரு சிறிய சங்கடம்—அதாவது, தொழிலாளி தனது பிராங்கை மற்றப் பண்டங்களுக்கு மாற்றுகக் கொடுப்பதற்கு முன்னுல் தனது உழைப்பை முதலாளியிடம் மாற்றிக் கொடுத்தாகிவிட்டது. இந்தப் பரிமாற்றத்தில் அதே உழைப்புக்கு அவன் அந்தப் பிராங்கு எப்போதும் பெற்றுக் கொள்வானேயானுல், மற்றப் பண்டங்களின் விலையும் விழுமேயானுல், அந்தப் பேரத்தால் அவனுக்கு எப்போதும் ஆதாயம் உண்டு. எல்லாப் பண்டங்களின் விலையும் விழுமேயானுல் அதே பணத்துக்கு நான் மேலும் அதிகமான பண்டங்களைப் பெறுவேன் என்று நிரூபிப்பதில் கஷ்டமொன்றும் இல்லை.

பொருளாதாரவாதிகள் எப்போதும் உழைப்பின் விலையை அது மற்றப் பண்டங்களோடு மாற்றிக் கொள்கிற தருணத்தில் எடுத்துக் கவனிக்கிருர்கள். ஆனுல் உழைப்பு மூலதனத்தோடு தனது சொந்தப் பரிமாற்றத்தைச் செய்து முடிக்கிற தருணத்தை அவர்கள் முற்றுகப் புறக்கணிக்கிருர்கள்.

பண்டங்களை உற்பத்தி செய்யும் இயந்திரத்தை இயக்கி விடுவதற்குக் குறைவான செலவு தேவையாகிற போது, தொழிலாளி என்றுஅழைக்கப்படும்இந்த இயந்திரம் பிழைத்து வரச் செய்வதற்கு அவசியமான பொருட்களும் மலிவாகும். எல்லாப் பொருட்களும் மலிவாகிற போது, உழைப்பு எனும் பண்டமும் விலையில் குறைந்துவிடும், மற்றும் நாம் பின்னுல் பார்க்கப் போகிறவாறு, இந்த உழைப்பு எனும் பண்டம் தகவுப் பொருத்தத்தில் பார்த்தால் மற்றப் பண்டங்களைவிட அதிகமாகக் குறைந்துவிடும். மேற்கொண்டு பொருளாதாரவாதிகளின் வாதங்களில் தொழிலாளி நம்பிக்கை வைப்பானே

யாஞல் தனது ஜேபியிலுள்ள பிராங்கு கரைந்துபோய் ஐந்து சூ* மட்டும் மிஞ்சியிருக்கக் காண்பான்.

இதைப் பற்றிப் பொருளாதாரவாதிகள் உங்களிடம் சொல்வார்கள்: ''சரி, தொழிலாளிகளிடையேயுள்ள போட்டி—அது சுயேச்சையான வாணிபத்தின் கீழ் நிச்சயமாகக் குறைந்திருக்காது—வெகு விரைவிலே கூலியைப் பண்டங்களின் குறைவான விலேயோடு இசைவாக்கி விடும் என்று ஒப்புக் கொள்கிறேம். ஆனல், மறுபுறத்தில், பண்டங்களின் குறைவான விலேயானது நுகர்வை அதிகப்படுத்திவிடும், பெரிதாகிய நுகர்வுக்கு அதிகரித்த உற்பத்தி தேவைப்படும், அதைத் தொடர்ந்து ஆட்களுக்கும் கிருக்கி அதிகமாகிவிடும், ஆட்களுக்கான கிருக்கி அதிகப்படுவதைத் தொடர்ந்து கூலி உயரும்'' என்று.

இவ்வாதப் போக்கின் மொத்தம் இதுதான்: சுயேச்சையான வாணிபம் உற்பத்திச் சக்திகளே அதிகப்படுத்துகிறது. தொழில் வளர்ந்து கொண்டேயிருந்தால், செல்வமும், உற்பத்திச் சக்திகளும், சுருங்கச் சொன்னுல் உற்பத்தித் திறமுள்ள மூலதனம் அதிகப்பட்டால் உழைப்புக்கான கிருக்கியும், உழைப்பின் விலேயும் அதன் விளேவாகக் கூலி விகிதமும் உயர்கிறது.

தொழிலாளிக்கு மிகவும் அனுகூலமான நிலேமை மூலதனத்தின் வளர்ச்சியாகும். இதை ஒப்புக் கொண்டு தீரவேண்டும். மூலதனம் ஒரே நிலேயில் நீடித்தால் தொழில் துறை ஒரே நிலேயில் நீடிப்பது மட்டுமின்றி நலிந்தும் போகும், அப்படி நடக்கும் போது அதற்குத் தொழிலாளியே முதலில் பலியாவான். முதலாளிக்குமுன் சீரழிவது தொழிலாளியே. மற்றும், மூலதனம் வளர்ந்து கொண்டேயிருக்கும் போது, தொழிலாளிக்கு மிகவும் அனுகூலமானது என்று நாம் சொன்ன சூழ்நிலேமைகளில், அவன் பாடு என்ன? எப்படியும் அவன் சீரழிவான். உற்பத்தித் திறமுள்ள மூலதனத்தின் வளர்ச்சி மூலதனத்தின் திரட்சியையும் குவிப்பையும் உட்கிடையாக உணர்த்துகிறது. மூலதனத்தின் மையப்படுத்தலுக்கு மேலும் பெரிதான உழைப்புப் பிரிவினேயும் மேலும் பெரி

---

*—ஐந்து சென்தீம் மதிப்புள்ள பிரெஞ்சு நாணயம்.—[பதிப்பாசிரியர்.]

தான இயந்திரப் பயன்பாடும் வேண்டும். மேலும் பெரிதான உழைப்புப் பிரிவினை தொழிலாளியின் தனிச்சிறப்பான திறனை அழிக்கிறது; மற்றும் இந்தத் திறனுள்ள வேலைக்குப் பதிலாக எவரும் செய்யக் கூடிய உழைப்பை வைப்பதின் மூலமாக அது தொழிலாளிகளிடையே போட்டியை அதிகப் படுத்துகிறது.

உழைப்புப் பிரிவினை மூன்று பேர் செய்கிற வேலையை ஒரே தொழிலாளி செய்யத் திறமளிப்பதால் போட்டி மேலும் கடுமையாகிறது. இதே விளைவை மேலும் பெரிய அளவில் இயந்திரவகை சாதிக்கிறது. உற்பத்தித் திறமுள்ள மூலதனத்தின் வளர்ச்சி தொழில் முதலாளிகளை இடையறுது அதிகரித்துவரும் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு வேலை செய்யக் கட்டாயப்படுத்துகிறது, சிறிய தொழில் முதலாளி களை நாசப்படுத்திப் பாட்டாளி வர்க்கத்திடையே தள்ளி விடுகிறது. பிறகு, மூலதனம் திரளத்திரள அதற்குத் தகவுப் பொருத்தமாக வட்டி விகிதம் குறைந்து வர வட்டித் தொகையைக் கொண்டு மேற்கொண்டு வாழமுடியாமற்போகும் சிறிய வட்டிஜீவிகள் தொழிலில் ஈடுபடக் கட்டாயப்படுத்தப் பட்டுத் தொழிலாளிகளின் தொகையைப் பெருக்குகின்றனர்.

இறுதியாக, உற்பத்தித் திறமுள்ள மூலதனம் அதிகரிக்க அதிகரிக்க, தனக்கே தெரியாத தேவைகளைக் கொண்ட ஒரு சந்தைக்கு உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் அதிக மாகிறது, நுகர்வைத் தாண்டி உற்பத்தி முன்னே போகிறது, கிருக்கியை மேலும் மேலும் வரத்து பலவந்தப்படுத்துகிறது, அதன் விளைவாக நெருக்கடிகள் அடிக்கடி உதிப்பதும் தீவிர மடைவதும் அதிகப்படுகிறது. எனினும் ஒவ்வொரு நெருக் கடியும் தன் முறைக்கு மூலதனத்தின் மையப்படுத்தலை விரைவுபடுத்தி, பாட்டாளி வர்க்கத்தின் தொகையைக் கூட்டிவிடுகிறது.

எனவே, உற்பத்தித் திறமுள்ள மூலதனம் வளர வளர, அதைவிடப் பெரிதான தகவுப் பொருத்தத்தில் தொழி லாளிகளிடையேயுள்ள போட்டி வளர்கிறது. உழைப்புக்கான கூலி எல்லோருக்கும் குறைகிறது, உழைப்பின் சுமை சில ருக்கு அதிகமாகிறது.

1829ல் மாஞ்செஸ்டரில் 36 தொழிற்சாலைகளில் 1,088 பஞ்சு நூற்புத் தொழிலாளிகள் வேலை செய்தனர். 1841ல்,

448 பேருக்கு மேலில்லை, அவர்கள் 1829ல் 1,088 பேர் கவனித்ததைவிட அதிகமாக 53,353 நூற்புக் கதிர்களைக் கவனித்தனர். உற்பத்திச் சக்திக்குத் தகவுப் பொருத்தமாக உடலுழைப்பு அதிகரித்திருந்தால் நூற்பவர்களின் தொகை 1,848 ஆக உயர்ந்திருக்க வேண்டும்; எனவே, மேம்பட்ட இயந்திரவகையானது 1,100 தொழிலாளிகளை வேலையற்றவர்களாக்கிவிட்டது.

இதற்குப் பொருளாதாரவாதிகளின் பதிலை நாம் முன் கூட்டி அறிவோம். இப்படி வேலையிழந்தவர்கள் வேறு வித மான வேலைக்குப் போவார்கள் என்று அவர்கள் சொல்கிறார் கள். பொருளாதாரவாதிகளின் பேராயத்தில் டாக்டர் பௌரிங் இந்த வாதத்தைத் திருப்பிச்சொல்லத் தவறவில்லை, எனினும் அதற்குத் தாமே தமது சொந்த மறுப்பைத் தருவதிலும் தவறவில்லை.

1835ல் காமன்ஸ் சபையில் டாக்டர் பௌரிங் பேசினார் —புதிய விதமான வேலை என்றைக்கோ கிடைக்கச் செய்வதாகச் சுயேச்சை வாணிபவாதிகள் பேசுகிறார்களே, அந்தப் புதிய விதமான வேலை கிடைக்காமல் வெகுகாலமாகப் பட்டினி கிடந்து வரும் 50,000 லண்டன் கைத்தறி நெசவாளர்களைப் பற்றி அவர் பேசினார்.

டாக்டர் பௌரிங் அவர்களின் உரையிலிருந்து மிகவும் கவர்ச்சியுள்ள பகுதிகளைக் கொடுப்போம்:

''நெசவாளிகளின் இந்த வறுமை.... சுளுவாகக் கற்றுக் கொள்ளக்கூடிய—மேலும் மலிவான உற்பத்திச் சாதனங்கள் இடையறாது குறுக்கிட்டும் நீக்கியும் வருகிற—ஒரு வகையான உழைப்புக்குத் தவிர்க்க முடியாதபடியுள்ள ஒரு நிலைமையாகும். வேலைக்கு இவ்வளவு பெரிய போட்டி இருக்கிற இடத்தில் வேலைக் கிராக்கி கொஞ்ச காலத்துக்கு இல்லாமற் போனாலும் போதும், உடனே ஒரு நெருக்கடி உண்டாகிவிடுகிறது. அதற்கு மேலும் போனால் உயிர் வாழ்வது கடினம் என்கிற நிலையில் தள்ளாடிக் கொண்டிருக்கிறார்கள் கைத்தறி நெசவாளிகள். ஒரு அற்பசொற்பமான தடையுங்கூட அவர்களைப் பட்டினி நிலைக்குத் தூக்கியெறிந்துவிடுகிறது.... இயந்திரவகையின் மேம்பாடுகள்,.... மேலும் மேலும் உடலுழைப்பை நீக்குவதின் மூலமாகக் கூடவேஇடைக்காலத்திலே

நிறைய தற்காலிகமான துன்பத்தையும் தடுக்க முடியாதபடி கொண்டு வருகின்றன.... தனிப்பட்ட முறையிலான தீமை இல்லாமல் தேசிய நன்மையை வாங்கிக் கொள்ள முடியாது. பின் வரிசையிலிருக்கிறவர்களுக்கு நஷ்டம் உண்டாக்காமல் தொழில் துறைகளில் என்றைக்கும் முன்னேற்றம் ஏற்பட்டதே கிடையாது; மற்றும், இருக்கிற கண்டு பிடிப்புகளிலேயே நீராவித் தறிதான் கைத்தறி நெசவாளியின் நிலைமையை மிகவும் பாதிக்கிற கண்டுபிடிப்பாகும். அவன் இத்துறையில் பல பொருட்களை உற்பத்தி செய்வதினின்று ஏற்கெனவே வெளியேற்றப்பட்டுவிட்டான்; இன்னும் எத்தனையோ பொருட்களை அவன் உற்பத்தி செய்ய முடியாதபடி கட்டாயப்படுத்தப்படுவான்.''

மேலே அவர் கூறுவதாவது:

''டாக்கா நகரக் கைத்தறி நெசவாளிகள் விஷயமாக இந்தியாவின் கவர்னர்-ஜெனரலுக்கும் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்தை என் கையில் வைத்திருக்கிறேன்.... சில ஆண்டுகளுக்கு முன் கிழக்கு இந்தியக் கம்பெனி இந்தியாவின் தறிகள் உற்பத்தி செய்ததில் ஆண்டுதோறும் 60 லட்சத்திலிருந்து 80 லட்சம் வரை ஜவுளிக் கட்டுகள் பெற்று வந்தது. கிரமக்கி படிப்படியாக சுமார் 10 லட்சத்துக்குச் சுற்று மேலாகத் தாழ்ந்து போய் இப்போது அனேகமாக அடியோடு நின்றுவிட்டது. 1800ம் ஆண்டில் வட அமெரிக்கா இந்தியாவிலிருந்து சுமார் 8 லட்சம் ஜவுளிக் கட்டுகள் எடுத்துக் கொண்டது; 1830ல் 4,000 கூட இல்லை. 1800ல் போர்சுகலுக்கு 10 லட்சம் ஜவுளிக் கட்டுகள் அனுப்பப்பட்டன; 1830ல் 20,000 மட்டுமே போயின. ஏழை இந்திய நெசவாளிகளின் படுமோசமான நிலைமை பற்றிய செய்திகள் பயங்கரமாயுள்ளன, அவர்கள் முழுப் பட்டினியில் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு காரணம் என்ன? மலிவான ஆங்கிலேயத் தொழிற் பொருள் இருப்பதே.... பலர் பட்டினியால் மாண்டனர்; பாக்கி இருப்பவர்களில் பெரும்பாலோர் வேறு வேலைகளுக்கு, முக்கியமாக விவசாய வேலைக்கு மாற்றப்பட்டுவிட்டனர். அவர்கள் தொழிலை மாற்றிக்கொண்டிராவிட்டால் பட்டினியைத் தவிர்த்திருக்க முடியாது. மற்றும் இத்தருணத்திலே இங்கிலாந்தின் இயந்திரத் தறிகளால் செய்யப்படும் நூலும் ஜவுளியும் டாக்கா

மாவட்டத்துக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது.... அழகுக்கும் மென்மைக்கும் உலகெங்கும் புகழ் பெற்ற டாக்கா மஸ்லின் ஜவுளிகள் இதே காரணத்தால் நாசமாக்கப்பட்டு விட்டன. இந்தியாவிலுள்ள பல மக்கட்பகுதிகளுக்கு வாய்த்துள்ள துன்ப துயரங்களுக்கு இணையாக வாணிப வரலாற்றிலே காண்பது அரிதாகும்.''

டாக்டர் பௌரிங் அவர்களின் உரை மேலும் குறிப்பிடத்தக்கதாக இருக்கக் காரணம், அவர் மேற்கோள் காட்டுகிற புள்ளி விபரங்கள் சரிநுட்பமானவை; அவர் அவற்றைப் பூசிமெழுகப் பயன்படுத்தும் சொற்றொடர்களிலே சுயேச்சை வாணிபவாதிகளுக்குப் பொதுவாயுள்ள ஆஷாட புதித்தனம் முற்றுகக் காட்டிக் கொள்கிறது. குறைவான விலையுள்ள உற்பத்திச் சாதனங்களால் நீக்கப்பட்டுத் தீர வேண்டிய உற்பத்திச் சாதனங்களாகத் தொழிலாளிகளை அவர் சித்திரிக்கிறார். அவர் குறிப்பிட்டுப் பேசும் உழைப்பில் ஏதோ ஒரு முற்றிலும் விதிவிலக்கான வகையைச் சேர்ந்த உழைப்பைக் காண்கிற மாதிரியும் நெசவாளிகளை நசுக்கித் தீர்த்த இயந்திரத்தில் அதே போல் விதிவிலக்கான ஒரு இயந்திரத்தைக் காண்கிற மாதிரியும் அவர் நடிக்கிறார். கைத்தறி நெசவாளிகளின் கதிக்கு ஏதாவதொரு நாளில் உட்படுத்தப்படக் கூடாத வகைப்பட்ட உழைப்பு எதுவும் கிடையாது என்பதை அவர் மறக்கிறார்.

''உண்மையாகச் சொல்லப் போனால், இயந்திர வகையில் ஏற்படுகிற ஒவ்வொரு மேம்பாட்டுக்கும் உள்ள நிலையான குறிக்கோளும் போக்கும், மனித உழைப்பை அறவே நீக்கிவிடுவது அல்லது ஆண்களின் உழைப்புக்குப் பதிலாகப் பெண்கள் குழந்தைகள் ஆகியோரின் உழைப்பை வைத்தோ, பயிற்சி பெற்ற கைவினைஞர்களின் உழைப்புக்குப் பதிலாகச் சாதாரணத் தொழிலாளிகளின் உழைப்பை வைத்தோ அதன் செலவைக் குறைப்பது என்பதே. மிகப் பெரும்பான்மையான நீர்விசை முறுக்குநூல் ஆலைகளிலோ நூற்புப் பொறிப் பஞ்சாலைகளிலோ நூற்பு முழுவதும் பதினறு வயதும் அதற்குக் கீழும் உள்ள பெண்களைக் கொண்டு செய்யப்படுகிறது. சாதாரண நூற்பு இயந்திரத்துக்குப் பதிலாகத் தானியங்கி நூற்பு இயந்திரத்தை வைத்ததின் விளைவு, ஆண் நூற்புத் தொழிலாளிகளில் பெரும்பான்மையினரை நீக்கி

விட்டு வயதுவராதவர்களையும் குழந்தைகளையும் வைத்துக் கொள்வதாகும்.''

ஆர்வமிக்க சுயேச்சை வாணிபவாதியான டாக்டர் யூரின் இந்தச் சொற்கள்[84] டாக்டர் பௌரிங் அவர்களின் ஒப்புதல்களுக்கு இணையுரையாகப் பயன்படுகிறது. டாக்டர் பௌரிங் சில தனித்தனி தீமைகள் குறித்துப் பேசுகிறார், அதே சமயத்தில் இந்தத் தனித்தனி தீமைகள் முழுமை முழுமையாக வர்க்கங்களை அழிக்கின்றன என்றும் சொல்கிறார்; இடைக் காலத்துக்குரிய தற்காலிகமான துன்பதுயரங்கள் குறித்துப் பேசுகிறார், அப்படிப் பேசுகிற நேரத்திலேயே இந்தத் தற் காலிகமான தீமைகள் பெரும்பான்மையினரின் வாழ்வு சாவுக்கு மாறுவதைக் குறிப்பதாயும் எஞ்சியோரின் நல்ல நிலைமை மோசமான நிலைமைக்கு மாறுவதைக் குறிப்பதாயும் இருப்பதை அவர் மறுக்கவில்லை. மேலே அவர் இந்தத் தொழிலாளிகளின் துன்பதுயரங்கள் தொழில் முன்னேற்றத் திலிருந்து பிரிக்கப்பட முடியாதவை என்றும் நாட்டின் செழு மைக்கு அவை அவசியம் என்றும் அவர் அடித்துப் பேசுகிறா ரென்றால், அவர் சொல்வதெல்லாம் முதலாளி வர்க்கத்தின் செழுமைக்கு முதலில் உழைக்கும் வர்க்கத்தின் துன்பதுயரங் கள் இருப்பது அவசியம் என்றுதான்.

சாகிற தொழிலாளிகளுக்கு டாக்டர் பௌரிங் அளிக்கும் ஆறுதல், சொல்லப் போனால் சுயேச்சை வாணிபவாதிகள் முன்வைக்கும் நஷ்டஈடு பற்றிய தத்துவமனைத்தும், இது தான்:

மாண்டு வரும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளிகளே, நிராசையடையாதீர்கள்! நீங்கள் உறுத்தலற்ற மனச்சாட்சி யோடு சாகலாம். உங்கள் வர்க்கம் அழியாது. அதை அழித்து விடுவோமோ என்கிற அச்சமில்லாமல் முதலாளி வர்க்கம் அதைச் சீர்குலைப்பதற்கு எப்போதும் அது போதிய எண்ணிக் கையில் இருக்கும். மேலும், தொழிலாளிகள் எனும் தனது சுரண்டலுக்குரிய சாதனத்தை நீடித்து வைத்திருப்பதற்கும் திரும்பத் திரும்பச் சுரண்டுவதற்கும் அவர்களை எப்போதும் கவனித்து வராவிட்டால் மூலதனத்தை எப்படிப் பயனுள்ள வகையிலே செயல்படுத்த முடியும்?

அது மட்டுமல்ல, தீர்க்க வேண்டிய பிரச்சினையாகப் பின்வரும் கேள்வியை ஏன் முன்வைக்க வேண்டும்: அதாவது,

சுயேச்சையான வாணிபத்தை ஏற்றுச் செயல்படுத்துவதனுல் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையின் மீது ஏற்படக் கூடிய பாதிப்பு என்ன? கெனே முதல் ரிக்கார்டோ ஈருக அரசியல் பொருளாதாரவாதிகள் வரையறுத்த விதிகள் எல்லாம் வர்த்தகச் சுதந்தரத்தில் இன்னமும் குறுக்கிட்டு வரும் தங்கு தடைகளனைத்தும் மறைந்தாகிவிட்டன என்கிற ஊகப் பிரமாணத்தின் மீது ஆதாரப்பட்டுள்ளன. சுயேச்சையான வாணிபம் ஏற்றுச்செயல்படுத்துவதற்குத் தகவுப்பெருத்தமாக இந்த விதிகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. போட்டி ஒவ்வொரு பண்டத்தின் விலையையும் குறைந்தபட்ச உற்பத்திச் செலவுக்குக் குறைத்துவிடுகிறது என்பது இவ்விதிகளில் முதலாவதாகும். எனவே குறைந்தபட்சக் கூலி உழைப்பின் இயல்பான விலையாகிறது. குறைந்தபட்சக் கூலி என்பதென்ன? தொழிலாளியை உயிர்வாழச் செய்வதற்கு — எவ்வளவு மோசமாகவாயினும் அவன் பிழைத்துவரக்கூடிய நிலைமையில் வைப்பதற்கும் எவ்வளவு அற்பமாகவாயினும் இனப்பெருக்கம் செய்து வருவதற்கும்—இன்றியமையாத பொருட்களின் உற்பத்திக்குத் தேவையாகிறது மட்டுந்தான்.

ஆனுல் தொழிலாளி இந்தக் குறைந்தபட்சக் கூலி மட்டுந் தான் பெறுகிருன் என்றே அதையுங்கூட எப்போதும் பெறுகிருன் என்றே நினைக்காதீர்கள்.

அப்படிக் கிடையாது, இந்த விதிப்படி சில சமயம் தொழிலாளி வர்க்கத்தின் அதிர்ஷ்டம் கூடலாம். சில சமயம் அது குறைந்தபட்சத்துக்கு மேலாகப் பெற்றுக் கொள்ளும், ஆனுல் இந்த மிகுதியானது தொழில் தேக்கம் நிலவும் காலங்களில் குறைந்தபட்சத்துக்கும் கீழாகப் பெற்றுள்ள பற்ருக் குறையை ஈடு செய்வதாக மட்டுமே இருக்கும். அதாவது முறையாக அவ்வப்பொழுது திரும்பத் திரும்ப நிகழும் ஒரு குறிப்பிட்ட காலத்தினுள்ளே, செழுமை, மிகையுற்பத்தி, தேக்கம், நெருக்கடி ஆகிய தசைகளைத் தொழில்துறை கடந்து வரும் வட்டத்தில், அத்தியாவசியப் பொருட்களுக்கு மேலாகவும் குறைவாகவும் தொழிலாளி வர்க்கம் பெற்றிருந்த தனைத்தையும் கணக்கிடுகிற போது, மொத்தத்தில் அது மேலாகவோ குறைவாகவோ போகாத குறைந்தபட்சத்தைத் தான் பெற்றிருக்கிறதை நாம் பார்ப்போம்—அதாவது, எவ்வளவோ துன்பமும் கேடும் தாங்கிக் கொண்டபின்,

தொழிற்களத்தில் எத்தனையோ பிணங்களை விட்டு வந்தபின், தொழிலாளி வர்க்கம் தன்னை ஒரு வர்க்கமாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கக் காண்போம். அதனாலென்ன? அந்த வர்க்கம் இன்னமும் இருந்து வரும்; அது மட்டுமல்ல, அது அதிகரித்தும் இருக்கும்.

விஷயம் இத்துடன் முடியவில்லை. தொழில் முன்னேற்றம் குறைந்த விலையுள்ள வாழ்க்கைச் சாதனங்களைப் படைக்கிறது. இவ்வழியே பீர் பானத்துக்குப் பதிலாகச் சாராயமும், கம்பளித் துணிக்கும் மெஞ்சணல் துணிக்கும் பதிலாகப் பஞ்சுத் துணியும், ரொட்டிக்குப் பதிலாக உருளைக் கிழங்கும் வந்துள்ளன.

எனவே, மேலும் மலிவான மேலும் மோசமான உணவைக் கொண்டு உழைப்பை உயிர்வாழச் செய்வதற்குரிய சாதனங்கள் இடையறாது கிடைத்து வர வர குறைந்தபட்சக் கூலி இடையறாது குறைந்து வருகிறது. இந்தக் கூலி மனிதனைப் பிழைப்புக்காக வேலை செய்ய வைத்ததிலிருந்து தொடங்கிற்று என்றால், மனிதனை இயந்திரம் போன்ற வாழ்க்கை வாழச் செய்வதிலே போய் முடிகிறது. வெறும் உற்பத்திச் சக்திக்குரிய மதிப்பு தவிர அவன் வாழ்க்கைக்கு வேறெந்த மதிப்பும் இல்லை, அவ்வாறேதான் அவனை முதலாளியும் நடத்துகிறான்.

பொருளாதாரவாதிகளின் முன்னனுமானமாகிய சுயேச்சையான வாணிபம் யதார்த்த உண்மையாகிறதற்குத் தகவுப் பொருத்தமாக இந்தப் பண்டமாகிய உழைப்பின் விதி — குறைந்தபட்சக் கூலி பற்றிய விதி—உறுதிப்படுத்தப்படும். எனவே, இரண்டிலொன்று: ஒன்று, சுயேச்சையான வாணிபத்தை அனுமானித்துக் கொண்டதை அடிப்படையாகக் கொண்ட அரசியல் பொருளாதாரம் முழுவதையும் நாம் நிராகரிக்க வேண்டும், அல்லது இந்தச் சுயேச்சையான வாணிபத்தின்கீழ் பொருளாதார விதிகளின் கடுமை முழுவதும் தொழிலாளிகள் மீது விழும் என்று நாம் ஒப்புக் கொண்டு தீர வேண்டும்.

தொகுத்துச் சொல்லப் போனால், இன்றையச் சமுதாய நிலைமைகளின் கீழ் சுயேச்சையான வாணிபம் என்பது என்ன? மூலதனத்துக்குச் சுதந்தரம். மூலதனத்தின் முன்னேற்றத்தை இன்னமும் கட்டுப்படுத்தி வருகிற சில தேசியத்

தடைகளைத் தூக்கியெறிந்துவிடுகிற போது நீங்கள் அதற்கு முழுச் செயல் சுதந்தரம் கொடுத்தவர்கள் ஆவீர்கள், அவ்வளவுதான். நீங்கள் கூலியுழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையேயுள்ள உறவை விட்டு வைத்திருக்கும் வரை, பண்டப் பரிமாற்றம் நடப்பதற்கான நிலைமைகள் எவ்வளவு சாதகமாக இருந்த போதிலும் சரி, எப்போதும் சுரண்டுகிற ஒரு வர்க்கமும் சுரண்டப்படுகிற ஒரு வர்க்கமும் இருந்து கொண்டேயிருக்கும். மேலும் அனுகூலமான வகையில் மூலதனத்தைச் செயல்படுத்துவதானது தொழில்துறை முதலாளிகளுக்கும் கூலித் தொழிலாளிகளுக்கும் இடையேயுள்ள பகைமையை ஒழிக்கும் என்று சுயேச்சை வாணிபவாதிகள் நினைக்கிறார்கள், அவர்களின் கூற்றைப் புரிந்து கொள்வது உண்மையிலே கஷ்டமாகும். அதற்கு மாறாக, ஒரே விளைவு இவ்விரண்டு வர்க்கங்களின் பகைமை மேலும் தெளிவாக வெளிப்படும் என்பதே.

தானியச் சட்டங்களோ தேசிய அல்லது உள்ளூர் சுங்க வரிகளோ மேற்கொண்டு கிடையாது என்று ஒரு கணம் வைத்துக் கொள்வோம்; சொல்லப் போனால் தொழிலாளி தனது துன்பகரமான நிலைமைக்குக் காரணமாக இன்று கருதக் கூடிய எல்லாத் தற்செயலான சூழ்நிலைமைகளும் முற்றாக மறைந்துவிட்டதாகவே வைத்துக் கொள்வோம். தனது உண்மையான எதிரியை அவன் கண்டுகொள்ளாதபடி மறைக்கும் எத்தனையோ திரைகளை நீக்கிவிட்டவர்களாவீர்கள்.

சுங்க வரிகளால் கட்டிப்போடப்பட்டிருக்கும் மூலதனம் தன்னை அடிமையாகச் செய்திருப்பதற்கு எவ்வகையிலும் குறையாமல் சுதந்தரம் பெற்ற மூலதனமும் செய்யும் என்று அவன் கண்டு கொள்வான்.

ஐயன்மீர், சுதந்தரம் என்கிற சூட்சுமச் சொல்லிலே மயங்கி விட இடங் கொடாதீர்கள். யாருடைய சுதந்தரம்? சார்பு நிலையிலே மற்றவனிடமிருந்து ஒரு தனிநபருக்குள்ள சுதந்தரம் அல்ல அது, தொழிலாளியை நசுக்குவதற்கு மூலதனத்துக்குள்ள சுதந்தரம்.

சுயேச்சையான போட்டியை அடிப்படையாகக் கொண்ட நிலவரங்களின் விளைவாக மட்டுமே இந்தச் சுதந்தரம் இருக்கிற பொழுது, இந்தச் சுதந்தரம் பற்றிய கருத்தைக் கொண்டு

ஏன் சுயேச்சையான போட்டியை அனுமதித்துக் கொண்டே யிருக்க விரும்புகிறீர்கள்?

சுயேச்சையான வாணிபம் ஒரே நாட்டிற்குள்ளிருக்கும் வெவ்வேறான வர்க்கங்களிடையே என்னவிதமான சகோதரத் துவத்தை உண்டாக்குகிறது என்று காட்டினோம். சுயேச்சை யான வாணிபம் பூமண்டலத்திலுள்ள நாடுகளிடையே நிலைநாட்டக் கூடிய சகோதரத்துவம் அதைவிடத் தோழமை மிக்கதாக இருப்பது அரிது. நாடுசார்பற்ற சுரண்டலை உலகச் சகோதரத்துவம் என்று அழைப்பது முதலாளி வர்க்கத்தின் மூளையில் மட்டுமே உதிக்க முடிகிற ஒரு கருத்தாகும். தனியொரு நாட்டுக்குள்ளே வரம்பற்ற போட்டியால் விளைகிற நாசகரமான நிகழ்ச்சித் தோற்றங்கள் அனைத்தும் மேலும் பிரம்மாண்டமான அளவிலே உலகச் சந்தையிலே மறு உற்பத்தி செய்யப்படும். இவ்விஷயத்தைப் பற்றிய சுயேச் சையான வாணிபத்தின் குதர்க்கங்களை மேற்கொண்டு நாம் கவனிக்கத் தேவையில்லை, பரிசு வென்ற திருவாளர்கள் ஹோப், மோர்ஸ், கிரெக் ஆகியோரின் வாதங்களுக்குள்ள மதிப்புத்தான் அவற்றிற்கும் உண்டு.

எடுத்துக்காட்டாக, சுயேச்சையான வாணிபம் ஒரு சர்வ தேச உழைப்புப் பிரிவினையைப் படைக்குமென்றும் அதன் வழியாக ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் இயல்பான அனு கூலக்கூறுகளுக்கு இசைவான உற்பத்தியைக் கொடுக்கு மென்றும் கூறப்படுகிறது.

ஐயன்மீர், காப்பியையும் சர்க்கரையையும் உற்பத்தி செய்வது மேற்கு இந்தியப் பிரதேசங்களின் இயல்பான தலைவிதி என்று ஒருவேளை நீங்கள் நம்பிக் கொண்டிருக்கலாம்.

இரு நூறாண்டுகளுக்குமுன், வர்த்தகத்தைப் பற்றிக் கவலைப்படாத இயற்கை அங்கே கரும்பையோ காப்பிச் செடிகளையோ நட்டதில்லை.

மற்றும் ஐம்பது ஆண்டுகளுக்குட்பட்ட காலத்திலும் அங்கே நீங்கள் காப்பியையோ சர்க்கரையையோ காண முடி யாமற்போனாலும் போகலாம், ஏனெனில் கிழக்கு இந்தியப் பிரதேசங்கள் மேலும் மலிவான உற்பத்தி மூலமாக மேற்கு இந்தியப் பிரதேசங்களின் இந்த இயல்பான தலைவிதி என்று சொல்லப்படுவதை ஏற்கெனவே வெற்றிகரமாகப் போராடித் தீர்த்திருக்கிறது. ஆதிகாலந் தொட்டுக் கையால் நெசவு

செய்வதையே தலைவிதியாகக் கொண்டிருந்த டாக்கா நெச வாளிகள் இங்கிலாந்துக்கு எவ்வளவு பளுவான சுமையாகி விட்டார்களோ அவ்வளவுக்கு இயல்பான வளமுள்ள மேற்கு இந்தியப் பிரதேசங்களும் இங்கிலாந்துக்குப் பளுவான சுமை யாகிவிட்டன.

மற்றொரு விஷயத்தையும் என்றைக்கும் மறக்கலாகாது —அதாவது, எப்படி எல்லாமே ஒரு ஏகபோகமாகிவிட்டிருக் கிறதோ அதேபோல் இன்று தொழில் துறையின் சில கிளைகள் மற்றெல்லாவற்றின் மீதும் ஆதிக்கம் வகிக்கின்றன, அவற் றைப் பெருமளவில் வளர்க்கிற நாடுகளுக்கு உலகச் சந்தை யிலே எஜமான நிலையைப் பெற்றுத்தந்துள்ளன. இப்படித்தான் சர்வதேச வர்த்தகத்தில் ஜவுளி உற்பத்தியில் பயன்படுத் தப்படுகிற மற்றெல்லாக் கச்சா பொருட்களுக்கும் கூட்டாக இருக்கிற முக்கியத்துவத்தைவிட பருத்தி ஒன்றுக்கு மட்டும் மேலான வர்த்தக முக்கியத்துவம் இருக்கிறது. சுயேச்சை வாணிபவாதிகள் தொழில் துறையின் ஒவ்வொரு கிளையிலும் உள்ள சில தனிச்சிறப்பான விளைபொருட்களை வலியுறுத்தி, அன்றாட நுகர்வில் பயன்படுத்தப்பட்டு வருபவையாகவும் மிக உயர்வாகத் தொழில் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் மிக மலிவாக உற்பத்தி செய்யப்பட்டு வருபவையாகவும் உள்ள விளைபொருட்களுக்கு எதிராக அவற்றைத் தராசிலே போட்டு எடை காட்டுவது உண்மையிலே கேலிக்குரிய தாகும்.

சுயேச்சை வாணிபவாதிகளால் எப்படி ஒரு நாடு மற் றொரு நாட்டின் நஷ்டத்தில் செல்வந்தனாக வளர முடியும் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால் அதில் நாம் வியப்படையத் தேவையில்லை, ஏனெனில் இதே கனவான்கள் தாம் ஒரே நாட்டுக்குள்ளே எப்படி ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தின் நஷ்டத்தில் தன்னைச் செல்வந்தனாக்கிக் கொள் கிறது என்பதைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

ஐயன்மீர், சுயேச்சையான வாணிபத்தை நாம் விமர்சிப் பதை வைத்து நமக்குக் காப்பு முறையைத் தாங்கிப் பிடிக் கும் நோக்கம் கொஞ்சமாவது இருப்பதாக நினைக்காதீர்கள்.

பழங்கால ஆட்சி முறையின் நண்பன் என்று சொல்லிக் கொள்ளாமலே ஒருவன் தன்னை சட்டப்படியமைந்த ஆட்சி முறையின் எதிரி என்று சொல்லிக் கொள்ளலாம்.

மேலும், காப்புமுறை என்பது எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டிலாயினும் பெருமளவான தொழில் துறையை நிலை நாட்டுவதற்கு—அதாவது, அதை உலகச் சந்தையைச் சார்ந்திருக்கச் செய்வதற்கு—வாய்த்த ஒரு சாதனமே தவிர வேறொன்றுமில்லை, மற்றும் உலகச் சந்தையைச் சார்ந்து நிற்பது நிலைநாட்டப்பட்ட வினாடி முதல் ஏற்கெனவே சுயேச்சையான வாணிபத்தைச் சார்ந்து நிற்கும் நிலையும் ஏறத்தாழ இருக்கிறது. இது தவிர, காப்புமுறை ஒரு நாட்டுக்குள்ளே சுதந்தரமான போட்டியை வளர்க்க உதவுகிறது. ஆகவே முதலாளி வர்க்கம் தன்னை ஒரு வர்க்கமாக உணரத் துவங்கியிருக்கும் நாடுகளில்—எடுத்துக்காட்டாக ஜெர்மனியில்—அது காப்பு வரிகளைப் பெறுவதில் பெரு முயற்சிகள் செய்கிறது. நிலப்பிரபுத்துவ முறைக்கும் அதிகாரவரம்பற்ற அரசாங்கத்துக்கும் எதிராக முதலாளி வர்க்கத்துக்கு வாய்த்த ஆயுதங்களாகவும், தனது சொந்த சக்திகளை ஒருமுனைப்படுத்திக் கொள்வதற்குரிய சாதனமாகவும், அதே நாட்டுக்குள்ளே சுயேச்சையான வாணிபத்தை நடைமுறையில் காண்பதற்குரிய சாதனமாகவும், முதலாளி வர்க்கத்துக்கு அவை பயன்படுகின்றன.

ஆனால், பொதுவாகச் சொன்னால், தற்காலக் காப்புமுறை நடப்பைக் காக்கும் தன்மையுடையது, சுயேச்சையான வாணிபமுறையோ நாசகரமான தன்மையுடையது. அது பழைய தேசிய இனங்களை உடைத்தெறிகிறது, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயுள்ள பகைமையைத் தீவிர நிலைக்குத் தள்ளிவிடுகிறது. சுருங்கச் சொன்னால், சுயேச்சையான வாணிப முறை சமுதாயப் புரட்சியைத் துரிதப்படுத்துகிறது. ஐயன்மீர், இந்தப் புரட்சிகரமான பொருளிலே மட்டுமே நான் சுயேச்சையான வாணிபத்துக்குச் சாதகமாக வாக்களிக்கிறேன்.

பதிப்பாளர் குறிப்புகள்

[1] 1847ல் கார்ல் மார்க்ஸ் பிரெஞ்சு மொழியில் எழுதி வெளியிட்ட மெய்யறிவின் வறுமை எனும் நூலின் முதல் ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரையாக இதை எங்கெல்ஸ் எழுதினர். முதல் ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் பல குறிப்புகள் எழுதினர், மொழிபெயர்ப்பு முழுவதையும் அவரே சரிபார்த்துப் பதிப்பித்தார். அது 1885 ஜனவரி பிற்பகுதியில் *Das Elend der Philosophie. Antwort auf Proudhons 'Philosophie de Elends', Stuttgart*, 1885 எனும் தலைப்பில் வெளியிடப்பட்டது. ஏற்கெனவே 1885 ஜனவரி துவக்கத்தில் எங்கெல்ஸ் முன்முயற்சியில் அதன் முன்னுரையானது மார்க்ஸும் ரோட்பெர்டஸும் எனும் தலைப்பில் *Neue Zeit* எனும் சஞ்சிகையில் (ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் தத்துவார்த்தப் பத்திரிகை) வெளியிடப்பட்டது. 1892ல் வெளிவந்த இரண்டாம் ஜெர்மன் பதிப்பிலும் இம்முன்னுரை இடம் பெற்றது; இந்தப் பதிப்புக்குச் சிறப்பாக ஒரு சிறு முன்னுரையும் எங்கெல்ஸ் எழுதினர் (இப்பதிப்பில் பக்கம் 30 பார்க்க).

பக்கம் 7

[2] P.J. Proudhon. *Système des contradictions économiques, ou Philosophie de la misère. T. I-II, Paris, 1846.*

பக்கம் 7

[3] மார்க்ஸ் எழுதிய "புரூதோன் குறித்து (இயோ. ப. ஷ்வைட்ஸருக்கு எழுதிய கடிதம்)" எனும் கட்டுரையை இது குறிக்கிறது (இப்பதிப்பின் பக்கம் 247 பார்க்க).

Social Demokrat ("சமூக ஜனநாயகவாதி") — லஸ்ஸால் வழிப்பட்ட பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் பத்திரிகை. இப்பெயரில் இச்செய்தித்தாள் பெர்லினில் 1864 டிஸம்பர் 15 முதல் 1871 வரை வெளியிடப்பட்டது; 1864-65 இடையே இயோ. ப. ஷ்வைட்ஸர் அதன் ஆசிரியராக இருந்தார்.

பக்கம் 7

[4] 1885 மே 5ல் எங்கெல்ஸ் தயாரித்து முடித்த மார்க்ஸின் மூலதனத்தின் இரண்டாவது தொகுதியின் முதல் ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் எழுதிய முன்னுரையை இது குறிக்கிறது.

பக்கம் 8

[5] Rodbertus-Jagetzow. *Zur Erkenntniß unserer staatswirtschaftlichen Zustände*. Neubrandenburg und Friedland, 1842. (ரோட்பெர்டஸ்-இயாகெட்ஸோவ். "நமது தேசியப் பொருளாதார அமைப்பு பற்றிய அறிவுக்குச் செலுத்தும் பங்கு". நியூ பிரான்டன்புர்க்—ஃப்ரீட்லாண்ட், 1842.)

பக்கம் 8

[6] மார்க்ஸுக்கு எதிரான இந்த அவதூறான குற்றச்சாட்டுகள் ரோட்பெர்டஸ் 1871 நவம்பர் 29ல் ஆர். மேயருக்கு எழுதிய கடிதத்திலும் (*Briefe und Socialpolitische Aufsätze von Dr. Rodbertus-Jagetzow Herausgegeben von Dr. Meyer*. Bd. I, Berlin. S. 134 எனும் நூலில்) ஐ. ஸெல்லருக்கு 1875 மார்ச் 14ல் எழுதிய கடிதத்திலும் (*Zeitschrift für die gesammte Staatswissenshaft*. Bd. 35, Tübingen, 1879, S. 219 எனும் நூலில்) உள்ளன.

பக்கம் 8

[7] *Sociale Briefe an von Kirchmann* ("வான் கிர்ஹ்மனுக்கு எழுதிய சமுதாயக் கடிதங்கள்") எனும் பொதுத் தலைப்பில் 1850லும் 1851லும் ரோட்பெர்டஸ் பெர்லினில் வெளியிட்ட மூன்று தனித்தனி நூல்களை எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். பக்கம் 8

[8] D. Ricardo. *On the Principles of Political Economy and Taxation*. London, 1817. (டே. ரிக்கார்டோ. அரசியல்

பொருளாதாரம், வரி விதித்தல் ஆகியவற்றின் கோட்பாடுகள், லண்டன், *1817*).

பக்கம் *9*

[9] *1821*ல் லண்டனில் முகவரியற்ற ஒரு பிரசுரம் வெளியிடப் பட்டது. அதன் தலைப்பு *The Source and Remedy of the National Difficulties, Deduced from Principles of Political Economy, in a Letter to Lord John Russell* (''தேசியக் கஷ்டங்களின் தோற்றுவாயும் தீர்வும், அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளிலிருந்து பெறப்பட்டது; ஜான் ரஸ்ஸல் பிரபுவுக்கு எழுதிய கடிதம்''), லண்டன் *1821*. மூலதனத்தின் இரண்டாம் தொகுதியின் முதல் ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் எழுதிய முன்னுரையில் இந்தப் பிரசுரத்தை இனங்குறித்தார். பக்கம் *9*

[10] பார்க்க: கார்ல் மார்க்ஸ், மெய்யறிவின் வறுமை. திரு. புரூதோன் எழுதிய ''வறுமையின் மெய்யறிவு'' எனும் நூலுக்குப் பதில் (இப்பதிப்பில் பக்கம் *31* பார்க்க). கொட்டை எழுத்துக்களும் அடைப்புக் குறியிடப்பட்ட சொற்களும் எங்கெல்ஸ் போட்டவை. பக்கம் *10*

[11] கார்ல் மார்க்ஸ். அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்குச் செலுத்தும் ஒரு பங்கு. (Karl Marx. *A Contribution to the Critique of Political Economy*). பக்கம் *11*

[12] D. Ricardo. *On the Principles of Political Economy and Taxation.* பக்கம் *15*

[13] J. Gray. *The Social System, A Treatise on the Principle of Exchange*, Edinburgh, *1831* (ஜான் கிரே. சமுதாய அமைப்பு முறை. பரிமாற்றக் கோட்பாடு பற்றிய ஒரு ஆய்வு நூல். எடின்பரோ, *1831*) பக்கம் *16*

[14] ரோட்பெர்டஸ் *1871* "Der Normal-Arbeitstag" (''சகஜமான வேலைநாள்'') எனும் கட்டுரையை வெளியிட்டார்; அது *Berliner Revue* (''பெர்லின் ரெவ்யூ'') எனும் சஞ்சிகையில் செப்டம்பர் *16, 23, 30*ம் தேதிகளில் வெளியிடப் பட்டது. மற்றும் அது தனிப் பிரசுரமாகவும் *1871*ல் பெர்லினில் வெளியிடப்பட்டது. பக்கம் *16*

15 ரோட்பெர்டஸ்-இயாகெட்ஸோவின் இலக்கியங்களை, குறிப்பாக அவருடைய *Das Kapital. Vierter socialer Brief an von Kirchmann.*Berlin, 1884 (''மூலதனம். வான் கிர்ஹ்மனுக்கு எழுதிய நான்காம் சமுதாயக் கடிதம்''. பெர்லின், *1884)* எனும் நூலை வெளியிடுவதில், பங்கு கொண்ட குழுவினரை இது குறிக்கிறது. இதை வெளியிட்டவரும் அறிமுகம் எழுதியவரும் டி. கோஸாக் ஆவார்; முன்னுரை எழுதியவர் ஏ. வாக்னர், விஞ்ஞானச் சிறப்பற்ற ஜெர்மன் பொருளாதாரவாதி.

பக்கம் *16*

16 ஜான் கிரேயின் கருத்துக்களை விமர்சித்து மார்க்ஸ் எழுதிய அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்குச் செலுத்தும் ஒரு பங்கு எனும் நூலின் பகுதியை இது குறிக்கிறது. இப்பதிப்பின் பக்கங்கள் *260-64*ஐப் பார்க்க.

பக்கம் *16*

17 Rodbertus-Jagetzow. *Zur Erkenntniß unsrer staatswirthschaftlichen Zustände*. Neubrandenburg und Friedland, 1842, S. 61.

பக்கம் *17*

18 ரோட்பெர்டஸ் எழுதிய மூலதனம். வான் கிர்ஹ்மனுக்கு எழுதிய நான்காம் சமுதாயக் கடிதம் (C. Rodbertus-Jagetzow. *Das Kapital. Vierter Socialer Brief an von Kirchmann.* Berlin, 1884, S. VII-VIII) எனும் நூலுக்கு ஏ. வாக்னர் எழுதிய முன்னுரையில் ''உன்னதமான சிந்தனையாளர்களுக்கு மட்டுமே உரிய வகையிலே இங்கே ரோட்பெர்டஸ் சூட்சுமச் சிந்தனையாற்றலை வெளிப்படுத்துகிறார்'' எனும் பகுதியை இது குறிக்கிறது.

பக்கம் *17*

19 Rodbertus-Jagetzow. *Zur Erkenntniß unsrer staatswirthschaftlichen Zustände*. Neubrandenburg und Friedland, 1842, S. 62. கீழே இந்நூல் ஆராயப்பட்டு மேற்கோள் காட்டப் பெறுகிறது.

பக்கம் *17*

[20] இது மெய்யறிவின் வறுமையின் இரண்டாம் பிரெஞ்சுப் பதிப்பைக் குறிக்கிறது, அக்காலத்தில் மார்க்ஸின் புதல்வி லெளரா லஃபார்க் இதை அச்சேற்றத் தயாரித்தார். இப் பதிப்பின் தயாரிப்பு தாமதப்பட்டு *1896ல்,* எங்கெல்ஸ் காலமானபின், பாரிஸில் வெளியிடப்பட்டது.

பக்கம் 29

[21] *1847* பிரெஞ்சுப் பதிப்பில் சிறு பிழைகள் இருந்தன, அவை *1885* ஜெர்மன் பதிப்பிலும் இடம் பெற்றன. இவற்றை ஆஸ்திரிய நாட்டு பூர்ஷ்வா சமுதாய இயலாள ரும் வழக்குரைஞருமான ஆ. மெங்கெர் *Das Recht auf den vollen Arbeitsertrag in geschichtlicher Darstellung.* Stuttgart, 1886 *(''வரலாற்றுப் பார்வையிலே வேலைக்கு முழுச் சம்பளம் பெறும் உரிமை'')* எனும் நூலில் மார்க்ஸுக்கும் எங்கெல்ஸுக்கும் எதிராக மறைமுகமான பழிக்கூற்றுகளைத் தொடுக்கப் பயன்படுத்தினர்.

பக்கம் 30

[22] Simonde de Sismondi. *Études sur l'économie politique.* T.I-II, Bruxelles, 1837-1838 *(ஸிமொந்து தே ஸிஸ்மொந்தீ,* அரசியல் பொருளாதாரம் பற்றிய கட்டுரைகள். தொகுதி *1-2, புருஸெல்ஸ், 1837-1838)* எனும் நூலை மார்க்ஸ் இங்கே மேற்கோள் காட்டுகிறார்.

பக்கம் 41

[23] Lauderdale. *Recherches sur la nature et l'origine de la richesse publique.* Traduit de l'anglais, par E. Lagentie de Lavaïsse. Paris, 1808, p. 33.

பக்கம் 41

[24] D. Ricardo. *Des principes de l'économie politique et de l'impot.* Traduit de l'anglais par F.-S. Constancio avec des notes explicatives et critiques par J. B. Say. T.II, Paris, 1835, p. 65. *(டே. ரிக்கார்டோ.* அரசியல் பொருளாதாரம், வரி விதித்தல் ஆகியவற்றின் கோட்பாடுகள். *ஃபி. சொ. கான்ஸ்டான்ஸியோ ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தவர், ழா.ப. ஸேய் விளக்கவுரைகளையும் விமர்சனக் குறிப்புகளையும் எழுதியவர்; தொகுதி 2, பாரிஸ், 1835, பக்கம் 65).*

பக்கம் 42

[25] A. Anderson. *An Historical and Chronological Deduction of the Origin of Commerce from the Earliest Accounts to the Present Time.* (ஆ. ஆண்டர்ஸன். "வர்த்தகத்தின் தோற்றம் பற்றிய வரலாற்று வகைப்பட்ட கால அடைவு வழிப்பட்ட ஒரு ஆய்வுமுடிபு. ஆதிகாலச் செய்திகள் முதல் தற்காலம் வரை.") இதன் முதற் பதிப்பு 1764ல் லண்டனில் வெளியிடப்பட்டது.

பக்கம் 45

[26] H. Storch. *Cours d'économie politique, ou Exposition des principes qui déterminent la prospérité des nations.* T. I-IV, Paris, 1823. (அ. ஷ்டோர்ஹ். "அரசியல் பொருளாதாரத்துக்குரிய பயிற்சி அல்லது தேசங்களின் செழுமையை நிர்ணயிக்கிற கோட்பாடுகள் பற்றிய விரி விளக்கம்." தொகுதிகள் I-IV, பாரிஸ், 1823.) இதில் மார்க்ஸ் 1ம் தொகுதியைக் குறிப்பிடுகிருர்.

பக்கம் 47

[27] 1815ல் நெப்போலியன் போர்கள் முடிந்து பிரான்ஸில் பூர்போன் அரசவம்சம் மீண்டும் ஆட்சிக்கு வந்த காலத்தை இது குறிக்கிறது.

பக்கம் 53

[28] A. Smith. *An Inquiry into the Nature and Causes of the Wealth of Nations.* (ஆ. ஸ்மித். "தேசங்களின் செல்வத்துக்குரிய தன்மையும் காரணங்களும் பற்றிய ஒரு விசாரணை") அதன் முதற் பதிப்பு 1776ல் லண்டனில் வெளியிடப்பட்டது.

பக்கம் 55

[29] *Économistes-financiers du XVIII siécle.* Précédés de notices historiques sur chaque auteur, et accompagnés de commentaires et de notes explicatives, par Eugéne Daire. Paris, 1843. ("18ம் நூற்றுண்டின் பொருளாதாரவாதிகளும் நிதித்துறை வல்லுநர்களும்" எழேன் தேயர் ஒவ்வொரு ஆசிரியர் குறித்து வரலாற்றுக் கட்டுரைகளையும் விளக்கவுரைகளையும் எழுதியவர், பாரிஸ், 1843) எனும் நூல் தொகுதியிலிருந்து மேற்கோள் காட்டப் பெறுகிறது. பாரிஸ், 1843).

பக்கம் 84

[30] W. Atkinson. *Principles of Political Economy*. London, 1840.
பக்கம் 84

[31] Th. Hodgskin. *Popular Political Economy*. London, 1827. (தா. ஹாட்ஸ்கின். ''எளிய விளக்க வடிவத்திலே அரசியல் பொருளாதாரம்''. லண்டன், 1827).

மார்க்ஸின் அடிநூலில் ஹாட்ஸ்கின் என்பதற்குப் பதிலாகத் தவருக ஹாப்கின்ஸ் என்று போடப்பட்டிருந்தது. 1892ல் மெய்யறிவின் வறுமை இரண்டாம் ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் இத்தவற்றைத் திருத்தினர். மார்க்ஸின் இந்தச் சுட்டுக்குறிப்பை வைத்து ஆதாரமற்ற அனுமானங்களை முன்வைப்பதற்கு ஆஸ்திரிய நாட்டு பூர்ஷ்வா வழக்குரைஞர் ஆ. மெங்கெர் இத்தவற்றைப் பயன்படுத்திக் கொண்டார். இப்பதிப்பின் பக்கம் 30ஐப் பார்க்க.
பக்கம் 86

[32] W. Thompson. *An Inquiry into the Principles of the Distribution of Wealth Most Conducive to Human Happiness*. London, 1824.

T. R. Edmonds. *Practical Moral and Political Economy*. London, 1828.

பக்கம் 86

[33] J. F. Bray. *Labour's Wrongs and Labour's Remedy*. Leeds, 1839.

பக்கம் 87

[34] பத்து மணிநேர வேலைநாள் மசோதா பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் 1847 ஜூன் 8ல் நிறைவேற்றப்பட்டது. இது பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டும் செல்லத்தக்கதாகும். எனினும் பல தொழிலதிபர்கள் இச்சட்டத்தைப் புறக்கணித்தனர்.

பக்கம் 97

[35] Voltaire. *Histoire du Parlement*. (வோல்தேர், நாடாளுமன்றத்தின் வரலாறு) எனும் நூலை மார்க்ஸ் மேற்கோள் காட்டுகிருர். அத்தியாயத்தின் தலைப்பு :''ஆட்பேராட்சிக் காலத்திய நிதிகளும் லாயின் அமைப்புமுறையும்''.
பக்கம் 106

[36] ரிக்கார்டோ நூலின் பிரெஞ்சுப் பதிப்பு (பார்க்க: குறிப்பு 24), தொகுதி 2, பக்கம் 206-207ல், ஸேய் வரைந்த குறிப்பை இது குறிக்கிறது.

பக்கம் 112

[37] N. W. Senior. *Political Economy*. In: *Encyclopaedia Metropolitana, or Universal Dictionary of Knowledge*. Vol. VI, London, 1836.

பக்கம் 114

[38] J. St. Mill. *Essays on Some Unsettled Questions of Political Economy*. London, 1844.

Th. Tooke. *A History of Prices, and of the State of the Circulation, from 1793 to 1837*. Vol. I-II, London 1838. (தா. டூக். ''விலைவாசிகளின் ஒரு வரலாறும் பணப்புழக்கத்தின் நிலையும், 1793 முதல் 1837 வரை.'' நூல்தொகுதிகள் I-II. லண்டன், 1838).

பக்கம் 114

[39] Th. Cooper. *Lectures on the Elements of Political Economy*. இந்நூலின் முதற் பதிப்பு 1826ல் கொலம்பியா (Süd-Karalina)விலும், இரண்டாவது விரிவான பதிப்பு 1831ல் லண்டனிலும் வெளியிடப்பட்டது.

பக்கம் 116

[40] M. Th. Sadler. *The Law of Population*. Vol. I, London, 1830, p. 83, 84.

பக்கம் 117

[41] கெனே எழுதிய *Tableau économique* (1758), *Analyse du Tableau économique (1766)* ஆகிய இரண்டு முக்கியமான நூல்களை இது குறிக்கிறது.

பக்கம் 132

[42] கெனேவுடன் சமகாலத்தில் வாழ்ந்த நி. போதோ எழுதிய *Explication du Tableau économique* (''பொருளாதார அட்டவணைக்கு விளக்கம்'') எனும் நூலை மார்க்ஸ் குறிப்பிடுகிறார். இது 1770ல் வெளியிடப்பட்டது.

பக்கம் 132

[43] G.W.F. Hegel. *Wissenschaft der Logik*. Bd. III; Werke, 2-te Aufl., Bd. V, Berlin S. 320. (*கி. வி. ஃபி. ஹெகல், தர்க்கவாதம் எனும் விஞ்ஞானம், தொகுதி 3, நூல்திரட்டு, 2ம் பதிப்பு, தொகுதி 5, பெர்லின், 1841, பக்கம் 320).*

பக்கம் *136*

[44] லுக்ரீஷியஸ் எழுதிய பொருட்களின் இயற்கையான தோற்றுவாய், (*புத்தகம் 3, வரி 869*) எனும் நூலில் வருகிற "mortalem vitam mors immortalis ademit" (*''சாகாவரம் பெற்ற சாவு முடிவுள்ள வாழ்வைப் பறித்துவிட்டது''*) எனும் வரியை மார்க்ஸ் மேற்கோள் காட்டுகிறார்.

பக்கம் *140*

[45] A. de Villeneuve-Bargemont. *Histoire de l'économie politique*. முதற் பதிப்பு புருஸெல்ஸில் *1839*ல் வெளிவந்தது.

பக்கம் *154*

[46] ஆ. ஸ்மித் எழுதிய தேசங்களின் செல்வத்துக்குரிய தன்மையும் காரணங்களும் பற்றிய ஒரு விசாரணைகள் எனும் நூலை *Recherches sur la nature et les causes de la richesse des nations*. T. I, Paris. 1802 எனும் அதன் பிரெஞ்சுப் பதிப்பிலிருந்து மார்க்ஸ் மேற்கோள் காட்டுகிறார்.

பக்கம் *165*

[47] லெமொன்தே தமது *Raison, folie, chacun son mot; petit cours de morale mis à la portée des vieux enfants*. Paris, 1801(*''பகுத்தறிவு, மடமை, அவனவனுடைய சொல் அவனவனுக்கே; முதுமையெய்திய குழந்தைகளின் அறிவுக்கு எட்டக் கூடிய வகையில் ஒழுக்கநெறி பற்றிய ஒரு சிறு பயிற்சி நூல்''. பாரிஸ், 1801*) எனும் நூலைக் குறிப்பிடுகிறார்.

லெமொன்தே எழுதிய மற்றொரு நூலாகிய *Influence morale de la division du travail* (*''உழைப்புப் பிரிவினையின் ஒழுக்கநெறிச் செல்வாக்கு''*) எனும் நூலை மார்க்ஸ் மேற்கோள் காட்டுகிறார். இந்நூலில் லெமொன்தே மேலே முதலில் குறிப்பிட்ட தமது நூலைக் குறிப்பிடுகிறார்.

பக்கம் *166*

[48] A. Ferguson. *Essai sur l'histoire de la société civilé*. T. II, Paris, 1783, p. 108-110.

பக்கம் 167

[49] Ch. Babbage. *Traité sur l'économie des machines et des manufactures*. Paris, 1833, p. 230 (*சா*.பேபிஜ். இயந்திரங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் பொருளாதாரம் பற்றிய ஓர் ஆய்வு நூல். *பாரிஸ், 1833, பக்கம் 230*).

பக்கம் 177

[50] A. Ure. *Philosophie des manufactures, ou Économie industrielle*. Bruxelles, 1836, t. I, première partie, chapitre I.

பக்கம் 184

[51] P. Rossi. *Cours d'économie politique*. T. I-II. Paris, 1840-1841. *பக்கம் 194*

[52] J. Steuart. *Recherche des principes de l'économie politique*. T. II, Paris, 1789, p. 190-191. இதன் முதல் ஆங்கிலப் பதிப்பு 1767ல் லண்டனில் வெளிவந்தது. *பக்கம் 196*

[53] *வோல்தேர். "நாற்பது எக்கூ வருமானமுள்ள மனிதன்" (L'homme aux quarante ecus) எனும் கதை.*

பக்கம் 198

[54] W. Petty. *Political Arithmetick ("அரசியல் கணிதவியல்")*. W. Petty. *Several Essays in Political Arithmetick*. London, 1699 *("அரசியல் கணிதவியல் துறையிலான சில கட்டுரைகள்") எனும் நூலில் இருக்கிறது.*

பக்கம் 213

[55] *தானியத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை வரம்புக்குட்படுத்துகிறதாகவோ தடை செய்கிறதாகவோ அமைந்த சட்டங்கள் பிரிட்டனில் பெரும் நிலப் பிரபுக்களின் நலன்களை உத்தேசித்து 1815லிருந்து புகுத்தப்பட்டன. தொழில் துறை முதலாளி வர்க்கம் சுயேச்சையான வாணிபம் எனும் முழக்கத்தின் வழியாக இந்தத் தானியச் சட்டங்களை எதிர்த்து 1846ல் ஒழித்திடச் செய்தது. பக்கம் 216*

56 பிரான்ஸில் 1791ல் பூர்ஷ்வாப் புரட்சியின் போது அரசியல் அமைப்பு மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட லெ ஷாப்பெலியே சட்டம் எனும் சட்டமும் நெப்போலியன் பேரரசின் கீழ் வகுக்கப்பட்ட குற்றத் தண்டனைச் சட்டத் தொகுதியும் இங்கே குறிக்கப்படுகின்றன. இவை தொழி லாளிகளைத் தொழிற்சங்கங்கள் அமைக்கக் கூடாதென் றும் வேலை நிறுத்தம் செய்யக் கூடாதென்றும் தடை செய்து கடுமையான தண்டனைக்குரிய குற்றங்களாக ஆக்கப் பட்டன. தொழிற்சங்க அமைப்புத் தடை பிரான்ஸில் 1884லேதான் நீக்கப்பட்டது. பக்கம் 219

57 ஒன்றுபட்ட தொழில்களின் தேசியச் சங்கம் (National Association of United Trades)—இது 1845ல் இங்கிலாந்தில் அமைக்கப்பட்ட ஒரு தொழிற்சங்க அமைப்பாகும். உழைப்புச் சக்தியை விற்பதற்குரிய நிலைமைகளை மேம் படுத்துவதற்கும் மேலான தொழிலாளர் சட்டங் களுக்காகவும் பொருளாதாரப் போராட்டங்களை நடத்து வதோடு இதன் நடவடிக்கைகள் நின்றுவிட்டன. இந்த அமைப்பு 1860ம் ஆண்டுகளின் தொடக்கம் வரை நீடித் திருந்தது என்றாலும் 1851க்குப்பின் இது தொழிற்சங்க இயக்கத்தில் முக்கியப் பங்கு எடுத்துக் கொள்ளவில்லை. பக்கம் 221

58 ழார்ழ் ஸாந்த். ழான் ழீழ்கா எனும் ஒரு சரித்திர நாவல். அறிமுகம்.

பக்கம் 224

59 புரூதோன் நூல் குறித்து மார்க்ஸுக்கு பா. வ. ஆன்னென் கவ் எழுதியதாவது:

''ஜெர்மன் மெய்யறிவின் ஒரு துணுக்கைச் சமாளித் துப் புரிந்துகொண்ட ஒருவரின் கற்பனைக் கருத்தின் ஒரு விளைவாகவே இந்நூலின் அமைப்புத்திட்டம் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது என்று நான் சொல்லித்தீரவேண் டும், ஒரு குறிப்பிட்ட ஆய்வுப் பொருளையும் அதன் தர்க்க வகைப்பட்ட வளர்ச்சியையும் பற்றிய விரிவிளக்கத்தின்

ஒரு தர்க்கரீதியான விளைவாக அது எனக்குத் தோன்ற வில்லை.''

பக்கம் 227

60 மார்க்ஸ் எழுதத் திட்டமிட்டு ஆனால் எழுதிமுடிக்காமல் விட்ட ''அரசியலும் அரசியல் பொருளாதாரமும் பற்றிய விமர்சனவுரை'' எனும் நூலை இது குறிக்கிறது.

பக்கம் 246

61 கா. மார்க்ஸ், ஃபி. எங்கெல்ஸ் எழுதிய ஜெர்மன் சித்தாந்தம் எனும் நூலை இது குறிக்கிறது.

பக்கம் 246

62 *Social-Demokrat* எனும் பத்திரிகையின் ஆசிரியர் ஷ்வைட்ஸர் வேண்டுகோளுக்கு இணங்க 1865 ஜனவரி 24ல் மார்க்ஸ் புரூதோன் மறைவையொட்டி ''புரூதோன் குறித்து'' எனும் இக்கட்டுரையை எழுதினார்.

பக்கம் 247

63 புரூதோன் எழுதிய *Essai de grammaire gènèrale* (''பொது மொழி இலக்கணம் பற்றிய கட்டுரை.'') Bergier. *Les éléments primitifs des langues. Besançon, 1837* (பெர்ழியே. ''மொழிகளின் ஆதிகாலக் கூறுகள்'') எனும் நூலில் இது வெளியிடப்பட்டது.

பக்கம் 247

64 P. J. Proudhon. *Qu' est-ce que la propriété? ou Recherches sur le principe du droit et du gouvernement*. Paris, 1840 (பி. ஜொ. புரூதோன். ''சொத்து என்பது என்ன? அல்லது, உரிமைக்கும் அரசாங்கத்துக்கும் உரிய கோட்பாடு பற்றிய விசாரணைகள்.'' பாரிஸ், 1840).

பக்கம் 247

65 T. R. Malthus. *An Essay on the Principle of Population, As It Affects the Future Improvement of Society, With Remarks On the Speculations of Mr. Godwin, M.Condorcet, and Other Writers*. London 1798 (தா. ரா. மால்தஸ்.

''சமுதாயத்தின் எதிர்காலத்திய மேம்பாட்டைப் பாதிக்கிற பார்வைநிலையில் மக்கட் தொகை பற்றிய கோட்பாடு குறித்து ஒரு கட்டுரை, திரு. கொட்வின், திரு. கன்டர்ஸெ மற்றும் பிற எழுத்தாளர்களின் ஊகசிந்தனைகளைப் பற்றிய குறிப்புரைகளுடன்'' லன்டன், 1798).

பக்கம் 248

66 J. P. Brissot de Vorvill's *Recherches philosophiques. Sur le droit de propriété et sur le vol, considérés dans la nature et dans la société* (ழான் பி. பிரிஸ்ஸோ. ''மெய்யறிவு பற்றிய விசாரணை. இயற்கையிலும் சமுதாயத்திலும் வைத்துக் கவனிக்கிற வகையில் சொத்துரிமை திருட்டு பற்றியது.'') *Bibliotheque philosophique du législateur, du politique, du jurisconsulte.* T. VI. Berlin, Paris, Lyon, 1782 (''ஒரு சட்டமியற்றுபவரின், அரசியல் தலைவரின், வழக்குரைஞரின் மெய்யறிவுத்துறை நூலகம்'' நூல்தொகுதி VI, பெர்லின், பாரிஸ், லியோன், 1782) எனும் நூலில் வெளியிடப்பட்டது.

பக்கம் 250

67 P. J. Proudhon. *Systéme des contradictions économiques, ou Philosophie de la misère* T. I-II, Paris, 1846.

பக்கம் 251

68 இதே நூல், பக்கம் 155ஐப் பார்க்க.

பக்கம் 252

69 இதே நூல், பக்கங்கள் 161-162ஐப் பார்க்க.

பக்கம் 254

70 1830-40களிடையே பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கத்தில் எத்தியேன் காபே (அமைதி வழிப்பட்ட கற்பனாவாதக் கம்யூனிஸத்தின் தலைசிறந்த பிரதிநிதிகளில் ஒருவர்) எடுத்துக் கொண்ட பாத்திரத்தை இது குறிப்பிடுகிறது. அவர் வெளியிட்ட *Le Populaire* (''மக்கள்'') மற்றும் *Le Populaire de 1841* (''1841ம் ஆண்டின் மக்கள்'') எனும் செய்தித்தாட்களில் காபே தமது கற்பனா

வாதத் திட்டங்களைப் பிரச்சாரம் செய்ததோடல்லாமல் ஜூலை காலத்து முடியரசாட்சியையும் விமர்சித்து ஜன நாயகக் கருத்துக்களைப் பரப்புவதில் பங்கு செலுத்தினர். தமது நூல்களிலும் கட்டுரைகளிலும் துண்டுப்பிரசுரங் களிலும் முதலாளித்துவ அமைப்பைக் கடுமையாக விமர் சித்தார். அவர் கருத்துக்கள் கற்பனை வழிப்பட்டவையாக இருந்தபோதிலும், பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கம் அரசியல் போதனை பெறுவதில் அவரது எழுத்துக்கள் முக்கியமான பாத்திரம் வகித்தன. பக்கம் 255

71 பிரெஞ்சு அசெம்பிளியில் 1848 ஜூலை 31ல் புரூதோன் நிகழ்த்திய சொற்பொழிவைக் குறிக்கிறது இது. அதன் முழு வாசகம் *Compte rendu des séances de l'Assemblée Nationale.* Vol.II, Paris, 1849 p. 770-782 (''தேசிய அசெம் பிளியின் கூட்டத்தொடர்களின் நடவடிக்கைப் பதிவேடு'', தொகுதி 2, பாரிஸ், 1849. பக்கங்கள் 770-782) என்பதில் வெளியிடப்பட்டது. இச்சொற்பொழிவில் புரூதோன் பல சிறுபூர்ஷ்வா வழிப்பட்ட கற்பனைத் திட்டங்களை (கடன் மீது வட்டி விதிப்பதை ஒழிப்பது முதலியவை) முன்வைத் தார், இதே நேரத்தில் 1848 ஜூன் 23-26ல் பாரிஸில் நடந்த பாட்டாளி வர்க்கப் புரட்சி எழுச்சியில் கலந்து கொண்டவர்கள் மீது இழைக்கப்பட்ட அக்கிரமங்களை அவர் தான்தோன்றித்தனமான போக்கின் வெளியீ டென்றும் வன்முறையின் வெளியீடென்றும் வர்ணித்தார். பக்கம் 255

72 பிரெஞ்சு தேசிய அசெம்பிளியின் நிதிக் குழுவில் புரூதோன் முன்வைத்த திட்டங்களை எதிர்த்து தியேர் நிகழ்த்திய சொற்பொழிவை இது குறிக்கிறது. *Compte rendu des séances de l'Assemblée Nationale.* Vol. II, Paris, 1849, p. 666-671 என்பதில் வெளியிடப்பட்டது. பக்கம் 255

73 *Gratuité du crédit. Discussion entre M. Fr.Bastiat et M. Proudhon.* Paris, 1850 (''வட்டியில்லாக் கடன். திரு. ஃபி. பாஸ்தியா, திரு. புரூதோன் இடையே நடந்த விவாதம்''. பாரிஸ், 1850). பக்கம் 257

[74] பி.ஜொ. புரூதோன் எழுதிய *Théorie de l'impot, question mise au concours par le conseil d'État du canton de Vaud en 1860* ("1860ல் வோட் கான்டனின் அரசுக் கவுன்ஸில் வைத்த போட்டிக்கு முன்வைத்த வரிவிதிப்பு பற்றிய தத்துவம்") எனும் நூலை இது குறிக்கிறது. இது 1861ல் புருஸெல்ஸிலும் பாரிஸிலும் வெளியிடப்பட்டது.

பக்கம் 257

[75] P. J. Proudhon. *La Révolution sociale démontreé par le coup d'État du 2 Décembre*. Paris, 1852 (பி. ஜொ. புரூதோன். "டிஸம்பர் 2ல் நடந்த திடீர் ஆட்சி மாற்றம் செய்து காட்டிய சமுதாயப் புரட்சி." பாரிஸ், 1852).

பக்கம் 257

[76] P. J. Proudhon. *Si les traités de 1815 ont cessé d'exister? Actes du futur congrès*. Paris, 1863 (பி. ஜொ. புரூதோன். "1815ம் வருட ஒப்பந்தங்கள் மறைந்து விட்டனவா? எதிர்கால மாநாட்டின் சட்டங்கள்". பாரிஸ், 1863) 1815ல் வியென்னுவில் நடந்த மாநாடு போலந்து குறித்து எடுத்த முடிவையும் தீர்வையும் எதிர்த்தும், போலந்தின் விடுதலை இயக்கத்துக்கு ஐரோப்பிய ஜனநாயக நாடுகள் அளித்த ஆதரவை எதிர்த்தும் இந்நூலில் திரு. புரூதோன் எழுதினார். எனவே போலந்து மீது ருஷ்ய ஜாராட்சி சுமத்திய ஒடுக்குமுறைக் கொள்கையை புரூதோன் ஆதரித்தார்.

பக்கம் 257

[77] *Théorie des loix civiles, ou principes fondamentaux de la société*. T. I-II, Londres, 1767. இது முகவரியின்றி வெளியிடப்பட்டது.

பக்கம் 258

[78] சுயேச்சையான வாணிபத்தைப்பற்றிய பிரச்சினைகுறித்துச் சொற்பொழிவு எனும் மார்க்ஸின் நூல் புருஸெல்ஸில் பிரெஞ்சு மொழியில் 1848 பிப்ரவரி துவக்கத்தில் வெளியிடப்பட்டது. அதே ஆண்டில் இதை வைடமேயர் ஜெர்மன் மொழியில் பெயர்த்து ஜெர்மனியில் வெளியிட்டார். அவர் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் நண்பர்,

மாஞுக்கர் கூட. 1885ல், எங்கெல்ஸ் விருப்பத்திற்கிணங்க, இது மெய்யறிவின் வறுமையின் முதல் ஜெர்மன் பதிப்புக்குப் பிற்சேர்க்கையாக வெளியிடப்பட்டது.

பக்கம் 265

79 சுயேச்சை வாணிப வாதிகள் [Freetraders]—வாணிபச் சுதந்தரத்தையும் நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் அரசுத் தலையிடாமையையும் கோருகிறவர்கள். சுயேச்சை வாணிபப் பிரச்சாரத்துக்கு மாஞ்செஸ்டர் மையமாகும். இங்கேதான் மாஞ்செஸ்டர் கருத்துப்பிரிவு அமைந்தது. இது பொருளாதாரச் சிந்தனையிலே தொழில் முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்த ஒரு சிந்தனைப் போக்காகும். காப்டென், பிரைட் எனும் இரண்டு ஜவுளி யாலை முதலாளிகள் இந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்கினர், அவர்கள் தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம் எனும் அமைப்பை 1838ல் அமைத்தனர். (81ம் குறிப்பைப் பார்க்க.)

1840-50ம் ஆண்டுகளில் சுயேச்சை வாணிப வாதிகள் ஒரு தனிப்பட்ட அரசியல் குழுவாக விளங்கினர், பின்னுல் அது பிரிட்டிஷ் மிதவாதக் கட்சியிலே சேர்த்துவிட்டது.

பக்கம் 265

80 55ம் குறிப்பைப் பார்க்க.

பக்கம் 267

81 தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம் 1838ல் காப்டென், பிரைட் எனும் இரண்டு மாஞ்செஸ்டர் ஜவுளியாலை முதலாளிகளால் நிறுவப்பட்டது. அது வாணிபத்தில் முழுசுதந்தரம் கோரியது. தொழிலாளிகளின் கூலியை குறைக்கவும், நிலச் சொத்து படைத்த பிரபுவம்சத்தினரின் பொருளாதார, அரசியல் செல்வாக்கு நிலைகளைப் பல வீனப்படுத்தவும் வேண்டி அது தானியச் சட்டங்களை ஒழித்திடப் பாடுபட்டது. தொழிலாளிகளின் நலன்களும் முதலாளிகளின் நலன்களும் ஒன்றே என்று வாய்வீச்சுடன் பிரச்சாரம் செய்வதிலே சுயேச்சையான வாணிபம் என்கிற முழக்கத்தை இச்சங்கம் பரவலாகப் பயன்படுத்தியது.

1846ல் தானியச் சட்டங்கள் நீக்கப்பட்டபின் இந்தச் சங்கம் மறைந்து போயிற்று.

பக்கம் 268

[82] *பத்து மணி நேர வேலைநாள் மசோதா பிரிட்டிஷ் நாடாளு மன்றத்தில் 1847 ஜூன் 8ல் நிறைவேற்றப்பட்டது. இது பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டும் செல்லத் தக்கதாகும். எனினும் பல தொழிலதிபர்கள் இச்சட்டத் தைப் புறக்கணித்தனர்.*

பக்கம் 271

[83] *Des principes de l'èconomie politique et de l'impot*. Traduit de l'anglais par F.-S. Constancio, avec des notes explicatives et critiques par J.-B. Say. T. I. Paris, 1835, p. 178-179 *எனும் பிரெஞ்சுப் பதிப்பின்படி மார்க்ஸ் ரிக்கார்டோவின் நூலை மேற்கோள் காட்டுகிறார்.*

பக்கம் 273

[84] A. Ure. *Philosophie des manufactures, ou Économie industrielle*. T. I. Bruxelles, 1836, p. 34.

பக்கம் 281

பெயர்க் குறிப்பகராதி

ஆட்கின்ஸன் [Atkinson], வில்லியம்—*1830களிலும் 1850 களிலும் முன்னின்ற பிரிட்டிஷ் பொருளாதாரவாதி; பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் மூலச்சிறப்புக் கருத்துப் பிரிவினரை எதிர்ப்பவர்; வாணிபக் காப்பு முறையின் ஆதரவாளர்.—84.*

ஆண்டர்ஸன் [Anderson], ஆதாம் *(1692-1765)—ஸ்காட்லாந்து நாட்டு பூர்ஷ்வா பொருளாதாரவாதி; வாணிபத்தின் வரலாறு குறித்து ஒரு நூல் எழுதியுள்ளார்.—45.*

ஆர்க்ரைட் [Arkwright], ரிச்சர்ட் *(1732-1792) — தொழிற் புரட்சிக் காலத்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் தொழில் முதலாளி. பற்பல புனைவுகளைக் கொண்டு நூற்பு இயந்திரத்தைப் படைத்து விரிந்த அளவிலே தொழில்துறையில் புகுத்தினர்.—180.*

ஆன்னென்கவ் [Annenkov], பாவெல் வஸீலியெவிச் *(1812-1887)—ருஷ்ய நாட்டு இலக்கிய விமர்சகர், பொது விவகார எழுத்தாளர், மிதவாதி.—227.*

எட்மண்ட்ஸ் [Edmonds], தாமஸ் ரோவ் *(1803-1889) — பிரிட்டிஷ் பொருளாதாரவாதி, கற்பனு சோஷலிஸவாதி, சோஷலிஸ்டு முடிவுகள் எடுப்பதற்கு ரிக்கார்டோவின் தத்துவத்தைப் பயன்படுத்தியவர்.—10, 86.*

ஐஸன்பார்ட் [Eisenbart], இயோஹான் *(1661-1727)—பிரஷ்ய நாட்டு மருத்துவர், கண் மருத்துவம் அறுவை சிகிச்சை*

செய்பவர். உண்மையான மருத்துவ அறிவுடன் கூடவே பித்தலாட்ட வழி முறைகளையும் கையாண்டவர்.—24.

ஓவன் [Owen], ராபர்ட் *(1771-1858)*—மாபெரும் பிரிட்டிஷ் கற்பனா சோஷலிஸவாதி.—*219.*

ஃபாயர்பாக் [Feuerbach], லுத்விக் *(1804-1872)*—மார்க்ஸுக்கு முந்தையக் காலத்தைச் சேர்ந்த உன்னதமான ஜெர்மன் பொருள்முதல்வாத மெய்யறிஞர்.—*248.*

ஃபிலிப் [Philip], முதலாவது *(சுமார் 1052-1108)*—பிரெஞ்சு மன்னர் *(1060-1108).—106—108.*

ஃபூரியே [Fourier], ஷார்ல் *(1772-1837)*—மாபெரும் பிரெஞ்சு கற்பனா சோஷலிஸவாதி.—*186, 219, 228, 244, 248.*

ஃபெர்கூஸன் [Ferguson], ஆதாம் *(1723-1816)*—ஸ்காட்லாந்து நாட்டுச் சரித்திராசிரியர், மெய்யறிஞர், சமுதாய இயலாளர்.—*166, 167.*

ஃபொஷே [Faucher], லியோன் *(1803-1854)*—பிரெஞ்சு பொது விவகார எழுத்தாளர், அரசுக் கலைஞர்.—*215.*

காபே [Cabet], எத்தியேன் *(1788-1856)*—பிரெஞ்சு பொது விவகார எழுத்தாளர்; அமைதிவழிப்பட்ட கற்பனா கம்யூனிஸத்தின் தலைசிறந்த பிரதிநிதி; ''இகாரியாவுக்குப் பயணம்'' எனும் நூலின் ஆசிரியர்.—*255.*

காண்ட் [Kant], இம்மானுவெல் *(1724-1804)*—தலைசிறந்த ஜெர்மன் மெய்யறிஞர், மூலச் சிறப்புள்ள ஜெர்மன் மெய்யறிவின் நிறுவகர்.—*169, 249, 251.*

கான்ஸ்டான்ஸியோ [Constancio], ஃபிரான்ஸிஸ்கோ சொலனோ *(1772-1846)*—போர்சுகல் நாட்டு மருத்துவர், அரசுறவாளர், எழுத்தாளர்; பிரிட்டிஷ் பொருளாதாரவாதிகளின் நூல்களை பிரெஞ்சு மொழியில் பெயர்த்தவர்.—*42, 54.*

கிருய்ன் [Grün], கார்ல் *(1817-1887)* — *ஜெர்மன் சிறு பூர்ஷ்வா பொது விவகார எழுத்தாளர், 1840களின் மத்தியில் ''உண்மையான சோஷலிஸத்தின்'' முக்கிய மான பிரதிநிதிகளில் ஒருவர்.—250.*

கிரெக் [Greg], வில்லியம் *(1809-1881)— பிரிட்டிஷ் முத லாளி, பொது விவகார எழுத்தாளர், சுயேச்சையான வாணிப முறையின் ஆதரவாளர்.—268, 269, 285.*

கிரே [Gray], ஜான் *(1798-1850) — பிரிட்டிஷ் பொரு ளாதாரவாதி, கற்பனு சோஷலிஸ்டு, ராபர்ட் ஒவென் ஆதரவாளர், ''தொழிலாளர்களின் பணம்'' பற்றிய தத்துவத்தின் ஆசிரியர்களில் ஒருவர்.—16, 19, 25, 29.*

கூப்பர் [Cooper], தாமஸ் *(1759-1840)—அமெரிக்கப் புலவர், அரசியல்வாதி; அமெரிக்காவில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் ஒரு தலைசிறந்த பிரதிநிதி.—116.*

கெனே [Quesnay], ஃபிரான்ஸ்வா *(1694-1774) — உன்னத மான பிரெஞ்சு பொருளாதாரவாதி, இயற்கை முறை யாட்சிவாதப் பிரிவின் நிறுவகர்; மருத்துவராக வேலை பார்த்தவர்.—131, 132, 282.*

கொல்பேர் [Colbert], ழான்-பப்தீஸ்த் *(1619-1683) — பிரெஞ்சு அரசுக் கலைஞர், பொதுக் கட்டுப்பாட்டலுவலர் (1665-1683); உண்மையில் பிரெஞ்சு உள்நாட்டு, வெளி நாட்டுக் கொள்கையை நடத்தி வந்தவர்; அதிகார வரம்பற்ற முடியரசு முறையைக் கெட்டிப்படுத்து வதற்காக வர்த்தகப் பெருக்குக் கொள்கையைப் பின் பற்றியவர்.—189.*

சார்ல்ஸ், இரண்டாவது [Charles II], *(1630-1685) — பிரிட் டனின் மன்னர் (1660-1685).—213.*

ஷார்ல் மாமன்னன் [Charles the Great], *(742-814) — பிராங்க் மக்களின் மன்னர், கி. பி. 800ல் மாமன்னராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.—106.*

ஷெர்பூலியே [Cherbulier], ஆன்துவான்-எலிஸே *(1797-1869)* *—ஸ்விட்ஸர்லாந்து நாட்டு பொருளாதாரவாதி, ஸிஸ்மொந்தீயின் ஆதரவாளர், ரிக்கார்டோ தத்துவத்தின் சில அம்சங்களுடன் ஸிஸ்மொந்தீயின் தத்துவத்தை இணைத்தவர்.—207.*

ஷ்டோர்ஹ் [Storch], அந்திரேய் கார்லவிச் (ஹென்ரிஹ்) *(1766-1835)—ருஷ்யப் பொருளாதாரவாதி, புள்ளி விபர இயலாளர், சரித்திராசிரியர், ஸெயின்ட் பீட்டர்ஸ் பர்க் விஞ்ஞானங்கள் அகாதெமி உறுப்பினர், அரசியல் பொருளாதாரத்தின் மூலச்சிறப்புப் பிரிவினரின் ஓர் ஊக்கமுள்ள ஆதரவாளர்.—47.*

ஷ்வைட்ஸர் [Schweitzer], இயோஹான் பப்தீஸ்த் *(1833-1875)—அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் தலைவர்களில் ஒருவர், பிஸ்மார்க் கொள்கையை ஆதரித்தவர்.—247.*

ஸாட்லர் [Sadler], மைக்கெல்-தாமஸ் *(1780-1835) — பிரிட்டிஷ் பொருளாதாரவாதி, தலைசிறந்த அரசியல் வாதி; டோரி கட்சியினருடன் நெருங்கி இருந்தவர். — 116, 117.*

ஸாந்த் [Sand], ழார்ழ் *(1804-1876)—புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் ஆரோரா துதிவான் என்பவரின் புனை பெயர்.—224.*

ஸான்-ஸிமோன் [Saint-Simon], குளோட்-அன்ரீ *(1760-1825)—மாபெரும் பிரெஞ்சு கற்பனை சோஷலிஸவாதி. —248.*

ஸிஸ்மொந்தி [Sismondi], ழான் ஷார்ல் லியொனுர் ஸிமொந்து தே *(1773-1842) — ஸ்விட்ஸர்லாந்து நாட்டுப் பொருளாதாரவாதி, முதலாளித்துவத்தைச் சிறு பூர்ஷ்வா நிலையில் நின்று விமர்சித்தவர்.—41, 81, 85, 167.*

ஸீனியர் [Senior], நாஸா வில்லியம் *(1790-1864)* — பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானச் சிறப்பற்ற பொருளாதாரவாதி.—*114.*

ஸேய் [Say], ழான்-பத்தீஸ்த் *(1767-1832)*—பிரெஞ்சுப் பொருளாதாரவாதி, விஞ்ஞானச் சிறப்பற்ற அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதி.—*42, 52, 69, 70, 112, 165.*

ஸ்டுவர்ட் [Steuart], ஜேம்ஸ் *(1712-1780)* — பிரிட்டிஷ் பூர்ஷ்வா பொருளாதாரவாதி, வர்த்தகப் பெருக்குத் தத்துவத்தின் கடைசிப் பிரதிநிதிகளில் ஒருவர்.—*196.*

ஸ்மித் [Smith], ஆதாம் *(1723-1790)*—பிரிட்டிஷ் பொருளாதாரவாதி, மூலச்சிறப்புள்ள அரசியல் பொருளாதாரத்தின் உன்னதமான பிரதிநிதிகளில் ஒருவர்.—*38, 52, 55, 56, 68, 104, 158, 159, 164-166, 177, 180, 181, 196, 233.*

ஹஸ்கிஸன் [Huskisson], வில்லியம் *(1770-1830)*—பிரிட்டிஷ் அரசுக்கலைஞர், டோரி கட்சியைச் சேர்ந்தவர், வாணிபத் துறை அமைச்சர் *(1823-1827).*—*218.*

ஹாட்ஸ்கின் [Hodgskin], தாமஸ் *(1787-1869)*—பிரிட்டிஷ் பொருளாதாரவாதி, பொது விவகார எழுத்தாளர், பாட்டாளி வர்க்கத்தின் நலன்களைக் காத்து நின்றவர், சோஷலிஸ்டு முடிவுகள் எடுப்பதில் ரிக்கார்டோவின் தத்துவத்தைப் பயன்படுத்தி, கற்பனு சோஷலிஸ நிலைகளிலிருந்து முதலாளித்துவத்தை விமர்சித்தவர்.—*10, 30, 86.*

ஹார்வி [Harvey], வில்லியம் *(1578-1657)* — பிரிட்டிஷ் மருத்துவர், விஞ்ஞான வழிப்பட்ட உடலியல் துறையை நிறுவியவர்களில் ஒருவர், இரத்த ஓட்ட அமைப்பு முறையைக் கண்டுபிடித்தவர்.—*192.*

ஹில்டிட்ஸ் [Hilditch], ரிச்சர்ட்—*19*ம் நூற்றுண்டின் மத்தியில் வாழ்ந்த பிரிட்டிஷ் பூர்ஷ்வா பொருளாதாரவாதி.—*207.*

ஹெகல் [Hegel], கியோர்க் வில்ஹெல்ம் ஃபிரீட்ரிஹ் *(1770-1831)*—உன்னதமான ஜெர்மன் மெய்யறிஞர்,

புறநிலைக் கருத்துமுதல்வாதி, கருத்துமுதல்வாத இயக்க வியலுக்கு மிகவும் முழுவிரிவான விளக்கம் அளித்தவர். —131, 132—134, 136, 138, 141—146, 248.

ஹெல்விஷியஸ் [Helvetius], குலோத் அத்ரியான் *(1715-1771)* —பிரெஞ்சு மெய்யறிஞர், பொருள்முதல்வாதி, நாத்திகர்.—225.

ஹோப் [Hope], ஜார்ஜ் *(1811-1876)*—பிரிட்டிஷ் வேளாண்மை யியலாளர், சுயேச்சையான வாணிப முறையின் ஆதர வாளர்.—268, 285.

டாரிமோன் [Darimon], லுயீ அல்ஃப்ரெட் *(1819-1902)*— பிரெஞ்சு அரசியல்வாதி, பொது விவகார எழுத்தாளர் சரித்திராசிரியர், புரூதோனின் கருத்துக்களை ஆதரித்து பிரச்சாரம் செய்தவர்.—264.

டிரோஸ் [Droz], ஃபிரான்ஸ்வா க்ஸவியே ஜொஸே *(1773-1851)*—பிரெஞ்சு சரித்திராசிரியர், மெய்யறிஞர் பொருளாதாரவாதி.—61.

டூக் [Tooke], தாமஸ் *(1774-1858)* — பிரிட்டிஷ் பூர்ஷ்வா பொருளாதாரவாதி; மூலச் சிறப்புள்ள அரசியல் பொரு ளாதாரத்தின் பிரிவுடன் நெருங்கி இருந்தவர்; பண பற்றிய ரிக்கார்டோவின் தத்துவத்தை விமர்சித்தவர் —114.

தாம்ப்ஸன் [Thompson], வில்லியம் *(சுமார் 1785-1833)*—அய லாந்து நாட்டுப் பொருளாதாரவாதி; சோஷலிஸ்டு முடி வுகளுக்கு வருவதற்கு ரிக்கார்டோவின் தத்துவத்தை பயன்படுத்தியவர்; ஓவனின் ஆதரவாளர்.—10, 30, 86 264.

தியேர் [Thiers], லுயீ அதோல்ப் *(1797-1877)*—பிரெஞ் சரித்திராசிரியர், அரசுக்கலைஞர்; தலைமையமைச்ச *(1836-1840)*, குடியரசுத் தலைவர் *(1871-1873)*, பாரிஸ் கம்யூன் புரட்சியை நசுக்கியவர்.—225.

துனுவயே [Dunoyer], ஷார்ல் *(1786-1862)*—பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானச் சிறப்பற்ற பொருளாதாரவாதி, அரசியல் வாதி.—*76, 255.*

தேயர் [Daire], லுயீ ஃபிரான்ஸ்வா எழேன் *(1798-1847)*—பிரெஞ்சு பொருளாதாரவாதி, அரசியல் பொருளாதார நூல்களின் வெளியீட்டாளர்.—*84, 113.*

நெப்போலியன் முதலாவது, போனப்பார்த் [Napoleon I, Bonaparte] *(1769-1821)*—பிரான்ஸ் நாட்டுப் பேரரசர் *(1804-1814, பிறகு 1815).* —*141, 259.*

நெப்போலியன் மூன்ருவது (லுயீ போனப்பார்த்) [Napoleon III (Louis Bonaparte)] *(1808-1873)*—பிரான்ஸ் நாட்டுப் பேரரசர் *(1852-1870),*—*257, 259.*

பாஸ்தியா [Bastiat], ஃபிரெடெரிக் *(1801-1850)* — பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானச் சிறப்பற்ற பொருளாதாரவாதி.—*257.*

பிளான்கீ [Blangui], ழெரோம்-அதோல்ப் *(1798-1854)* — பிரெஞ்சு நாட்டுப் பொருளாதாரவாதி, விஞ்ஞானச் சிறப்பற்ற அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதி; லுயீ ஆகுஸ்த் பிளான்கீ எனும் புகழ்பெற்ற புரட்சியாளரின் சகோதரர்.—*61.*

பிரிஸ்ஸோ [Brissot], ழான் பியேர் *(1754-1793)* — 18ம் நூற்ருண்டின் இறுதியில் நிகழ்ந்த பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியில் முக்கியமான தலைவர், புரட்சியின் துவக்கக் காலத்தில் ஜாகொபின் கிளப் உறுப்பினர், பிறகு ழிரோன்ட் குழுவில் தலைவராகவும் தத்துவாசிரியராகவும் விளங்கினர்.—*250.*

பிரே [Bray], ஜான்-ஃபிரான்ஸிஸ் *(1809-1895)* பிரிட்டிஷ் பொருளாதாரவாதி, கற்பனு சோஷலிஸவாதி, ஓவன் ஆதரவாளர், அச்சுக்கூடத்தில் வேலை பார்த்தவர்.—*10, 86, 87, 88, 90, 91, 93, 95, 98, 99.*

பிரைட் [Bright], ஜான் *(1811-1889) — பிரிட்டிஷ் முதலாளி, அரசியல் தலைவர், சுயேச்சை வாணிபமுறையின் ஆதரவாளர், தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்தை நிறுவியவர்களில் ஒருவர்; 1860களின் இறுதியிலிருந்து மிதவாதக் கட்சியில் ஒரு தலைவராக இருந்தவர், மிதவாதக் கட்சி அமைத்த அமைச்சரவைகளில் பல அமைச்சர் பதவிகள் வகித்தவர்.—265.*

பீட்டர் மாமன்னன் [Peter the Great], *(1672-1725)—ருஷ்யாவின் ஜார் எனும் பேரரசர் (1682-1725).—257.*

புருதோன் [Proudhon], பியேர் ஜொஸேப் *(1809-1865)—பிரெஞ்சு பொது விவகார எழுத்தாளர், விஞ்ஞானச் சிறப்பற்ற பொருளாதாரவாதி; சமுதாய இயலாளர், சிறு பூர்ஷ்வா வர்க்கத்தின் தத்துவாசிரியர், அராஜகவாதத்தின் நிறுவகர்களில் ஒருவர்.—7, 8, 10, 16, 19, 25 33-52, 54,59, 60, 63, 66, 68-76, 79, 80, 82, 83-86, 87,95, 99-154, 161-173, 177-180, 185, 186, 189-196, 201, 204, 206, 207, 209, 210, 215, 216-218, 227—257.*

புவாகில்பேர் [Boisguillebert], பியேர் *(1646-1714)—பிரெஞ்சு பொருளாதாரவாதி, இயற்கை முறையாட்சிவாதிகளின் முன்னோடி.—83, 113.*

பெட்டி [Petty], வில்லியம் *(1623-1687) — பிரிட்டிஷ் பொருளாதாரவாதி, புள்ளிவிபர இயலாளர், பிரிட்டனில் மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தை நிறுவியவர்.—213.*

பேபிஜ் [Babbage], சார்ல்ஸ் *(1792-1871)—பிரிட்டிஷ் கணிதவியலாளர், இயந்திர வியலாளர், பொருளாதாரவாதி.—177.*

போதோ [Baudeau], நிக்கொலா *(1730-1792) — பிரெஞ்சு நாட்டுப் பாதிரியார், பொருளாதாரவாதி, இயற்கை முறையாட்சிவாதிகளின் ஆதரவாளர்.—132.*

போனப்பார்த்—*பார்க்க: மூன்றும் நெப்போலியன்.*

பௌரிங் [Bowring], ஜான் *(1792-1872)*—பிரிட்டிஷ் அரசியல் தலைவர், மொழிவல்லுநர், எழுத்தாளர், சுயேச்சை வாணிப முறையின் ஆதரவாளர், 1850களில் முக்கியமாயிருந்தவர், காலனிகளில் அலுவலராக இருந்தவர்.—*265, 270, 274, 278, 280, 281.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818-1883)*—*7-13, 15, 16, 33, 62, 71, 99, 227, 246, 252, 259, 260, 265.*

மால்தஸ் [Malthus], தாமஸ் ராபர்ட் *(1766-1834)*—பிரிட்டிஷ் பாதிரியார், விஞ்ஞானச் சிறப்பற்ற பொருளாதாரவாதி, முதலாளித்துவத்துக்குப் பரிந்து பேசியவர்; மனிதத்தன்மையற்ற ஒரு மக்கட்தொகை-வாழ்க்கை நலத் தத்துவத்தை உருவாக்கியவர்.—*248.*

மில் [Mill], ஜேம்ஸ் *(1773-1836)*—பிரிட்டிஷ் பொருளாதாரவாதி, மெய்யறிஞர்; ரிக்கார்டோ தத்துவத்தைக் கொச்சைப்படுத்தியவர்.—*207.*

மில் [Mill], ஜான் ஸ்டுவர்ட் *(1806-1873)* — பிரிட்டிஷ் பூர்ஷ்வா பொருளாதாரவாதி, மெய்யறிஞர்-அறிவுறுதிவாதி; அரசியல் பொருளாதாரத்தின் மூலச்சிறப்புப் பிரிவினரின் ஓர் ஊக்கமுள்ள ஆதரவாளர்.—*114.*

மெங்கெர் [Menger], ஆன்டன் *(1841-1906)* — ஜெர்மன் வழக்குரைஞர்.—*30.*

மோர்ஸ் [Morse], ஆர்தர் — பிரிட்டிஷ் சுயேச்சை வாணிப முறை ஆதரவாளர். —*268, 269, 285.*

யூர் [Ure], ஆண்டிரூ *(1778-1857)* — பிரிட்டிஷ் இரசாயன விஞ்ஞானி, விஞ்ஞானச் சிறப்பற்ற பொருளாதாரவாதி, சுயேச்சையான வாணிப முறையின் ஆதரவாளர்.—*180-184, 281.*

ரிக்கார்டோ [Ricardo], டேவிட் *(1772-1823)* — பிரிட்டிஷ் பொருளாதாரவாதி, மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் உன்னதமான பிரதிநிதிகளில்

ஒருவர்.—*10-15, 28, 38, 41, 42, 53-61, 68, 80, 81 86, 111-113, 122, 123, 131, 158, 159, 199-201, 203, 205, 206, 252, 282.*

ருஸோ [Rousseau], **மூான்-மூாக்** *(1712-1778)* — *தலைசிறந்த பிரெஞ்சு அறிவொளி இயக்க வாதி, ஜனநாயகவாதி, சிறு பூர்ஷ்வா வர்க்கத்தின் தத்துவாசிரியர்.—258, 259.*

ரோஸி [Rossi], **பெலெக்ரீனோ லுயீஜி** *(1787-1848)* — *இத்தாலி நாட்டுப் பொருளாதாரவாதி, வழக்குரைஞர், அரசியல்வாதி; விஞ்ஞானச் சிறப்பற்ற அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதி; வெகு காலமாக பிரான்ஸில் வாழ்ந்தவர்.—61, 193.*

ரோட்பெர்டஸ்-இயாகெட்ஸோவ் [Rodbertus-Jagetzov], **இயோஹான் கார்ல்** *(1805-1875)* — *ஜெர்மன் நாட்டு விஞ்ஞானச் சிறப்பற்ற பொருளாதாரவாதி, அரசியல்வாதி; பிரஷ்ய—யுங்கர் நிலப் பிரபுத்துவத்தின் ''அரசு சோஷலிஸத்தின்'' தத்துவாசிரியர்.—8-12, 16-28.*

ரௌமர் [Raumer], **ஃபிரீட்ரிஹ் லுத்விக் கியோர்க் வான்** *(1781-1873)* — *ஜெர்மன் சரித்திராசிரியர், அரசியல்வாதி.—258.*

லஸ்ஸால் [Lassalle], **ஃபெர்டினண்ட்** *(1825-1864)* — *ஜெர்மன் சோஷலிஸ்டு, பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் நிறுவகர்களில் ஒருவர். தொழிலாளர்களை ''மிதவாத முதலாளி வர்க்கத்துக்கு வால் பிடிப்பதினின்று திருப்பி ஒரு சுதந்தரமான அரசியல் கட்சியாக மாற்றுவதில்'' (லெனின்) அந்தச் சங்கம் நேர்ப்பயனுள்ள பாத்திரம் வகித்தது. அதே நேரத்தில் மிக முக்கியமான பல அரசியல் பிரச்சினைகளில் லஸ்ஸால் சந்தர்ப்பவாத நிலைகள் எடுத்தார்.—62.*

லுக்ரீஷியஸ் [Lucretius], *(சுமார் கி. மு. 99-55)* — *தலைசிறந்த ரோமானிய மெய்யறிஞர், கவிஞர், பொருள் முதல்வாதி, நாத்திகர்.—140.*

லுயீ [Louis], பதினான்காவது *(1638-1715)* — பிரெஞ்சு மன்னர் *(1643-1715).—113.*

லுயீ [Louis], பதினைந்தாவது *(1710-1774)* — பிரெஞ்சு மன்னர் *(1715-1774).—131.*

லெங்கே [Linguet], ஸிமோன் நிக்கொலா அன்ரீ *(1736-1794)* *பிரெஞ்சு வழக்குரைஞர், பொது விவகார எழுத்தாளர், சரித்திராசிரியர், பொருளாதாரவாதி; இயற்கைமுறை யாட்சிவாதிகளை எதிர்த்தவர்.—258.*

லெமொன்தே [Lemontey], பியேர்-எடுவார்டு *(1762-1826)—* *பிரெஞ்சு சரித்திராசிரியர், பொருளாதாரவாதி, அரசியல் வாதி. 18ம் நூற்றாண்டின் பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சிக் காலத்தில் சட்ட மன்றத்தின் (1791-1792) வலதுசாரி எதிர்ப் புரட்சிப் பிரிவில் சேர்ந்து கொண்டவர். —165, 166, 184.*

லௌடர்டெல் [Lauderdale], ஜேம்ஸ் *(1759-1839)* — *பிரபு, பிரிட்டிஷ் அரசியல்வாதி; விஞ்ஞானச் சிறப்பற்ற அரசியல் பொருளாதாரத்தின் நிலைகளில் நின்று ஸ்மித்தின் தத்துவத்தை விமர்சித்தவர்.—41, 58, 122, 123.*

வாக்னர் [Wagner], அதோல்ப் *(1835-1917)* — *ஜெர்மன் பூர்ஷ்வா பொருளாதாரவாதி.—17.*

வியாட் [Wyatt], ஜான் *(1700-1766)—பிரிட்டிஷ் புனைவாளர். —180.*

வில்லியம், அராஞ்சு நாட்டு [William of Orange], *(1650-1702)* *—நெதர்லாந்தின் அரசுத் தலைவர் (1672-1702) பிரிட்டிஷ் மன்னர் (1689-1702).—196.*

வில்னியோவ்-பார்ழெமான் [Villeneuve-Bargemont], ஜான்-பால் அல்பான் *(1784-1850)—பிரெஞ்சு நாட்டுப் பிற்போக் கான அரசியல் தலைவர், பொருளாதாரவாதி, நிலப் பிரபுத்துவ சோஷலிஸத்தின் தத்துவாசிரியர்.—154.*

வைட்லிங் [Weitling], வில்ஹெல்ம் *(1808-1871)*—ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் துவக்கக் காலத்தில் ஒரு முக்கியமான தலைவர், கற்பனுகாரமான சமநிலைவாதக் கம்யூனிஸத்தின் தத்துவாசிரியர்; தையற்காரராக வேலை செய்தவர்.—9.

வோல்தேர் [Voltaire], ஃபிரான்ஸ்வா மரீ *(1694-1778)* — பிரெஞ்சு மெய்யறிஞர்-இறைமைவாதி, எழுத்தாளர், சரித்திராசிரியர், 18ம் நூற்றுண்டின் பிரெஞ்சு அறிவொளி இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதி.—106. 257, 259.

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசகநேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து “Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR” என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2

ஷோ-ரூம்

6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை-1

87/89, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-1

சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8

பஸ் நிலையம், தஞ்சாவூர்

К. Маркс

НИЩЕТА ФИЛОСОФИИ

на тамильском языке

T10
R00